# குற்றவியல் நடவடிக்கைக் கோவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் நடவழக்கைக் கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Appreciation...........

With gratitude to USAid/SuRG, CPPHR brings out the Code of Criminal Procedure in Tamil. This is the second of the Legislative Enactments by CPPHR in Tamil, the first being the Evidence Ordinance.

The main purpose of bringing out the Code of Criminal Procedure in Tamil is the need expressed by many to have it in Tamil which would support the administration of justice in the North and Eastern Provinces where Tamil is the administrative language. This fulfills and fills that gap which existed for a long time. Now those engaged in the process of the administration of justice in the North and Eastern Provinces can avail this opportunity.

The salient feature of this edition is that it incorporates all the amendments to the Code of Criminal Procedure.

CPPHR is grateful to all the persons involved in the process of consolidating and printing this Code of Criminal Procedure. An appreciation by name goes to Miss. Kasinathan Pangajavathani for spending a lot of time typing and retyping it for us. Time and energy spent in this venture has brought out this Code as a good tool to the administration of justice.

CPPHR stands for the respect of the rights of all and for the rule of law in our country.

V.Yogeswaran, S.J. – Attorney at Law

Director, CPPHR, 238, Inner Harbour Road, Trincomalee.

e-mail cpphrtrinco@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**01.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் (திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது) .... **01**

**02.** 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் .... **561**

**03.** 1991 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, விளக்கமறியல் மறியற்காரர்களை விடுவித்தல் சட்டம். .... **581**

**04.** 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டம். .... **589**

**05.** 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் தவறுகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம். .... **621**

**06.** 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பராமரிப்புச் சட்டம். .... **637**

**07.** 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கை முறைச் சட்டம். .... **673**

**08.** 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம். .... **745**

**09.** 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம். .... **765**

**10.** 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம். .... **781**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

(திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது)

---

(1979, மார்ச் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

1979, மார்ச் மாதம் 09 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

[1979, மார்ச் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**குற்றவியல் நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் II ஆம், IV ஆம் அத்தியாயங்களை நீக்குவதற்கும், தொடர்பு பட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆன ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வருந்தேதியும்.

1. இச்சட்டமானது, (இதனகத்துப்பின்னர், "இச்சட்டக்கோவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று (இது இதனகத்துப் பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சட்டம்
1979 இல 36
1979 இல 68
1980 இல 52
1982 இல 39
1985 இல 49
1988 இல 11
1988 இல 12
1988 இல 13
1988 இல 21
1989 இல 15
1990 இல 12
1993 இல 04
1995 இல 04
1995 இல 20
1997 இல 19
1998 இல 28
1999 இல 47
2002 இல 12
2005 இல 14
2005 இல 21
2006 இல 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் I
## அத்தியாயம் I
## முதனிலையானவை

"பொருள் கோடல்."

2. இச்சட்டக்கோவையில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"அட்டவணை"

"அட்டவணை" என்பது இச்சட்டக்கோவையுடன் இணைக்கப்பட்டுள்ள ஓர் அட்டவணை எனப் பொருள்படும்;

"அத்தியாயம்"

"அத்தியாயம்" என்பது இச்சட்டக்கோவையின் ஓர் அத்தியாயம் எனப் பொருள்படும் ;

"அரச சட்டவுரைஞர்"

"அரச சட்டவுரைஞர்" என்பது சிரேட்ட அரச சட்டவுரைஞர் ஒருவரையும் பதில் அரச சட்டவுரைஞர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"அரசாங்க அதிபர்"

"அரசாங்க அதிபர்" அல்லது "மாவட்ட அரசாங்க அதிபர்" என்பது நிருவாக மாவட்டத்துக்கான அரசாங்க அதிபர் எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய மாவட்டத்துக்கான மேலதிக அரசாங்க அதிபர் ஒருவரையும் அல்லது உதவி அரசாங்க அதிபர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"அரசாங்கப் பகுப்பாய்வாளர்

"அரசாங்கப் பகுப்பாய்வாளர்" என்பதற்கான வரை விலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

§2,52 இல 1980

"அரசாங்கப் பகுப்பாய்வாளர்" என்பது, அரசாங்கப் பகுப்பாய்வாளராக அல்லது மேலதிக அரசாங்கப்பகுப்பாய்வாளராக அல்லது பிரதி அரசாங்கப் பகுப்பாய்வாளராக அல்லது சிரேட்ட உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளராக அல்லது உதவி அரசாங்கப் பகுப்பாய்வாளராக இருப்பதற்கென, அல்லது அவ்வாறு செயற்படுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளை உள்ளடக்கும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசாங்க மருத்துவ அலுவலர்" என்பது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவவியற் துறை எதனதும் சட்ட மருத்துவப் பகுதியின் அலுவலர் எவரையும் உள்ளடக்கும் ; "அரசாங்க மருத்துவ அலுவலர்"

"ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகர்" என்பது, ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகராக அல்லது ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் சிரேட்ட உதவி அரசாங்கப் பரிசோதகராக அல்லது ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் உதவி அரசாங்கப் பரிசோதகராக இருப்பதற்கென அல்லது அவ்வாறு செயற்படுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளை உள்ளடக்கும் ; "ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகர்" §2,52 இல 1980

"ஆள்" என்பது ஆட்கள் குழுவொன்றை, (கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி) உள்ளடக்கும் ; "ஆள்"

"உயர் நீதிமன்றம்", "நீதிமன்றம்" என்பன உயர் நீதிமன்றத்துக்கு ஏற்புடையனவாகும்போது, அப்போதைக்கான இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றம் என அல்லது அதன் பிரதம நீதியரசர் என அல்லது அதன் எவரேனும் நீதிபதி எனப் பொருள்படும் ; "உயர் நீதிமன்றம்"

"எழுத்து", "எழுத்திலான" என்பன அச்சிடுதல், சிலைப் பதிவிடுதல், ஒளிப்படப்பிடித்தல், செதுக்குதல் ஆகியவற்றையும் கடுதாசியின் மீது அல்லது ஏதேனும் பதார்த்தத்தின் மீது சொற்களை அல்லது உருவங்களை வெளிப்படுத்தக்கூடிய ஏனைய ஒவ்வொரு முறையையும் உள்ளடக்கும் ; "எழுத்து" "எழுத்திலான"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குற்றப்பகர்வுக் குரிய தவறு"

"குற்றப்பகர்வுக்குரிய தவறு" என்பது, யூரர்சபையுடனோ அல்லது யூரர்சபை இன்றியோ, மேல் நீதிமன்றத்தினால் மாத்திரம் அல்லது யூரர்சபையின்றி நீதாய விளக்கமாக மேல் நீதிமன்றத்தினால் மாத்திரம் விளங்கப்படுவதற்குரிய ஒரு தவறு எனப் பொருள்படும் ;

"குற்றப்பணம்"

"குற்றப்பணம்" என்பது ஏதேனும் குற்றத்துக்காக அல்லது தவறுக்காக அல்லது ஏதேனும் சட்டவாக்கத்தினை மீறியமைக்காக அளிக்கப்பட்ட ஏதேனும் குற்றத் தீர்ப்பின் பேரில் ஏதேனும் நீதிமன்றத்தால் நீதித்தீர்ப்பளிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணத்தை, பணவகையான பறிமுதலை, அல்லது நட்டஈட்டை உள்ளடக்கும் ;

"கூட்டுத்தாபனம்"

"கூட்டுத்தாபனம்" என்பது, எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்டதும் கொடை மூலம், கடன் மூலம் அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட மூலதனத்தைக் கொண்டதும் ஆன ஏதேனும் கூட்டுத் தாபனத்தை, சபையை அல்லது வேறு குழுவை உள்ளடக்கும்;

"சட்டத்துறைத் தலைமையதிபதி"

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது இலங்கைக் குடியரசின் சட்டத்துறைத் தலைமையதிபதி எனப் பொருளாகும் என்பதுடன், பதில் சட்டத்துறைத் தலைமையதிபதி யொருவரையும் உள்ளடக்கும் ;

"சட்டவாக்கம்"

"சட்டவாக்கம்" என்பது இலங்கையின் ஒரு கட்டளைச் சட்டத்தை அல்லது சட்டத்தை உள்ளடக்கும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமாதான அலுவலர்" என்பது ஒரு பொலிசு அலுவலரையும் பொலிசுக் கடமைகளைப் புரிவதற்கென அரசாங்க அதிபர் ஒருவரினால் எழுத்தில் நியமிக்கப்பட்ட பெரும்பாக உதவி அரசாங்க அதிபர் ஒருவரையும், கிராமசேவை அலுவலர் ஒருவரையும் உள்ளடக்குகின்றது; "சமாதான அலுவலர்" §2.12 இல 1988

"சிறுபிள்ளை துஷ்பிரயோகம்" என்பது ஒரு சிறுபிள்ளை தொடர்பில் தவறொன்று புரியப்படுமிடத்து தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365அ அல்லது 365ஆ என்பதன்கீழ் புரியப்பட்ட தவறொன்று எனப் பொருள்படும் ; "சிறுபிள்ளை துஷ்பிரயோகம்" §2:28 இல 1998

"சுருக்கமுறைத் தவறு" என்பது நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் விளங்கப்படற்பாலதான ஒரு தவறு எனப் பொருள்படும்; "சுருக்கமுறைத் தவறு"

"தகவற் புத்தகம்" என்பது, கூற்றுக்களைப் பதியும் நோக்கத்துக்காகக் குற்றவியற் புலனாய்வுத் திணைக்களத்தினாலும் எவையேனும் புலனாய்வுப் பணியகங்களினாலும் பேணப்படுவதான குற்றங்கள் பற்றிய சுட்டியை அல்லது கோப்பை உள்ளடக்கும் ; "தகவற் புத்தகம்"

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது நியதிச் சட்டமுறையான திரிபு அல்லது திருத்தம் ஒவ்வொன்றும் உள்ளடங்கிய தண்டனைச் சட்டக்கோவை எனப் பொருள்படும்; "தண்டனைச் சட்டக் கோவை"

"தவறு" என்பது இலங்கையில் அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை எனப் பொருள்படும்; "தவறு"

"தீங்குவிளைக்கும் ஆயுதம்" என்பது, 1966 ஆம் **ஆண்டின்** 18 ஆம் இலக்க, தீங்குவிளைக்கும் ஆயுதங்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்; "தீங்கு விளைக்கும் ஆயுதம்"

"தீவு" என்பது இலங்கைத்தீவு எனப் பொருள்படும்.; "தீவு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பு"

"நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பு" என்பது எத்தண்டனைத் தீர்ப்புத் தொடர்பாக இச்சட்டக் கோவையின் 303 ஆம் பிரிவின் கீழ் ஒரு கட்டளை ஆக்கப்படுகின்றதோ அத்தண்டனைத் தீர்ப்பு ஒன்று எனப் பொருள்படும் ;

"நீதிபதி"

"நீதிபதி" என்பது நீதிமன்றம் ஒன்றில் தலைமைதாங்கும் அலுவலர் எனப் பொருள்படும். அத்துடன் சந்தருப்பம் தேவைப் படுத்தக்கூடியவாறு, உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற, மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒருவர் எனப் பொருள்படும் என்பதோடு அத்தகைய நீதிமன்றத்தின் பதில் நீதிபதியையும் உள்ளடக்கும் ;

"நீதிமுறை நடவடிக்கைகள்"

"நீதிமுறை நடவடிக்கைகள்" என்பது எந்த நடவடிக்கையின் போது சட்டமுறையாகச் சான்று எடுக்கப்படுகின்றதோ அல்லது எடுக்கப்படக்கூடுமோ அந்த நடவடிக்கையெதுவும் எனப் பொருள்படும் ;

"நீதிவான்"

"நீதிவான்" என்பது நீதிவான் நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட நீதிவான் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன், மாநகர நீதிவான் ஒருவரையும், பாலியர் நீதிமன்ற நீதிவான் ஒருவரையும், அத்தகைய நீதிமன்றம் எதனதும் பதில் அல்லது மேலதிக நீதிவான் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"பதிவாளர்"

"பதிவாளர்" என்பது, சந்தருப்பம் தேவைப்படுத்துவதற்கேற்ப, ஏதேனும் நீதிமன்றத்தின் பதிவாளர் எனப் பொருள்படும் ;

"பாதுகாப்பிடம்"

§2:28 இல 1998

"பாதுகாப்பிடம்" என்பது ஒரு தடுப்புக்காவல் இல்லத்தை மருத்துவமனையை அல்லது பராமரிப்புக்கும் கட்டுக் காப்பிற்குமான ஏதேனும் நிறுவனத்தை உள்ளடக்கும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிசுக்கால்" என்பது ஒரு நீதிமன்றப் பிசுக்கால் எனப் பொருள்படும் என்பதுடன், இச்சட்டக்கோவையின் கீழ் பிசுக்காலினது தத்துவம் அல்லது கடமை அல்லது பணி எதனையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு நீதிபதியினால் ஒன்றில் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ; "பிசுக்கால்"

"பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறு" என்பது, முதலாம் அட்டவணைக்கு இணங்க சமாதான அலுவலர் ஒருவர் எத்தவறு தொடர்பாகப் பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடுமோ அத்தவறு என்றும், "பிடியாணையின்றிக் கைதுசெய்தகு வழக்கு" என்பது, முதலாம் அட்டவணைக்கு இணங்க சமாதான அலுவலர் ஒருவர், எவ்வழக்கில் பிடியாணையின்றிக் கைதுசெய்யக்கூடுமோ அவ்வழக்கு என்றும் பொருள்படும் ; "பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறு"

"பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகாத தவறு" என்பது சமாதான அலுவலர் ஒருவர் எத்தவறுக்காகப் பிடியாணையின்றிக் கைதுசெய்யக்கூடாதோ அத்தவறு என்றும், "பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகாத வழக்கு" என்பது சமாதான அலுவலர் ஒருவர் எவ்வழக்கில் பிடியாணையின்றிக் கைதுசெய்யக்கூடாதோ அவ்வழக்கு என்றும் பொருள்படும் ; "பிடியாணையின்றிக் கைதுசெய்யத் தகாத தவறு"

"பிணையில்விடத்தகு தவறு" என்பது முதலாம் அட்டவணையில் பிணையில் விடத்தகுந்ததெனக் காட்டப்பட்ட அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் மூலம் பிணையில் விடத்தகுந்ததாக்கப்பட்ட ஒரு தவறு எனப் பொருள்படும் ; "பிணையில் விடத்தகாத தவறு" என்பது வேறேதேனும் தவறு எனப் பொருள்படும் ; "பிணையில் விடத்தகு தவறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரதம நீதியரசர்" — "பிரதம நீதியரசர்" என்பது இலங்கைக் குடியரசின் பிரதம நீதியரசர் எனப் பொருள்படும் என்பதுடன் பதில் பிரதம நீதியரசர் ஒருவரையும் உள்ளடக்கும் ;

"பிரிவு" — "பிரிவு" என்பது இச்சட்டக்கோவையின் ஒரு பிரிவு எனப் பொருள்படும்;

"பொலிசு அலுவலர்" — "பொலிசு அலுவலர்" என்பது நிலையான பொலிசுப்படையின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படும் என்பதுடன் பொலிசு ஒதுக்குப் படையினரையும் உள்ளடக்கும்;

"பொலிசு நிலையத் திற்குப் பொறுப்பாக வுள்ள அலுவலர்" — "பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்" என்பது, சந்தருப்பம் அவ்வாறு தேவைப்படுத்தினால், பொலிசு நிலையமொன்றின் கிளை ஒன்றுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் அலுவலரையும், அத்துடன் பொலிசு நிலையம் ஒன்றுக்கு அல்லது பொலிசு நிலையமொன்றின் கிளை ஒன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அங்கு சமுகம் தராமலிருக்கும் போது அல்லது சுகவீனம் காரணமாக அவர்தம் கடமைகளைப் புரியமுடியாமல் இருக்கும் போது அப்பொலிசு நிலையத்தில் அல்லது அக்கிளையில் சமுகமாயிருப்பவரும், பதவிவரிசையில் அத்தகைய அலுவலர்க்கு அடுத்தமைந்த வருமான பொலிசு அலுவலரையும் உள்ளடக்கும்;

"பொலிசு நிலையம்" — "பொலிசு நிலையம்" என்பது பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பொதுவாக அல்லது சிறப்பாக, ஒரு பொலிசு நிலையம் என வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் காவலிடம் எனப் பொருள்படும் என்பதுடன், இடம்பெயர் பொலிசுக் காவலிடம் ஒன்றையும், குற்றவியற் புலனாய்வுத் திணைக்களத்தையும், எவையேனும் புலனாய்வுப் பணியகங்களையும் உள்ளடக்கும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்றாடியார் தலைமையதிபதி" என்பது, இலங்கையின் மன்றாடியார் தலைமையதிபதி எனப்பொருள்படும் என்பதுடன், மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி ஒருவரையும், பிரதி மன்றாடியார் தலைமையதிபதி ஒருவரையும் உள்ளடக்கும் ; "மன்றாடியார் தலைமை யதிபதி"

"முறைப்பாடு" என்பது நீதிவானொருவரால் இச்சட்டக்கோவையின் கீழ் நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன், அறியப்பட்ட அல்லது அறியப்படாத எவரேனும் ஆள் ஒரு தவறைப் புரிந்துள்ளாரென அந்த நீதிவானிடம் வாய்மொழி மூலமாக அல்லது எழுத்து மூலமாகச் செய்யப்படும் சார்த்தல் எனப்பொருள்படும் ; "முறைப்பாடு"

"மேல் நீதிமன்றம்", "நீதிமன்றம்" என்பன மேல் நீதிமன்றத்துக்கு ஏற்புடையனவாகும் போது அப்போதைக்கான இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம் என்று, அல்லது அத்தகைய மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவரென்று அல்லது மேல் நீதிமன்றத்தின் பதில் நீதிபதியொருவரென்று பொருள்படும் ; "மேல் நீதிமன்றம்"

"மேன்முறையீட்டு நீதிமன்றம்", "நீதிமன்றம்" என்பன மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஏற்புடையனவாகும் போது, அப்போதைக்கான இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்று அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரென்று அல்லது அதன் எவரேனும் நீதிபதி என்று அல்லது அதன் பதில் நீதிபதி என்று பொருள்படும் ; "மேன்முறை யீட்டு நீதிமன்றம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வழக்குரைப் பவர்" — "வழக்குரைப்பவர்" என்பது, ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, ஒரு சட்டத்தரணி எனப் பொருள்படும் ;

"விசாரணை" — "விசாரணை" என்பது, இச்சட்டக்கோவையின் கீழ் ஒரு நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் அல்லது ஒரு விசாரணையாளரினால் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணையையும் உள்ளடக்கும் ;

"விசாரணை யாளர்" — "விசாரணையாளர்" என்பது XI ஆம் அத்தியாயத்தின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் ஆள் எனப்பொருள்படும் ;

"விடுவித்தல்" — "விடுவித்தல்" என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் நேரினமான சொற்றொடர்களோடும், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தாமை என்று பொருள்படும், ஆனால் இது விடுதலை செய்தலை உள்ளடக்காது ;

"விதித்துரைக் கப்பட்ட" — "விதித்துரைக்கப்பட்ட" என்பது, இச்சட்டக்கோவையினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட எனப்பொருள்படும் ;

"விரலடை யாளப் பதிவாளர்" — "விரலடையாளப் பதிவாளர்" என்பது, விரலடையாளங்காண் அலுவலகத்தின் விரலடையாளப் பதிவாளர் பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற அலுவலர் எனப் பொருள்படும் ;

"வெடிப் பொருள்கள்" — "வெடிப்பொருள்கள்" என்பது வெடிபொருள்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.** (1) செய்யப்பட்ட செயல்களைக் குறிப்பீடுசெய்யும் சொற்கள் சட்டமுறையற்ற செய்யாமைகளையும் அளாவி நிற்கும் ; செயல்களைக் குறிப்பீடு செய்யும் சொற்கள் சட்ட முறையற்ற செய்யாது விடுகைகளையும் அளாவி நிற்றல்.

(2) இதனகத்துப் பயன்படுத்தப்பட்டனவும் தண்டனைச் சட்டக்கோவையில் வரைவிலக்கணங் கூறப்பட்டனவும் இதனகத்து முன்னர் வரைவிலக்கணங்கூறப்படாதனவுமான எல்லாச் சொற்களும், சொல்லமைப்புக்களும், முறையே அச்சட்டக்கோவையால் அவ்வவற்றுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும். சொற்கள் தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளவாறான அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள், இச்சட்டக்கோவையினால் அல்லது இச்சட்டக்கோவையின் நோக்கங்களுக்காக ஓர் ஆவணத்திற் கையொப்பமிடும்படி பணிக்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் போதிலெல்லாம், அக் கையொப்பமானது ஒரு பேனையினால் அல்லது அதைப்போன்ற வேறு சாதனத்தினால் எழுதப்படுதல் வேண்டும்; அத்துடன் அக் கையொப்பம் ஒரு முத்திரையச்சினால் அல்லது அதையொத்த வேறு முறையினால் பதிக்கப்படுதல் அல்லது அழுத்தப்படுதல் ஆகாது. கையொப்பங்கள் கையெழுத்தில் இருத்தல் வேண்டும்.

**4.** சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றாடியார் தலைமையதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அரசாங்கப் பகுப்பாய்வாளர், ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகர், விரலடையாளப் பதிவாளர், அல்லது ஒரு நீதிமன்றப் பதிவாளருக்கு ஒரு தத்துவம், நியாயாதிக்கம் அல்லது உரிமை அளிக்கப்படுமிடத்து, அல்லது அவர்மீது ஒரு கடமை சுமத்தப்படுமிடத்து, அப்போது, அப்போதைக்கு அப்பதவியை வகிப்பவரால் அல்லது அத்தகைய பதவியிற் பதிற்கடமை ஆற்றுபவரினால் அல்லது அப்பதவிக்கான- குறித்த சில அலுவலர்களின் தத்துவங்களும், நியாயாதிக்கமும் உரிமைகளும், கடமைகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக அலுவலரினால் அல்லது அவரின் பிரதி அலுவலரால் அல்லது உதவி அலுவலரால் அத்தகைய தத்துவம், நியாயாதிக்கம் அல்லது உரிமை பிரயோகிக்கப்படலாம் என்பதுடன், அத்தகைய கடமை புரியவும்படலாம் அத்தகைய மேலதிக அலுவலர் அல்லது பிரதி அலுவலர் அல்லது உதவி அலுவலர் என்பது அப்பதவியிற் செயலாற்றுவதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையின் கீழும் வேறு சட்டங்களின் கீழும்தவறுகளை விளங்குதல்.

**5.** (அ) தண்டனைச்சட்டக்கோவையின் கீழான தவறுகள் ;

(ஆ) வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான தவறுகள் (அச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில், வேறு வகையாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய),

ஆகிய தவறுகள் யாவும் இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க, புலனாய்வு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு விளங்கப்படுதல் வேண்டும், அத்துடன் வேறுவகையாகக் கையாளப்படுதலும் வேண்டும்.

உயர் நீதி மன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் சட்டத்துறைத் தலைமையதி பதியினதும் தத்துவங்களைப் பேணல்.

**6.** இச்சட்டக்கோவையில் உள்ளது எதுவும், உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது அதன் நீதிபதிகளின் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்களை அல்லது நியாயாதிக்கத்தை மதிப்புக்குறைப்பதாக அல்லது மட்டுப்படுத்துவதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

ஏற்பாடு செய்யப்படா துள்ள விடயங்கள்.

**7.** எந்தக் குற்றவியல் நடவடிக்கைமுறை விடயங்கள் தொடர்பில் இச்சட்டக்கோவையினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தினால் சிறப்பு ஏற்பாடு எதுவும் செய்யப் படாமலிருக்கின்றதோ அந்தக் குற்றவியல் நடவடிக்கைமுறை விடயங்கள் தொடர்பில் அவ்விடயத்தின் நீதிநெறிமுறை தேவைப் படுத்தக்கூடியதும் இச்சட்டக்கோவைக்கு இசைவற்றதாயிராததுமான அத்தகைய நடவடிக்கைமுறை பின்பற்றப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் II

## அத்தியாயம் II

## குற்றவியல் நீதிமன்றங்களின் தத்துவங்கள்

### அ. - தத்துவங்கள் பற்றிப் பொதுவாக

**8.** உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அவற்றுக்கு உரித்தாக்கப்பட்ட ஏனைய தத்துவங்களோடு சேர்த்து மேலதிகமாக, அத்தகைய நீதிமன்றங்கள் அவற்றுக்குள்ள கண்காணிப்புத் தத்துவத்தைப் பிரயோகிக்கும்போது, கீழ்நிலை நீதிமன்றங்கள் எல்லாவற்றையும் பார்வையிடலாம் என்பதுடன், அவற்றின் பதிவேடுகளை வைத்திருந்துவருதல் பற்றிய பணிப்புகளையும் விடுக்கலாம்.

கீழ்நிலை நீதிமன்றங்களைக் கண்காணிப்பதற்கு உயர் நீதிமன்றத்துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

**9.** இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அவற்றுக்கு இணங்கவும் நீதிவான் நீதிமன்றம் ஒவ்வொன்றும், -

நீதிவான் நீதிமன்றங்களின் குற்றவியல் சுருக்கமுறை நியாயாதிக்கம்.

(அ) அதன் இட நியாயாதிக்கத்துக்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ புரியப்பட்டனவும், இச்சட்டக்கோவை மூலம் அல்லது வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் மூலம் நீதிவான் நீதிமன்றமொன்றினால் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றினால் நீதிநெறிக் கவனத்துட்படுத்தப் படக்கூடிய தவறுகளெனக் கூறப்பட்டவையுமான தவறுகளுக்கான எல்லாத் தொடர்ச்சிகளையும் அல்லது குற்ற வழக்குகளையும் சுருக்கமுறையில் விசாரித்து, விளங்கி, தீர்மானித்து முடிவாக்குவதற்குத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாக இருத்தல்வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யும்படி இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றது ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகள் புரியப்படுதல் பற்றி விசாரிப்பதற்கான நியாயாதிக்கம்

(ஆ) பின்வரும் விடயங்களில் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது :-

(i) அதன் இடநியாயாதிக்கத்துக்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ புரியப்பட்ட அல்லது புரியப்பட்டுள்ளனவாகச் சார்த்தப்பட்ட எல்லாத்தவறுகளையும் அல்லது எந்தத் தவறுகள் தொடர்பில் விசாரிப்பதற்கு அத்தகைய நீதிமன்றத்துக்கு இச்சட்டக் கோவையினால் நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தத் தவறுகள் எல்லாவற்றையும் விசாரணை செய்வதற்கும், அத்தகைய தவறுகளோடு தொடர்புபட்ட எல்லாச் சாட்சிக் காரர்களையும் கட்டளை விட்டழைப்பதற்கும் அவர்களை விசாரிப்பதற்கும், எல்லாக் குற்றவாளிகளையும் தவறாளர்களையும் பிடிப்பதற்கும் கட்டளைவிட்டழைப்பதற்குமான ஆணைப் பத்திரங்களையும் ஏனைய மன்றாணைகளையும் விடுப்பதற்கும் சட்டத்துக்கு இணங்க அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும்; அத்துடன்.

தேடுதல் ஆணைகள் விடுப்பதற்கும் சமாதானத்தை பேணுவதற்காகப்பிணைப் பொறுப்பு வேண்டுமெனத் தேவைப் படுத்துவதற்குமான நியாயாதிக்கம்.

(ii) களவாடப்பட்ட எவையேனும் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ளன வென அல்லது மறைத்துவைக்கப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்ட, அல்லது எந்தப்பண்டங்களை, பொருள்களை அல்லது ஆதனங்களைக் கொண்டு அல்லது எந்தப் பண்டங்கள், பொருள்கள், அல்லது ஆதனங்கள் தொடர்பில் தவறு எதுவும் புரியப்பட்டுள்ளதோ அந்தப் பண்டங்கள் பொருள்கள், அல்லது ஆதனங்கள் வைக்கப்பட்டுள்ளனவெனச் அல்லது மறைத்துவைக்கப்பட்டுள்ளனவெனச் சார்த்தப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் தேடுதல் செய்வதற்கு அல்லது தேடுதல் செய்விப்பதற்கு ஆணைப்பத்திரங்கள் விடுப்பதற்கும் சமாதானத்தைப் பேணுவதற்காக அல்லது நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்காகப் பிணைப் பொறுப்புக் கொடுக்கும்படி சட்டத்துக்கு இணங்க ஆட்களைத் தேவைப்படுத்துவதற்கும்; அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) எவரேனும் ஆள் ஏதேனும் மறியற்சாலையில் அல்லது ஏதேனும் மனநோய் அல்லது தொழுநோய் மருத்துவமனையில் இருக்கும்போது இறத்தல் அல்லது வன்முறையால் அல்லது விபத்தின் விளைவாக இறப்பெய்துதல் அல்லது திடீரென இறந்துபோதல் அல்லது எவ்வாறு இறந்தார் என்பது அறியப்படாத நிலையில் எவரேனும் ஆளின் உடல் காணப்படுதல் ஆகிய விடயங்கள் பற்றி விசாரணைசெய்வதற்கும்,

நியாயாதிக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

திடீர் இறப்புப்பற்றி அல்லது விபத்தாலான இறப்புப்பற்றி விசாரணை செய்வதற் கான நியா யாதிக்கம்

**10.** இச்சட்டக்கோவையின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தவறு எதுவும், நியமித்த தேதியின் முன்னர் புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது அதன் பின்னர் புரியப் பட்டிருப்பினுஞ்சரி, ஏதேனும் சட்டத்தில் வேறு வகையாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர -

தண்டனைச் சட்டக் கோவையின் கீழான தவறுகள்.

(அ) மேல் நீதிமன்றத்தினால், அல்லது

(ஆ) ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதென முதலாம் அட்டவணையின் எட்டாம் நிரையில் அத்தவறு காட்டப் பட்டுள்ளவிடத்து ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால்,

விளங்கப்படலாம்.

**11.** (1) தண்டனைச் சட்டக்கோவை தவிர்ந்த வேறு எந்தச் சட்டத்தின் கீழான தவறு எதுவும், நியமித்த தேதியின் முன்னர் புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது அதன் பின்னர் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, ஏதேனும் சட்டத்தில் வேறுவகையாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர -

வேறு சட்டங்களின் கீழான தவறுகள்.

(அ) அச்சட்டத்தில் அதற்கென ஒரு நீதிமன்றம் குறிப்பிடப் பட்டிருக்குமிடத்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

(i) அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றம் மேல் நீதிமன்றமாக இருக்குமிடத்து, அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதற்குரிய தவறொன்றின் விடயத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றமானது மாவட்ட நீதிமன்றமாக இருக்குமிடத்து, மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும் ;

(ii) அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்றம் நீதிவான் நீதிமன்றமாகவிருக்குமிடத்து அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற்றண்டனையினால் அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப் படுதற்குரிய தவறொன்றின் விடயத்தில் அவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கும் நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றமாக விருக்குமிடத்து, ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) அச்சட்டத்தில் அதற்கென ஒரு நீதிமன்றம் குறிப்பிடப்படாதவிடத்து-

(i) மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும் ; அல்லது.

(ii) தவறானது, இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத மறியற்றண்டனையினால் அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படுதற்குரிய தாகவுள்ளவிடத்து, ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இச்சட்டக்கோவையினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, மேல் நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்படுவதற்காக, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது அவரது வேண்டுதலின் பேரில் அந்தக்குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கெதிராகக் குற்றம் பகரப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் தவறினை அந்நீதிமன்றம் நீதிநெறிக் கவனத்துக்குட்படுத்துதலாகாது.

மேல்நீதி மன்றம் குற்றப்பகர் வின்மீது மாத்திரமே விளங்குதல் வேண்டும்.

13. எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத்தீர்ப்பை அல்லது வேறு தண்டத்தை மேல் நீதிமன்றம் விதிக்கலாம்.

மேல்நீதி மன்றம் விதிக்கக் கூடிய தண்டனைத் தீர்ப்பு.

14. ஒரு நீதிவான் நீதிமன்றம் பின்வரும் தண்டனைத்தீர்ப்புகளுள் எதனையும் விதிக்கலாம் :-

நீதிவான் நீதிமன்றம் விதிக்கக் கூடிய தண்டனைத் தீர்ப்பு.

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையில் ஒரு வகை மறியல் தண்டனை ;

(ஆ) ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் ;

(இ) நீக்கப்பட்டுள்ளது. §2. 21 இல 2005

(ஈ) மேற்சொல்லப்பட்ட தண்டனைத்தீர்ப்புகளில் எதனையும் இணைத்த ஏதேனும் சட்டப்படியான தண்டனைத்தீர்ப்பு ; §2.21இல2005

ஆயின், இப்பிரிவில் உள்ளது எதுவும், தண்டனையளிப்பதற்கான சிறப்புத் தத்துவங்களை அளிப்பதும், இப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளை நீக்கஞ்செய்வதாகக் கருதப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுநாட்களுக்கு குறைந்த காலத்துக்கு மறியற்றண்டனைத்தீர்ப்பு அளித்தலாகாது.

**15.** (1) இச்சட்டக்கோவையில், அல்லது தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காகவோ அல்லது வேறெதற்காகவுமோ, ஏழு நாட்களுக்குக் குறைந்த காலத்துக்கான மறியற்றண்டனையை ஆள் எவருக்கும் நீதிமன்றம் எதுவும் அளித்தலாகாது.

மறியற்றண்டனைக்குப்பதிலாக நீதிமன்றச் சுற்றெல்லைக்குள் தடுத்துவைத்தலாகிய தண்டனைத் தீர்ப்பு.

(2) குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காகவோ அல்லது வேறெதற்காகவுமோ, தவறாளர் ஒருவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிப்பதற்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது வேறு சட்டத்தினால் நீதிமன்றம் எதற்கும் தத்துவமளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில், அந்த நீதிமன்றம், மறியற்றண்டனைத்தீர்ப்பு விதிப்பதற்குப் பதிலாக, நீதிமன்றம், கட்டளையின் மூலம் அக்கட்டளையிற் குறித்துரைக்கக்கூடியதும், இரவு 8 மணிக்கு மேற்படாததுமான அத்தகைய நேரம் வரையில், அக்கட்டளை இடப்படும் நாளன்று, நீதிமன்றச் சுற்றெல்லைக்குள் தவறாளரைத் தடுத்து வைக்கும்படி பணிக்கலாம்.

குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிப்பதற்கு நீதிமன்றங்களுக்கு உள்ள தத்துவம்.

(3) குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காக, அத்தகைய தவறுகைக்கெனச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய காலத்துக்கான மறியற்றண்டனையை ஒரு நீதிமன்றம் விதிக்கலாம்; எனினும் விதிக்கப்பட்ட அத்தகைய மறியற்றண்டனைக் காலமானது, இச்சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்களை விஞ்சுதலாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட மறியற்றண்டனையானது, 13 ஆம், 14 ஆம் பிரிவுகளின்கீழ் நீதிமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய அதிகபட்சக் காலத்துக்கான தனிநிலையான மறியற்றண்டனைத் தீர்ப்போடு சேர்த்து மேலதிகமானதாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16.** (1) ஆளொருவர், ஒரேவிளக்கத்தில் எவையேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிவேறு தவறுகளுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போது, அத்தகைய தவறுகளுக்காக விதித்துரைக்கப்பட்டவையும் அந்த நீதிமன்றத்தின் ஆற்றலுக்கு உட்பட்டவையுமான பல்வேறு தண்டனைகளை நீதிமன்றமானது 301 ஆம் பிரிவுக்கமைவாக, அவர் மீது விதிக்கலாம்; அத்தகைய தண்டனைகளில் மறியற்றண்டனையும் அடங்கியதாயிருந்தால், ஒரு தனித் தவறுக்கான குற்றத்தீர்ப்பின்மீது எந்தத் தண்டனையை விதிப்பதற்கு நீதிமன்றம் ஆற்றல் கொண்டதோ அந்தத் தண்டனையைப் பல்வேறு தவறுகளுக்கான கூட்டுமொத்தத் தண்டனையானது விஞ்சுமிடத்துங்கூட, (அவை அல்லது அவற்றிலெவையும் ஏக்காலத்தில் தொடங்கவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டாலொழிய நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குமுறையில் ஒன்று முடிவடைவதன்மேல் மற்றொன்றாகத் தொடங்குதல் வேண்டும்.

ஒரே விளக்கத்தில் பல்வேறு தவறுகளுக் காகக் குற்றத் தீர்ப்பளிக் கப்படுமிடத்து வழங்கப்படும் தண்டனைத் தீர்ப்பு.

ஆயின், அந்த வழக்கு, ஒரு நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கப்படுமாயின், அளிக்கப்படக்கூடிய கூட்டுமொத்தத் தண்டனையானது, அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் எவ்வளவு தண்டனையை விதிப்பதற்கு ஆற்றல் கொண்டிருக்குமோ அந்தத் தண்டனையளவின் இருமடங்கை விஞ்சுதலாகாது.

ஆகக்கூடிய தண்டனைக் காலப்பகுதி.

(2) பல்வேறு தவறுகளுக்கான ஒரே விளக்கத்தின் போதான குற்றத்தீர்ப்புகளின் விடயத்தில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட கூட்டுமொத்தத் தண்டனைத்தீர்ப்புகள், மேன்முறையீட்டு நோக்கத்துக்காகத் தனியொரு தண்டனைத் தீர்ப்பாக கருதப்படுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - செலவுத் தொகைகளையும் நட்டஈட்டையும் செலுத்துதல்.

விடுதலை செய்யப்படு வதன் மீது செலவுத் தெகை களையும் நட்ட ஈட்டையும் செலுத்து தல்.

17. (1) நீதிமன்றமொன்று குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்து அல்லது விடுவித்து, முறைப்பாடானது விழலானதென அல்லது அலைக்கழிக்கும் தன்மையானதென வெளிப்படுத்துமிடத்து நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையினதான அரசின் செலவுகளைக் கொடுக்கும்படி அத்தகைய நீதிமன்றம் முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடுதல் அந்த நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அதே சமயம், மேலதிகமாக, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அல்லது ஒருவருக்கு மேற்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இருப்பின், அவர்களுள் ஒவ்வொருவருக்கும், அந்த நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய நட்டஈட்டைச் செலுத்தும்படி அது முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடலாம்.

(2) எவரேனும் ஆள் பொலிசு அலுவலரொருவரைக் கொண்டு வேறோர் ஆளைக் கைது செய்விக்கின்றவிடத்து, அவ்வாறு கைது செய்விப்பதற்குப் போதிய ஏதுக்கள் இருக்கவில்லையென வழக்கை நீதிநெறிக் கவனத்துக்குட்படுத்தும் நீதிமன்றத்துக்குத் தோன்றினால் அவ்வாறு கைது செய்யப்பட்ட ஆளுக்கு, அவரது நேரத்தையும் வருமானத்தையும் இழந்ததற்காகவும் அந்தக் கருமத்தில் அவர் உற்ற செலவுகளுக்காகவும், நீதிமன்றம், அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய நட்டஈடு, அவ்வாறு கைதுசெய்வித்த ஆளினால் செலுத்தப்பட வேண்டுமெனத் தீர்த்தளிக்கலாம், ஒருவருக்கு மேற்பட்ட ஆட்கள் கைது செய்யப்பட்டால், நீதிமன்றம் இதேமுறையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அது தகுந்ததெனக் கருதும் அத்தகைய நட்டஈட்டைத் தீர்த்தளிக்கலாம். அத்தகைய நட்டஈட்டைச் செலுத்துதல், முறைகேடாக மறியலில் வைத்தமைக்காக வழக்குத் தொடுப்பதைத் தடுப்பதாக அமைத்தலாகாது.

(3) முற்போந்த உட்பிரிவுகளின் கீழ் கட்டளையெதனையும் ஆக்குவதன் முன்னர், அந்தக் கட்டளை ஆக்கப்படுவதற்கு எதிராக முறைப்பாட்டாளர் தெரிவிக்கக்கூடிய ஏதேனும் ஆட்சேபனையை நீதிமன்றம் பதிந்து சீர்தூக்கிப்பார்த்தல் வேண்டும். அத்துடன் அந்த நீதிமன்றம் அத்தகைய கட்டளையை ஆக்கினால், அக்கட்டளையை ஆக்குவதற்கு அதற்குள்ள காரணங்களை அது பதிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) ஆளெவரும் ஏதேனும் தவறுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப் படுகின்றவிடத்து அல்லது குற்றச்சாட்டானது எண்பிக்கப்பட்டுள்ளதென்று நீதிமன்றம் முடிவு செய்து விட்டு ஆனால் தவறாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்காமல் அவர்மீது நடவடிக்கை மேற்கொள்ள அது முற்படுமிடத்து, நீதிமன்றத்துக்குத் தகுந்ததெனத் தோன்றும் வகையிலான அத்தகைய பணத்தொகையை நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அல்லது அத்தகைய தவணைகளில் அத்தவறினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு நட்டஈடாகச் செலுத்தும்படி குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது எவ்வாளுக்கு எதிராகக் குற்றச்சாட்டானது எண்பிக்கப்பட்டதென நீதிமன்றம் முடிவுசெய்கின்றதோ அவ்வாளுக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம். குற்றத் தீர்ப்பளிக் கப்பட்டதன் மேல் நட்ட ஈட்டைச் செலுத்துதல்.

(5) நான்காம் உப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறாளர் பதினாறு வயதிற்கு உட்பட்டவராகவிருந்தால், நீதிமன்றம் தகுந்ததெனக் கருதினால், கொடுப்பனவானது அவரது பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் செய்யப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(6) இந்தப் பிரிவின்கீழ் செலவுத்தொகை என்ற வகையாக வாயினுஞ்சரி நட்டஈடு என்ற வகையாகவாயினுஞ்சரி தீர்த்தளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக இருந்தாற்போன்று அறவிடப்படக்கூடியதாதல் வேண்டும்.

(7) கட்டளையிடப்படும் நட்டஈடானது நீதிவான் நீதிமன்ற மொன்றினாலான போது அத்தகைய நட்டஈடானது, நீதிவானொருவர் குற்றப்பணமொன்றாக வழமையாக விதிக்கக்கூடிய தொகையை விஞ்சுவதாக அத்தகைய தொகை இருக்கின்றதனைப் பொருட்படுத்தாது, ஒவ்வோர் இன்னலுறும் திறத்தவருக்கும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சுதலாகாது. நட்டஈடானது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சுதல் ஆகாது. §2, 14 இல. 2005

(8) ஒரு நீதிமன்றம் குற்றப்பணமொன்றை அல்லது குற்றப்பணத்தை ஒரு பகுதியாய்க் கொண்ட தண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்கின்றபோதிலெல்லாம், அறவிடப்பட்ட குற்றப்பணம் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை- குற்றப்பணம் குற்றவழக்குத் தொடுப்புச் செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப் படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) குற்றவழக்குத் தொடுப்பில் முறைப்படி கூறப்பட்ட செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு; அல்லது

(ஆ) புரியப்பட்ட தவறினால் விளைக்கப்பட்ட ஊறுக்கு நட்டஈடாகக் கொடுப்பதற்கு -

பயன்படுத்தும்படி கட்டளையிடலாம்.

(9) அதே கருமம் தொடர்பில் பின்னர் எழுகின்ற ஏதேனும் குடியியல் துடர்ச்சி தொடர்பில் நட்டஈடு அளிக்கும் போது, இந்த பிரிவின்கீழ் நட்டஈடாகச் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகையை நீதிமன்றம் கவனத்திலெடுத்தல் வேண்டும்.

## 1985 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

(1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவைச்சட்டத்தைத் திருத்து வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம்இலக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. - சமுதாய சேவைக் கட்டளைகள்

சமுதாய சேவைக் கட்டளைகள். §2.59 இல1985

**18.** (1) நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்குக் குற்றத் தீர்ப்பளித்ததன் மேல் மறியற்றண்டனைத் தீர்ப்பு விதிப்பதற்குப் பதிலாக, அல்லது குற்றப்பணக் கொடுப்பனவொன்றைச் செலுத்தத் தவறியமைக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பு விதிப்பதற்குப் பதிலாக, (இதனகத்துப் பின்னர் "சமுதாய சேவைக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளையொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதியலாம். அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய சேவைகளை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் பணிப்பின் கீழும் மேற் பார்வையின் கீழும், பின்வரும் இடங்களிலான பெயர் குறிக்கப்பட்டவோரிடத்தில் புரியும்படி அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளை அத்தகைய கட்டளை பணித்தல் வேண்டும் :-

(அ) அரச கருத்திட்டமொன்றில் அல்லது அரச ஆதரவு பெற்ற கருத்திட்டமொன்றில்,

(ஆ) அரசாங்க திணைக்களமொன்றில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்டமுறையான சபையொன்றில் அல்லது ஏதேனும் உள்ளதிகாரசபையில்: அல்லது

(இ) தரும நிறுவனமொன்றிற்கு, சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றிற்கு அல்லது மதவழிபாட்டுக்குரிய இடமொன்றிற்குப் பொறுப்பாயுள்ள ஆளின் சம்மதத்துடன், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய நிறுவனத்தில், ஒழுங்கமைப்பில் அல்லது இடத்தில்,

(2) சமுதாய சேவைக் கட்டளையின் நடைமுறைக்காலமானது, அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறு கூட்டு மொத்தமாக நாற்பது மணித்தியாலங்களுக்கு மேற்படாததுமான அத்தகைய எண்ணிக்கையான மணித்தியாலங்களுக்காக இருத்தல் வேண்டுமென்பதுடன், கட்டளை பதியப்பட்ட தேதியிலிருந்து தொடங்கும் ஓர் ஆண்டுக் காலப்பகுதிக்குள் அது ஆற்றப்படுத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவ்வாள் தொடர்பில் சமுதாய சேவைக் கட்டளையொன்று பதியப்பட்டதோ அவ்வாள், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையான மணித்தியாலங்களின் போது, புரியும்படி அவர் பணிக்கப்பட்ட சேவைகளைப் புரியத் தவறுமிடத்து, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் திருப்திக்கு அத்தகைய சேவையைப் புரியாதுவிட்டால், அல்லது அத்தகைய சமுதாய சேவைக் கட்டளையுடன் எம்முறையிலும் இணங்கியொழுக வேறுவகையில் தவறுமிடத்து சமுதாய சேவைக் கட்டளையைப் பதிந்த நீதிமன்றமானது பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) சமுதாய சேவைக் கட்டளையை வேறுபடுத்தல்.

(ஆ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான முறையில், பதிய ஒரு சமுதாய சேவைக் கட்டளையைப் பதிதல்: அல்லது

(இ) சமுதாய சேவைக் கட்டளையை இல்லாதொழித்துவிட்டு, சமுதாயச் சேவைக் கட்டளை நடவடிக்கையெடுத்தல்.

(4) சமுதாய சேவைக் கட்டளையின் நடைமுறைக்காலப்பகுதியின் போது, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய சமுதாய சேவைக் கட்டளையைப் பதிந்த நீதிமன்றத்துக்கு, நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் சேவைகள் புரியப்படுகின்றமை பற்றியதும், சமுதாய சேவைக்கட்டளை இணங்கியொழுகப்படுகின்றதா அல்லது இணங்கியொழுகப்பட்டுள்ளதா எனக்கூறுவதுமான அறிக்கையொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(5) அமைச்சர், ஒழுங்குவிதிகளின் மூலம், சமுதாய சேவைக் கட்டளையொன்று எப்படிவத்தில் பதியப்பட வேண்டுமோ அப்படிவத்தையும் சமுதாய சேவைக் கட்டளைகளை நிறைவேற்றும் முறையையும், விதித்துரைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது :-

(அ) அரச கருத்திட்டம் அல்லது அரச ஆதரவுபெற்ற கருத்திட்டம் ஒன்று தொடர்பாக, அத்தகைய கருத்திட்டத்திற்குப் பொறுப்பாயுள்ள அலுவலர் என்று :

(ஆ) அரசாங்க திணைக்களமொன்று தொடர்பாக, அத் திணைக்களத்தின் தலைவர் என்று:

(இ) பகிரங்க கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச் சட்டமுறையான சபையொன்று தொடர்பாக, அத்தகைய பகிரங்கக் சட்டமுறையான சபையின் பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் என்று :

(ஈ) உள்ளூரதிகாரசபை ஒன்று தொடர்பாக, அத்தகைய உள்ளூரதிகார சபையின் ஆணையாளர் அல்லது செயலாளர் என்று: அத்துடன்

(உ) தரும நிறுவனமொன்று, சமூகசேவை ஒழுங்கமைப்பொன்று அல்லது மதவழிபாட்டுக்குரிய இடமொன்று தொடர்பாக, அத்தகைய நிறுவனத்துக்கு, ஒழுங்கமைப்புக்கு அல்லது இடத்துக்குப் பொறுப்பாயுள்ள ஆள் என்று, பொருளாகும்.

# பாகம் III

# பொது ஏற்பாடுகள்

## அத்தியாயம் III

### நீதிவான்களுக்கும், பொலிசாருக்கும், கைதுசெய்யும் ஆட்களுக்கும் உதவியளித்தலும் தகவல் கொடுத்தலும் பற்றி

**19.** ஆள் ஒவ்வொருவரும், அவரது உதவியை நியாயமாகக்கோரும் ஒரு நீதிவானுக்கு, அல்லது ஒரு சமாதான அலுவலருக்கு - நீதிவான்களுக்கும், சமாதான அலுவலர்களுக்கும் பொதுமக்கள் எப்பொழுது உதவ வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அத்தகைய நீதிவான் அல்லது சமாதான அலுவலர் எத்தகைய வேறு எவரேனும் ஆளைக் கைதுசெய்வதற்கு அதிகாரங் கொண்டிருக்கிறாரோ அத்தகைய வேறு எவரேனும் ஆளைப் பிடிப்பதில் ;

(ஆ) சமாதானக் குலைவைத் தடுப்பதில் அல்லது ஏதேனும் பொது ஆதனத்துக்குப் புரிய எத்தனிக்கப்பட்ட ஏதேனும் ஊறைத் தடுப்பதில்;

(இ) ஒரு கலகத்தை அல்லது ஏதேனும் கலவரத்தை அடக்குவதில்,

உதவியளிப்பதற்குக் கட்டுப்பட்டவராதல் வேண்டும்.

சமாதான அலுவலரைத் தவிர்ந்த வேறுஆள் ஆணைப் பத்திரத்தை நிறைவேற்று வதற்கு உதவுதல்.

**20.** ஓர் ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஒரு சமாதான அலுவலர் தவிர்ந்த ஆளொருவருக்குக் கொடுக்கப்படும் போது, எவ்வாளுக்கு அப்பொறுப்புக் கொடுக்கப்பட்டதோ அவ்வாள் அருகாமையில் உடனிருந்து அவருக்கான ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றுவதில் செயற்படுபவராயிருந்தால், அத்தகைய ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றுவதில் வேறெவரேனும் ஆள் அவருக்கு உதவி புரியலாம்.

குறித்த சில தவறுகள் பற்றிப் பொதுமக்கள் தகவல் கொடுத்தல் வேண்டும்.

**21.** (அ) தண்டனைச்சட்டக்கோவையின் பின்வரும் பிரிவுகளின் கீழ், அவையாவன:- 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 126, 296, 297, 371, 380, 381, 382, 383, 384, 418, 419, 435, 436, 442, 443, 444, 445, 446, ஆகிய பிரிவுகளின்கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறு புரியப்பட்டமைபற்றி அல்லது அத்தவறைப் புரிவதற்கு வேறெவரேனும் ஆளுக்குள்ள உளக்கருத்துப்பற்றி;

(ஆ) ஏதேனும் திடீரான அல்லது இயற்கையாக நேராத இறப்புப்பற்றி அல்லது வன்செயலால் விளைந்த இறப்புப்பற்றி, அல்லது சந்தேகத்துக்கிடமளிக்கும் சூழ்நிலைகளில் நிகழ்ந்துள்ள ஏதேனும் இறப்புப்பற்றி, அல்லது எவ்வாறு இறந்தார் என்று அறியப்படாத நிலையில் எவரேனும் ஆளின் உடல் காணப்படுவது பற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியவந்துள்ளவரான ஆள் ஒவ்வொருவரும், தகவல் கொடாமல் விடுவதற்கு நியாயமான காரணம் இல்லாதிருப்பின்;- அதை எண்பிக்கும் பொறுப்பு அவ்வாறு அறிந்துள்ளவரான ஆளின் மேலதாக இருத்தல் வேண்டும் - ஆகக்கிட்டியதாகவுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்குப் அல்லது ஆகக்கிட்டியதாகவுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது சமாதான அலுவலர் ஒருவருக்கு அல்லது ஆகக்கிட்டிய கிராமத்திலுள்ள கிராமசேவை உத்தியோகத்தருக்கு அவ்வாறு தவறு புரியப்பட்டமைபற்றி அல்லது தவறு புரிவதற்கு எவரேனும் ஆளுக்கு இருந்த உளக்கருத்துப்பற்றி அல்லது அத்தகைய திடீரான இயற்கையாக நேராத அல்லது வன்செயலால் விளைந்த இறப்புபற்றி அல்லது சந்தேகத்துக்கிடமளிக்கும் சூழ்நிலைகளில் நிகழ்ந்த இறப்புப்பற்றி அல்லது அத்தகைய இறந்த உடல் காணப்பட்டமைபற்றி உடனடியாகத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

குறித்த சில விடயங்கள் பற்றி அறிவிப்பதற்கு சமாதான அலுவலர் கட்டுப்பட்டவராக இருத்தல்.

**22.** சமாதான அலுவலர் ஒவ்வொருவரும், நியாயாதிக்கம் கொண்டவரும் தமக்கு ஆகக்கிட்டடியில் உள்ளவருமான நீதிவானுக்கு அல்லது விசாரணையாளருக்கு அல்லது தமது உடனடிமேனிலை அலுவலருக்குப் பின்வருவன தொடர்பில் தம்மிடம் இருக்கக்கூடிய அல்லது தாம் பெறக்கூடிய தகவல் எதனையும் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(அ) அவர் எந்த இட நியாயாதிக்கவெல்லைக்குள்ளாக செயற்படுவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த இட நியாயாதிக்க வெல்லைக்குள்ளாக ஏதேனும் தவறு புரியப்பட்டமைபற்றி அல்லது ஏதேனும் தவறைப் புரிவதற்கான எத்தனம் பற்றி அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அவ்விடயப்பரப்புக்குள்ளாக திடீரான அல்லது இயற்கையாக நேராத ஏதேனும் இறப்பு அல்லது வன்செயலால் விளைந்த அல்லது சந்தேகத்துக்கிடமளிக்கும் சூழ்நிலைகளில் நிகழ்ந்த ஏதேனும் இறப்புப்பற்றி அறிவித்தல் வேண்டும்;

(இ) எவ்வாறு இறந்தார் என்பது பற்றி அறியப்படாத நிலையில், எவரேனும் ஆளின் இறந்த உடல் காணப்படுதல் பற்றி அறிவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் IV

## கைது செய்தல், தப்பிச் செல்லல், மீளக்கைது செய்தல் என்பனபற்றி

### அ. - கைது செய்தல் பற்றிப் பொதுவாக

கைது செய்தல் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது.

**23.** (1) கைது செய்யும் போது, கைது செய்யப்படவேண்டிய ஆள், கட்டுக்காவலுக்குட்படுவதற்கு சொல்மூலம் அல்லது செயல் மூலம் கீழ்ப்படிந்தாலொழிய, கைதுசெய்கின்ற ஆள் அவரது உடம்பை உண்மையாகத்தொட்டுப்பற்றுதல் வேண்டும் அல்லது சிறைத்துப் பிடித்தல் வேண்டும் என்பதுடன் அவர் எக்குற்றச்சாட்டின்பேரில் அல்லது சார்த்தலின் பேரில் கைது செய்யப்படுகின்றாரோ அக்குற்றஞ்சாட்டின் அல்லது சார்த்தலின் தன்மைபற்றி அறிவித்தலும் வேண்டும்.

**விளக்கம்.** - முறைமையாக ஆளொருவரைக் கைது செய்யாமல் அவரை மறித்தோ அல்லது தடுத்தோ வைத்திருந்தால், அல்லது அவர் எல்லாக் கருத்துக்களுக்கும் நோக்கங்களுக்கும் கட்டுக்காவலில் உள்ளார் என்னும் நிலையில் இருந்தும் தாம் கைது செய்யப்படவில்லை என்று அவர் நம்பும் வண்ணம் அவரை வைத்திருந்தால், அத்தகைய ஆளைக் கைது செய்து வைத்திருப்பதாகவே கருதப்படுதல் வேண்டும்.

கைதுசெய்வதற்கான முயற்சியை எதிர்த்தல்.

(2) அத்தகைய ஆள் தம்மைக் கைது செய்வதற்கான முயற்சியை வலோற்காரமாக எதிர்த்தால் அல்லது கைது செய்யப்படுதலைத் தவிர்க்க எத்தனித்தால், கைதுசெய்கின்ற ஆள், கைது செய்வதற்கு நியாயமான அளவில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிவகைகளைப் பயன்படுத்தலாம்.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், மரணதண்டனையினால் தண்டிக்கப் படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படாத ஆளொருவரின் இறப்பை ஏற்படுத்துவதற்கான உரிமையை அளிப்பதாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24.** பிடியாணையொன்றின்கீழ் செயலாற்றுகின்ற அல்லது கைது செய்வதற்கு அதிகாரங்கொண்டுள்ள எவரேனும் ஆள், கைது செய்யப்படவேண்டிய ஆள் ஏதேனும் இடத்தினுள் புகுந்துள்ளாரென அல்லது அதனுள் இருக்கின்றாரென அவர் நம்புவதற்குக் காரணமிருப்பின், அத்தகைய இடத்தில் வதிகின்ற அல்லது அத்தகைய இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள், மேற்சொல்லப்பட்டவாறு செயலாற்றுகின்ற அல்லது அதிகாரங் கொண்டுள்ள அத்தகைய ஆள் அவ்விடத்துட் புகுவதற்கு விடுமாறு கோரியதன்மேல், அதனுள் தடையின்றிப் புகுவதற்கு அவருக்கு அனுமதியளித்தல் வேண்டும் என்பதுடன், அதனுள் தேடுகை செய்வதற்கான நியாயமான எல்லா வசதிகளை அளித்தலும் வேண்டும்.

கைது செய்யப்பட வேண்டிய ஆள் புகுந்துள்ள இடத்தைத் தேடுதல் செய்தல்.

**25.** இருபத்துநான்காம் பிரிவின்கீழ் அத்தகைய இடத்தினுள் புகுவதற்கு அனுமதிபெற முடியாமலிருப்பின், பிடியாணையொன்றின் கீழ் செயலாற்றுகின்ற ஆளொருவர் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது பிடியாணையொன்று வழங்கப்படக்கூடிய விடயமாய், ஆனால் கைது செய்யப்பட வேண்டிய ஆள் தப்பிச்செல்லுவதற்கான சந்தருப்பமொன்றை அவருக்கு அளிக்காமல் உட்புகுவதற்கு அனுமதி பெற முடியாமலிருக்கும் ஏதேனும் சந்தர்ப்பத்தில், சமாதான அலுவலர் ஒருவர் அத்தகைய இடத்தினுள் புகுந்து அதில் தேடுகைசெய்தலும், அத்துடன் அவரது அதிகாரமும் நோக்கமும் பற்றி அறிவித்தபின்னரும், புகவிடும்படி முறைப்படி கேட்ட பின்னரும், வேறு வகையில் அவர் உட்புகுவதற்கு முடியாவிட்டால், அத்தகைய இடத்தினுட்புகும் நோக்கத்துக்காக, ஏதேனும் இடத்தின், (அது கைது செய்யப்பட வேண்டிய ஆளினதாயிருப்பினுஞ்சரி அல்லது வேறெவரேனும் ஆளினதாயினுஞ்சரி) வெளிப்புறக் கதவு அல்லது உட்புறக்கதவு எதனையும் அல்லது சாளரம் எதனையும் உடைத்துத் திறத்தலும் அவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

உட்புகுவதற்கு அனுமதி பெற முடியாத விடத்து, பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**26.** ஏதேனும் தவறுதொடர்பில் வீடெதிலும் அல்லது இடமெதிலும், எதற்காகவும் சட்டமுறையாகத் தேடுதல் செய்யப்படும் போதிலெல்லாம் அல்லது தேடுதல் செய்யப்படவிருக்கும் போதிலெல்லாம், அதில் காணப்படும் ஆட்கள் எல்லோரும் தேடுதல் முடிவடையும் வரையில் அத்தகைய வீட்டில் அல்லது இடத்தில் சட்டமுறையாகத் -

பிடியாணையின் கீழ்தேடுதல் செய்யப்படும் இடத்தில் இருக்கும் ஆட்களைத் தேடுதல் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்துவைக்கப்படலாம்; அத்துடன் தேடப்படும் பொருளானது ஓர் ஆளினது உடம்பில் மறைத்து வைக்கப்படக்கூடிய அத்தகைய தன்மையினதாகவிருப்பின், அவ்வாட்கள், 30 ஆம் பிரிவுக்கு அமைவாக நீதிவானொருவரால் அல்லது அவரது சமூகத்தில் அல்லது விசாரணையாளரினால் அல்லது அவரது சமூகத்தில் அல்லது பரிசோதகர் வரிசைப்பதவிக்குக் குறையாத ஒரு பொலிசு அலுவலரினால் அல்லது அவரது சமூகத்தில் தேடப்படலாம்.

விடுவிக்கும் நோக்கங்களுக்காகக் கதவுகளையும் சாரளங்களையும் உடைத்துத் திறப்பதற்குள்ள தத்துவம்.

**27.** கைது செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், கைதுசெய்யும் நோக்கத்துக்காக ஏதேனும் இடத்துக்குள் சட்டமுறையாகப் புகுந்த பின்னர் அதனுள் தாம் தடுத்துவைக்கப்பட்டால் தம்மையோ அல்லது அதனுள் வேறெவரேனும் ஆள் தடுத்து வைக்கப்பட்டால் அந்த வேறெவரேனும் ஆளையோ விடுவிப்பதற்காக அவ்விடத்தின் ஏதேனும் வெளிப்புறக்கதவை அல்லது உட்புறக் கதவை அல்லது சாளரத்தை உடைத்துத் திறக்கலாம்.

அவசியமற்ற மட்டுப்பாடு விதித்தலாகாது

**28.** கைது செய்யப்பட்ட ஆள் தப்பியோடுவதைத் தடுப்பதற்கு அவசியமான மட்டுப்பாட்டுக்குக் கூடுதலான மட்டுப்பாட்டுக்கு அவ்வாறு கைது செய்யப்பட்டவரை உட்படுத்துதலாகாது.

கைதுசெய்யப்பட்ட ஆட்களைத் தேடுகை செய்தல்.

**29.** ஆளொருவர் -

(அ) பிணையில் விடுவிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யாத பிடியாணையொன்றின்கீழ் சமாதான அலுவலர் ஒருவரினால் கைதுசெய்யப்படும் போதிலெல்லாம் அல்லது பிணையில் விடுவிக்கப்படுவதற்கு ஏற்பாடுசெய்கின்ற பிடியாணையின் கீழ்க் கைதுசெய்யப்பட்டிருந்தும், கைதுசெய்யப்பட்ட ஆள் பிணைசெலுத்த முடியாதவராக இருக்கும் போதிலெல்லாம்; அல்லது.

(ஆ) பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட்டிருந்து அல்லது பிடியாணையொன்றின்கீழ் தனிப்பட்ட ஆளொருவரினால் கைதுசெய்யப்பட்டிருந்து, சட்டப்படி பிணையில் விடுவிக்கப்படமுடியாதவராக இருக்கும் அல்லது பிணைசெலுத்த முடியாதவராக இருக்கும் போதிலெல்லாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்யும் சமாதான அலுவலர், அல்லது தனிப்பட்ட ஆளொருவரினால் கைதுசெய்யப்படும் போது கைது செய்யப்பட்ட ஆளை அவர் எந்தச் சமாதான அலுவலரிடம் ஒப்படைக்கின்றாரோ அந்தச் சமாதான அலுவலர், 30 ஆம் பிரிவுக்கு அமைவாக அத்தகைய ஆளைத் தேடுகைசெய்து, அவர் மீது காணப்படுகின்றனவான அவசியமான உடைகள் தவிர்ந்த மற்றெல்லாப் பொருள்களையும் பாதுகாப்பான கட்டுக்காவலில் வைக்கலாம்; அத்துடன் குற்றத்தைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாதனங்களென அல்லது அக்குற்றத்தின் பேறுகளென அல்லது அக்குற்றம்பற்றிய வேறு சான்றுகளென நம்புவதற்கு இடம்தரும் அத்தகைய பொருள்களுள் எதுவும், அவர் விடுவிக்கப்படும்வரை அல்லது விடுதலை செய்யப்படும்வரை தடுத்துவைக்கப்படலாம்.

பெண்களைத் தேடுகை செய்யும் முறை.

**30.** ஒரு பெண்ணைத் தேடுகை செய்வித்தல் அவசியமாகும் போதிலெல்லாம், மிகவும் யோக்கியமான முறையில் வேறொரு பெண்ணினால் தேடுகை செய்யப்படுதல் வேண்டும்.

தீங்குவிளைக்கும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்குள்ள தத்துவம்.

**31.** இச்சட்டக்கோவையின்கீழ் எவரையும் கைது செய்கின்ற ஆள், கைதுசெய்யப்பட்ட ஆளிடம் காணப்படும் தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் எவற்றையும் அல்லது தவறொன்றைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய சாதனம் எதனையும் அவரிடமிருந்து எடுக்கலாம் என்பதுடன், அவ்வாறு எடுக்கப்பட்ட எல்லா ஆயுதங்களையும், சாதனங்களையும் கைது செய்யப்பட்ட ஆளை எந்நீதிமன்றத்தின் முன்னர் அல்லது எவ்வலுவலரின் முன்னர் கொண்டுவருதல் வேண்டுமெனக் கைதுசெய்யும் ஆள் சட்டப்படி தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்நீதிமன்றத்திடம் அல்லது அவ்வலுவலரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - பிடியாணையின்றிக் கைது செய்தல்

சமாதான அலுவலர் கள் பிடியாணை யின்றி எப் போது கைது செய்யலாம் என்பது.

32. (1) எவரேனும் சமாதான அலுவலர் நீதிவானொருவரின் கட்டளையின்றியும் ஒரு பிடியாணையின்றியும் பின்வருவோரைக் கைது செய்யலாம்; அதாவது -

(அ) அவரது சமூகத்தில் சமாதானக் குலைவை விளைவிக்கின்ற எவரேனும் ஆளை;

(ஆ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறெதிலும் சம்பந்தப்பட்டுள்ள எவரேனும் ஆளை அல்லது அவ்வாறு சம்பந்தப்பட்டவராயிருந்தாரென எவருக்கெதிராக நியாயமான முறைப்பாடொன்று செய்யப் பட்டுள்ளதோ அல்லது எவருக்கெதிராக நம்பத்தகு தகவல் பெறப்பட்டுள்ளதோ அல்லது எவருக்கெதிராக நியாயமான சந்தேகம் இருக்கின்றதோ அத்தகையவரான எவரேனும் ஆளை;

(இ) வலிந்து வீடுபுகுவதற்கான ஏதேனும் கருவியை, சட்டமுறையான காரணமின்றி (அத்தகைய காரணத்தை எண்பிக்கும் பொறுப்பு அத்தகைய ஆளின் மேலதாக இருத்தல் வேண்டும்) தமது உடைமையில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆளை;

(ஈ) தவறாளரொருவரெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவராயிருக்கின்ற எவரேனும் ஆளை;

(உ) களவாடப்பட்ட ஆதனமாகவுள்ளதென அல்லது மோசடியான முறையில் பெறப்பட்டுள்ளதென நியாயமாகச் சந்தேகிக்கப்படக்கூடியதான எதையும் அவரது உடைமையில் வைத்திருப்பவரும் அத்தகைய பொருள் தொடர்பில் தவறொன்றைப் புரிந்துள்ளாரென நியாயமாகச் சந்தேகிக்கப்படக்கூடியவராயிருக் கின்றவருமான எவரேனும் ஆளை;

(ஊ) சமாதான அலுவலர் ஒருவர் அவரது கடமையை நிறைவேற்றும் போது அவரைத் தடைசெய்கின்ற, அல்லது சட்டமுறையான கட்டுக்காவலிலிருந்து தப்பிச்சென்றுள்ள அல்லது தப்பிச்செல்ல எத்தனிக்கின்ற எவரேனும் ஆளை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) இலங்கைத் தரைப்படையை, கடற்படையை, அல்லது வான்படையை அந்தரிக்க விட்டோடிய ஒருவராகவுள்ளவரென நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்ற எவரேனும் ஆளை;

(ஏ) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றைப்புரியும் நோக்கத்துடனேயே தாம் மறைந்திருப்பதற்கான முற்காப்புகளைச் செய்கின்றாரென நம்புவதற்கு காரணமாயமைகின்ற அத்தகைய சூழ்நிலைகளில், தான் சமூகமாயிருப்பதனை மறைப்பதற்கு முற்காப்புகளை செய்கின்வராகக் காணப்படுகின்ற எவரேனும் ஆளை;

(ஐ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் இடத்தில் புரியப்பட்டதும், இலங்கையில் புரியப்பட்டிருப்பின் தவறொன்றாகத் தண்டிக்கப் படற்பாலதாக இருந்திருக்கச் கூடியதும், அத்துடன், புறத்தொப் படைப்புப்பற்றிய அல்லது தப்பியோடிய ஆட்கள்பற்றிய அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் அல்லது வேறுவகையாகக் கைது செய்யப்படுவதற்கு அல்லது இலங்கையில் கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்படுவதற்கு அவரை ஆளாக்குவதுமான ஏதேனும் செயலில் சம்பந்தப்பட்டிருந்த எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தார் என நியாயமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தார் என நம்பத்தகு தகவல் பெறப்பட்டுள்ள எவரேனும் ஆளை அல்லது சம்பந்தப்பட்டிருந்தார் என்பதற்கு நியாயமான சந்தேகம் இருக்கின்ற எவரேனும் ஆளை-

கைது செய்யலாம்.

(2) இப்பிரிவிலுள்ள எதுவும், பிடியாணையின்றிக் கைது செய்வதற்குச் சமாதான அலுவலர் ஒருவருக்குத் தத்துவமளிக்கும் வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் நடைமுறையில் தலையிடுவதாக அல்லது அதைத் திரிபுபடுத்துவதாகக் கொள்ளப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகாத விடயங்களில் கைதுசெய்வதற்குள்ள தத்துவங்கள்.

**33.** (1) சமாதான அலுவலர் ஒருவர் சமுகமாயிருக்கையில், எவரேனும் ஆள், பிடியாணையின்றிக் கைது செய்யத்தகாத தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு, அவரது பெயரையும் வதிவிடத்தையும் தெரிவிக்கும்படி அத்தகைய சமாதான அலுவலர் கேட்டும் தெரிவிக்க மறுக்கின்றவிடத்து அல்லது பொய்யானதென அத்தகைய அலுவலர் நம்புவதற்குக் காரணமுள்ள ஒரு பெயரை அல்லது வதிவிடத்தைத் தெரிவிக்குமிடத்து, அவ்வாளின் பெயரை அல்லது வதிவிடத்தை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அவர் அத்தகைய சமாதான அலுவலரினால் கைது செய்யப்படலாம் என்பதுடன், பயணஞ்செய்வதற்குத் தேவைப்படும் நேரம் நீங்கலாக, கைதுசெய்யப்பட்டதிலிருந்து இருபத்துநான்கு மணிநேரத்துக்குள் ஆகக்கிட்டியதாகவுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும். அந்நேரத்துக்கு முன்னர் அவரது உண்மையான பெயரும் வதிவிடமும் நிச்சயிக்கப்பட்டால் அவ்வாறு கொணரப்பட வேண்டியதில்லை. அவ்வாறு நிச்சயிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய ஆள் தோன்றுமாறு தேவைப்படுத்தப்படும் போது நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவார் என உடன்படும் முறியொன்றை எழுதி நிறைவேற்றியதன்மேல் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள் பிடியாணையின்றிக் கைது செய்யத் தகாத தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு, அத்தகைய ஆளுக்கு இலங்கையில் நிரந்தரமான வதிவிடமெதுவுமில்லையென்றும், அவர் இலங்கையைவிட்டு வெளியேறும் தறுவாயில் உள்ளாரென்றும் சமாதான அலுவலர் நம்புவதற்குக் காரணமிருக்குமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய சமாதான அலுவலரினால் கைது செய்யப்படலாம் என்பதுடன், உடனடியாக ஆகக்கிட்டியதாகவுள்ள நீதிவானிடம் அவர் கொணரப்படுதலும் வேண்டும்; அந்நீதிவான், நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாள் தோன்றுவதை உறுதிப்படுத்துவதற்காக பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ முறியொன்றை எழுதி நிறைவேற்றும்படி அவரைத் தேவைப்படுத்தலாம் அல்லது விளங்கப்படும் வரையில் அவ்வாளைக் கட்டுக்காவலில் தடுத்துவைக்கும்படி கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34.** எவரேனும் ஆளைப் பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்குத் தத்துவம் கொண்டிருக்கும் சமாதான அலுவலர் அந்த ஆளைக் கைது செய்யும் நோக்கத்துக்காக, இலங்கையின் எப்பாகத்திலும் அத்தகைய ஆளை பின்தொடர்ந்து செல்லலாம்.

தவறாளர்களை தொடர்ந்து பிடிப்பதற்காக வேறு நியாயாதிக்க வெல்லைகளுக்குள் புகுதல்.

**35.** எவரேனும் தனிப்பட்ட ஆள், அவரது சமுகத்தில் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றைப் புரிகின்ற அல்லது தவறாளர் ஒருவரெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, அல்லது தப்பியோடுகின்றாரெனவும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறொன்றைப் புரிந்துள்ளாரெனவும் அவரால் நியாயமாகச் சந்தேகிக்கப்படுகின்ற எவரேனும் ஆளைக் கைது செய்யலாம் என்பதுடன், அவசியமற்ற தாமதமின்றி, அவ்வாறு கைது செய்யப்பட்ட ஆளை ஆகக்கிட்டியதாகவுள்ள சமாதான அலுவலரிடம் ஒப்படைத்தலும் வேண்டும், அல்லது சமாதான அலுவலர் ஒருவர் இல்லாவிடில் அத்தகைய ஆளை ஆகக்கிட்டியதாகவுள்ள பொலிசு நிலையத்துக்குக் கொண்டுசெல்லுதலும் வேண்டும். அத்தகைய ஆள், 32 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புவதற்குக் காரணமிருப்பின், அவரைச் சமாதான அலுவலர் ஒருவர், மீளக் கைது செய்தல் வேண்டும். அவர் பிடியாணையின்றிக் கைது செய்யத்தகாத தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புவதற்குக் காரணம் இருப்பதோடு, அவர், அவரது பெயரையும் வதிவிடத்தையும் கூறும்படி பொலிசு அலுவலர் ஒருவரினால் கேட்கப்பட்டதன்மேல், தமது பெயரையும் வதிவிடத்தையும் கூறுவதற்கு மறுப்பின் அல்லது பொய்யானதென அத்தகைய அலுவலர் நம்புவதற்கு அவருக்குக் காரணமுள்ள ஒரு பெயரை அல்லது வதிவிடத்தைக் கூறின் அல்லது இலங்கையைவிட்டு வெளியேறும் தறுவாயில் உள்ளாரென அத்தகைய அலுவலர் நம்புவதற்குக் காரணமிருக்கின்ற ஓர் ஆளாக இருப்பின், 33 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் அவர்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவர் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளாரென நம்புவதற்குக் காரணம் இல்லாவிடில், அவர் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

தனிப்பட்ட ஆட்களினால் கைதுசெய்யப்படுதல், அத்தகைய கைதுசெய்தலின்மீதான நடவடிக்கை முறை என்பன.

**36.** பிடியாணையின்றிக் கைதுசெய்கின்ற சமாதான அலுவலர் ஒருவர், அவசியமற்ற தாமதமின்றியும், பிணையில் விடுதல் தொடர்பில் இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமையவும், அந்த விடயத்தில் நியாயாதிக்கம் கொண்டிருக்கின்றவரான ஒரு நீதிவானிடம் கைதுசெய்யப்பட்ட ஆளைக் கொண்டுசெல்லுதல் அல்லது அனுப்புதல் வேண்டும்.

கைதுசெய்யப்பட்ட ஆள்மீது எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுசெய்யப் பட்டஆள், இருபத்து நான்கு மணிநேரத்துக்குக்கூடுதலாகத் தடுத்துவைக்கப்படுதலாகாது.

**37.** சமாதான அலுவலர் எவரும் பிடியாணையின்றிக் கைது செய்யப்பட்ட ஓர் ஆளை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் நியாயமானதான காலத்தைவிடக் கூடுதலான காலத்துக்குக் கட்டுக்காவலில் தடுத்துவைத்தலாகாது அல்லது வேறுவகையாக மறித்துவைத்தலாகாது என்பதுடன், அத்தகைய காலமானது, கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானிடம் செல்லும் பயணத்துக்கு தேவையான நேரம் நீங்கலாக, இருபத்துநான்கு மணிநேரத்துக்கு மேற்படுத்தலாகாது.

கைது செய்தல்கள் பற்றி பொலிசுமார் அறிவித்தல் வேண்டும்.

**38.** பொலிசு நிலையங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள், தத்தமது நிலையங்களைச் சேர்ந்த எவரேனும் பொலிசு அலுவலரினால் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட்டவர்களான அல்லது அவர்கள் முன்பாகக் கொண்டுவரப்பட்டவர்களான எல்லா ஆட்களின் விடயங்கள் பற்றியும், அத்துடன் அத்தகைய ஆட்கள் பிணையில் விடப்பட்டுள்ளார்களா அல்லவா என்பது பற்றியும் முறையே அவரவர்களினது மாவட்டங்களின் நீதிவான் நீதிமன்றங்களுக்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

கைது செய்யப்பட்ட ஆளை விடுவித்தல்.

**39.** சமாதான அலுவலர் ஒருவரினால் பிடியாணையின்றிக் கைது செய்யப்பட்டவரான ஆள் எவரும், அவரது சொந்த முறியின்மீதன்றி அல்லது பிணையின்மீதன்றி அல்லது நீதிவான் ஒருவரின் எழுத்திலான சிறப்புக் கட்டளையின் கீழன்றி, விடப்படுதலாகாது.

நீதிவானது சமூகத்தில் புரியப்பட்ட தவறு.

**40.** ஒருநீதிவானது இடநியாயாதிக்கவெல்லைக்குள்ளாக அவரது சமூகத்தில் தவறு எதுவும் புரியப்படும் போது, அவர் தாமாகவே தவறாளரைக் கைதுசெய்யலாம் அல்லது அத்தவறாளரைக் கைது செய்யும்படி எவரேனும் ஆளுக்குக் கட்டளையிடலாம்; அத்துடன், அதன்மேல், பிணையில் விடுதல் தொடர்பில் இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தவறாளரைக் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தலாம்.

நீதிவானால் அல்லது அவரது சமூகத்தில் கைது செய்யப்படல்.

**41.** எவ்வாளைக் கைது செய்வதற்கு சம்பந்தப்பட்ட நேரத்திலும் சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளிலும் பிடியாணையொன்றை விடுப்பதற்கு எவரேனும் நீதிவான் தகுதி வாய்ந்தவராக உள்ளாரோ அவ்வாளெவரையும் அவர் தமது இடநியாயாதிக்கவெல்லைகளுக்குள்ளாக எப்போதேனும் கைது செய்யலாம் அல்லது அவரது சமூகத்தில் கைது செய்யும்படி பணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42.** சட்டமுறையான கட்டுக்காவலிலுள்ள ஆளொருவர் தப்பிச் சென்றால் அல்லது தப்புவிக்கப்பட்டால், அவர் எவ்வாளினது கட்டுக்காவலிலிருந்து தப்பியோடினாரோ அல்லது தப்புவிக்கப்பட்டாரோ அவ்வாள் உடனடியாக அவரைப் பின்தொடர்ந்து சென்று எவ்விடத்திலேனும், அவ்விடம் அவர் அவ்வாறு கட்டுக்காவலில் வைத்திருக்கப்பட்டிருந்த நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட இடமாக இருந்தாலுஞ்சரி அல்லது அதற்கு வெளியிலுள்ள இடமாக இருந்தாலுஞ்சரி, கைதுசெய்யலாம் என்பதுடன், முதன்முறை கைது செய்தபோது அவர் மேற்கொண்டிருக்கக்கூடிய அத்தகைய நடவடிக்கையை அத்தகைய ஆளுக்கு எதிராக மேற்கொள்ளலாம்.

சட்டமுறையான கட்டுக்காவலிலிருந்து தப்பிச்செல்லும் ஆளைத் தொடர்ந்து செல்லுவதற்கும் மீளக்கைது செய்வதற்கு உள்ள தத்துவம்.

**43.** கைதுசெய்யும் ஆள், பிடியாணையொன்றின்கீழ்ச் செயலாற்றுபவராக இல்லாமலும் அத்துடன் கைதுசெய்வதற்கான அதிகாரமுள்ள சமாதான அலுவலராக இல்லாமலும் இருப்பினும், 42 ஆம் பிரிவின்கீழான கைதுசெய்தலுக்கு, 24 ஆம், 25 ஆம், 27 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

42ஆம் பிரிவின் கீழான கைதுசெய்தல்களுக்கு 24ஆம்,25ஆம், 27ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்.

(அ). (1) பிரிவுகள் 36, 37 என்பவற்றின் ஏற்பாடுகள் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்கள் தொடர்பில் ஏற்புடையனவாகமாட்டா.

"சிறுபிள்ளை துஷ்பிரயோகம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

§3,28 இல: 1998

(2) சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது பிடியாணையொன்றில்லாமல் கைது செய்யும் பொலிசு அலுவலர் ஒருவர் அநாவசியமான தாமதமின்றியும் கைதுசெய்யப்பட்ட இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள்ளும் அத்தகைய ஆளை வழக்கில் நியாயாதிக்கம் கொண்ட நீதிவானொருவர் முன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும்

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆளொருவர் எந்த நீதிவானின் முன்னிலைக்குக் கொணரப்படுகின்றாரோ அந்த நீதிவான், பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் தரத்திற்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது அவர் இல்லாதவிடத்து அவர் சார்பில் செயலாற்றும் அலுவலரால், அத்தகைய சான்றிதழொன்று அணைக்கப்படுவதன்மீது ஆளை புலனாய்வுசெய்யும் நோக்கத்திற்கு தடுத்துவைப்பது அவசியம் என்ற பயன்பாட்டிற்கு மூன்று நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆளை பொலிசுக் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுவதை அனுமதித்து கட்டளையொன்றை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) புலனாய்வு முடிவடைவதன்மீது அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தடுப்புக்காலம் முடிவடைவதன்மீது, இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அப்போது அத்தகைய ஆள் நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய ஆளுக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.".

## அத்தியாயம் V

## நீதிமன்றத்தில் தோன்றும்படி கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணைகள் பற்றி.

### அ. - அழைப்புக்கட்டளை

அழைப்புக் கட்டளை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது.

**44.** (1) இச்சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் விடுக்கப்படும் அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும் எழுத்தில் அமைந்ததாயும் இணைப் பிரதிகளைக் கொண்டதாயும், அழைப்புக் கட்டளையை விடுக்கும் பதிவாளரால் அல்லது அத்தகைய நீதிமன்றம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாயும் இருத்தல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

(2) கட்டளை விட்டு அழைக்கப்படும் ஆள், நீதிமன்ற மொழியை வாசிக்க இயலாதவரென நம்பப்படும் ஆளாகவிருப்பின், அத்தகைய இணைப் பிரதிகளில் ஒன்று அத்தகைய ஆளினால் வாசிக்கப்படக்கூடிய மொழி என நம்பப்படும் ஒரு மொழியிலான மொழிபெயர்ப்பொன்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(3) குற்றவழக்குத்தொடுநர் தரப்புச் சாட்சிக்காரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களது பெயர்களையும் முகவரிகளையும் குறித்துரைக்கும் நிரலுடன், குற்றஞ்சாட்டப்பட்வருக்கெதிராக எம்முறைப்பாட்டின்மீது அல்லது எவ்வறிக்கையின்மீது அல்லது வேறு எந்த ஆவணத்தின்மீது நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டனவோ அம்முறைப்பாட்டின் அல்லது அவ்வறிக்கையின் அல்லது அந்த ஆவணத்தின் பிரதியொன்று, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்படும் அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45.** (1) அழைப்புக்கட்டளை சாதாரணமாகப் பிசுக்காலினால் அல்லது பிசுக்காலின் அலுவலர் ஒருவரினால் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அழைப்புக் கட்டளை எவ்வாறு சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும் என்பது.

ஆயின் :-

(அ) வழக்கு நடவடிக்கைகள் பொலிசு அலுவலர் ஒருவரினால் தொடுக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது வழக்கானது மேல் நீதிமன்றத்தின் முன்னர் இருக்குமிடத்து அல்லது அழைப்புக்கட்டளையை வேறு வகையாகச் சேர்ப்பிக்க முடியாமலிருக்குமிடத்து அத்தகைய அழைப்புக்கட்டளை பொலிசு அலுவலர் ஒருவரினால் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; அல்லது.

(ஆ) சந்தர்ப்ப சூழ்நிலைகள் தேவைப்படுத்துமிடத்து, அழைப்புக்கட்டளை கிராம சேவை உத்தியோகத்தரினால் அல்லது பதிவஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என நீதிமன்றத்தால் பணிக்கப்படலாம்.

(2) சாத்தியப்படுமாயின் அழைப்புக்கட்டளையானது கட்டளைவிட்டு அழைக்கப்படும் ஆளிடம் அழைப்புக்கட்டளையின் இணைப் பிரதிகளில் ஒன்றை நேரடியாக ஒப்படைப்பதன் மூலம் அல்லது கொடுத்தல் மூலம், சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; நீதிமன்ற மொழியை வாசிக்கவியலாதவர் என நம்பப்படும் ஆளின் விடயத்தில், அவ்வழைப்புக்கட்டளையின் இணைப்பிரதி, அத்தகைய ஆளினால் வாசிக்கப்படக்கூடிய மொழி என நம்பப்படும் மொழியில் அமைந்த மொழிபெயர்ப்பொன்று இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(3) ஒரு கம்பனியின், அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் கழகத்தின் விடயத்தில், அழைப்புக்கட்டளை, முகாமைப் பணிப்பாளரிடம், செயலாளரிடம் அல்லது அவரை ஒத்த வேறு அலுவலரிடம் அல்லது அத்தகைய கம்பனியின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கழகத்தின் பிரதான தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளிடம் சேர்ப்பிக்கப்படலாம்.

(4) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் கழகமொன்றின் விடயத்தில், அழைப்புக்கட்டளையானது, அக்கழகத்தின் தலைவரிடம், செயலாளரிடம் அல்லது இவர்களையொத்த வேறு அலுவலரிடம் ஒப்படைப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) அழைப்புக்கட்டளையை, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஒரு கம்பனியிடம், கூட்டுத்தாபனத்திடம் அல்லது ஆட்கள் கழகத்திடம் (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் சேர்ப்பிக்க முடியாதவிடத்து, அத்தகைய அழைப்புக்கட்டளை, பதிவஞ்சல் மூலம், அத்தகைய கம்பனியின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில், அல்லது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அதற்கு இல்லாவிடில், அதன் பிரதான தொழிலிடத்தில் ஒப்படைப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

வரும்படி கட்டளைவிட்டு அழைக்கப்படும் ஆளைக்கண்டு பிடிக்க முடியாத போது, அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்கும் முறை.

**46.** கட்டளை விட்டு அழைக்கப்பட வேண்டிய ஆளைத் தகுந்த முயற்சியைப் பிரயோகித்தும் கண்டுபிடிக்க முடியாத போது, அழைப்புக்கட்டளையின் இணைப் பிரதிகளில் ஒன்றையும் அவசியமாகுமிடத்து அதன் மொழி பெயர்ப்பையும், அவரது குடும்பத்திலுள்ள வயது வந்த ஒருவரிடம் அல்லது அவரோடு வசிக்கின்ற அவரது வேலையாளிடம் ஒப்படைப்பதன் மூலம் அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படலாம்.

நேர்முகமாகச் சேர்ப்பிக்க முடியாதபோது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**47.** நாற்பத்தைந்தாம் பிரிவிலும், 46 ஆம் பிரிவிலும் விதித்துரைக்கப்பட்ட சேர்ப்பித்தலைத் தகுந்த முயற்சியைப் பிரயோகித்தும் செய்யமுடியாதிருப்பின், சேர்ப்பு அலுவலர், அழைப்புக்கட்டளையின் இணைப் பிரதிகளில் ஒன்றையும் அவசியமாகுமிடத்து அதன் மொழிபெயர்ப்பையும் கட்டளை விட்டழைக்கப்படும் ஆள் சாதாரணமாக வசிக்கும் வீட்டின் அல்லது மனையகத்தின் துலாம்பரமான இடமெதிலும் ஒட்டிவைத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய விடயத்தில், அவ்வாறு ஒட்டிவைப்பதற்கு முன்னரோ ஒட்டிவைத்த பின்னரோ நீதிமன்றம் அவ்வாறு பணித்தால், அழைப்புக்கட்டளையானது முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

அரசின், உள்ளூர் அதிகார சபைகளின் அல்லது கூட்டுத்தாபனங்களின் ஊழியர்களுக்குச் சேர்ப்பித்தல்.

**48.** (1) கட்டளை விட்டு அழைக்கப்படும் ஆள், அரச ஊழியர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றின் அல்லது கூட்டுத்தாபனமொன்றின் ஊழியர் ஒருவராக இருக்குமிடத்து, அழைப்புக்கட்டளையை விடுக்கும் நீதிமன்றம், சாதாரணமாக அதனை இணைப் பிரதிகளாகவும், அவசியமாகுமிடத்து அதன் மொழிபெயர்ப்புடனும் அத்தகைய ஆள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள திணைக்களத்தின் அல்லது அலுவலகத்தின் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்; அதன் மேல், அத்தகைய தலைவர் இணைப்பிரதிகளில் ஒன்றையும் அவசியமாகுமிடத்து அதன் மொழிபெயர்ப்பையும் ஊழியருக்கு நேர்முகமாகச் சேர்ப்பிக்கும்படி செய்தல் வேண்டும் என்பதுடன், மற்றையதை, சேர்ப்பித்தமை பற்றிய புறக்குறிப்போடு, நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதலும் வேண்டும்.

(2) இந்தப் பிரிவில் "திணைக்களத்தின் தலைவர் அல்லது அலுவலகத்தின் தலைவர்" என்பது -

(அ) இலங்கைத் தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் ஏதேனும் அலகின் உறுப்பினரொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, அவ்வலகின் ஏவும் அலுவலரெனப் பொருளாகும் ;

(ஆ) உள்ளூரதிகார சபையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளொருவர் தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, அவ்வுள்ளூரதிகாரசபை மாநகரசபையொன்றாகவிருப்பின், அச்சபையின் மாநகர ஆணையாளரெனப் பொருளாகும்; அவ்வுள்ளூரதிகாரசபை, நகரசபை அல்லது பட்டினசபை ஒன்றாகவிருப்பின், அச்சபையின் செயலாளரெனப் பொருளாகும்; அத்துடன் அவ்வுள்ளூரதிகாரசபை கிராமசபை ஒன்றாகவிருப்பின், அச்சபையின் தவிசாளரெனப் பொருளாகும்;

(இ) அரச ஊழியர் தொடர்பில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றின் வேறு எவரேனும் ஊழியர் தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, அத்தகைய ஆள் தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ள அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் தலைவரெனப் பொருளாகும்.

**49.** (1) நீதிமன்றமொன்றினால் விடுக்கப்பட்ட ஓர் அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டுள்ள போது, ஒரு சத்தியத்தை, அல்லது உறுதிக்கூற்றை எடுத்தோதுவிப்பதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் - அழைப்புக் கட்டளை சேர்ப்பித் தமைபற்றிய எண்பிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையில் செய்யப்பட்டதென கொள்ளப்படுவதான ஒரு சேர்ப்பித்தற் சத்தியக்கடுதாசி அல்லது சமாதான அலுவலர் ஒருவரால் செய்யப்பட்டதெனக் கொள்ளப்படுவதான ஒரு சேர்ப்பித்தல் அறிக்கை, அல்லது அஞ்சல் அலுவலக விதிகளின் கீழ் அஞ்சல் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஒப்படைத்தல் அறிவிப்பு, அல்லது 48 ஆம் பிரிவிற் கூறப்பட்டதன் விடயத்தில், அதன்கண் கூறப்பட்ட புறக்குறிப்பு, சான்றாக ஏற்றுக் கொள்ளற்குரியதாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் செய்யப்பட்டிருக்கும் கூற்றுக்கள் சரியானவையென (அவை அவ்விதம் அல்லவென எண்பிக்கப்பட்டாலொழியவும், எண்பிக்கப்படும் வரையிலும்) கருதப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவிற் கூறப்பட்டவாறான அத்தகைய அறிக்கையை அல்லது புறக்குறிப்பைச் செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய அறிக்கையில் அல்லது புறக்குறிப்பில் உள்ள உண்மையைக் கூறுவதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவராதல் வேண்டும்.

(3) சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவதற்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள், (1) ஆம் உட்பிரிவிற் கூறப்பட்ட சத்தியக்கடுதாசியை ஆக்குதலுக்கு தேவையான சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றார்.

## ஆ. - பிடியாணை.

பிடியாணைக்கான படிவம்.

**50.** (1) இச்சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் விடுக்கப்படும் பிடியாணை ஒவ்வொன்றும் எழுத்திலிடப்பட்டு, அந்நீதிமன்றத்தின் நீதிபதியொருவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தலும் வேண்டும்.

பிடியாணை வலுவுடையதாகத்தொடர்ந்திருந்துவருதல்

(2) அத்தகைய பிடியாணை ஒவ்வொன்றும், அதனை விடுத்த நீதிமன்றத்தினால் இல்லாதாக்கப்படும்வரை அல்லது அது நிறைவேற்றப்படும் வரை வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51.** (1) எவரேனும் ஆளைக் கைது செய்வதற்கான ஒரு பிடியாணையை விடுக்கின்ற ஒரு நீதிவான் நீதிமன்றம், குறித்துரைக்கப்பட்ட ஒரு நேரத்திலும் அத்துடன் அதன் பின்னர் நீதிமன்றத்தால் வேறு வகையில் பணிக்கப்படும் வரையும் நீதிமன்றத்தின் முன்பாகத் தோன்றுவதை உறுதிப் படுத்துவதற்காகப் போதிய பிணைகாரர்களுடன் முறியொன்றை எழுதி நிறைவேற்றினால், அந்தப்பிடியாணை எந்த அலுவலருக்கு அனுப்பப்பட்டதோ அந்த அலுவலர் அத்தகைய பிணைப்பொறுப்பைப் பெற்றுக்கொண்டு அத்தகைய ஆளைக் கட்டுக்காவலிலிருந்து விடுவித்தல் வேண்டுமென பிணையில் விடப்படமுடியாத தவறொன்றின் விடயத்தில் பிடியாணைப் பத்திரத்தில் புறக்குறிப்பிட்டுப் பணிக்கலாம் என்பதுடன், பிணையில் விடுபடத்தகு தவறொன்றின் விடயத்தில் பிடியாணைப் பத்திரத்தில் புறக்குறிப்பிட்டுப் பணித்தல் வேண்டும். பிணைப் பொறுப்பைக் கேட்குமாறு நீதிமன்றம் பணிக்கலாம்.

(2) புறக்குறிப்பானது -

(அ) பிணைகாரர்களின் எண்ணிக்கையையும்;

(ஆ) அவர்களும், எவ்வாளைக் கைதுசெய்வதற்கெனப் பிடியாணை விடுக்கப்பட்டதோ அவ்வாளும், முறையே எவ்வெத்தொகைக்குப் பிணிக்கப்படவுள்ளனரென்பதையும்;

(இ) நீதிமன்றத்தின் முன்னர் அவர் என்ன நாளிலும் என்ன நேரத்திலும் தோன்ற வேண்டும் என்பதையும்,

கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவின்கீழ்ப் பிணைப்பொறுப்புப் பெறப்படும் போதிலெல்லாம் பிடியாணை எவ்வலுவலருக்கு அனுப்பப்பட்டதோ அவ்வலுவலர் அப்பிணை முறியை நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

பிடியாணைகள் எவருக்கு அனுப்பப்படும் என்பது.

**52.** (1) நீதிமன்றமொன்றினால் விடுக்கப்பட்ட பிடியாணையொன்று, சாதாரணமாக அந்நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்துடன் அப்பிடியாணை எல்லாப் பிசுக்கால்மாரினாலும், பிசுக்கால்மாரின் அலுவலர்களினாலும், சமாதான அலுவலர்களினாலும், முறையே அவர்களினது தனித்தனியான நியாயாதிக்க வெல்லைக்குள்ளாக அல்லது எவரேனும் பொலிசு அலுவலரினால் இலங்கையின் எப்பாகத்திலும் நிறைவேற்றப்படலாம்.

(2) பிடியாணையை விடுக்கின்ற நீதிமன்றம், அதனை வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்குப் பெயர் குறித்தோ அல்லது பதவிகுறித்தோ அனுப்பலாம் என்பதுடன், அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் அல்லது எவரேனும் பொலிசு அலுவலர் அதனை நிறைவேற்றலாம்.

(3) பிடியாணையொன்று சமாதான அலுவலர் ஒருவருக்குப் பெயர் குறித்து அனுப்பப்படும் போது, அதை வேறொரு சமாதான அலுவலர், அந்த அலுவலரது பெயர் அதில் புறக்குறிப்பிடப்பட்டாலொழிய, நிறைவேற்றுதலாகாது.

(4) ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களுக்குப் பிடியாணை அனுப்பப்படும் போது, அது, அவர்கள் எல்லோராலும் அல்லது அவர்களின் எவரேனும் ஒருவரால் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களால் நிறைவேற்றப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**53.** பிடியாணையொன்றை நிறைவேற்றுகின்ற ஆள், அதன்சாராம்சம் பற்றிக் கைது செய்யப்படும் ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், பிடியாணையைக் காட்டும்படி கைது செய்யப்பட்ட ஆள் கேட்டால், அப்பிடியாணையை அல்லது அதை விடுக்கின்ற ஆளினால் கையொப்பமிடப்பட்ட அதன் பிரதியை அவருக்குக் காண்பித்தலும் வேண்டும். பிடியாணையின் சாராம்சத்தை அறிவித்தல்.

**54.** பிணைப் பொறுப்புப்பற்றிய 51 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பிடியாணையொன்றை நிறைவேற்றுகின்ற ஆள், கைதுசெய்யப்பட்ட ஆளை எந்த நீதிமன்றத்தின் முன்பாக முன்னிலைப்படுத்தும்படி அவர் சட்டப்படி தேவைப் படுத்தப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் முன்பாக, அவசியமற்ற தாமதமின்றிக் கொணருதல் வேண்டும் என்பதுடன், கைது செய்யப்பட்ட நேரத்தையும், கைதுசெய்யப்பட்ட இடத்தையும் பிடியணைப்பத்திரத்தின் மீது அவர் புறக்குறிப்பிடுதலும் வேண்டும். கைதுசெய்யப்பட்ட ஆள் தாமதமின்றி நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

**55.** பிடியாணையொன்றை இலங்கையின் எவ்விடத்திலும் நிறைவேற்றலாம். பிடியாணை எவ்விடத்தில் நிறைவேற்றப் படலாம் என்பது.

**56.** (1) பிடியாணையொன்று, அதை விடுக்கும் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்கவெல்லைகளுக்கு வெளியில் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் போது, நீதிமன்றம், அப்பிடியாணை எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்கவெல்லைக்குள்ளாக நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அதனைச் சாதாரணமாக, அஞ்சல் மூலம் அல்லது வேறுவகையாக அனுப்பிவைத்தல் வேண்டும். நியாயாதிக்க எல்லைக்கு வெளியே நிறைவேற்றப் படுவதற்கான பிடியாணைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிடியாணை எந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவானொருவர் அந்தப் பிடியாணைப்பத்திரத்தின்மீது அவரது பெயரைப் புறக்குறிப்பீட்டு, சாத்தியமாகுமெனில், அவரது இட நியாயாதிக்கவெல்லைக்குள்ளாக அதனை நிறைவேற்றும்படி செய்வித்தல் வேண்டும்.

(3) எந்த நீதிவானின் இட நியாயாதிக்கவெல்லைக்குள்ளாகப் பிடியாணையொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ அந்த நீதிவானின் புறக்குறிப்பைப் பெறுவதனால் நேருகின்ற தாமதம் அல்லது பலராறிநிலை அத்தகைய நிறைவேற்றுதலைத் தடைசெய்யுமென நம்புவதற்குக் காரணமிருக்கும் போதிலெல்லாம், அந்தப் பிடியாணையை விடுவிக்கின்ற நீதிமன்றமானது அந்தப் பிடியாணையை விசேடமாக எவரேனும் ஆளுக்கு அனுப்பலாம்; அவ்வாறு விசேடமாக அனுப்பப்பட்ட பிடியாணையொன்று மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய புறக்குறிப்பு இல்லாமலே பயனுடையதாதல் வேண்டும் என்பதுடன், இலங்கையில் எவ்விடத்திலும் அத்தகைய ஆளினால் சட்டபூர்வமாக நிறைவேற்றவும்படலாம் :

ஆயின், எப்போதும், அத்தகைய பிடியாணை நிறைவேற்றப்பட்டதன் மேல், 58 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

நியாயாதிக்க எல்லைக்கு வெளியே நிறைவேற்றப் படுவதற்காகப் பிடியாணை பிசுக்காலுக்கு அனுப்பப் படுதல்.

**57.** பிசுக்கால் ஒருவருக்கு அனுப்பப்பட்ட பிடியாணையொன்று அவர் எந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கவெல்லைகளுக்கு வெளியே நிறைவேற்றப்படவேண்டியதாக உள்ளபோது, அவர் அந்தப் பிடியாணையை, எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்கவெல்லைக்குள்ளாக அந்தப் பிடியாணை நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ, அந்த நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு முகவரியிடுதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல், அதனை அஞ்சல் மூலமாகவோ வேறுவகையாகவோ அத்தகைய பிசுக்காலுக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்; அவர், அதைப் பெற்றதும், அத்தகைய பிடியாணை தொடக்கத்திலேயே அவருக்கு அனுப்பப்பட்டது என்றாற்போன்ற அதே வகையில் அதனை நிறைவேற்றுவித்தல் வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**58.** (1) பிடியாணையொன்று, அது எந்த நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க வெல்லைகளுக்கு வெளியே நிறைவேற்றப்படும் போது, பிடியாணையை விடுத்த நீதிமன்றமானது கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து இருபது மைல்களுக்குட்பட இருந்தாலொழிய, அல்லது எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைக்குள்ளாகக் கைதுசெய்தல் நிகழ்ந்ததோ அந்த நீதிவான் நீதிமன்றத்திலும் பார்க்க அண்மையிலிருந்தாலொழிய, அல்லது 51 ஆம் பிரிவின் கீழ் பிணைப்பொறுப்புப் பெற்றுக் கொள்ளப்பட்டாலொழிய, கடைசியாகக் கூறப்பட்ட அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆளைக் கொணருதல் வேண்டும்.

எவ்வாளுக்கு எதிராகப் பிடியாணை விடுக்கப்பட்டதோ அவ்வாளைக் கைதுசெய்த தன் மேல் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

(2) கைது செய்யப்பட்ட ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரப்படுகிறாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்கு, பிடியாணையை விடுத்த நீதிமன்றம் பிடிக்கக்கருதிய ஆளாக அக்கைது செய்யப்பட்டவர் உள்ளாரெனத் தோன்றினால், கடைசியாகக் கூறப்பட்ட அத்தகைய நீதிமன்றித்திற்கு அவரைக் கட்டுக்காவலில் கொண்டு செல்லும்படி பணித்தல் வேண்டும்:

ஆயின், தவறானது, பிணையில் விடுவிக்கப்படக் கூடியதாகவும் கைது செய்யப்பட்ட ஆள், எந்த நீதிமன்றத்தின் முன்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம் திருப்தியடையும்படி பிணைகொடுப்பதற்குத் தயாரானவராயும் விருப்பமானவராயும் இருப்பின் அல்லது 51 ஆம் பிரிவின் கீழ் பிடியாணைப்பத்திரத்தின் மீது பணிப்பு ஒன்று புறக்குறிப்பிடப்பட்டிருந்து, அத்தகைய பணிப்பினால் தேவைப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்பை அளிப்பதற்கு அத்தகைய ஆள் தயாரானவராயும் விருப்பமானவராயுமிருப்பின், கடைசியாகக் கூறப்பட்ட நீதிமன்றம் அத்தகைய பிணையை அல்லது பிணைப்பொறுப்பை விடயத்துக்கு ஏற்றவாறு, பெற்றுக்கொண்டு, அப்பிணை முறியைப் பிடியாணையை விடுத்த நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், 51 ஆம் பிரிவின்கீழ் சமாதான அலுவலர் ஒருவர் பிணைப்பொறுப்புப் பெறுதலைத் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

கைவசம் பிடியாணை இல்லாத போதும் கைது செய்யலாம்.

**59.** இவ்வத்தியாயத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், ஆள் ஒருவரைக் கைதுசெய்வதற்கான பிடியணை விடுக்கப்பட்டுள்ளதெனப் பொலிசு அலுவலர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமிடத்து, அப்பொலிசு அலுவலர் இவ்வத்தியாயத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அந்த நேரத்தில் பிடியாணையானது அவர் கையில் இல்லாதிருப்பினும், பிடியாணையை நிறைவேற்றும் வகையில், அவ்வாளைக் கைதுசெய்யலாம்.

## இ. - பிரகடனமும் நடுக்கட்டலும்

தலைமறைவாக இருக்கும் ஆள் தொடர்பிலான பிரகடனம்.

**60.** (1) ஏதேனும் நீதிமன்றத்தினால் எவ்வாளுக்கெதிராக பிடியாணையொன்று விடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும் தலைமறைவாக இருக்கின்றாரென அல்லது அத்தகைய பிடியாணையை நிறைவேற்றமுடியாதவாறு மறைந்திருக் கின்றாரென (சான்று எடுத்த பின்னராயினுஞ்சரி அல்லது முன்னராயினுஞ்சரி) நம்புவதற்கு அந்த நீதிமன்றத்துக்கு காரணமிருப்பின், அத்தகைய நீதிமன்றம், எழுத்திலான பிரகடனமொன்றை வெளியிட்டு அந்த வெளியிட்டுத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறையாத காலத்தினுள், குறிக்கப்பட்டவோர் இடத்திலும் குறிக்கப்பட்டவொரு நேரத்திலும் தோன்றுமாறு அதன் மூலம் அவரைத் தேவைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய பிரகடனம் பின்வருமாறு வெளியிடப்படுதல் வேண்டும் :-

(அ) அப்பிரகடனத்தைச் சிங்களத்திலும் தமிழிலும் எழுதி அத்தகைய ஆள் சாதாரணமாக வதியும் பட்டினத்தில் உள்ள அல்லது கிராமத்தில் உள்ள துலாம்பரமானவோர் இடத்தில் இவ்விருமொழிகளிலும் பகிரங்கமாக வாசித்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய ஆள் சாதாரணமாக வதியும் வீட்டின் அல்லது மனையகத்தின் துலாம்பரமான பாகம் எதிலும் அல்லது அத்தகைய பட்டினத்தின் அல்லது கிராமத்தின் துலாம்பரமான பாகம் எதிலும் அப்பிரகடனத்தின் சிங்களப் பிரதிகளையும், தமிழ்ப் பிரதிகளையும் ஒட்டுதல் வேண்டும்; அத்துடன்

(இ) நீதிமன்றத்தின் துலாம்பரமான இடத்தில் அப்பிரகடனத்தின் சிங்களப் பிரதிகளையும், தமிழ்ப் பிரதிகளையும் ஒட்டுதல் வேண்டும்.

(3) பிரகடனமானது குறிக்கப்பட்ட ஒரு நாளன்று முறையாக வெளியிடப்பட்டதென்ற பொருள்பட, அப்பிரகடனத்தை விடுக்கும் நீதிமன்றத்தினால் செய்யப்படும் கூற்றொன்று, இப்பிரிவின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன என்பதற்கும் அப்பிரகடனம் அத்தகைய நாளன்று வெளியிடப்பட்டது என்பதற்கும் முடிவான சான்றாதல் வேண்டும்.

**61.** (1) அறுபதாம் பிரிவின் கீழான பிரகடனமொன்றை விடுத்த பின்னர், நீதிமன்றமானது, பிரகடனப்படுத்தப்பட்ட ஆளுக்குச் சொந்தமான, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் அல்லது அவ்விருவகையினவுமான ஆதனங்களையும் நடுக்கட்டும்படி கட்டளையிடலாம். தலைமறைவாக இருக்கும் ஆளின் ஆதனத்தை நடுக்கட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய கட்டளை எந்த நீதிமன்றத்தால் ஆக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்கவெல்லைகளுக்குள்ளாக உள்ளதும், அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதுமான ஆதனம் எதனையும் நடுக்கட்டுவதற்கு அக்கட்டளை அதிகாரமளிக்கும் ; அத்துடன், அத்தகைய ஆளுக்குச் சொந்தமான ஆதனம் எதுவும், அந்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு வெளியே இருப்பின் அத்தகைய ஆதனம் எந்த நீதிவானின் நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் அத்தகைய கட்டளையில் புறக்குறிப்பிட்டதும் அத்தகைய ஆதனத்தை நடுக்கட்டுவதற்கு அதிகாரமளிக்கும்.

(3) நடுக்கட்டும்படி கட்டளையிடப்பட்ட ஆதனமானது வருமதியான கடன்களாக அல்லது அசைவுள்ள வேறு ஆதனமாகவிருப்பின், இப்பிரிவின் கீழான நடுக்கட்டல் -

(அ) கைப்பற்றுவதன் மூலம் ; அல்லது

(ஆ) பொருளேற்பாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் ; அல்லது

(இ) பிரகடனப்படுத்தப்பட்ட ஆளிடம் அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆளிடம், அத்தகைய ஆதனத்தை ஒப்படைத்தலாகாது எனத் தடைசெய்யும் எழுத்திலான கட்டளையொன்றின் மூலம் ; அல்லது

(ஈ) நீதிமன்றம் தக்கதென எண்ணுகின்றவாறாக அத்தகைய முறைகள் எல்லாவற்றின் மூலமும் அல்லது அவற்றுள் எவையேனும் இரண்டின் மூலமும்,

செய்யப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நடுக்கட்டும்படி கட்டளையிடப்பட்ட ஆதனம் அசைவற்ற ஆதனமாகவிருப்பின், இப்பிரிவின் கீழான நடுக்கட்டலானது-

(அ) அவ்வாதனத்தை உடைமையில் எடுப்பதன்மூலம் ; அல்லது

(ஆ) பொருளேற்பாளரொருவரை நியமிப்பதன் மூலம் ; அல்லது

(இ) பிரகடனப்படுத்தப்பட்ட ஆளிடம் அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆளிடம் வாடகை கொடுக்கப் படுவதை அல்லது ஆதனம் ஒப்படைக்கப்படுவதைத் தடைசெய்யும் எழுத்திலான கட்டளையொன்றின் மூலம் ; அல்லது

(ஈ) நீதிமன்றம் தக்கதென எண்ணுகின்றவாறான அத்தகைய முறைகளுள் எல்லாவற்றின் மூலமும் அல்லது அவற்றில் எவையேனும் இரண்டின் மூலமும்,

அத்தகைய ஆதனம் அமைந்துள்ள மாவட்டத்தின் அரசாங்க அதிபரால் அல்லது உதவி அரசாங்க அதிபரால் செய்யப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பொருளேற்பாளரொருவருக்குள்ள தத்துவங்கள், கடமைகள், பொறுப்புகள் ஆகியன, குடியியல் நடவடிக்கையொன்றில் நியமிக்கப்பட்ட பொருளேற்பாளரொருவருக்குள்ள அதேபோன்றவையாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) பிரகடனஞ் செய்யப்பட்ட ஆள் பிரகடனத்திற் குறிப்பிடப்பட்ட காலத்துள் தோன்றாவிடின், நடுக்கட்டப்பட்ட ஆதனம் அமைச்சரினால் கையாளப்படுவதற்குரியதாதல் வேண்டும். ஆனால் அது விரைவாகவும், இயற்கையாகவும் அழிந்துவிடும் நிலையிலிருந்தாலொழிய, அல்லது அதனை விற்பனை செய்வதால் சொந்தக்காரருக்கு நன்மை ஏற்படுமென நீதிமன்றம் கருதினாலொழிய நடுக்கட்டப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடையும் வரை, அது விற்கப்படுதலாகாது. இவ்விரு சந்தர்ப்பங்களுள் எதிலும் நீதிமன்றம், அது தகுதியானதென எண்ணும் போதிலெல்லாம், அதை விற்கும்படி செய்யலாம்,

(7) அசைவற்ற ஆதனத்தை நடுக்கட்டுவதற்கான அத்தகைய ஒவ்வொரு கட்டளைபற்றிய அறிவித்தலும், அத்தகைய ஆதனம் அமைந்துள்ள மாவட்டத்துக்கான காணிப்பதிவாளருக்கு, அக்கட்டளையை ஆக்கும் நீதிமன்றத்தினால் உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும் ; பதிவாளர் அதனை உடனடியாகப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளையெதுவும் ஆவணப்பதிவுக் கட்டளைச்சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் அது பதிவுசெய்யப்படும் வரை, பயனுடையதாதலுமாகாது.

(8) அசைவற்ற ஆதனத்தை விற்கின்ற விடயத்தில், கொள்வனைகாரருக்கான உரித்துமாற்றம், அத்தகைய ஆதனம் அமைந்துள்ள மாவட்டத்தின் அரசாங்க அதிபரினால் அல்லது உதவி அரசாங்க அதிபரினால் எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட உரித்துமாற்றமொன்று அத்தகைய உரித்துமாற்றம் பிரகடனப்படுத்தப்பட்ட ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்டிருந்தாற்போன்று அதே முறையில் அத்தகைய ஆதனத்தைக் கொள்வனைகாரருக்கு உரித்தாக்குதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கட்டப்பட்ட ஆதனத்தை மீள ஒப்படைத்தல்.

**62.** நடுக்கட்டப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டினுள், எவ்வாளின் ஆதனம் 61 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினாற் கையாளப்படற்குரியதாகவுள்ளதோ அல்லது கையாளப்படற் குரியதாகவிருந்துள்ளதோ அவ்வாள், எந்த நீதிமன்றத்தின் கட்டளையினால் அவ்வாதனம் நடுக்கட்டப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் தாமாகவே தோன்றி அல்லது கைது செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டு, பிடியாணை நிறை வேற்றப்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்துக்காக அவர் தலைமறைவாக இருக்கவில்லையென்றும் அல்லது மறைந்து இருக்கவில்லையென்றும், பிரகடனத்திற் குறிக்கப்பட்ட காலத்தினுள்ளாகத் தாம் தோன்றுவதற்குத் தம்மை இயலச் செய்யும் வண்ணம், அப்பிரகடனம் பற்றிய அத்தகைய அறிவித்தலைத் தாம் பெறவில்லையென்றும், அத்தகைய நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் அவர் எண்பித்தால், அத்தகைய ஆதனம், அல்லது அது விற்கப்பட்டிருப்பின், விற்பனையின் தேறிய வரும்படிகள், அல்லது அதன் பாகம் மாத்திரமே விற்கப்பட்டிருப்பின், அவ்விற்பனையின் தேறிய வரும்படிகளும் அவ் வாதனத்தின் எஞ்சிய பாகமும், நடுக்கட்டலின் விளைவாக கூறப்பட்ட எல்லாச் செலவுகளையும் அதிலிருந்து கொடுப்பனவு செய்தபின்னர் அவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ. - மன்றாணைகள் தொடர்பிலான ஏனைய விதிகள்.

அழைப்புக் கட்டளைக்குப் பதலாகப் பிடியாணை விடுத்தல் அல்லது அழைப்புக் கட்டளையையும் பிடியாணை யையும் விடுத்தல்.

**63.** (1) யூரர் ஒருவர் தவிர்ந்த எவரேனும் ஆளைத் தோன்றச் செய்வதற்காக ஓர் அழைப்புக்கட்டளையை விடுப்பதற்கு இச்சட்டக்கோவையினால் நீதிமன்றம் ஒன்று தத்துவம் பெற்றுள்ள ஏதேனும் விடயத்தில் -

(அ) அழைப்புக்கட்டளை விடுக்கப்படுமுன்னர் அல்லது அது விடுக்கப்பட்ட பின்னர், ஆனால் அவர் தோன்றுவதற்கென நிருணயிக்கப்பட்ட காலத்தின்முன்னர், அவர் தலை மறைவாகியுள்ளார் என நம்புவதற்கு, அல்லது அழைப்புக் கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டார் என நம்புவதற்கு நீதிமன்றத்திற்குக் காரணமிருந்தால் ; அல்லது

(ஆ) நீதிமன்றத்தில் தோன்றும்படி அவர் தேவைப்படுத்தப்பட்ட நேரத்தில் அவர் தோன்றத் தவறியிருப்பதோடு, அவ்வழைப்புக் கட்டளையானது, அவ்வாள் அவ்வழைப்புக் கட்டளைக் கிணங்கத் தோன்றுவதை இயலச்செய்வதற்குப் போதிய வெள்ளெனவாகவே முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதென்பது எண்பிக்கப்பட்டும், அத்தகைய தவறுதலுக்கான நியாயமான காரணமெதுவும் தரப்படாமலும் இருந்தால்,

அந்த நீதிமன்றம் அதற்கான காரணங்களை எழுத்தில் பதிந்த பின்னர் அவரைக் கைதுசெய்வதற்கான பிடியாணையொன்றை விடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிடியாணையை நிறைவேற்றுவதில் கூறப்படக்கூடிய செலவு எதனையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக, நீதிமன்றம் நியாயமானதெனக் கருதக்கூடிய அத்தகைய பணத்தொகையை, பிடியாணைக்காக விண்ணப்பிக்கும் ஆள் வைப்பிலிடுதல் வேண்டுமென்ற நிபந்தனையை, (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பிடியாணை விடுப்பதற்கான நிபந்தனையாக நீதிமன்றம் இடலாம்.

பிடியாணையை நிறைவேற்று வதற்காய செலவுகளுக் கான பணத்தை வைப்பிலிடுமாறு நீதிமன்றம் தேவைப்படுத் தலாம்.

**64.** (1) நீதிமன்றமெதிலும் தலைமை வகிக்கின்ற அலுவலர் எவ்வாளைத் தோன்றச் செய்வதற்காக அல்லது கைது செய்வதற்காக அழைப்புக்கட்டளை அல்லது பிடியாணை விடுக்கத் தத்துவமளிக்கப்பட்டுள்ளாரோ அவ்வாள் எவரும் அத்தகைய நீதிமன்றத்தில் சமுகமாயிருக்கும் போது, அத்தகைய நீதிமன்றத்தில் அத்தகைய ஆள் தோன்றுவதற்காகப் பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ பிணைமுறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவரை அத்தகைய அலுவலர் தேவைப்படுத்தலாம்.

தோன்று வதற்காகப் பிணை முறி பெறுவதற் குள்ள தத்துவம்.

(2) நீதிமன்றமொன்றின் முன்னர் தோன்றுவதற்காக இச்சட்டக்கோவையின்கீழ்ப் பெறப்பட்ட ஏதேனும் பிணைமுறியினால் பிணிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், அவ்வாறு தோன்றாதபோது, அத்தகைய நீதிமன்றத்தில் தலைமைவகிக்கும் அலுவலர் அத்தகைய ஆளைக் கைது செய்து, தம் முன்னர் கொண்டுவரும்படி பணிக்கின்ற பிடியாணையொன்றை விடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புக் கட்டளை இலங்கையின் எப்பாகத்திலும் சேர்ப்பிக்கப் படலாம் என்பது.

**65.** (1) தோன்றும்படி கட்டளையிடும் எல்லா அழைப்புக் கட்டளைகளும், இலங்கையின் எப்பாகத்திலும் சேரப்பிக் கப்பட்டலாம் ; ஆயின், "நியாயாதிக்கவெல்லைக்கு வெளியே சேர்ப்பிக்கப்படுவதற்காயது" என்னுஞ் சொற்கள் அவ்வழைப்புக் கட்டளையில் அத்தகைய நீதிமன்றத்தால் புறக்குறிப்பிடப் பட்டாலொழிய, அழைப்புக்கட்டளையை விடுக்கின்ற நீதிமன்றத்தினது இடநியாயாதிக்க எல்லைக்கு வெளியே அத்தகைய அழைப்புக்கட்டளை எதுவும் சேர்ப்பிக்கப் படுதலாகாது.

(2) அவ்வாறு சேர்ப்பிக்கப்படுவதை அனுமதிப்பதற்குக் காரணங்களுண்டென நீதிமன்றம் திருப்தியடைந்தாலொழிய, அத்தகைய அழைப்புக் கட்டளையெதிலும் "நியாயாதிக்க வெல்லைக்கு வெளியே சேர்ப்பிக்கப்படுவதற்காயது" என்னுஞ் சொற்கள் புறக்குறிப்பிடப்படுதல் ஆகாது.

(3) பிடியாணைகளை அனுப்புதலும் நிறைவேற்றுதலும் பற்றிய இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், இயன்றவரை அதே முறையில் அழைப்புக் கட்டளைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் VI

## ஆவணங்களையும் அசைவுள்ள வேறு ஆதனத்தையும் காண்பிக்குமாறும் முறைகேடாக மறித்துவைக்கப்பட்டிருக்கும் ஆட்களை வெளிக் கொணருமாறும் கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணை பற்றி

### அ. - காண்பிக்குமாறு பணிக்கும் அழைப்புக்கட்டளை

**66.** (1) ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது அதன்முன்னர் இச்சட்டக்கோவையின் கீழ் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையின் நோக்கத்துக்காக, ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பது அவசியமானதாக அல்லது விரும்பத்தக்கதாக உள்ளதென அத்தகைய நீதிமன்றம் கருதுகின்றபோதிலெல்லாம், அத்தகைய ஆவணம் அல்லது பொருள் எவ்வாளினது உடைமையில் அல்லது தத்துவத்தில் இருப்பதாக நம்பப்படுகிறதோ அவ்வாளை, நீதிமன்றத்திற் சமுகமாயிருந்து அதனைக் காண்பிக்கும்படி, அல்லது அழைப்புக்கட்டளையிற் கூறப்பட்ட நேரத்திலும், இடத்திலும் அதனைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தி அந்நீதிமன்றம் அழைப்புக்கட்டளையொன்றை விடுக்கலாம்.

ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்குமாறு பணிக்கும் அழைப்புக் கட்டளை.

(2) ஆவணமொன்றை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்குமட்டும் இப்பிரிவின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள், அதனைக் காண்பிப்பதற்கு நேரில் வருவதற்குப் பதிலாக, அத்தகைய ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிக்கச் செய்தால், அவர் அத்தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகியுள்ளாரென கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவிலுள்ளதெதுவும், சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 123 ஆம், 130 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைப் பாதிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது:-

கடிதங்கள் தந்திகள் முதலியன பற்றிய நடவடிக்கை முறை.

**67.** (1) அஞ்சல், தொலைத்தொடர்புகள் திணைக்களத்தின் கட்டுக்காவலிலுள்ள ஏதேனும் புத்தகம், கடிதம், அஞ்சலட்டை, தந்தி அல்லது வேறு ஆவணம் இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் புலனாய்வின் அல்லது நடவடிக்கையின் நோக்கத்திற்குத் தேவையானதென ஏதேனும் நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அந்த நீதிமன்றமானது அத்தகைய ஆவணத்தை அந்த நீதிமன்றம் பணிக்கின்றவாறான அத்தகைய ஆளிடம் ஒப்படைக்குமாறு, விடயத்திற்கேற்றாற்போல அஞ்சல் அதிகாரிகளை அல்லது தொலைச்செய்திப் போக்குவரத்து அதிகாரிகளை தேவைப்படுத்தலாம்.

(2) அத்தகைய ஆவணம் எதுவும், சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி அல்லது பொலிசுக் கண்காணிப்பாளரின் பதவி வரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒருவரின் அபிப்பிராயப்படி இச்சட்டக்கோவையின் கீழான புலனாய்வு அல்லது நடவடிக்கை எதற்கும் தேவைப்படுமாயின், தேடுதல் செய்விக்குமாறும் அத்தகைய ஆவணத்தை அவரிடம் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்டவரான வேறு எவரேனும் ஆளிடம் ஒப்படைக்குமாறும் அவர் விடயத்திற் கேற்றாற்போல், அஞ்சல் அதிகாரிகளை அல்லது தொலைச் செய்திப் போக்குவரத்து அதிகாரிகளைத் தேவைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - தேடுதலாணைகள்

**68.** (1) (அ) அறுபத்தாறாம் பிரிவின் கீழான அழைப்புக் கட்டளையொன்று அல்லது 67 ஆம் பிரிவின்கீழான தேவைப் படுத்தாணையொன்று எவ்வாளுக்கு அனுப்பப்பட்டுள்ளதோ, அல்லது அனுப்பபடக்கூடுமோ அவ்வாள், அத்தகைய அழைப்புக்கட்டளையினால் அல்லது தேவைப்படுத்தாணையினால் தேவைப்படுத்தப்பட்டவாறான ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கமாட்டார் அல்லது காண்பிக்காதுவிடுவார் என நம்புவதற்கு ஏதேனும் நீதிமன்றத்திற்குக் காரணமிருக்குமிடத்து ; அல்லது

தேடுதலாணைகள் எப்போது வழங்கப் படலாம் என்பது.

(ஆ) அத்தகைய ஆவணம் அல்லது வேறு பொருள் எவரேனுமாளினது உடைமையில் இருக்கின்றதென்பது நீதிமன்றத்துக்குத் தெரியாமலிருக்குமிடத்து ; அல்லது

(இ) இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் புலனாய்வின் அல்லது நடவடிக்கையின் நோக்கங்கள் பொதுவான தேடுகைமூலம் அல்லது சோதனையொன்றின் மூலம் நிறைவேற்றப்படுமென நீதிமன்றம் கருதுமிடத்து. -

விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான தேடுதலாணையொன்றை, (3) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக நீதிமன்றம் வழங்கலாம் என்பதுடன், அவ்வாணை அனுப்பப்படும் ஆள், அவ்வாணைக்கிணங்கவும் இதனகத்துப்பின்னருள்ள ஏற்பாடுகளுக்கிணங்கவும் தேடுகையிடலாம் அல்லது சோதனையிடலாம்.

(2) அத்தகைய தேடுதலாணை ஒவ்வொன்றும், அத்தகைய ஆணையிற் குறித்துரைக்கப்படவேண்டியவையும் நியாயமானவையுமான அத்தகைய நாட்களுக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அஞ்சல் அதிகாரிகளின் அல்லது தொலைச்செய்திப் போக்குவரத்து அதிகாரிகளின் கட்டுக்காவலில் உள்ள ஆவணத்தைத் தேடுவதற்கான தேடுதலாணை, மேல் நீதிமன்றத்தால் மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

தேடுதலாணையை மட்டுப்படுத்துவதற்குள்ள தத்துவம்.

**69.** பொருத்தமானதென நீதிமன்றம் கருதினால் குறிப்பிட்ட எந்த இடத்தை அல்லது பாகத்தை மாத்திரம் தேடவேண்டுமென்பதை அல்லது சோதனையிடவேண்டும் என்பதை ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கலாம்; அத்துடன், அத்தகைய ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்புச் சுமத்தப்பட்டவரான ஆள், அவ்வாறு குறித்துரைக்கப்பட்டதான இடத்தை அல்லது பாகத்தை மாத்திரமே தேடுதல் வேண்டும் அல்லது சோதனை இடுதல் வேண்டும்.

களவாடப்பட்ட ஆதனம், பொய்யாகப் புனையப்பட்ட ஆவணம் முதலியன இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் வீட்டைத் தேடுகையிடுதல்.

**70.** ஒரு நீதிவான் நீதிமன்றம் அதற்குக்கிடைத்த தகவலின் படியும் அவசியமானதென அது கருதுகின்றதான அத்தகைய விசா்ரணையின் பின்வரும் கீழ்க்காணும் செயல்கள் நிகழ்வதாக நம்புவதற்கு அதற்குக் காரணம் இருப்பின் ; அதாவது -

(அ) ஏதேனும் இடம், களவாடப்பட்ட அல்லது சட்டவிரோதமாகப் பெறப்பட்ட ஆதனத்தை வைப்பிலிடுதற்காக அல்லது விற்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றதென ; அல்லது

(ஆ) ஏதேனும் இடம், பொய்யாகப் புனையப்பட்ட ஆவணங்களை, பொய்யான இலச்சினைகளை, அல்லது போலி புனையப்பட்ட முத்திரைகளை அல்லது நாணயங்களை, அல்லது நாணயங்களையோ அல்லது முத்திரைகளையோ போலி புனைவதற்கான அல்லது பொய்யாகப் புனைவதற்கான சாதனங்களை அல்லது பொருள்களை வைப்பிலிடுதற்காக அல்லது விற்பதற்காக அல்லது உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றதென ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஏதேனும் இடத்தில், களவாடப்பட்ட ஆதனம் அல்லது சட்டவிரோதமாகப் பெறப்பட்ட ஆதனம், பொய்யாகப் புனையப்பட்ட ஆவணம், பொய்யான இலச்சினை அல்லது போலி புனையப்பட்ட முத்திரைகள் அல்லது நாணயங்கள், அல்லது நாணயங்களையோ அல்லது முத்திரைகளையோ போலி புனைவதற்காக அல்லது பொய்யாகப் புனைவதற்காகப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் அல்லது பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவென அல்லது வைக்கப்பட்டுள்ளனவென அல்லது வைப்பிலிடப் பட்டுள்ளனவென,

நம்புவதற்கு அதற்குக் காரணம் இருப்பின், அது ஆணைப் பத்திரமொன்றை விடுத்து, அத்தகைய ஆணைப்பத்திரம் எவ்வாளுக்கு அனுப்பப்படுகிறதோ அவ்வாளுக்குப் பின்வரும் அதிகாரங்களை வழங்கலாம் ; அதாவது -

(i) தேவையாகக்கூடியவாறான அத்தகைய துணையுடன் அத்தகைய இடத்தினுள் நுழைவதற்கும் ; அத்துடன்

(ii) ஆணைப்பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதனைத் தேடுகையிடுவதற்கும் ; அத்துடன்

(iii) களவாடப்பட்டதென, சட்டவிரோதமாகப் பெறப்பட்டதென, போலியாக்கப்பட்டதென, பொய்யானதென அல்லது போலிபுனையப்பட்டதென அவரால் நியாயமாகச் சந்தேகிக் கப்படுகின்றனவும் அதன்கண் உள்ளனவும் ஆன ஆதனம், ஆவணங்கள், இலச்சினைகள், முத்திரைகள் அல்லது நாணயங்கள் எவற்றையேனும், அத்துடன் முன்னர் சொல்லப்பட்ட அத்தகைய சாதனங்கள், பொருள்கள் எவற்றையும் உடைமையிலெடுப் பதற்கும் ; அத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) அத்தகைய ஆதனத்தை, ஆவணங்களை, இலச்சினைகளை, முத்திரைகளை, நாணயங்களை, சாதனங்களை, அல்லது பொருள்களை ஒரு நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுசெல்வதற்கும் அல்லது தவறாளர் நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் கொண்டுசெல்லப்படும் வரை அவ்விடத்தில் அதனைப் பாதுகாத்தற்கும் அல்லது பாதுகாப்பான இடமொன்றில் அதனை வேறு வகையாகக் கையாளுவதற்கும் ; அத்துடன்

(v) சொல்லப்பட்ட ஆதனம் களவாடப்பட்டதென, அல்லது வேறுவகையாகச் சட்டவிரோதமாகப் பெறப்பட்டதென அல்லது சொல்லப்பட்ட ஆவணங்கள், இலச்சினைகள், முத்திரைகள், நாணயங்கள், சாதனங்கள் அல்லது பொருள்கள் போலியாக்கப்பட்டனவென, பொய்யாக்கப்பட்டனவென அல்லது போலிபுனையப்பட்டனவென அல்லது சொல்லப்பட்ட சாதனங்கள் அல்லது பொருள்கள் நாணயத்தையோ அல்லது முத்திரையையோ போலிபுனைவதற்கு அல்லது போலியாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டனவென அல்லது பயன்டுத்தக் கருதப்பட்டனவென அறிந்து கொண்டு, அல்லது சந்தேகிப்பதற்கு நியாயமான காரணம் உடையவராயிருந்து கொண்டு, அத்தகைய ஏதேனும் ஆதனத்தை, ஆவணங்களை, இலச்சினைகளை, முத்திரைகளை, நாணயங்களை, சாதனங்களை அல்லது பொருள்களை வைப்பிலிடுவதற்கு, விற்பதற்கு, அல்லது உற்பத்திசெய்வதற்கு, அல்லது வைத்திருப்பதற்கு உடந்தையாகக் இருந்தவராகத் தோன்றுகின்றவரும் அத்தகைய இடத்திற் காணப்படுபவரும் ஆன ஒவ்வோராளையும் கட்டுக்காவலில் எடுப்பதற்கும், நீதிவான் நீதிமன்றமொன்றின் முன்னர் கொணருவதற்கும்.

அதிகாரங்களை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**71.** தேடுதலாணையொன்றை வழங்கிய நீதிமன்றத்தினது நியாயாதிக்கத்தின் இட எல்லைக்கு அப்பால் ஏதேனும் இடத்தில் தேடுதலாணையொன்றை நிறைவேற்றும் பொழுது, தேடுதல் மேற்கொள்ளப்பட்ட பொருள்களில் எவையேனும் காணப்பட்டால், அத்தகைய இடம் அவ்விடத்தின்மீது இட நியாயாதிக்கம் கொண்ட நீதிவான் நீதிமன்றத்திற்கு அண்மையில் இருந்தாலன்றி, அத்தகைய பொருள்கள் இதனகத்துப்பின்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் தயாரிக்கப்பட்ட அத்தகைய பொருள்களுக்கான நிரலுடன் சேர்த்து ஆணைப்பத்திரத்தை வழங்கிய நீதிமன்றத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும்; அத்தகைய இடம், அவ்விடத்தின் மீது இட நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிமன்றத்துக்கு அண்மையில் இருக்குமாயின் நிரலும் பொருள்களும் அந்நீதிமன்றத்தின் முன்னர் எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்கு முரணாக நல்ல காரணமிருந்தாலன்றி, கடைசியாகக் கூறப்பட்ட அத்தகைய நீதிமன்றம், எழுத்தாணையை வழங்கிய நீதிமன்றத்தின் முன்னிலைக்கு அவை எடுத்துச் செல்லப்பட வேண்டுமென அதிகாரமளிக்கும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

நியாயாதிக்கத்திற்கு அப்பாலுள்ள இடங்களில் தேடுகை நடாத்தும் போது காணப்படும் பொருள்களைக் கையாளுதல்.

## இ. - முறைகேடாக மறித்து வைக்கப்பட்ட ஆட்களை வெளிக்கொணர்தல்

**72.** மறித்துவைத்தலானது தவறொன்றாகவமையும் அத்தகைய சூழ்நிலைகளில் எவரேனுமாள் மறித்துவைக்கப்படுகின்றாரென நம்புவதற்கு ஏதேனும் நீதிவான் நீதிமன்றத்திற்குக் காரணமிருப்பின், அது தேடுதலாணையொன்றை வழங்கலாம் ; அத்துடன் அத்தகைய ஆணைப்பத்திரம் எவ்வாளுக்கு அனுப்படுகிறதோ அவ்வாள், அவ்வாறு மறித்து வைக்கப்பட்ட ஆளைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடலாம் என்பதுடன், அத்தகைய தேடுகை அதற்கிணங்கச் செய்யப்படுதலும் வேண்டும் ; அவ்வாள் கண்டு பிடிக்கப்படின், அவரை அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் உடனடியாகக் கொண்டுசெல்லுதல் வேண்டும் என்பதுடன், விடயத்தின் சூழ்நிலைகளில் தகுந்ததெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய கட்டளையையும் அந்த நீதிமன்றம் ஆக்கலாம்.

முறைகேடாக மறித்துவைக்கப்பட்ட ஆட்களைக் கண்டுபிடிக்கத் தேடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ. - தேடுகைகள் தொடர்பான பொது ஏற்பாடுகள்

தேடுதலாணைகளை அனுப்புதல் முதலியன.

**73.** பிரிவுகள் 20, 50, 52, 56, 57, என்பவற்றினது ஏற்பாடுகள் இயலுமானவரையில் இவ்வத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டனவான எல்லாத் தேடுதலாணைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

மூடப்பட்டிருக்கும் இடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்கள் தேடுவதனை அனுமதித்தல்.

**74.** (1) இவ்வத்தியாயத்தின்கீழ் தேடப்படுவதற்கு அல்லது சோதனையிடப்படுவதற்கு உட்பட்டதாயுள்ள ஏதேனுமிடம் மூடப்பட்டிருக்கும் போதிலெல்லாம், அத்தகைய இடத்தில் வதிகின்ற அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளெவரும், ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றும் ஆளினது கோரிக்கையின் மேலும், ஆணைப்பத்திரத்தைத் காண்பிப்பதன் மேலும் அதனுட்தடையின்றி நுழைவதற்கு அனுமதியளித்தல் வேண்டும் என்பதுடன், அதில் தேடுகையொன்றைச் செய்வதற்கான நியாயமான எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(2) அத்தகைய இடத்தினுள் நுழைவதற்கு அவ்வாறு அனுமதி பெற முடியாது போனால், ஆணையை நிறைவேற்றும் ஆள், 25 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

கைப்பற்றப்பட்ட பொருட்களின் நிரலை அலுவலர் தயாரித்தல்.

**75.** தேடுதலாணையை நிறைவேற்றும் ஆள், தேடுகையின் போது கைப்பற்றப்பட்ட எல்லாப் பொருள்கள் பற்றியதும், முறையே அவை கண்டுபிடிக்கப்படுகின்ற இடங்கள் பற்றியதுமான நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிரலிற் கையொப்பமிடுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. தேடப்பட்ட இடத்திற் குடியிருப்பவர் அல்லது அவர் சார்பில் வேறோர் ஆள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேடுகையின் போது சமூகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 75 ஆம் பிரிவின் கீழ்த் தயாரிக்கப்பட்டு, ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றும் ஆளினால் கையொப்பமிடப்பட்ட நிரலின் பிரதியொன்று, அத்தகைய குடியிருப்பவரிடம் அல்லது ஆளிடம் ஒப்படைக்கப்படுதலும் வேண்டும். தேடுகையிடப் பட்டஇடத்திற் குடியிருக்கும் ஆள் சமூக மாயிருக்க லாம்.

## உ. - பல்லினமானவை

77. ஏதேனும் நீதிமன்றம், தக்கதென அது கருதினால் இச்சட்டக்கோவையின் கீழ்க் காண்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைத் தடுத்துவைக்கலாம். காண்பிக்கப்பட் பொருள்களை நீதிமன்றம் தடுத்து வைக்கலாம்.

78. (1) சமாதான அலுவலர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட அல்லது அவருக்குப் புறக்குறிப்பு இடப்பட்ட தேடுதலாணை ஒன்று, அச்சமாதான அலுவலர் நேரில் போகமுடியாதவராக இருந்தால் வேறு எவரேனும் சமாதான அலுவலரால் நிறைவேற்றப்படலாம். தேடுதலா ணைகள் சமாதான அலுவலரால் புறக்குறிப்பிடப் படலாம்.

(2) அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய சமாதான அலுவலரின் பெயர் ஆணைப்பத்திரத்தின் மேல், அது எந்த அலுவலருக்கு அனுப்பப்பட்டதோ அல்லது புறக்குறிப்பு இடப்பட்டதோ அந்த அலுவலரால் புறக்குறிப்பு இடப்படுதல் வேண்டும்.

79. (1) தேடுதலாணையினை வழங்கியவரான நீதிவான், ஆணைப்பத்திரமானது உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்தும் நோக்கத்திற்காக நேரில் சமூகமாயிருக் கலாம். தேடுதல்செய் யும் போது சமூகமாயிருக்கும் நீதிவானின் தத்துவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) எந்த இடத்தைத் தேடுகையிடுவதற்காகத் தேடுதலாணையொன்றை வழங்குவதற்கு எவரேனும் நீதிவான் தகுதிவாய்ந்தவராயிருக்கிறாரோ அந்த இடத்தைத் தனது முன்னிலையில் தேடுதல் செய்யும்படி அந்த நீதிவான் வாய்மொழி மூலம் பணிக்கலாம்.

# பாகம் IV

# தவறுகளைத் தடுத்தல்

## அத்தியாயம் VII

## சமாதானத்தைப் பேணுவதற்கான பிணைப்பொறுப்பும் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கான பிணைப்பொறுப்பும் பற்றி

### அ. - குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் சமாதானத்தைப் பேணுவதற்கான பிணைப்பொறுப்பு

குற்றத்தீர்ப் பளிக்கப்பட்ட தன் மேல் சமாதானத் தைப் பேணு வதற்கான பிணைப் பொறுப்பு.

**80.** (1) சமாதானக் குலைவை உள்ளடக்குவதான ஏதேனும் தவறுக்காக அல்லது ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறு ஏற்படுத்தப்போவதாக அச்சுறுத்துவதன் மூலம் குற்றமுறையான அச்சுறுத்தலைப் புரிதலாகிய ஏதேனும் தவறுக்காக அல்லது சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினர் ஒருவராக இருத்தலாகிய தவறுக்காக எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதோடு சமாதானத்தைப் பேணுதற்கென முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாளைத் தேவைப்படுத்துதல் தகுந்ததென எந்த நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றம் அபிப்பிராயப்படும் போது, அந்த நீதிமன்றமானது அத்தகைய தண்டனைத் தீர்ப்பைக் கூறும் அதே நேரத்தில் பொருத்தமானதென அது நினைக்கின்ற அத்தகைய காலத்திற்கு, பிணைகாரருடனோ, பிணைக் காரரின்றியோ அவரதுவருவாய்க்கு விகித சமமாயுள்ள ஒரு தொகைக்கான முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம். இக்காலம் அத்தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை நீதிவான் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டதாயின், அது, இரண்டு ஆண்டுகளை விஞ்சாமலும், அல்லது அத்தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை, மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டதாயின் மூன்று ஆண்டுகளை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

(2) குற்றத்தீர்ப்பானது மேன்முறையீட்டில் அல்லது வேறு வகையாகத் தள்ளிவைக்கப்படுமாயின், அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட முறியானது வறிதானதாகவருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - ஏனைய விடயங்களில் சமாதானத்தைப் பேணுவதற்கான பிணைப்பொறுப்பும் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கான பிணைப் பொறுப்பும்.

ஏனைய விடயங்களில் சமாதானத்தைப் பேணுவதற்கான பிணைப் பொறுப்பு.

**81.** நீதிவான் ஒருவர், ஆள் எவரும் அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகச் சமாதானக் குலைவை ஏற்படுத்துவது சாத்தியம் என அல்லது சமாதானக் குலைவை அநேகமாக ஏற்படுத்தக்கூடியதான முறைகேடான செயல் ஒன்றைச் செய்வது சாத்தியம் என, அல்லது அத்தகைய எல்லைகளுக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்தில் சமாதானக் குலைவைப் புரியும் சாத்தியக்கூறுடைய அல்லது மேற்சொல்லப்பட்டவாறான ஏதேனும் முறைகேடான செயலைச் செய்யும் சாத்தியக்கூறுடைய ஓர் ஆள் அத்தகைய எல்லைகளுக்குள்ளாக இருக்கிறார் என எப்போதாயினும் தகவல் பெறும் போது, அந்த நீதிவான் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததும், அங்ஙனம் நிர்ணயிப்பது பொருத்தமானதென நீதிமன்றம் கருதுகின்றதுமான அத்தகைய காலத்திற்குச் சமாதானத்தைப் பேணுதற்கெனப் பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவருக்கு ஏன் கட்டளையிடக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அத்தகைய ஆளை, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், தேவைப்படுத்தலாம்.

நன்னடத்தையைக்கடைப் பிடிப்பதற்கான பிணைப் பொறுப்பினை சந்தேகிக்கப் பட்டஆட்கள், ஊர்சுற்றிகள் முதலியவர் களிடமிருந்து பெறுதல்.

**82.** நீதிவான் ஒருவர் -

(அ) அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைக்குள்ளாக எவரேனுமாள், அவர் அங்குள்ளமையை மறைப்பதற்கு முற்காப்பான நடவடிக்கைகளை எடுக்கிறார் என்றும், அத்தகைய ஆள் தவறொன்றைப் புரியும் நோக்கத்துடனேயே அத்தகைய முற்காப்பான நடவடிக்கைகளை எடுக்கிறாரென நம்புவதற்குக் காரணமுண்டு என்றும் ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அவரது நியாயாதிக்கவெல்லைகளுக்குள்ளாக வெளிப்படையான பிழைக்கும் வழியில்லாதவரான அல்லது தம்மைப் பற்றி ஒரு திருப்தியான விவரம் தருவதற்கு முடியாதவரான ஆளொருவர் இருக்கிறார் என்றும், எப்போதாயினும் தகவல் பெறும்போது, அத்தகைய நீதிவான் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததும், அங்ஙனம் நிர்ணயிப்பது பொருத்தமானதென நீதிமன்றம் கருதுகின்றதுமான அத்தகைய காலத்திற்கு நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கெனப் பிணைகாரருடன் முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவருக்கு ஏன் கட்டளையிடக்கூடாதெனக் காரணம் காட்டுமாறு அத்தகைய ஆளை, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், தேவைப்படுத்தலாம்.

**83.** நீதிவான் ஒருவர், அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தினது இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக ஆள் எவரும் பழகிப்போன கொள்ளைக்காரர் என, கன்னமிடுபவர் என அல்லது திருடர் என அல்லது களவாடப்பட்டதெனத் தெரிந்துகொண்டு களவாடப்பட்ட ஆதனத்தை வழமையாகப் பெறுபவர் என அல்லது அவர் வழமையாக வன்பறி செய்யும் ஒருவர் என அல்லது வன்பறி புரிவதற்காக ஊறு ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் வழமையாக ஆட்களை இடுபவரென அல்லது அவ்வாறு அச்சத்தில் இட எத்தனிப்பவரென அல்லது திருடர்களை வழமையாகக் காப்பாற்றுபவரென அல்லது திருடர்களுக்குப் புகலிடம் அளிப்பவரென அல்லது களவாடப்பட்ட பொருள்களை மறைப்பதில் அல்லது கையாளுவதில் வழமையாக உதவுபவர் என அல்லது அவர் பெயர் போன தீநடத்தையாளரென அல்லது ஆபத்தான பேர்வழி என எப்போதாயினும் தகவல் பெறும்போது அத்தகைய நீதிவான் இரண்டு ஆண்டுகளை விஞ்சாததும், -

நன்னடத்தையைக்கடைப்பிடிப்பதற்கான பிணைப் பொறுப்பினைப் பழகிப்போன தவறாளர்களிடமிருந்து பெறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்ஙனம் நிர்ணயிப்பது பொருத்தமானதென நீதிவான் கருதுகின்றதுமான அத்தகைய காலத்திற்கு நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கெனப் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவருக்கு ஏன் கட்டளையிடக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு அத்தகைய ஆளை, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், தேவைப்படுத்தலாம்.

அவ்வாறு வருகைதராத ஆளின் விடயத்தில் அழைப்புக் கட்டளை அல்லது ஆணைப் பத்திரம் வழங்குதல்.

**84.** எண்பத்தோராம் பிரிவின்கீழ், 82 ஆம் பிரிவின்கீழ் அல்லது 83 ஆம் பிரிவின்கீழ் செயற்படுபவரான நீதிவான் ஒருவர் அப்பிரிவின் கீழ் எவரேனும் ஆளைக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்துவது அவசியமானதெனக் கருதினால், அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் வருகைதராதிருப்பின் நீதிமன்றத்தில் தோன்றுமாறு தேவைப் படுத்துகின்ற அழைப்புக்கட்டளை ஒன்றினை வழங்கலாம் அல்லது அத்தகைய ஆள் கட்டுக்காவலில் இருந்தும் நீதிமன்றத்திற்கு வருகை தராதபோது, அவர் எந்த அலுவலரின் கட்டுக்காவலில் இருக்கிறாரோ அந்த அலுவலருக்கு அவரை நீதிமன்றத்தின் முன்னர் கொணருமாறு பணிக்கின்ற ஆணைப்பத்திரமொன்றினை வழங்கலாம் :

ஆயின், சமாதான அலுவலர் ஒருவரினது அறிக்கையின்மேல் அல்லது வேறு தகவலின் மேல் (அவ்வறிக்கையின் அல்லது அத்தகவலின் பொழிப்புரை அத்தகைய நீதிவானினால் பதியப்படுதல் வேண்டும்) சமாதானக் குலைவு புரியப்படும் என்று அஞ்சுவதற்கான காரணம் இருப்பதாகவும் அத்தகைய சமாதானக் குலைவை அத்தகைய ஆளை உடன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதுசெய்வதாலன்றி வேறு வகையில் தடுக்கமுடியாதெனவும் அத்தகைய நீதிவானுக்குத் தோன்றும் போதிலெல்லாம், அத்தகைய நீதிவான் அவரைக் கைதுசெய்வதற்கெனப் பிடியாணை ஒன்றினை எந்நேரத்திலாயினும் வழங்கலாம்.

**85.** எண்பத்திநான்காம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அழைப்புக் கட்டளை அல்லது ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும், அத்தகைய அழைப்புக்கட்டளை அல்லது ஆணைப்பத்திரம் எந்தத் தகவலின் மீது வழங்கப்பட்டதோ அந்தத் தகவலின் பொழிப்புரை பற்றிய சுருக்கமான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அழைப்புக் கட்டளையின் அல்லது ஆணைப் பத்திரத்தின் படிவம்.

**86.** (1) எண்பத்துநான்காம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான அழைப்புக்கட்டளை ஒன்றுக்கு இணங்கியொழுகி அல்லது அப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்றினை நிறைவேற்றியதன்பேரில் நீதிவான் ஒருவர் முன்னர் ஆளெவரேனும் தோன்றும்போது அல்லது கொண்டுவரப்படும் போது, நீதிவான், அவர் எத்தகவலின் மீது செயற்பட்டாரோ அத்தகவலின் உண்மை பற்றி விசாரிக்க முற்படுதல் வேண்டும் என்பதுடன், அவசியமானதென அவருக்குத் தோன்றக்கூடியவாறாக, அத்தகைய மேலதிக சான்றினைப் பெற்றுக்கொள்ள முற்படுதலும் வேண்டும்.

தகவலின் உண்மை பற்றிய விசாரணை.

(2) அத்தகைய விசாரணையானது, நீதிவான் நீதிமன்றங்களின் முன்னரான சுருக்கமுறை வழக்குகளின் விளக்கங்களை நடாத்துவதற்கென இதனகத்துப்பின்னர் விதித்துரைக்கப்பட்ட முறையில் சாத்தியமாகக்கூடியவரை நடாத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவின் நோக்கத்திற்காக, ஆள் ஒருவர் பழகிப்போன தவறாளர் அல்லது 83 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஒருவர் என்ற நிகழ்வானது பொதுவான கணிப்பு மதிப்புப்பற்றிய சான்றுகொண்டு அல்லது வேறுவகையான சான்றுகொண்டு எண்பிக்கப்படலாம்.

(4) விசாரணையைத் தொடங்கு முன்னர், நீதிவான், அவரால் பதிவுசெய்து கொள்ளப்பட வேண்டியதான காரணங்களுக்காக, விசாரணை முடியுறும்வரை சமாதானத்தைப் பேணுவதற்கென அல்லது நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கென முறி ஒன்றினை எழுதி நிறைவேற்றுமாறு அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம். இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது.

பிணைப் பொறுப்புக் கொடுக்கு மாறு கட்டளை யிடுதல்.

**87.** அத்தகைய விசாரணையின்மேல், விடயத்திற்கேற்றவாறு சமாதானத்தைப் பேணுவதற்கென அல்லது நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கென, எவ்வாள் தொடர்பில் அவ்விசாரணை செய்யப்படுகிறதோ அவ்வாள் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி முறியொன்றை எழுதி நிறைவேற்றுதல் அவசியமானதென எண்பிக்கப்படின், நீதிவான் அதற்கிணங்கக் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும் :

ஆயின் -

(அ) முறி ஒவ்வொன்றினதும் தொகையானது, விடயத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மிதமிஞ்சியதாக இருத்தலும் ஆகாது ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) எவ்வாள் தொடர்பில் அவ்விசாரணை செய்யப்படுகிறதோ அவ்வாள் பராயமடையாத ஒருவராயின், முறியானது அவரது பிணைக்காரர்களால் மட்டுமே எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

88. அத்தகைய விசாரணையின்மேல், விடயத்திற்கேற்றாற்போல சமாதானத்தைப் பேணுவதற்கென அல்லது நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கென, எவ்வாள் தொடர்பில் அவ்விசாரணை செய்யப்படுகிறதோ அவ்வாள் முறியொன்றை எழுதி நிறைவேற்றுதல் வேண்டுமென்பது அவசியமானதென எண்பிக்கப்படாவிடின், நீதிவான் அப்பொருள்படப் பதிவேட்டில் ஒரு பதிவைச் செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆள், விசாரணை நோக்கத்துக்காக மட்டுமே கட்டுக்காவலில் இருப்பின், அத்தகைய ஆளை அக்கட்டுக்காவலிலிருந்து செல்வதற்கு விடுதலும் வேண்டும், அல்லது அத்தகைய ஆள் கட்டுக்காவலில் இல்லாவிடின், அவரை விடுவித்தலும் வேண்டும். எவ்வாளுக்கு எதிராகத் தகவல் தரப்பட்டதோ அவ்வாளை விடுவித்தல்.

## இ. - பிணைப்பொறுப்புக் கொடுத்துதவ வேண்டும் என்ற கட்டளைகள் எல்லாவற்றிற்கும் ஏற்புடையனவாகும் எற்பாடுகள்.

89. (1) இவ்வத்தியாயத்தின் முற்போந்த பிரிவுகளின் கீழான பிணைப்பொறுப்புக் கொடுக்குமாறு தேவைப்படுத்திக் கட்டளையொன்றினை ஆக்கும் நேரத்தில், அத்தகைய பிணைப்பொறுப்பு கொடுக்கத் தவறும் பட்சத்தில் அக்கட்டளையானது எவ்வாள் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அவ்வாள், நீதிமன்றமானது மேல் நீதிமன்றமாக இருக்குமிடத்து இரண்டு ஆண்டுகட்கு மேற்படாததும், அல்லது நீதிமன்றமானது நீதிவான் நீதிமன்றம் ஒன்றாக இருக்குமிடத்து ஓராண்டுக்கு மேற்படாததும், நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுகின்றதுமான அத்தகைய காலத்திற்கு மறியலில் வைக்கப்படுதல் வேண்டும் என நீதிமன்றம் பணித்தல் வேண்டும் : பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறும் பட்சத்தில் மறியற்றண்டனை விதித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைப் பொறுப்புக் கொடுப்பதற்கான கால அவகாசம்.

ஆயின், நீதிமன்றமானது, அவ்வாறு செய்வது தக்கதென கருதினால், பிணைப்பொறுப்புக் கொடுப்பதற்கென ஒரு மாதத்திற்கு மேற்படாத ஒரு கால அவகாசத்தை வழங்கலாம்:

ஆயின், மேலும், கால அவகாசம் வழங்கப்படுதலாகாது என நீதிமன்றம் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, கால அவகாசத்தை மறுப்பதற்கான காரணங்களை அது பதிதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுக்கான காப்புவாசகங்களின் ஏற்பாடுகள், கட்டளை ஆக்கப்பட்ட நேரத்தில் மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவரான அல்லது மறியற்றண்டனைத் தீர்ப்பினை அனுபவித்துக் கொண்டிருப்பவரான ஆள் ஒருவர் தொடர்பில் ஆக்கப்பட்ட கட்டளைக்கு ஏற்புடையனவாகாது.

பிணைப் பொறுப்பு எவ்வளவு காலத்துக்குத் தேவைப் படுத்தப் படுகின்றதோ அக்காலம் எப்போது தொடங்கும் என்பது

**90.** இவ்வத்தியாயத்தின் முற்போந்த பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் பிணைப் பொறுப்பானது எவ்வளவு காலத்துக்குத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்காலமானது -

(அ) 89 ஆம் பிரிவின்கீழ் கால அவகாசம் அனுமதிக்கப் பட்டிருக்காதவிடத்து, அத்தகைய கட்டளைத் தேதியன்று தொடங்குதல் வேண்டும் ;

(ஆ) அப்பிரிவின்கீழ் கால அவகாசம் அனுமதிக்கப் பட்டுள்ளவிடத்து, அவ்வாறு அனுமதிக்கப்பட்டதான காலம் முடிவடையும் தேதியன்று தொடங்குதல் வேண்டும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கட்டளை ஆக்கப்பட்டபோது மறியற்றண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டவரான அல்லது மறியற்றண்டனைத்தீர்ப்பு அனுபவிக்கின்றவரான ஆள் ஒருவர் பற்றியதாக அக்கட்டளை இருக்குமிடத்து, அத்தகைய தண்டனைத்தீர்ப்பு முடிவடையும் தேதியன்று தொடங்குதல் வேண்டும்.

முறியின் உள்ளடக்கம்.

**91.** (1) அத்தகைய ஆள் எவரினாலும் எழுதி நிறைவேற்றப்பட வேண்டிய முறியானது, விடயத்திற்கேற்றாற்போல சமாதானத்தைப் பேணுமாறு அல்லது நன்னடத்தையுடையவராயிருக்குமாறு அவரைப் பிணித்தல் வேண்டும் ; அத்துடன், நன்னடத்தை யுடையவராக இருக்குமாறு அவரைப் பிணிக்கின்ற முறியின் விடயத்தில் மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறினை இழைத்தல் அல்லது இழைக்க எத்தனித்தல் அல்லது இழைக்க உடந்தையாயிருத்தல், (அது எங்கு இழைக்கப்பட்டதாயினும்சரி) முறியினை மீறிய செயலொன்றாகும்.

பிணைகாரர்களை நிராகரிப்பதற்குள்ள தத்துவம்.

(2) பிணைகாரராக இருப்பதற்கெனக் கூட்டிவரப்பட்ட பிணைகாரர் எவரையும், அத்தகைய பிணைகாரர் தகுதியில்லாத ஆள் என்ற காரணத்துக்காக நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். இவ்வாறு மறுப்பதற்கான காரணத்தை நீதிமன்றம் பதிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியமைக்காக மறியலுக்குப் பாரப்படுத்தல்.

**92.** (1) இவ்வத்தியாயத்தின் முற்போந்த பிரிவுகளின் கீழ்ப் பிணைப்பொறுப்புக் கொடுக்குமாறு கட்டளையிடப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய பிணைப்பொறுப்பு எக்காலப்பகுதி தொடர்பில் கொடுக்கப்படவேண்டுமோ அக்காலப்பகுதி தொடங்குகின்ற தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய பிணைப்பொறுப்பைக் கொடுக்காவிடின், அவர், 89 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டதான மறியற்றண்டனைக் காலப்பகுதியினை அனுபவிக்குமாறு மறியலுக்குப் பாரப்படுத்தப்படுதல் வேண்டும், அல்லது அவர் ஏற்கனவே மறியலில் இருந்தால், அத்தகைய காலப்பகுதி முடிவடையும்வரையில், அல்லது, பிணைப் பொறுப்பைக் கொடுக்கும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்திற்கு அல்லது அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறியற்சாலையின் கண்காணிப்பாளருக்கு அல்லது மறியற்சாலை அதிகாரிக்கு அத்தகைய காலப்பகுதி முடிவடைய முன்னர் பிணைப்பொறுப்பைக் கொடுக்கும் வரையில் மறியற்சாலையில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

சமாதானத்தைப் பேணுவதற்காகப் பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியமைக்குச் சாதாரண மறியற்றண்டனை

(2) சமாதானத்தைப் பேணுவதற்கெனப் பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியமைக்கான மறியற்றண்டனை சாதாரணமானதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கெனப் பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியமைக்கான மறியற்றண்டனை, நீதிமன்றம் ஒவ்வொரு விடயத்திலும் பணிப்பதற்கேற்ப கடூழிய மறியற்றண்டனையாக அல்லது சாதாரண மறியற்றண்டனையாக விருக்கலாம்.

நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்கெனப் பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியதற்கு, கடூழிய அல்லது சாதாரண மறியற்றண்டனை.

**93.** (1) இவ்வாத்தியாயத்தின் கீழ் பிணைப்பொறுப்பைக் கொடுப்பதற்குத் தவறியமைக்காக மறியலிலிடப்பட்டவரான எவரேனும் ஆள், சமுதாயத்திற்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு இடையூறில்லாது மறியலிலிருந்து விடுவிக்கப்படலாம் என ஒரு நீதிமன்றம் கருதுகின்ற போதிலெல்லாம், அந்த நீதிமன்றமானது அத்தகைய ஆள் விடுவிக்கப்பட வேண்டும் என கட்டளையிடலாம்.

பிணைப் பொறுப்புக் கொடுக்கத் தவறியதற்காக மறியலிலிடப்பட்ட ஆளை மறியலிலிருந்து விட்டு விடுவதற்குள்ள தத்துவம்.

(2) உயர் நீதிமன்றம் தவிர்ந்த அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் தவிர்ந்த வேறு ஒரு நீதிமன்றம், சம்பந்தப்பட்ட மறியற்றண்டனையானது அதன் சொந்தக் கட்டளையின் படியான மறியற்றண்டனையாக இருக்கின்ற விடயங்களிற்றவிர, இந்தத் தத்துவத்தைப் பிரயோகித்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ. - பிணைகாரர்களை விடுவித்தல்

பிணைகாரர்களை விடுவித்தல்.

**94.** (1) இச்சட்டக்கோவையின் முற்போந்த அல்லது வேறேதேனும் ஏற்பாட்டின் கீழ் வேறு எவரேனும் ஆளின் அமைதியான ஒழுக்கத்துக்காக, அல்லது அவர் நன்னடத்தையைக் கடைப்பிடிப்பதற்காக, அல்லது எவரேனும் ஆள் நீதிமன்றமொன்றின் முன்னர் முறையாகச் சமுகமளிப்பதற்காக, அல்லது எவரேனும் ஆள் பொருத்தனைகள் எவற்றையும் முறையாகப் புரியவேண்டுமென்பதற்காகப் பிணைநின்ற பிணைகாரர் எவரும் முறியினை எழுதி நிறைவேற்றும்படி பணித்த நீதிமன்றத்திற்கு எந்நேரத்திலாயினும் விண்ணப்பித்து அம்முறியினை இல்லாதொழிக்குமாறு கோரலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதன்மீது, நீதிமன்றமானது, அத்தகைய பிணைகாரர் எவ்வாளுக்காகப் பிணைநின்றாரோ அவ்வாளை அதன் முன்னர் தோன்றுமாறு அல்லது முன்னர் கொணருமாறு தேவைப்படுத்தி, அது தகுந்ததெனக் கருதுகின்றவாறு அழைப்புக் கட்டளையினை அல்லது ஆணைப்பத்திரத்தினை வழங்கலாம்.

(3) அத்தகைய ஆள் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும் போது அல்லது நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படும் போது, அத்தகைய நீதிமன்றம் முறியினை இல்லாதொழிக்கலாம் என்பதுடன் அவ்வாறு செய்யும் பட்சத்தில் அத்தகைய ஆள் அத்தகைய முறியின் முடிவுறாதிருக்கும் காலப்பகுதிக்காக அல்லது அத்தகைய முறியின் நிறைவேற்றப்படாதுள்ள பொத்தனைகளுக்காக மூலப் பிணைப் பொறுப்பினைப் போன்ற அதே விவரணத்தைக் கொண்ட புதிய பிணைப் பொறுப்பினை அளிக்க வேண்டுமென அவருக்குக் கட்டளையிடுதலும் வேண்டும். அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் மூலக்கட்டளைக்கிருந்த அதே பயன்கொண்டதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நானூற்றெட்டாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், வேறோர் ஆளின் அமைதியான ஒழுக்கத்துக்காக அல்லது நன்னடத்தைக்காகப் பிணைநின்ற பிணைகாரர், முறியை இல்லாதொழிக்கும்படி கோரும் விண்ணப்பத்துக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

# அத்தியாயம் VIII

## சட்டவிரோதமான கூட்டம்

**95.** (1) எவரேனும் நீதிவான் அல்லது பொலிசுப் பரிசோதகர் வரிசைப்பதவிக்குக் குறையாத பதவியுடைய எவரேனும் பொலிசு அலுவலர், ஏதேனும் சட்டவிரோதக் கூட்டத்தை அல்லது பொதுமக்கள் சமாதானத்தைக் குழப்பக்கூடிய சாத்தியமுள்ள ஐந்து அல்லது ஐந்திற்கு அதிகமான ஆட்களைக் கொண்ட ஏதேனும் கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி ஆணையிடலாம் என்பதுடன் அதன்மேல், அதற்கிணங்கக் கலைந்து செல்லுதல் அத்தகைய கூட்டத்தினரின் கடமையாதலும் வேண்டும். சட்டவிரோதமான கூட்டத்தைக் கலைத்தல்.

(2) அங்ஙனம் ஆணையிடப்பட்டதன்மேல், அத்தகைய கூட்டமெதுவும் கலைந்துசெல்லாவிடின், அல்லது அங்ஙனம் ஆணையிடப்படாமலிருந்தும் கலைந்துசெல்லாதிருக்கும் தீர்மானமொன்றைக் காட்டும் அத்தகையவொரு விதத்தில் அக்கூட்டம் நடந்துகொண்டால் நீதிவான் அல்லது பொலிசு அலுவலர் அக்கூட்டத்தைக் கலைப்பதற்கு நியாயமான அளவில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோற்காரத்தைப் பிரயோகிப்பதன் மூலம் அத்தகைய கூட்டத்தைக் கலைக்க முற்படலாம் ; அத்துடன் அத்தகைய கூட்டத்தைக் கலைக்கும் நோக்கத்திற்காகவும், அத்துடன் அவசியமாயின் அத்தகைய கூட்டத்தைக் கூட்டத்தினைக் கலைப்பதற்கு குடியியல் வலுவைப் பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்குமுகமாகவோ அல்லது சட்டத்திற் கிணங்க அவர்களைத் தண்டிப்பதற்காகவோ அக்கூட்டத்தின் பகுதியினராகவுள்ள ஆட்களை, கைதுசெய்து மறித்துவைக்கும் நோக்கத்திற்காவும் (இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் உறுப்பினராகவும் அத்தகைய தன்மையில் செயற்படுபவராகவும் இல்லாத) ஆள் எவரினதும் உதவியைக் கோரலாம்.

கூட்டத்தைக் கலைப்பதற்கு இராணுவ வலுவைப் பயன்படுத்தல்

(3) அத்தகைய கூட்டம் எதுவும் வேறு விதத்தில் கலைக்கப்படமுடியாததாகவும், அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்புக்காக அது கலைக்கப்பட வேண்டியது அவசியமாகவும் இருப்பின் ஒரு நீதிவான் அல்லது அந்த மாவட்டத்துக்கான அரசாங்க அதிபர் அல்லது பொலிசுக் கண்காணிப்பாளர் வரிசைப்பதவிக்குக் குறையாத பதவியுடைய பொலிசு அலுவலர் எவரும், இலங்கைத் தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் எவரேனும் வீரரைத் தமது ஆணையின் கீழ்க் கொண்டுள்ளவரான ஆணைபெற்ற அல்லது ஆணைபெறாத அலுவலர் எவரையும், இராணுவ வலுவைப்பயன்படுத்தி அத்தகைய கூட்டத்தைக் கலைக்கும்படியும் அக்கூட்டத்தைக் கலைப்பதற்கு அல்லது சட்டத்திற்கிணங்க அவர்களைத் தண்டிப்பதற்கு அவசியமாகக்கூடிய அக்கூட்டத்தின் பகுதியினராயுள்ள அத்தகைய ஆட்களைக் கைதுசெய்யும்படியும் மறித்து வைக்கும்படியும் தேவைப்படுத்துவதன்மூலம் அதனைக் கலைக்குமாறு செய்விக்கலாம். ஆணைபெற்ற அல்லது ஆணைபெறாத அத்தகைய அலுவலர் ஒவ்வொருவரும் அவர் தக்கதெனக்கருதும் அத்தகைய விதத்தில் அத்தகைய தேவைப்படுத்தாணைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். ஆனால் அங்ஙனம் செய்கையில் அக்கூட்டத்தைக் கலைத்தற்கும் அத்தகைய ஆட்களைக் கைது செய்து தடுத்துவைத்தற்கும் ஏற்றவாறாக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு குறைவாக வலோற்காரத்தைப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு குறைவாகப் பயன்படுத்தலும், ஆட்களின் உடலுக்கும் ஆதனத்திற்கும் இழைக்கப்படக்கூடிய ஊறுபாட்டை எவ்வளவுக்குக் குறைக்கமுடியுமோ அவ்வளவுக்குக் குறைத்தலும் வேண்டும்.

கூட்டத்தைக் கலைப்பதற்கு ஆணைபெற்ற இராணுவ அலுவலருக்குள்ள தத்துவம்.

**96.** அத்தகைய ஏதேனும் கூட்டத்தினால் பொதுமக்கள் பாதுகாப்புக்கு வெளிப்படையான அபாயம் ஏற்பட்டுள்ளவிடத்தும், ஒரு நீதிவானுடன் அல்லது அரசாங்க அதிபருடன் அல்லது பொலிசுக் கண்காணிப்பாளர் வரிசைப்பதவிக்குக் குறையாத பதவியுடைய பொலிசு அலுவலரொருவருடன் தொடர்புகொள்ள முடியாதவிடத்தும், இலங்கைத் தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் எவரேனும் ஆணைபெற்ற அலுவலர், அத்தகைய கூட்டத்தை இராணுவ வலுவைக்கொண்டு கலைக்கலாம் என்பதுடன், அத்தகைய கூட்டத்தை கலைக்குமுகமாகவோ அல்லது சட்டத்துக்கிணங்க அவர்களைத் தண்டிப்பதற்காகவோ அக்கூட்டத்தின் பகுதியினராயுள்ள எவரேனும் ஆட்களைக் கைது செய்து மறித்துவைக்கலாம். ஆனால் அவர் இவ்வுட்பிரிவின் கீழ்ச் செயற்படும் போது, ஒரு நீதிவானுடன் அல்லது அரசாங் அதிபருடன், அல்லது பொலிசுக் கண்காணிப்பாளர் வரிசைப் பதவிக்குக் குறையாத பதவியுடைய பொலிசு அலுவலரொருவருடன் அவர் தொடர்புகொள்வது சாத்தியமாக வருமாயின், அவர் அங்ஙனம் செய்தல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் அவர் அத்தகைய செயலைத் தொடர்ந்து செய்தல் வேண்டுமா அல்லது செய்தலாகாதா என்பது பற்றி அவர் அத்தகைய நீதிவான் அல்லது அரசாங்க அதிபரின் அல்லது பொலிசு அலுவலர் அறிவுறுத்துரைகளுக்குக் கீழ்ப்படிதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வத்தியாயத்தின் கீழ்ச் செய்யப்பட்ட செயல்களுக்கான பாதுகாப்பு.

**97.** (1) இவ்வத்தியாயத்தின்கீழ்ச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடனன்றி, எவரேனும் நீதிவானுக்கு அல்லது அரசாங்க அதிபருக்கு அல்லது பொலிசு அலுவலருக்கு அல்லது இலங்கைத் தரைப் படையின், கடற்படையின், அல்லது வான்படையின் வேறு வீரருக்கு, அல்லது இவ்வத்தியாயத்தின்கீழ் ஒரு கூட்டத்தைக் கலைப்பதில் ஒரு பொலிசு அலுவலருக்கு உதவி புரியும் எவரேனும் ஆளுக்கு எதிராக குற்றவழக்கு எதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்படுதல் ஆகாது.

(2) (அ) இவ்வத்தியாயத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செயற்படுபவரான நீதிவான், அரசாங்க அதிபர், பொலிசு அலுவலர், அல்லது இலங்கைத் தரைப் படையின், கடற்படையின் அல்லது வான்படையின் உறுப்பினர் அல்லது வேறு எவரேனும் ஆள் ; அத்துடன்

(ஆ) இராணுவச் சட்டத்தின்கீழ் எந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென அவர் பிணிக்கப்பட்டுள்ளாரோ அந்தக் கட்டளை எதற்கும் கீழ்ப் படிந்து ஏதேனும் செயலைச் செய்கின்றவரான இலங்கைத் தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் உறுப்பினர் ஒருவர், -

இவ்வத்தியாயத்தின் கீழ்ச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் எச் செயலுக்காகவும், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் IX

## பொதுத்தொல்லைகள்

### அ. - தொல்லைகள் பற்றிய விடயங்களில் தொல்லைகளை அகற்றுவதற்கான அல்லது தணிப்பதற்கான கட்டளைகள்.

**98.** (1) நீதிவானொருவர், ஓர் அறிக்கை அல்லது வேறு தகவல் கிடைக்கப்பெற்றதன் மீதும் அவர் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய சான்று ஏதேனும் இருப்பின் அதனைப் பெறுவதன் மீதும் - பொதுத் தொல்லையை அகற்றுவதற் கான நிபந்தனை யுடனான கட்டளை

(அ) பொதுமக்களால் சட்டமுறையாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக்கூடியதான ஏதேனும் வழியினின்றும், துறைமுகத்தினின்றும், ஏரியினின்றும், ஆற்றினின்றும் அல்லது வாய்க்காலினின்றும், அல்லது ஏதேனும் பொது இடத்திலிருந்து ஏதேனும் சட்டவிரோதமான தடக்கு அல்லது தொல்லை அகற்றப்படவேண்டும் என்று ; அல்லது

(ஆ) சமுதாயத்தின் சுகாதாரத்திற்கு அல்லது உடனல வசதிக்கு ஊறு செய்கின்றது என்ற காரணத்தால் ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில், அல்லது எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை வைத்திருத்தல் நிறுத்தப்படுதல் வேண்டும் அல்லது அகற்றப்படுதல் வேண்டும் அல்லது தடைசெய்யப்படுதல் வேண்டும் என்று ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஏதேனும் கட்டடத்தை அமைத்தல் அல்லது ஏதேனும் பதார்த்தத்தைக் கையாளுதல் பொருந்தீயை அல்லது வெடிவிபத்தை விளைக்கக்கூடுமாதலால், அது தடுக்கப்படுதல் வேண்டும் அல்லது நிறுத்தப்படுதல் வேண்டும் என்று ; அல்லது.

(ஈ) ஏதேனும் கட்டடம் அல்லது மரம் விழுந்துவிடும் சாத்தியம் கொண்டிருப்பதாகவும், அதனால் அயலில் வசிக்கின்ற அல்லது தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது அண்மையில் செல்கின்ற ஆட்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதான அத்தகைய ஒரு நிலையில் இருக்கின்றதாகவும், அதன் விளைவாக அதனை அகற்றுதல், பழுதுபார்த்தல் அல்லது அதற்கு ஆதாரம் கொடுத்தல் அவசியம் என்று ; அல்லது

(உ) அத்தகைய ஏதேனும் வழியுடன் அல்லது பொது இடத்துடன் ஒட்டியதாயுள்ள ஏதேனும் கேணிக்கு, கிணற்றுக்கு அல்லது அகழிக்கு, பொதுமக்களுக்கு நேரக்கூடிய அபாயத்தைத் தடுக்கும் அத்தகைய விதத்தில், வேலியிடப்படுதல் வேண்டும் என்று.

எப்போதாயினும் கருதும்போது, அத்தகைய நீதிவான் அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை ஏற்படுத்தும், அல்லது அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலைக் கொண்டு நடாத்தும், அல்லது அத்தகைய எவையேனும் பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை வைத்திருக்கும் அல்லது அத்தகைய கட்டடம் பதார்த்தம், மரம் கேணி, கிணறு அல்லது அகழி ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் ஆள், நிபந்தனையுடனான கட்டளையினால் நிருணயிக்கப்படற்பாலதான காலத்திற்குள்ளாக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) அத்தகைய தடக்கினை அல்லது தொல்லையினை அகற்றவேண்டுமென ; அல்லது

(ii) அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்த வேண்டுமென அல்லது அகற்ற வேண்டுமென ; அல்லது.

(iii) அத்தகைய பண்டங்களை அல்லது வணிகப் பொருள்களை அகற்றவேண்டுமென ; அல்லது.

(iv) அத்தகைய கட்டடம் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென அல்லது நிறுத்த வேண்டுமென ; அல்லது

(v) அதனை அகற்ற வேண்டுமென, பழுதுபார்க்க வேண்டுமென அல்லது அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டுமென ; அல்லது

(vi) அத்தகைய பதார்த்தம் கையாளப்படும் முறையை மாற்ற வேண்டுமென ; அல்லது

(vii) அத்தகைய மரத்தினை அகற்ற வேண்டுமென ; அல்லது

(viii) விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய கேணியினை, கிணற்றினை அல்லது அகழியினைச் சுற்றி வேலியடைக்க வேண்டுமென,

தேவைப்படுத்துகின்ற அத்தகைய நிபந்தனையுடனான கட்டளையினை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நிபந்தனையுடனான கட்டளையொன்று எவ்வாளுக்கு எதிராக ஆக்கப்பட்டதோ அவ்வாளெவரும், அக்கட்டளையை ஆக்கிய நீதிவான் முன்னர், அல்லது அந்த நீதிமன்றத்தின் வேறெவரேனும் நீதிவான் முன்னர், அக்கட்டளையால் நிருணயிக்கப்பட்ட காலம் முடிவடைவதன் முன்னர் தோன்றி, அக்கட்டளையை இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தள்ளிவைக்குமாறு அல்லது திரிபுபடுத்துமாறு பிரேரிக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் முறையாக ஆக்கப்படும் கட்டளையெதுவும் குடியியல் நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படல் ஆகாது.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக "ஒரு பொது இடம்" என்பது, அரசுக்கு அல்லது ஒரு கூட்டுத்தாபனத்துக்கு உரியதான அல்லது பொது நோக்கங்களுக்கென எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அல்லது அரச திணைக்களம் எதற்கும் உரித்தாக்கப்பட்டதான ஆதனத்தையும், சுகாதார அல்லது பொழுதுபோக்கு நோக்கங்களுக்கென வறிதாக விடப்பட்ட நிலத்தையும் உள்ளடக்கும்.

கட்டளையைச் சேர்ப்பித்தல் அல்லது கட்டளையைப் பற்றி அறிவித்தல்.

**99.** (1) கட்டளையும், இவ்வத்தியாயத்தின் கீழ் ஆக்கப்படும் அல்லது கொடுக்கப்படும் வேறு ஏதேனும் கட்டளையும் அல்லது அறிவித்தலும் சாத்தியமானதாயின், அது எவ்வாளுக்கெதிராக ஆக்கப்பட்டதோ அவ்வாளுக்கு அல்லது அது யாருக்கு வழங்கப்படவேண்டுமோ அவருக்கு, அழைப்புக்கட்டளை சேர்ப்பிப்பதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதத்தில் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய கட்டளையை அவ்வாறு சேர்ப்பிக்க முடியாவிடின், அத்தகைய ஆளுக்குத் தகவலைத் தெரிவிப்பதற்கு நீதிமன்றம் மிகவும் பொருத்தமானதெனக் கருதுவதான அத்தகைய இடத்தில் அல்லது இடங்களில் அதன் பிரதியொன்றை ஒட்டி வைத்தல் வேண்டும்.

கட்டளை, எவரை விளித்து முகவரி இடப்பட்டதோ அவர் அக் கட்டளைக்கு கீழ்ப்படிதல் வேண்டும் அல்லது காரணம் காட்டுதல் வேண்டும்.

**100.** (1) எவ்வாளுக்கு எதிராக அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாள், அதன்கண் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாக -

(அ) அதன் மூலம் பணிக்கப்பட்ட செயலைப் புரிதல் வேண்டும்- அல்லது

(ஆ) 98 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செயற்படுதல் வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறுவதன் விளைவு.

(2) அத்தகைய ஆள் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப் படுத்தப்பட்டவாறு அத்தகைய செயலைப் புரியாவிடின் அல்லது அங்கே தோன்றி கட்டளை தள்ளிவைக்கப்படுமாறு அல்லது திரிபுபடுத்தப்படுமாறு பிரேரிக்காவிடின், அவர் தண்டனைச் சட்டக்கோவையின் 185 ஆம் பிரிவில் அதற்கென விதித்துரைக்கப்பட்டதான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளையானது முற்றானதாக்கப்படுதலும் வேண்டும்.

ஆயின், அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருந்தால் அதன் பணிப்பாளர் ஒவ்வொருவரும், அத்தகைய தவறுகையானது அத்தகைய பணிப்பாளரின் செயலினால் அல்லது செய்யாமையினால் விளைந்ததல்ல என எண்பித்தாலொழிய, இதனகத்து முன்னர் விதித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்திற் தோன்றும் விடயத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறை.

**101.** (1) அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் தோன்றி, அக்கட்டளை தள்ளிவைக்கப்படுமாறு அல்லது திரிபு படுத்தப்படுமாறு பிரேரித்தால், நீதிவான் அவ்விடயம் தொடர்பாக சான்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(2) நீதிவான் அக்கட்டளை நியாயமற்றதெனவும் தகுந்ததெனவும் திருத்திப்பட்டால், அவர் அதனை இல்லா தொழித்தல் வேண்டும் அல்லது விடயத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க, அதனைத் திரிபுபடுத்தல் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு திரிபுபடுத்தும் விடயத்தில், திரிபுபடுத்தப்பட்டவாறான அக்கட்டளையானது முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதிவான் அவ்வாறு திருப்பதிப்படாவிட்டால், அக் கட்டளையானது முற்றானதாக்கப்படுதல் வேண்டும்.

கட்டளையொன்று முற்றானதாக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறை.

**102.** நூறாம் பிரிவின்கீழ் அல்லது 101 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று முற்றானதாக்கப்பட்டுள்ளபோது, அந்தக் கட்டளை எவ்வாளுக்கு எதிராக ஆக்கப்பட்டதோ அவ்வாளுக்கு நீதிவான் அது பற்றி அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், அந்த கட்டளையினால் பணிக்கப்பட்டதான செயலை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாகப் புரியுமாறு மேலும் அவரைத் தேவைப்படுத்தலும் வேண்டும். அத்துடன் அவர் அவ்வாறு அக்கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருக்கும் பட்சத்தில், 100 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாவர் என அவருக்கு அறிவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**103.** (1) அத்தகைய செயலானது, 102 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதான அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாகப் புரியப்படாவிடின், நீதிவான் அச்செயலைப் புரிவிக்கலாம் என்பதுடன், அவ்வாறு புரிவிப்பதற்கான செலவை, ஏதேனும் கட்டடத்தை, அல்லது அவரது கட்டளைப்படி அகற்றப்பட்ட எவையேனும் பண்டங்களை, அல்லது வேறு ஆதனத்தை விற்பதன் மூலம் அல்லது அவரது நீதிமன்றத்தின் நியாயாதிக்க இட எல்லைக்குள்ளாக அல்லது எல்லைகளுக்கு வெளியே உள்ளதான அத்தகைய ஆளின் அசைவுள்ள வேறேதேனும் ஆதனத்தைக் கைப்பற்றுவதன் மூலமும் விற்பதன் மூலமும் அறவிடலாம். அத்தகைய வேறு ஆதனமானது அத்தகைய எல்லைகளுக்கு வெளியே இருப்பின், நடுக்கட்டப்பட இருப்பதான ஆதனம் எந்த நீதிவானினது நியாயாதிக்க இட எல்லைகளுக்குள்ளாக இருக்கின்றதோ அந்த நீதிவான் ஒருவரால் புறக்குறிப்பிடப்படும் போது, அதை நடுக்கட்டுவதற்கும் விற்பனை செய்வதற்கும் அக்கட்டளை அதிகாரமளித்தல் வேண்டும். கட்டளைக்குக் கீழ்ப்படியாமைக்கான விளைவுகள்.

(2) இப்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் துடர்ச்சி எதுவும் தொடரப் படுதலாகாது.

**104.** (1) தொண்ணூற்றெட்டாம் பிரிவின் கீழ் கட்டளை ஒன்றினை ஆக்குகின்றவரான நீதிவான், பொதுமக்களுக்குப் பாரதூரமான தன்மையுள்ள உடனடி ஆபத்தை அல்லது ஊறினைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கருதினால், எவ்வாளுக்கு எதிராகக் கட்டளை ஆக்கப்பட்டதோ அவ்வாளுக்கு, அத்தகைய ஆபத்தை அல்லது ஊறினைத் தவிர்ப்பதற்கு அல்லது தடுப்பதற்குத் தேவைப்படுவதான அத்தகைய உத்தரவை வழங்கலாம். விசாரணை முடிவடையும் வரையிலான உத்தரவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய ஆள் உடனடியாக அத்தகைய உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுமிடத்து, நீதிவான், அத்தகைய ஆபத்தைத் தவிர்ப்பதற்கு அல்லது அத்தகைய ஊறைத் தடுப்பதற்கு அவர் பொருத்தமானதெனக் கருதுகின்ற அத்தகைய வழிவகைகளைப் பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்துவிக்கலாம்.

(3) இப்பிரிவின் கீழ் நீதிவானொருவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் துடர்ச்சி ஒன்று தொடரப்படுதலாகாது.

பொதுத் தொல்லைகள் தொடர்ந்து இடம் பெறுவதனை நீதிவான் தடைசெய்ய லாம்.

**105.** நீதிவான் ஒருவர் தண்டனைச்சட்டக்கோவையில் அல்லது ஏதேனும் சிறப்புச் சட்டத்தில் அல்லது உள்ளூர்ச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான பொதுத் தொல்லை ஒன்றினைத் திரும்பவும் செய்ய வேண்டாம் என அல்லது தொடர்ந்து செய்ய வேண்டாம் என எவரேனும் ஆளுக்குக் கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - தொல்லைகள் பற்றிய அவசர விடயங்களில் தற்காலிகக் கட்டளைகள்

106. (1) நீதிவான் ஒருவரது அபிப்பிராயப்படி உடனடியாகத் தடுத்தல் அல்லது துரிதமாக நிவாரணமளித்தல் விருப்பத்தக்கதாகவிருக்கும் விடயங்களில், குறித்தவொரு செயலை எவரேனும் ஆள் செய்யாது விட வேண்டும் என்ற அல்லது அவரது உடைமையில் அல்லது அவரது முகாமையின் கீழ் உள்ள குறித்த ஓர் ஆதனம் தொடர்பில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற பணிப்பானது, தடையினை, மனக்குலைவை அல்லது ஊறினை அல்லது சட்ட முறையாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள் எவருக்கும் தடை அல்லது மனக்குலைவு அல்லது ஊறு ஏற்படக்கூடிய ஆபத்தை, அல்லது மனித உயிருக்கு உடல் நலத்திற்கு அல்லது பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுவதை அல்லது கலகம் ஒன்றை அல்லது கலவரம் ஒன்றைத் தடுக்கக் கூடியதென அல்லது தடுக்கும் சாத்தியமுள்ளதென அத்தகைய நீதிவான் கருதினால் அவர் அத்தகைய ஆளை, குறித்தவொரு செயலைச் செய்யாதுவிட வேண்டுமென அல்லது அவரது உடைமையில் அல்லது அவரது முகாமையின் கீழ் உள்ள குறித்த ஓர் ஆதனம் தொடர்பில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென எழுத்திலான கட்டளை ஒன்றின் மூலம் (இக்கட்டளை விடயத்தின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு 99 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான முறையில் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்) பணிக்கலாம்.

தொல்லைகள் பற்றிய அவசர விடயங்களில் முதற்றடவை யிலேயே முற்றான கட்டளையை வழங்குவதற் குள்ள தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று நெருக்கடியான நிலைமையின் போது அல்லது கட்டளை எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமோ அவ்வாளுக்கு அறிவித்தலொன்றினை நேரகாலத்துடன் வழங்குவதைச் சந்தர்ப்பம் அனுமதிக்காதபோது, மறு கட்சிக்காரரில்லாமலே ஆக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்று, குறிப்பிட்ட ஓர் ஆளுக்கு, அல்லது குறிப்பிட்ட ஓர் இடத்திற்குப் பொதுமக்கள் அடிக்கடி வந்துபோகும் போது அல்லது வருகைதரும்போது பொதுப்படப் பொதுமக்களுக்கு அனுப்பப்படலாம் என்பதுடன் பின்னதன் விடயத்தில், கட்டளையின் பிரதி ஒன்று, 99 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஒட்டிவைக்கப்படுதலும் வேண்டும்.

(4) நீதிவான் எவரும் அவரால் அல்லது அதே பதவியில் அவருக்கு முன் இருந்தவரால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான கட்டளை எதனையும் நீக்கலாம் அல்லது மாற்றலாம்.

(5) இப்பிரிவின் கீழான கட்டளை எதுவும், மனித உயிருக்கு, உடல்நலத்திற்கு, அல்லது பாதுகாப்பிற்கு ஆபத்தாகும் விடயங்களில், அல்லது கலகம் அல்லது கலவரம் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருக்கும் விடயங்களில் அமைச்சரானவர் அரசாங்கக் கசெற்றில் அறிவித்தல் கொடுப்பதன் மூலம் வேறுவகையாகப் பணித்தாலன்றி, அக்கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு அதிகமாக வலுவுடையதாக இருத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் X

## சமாதான அலுவலர்களின் தடுப்புமுறை நடவடிக்கை

**107.** (1) சமாதான அலுவலர் ஒவ்வொருவரும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறினைத் தடுக்கும் நோக்கத்திற்காகக் குறுக்கிடலாம் என்பதுடன் அவரது திறமைக்கெட்டியவரை பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறு புரியப்படுவதனைத் தடுத்தலும் வேண்டும். சமாதான அலுவலர்கள் பிடியாணை யின்றி கைது செய்தகு தவறினைத் தடுத்தல்.

(2) பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறு எதனையும் புரிவதற்குள்ள எத்தனம் பற்றிய தகவலினைப் பெறுபவரான சமாதான அலுவலர் ஒவ்வொருவரும், அத்தகைய தகவலை, அவர் எந்த அலுவலருக்கு நேரே கீழே பணிபுரிகிறாரோ அந்த அலுவலருக்கு அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பது அல்லது அத்தவறு பற்றி நீதிநெறிக் கவனத்திற்குட்படுத்துவது எந்த அலுவலரின் கடமையாக உள்ளதோ அத்தகைய வேறு எவரேனும் அலுவலருக்கு, அறிவித்தல் வேண்டும் அத்தகைய தவறு புரியப் படுவதற்கான எத்தனம் பற்றிய தகவல்.

(3) பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறெதனையும் புரிவதற்கான எத்தனம் ஒன்றிருப்பதனை அறிந்தவரான சமாதான அலுவலர் ஒருவர், தவறு புரியப்படுவதை வேறுவகையில் தடுக்கமுடியாது என அத்தகைய அலுவலருக்குத் தோன்றினால் அவ்வாறு எத்தனிப்பவரான ஆளை நீதிவானின் கட்டளைகள் இல்லாமலும் ஆணைப்பத்திரம் இல்லாமலும் கைது செய்யலாம். அத்தகைய தவறுகளைத் தடுப்பதற்காக சமாதான அலுவலர்கள் கட்டளையின்றி அல்லது ஆணைப்பத்திர மின்றிக் கைது செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது ஆதனத்துக்கு ஊறு ஏற்படுவதைத் தடுத்தல்.

(4) சமாதான அலுவலர் ஒருவர், அவரதுகண் எதிரில், அசைவுள்ள பொது ஆதனம் அல்லது அசைவற்ற பொது ஆதனம் எதற்கும் ஊறு ஏற்படுத்துவதற்கு எத்தனிப்பதனை, அல்லது பொதுக் காணி எல்லைக் குறியை அல்லது கடற்போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் ஏதேனும் மிதவையை அல்லது சின்னத்தை அகற்றுவதனை அல்லது ஊறு படுத்துவதனைத் தடுப்பதற்கெனத் தமது சொந்த அதிகாரத்தின் பேரில் குறுக்கிடலாம்.

நிறுவைகள், அளவைகள் பரிசோதகர்களுக்கு உதவுதல்.

(5) நிறுவைகள், அளவைகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலிருக்கும் சட்டவாக்கம் எதனதும் ஏற்பாடுகள் எவற்றினையும் மீறியமை எதுவும் பற்றி நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் ஒருவருக்கு உடனடித் தகவல் தருவதும், அத்தகைய பரிசோதகர் எவரினதும் வேண்டுகோளின் பேரில் அத்தகைய சட்டவாக்கம் எதனதும் ஏற்பாடுகள் எவற்றினையும் நிறைவேற்ற அவருக்கு உதவுவதும் சமாதான அலுவலர் ஒவ்வொருவரினதும் கடமையாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் V

# தவறுகளைப் புலனாய்வு செய்தல்

## அத்தியாயம் XI

## பொலிசு அலுவலர்களுக்கும் விசாரணையாளர்களுக்கும் தகவல் தருதலும், புலனாய்வுசெய்வதற்கு அவர்களுக்குள்ள தத்துவங்களும்

**108.** அமைச்சரானவர் ஏதேனும் இடப்பரப்புக்கு விசாரணையாளர் ஒருவராக இருப்பதற்கென ஆள் எவரையும் பெயர்குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கலாம் ; அவ்விடப்பரப்பின் எல்லைகளை அத்தகைய நியமனப் பத்திரத்தில் குறித்துரைத்தல் வேண்டும். விசாரணையாளர்களை நியமித்தல்.

**109.** (1) தவறொன்று புரிதல் தொடர்பான தகவல் ஒவ்வொன்றும், பொலிசு அலுவலருக்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்கு வாய்மொழி மூலமாக அல்லது எழுத்தில் கொடுக்கப்படலாம். தவறொன்று பற்றிய தகவல்.

(2) அத்தகைய தகவல் வாய்மொழி மூலமாக பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது விசாரணையாளர் ஒருவருக்குத் தரப்பட்டால், அது எம் மொழியில் கொடுக்கப்படுகின்றதோ அம்மொழியில், அவரால் எழுத்திலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், தகவல் தருபவருக்கு அது வாசித்துக் காட்டப்படுதலும் வேண்டும் :

ஆயின், தகவலானது எம்மொழியில் கொடுக்கப்படுகிறதோ அம் மொழியில் அத்தகவலை அலுவலர் அல்லது விசாரணையாளர் பதிவதற்கு இயலாதிருப்பின், அவ்வலுவலர் அல்லது விசாரணையாளர் அத்தகவலை எழுத்தில் தரவேண்டுமெனக் கோருதல் வேண்டும். தகவல் தருபவர் அத்தகவலை எழுத்தில் தரமுடியாதவராகவிருப்பின், அவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர்க்கு அல்லது விசாரணையாளர்க்கு உள்ள காரணங்களைப் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்த பின்னர் அத்தகவலைத் தேசிய மொழிகளுள் ஒன்றில் அவ்வலுவலர் அல்லது விசாரணையாளர் பதிதல் வேண்டுமென்பதுடன் அப்பதிவை தகவல் தருபவருக்கு வாசித்துக்காட்டுதலும் வேண்டும் அல்லது அவர் விளங்கும் மொழியில் அதனை மொழிபெயர்த்துக் கூறுதலும் வேண்டும்.

(3) அத்தகைய தகவல் ஒவ்வொன்றும், எழுத்தில் தரப்பட்டதாயினும்சரி அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறாக எழுத்திலிடப்பட்டதாயினும் சரி, அதனைத் தருபவரான ஆளினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தகவல் அல்லது உகந்ததாகக் கூடியவாறான அதன் ஒரு பிரதி விடயத்திற்கேற்றாற்போல, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலரால் பொலிசு நிலையத்தில் அல்லது விசாரணையாளரால் வைத்திருக்கப்பட வேண்டியதும், இதனகத்துப் பின்னர் "தகவற்புத்தகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான புத்தகம் ஒன்றில், அத்தகைய பொலிசு அலுவலரால் அல்லது விசாரணையாளரால் தாமதமில்லாமல் பதியப்படுதலும் வேண்டும். அத்தகைய தகவற் புத்தகம் அதற்கென அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் :

ஆயின், தகவற் புத்தகத்தின் படிவத்தை அமைச்சர் ஒழுங்கு விதிமூலம் ஏற்பாடு செய்யும் வரையில், நியமித்த தேதிக்கு நேர் முந்திய நாளன்று பயன்பாட்டிலிருந்த படிவம் அல்லது படிவங்கள் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்குச் செல்லுபடியானவையாதல் வேண்டும்.

(4) தகவலைப் பெற்றுக்கொண்டவரான பொலிசு அலுவலர், பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இல்லாவிடின், அப்போது அத்தகைய பொலிசு அலுவலர், அத்தகைய தகவலின் நிகழ்வுகள் பற்றி, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) (அ) பொலிசு அலுவலரொருவரின் முன்னிலையில் தவறொன்று புரியப்படுமிடத்து, தவறுபுரியப்பட்ட இடத்தில் அல்லது அதையண்டிய இடத்தில் சமூகமாக இருந்த எவரேனும் ஆளின் கூற்றையும் எவரேனும் சந்தேகநபரின் கூற்றையும் அவர் பதிவுசெய்ய முற்படலாம் என்பதுடன், அத்தகைய பொலிசு அலுவலரே தவறானது எவ்விடத்தில் புரியப்பட்டதோ அவ்விடத்திற்கான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக இல்லாதிருந்தால், அத்தகைய பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அந்நிகழ்வுபற்றி உடனடியாக அறிக்கையிடுதலும் வேண்டும். §3.52 இல 1980

(5) (அ) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலர் ஒருவர் அல்லது விசாரணையாளர், பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலிருந்து அல்லது வேறு வகையாக, ஏதேனும் தவறு புரியப்படுதல் பற்றிச் சந்தேகிப்பதற்குக் காரணமிருந்தால், இதன்கீழ் காட்டப்பட்ட விதமாக, இந்த அத்தியாயத்தின் கீழான புலன்விசாரணையொன்றை அவர் தாமே செய்தல் வேண்டும் அல்லது புலன்விசாரணையொன்று செய்யப்படுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும் :

தவறுபுரியப் பட்டுள்ளதாகச் சந்தேகமிருக்குமிடத்து அல்லது சமாதானக் குலைவு ஏற்படக்கூடுமென அஞ்சப்படுமிடத்துள்ள நடவடிக்கை முறை.

ஆயின், எவ்வாறாயினும், அத்தவறு, பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகவிருப்பின் அல்லது சமாதானக் குலைவொன்று ஏற்படுமென அஞ்சுவதற்கு அவருக்குக் காரணமிருப்பின், விசாரணையாளரொவ்வொருவரினதும் விடயத்தில் அவர் அத்தகைய தவறு தொடர்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ளதான நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிக்கையொன்றினை உடனடியாகச் சமர்பித்தல் வேண்டுமென்பதுடன், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவரின் விடயத்தில், அவர், அவருக்கு உடனடுத்த மேலலுவலருக்கு அறிக்கையொன்றினை உடனடியாகச் சமர்ப்பித்து அவ்விடயம் பற்றிய நிகழ்வுகளையும் சந்தருப்பங்களையும் புலனாய்வு செய்வதற்கெனவும், தவறாளரை விரைவில் வெளிக் கொணருவதற்கும் கைது செய்வதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தற்கெனவும் உடனடியாக அவர் அவ்விடத்துக்கு நேரில் செல்லுதலும் வேண்டும். §3.52 இல 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், மேலும், பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ளவரான அலுவலரொருவர், அவரின் கீழமைந்த அலுவலர்களுள் ஒருவரை அத்தகைய புலனாய்வினைச் செய்வதற்கும், தவறாளரை வெளிக் கொணருவதற்கும் கைது செய்வதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தமக்குப் பதிலாக அவ்விடத்துக்குச் செல்லுமாறு பணிக்கலாம்.

(ஆ) புலனாய்வொன்றினை மேற்கொள்ளுவதற்குப் போதுமான ஏதுக்கள் இல்லையெனப் பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ளவரான அலுவலரொருவருக்கு அல்லது விசாரணையாளரொருவருக்குத் தோன்றினால், அவர் அவ்விடயத்தைப் புலனாய்வு செய்வதற்குப் பிணிக்கப்பட்டவராகார்.

தகவல் தர வல்லவர்களான ஆட்களின் வருகையைத் தேவைப்படுத்துவதற்கு, பொலிசு அலுவலர்க்கு அல்லது விசாரணையாளர்க்கு உள்ள தத்துவம்.

(6) இவ்வத்தியாயத்தின் கீழ்ப் புலனாய்வொன்றினைச் செய்பவரான எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது விசாரணையாளர், கொடுக்கப்பட்ட தகவலைக்கொண்டு பார்க்கையில் அல்லது வேறு விதத்தில் பார்க்கையில், அவ்விடயத்தின் சூழ்நிலைகளை அறிந்தவராகத் தோன்றுகின்றவரும், அத்தகைய பொலிசு அலுவலரின் நிலையத்தினது அல்லது அடுத்திருக்கும் ஏதேனும் பொலிசு நிலையத்தினது எல்லைகளுக்குள்ளாக அல்லது அத்தகைய விசாரணையாளரின் நியாயாதிக்க இட எல்லைகளுக்குள்ளாக வசிப்பவரும் ஆன எவரேனும் ஆளைத் தமக்குமுன் வருகைதருமாறு எழுத்திலான கட்டளை மூலம் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அங்ஙனம் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய ஆள் வருதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரேனும் ஆள், விசாரணையாளர் ஒருவரால் வருகைதருமாறு தேவைப்படுத்தப்படும் போது அவ்வாறு செய்வதற்கு மறுத்தால் அல்லது தவறினால், விசாரணையாளர், அதன்மேல், அவரது தற்றுணிபில் முன்னர் சொல்லப்பட்டவாறான அத்தகைய கட்டளை மூலம் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய ஆள் வருகைதருவதை உறுதிப்படுத்துவதற்கு ஆணைப்பத்திரம் ஒன்றினை வழங்கலாம்.

**110.** (1) இவ்வத்தியாயத்தின்கீழான புலனாய்வொன்றை நடாத்துகின்ற எவரேனும் பொலிசு அலுவலர் அல்லது விசாரணையாளர் அவ்விடயத்தின் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவரெனக் கருதப்படும் எவரேனும் ஆளை வாய்மொழியாக விசாரிக்கலாம் என்பதுடன், அங்ஙனம் விசாரிக்கப்பட்ட ஆளினால் அளிக்கப்பட்ட கூற்று எதனையும் எழுத்திலிடுதலும் வேண்டும் ; ஆனால், அத்தகைய ஆள் எவருக்கும் ஏதேனும் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவித்தலாகாது. அத்தகைய கூற்று முழுவதும் 109 (2) ஆம் பிரிவில் காட்டப்பட்ட முறையில் பூரணமாகப் பதியப்படுதல் வேண்டும். பொலிசு அலுவலர் அல்லது விசாரணையாளர் தெளிவுபடுத்தும்முகமாக வினா எதனையும் வினவுவராயின், அத்தகைய வினாவும், அதற்குத் தரப்பட்ட விடையும், வினாவிடை வடிவத்தில் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய பதிவானது அத்தகைய ஆளுக்குக் காட்டப்படுதல் அல்லது வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரது கூற்றை விளக்குவதற்கு அல்லது அதனோடு எதையும் சேர்ப்பதற்கு அவருக்குரிமையிருத்தலும் வேண்டும். அக்கூற்றினை அளிக்கின்ற ஆள், அதன்பின்னர் அக்கூற்று முடிவடைவதான இடத்தை உடனடுத்துத் தமது கையொப்பத்தையிடுதல் வேண்டும். அக்கூற்றினைப் பதிகின்ற பொலிசு அலுவலர் அல்லது விசாரணையாளர், தம்மாற் பதியப்படும் கூற்று ஒவ்வொன்றுக்கும் கீழே பின்வரும் சான்றுரையைச் சேர்த்தல் வேண்டும்-

சாட்சிக்காரர்கள் பொலிசாரால் அல்லது விசாரணையாளரால் விசாரிக்கப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" .............................................. ஆகிய நான், மேலே பெயர் குறிக்கப்பட்டவரான .............................................................. என்பவரின் கூற்றினை உண்மையாகவும் செம்மையாகவும் பதிந்துள்ளேன் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்."

அத்தகைய கூற்று தகவற் புத்தகத்தில் பதியப்பட்டிராவிடின், வசதிப்படக்கூடியவரை விரைவாக, அதன் உண்மையான பிரதியொன்று அத்தகைய பொலிசு அலுவலரால் அல்லது விசாரணையாளரால் தகவற் புத்தகத்தில் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய கூற்றில் உள்ள எவையேனும் மாற்றங்கள், அதனை அளிக்கும் ஆளினால் முதலெழுத்திடொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன் மாற்றத்தின் விளைவாக நீக்கஞ்செய்யப்பட வேண்டியுள்ள கூற்றின் பாகம் எதுவும், வாசிக்கத்தகுந்த அத்தகைய முறையில், கீறி விடப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய ஆள், அத்தகைய அலுவலரால் அல்லது விசாரணையாளரால் அத்தகைய விடயம்பற்றிக் கேட்கப்படும் எல்லா வினாக்களுக்கும், (குற்றவியலான ஒரு குற்றச்சாட்டுக்கு, அல்லது ஒரு தண்டத்திற்கு அல்லது இழப்பீட்டுக்கு அவரை உள்ளாக்கும் நாட்டம் உடையனவான அத்தகைய வினாக்கள் தவிர) உண்மையாக விடை அளிக்கப் பிணிக்கப்பட்டவராதல் வேண்டும்.

பொலிசு அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு அளிக்கப்பட்ட கூற்றுக்கள் சான்றுக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்கப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது.

(3) எவரேனும் ஆளினால் ஏதேனும் புலனாய்வின்போது ஒரு பொலிசு அலுவலருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்று, நீதிமன்றத்தில் அத்தகைய ஆளின் சான்றை ஒப்புறுதிப்படுத்தும் நோக்கத்துக்குத்தவிர, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பயன்படுத்தப்படலாம் :

ஆயின், ஏதேனும் புலனாய்வின்போது குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவரினால் அளிக்கப்பட்ட கூற்றொன்று, வேறொரு நேரத்தில் வேறொரு கூற்றை அவர் அளித்தார் என எண்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுப்பிரிவில் உள்ளதெதுவும், சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் அடங்கும் ஏதேனும் கூற்றுக்கு ஏற்புடையதாக, அல்லது ஏதேனும் புலனாய்வின்போது ஆளொருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று தண்டனைச் சட்டக்கோவையின் 180 ஆம் பிரிவின்கீழான குற்றச்சாட்டொன்றில் சான்றாகப் பயன்படுத்தப்படுவதனைத் தடுப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

(4) குற்றவியல் நீதிமன்றம் எதுவும் அத்தகைய நீதிமன்றத்தில் விசாரணையின் கீழுள்ள அல்லது விளக்கத்தின் கீழுள்ள வழக்கொன்றிற் பதியப்பட்ட கூற்றுக்களை அனுப்பிவைக்குமாறு கோரலாம் என்பதுடன், அத்தகைய கூற்றுக்களை அல்லது தகவலை, வழக்கில் சான்றாகப் பயன்படுத்தாமல் அத்தகைய விசாரணையில் அல்லது விளக்கத்தில் அந்நீதிமன்றத்துக்கு உதவுவதற்கெனப் பயன்படுத்தலாம் ; 444 ஆம் பிரிவில் வேறு வகையாக ஏற்பாடு செய்திருந்தாலொழிய, குற்றஞ்சாட்டப்பட்டவரோ அவரது முகவர்களோ அக்கூற்றுக்களைக் கோருவதற்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள் ; அன்றியும், நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதென்ற காரணத்துக்காக மட்டும் அவரோ அவர்களோ அதனைப் பார்வையிட உரித்துடையவர்களாக மாட்டார்கள். ஆனால், அவை, அவற்றை அளித்தவர்களான பொலிசு அலுவலரால் அல்லது விசாரணையாளரால் அல்லது சாட்சிக்காரரால் அவர்தம் நினைவை மீட்பதற்கெனப் பயன்படுத்தப்பட்டால் அல்லது நீதிமன்றமானது அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது விசாரணையாளர், அல்லது சாட்சிக்காரர் முரணுகின்றார் என்று காட்டும் நோக்கத்திற்காக அவற்றைப் பயன்படுத்தினால், விடயத்திற்கேற்றாற்போல, சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் அல்லது 145 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், ஏதேனும் தவறு தொடர்பாக அத்தியாயம் XV இன் கீழான பூர்வாங்க விசாரணை நடாத்தப்படுமிடத்து, அதுவரையில் பதியப்பட்டனவான சாட்சிக்காரர்களின் அத்தகைய கூற்றுக்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரினது விண்ணப்பத்தின்மேல், விசாரணையின் போது பகிரங்க நீதின்றத்தில் அவர் பார்வையிடுவதற்கென அவருக்குக் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுதல் எதையும் கொடுக்க முனைதலாகாது.

**111.** விசாரணையாளர் அல்லது பொலிசு அலுவலர் எவரும், தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஆளுக்கு, அத்தகைய ஆளுக்கு எதிரான குற்றஞ்சாட்டுத் தொடர்பாக ஏதேனும் கூற்றை அளிக்குமாறு தூண்டுவதற்கென ஏதேனும் தூண்டுதலை, அச்சுறுத்தலை அல்லது வாக்குறுதியைக் கொடுக்க முனைதல் அல்லது செய்தல் ஆகாது அல்லது கொடுக்க முனைவித்தல் அல்லது செய்வித்தல் ஆகாது. ஆனால், விசாரணையாளர் அல்லது பொலிசு அலுவலர் எவரும், இவ்வத்தியாயத்தின் கீழான ஏதேனும் புலனாய்வின் போது, ஆள் எவரும் அவரது சொந்த விருப்பத்தின் பேரில் அளிப்பதற்கு விரும்புவதான கூற்று எதனையும் அளிப்பதை, ஏதேனும் எச்சரிக்கை மூலமாக அல்லது வேறுவகையாகத் தடுத்தல் அல்லது ஊக்கமிழக்கச் செய்தல் ஆகாது.

பொலிசு அலுவலரால் அல்லது விசாரணையாளரால் தேடப்படுதல்.

**112.** (1) பொலிசு நிலையம் ஒன்றுக்குப் பொறுப்பாகவுள்ளவரான எவரேனும் அலுவலர் அல்லது பிடியாணையின்றிக் கைது செய்தகு வழக்கு ஒன்றில் புலனாய்வு ஒன்றினைச் செய்பவரான விசாரணையாளர் ஒருவர், புலனாய்வைச் செய்வதற்கு ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் முன்வைக்கப்படுதல் அவசியமானதெனக் கருதுகின்றவிடத்தும், 66 ஆம் பிரிவின் கீழ் அழைப்புக்கட்டளை அல்லது கட்டளை வழங்கப்பட்டவரான அல்லது வழங்கப்படக்கூடியவரான ஆள் ஒருவர் அழைப்புக்கட்டளையில் அல்லது கட்டளையில் பணிக்கப்பட்டவாறான அத்தகைய ஆவணத்தை அல்லது வேறு பொருளை முன்வைக்கமாட்டார் என நம்புவதற்குக் காரணம் இருக்கின்றவிடத்தும், அல்லது அத்தகைய ஆவணம் அல்லது வேறு பொருள் எவ் ஆளின் உடைமையில் இருக்கின்றதெனத் தெரியாமல் இருக்கின்றவிடத்தும், அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர், ஏதேனும் இடத்தில் அதனைத் தேடலாம் அல்லது தேடுவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் சாத்தியமானதாயின், தாமே நேரில் தேடுகை செய்யலாம்.

(3) அவர் தாமே நேரில் தேடுகைசெய்ய முடியாதவராக இருப்பதோடு, அந்த நேரத்தில் தேடுகை செய்வதற்கு வேறு எவரேனும் தகுதி வாய்ந்தவர் அச்சமயம் சமூகமாக இல்லாமலும் இருந்தால், அவர் கிராமசேவை உத்தியோகத்தர் எவரையும் தேடுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன், அவர் அத்தகைய கிராமசேவை உத்தியோகத்தருக்கு, தேடுகை எந்த ஆவணம் அல்லது வேறு பொருள் தொடர்பாகச் செய்யப்பட வேண்டுமோ அந்த ஆவணத்தையும் அல்லது வேறு பொருளையும், தேடப்பட வேண்டியதான இடத்தினையும் குறித்துரைக்கின்ற எழுத்திலான கட்டளை ஒன்றினை ஒப்படைத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய கிராமசேவை உத்தியோகத்தர் அதன் மேல் அத்தகைய பொருளை அத்தகைய இடத்தில் தேடலாம்.

(4) தேடுதல் ஆணைகளும் அவற்றின் கீழான தேடுகைகளும் தொடர்பான இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகள், முடிந்தவரையில், இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் தேடுகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுவதற்கு கீழமை அலுவலருக்குள்ள கடமை.

**113.** கீழமை பொலிசு அலுவலர் எவரும், இவ்வத்தியாயத்தின் கீழ்ப் புலனாய்வு எதனையும் செய்துள்ளபோது, அவர் அத்தகைய புலனாய்வின் முடிவினை, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்று போதாததாயின் குற்றஞ்சாட்டப் பட்டவரைவிட்டு விடுதல்.

**114.** இவ்வத்தியாயத்தின் கீழான புலனாய்வொன்றின்மேல் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு, குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பதனை நியாயமான தாக்கும் வகையில் போதுமான சான்று அல்லது நியாயமான ஏது இல்லையெனத் தோன்றினால், அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர், அத்தகைய ஆள் கட்டுக்காவலில் இருந்தால், தவறுபற்றி விளங்குவதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு நியாயாதிக்கங் கொண்ட நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தப்படினும் தேவைப்படுத்தப்பட்ட போதும், அவ்வாறு தோன்றுவாரென உடன்படும் முறியொன்றை அத்தகைய அலுவலர் விசாரணையாளர் பணிக்கக் கூடியவாறாகப் பிணைகாரருடனோ அல்லது பிணைகாரரின்றியோ எழுதி நிறைவேற்றுவதன்மேல், அவரை விட்டு விடுதல் வேண்டும்.

புலனாய்வை இருபத்து நான்கு மணிநேரத்தில் முடிக்கவியலாத போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

§4.52 இல. 1980

**115.** (1) இவ்வத்தியாயத்தின்கீழான புலனாய்வொன்றை 37 ஆம் பிரிவினால் நிர்ணயிக்கப்பட்ட இருப்பத்து நான்கு மணிநேரங்கொண்ட காலப்பகுதிக்குள்ளாக முடிக்கவியலா திருப்பதுடன், மேலும் புலனாய்வுசெய்தல் அவசியமென நம்புவதற்குக் காரணங்களும் இருக்கும்போதிலெல்லாம், பொலிசு நிலையத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது விசாரணையாளர்,அவ்விடயத்தில் நியாயாதிக்கம் கொண்ட நீதிவான் முன்னர் சந்தேகநபரை உடனடியாகக் கொணருதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புலனாய்வின் போது விசாரிக்கப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவராலும் அவ்விடயம் தொடர்பில் கொடுக்கப்பட்ட கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் சுருக்கமொன்றுடன் சேர்த்து விடயத்தின் அறிக்கையொன்றினை அதேவேளையில் அத்தகைய நீதிவானுக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின்கீழ் எந்நீதிவானின் முன்னர் சந்தேகிக்கப்பட்ட ஒருவர் அனுப்பப்பட்டுள்ளரோ அந்நீதிவான், மேற்கொண்டு புலனாய்வு செய்யப்பட்டு முடியும்வரை சந்தேகிக்கப்பட்டவரைக் கட்டுக்காவலில் தடுத்துவைத்தல் உசிதமாதெனத் திருப்தியுறின் அவரது காரணங்களைப் பதிந்த பின்னர், ஏதேனும் மறியற்சாலையின் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்ட ஆணைப் பத்திரத்தின் மூலம் சந்தேகிக்கப்பட்டவரை, மொத்தமாகப் பதினைந்து நாட்களைக் கொண்டதும் அதற்கு அதிகமாகாததுமான காலமென்றிற்குத் தடுத்து வைப்பதற்கு அதிகாரமளிக்கலாம். அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்று தொடர்பிலும் 264 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும். சொல்லப்பட்ட பதினைந்து நாட்காலப் பகுதியின் முடிவில் வழக்கு நடவடிக்கையெதுவும் தொடரப்படாவிடின், நீதிவான் (3) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, சந்தேகிக்கப்பட்ட வரை விடுவிக்கலாம் அல்லது அவர், அங்ஙனம் தேவைப்படுத்தப்படினும் தேவைப்படுத்தப்படும் போதும் அவர் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கென முறியொன்றை எழுதி நிறைவேற்ற வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

(3) 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தண்டனைச் சட்டக்கோவையின் 114 ஆம், 191 ஆம் அத்துடன் 296 ஆம் பிரிவுகளின்கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறு ஒன்றைப் புரிந்துள்ளாரென, அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரென, அல்லது புரிந்துள்ளாரெனச் சந்தேகிக்கப்படுகின்றாரென, அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரெனச் சந்தேகிக்கப்படுகின்றாரெனச் சார்த்தப்படுவதன் விளைவாக :- §2, 68 இல.1979

(அ) நீதிமன்றத்தில் சரணடைந்துள்ள, அல்லது

(ஆ) கைதுசெய்யப்பட்டுள்ள,

ஆள் எவரையும் நீதிவான் ஒருவர் பிணையில் செல்லவிடுதலோ அல்லது வேறுவகையில் செல்லவிடுதலோ ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத்தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது மேல் நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் சரணடைந்த தேதியிலிருந்து அல்லது கைதுசெய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவடையு முன்னராகவே நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடரப்படாவிட்டால், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய ஆளைப் பிணையிற் செல்லவிடுதல் வேண்டும்.

ஆயின், மேலும், மேல்நீதிமன்றமானது, 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சிறப்புச் சூழ்நிலைகள் இருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்று மாதகாலப்பகுதி முடிவடையுமுன்னரோ முடிவடைந்த பின்னரோ, அத்தகைய ஆளைப் பிணையிற் செல்லவிடலாம்.

(4) சந்தேகிக்கப்பட்டவரொருவர் மறியற்சாலைக் கண் காணிப்பாளரொருவரின் சட்டமுறையான கட்டுக் காவலில் இருக்கும் காலத்தின்போது, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள பொலிசு அலுவலரால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் நீதிமன்றம் ஒன்று, புலனாய்வு செய்யும் நோக்கத்திற்காக நியாயமான நேரங்களில் அச்சந்தேகிக்கப்பட்டவரைச் சென்று பார்ப்பதற்கு அத்தகைய பொலிசு அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் பொலிசு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம். நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அத்தகைய நடவடிக்கை புலனாய்வின் நோக்கங்களுக்கு அவசியமானதெனக் கருதப்படின், நீதிமன்றமானது பொலிசு நிலையம் ஒன்றிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவரினால் அந்நோக்கத்திற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மேல் சந்தேகிக்கப்பட்டவரை மறியற்சாலைத் திணைக்கள அலுவலர் ஒருவரின் துணையுடன் இடத்திற்கிடம் (பொலிசு நிலையத்துக்குத் தவிர) கொண்டு செல்வதற்கு அவருக்கு அல்லது பெயர் குறிக்கப்பட்ட வேறு எவரேனும் பொலிசு அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், இவ்வுட்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ்ப் பொலிசு அலுவலர் ஒருவர் சந்தேகிக்கப்பட்ட ஒருவரைச் சென்று பார்க்கின்ற அல்லது அவரை இடத்திற்கிடம் கொண்டு செல்லுகின்ற காலப்பகுதியின் போது, அச்சந்தேகிக்கப்பட்டவர், சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய பொலிசு அலுவலரின் கட்டுக்காவலிலுள்ள குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

116. (1) இவ்வத்தியாயத்தின் கீழான புலனாய்வின்மீது பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு, தகவலானது ஆக்கபூர்வமாகத் தோன்றினால், அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர், கட்டுக்காவலின் கீழுள்ள சந்தேகிக்கப்பட்டவரை விடயத்தில் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணருதல் வேண்டும், அல்லது தவறானது பிணையில் விடத்தகுந்ததாக விருப்பதோடு சந்தேகிக்கப்பட்டவர் பிணைப் பொறுப்புக் கொடுக்கக்கூடியவராகவுமிருந்தால், அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர் அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அவர் தோன்றுவதற்கென அவரிடமிருந்து பிணைப் பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

தகவல் போதுமான அதார பூர்வமானதாக இருப்பின் அல்லது மேலதிகப் புலனாய்வு செய்தல் அவசியமானதாக இருப்பின் வழக்கை நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு அலுவலருக்குள்ள அல்லது விசாரணையாளருக்குள்ள கடமை

§5,52 இல 1980

(2) பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் அல்லது விசாரணையாளர், சந்தேகிக்கப்பட்ட ஆள் ஒருவரை நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் கொணரும் போது அல்லது அவர் தோன்றுவதற்கெனப் பிணைப்பொறுப்பினைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர், அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் காண்பிக்க -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதாகவுள்ள ஏதேனும் ஆயுதத்தை அல்லது வேறு பொருளை அல்லது ஆவணத்தை அல்லது மாதிரியை அல்லது மாதிரிப்பொருளை அத்தகைய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், முறைப்பாட்டாளர் எவரேனும் இருப்பின் அவரையும், அத்தகைய அலுவலருக்கு அல்லது விசாரணையாளருக்கு அவ்விடயத்தின் சூழ்நிலைகளை அறிந்தவர்களாகத் தோன்றுபவர்களான ஆட்கள் அத்தனை பேரையும், அதன்கண் பெயர்குறிக்கப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்கும் சந்தேகிக்கப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டின் விடயத்தில் சான்று கொடுப்பதற்கும் என முறி ஒன்றினை எழுதி நிறைவேற்றுமாறு தேவைப்படுத்துதலும் வேண்டும்.

§5, 52 இல. 1980 (3) நீதிவான், பொலிசு அலுவலரினால் அல்லது விசாரணையாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது ஏதேனும் ஆயுதத்தை அல்லது வேறுபொருளை அல்லது ஆவணத்தை அல்லது மாதிரியை அல்லது மாதிரிப்பொருளை விடயத்திற்கு ஏற்றாற்போல அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு, ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகருக்கு, விரலடையாளப் பதிவாளருக்கு அல்லது அரசாங்க மருந்துவ அலுவலருக்கு, பகுப்பாய்வு செய்வதற்கும் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்குமென அனுப்பிவைக்கலாம்.

(4) எந்த அலுவலர் அல்லது விசாரணையாளர் முன்னிலையில் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட முறி எழுதி நிறைவேற்றப்பட்டதோ அந்த அலுவலர் அல்லது விசாரணையாளர், அத்தகைய முறியினை நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) எவரேனும் முறைப்பாட்டாளர் அல்லது சாட்சிக்காரர் அத்தகைய முறியினை எழுதி நிறைவேற்ற மறுத்தால், அத்தகைய அலுவலர் அல்லது விசாரணையாளர், நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அதுபற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டின் விடயம் பற்றிச் சான்று கொடுப்பதற்கென அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது சாட்சிக்காரர் அதன்முன்னர் சமூகமளிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதன் தற்றுணிபில் ஆணைப் பத்திரமொன்றை அல்லது அழைப்புக்கட்டளையொன்றை வழங்கலாம்.

**117.** ஒவ்வொரு விசாரணையாளரும், இதனகத்து முன்னர் குறிப்பிடப்பட்டனவான தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக, அவரது நியாயாதிக்க இட எல்லைகளுக்குள்ளாகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :- விசாரணையாளர்களுக்குள்ள மேலதிக தத்துவங்கள்.

(அ) எவரேனும் தவறாளரைக் கைதுசெய்வதற்குள்ள தத்துவம் அல்லது அவரது சமூகத்தில் கைது செய்யுமாறு பணிப்பதற்குள்ள தத்துவம் ;

(ஆ) பிடியாணையொன்றினை வழங்குவதற்குள்ள தத்துவம் அல்லது பிடியாணையொன்றின் கீழ் கைது செய்யப்பட்டவரான குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவரை அகற்றுவதற்குக் கட்டளையிடுவதற்குள்ள தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியாணையின்றிக்கைது செய்யத்தகாத தவறுகளின் விடயத்தில் பொலிசு அலுவலர்களுக்கும் விசாரணையாளர்களுக்குமுள்ள தத்துவங்கள்.

§6, 52 இல 1980

**118.** (1) பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகாத ஏதேனும் தவறினைப் புலனாய்வு செய்யும் விசாரணையாளரொருவர் அல்லது பொலிசு அலுவலரொருவர், பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்று தொடர்பிலே மட்டும் பிரயோகிக்கப்படக்கூடியதும், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்டதுமான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பது அவசியமானதென அபிப்பிராயப்படின், அவர் நீதிவானொருவரிடமிருந்து கட்டளையொன்றைப் பெறுவதன்மேல், பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தகாத அத்தகைய தவறு தொடர்பில் அத்தகைய தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு உரித்துடையாதல் வேண்டும்.

(2) முப்பத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, விசாரணையாளர் ஒவ்வொருவரும், அத்துடன் பொலிசு நிலையம் ஒன்றிற்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலர் ஒவ்வொருவரும், புலனாய்வொன்றின் போது ஆளொருவரைத் தடுத்துவைக்கும்படி அதிகாரமளித்தற்குத் தத்துவம் கொண்டவர்களாதல் வேண்டும்.

நீதிவான், விசாரணையாளரிடமிருந்து வழக்கைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**119.** விசாணையாளர் ஒருவரால் புலனாய்வு செய்யப்படுவதான தவறு எதுவும்பற்றி விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு நியாயாதிக்கங் கொண்டுள்ளவரான நீதிவான் எவரும், எக்கட்டத்திலும் அத்தகைய விசாரணையாளரிடமிருந்து வழக்கை மீளப்பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய வழக்கினைத் தாமே விசாரித்து விளங்கலாம் அல்லது அதனை விளக்கத்திற்குப் பாரப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**120.** (1) இவ்வத்தியாயத்தின் கீழான புலனாய்வு ஒவ்வொன்றும் அவசியமற்ற தாமதமில்லாமல் முடிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய புலனாய்வைப் பதினைந்து நாட்களுக்குள் முடிக்க இயலாதவிடத்து, பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் அல்லது விசாரணையாளர், அவ்வழக்கில் நியாயாதிக்கம் கொண்டுள்ளதான நீதிவான் நீதிமன்றத்திற்கு, புலனாய்வு பற்றிய நிகழ்வுகளையும் அதன் முன்னேற்றத்தையும் கூறும் அறிக்கையொன்றினை பதினைந்து நாட்களின் முடிவிலும் அதன் பின்னர் புலனாய்வு முடியும்வரை ஒவ்வொரு பதினைந்து நாட்காலப்பகுதியின் முடிவிலும் அனுப்பி வைத்தல் வேண்டும். புலனாய்வு தாமதமின்றி முடிக்கப் படுதல் வேண்டும்.

(2) நூற்றுப் பதினைந்தாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையிடப்பட்ட தடுத்துவைத்தலானது ஒரு தடவைக்கு பதினைந்து நாட்களைக் கொண்ட காலப்பகுதிகளுக்கானதாக இருத்தல் வேண்டும்.

(3) புலனாய்வு முடிவடைந்ததும், பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிக்கை ஒன்றினை அத்தகைய நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர் தவறெதனையும் புரிந்துள்ளார் என, அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் எனச் சார்த்தல் எதுவும் அறிக்கையில் இல்லாதிருந்தால், அவர் நீதிவானினால் விடுவிக்கப்படுதல் வேண்டும். சந்தேகிக்கப்பட்டவர் தவறெதனையும் புரிந்துள்ளார் என அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அறிக்கையில் சார்த்தப்பட்டிருந்தால், இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, அவருக்கெதிராக வழங்குத்தொடுக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வத்தியாயத் திலுள்ள தத்துவங்கள் ஏனைய தத்துவங்களோடும் கடமைகளோடும் மேலதிகமான வையாக இருத்தல்.

**121.** இவ்வத்தியாயத்தில் அடங்கியுள்ளது எதுவும், இச் சட்டக்கோவையினால் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தினால் பொலிசு அலுவலர்களுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது பொலிசு அலுவலர்கள் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளை மட்டுப்படுத்துவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

மருத்துவத் தொழிலரால் பரிசோதிக்கப் படுதல்.

**122.** (1) புலனாய்வொன்றை நடாத்துவதற்காக ஆள் எவரையும் மருத்துவத்தொழிலர் ஒருவரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியமானதெனப் பொலிசு நிலைய மொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் கருதுமிடத்து, அவர், அத்தகைய ஆளினது சம்மதத்துடன் அத்தகைய ஆளை அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரால் பரிசோதிக்கப்படச் செய்வித்தல் வேண்டும். அரசாங்க மருத்துவ அலுவலர் தமது பரிசோதனை பற்றிய முடிவினைக் குறித்து பொலிசு அலுவலருக்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் அங்ஙனம் பரிசோதிக்கப்படுவதற்குச் சம்மதிக்காத விடத்து, பொலிசு அலுவலர், அத்தகைய ஆளைப் பரிசோதித்து அதுபற்றி அறிக்கையிடுதற்கென மருத்துவ அலுவலர் ஒருவருக்கு அதிகாரமளிக்கும் கட்டளையொன்றை ஆக்குமாறு கோரி, (அம்மருத்துவ அலுவலரின் பெயர் அக்கட்டளையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்) அப்புலனாய்வு எந்நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் நடைபெறுகின்றதோ அந்நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய கட்டளையொன்று ஆக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலரினால் பரிசோதிக்கப்பட இணங்குதல் வேண்டுமென்பதுடன், அம் மருத்துவ அலுவலர், தமது பரிசோதனையின் முடிவு குறித்து நீதிவானுக்கு அறிக்கை செய்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகிக்கப்பட்ட ஆளின் விரல் அடையாளங்கள் தலைமயிர் முதலியவற்றின் மாதிரிகள் ஆகியவற்றை எடுத்தல்.

§3, 14 இல 2005

**123.** (1) பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், புலனாய்வொன்றின் நோக்கங்களுக்காக அவ்வாறு செய்தல் அவசியமென அபிப்பிராயப்படுமிடத்து, புலனாய்வின் கீழுள்ள தவறை இழைத்தவரெனச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளினது ஏதேனும் விரல் அடையாளத்தை, உள்ளங்கை அடையாளத்தை அல்லது பாதத்தின் அடையாளத்தை அல்லது உடலின் எப்பாகத்தினதும் அடையாளத்தை அல்லது அத்தகைய ஆளினது இரத்தத்தின், உமிழ்நீரின், சிறுநீரின், தலைமயிரின், அல்லது விரல் நகத்தின் மாதிரியை, அல்லது விரல் நகமொன்றின் ஏதேனும் சீவலை அவரது சம்மதத்துடன் எடுக்கச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் அத்தகைய ஏதேனும் அடையாளம், மாதிரி அல்லது சீவல் எடுக்கப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர், எந்த நீதிவான் நீதிமன்றத்தினது நியாயாதிக்கத்தினுள்ளாக அப்புலனாய்வு நடாத்தப் படுகின்றதோ அந்நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து அத்தகைய ஏதேனும் அடையாளத்தை, மாதிரியை அல்லது சீவலை எடுப்பதற்கு அத்தகைய பொலிசு அலுவலருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குமாறு கோரலாம். அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தண்டனைச் சட்டக்கோவையின் 114 ஆம், 191 ஆம் அத்துடன் 296 ஆம் பிரிவுகளின்கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறு ஒன்றைப் புரிந்துள்ளாரென, அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரென, அல்லது புரிந்துள்ளாரெனச் சந்தேகிக்கப்படுகின்றாரென, அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரெனச் சந்தேதிக்கப்படுகின்றாரெனச் சார்த்தப்படுவதன் விளைவாக :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) நீதிமன்றத்தில் சரணடைந்துள்ள, அல்லது
(ஆ) கைதுசெய்யப்பட்டுள்ள,

ஆள் எவரையும் நீதிவான் ஒருவர் பிணையில் செல்லவிடுதலோ அல்லது வேறுவகையில் செல்லவிடுதலோ ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும், சட்டத்துறைத்தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது மேல் நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் சரணடைந்த தேதியிலிருந்து அல்லது கைதுசெய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவடையுமுன்னராகவே நீதிவான் நீதிமன்றத்தில் அல்லது மேல்நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடப்படாவிட்டால், 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய ஆளைப் பிணையில் செல்லவிடுதல் வேண்டும்.

ஆயின், மேலும், மேல்நீதிமன்றமானது, 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சிறப்புச் சூழ்நிலைகள் இருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்றுமாத காலப்பகுதி முடிவடையுமுன்னரோ முடிவடைந்த பின்னரோ அத்தகைய ஆளைப் பிணையில் செல்லவிடலாம்".

(4) அத்தகைய ஆள் எவரும் தமது கையெழுத்தின் மாதிரியைக் கொடுப்பதற்கு மறுக்குமிடத்து, பொலிசு நிலையம் ஒன்றுக்குப் பொறுப்பாக உள்ளவரான அலுவலர் எவரும் அத்தகைய ஆளை அவரது கையெழுத்தின் மாதிரியொன்றைக் கொடுக்கும்படி தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்றை ஆக்குமாறு கோரி எந்நீதிவான் நீதிமன்றத்தினது நியாயாதிக்கத்திற்குள்ளாக அப்புலனாய்வு செய்யப்படுகின்றதோ அந்நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**124.** எந்நீதிவானுக்கு அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்நீதிவான் ஒவ்வொருவரும் தோதான கட்டளைகளையும், நீதிமன்ற மன்றாணைகளையும் ஆக்குவதன் மூலமும், விடுவிப்பதன் மூலமும், புலனாய்வொன்றை நடாத்துவதற்கு உதவுதல் வேண்டும் ; அத்துடன் குறிப்பாகத் தவறாளியை அடையாளம் காணும் நோக்கத்திற்காக அடையாள அணி வகுப்பொன்றை நடாத்தலாம் அல்லது நடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய அணிவகுப்பில் பங்குபற்றுமாறு சந்தேகிக்கப்பட்டவரை அல்லது வேறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம் ; மறைவான ஓரிடத்திலிருந்து அவரது அடையாளத்தைக் காட்டுவதற்கு சாட்சிக்காரரொருவரை அனுமதிக்கலாம், அத்துடன் அவர் அத்தகைய அணிவகுப்பின் நடவடிக்கைகள் பற்றிய பதிவேடொன்றைத் தயாரிக்கலாம் அல்லது தயாரிப்பிக்கலாம்.

புலனாய்வின் நீதிவான் உதவுதல்.
§2, 11 இல. 1988

**125.** இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், பொலிசு உதவிக்கண்காணிப்பாளர் வரிசைப் பதவிக்குக் குறையாத பொலிசு அலுவலர் எவருக்கும், தவறொன்று தொடர்பில் இவ்வத்தியாயத்தின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் புலனாய்வை எக்கட்டத்திலாயினும் பொறுப்பேற்றுக் கொள்வதும், அத்தகைய புலனாய்வினை நடாத்துவதும் நெறிப்படுத்துவதும், அத்துடன் அத்தகைய நோக்கத்திற்காக புலனாய்வினை அல்லது புலனாய்வின் ஏதேனும் பாகத்தினை அவர் தேர்ந்தெடுத்த பொலிசு அலுவலர் எவரையும் கொண்டு அல்லது இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பாகத் தெரியப்பட்ட பொலிசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்றைக் கொண்டு செய்விப்பதும், சட்டமுறையானதாதல் வேண்டும்.

சிரேட்ட பொலிசு அலுவலர் புலனாய் வினைப் பொறுப்பேற்க லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XII

### நீதிவான்களுக்கு அல்லது சமாதான அலுவலர்களுக்கு கூறப்படும் கூற்றுக்கள்

தூண்டுதல் வழங்கப்படு தலாகாது.

**126.** அத்தியாயம் XXI இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வன்றி, தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் எவரேனும் ஆளுக்கெதிரான குற்றச்சாட்டுத் தொடர்பாக ஏதேனும் கூற்றினைக் கூறும்படி அத்தகைய ஆளைத் தூண்டுவதற்காக சமாதான அலுவலர் எவரும், அல்லது அதிகாரத்திலுள்ள ஆளெவரும், அத்தகைய ஆளுக்கு ஏதேனும் தூண்டுதலை, அச்சுறுத்தலை அல்லது வாக்குறுதியைக் கொடுத்தலோ அல்லது அளித்தலோ, அல்லது கொடுக்கச் செய்தலோ அல்லது அளிக்கப்படச் செய்தலோ ஆகாது. ஆனால், ஆள் எவரும், எக்கூற்றினைத் தமது சொந்த விருப்பத்தின்பேரில் அளிக்க முற்படக்கூடுமோ அக்கூற்று எதனையும் அளிக்காதவாறு, சமாதான அலுவலர் எவரும் அல்லது அதிகாரமுள்ள ஆளொருவரும், ஏதேனும் முன்னெச்சரிக்கையின் மூலம் அல்லது வேறு விதத்தில் அல்லது தடுத்தல் அல்லது ஊக்கமிழக்கச் செய்தல் ஆகாது.

வேற்றிட மிருப்புப் பற்றிய அறிவித்தல்.

§4. 14 இல. 2005

**126 அ.** (1) ஆளெவரும், மேல்நீதிமன்றத்தில் குற்றப்பகர்வின் மீதான விளக்கமொன்றின் போது வேற்றிடமிருப்பு எதிர்வாதத்துக்கான ஆதாரமாக அவர் -

(அ) புலனாய்வின் போது அவரது கூற்றை அளித்த நேரத்தில் அத்தகைய நிகழ்வைப் பொலிசாருக்குக் கூறியிருந்தாலொழிய ; அத்துடன்

(ஆ) பூர்வாங்க விசாரணையின் போது எந்நேரத்திலும் அத்தகைய நிகழ்வைக் கூறியிருந்தாலொழிய ; அல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) விளக்கம் தொடங்கும் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு முன்னரான எந்தநேரத்திலும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுத்து, குற்றப்பகர்வு, சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் அத்தகைய எதிர்வாதத்தை எழுப்பியிருந்தாலொழிய,

சான்று முன்வைப்பதற்கு உரித்துடையவராதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், நீதிமன்றமானது, மேலே தரப்பட்டுள்ள காலப்பகுதியினுள் வேற்றிடமிருப்புப் பற்றிய எதிர்வாதத்தை எழுப்புவதற்கு ஏன் தாமதித்தாரென்பதைக் காட்டுவதற்குப் போதியதாகவுள்ள காரணங்களைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்வைத்துள்ளாரென அபிப்பிராயப்படின், அதன் பின்னர் எந்நேரத்திலும் ஆனால் குற்ற வழக்குத்தொடுக்குநர் தரப்பிலான வழக்கு முடிவுறுமுன்னர், வேற்றிடமிருப்புப்பற்றிய எதிர்வாதத்தை எழுப்புவதற்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரை அனுமதிக்கலாம்.

(2) அத்தகைய ஆள் எந்த நேரத்தில் எந்த இடத்தில் இருந்தாரெனக் கோருகின்றாரோ அந்த நேரமும் இடமும் பற்றியதும். அவரின் வேற்றிடமிருப்புவாதத்துக்கு ஆதாரமாகச் சான்று கொடுத்துதவக்கூடியவரான ஆட்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் பற்றிய விபரங்கள் பற்றியதுமான அத்தகைய எல்லாத் தகவல்களையும் மூலக்கூற்றானது கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "வேற்றிடமிருப்பு வாதத்துக்கு ஆதாரமான சான்று" என்பது, குறிப்பிட்டவோர் இடத்தில் அல்லது குறிப்பிட்டவோர் இடப்பரப்பில் குறிப்பிட்டவொரு நேரத்தில் சமூகமாயிருந்தமை காரணமாக, தவறு புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட நேரத்தில் தவறு புரியப்பட்டதாக சார்த்தப்பட்ட இடத்தில் அவர் இருக்கவில்லை. அல்லது இருக்கக்கூடிய சாத்தியம்கொண்டவராக இருக்கவில்லை எனக்காட்டுவதற்கு உகந்ததான சான்று என்று பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்களையும் குற்ற ஒப்புதல்களையும் பதிவதற்குள்ள தத்துவம்

**127.** (1) நீதிவான் எவரும், ஏதேனும் விசாரணை அல்லது விளக்கம் தொடங்குவதன் முன்னர் எந்நேரத்திலாயினும் அவருக்குச் செய்யப்பட்டதான கூற்று எதனையும் பதிந்துகொள்ளலாம்.

(2) அத்தகைய கூற்றானது 277 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதியப்பட்டு ஒப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன், தேதியிடப்படுதலும் வேண்டும் ; அத்துடன் வழக்கானது எந்நீதிவான் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட அல்லது விளங்கப்பட இருக்கின்றதோ அந்நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதிவான் எவரும், குற்ற ஒப்புதலொன்றாக இருக்கும் அத்தகைய கூற்று எதனையும், அதனை அளித்த ஆளைக் கேள்விக்குட்படுத்தியதன் மேல் அது தன்னிச்சையாக அளிக்கப்பட்டது என நீதிவான் நம்புவதற்கு அவருக்குக் காரணமிருந்தாலொழிய, பதிதல் ஆகாது ; அத்துடன், அவர் அத்தகைய கூற்று எதனையும் பதியும் போது அத்தகைய பதிவின் அடியில், பின்வரும் பொருள்பட நினைவுக்குறிப்பு ஒன்றை எழுதுதல் வேண்டும் :-

இக்கூற்று தன்னிச்சையாக அளிக்கப்பட்டது என நான் நம்புகிறேன். இது, எனது முன்னிலையிலும் எனக்குக் கேட்கக்கூடியதாகவும் பெறப்பட்டது என்பதுடன், இதனை அளித்த ஆளுக்கு என்னால் மீண்டும் வாசித்துக்காட்டப்பட்டு அவரால் இது சரியெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் அவரால் அளிக்கப்பட்ட கூற்று முழுவதையும் இது செம்மையாகக் கொண்டிருக்கிறது.

(கையொப்பம்) அ. ஆ. ..............................

..........................இல் உள்ள நீதிவான் நீதிமன்றத்து

நீதிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் VI

## குற்றவழக்குத் தொடுப்புக்களிலான நடவடிக்கைகள்

## அத்தியாயம் XIII

### விசாரணைகளிலும் விளக்கங்களிலும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குள்ள நியாயாதிக்கம் பற்றி

### அ. - விசாரணைக்கான அல்லது விளக்கத்துக்கான இடம்

**128.** (1) தவறொவ்வொன்றும், அது எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தினால் சாதாரணமாக விசாரிக்கப்பட்டு விளங்கப்படுதல் வேண்டும். சாதாரணமாக விசாரணையும் விளக்கமும் நடைபெறும் இடம்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக இருக்கக்கூடுமோ அல்லது காணப்படக்கூடுமோ அந்த நீதிவான் நீதிமன்றம் எதுவும், மற்றப்படிக்கு அவ்வவற்றின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட தவறுகளாயுள்ளவையும் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பில் புரியப்பட்டவையுமான எல்லாத் தவறுகளின் விடயத்திலும் முறையே நியாயாதிக்கங் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஆள்புல நீர்ப்பரப்பில் புரியப்பட்ட தவறுகள் பற்றி விசாரிப்பதற்கு எந்தநீதிவான் நீதிமன்றமும் நியாயாதிக்கங் கொண்டதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இரண்டாமுட்பிரிவு ஏற்புடைத்தாகாததும் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் புரியப்பட்டதுமான தவறொன்று, அல்லது ஆழ் கடலில் அல்லது ஏதேனும் கப்பலில் அல்லது ஏதேனும் வானூர்தியில் புரியப்பட்ட தவறொன்று, மற்றப்படிக்குக் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இருந்தால் அந் நீதிமன்றத்தால் விளங்கப்படலாம் அல்லது விசாரிக்கப்படலாம் அல்லது குற்றப்பகர்வின்மீது மேல் நீதிமன்றத்தால் விளங்கப்படலாம் அல்லது விசாரிக்கப்படலாம்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் செயல்புரியப்பட்ட மாவட்டத்துள் அல்லது செயலின் விளைவு தொடர்ந்த மாவட்டத்துள் விளங்கப்படுதல்

**129.** எதையேனும் செய்ததன் காரணத்தாலும் ஏதேனும் விளைவு விளைந்துள்ள காரணத்தாலும் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளார் என்று ஆள் ஒருவர் குற்றஞ்சாட்டப்படும் போது, அத்தகைய தவறானது, அத்தகைய விடயம் எதுவும் எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகச் செய்யப்பட்டதோ அல்லது அத்தகைய விளைவு எந்த நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக விளைந்துள்ளதோ அந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள் இருக்கும் நீதிமன்றம் எதனாலும் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

## எடுத்துக்காட்டுகள்

(அ) **அ** என்பவர் **க** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகக் காயப் படுத்தப்பட்டு **ச** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள் இருக்கின்றார். **அ** என்வரின் குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கற் தவறானது **க** என்ற அல்லது **ச** என்ற நீதிவான் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) **அ** என்பவர் **க** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்கு உள்ளாகக் காயப்படுத்தப்பட்டு **ங** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் பத்து நாட்களும், **ச** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்ககுள்ளாக மேலும் பத்து நாட்களும் அவர் இருக்கின்றபோது **ங** என்ற அல்லது **ச** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அவர்தம் சாதாரண தொழில் முயற்சிகளைத் தொடரமுடியாதவராக இருக்கின்றார் ; **அ** என்பவருக்குச் சட்ட விரோதமாகக் கடுங்காயம் ஏற்படுத்திய தவறானது **க** அல்லது **ங** அல்லது **ச** என்ற நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படலாம்.

(இ) **அ** என்பவர், **க** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக ஊறு ஏற்படுத்தப்படலாம் என்று அஞ்சுமாறாக்கப்பட்டுள்ளார் என்பதுடன் **ங** என்ற நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அவரை அஞ்சுமாறாக்கிய ஆளுக்கு ஆதனத்தை ஒப்படைக்குமாறு தூண்டப்பட்டுள்ளார். **அ** என்பவர் மேல் இழைக்கப்பட்ட வன்பறி என்னும் தவறானது **க** என்ற அல்லது **ங** என்ற நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தவறுடன் தொடர்புடைய என்ற காரணத்தால் ஒரு செயல் தவறொன்றா குமிடத்து விளக்கத்துக் கான இடம்.

**130.** தவறொன்றாகவுள்ள வேறேதேனும் செயலுடனோ அல்லது செயலைச் செய்யுநர் தவறொன்றைப் புரிவதற்கு இயன்றவராயிருப்பின் தவறொன்றாக இருக்கக் கூடியதாகவுள்ள வேறேதேனும் செயலுடனோ தொடர்புடைய காரணத்தால் செயலொன்று தவறொன்றாகும் போது, கடைசியாகக் குறிப்பிடப்பட்டதான தவறு பற்றிய குற்றச்சாட்டானது இவ்விரண்டு செயல்களுள் ஏதேனும் ஒன்று எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

## எடுத்துக்காட்டுக்கள்

(அ) உடந்தையாயிருந்தார் என்ற குற்றச்சாட்டானது, உடந்தையாயிருந்தமை எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தினால் அல்லது உடந்தையளிக்கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

(ஆ) களவாடப்பட்ட பண்டங்களைப் பெற்றுக்கொண்டார் அல்லது வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டானது, எந்த நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகப் பண்டங்கள் திருடப்பட்டனவோ அந்த நீதிமன்றத்தினால் அல்லது எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அவற்றுள் எவையேனும் எந்நேரத்திலேனும் நேர்மையற்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டனவோ அல்லது வைத்திருக் கப்பட்டனவோ அந்த நீதிமன்றத்தினால் விளங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கவர்ந்துசெல்லப்பட்டவரென அறியப்படுபவரான ஆள் ஒருவரை முறைகேடாக மறைத்துவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டானது எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக முறைகேடாக மறைத்துவைத்தல் நடைபெற்றதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தினால், அல்லது எந்த நீதிவான் நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக ஆட்கவர்தல் நடைபெற்றதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படலாம்.

கட்டுக்காவலில் இருந்து தப்புதல்.

**131.** (1) கட்டுக்காவலிலிருந்து தப்பியோடுதல் என்ற தவறானது, எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் இருக்கிறாரோ அந்த நீதிமன்றத்தால் அல்லது எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாகத் தவறு புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தால் விளங்கப்படலாம்.

குற்ற முறையான கையாடலும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகமும்.

(2) குற்றமுறையான கையாடலாகிய தவறு அல்லது குற்றமுறையான நம்பிக்கைத்துரோகமாகிய தவறு, எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அந்தத் தவறின் விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தின் ஏதேனும் பாகம் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் பெற்றுக் கொள்ளப்பட்டதோ அந்த நீதிமன்றத்தாலோ, அல்லது எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அத்தவறு புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தாலோ விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவாடுதல்.

(3) எதனையேனும் களவாடுதலாகிய தவறானது, எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளாக அத்தகைய பொருள் களவாடப்பட்டதோ, அல்லது திருடனால் வைத்திருக்கப்பட்டதோ, அல்லது அது களவாடப்பட்டதனை அறிந்துகொண்டு அல்லது அது களவாடப்பட்டதென நம்புவதற்கான காரணங்களைக் கொண்டிருந்தும் அதனைப் பெற்றுக்கொள்ளும் அல்லது வைத்திருக்கும் ஆளினால் வைத்திருக்கப்பட்டதோ அந்த நீதிமன்றம் எதனாலும் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

பல்வேறு வழக்குகளில் விசாரணைக் கான அல்லது விளக்கத்துக் கான இடம்.

**132.** (1) (அ) பல்வேறு உள்ளூர் இடப்பரப்புகளுள் எவ்விடப்பரப்பில் தவறு புரியப்பட்டதென்பது நிச்சயமாகத் தெரியாத போது ; அல்லது

(ஆ) தவறொன்று, பகுதியளவில் ஓர் உள்ளூர் இடப்பரப்பிலும் பகுதியளவில் இன்னோர் இடப்பரப்பிலும் புரியப்படும் போது ; அல்லது.

(இ) தவறொன்று தொடர்ந்து புரியப்படுகின்ற தாயும் ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூர் இடப்பரப்புகளில் தொடர்ந்து புரியப் படுகின்றதாயும் இருக்கும் போது ; அல்லது

(ஈ) வெவ்வேறு உள்ளூர் இடப்பரப்புகளில் புரியப்பட்ட வெவ்வேறு செயல்களைத் தவறொன்று கொண்டதாயிருக்கும் போது ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) ஒரே செயற்கோவையின் போது வெவ் வேறு தவறுகள் வெவ்வேறு உள்ளூர் இடப்பரப்புகளில் புரியப்படும் போது,

அத்தகைய உள்ளூர் இடப்பரப்புகளுள் ஏதேனும் ஒன்றின் மீது நியாயாதிக்கங்கொண்டிருப்பதான நீதிமன்றமொன்றினால் அத்தவறு அல்லது தவறுகள் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

(2) தவறாளர் பயணமொன்றை அல்லது கடற்பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் போது புரியப்பட்டதான தவறொன்றானது, அந்தப்பயணத்தின் போது அல்லது கடற்பயணத்தின் போது அந்தத் தவறாளர் அல்லது அந்தத்தவறு வேறு எவ்வாளுக்கு எதிராகப் புரியப்பட்டதோ அவ்வாள் அல்லது அந்தத்தவறு எப்பொருள் தொடர்பில் புரியப்பட்டதோ அப்பொருள் எந்த நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்கு ஊடாக அல்லது உள்ளாகச் செல்லும் போது புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

பயணமொன்றின் போது புரியப்பட்ட தவறு.

(3) புகைவண்டிச் சேவை, தொலைச்செய்திப் போக்குவரத்துச் சேவை, அஞ்சல் அலுவலகச் சேவை அல்லது படைக்கலங்கள், படைத்தளபாடங்கள் என்பன தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ளதான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு எதிராகப் புரியப்பட்ட தவறுகள் யாவும், அத்தவறானது அத்தகைய நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள் புரியப்பட்டதாகக்கூறப்படினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, தவறாளர் அத்தகைய இடநியாயாதிக்க எல்லைகளுக்குள் காணப்பட்டால் எந்தநீதிமன்றத்தாலும் விசாரிக்கப்படலாம் அல்லது விளங்கப்படலாம்.

புகைவண்டிச் சேவை,தொலைச் செய்திப் போக்குவரத்துச் சேவை, அஞ்சல் அலுவலக சேவை, படைக்கலங்கள் படைத்தளபாடங் கள் என்பன தொடர்பான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு எதிரான தவறுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயுறவு எழும் விடயத்தில் விசாரணை எந்த நீதிமன்றத்தில் நடைபெறுதல் வேண்டும் என்பதனைச் சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் தீர்மானித்தல் வேண்டும்.

**133.** ஏதேனும் தவறு, எந்த நீதிவான் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுதல் வேண்டும் என்பது பற்றி நீதிவான் ஒருவருக்கு ஐயுறவு ஏற்படும் போதிலெல்லாம், அத்தகைய நீதிவானானவர், நன்கறியப்பட்ட நிகழ்வுகளை வழக்கொன்றின் வடிவத்தில் உள்ளடக்கி, அதனை சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்திற்கென அவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அதன் மேல் சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் அந்தத் தவறு எந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுதல் வேண்டும் என்பதனை முடிவு செய்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய நீதிமன்றமானது அதன்மேல் அத்தகைய தவறினை விசாரிப்பதற்கு நியாயாதிக்கங் கொண்டதாதல் வேண்டும்.

விசாரணை, பிழையான நீதிவான் நீதிமன்றத்தால் செய்யப்பட்டதென் பதற்காகத் தண்டனைத் தீர்ப்புத் தள்ளி வைக்கப்படுதலாகாது.

**134.** தவறொன்றை விளங்கும் போது ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை எதுவும் அத்தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை எத்தவறு தொடர்பானதோ அத்தவறு புரியப்பட்டமை பற்றிய விசாரணையானது, இவ்வத்தியாயத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்குத் தத்துவம் வழங்கப்படாததான நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் செய்யப்பட்டது என்ற காரணத்தின்மீது மட்டும் தள்ளிவைப்பதற் குரியதாதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ . - வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அவசியமான நிபந்தனைகள்

குறித்த சில தவறுகள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அவசியமான நிபந்தனைகள்.

**135.** (1) நீதிமன்றம் எதுவும் கீழ்க்காணும் சூழ்நிலைகள் இருந்தால் அன்றித்தவறெதையும் நீதிநெறிக் கவனத்துட்படுத்துதலாகாது ; அதாவது :-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடனன்றி அல்லது சம்பந்தப்பட்ட பகிரங்க சேவையாளரின் முறைப்பாட்டின் மேலன்றி அல்லது சம்பந்தப்பட்ட பகிரங்க சேவையாளர் எந்தப் பகிரங்கவேவையாளரின் கீழ்ப் பணிபுரிகின்றாரோ அந்தப் பகிரங்க சேவையாளரின் முறைப்பாட்டின் மேலன்றி, தண்டனைச் சட்டக்கேவையின் 170 முதல் 185 வரையிலான (இரண்டும் உட்பட்ட) பிரிவுகளின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும் நீதிநெறிக் கவனத்துட்படுத்துதலாகாது ;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடனன்றி, தண்டனைச் சட்டக்கேவையின் 158, 159, 160, 161, 210, 211, அத்துடன் 212 ஆகிய பிரிவுகளின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும் நீதிநெறிக்கவனத்துட் படுத்துதலாகாது ;

(இ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடனன்றி அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் முறைப்பாட்டின் மேலன்றி, தண்டனைச்சட்டக்கேவையின் 190, 193, 196, 197, 202, 203, 204, 205, 206, 207 அத்துடன் - §7, 52 இல. 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

223 ஆகிய பிரிவுகளின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறானது ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்கு நடவடிக்கையின் போது அல்லது அந்நடவடிக்கை தொடர்பாகப் புரியப்படும் போது அத்தகைய தவறு எதனையும் நீதிநெறிக் கவனத்துட்படுத்துதலாகாலது ;

§7, 52 இல 1980 (ஈ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடனன்றி அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் முறைப்பாட்டின் மேலன்றி, தண்டனைச்சட்டக்கேவையின் 452 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட அல்லது 459 ஆம், 463 ஆம் 464 ஆம் பிரிவுகளின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும் அத்தகைய தவறானது ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் நடவடிக்கைக்குக் கட்சிக்காரராக உள்ள ஒருவரால் அத்தகைய நடவடிக்கையின் போது சான்றாகக் கொடுத்த ஓர் ஆவணம் தொடர்பில் புரியப்படும் போது, நீதிநெறிக் கவனத்துட்படுத்துதலாகாது ;

§4, 12 இல 1980 (உ) நீக்கப்பட்டுள்ளது. §4, 12 இல 1980

(ஊ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடன் தண்டனைச் சட்டக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் கீழ் வருவதான தவறினால் இடருற்றவரான எவரேனும் ஆளினால் அல்லது அதே போன்ற அனுமதியுடன் வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட முறைப் பாட்டின்மேலன்றி அத்தகைய தவறு எதனையும் நீதிநெறிக் கவனத்துட்படுத்துதலாகாது ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) சட்டத்துறைத் தலைமையதிபதியிடம் முன்னரே பெற்ற அனுமதியுடன் தண்டனைச் சட்டக்கோவையின் 291 அ என்னும் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்பாலதான தவறினால் இடருற்றவரான எவரேனும் ஆளினால் அல்லது அதே போன்ற அனுமதியுடன் வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் மேலன்றி அத்தகைய தவறு எதனையும் நீதிநெறிக் கவனத்துக்குட்படுத்துதலாகாது.

(2) நீதிமன்றத்தின் முறைப்பாடானது அந்நீதிமன்றப் பதிவாளர் கைப்பட எழுதியதாய், எழுத்தில் இருத்தல் வேண்டும்.

(3) முறைப்பாடானது நீதிமன்றம் ஒன்றினால் செய்யப்படுகின்றவிடத்து அத்தகைய நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைது செய்வித்து, நியாயாதிக்கம் கெண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலைக்குக் கட்டுக்காவலுடன் அனுப்புவித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறு எதுவும் தொடர்பாக அனுமதி வழங்கப்படும் போது வழக்கை நீதிநெறிக்கவனத்துக்குட்படுத்துகின்ற நீதிமன்றம், அந் நிகழ்வுகளினால் வெளிக்காட்டப்பட்டதும் அவ்வாறு குறிப்பீடு செய்யப்பட்டதுமான வேறு ஏதேனும் தவறுக்கான குற்றச்சாட்டை ஆக்கலாம்; ஆனால் அத்தகைய அனுமதி எதுவும் அது கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குக் கூடுதலாக வலுவிலிருத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

§7, 52 இல. 1980 (5) இப்பிரிவில், "வேறு எவரேனும் ஆள்" என்னும் சொல்லமைப்பு, சமாதான அலுவலரொருவரையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

§7, 52 இல. 1980 (6) இப்பிரிவானது, 393 (7) ஆம் பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி தனது தத்துவங்களைப் பிரயோகித்துள்ள ஏதேனும் விடயத்துக்கு ஏற்புடையதாதலாகாது.

## அத்தியாயம் XIV

## நீதிவான் நீதிமன்றங்களின் முன்பாக வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குதல் பற்றி

நீதிவான் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகள் எவ்வாறு தொடுக்கப்படும் என்பது.

**136.** (1) நீதிவான் நீதிமன்றமொன்றிலான வழக்கு நடவடிக்கைகள் பின்வரும் முறைகளுள் ஒன்றின் மூலம் தொடுக்கப்படுதல் வேண்டும் :-

(அ) விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு அத்தகைய நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கமுள்ள தவறொன்று புரியப்பட்டுள்ளதென அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவானொருவருக்கு வாய்மூலமான அல்லது எழுத்திலான முறைப்பாடொன்றைச் செய்வதன் மூலம் :

ஆயின், அத்தகைய முறைப்பாடொன்று எழுத்திலிருப்பின், வழக்குரைப்பவரொருவரால் வரையப்பட்டு அவரால் மேலொப்பமிடப்படுதலும், வழக்குரைப்பவரால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும் ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பதினோராம் அத்தியாயத்தின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணையாளரொருவரினால் அல்லது சமாதான அலுவலரொருவரினால் அல்லது பகிரங்க சேவையாளரொருவரினால் அல்லது மாநகர சபையின் சேவையாளரொருவரினால் அல்லது நகரசபையின் சேவையாளரொருவரினால் அல்லது பட்டினசபையின் சேவையாளரொருவரினால் மேலே கூறப்பட்டவாறான பயன்பட அமைந்த எழுத்திலான அறிக்கையொன்று அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவானொருவருக்குச் செய்யப்படுவதன் மூலம்; அல்லது.

(இ) விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்குத் தாம் நியாயாதிக்கங் கொண்டிருக்கும் தவறொன்று புரியப்பட்டுள்ளதென அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவான் அறிந்ததன்மீது அல்லது சந்தேகப்படுவதன் மீது :

ஆயின், இப்பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படும் பொழுது, எந்நீதிவான் அறியவந்ததன் பேரில் அல்லது சந்தேகித்ததன்பேரில் அந் நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டனவோ அந் நீதிவானினால் அவ்வழக்கு விளங்கப்படுதலாகாது எனவும், அது வேறொரு நீதிவானினால் விளங்கப்படுதல் வேண்டும் அல்லது விளக்கத்திற்காக வேறொரு நீதிவானுக்குப் பாரப்படுத்தப்படுதல் வேண்டும் எனவும் தேவைப்படுத்துவதற்கு அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது பலர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் பொழுது அவர்களுள் எவரும் உரித்துடையவராதல் வேண்டும். ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) விசாரணை செய்வதற்கு அல்லது விளங்குவதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயாதிக்கங் கொண்டுள்ள தவறொன்றைப் புரிந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, எவரேனும் ஆள் மன்றாணையின்றிக் கட்டுக்காவலுடன் அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவானொருவர் முன்னர் கொண்டுவரப்படுவதன் மூலம் ; அல்லது

(உ) விசாரணை செய்வதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயதிக்கங்கொண்டுள்ள தவறொன்று தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவானொருவரைத் தேவைப்படுத்துகின்ற, சட்டத்துறைத் தலைமையதிபதியின் கைப்படவுள்ள ஆணைப்பத்திரமொன்றின் மூலம் ; அல்லது

(ஊ) 135 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றமொன்றினால் செய்யப்படும் எழுத்திலான முறைப்பாடொன்றின் மூலம்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான எழுத்திலான அறிக்கையும், (உ) என்னும் பந்தியின் கீழான சட்டத்துறைத் தலைமையதிபதியின் ஆணைப்பத்திரமும் (ஊ) என்னும் பந்தியின் கீழான எழுத்திலான முறைப்பாடும் அஞ்சல் மூலம் அல்லது தூதுவர் மூலம் நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படலாம் அல்லது அத்தகைய நீதிமன்றத்தினது நீதிவானிடம் நேரில் ஒப்படைக்கப்படலாம் என்பதுடன் அது வழக்கு நடவடிக்கைகளின் பாகமாக அமைதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, எழுத்திலான முறைப்பாடெதுவும் நீதிவானொருவரினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

**137.** முறைப்பாடு செய்யப்பட்ட தவறானது, கற்பழித்தலாக, ஓர் இளம் பெண்ணுடனான ஊனுறு புணர்ச்சியாக, இயற்கைக்குமாறான தவறாக அல்லது பாரதூரத் தன்மைத்தான காயமாக அல்லது குத்துவதற்கான அல்லது வெட்டுவதற்கான ஓர் ஆயுதத்தினால் விளைவிக்கப்பட்டதாகச் சார்த்தப்படும் பாரதூரமான காயமாக அல்லது காயமாக (பாரதுரமானதாயினுஞ்சரி அல்லாததாயினுஞ்சரி) இருக்கும் விடயங்களில், அவ்வாறு கற்பழிப்பதற்கு ஊனுறு புணர்ச்சிக்கு, இயற்கைக்குமாறான தவறுக்கு அல்லது காயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஆளையும், அவ்வாறு கற்பழித்தார், ஊனுறு புணர்ச்சி செய்தார் அல்லது இயற்கைக்குமாறான தவறு புரிந்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஆளையும், அவர் அரசாங்க மருத்துவ அலுவலரால் ஏற்கனவே பரிசோதிக்கப்படாவிடில், நீதிவான் உடனடியாக அவ்வாறு பரிசோதிப்பித்தல் வேண்டும். கற்பழித்தல் முதலிய விடயங்களில் முறைப்பாட்டாளரையும் குற்றஞ்சாட்டப் பட்டவரையும் மருத்துவப் பரிசோதனைக குட்படுத்தல்.

**138.** (1) நூற்றுமுப்பத்தாறு (1) (அ) என்னும் பிரிவின் கீழ் அல்லது 136 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ்த் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சார்த்தப்பட்ட தவறானது நீதிவானால் சுருக்க முறையில் விளங்கப்படுதற்குரியதல்லாத தவறொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய தவறைப் புரிந்துள்ளாரென ஆளெவரும் பெயர் குறித்துக் குற்றஞ்சாட்டப்படாத போதிலும் நீதிவான், முறைப்பாட்டாளரையும் அல்லது தகவல் கொடுத்தவரையும், அவ்விடயத்தின் நிகழ்வுகள் பற்றிக் கூறக்கூடியவரென நீதிவானுக்குத் தோன்றக்கூடியவரான வேறெவரேனும் ஆளையும் சத்தியத்தின் மீது சோதனை செய்யலாம். அத்தகைய சோதனை நீதிவான் தக்கதெனக் கருதினால் அந்தரங்கமாக நடாத்தவும்படலாம். குற்றஞ்சாட்டப் பட்டவர் எவர் என அறியப் படாத தான சில விடயங் களில் பின் பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராமுட்பிரிவின்கீழ் நீதிவானால் நடாத்தப்படும் சோதனை ஒவ்வொன்றும் எழுத்தில் இடப்படல் வேண்டுமென்பதுடன், சோதனை செய்யப்பட்ட ஆளுக்கு அதனை வாசித்துக்காட்டிய பின்னர், அத்துடன் அவசியமானால் மொழிபெயர்த்து விளக்கிக் கூறிய பின்னர், அவராலும் நீதிவானாலும் அது கையொப்பமிடப்பட்டுத் தேதியிடப்படுதலும் வேண்டும்.

(3) அவ்வாறு சோதனை செய்ததன் பின்னர் நீதிவானினது அபிப்பிராயப்படி எவரேனும் ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய ஏது உண்டெனில், அவர் 139 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், அத்தகைய ஆளுக்கெதிராக மன்றாணை விடுத்தல் வேண்டும்.

மன்றாணை விடுத்தல்.

**139.** (1) நூற்றுமுப்பத்தாறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருந்து, கட்டுக்காவலில்லாத எவரேனும் ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய ஏது உண்டென நீதிவான் அபிப்பிராயப்படுமிடத்து-

(அ) வழக்கானது, முதலாம் அட்டவணையின் நான்காம் நிரைக்கிணங்க, முதற்றடவையிலேயே அழைப்புக் கட்டளை விடுக்கப்பட வேண்டியதொன்றெனத் தோன்றினால், அவர் 63 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக, அத்தகைய ஆள் வருகை தருவதற்கான அழைப்புக்கட்டளையொன்றை விடுத்தல் வேண்டும் ;

(ஆ) வழக்கானது, அந்நிரைக்கிணங்க முதற்றடவையிலேயே பிடியாணையொன்று விடுக்கப்படவேண்டியதொன்றெனத் தோன்றினால், அவர் அத்தகைய ஆளைக் குறித்த ஒரு நேரத்தில் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்வதற்காக அல்லது தோன்றச் செய்வதற்காகப் பிடியாணையொன்றை விடுத்தல் வேண்டும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் -

(i) நீதிவானானவர், எவ்விடயத்திலும், அவர் தக்கதென எண்ணினால், முதற்றடவையிலேயே பிடியாணையொன்றை விடுப்பதற்குப் பதிலாக, அழைப்புக் கட்டளையொன்றை விடுக்கலாம் ;

(ii) 136 (1) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் விடயத்தில், நீதிவான், முறைப்பாட்டாளரை அல்லது எவரேனும் முக்கியமான சாட்சிக்காரரை அல்லது சாட்சிக்காரர்களை பிடியாணையொன்றை விடுக்குமுன்னர் சத்தியத்தின்மீது சோதனை செய்தல் வேண்டும் என்பதுடன் அழைப்புக் கட்டளையொன்றை விடுக்குமுன்னரும் அவ்வாறு சோதனை செய்யலாம் ; அத்துடன்

(iii) 136 (1) ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் விடயத்தில், நீதிவான், மன்றாணை விடுக்கு முன்னர், எந்நிகழ்வுகள் அவரது அறிவுக்கான வழி வகைகளாக அல்லது அவரது சந்தேகத்திற்கான ஏதுக்களாக அமைந்துள்ளனவோ அந்நிகழ்வுகள் பற்றிய சுருக்கமான கூற்றொன்றைப் பதிதல் வேண்டும்.

(2) நூற்றுமுப்பத்தாறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிவான், குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தின் முன்பாகக் கொண்டுவந்துள்ள -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளையும், நீதிமன்றத்தில் சமூகமளித்திருக்கக்கூடியவரும் வழக்கின் நிகழ்வுகளைப் பற்றிக் கூறக்கூடியவருமான வேறு எவரேனும் ஆளையும், அவர்கள் சத்தியஞ் செய்ததன் மேல் அல்லது உறுதியுரை மொழிந்ததன் மேல் உடனடியாகச் சோதனை செய்தல் வேண்டும் :

ஆயின், நீதிவானொருவர் வழக்குப் பற்றிய நிகழ்வுகளைக் கொண்ட அறிக்கையொன்றைத் தம்முன் வைத்திருக்குமிடத்து அல்லது எழுத்திலான முறைப்பாடொன்று கோப்பிடப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சோதனை அவசியமாகாது.

(3) நூற்றுமுப்பத்தாறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (ஊ) என்னும் பந்தியின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து, வழக்கானது முதற்றடவையிலேயே அழைப்புக் கட்டளை அல்லது பிடியாணை ஒன்று விடுக்கப்படவேண்டிய ஒரு வழக்காக இருந்தால் முதலாம் அட்டவணையின் நான்காம் நிரை ஏற்பாடு செய்வதற்கிணங்க, நீதிவான் அப் பிடியாணையில் அல்லது முறைப்பாட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் வருகை தருவதற்காக அழைப்புக் கட்டளையொன்றை விடுத்தல் வேண்டும் அல்லது குறித்த ஒரு நேரத்தில் அவ்வாளை நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரச் செய்வதற்கு அல்லது தோன்றச் செய்வதற்குப் பிடியாணையொன்றை விடுத்தல் வேண்டும்.

அழைப்புக் கட்டளையின் அல்லது பிடியாணையின் உள்ளடக்கம்

**140.** நூற்றுமுப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அழைப்புக்கட்டளை அல்லது பிடியாணை ஒவ்வொன்றும் குற்றஞ்சாட்டப்பட்ட தவறு பற்றிய விவரங்களடங்கிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அழைப்புக்கட்டளையொன்றின் விடயத்தில், அதில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு மறுமொழி அளிப்பதற்காக அதிற்குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு நேரத்திலும் இடத்திலும் தோன்றுமாறு குற்றச்சாட்டப்பட்டவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**141.** நூற்றுமுப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் நீதிவானால் நடாத்தப்படும் சோதனை ஒவ்வொன்றும் 138 (2) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதியப்படுதல் வேண்டும் : 139 ஆம் பிரிவின் கீழான சோதனை பதியப்படுதல்.

அத்தகைய சோதனை, நீதிவான் தக்கதெனக் கருதினால் அந்தரங்கமாக நடாத்தப்படலாம்.

**142** (1) தவறானது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுள்ள விடத்து, அவற்றுள் ஏதேனுமொன்று, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள தவறுகளின் நிரலில் அடங்குமிடத்து அல்லது 145 (ஆ) என்னும் பிரிவின்கீழ் அல்லது 393 (7) (ஆ) என்னும் பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதி, பூர்வாங்க விசாரணையொன்றை நடத்தும்படி நீதிவானைப் பணித்துள்ளவிடத்து, நீதிவான், XV ஆம் அத்தியாயத்தில் இடப்பட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றுதல் வேண்டும். வழக்குத் தொடங்கி நடைபெறும் போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை. §8, 52 இல 1980

(2) தவறானது, நீதிவான் நீதிமன்றமொன்றில் சுருக்கமுறையாக உள்ளடக்கப்படுவதற்கு உரியதொன்றாகத் தோன்றுமிடத்து, நீதிவான், XVII ஆம் அத்தியாயத்தில் இடப்பட்ட நடவடிக்கைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய நீதிவான் நீதிமன்றமொன்றினால் போதுமானதாக தண்டிக்கப்படமுடியாதென நீதிவான் அபிப்பிராயப்படின், அவர் உடனடியாக, மேற்கொண்டு நடவடிக்கைகளை நிறுத்தி, அவ்வழக்குப் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்துரைகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், அத்தவறானது நீதிவான் நீதிமன்றமொன்றினால் போதுமானதாகத் தண்டிக்கப்பட முடியாததென நீதிவான் அபிப்பிராயப்படின், அவர் உடனடியாக, மேற்கொண்டு நடவடிக்கைகளை நிறுத்தி, அவ்வழக்குப் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்துரைகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும் :

ஆயின், மேலும், தவறுகளில் எதுவும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவற்றுள் அடங்காதவிடத்து, சட்டத்துறைத்தலைமையதிபதி XV ஆம் அத்தியாயத்தில் இடப்பட்ட நடவடிக்கைமுறையைப் பின்பற்றும்படி, 145 (ஆ) என்னும் பிரிவுக்கிணங்க நீதிவானைப் பணிக்கலாம் என்பதுடன், அதன் பின்னர், நீதிவான் அத்தகைய நடவடிக்கை முறையைப் பின்பற்றுதலும் வேண்டும்.

மனித உயிர் போக்கலின் விடயத்தில், அது நடந்த இடத்தில் வைத்து நீதிவான் விசாரணை நடாத்துதல்.

**143.** நூற்றுமுப்பத்தாறாம் பிரிவின்கீழ்த் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கையொன்றில் வழக்கானது குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கல் பற்றியதொன்றெனத் தோன்றினால், நீதிவான், அவரால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக அவ்வாறு செய்தல் உசிதமானதல்லதென அவர் எண்ணினாலொழிய, அத்தகைய தவறு புரியப்பட்டதாகத் தோன்றும் இடத்திற்குச் சென்று, குற்றஞ்சாட்டப்பட்டவர் அவர் முன்னர் சமூகமாகிவிருப்பின் அவசியமாகக்கூடியவாறானதும், XV ஆம் அத்தியாயத்தினால் பணிக்கப்பட்டவாறானதுமான விசாரணையின் அத்தகைய பாகத்தை நடாத்த முற்படுதல் வேண்டும் ; குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமளித்திராவிடின், நீதிவான் முக்கியமான சான்று அளிக்கக்கூடியவரென அவருக்குத் தோன்றும் அத்தகைய ஆட்களைச் சோதனை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய சோதனை 138 (2) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பதியப்படுதல் வேண்டும்.

**144.** நீதிவனொருவர் அழைப்புக்கட்டளையொன்றை விடுக்கின்ற போதிலெல்லாம், அவர் தமது தற்றுணிபின் பேரில், அக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமூகமளிக்க வேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கி, வழக்குரைப்பவரொருவர் மூலம் தோன்றுவதற்கு அவரை அனுமதிக்கலாம். அழைப்புக் கட்டளை விடுக்கப்படும் வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டவர் நேரில் சமூக மளிக்க வேண்டிய அவசியம் இல்லாதாக்கப் படலாம்.

ஆயின், எப்பொழுதும், நீதிவானானவர் தமது தற்றுணிபில், வழக்கு நடவடிக்கைகளின் எக்கட்டத்திலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் நேர்முகமாகச் சமூகமளிக் வேண்டுமெனப் பணிக்கலாமென்பதுடன், இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் அவர் சமூகமளித்தலையும் வலியுறுத்தலாம்.

## அத்தியாயம் XV

### ஒரு நீதிவான் நீதிமன்றத்தினால் சுருக்கமுறையாக விளங்கப்படமுடியாதனவாகவும் மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்படக்கூடியனவாகவும் தோன்றும் வழக்குகளை விசாரணைசெய்தல் பற்றி

**145.** குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும் போது அல்லது கொண்டுவரப்பட்ட போது, நீதிவான் :- பூர்வாங்க விசாரணை.

(அ) தவறானது அல்லது ஒன்றுக்குக் கூடுதலான தவறுகள் உள்ளவிடத்து, அவற்றுள் ஏதேனும் ஒன்று, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிற் காட்டப்பட்ட தவறுகளின் நிரலில் அடங்கியுள்ள தவறொன்றாக உள்ள விடத்தில் ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றப்பகர்வு ஒன்றைக் குற்றம் புரியப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகத் தயாரிப்பதற்காகப் பூர்வாங்க விசாரணையொன்றில் பதியப்பட்ட சான்று அவசியமாகுமென அபிப்பிராயங்கொண்டவராய், அவ்வாறு பணிக்கும் விடயத்தில்,

இதனகத்துப்பின்னர் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க, பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

குற்றச்சாட்டு, குற்றஞ்சாட்டப் பட்டவருக்குத் தெரிவிக்கப் படல்.

**146.** பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துகின்ற நீதிவான், அத்தகைய விசாரணையின் தொடக்கத்தில் எக்குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்படுகின்றதோ அக்குற்றச்சாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களைக், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டுதல் வேண்டும் ; ஆனால் அவ்வாறு வாசித்ததன் மேல் குற்றஞ்சாட்டப்பட்டவர் அதற்கு மறுமொழி எதுவும் கொடுக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதலாகாது ; அத்தகைய மறுமொழியெதுவும் கொடுக்கப்படுமாயின், அது நீதிவானால் பதியப்படுதலாகாது ; மேலும் அத்தகைய மறுமொழியெதுவும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகச் சான்றாக ஏற்றுக் கொள்ளப் படுதலுமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**147.** இயைபான தகவற்புத்தகம் வைத்திருக்கப்படும் பொலிசு நியைத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், விசாணையின் தொடக்கத்தில், நீதிவானுக்கு, புலனாய்வின் குறிப்புகள், அப்புலனாய்வின்போது பதியப்பட்ட எல்லாக்கூற்றுகளும் ஆகியவற்றினது அத்தாட்சிப்படுத்தப்பட்ட மூன்று பிரதிகளைக் கொடுத்துதவுதல் வேண்டும். தகவற்புத்தகம் பதிவுகள் ஆகிய வற்றைக் கொடுத்தல் வேண்டும். §5, 14 இல 2005

**148.** (1) அதன்பின்னர், நீதிவானானவர், வழக்கின் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் பற்றி அறிந்தவர்கள் சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின்மீது அளிக்கும் கூற்றுக்களை குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன்னிலையிலும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் எடுத்து அவற்றை எழுத்தில் இடுதல் வேண்டும் ; அவை வாக்கு மூலங்கள் என அழைக்கப்படும் : வாக்கு மூலங்கள்.

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதி வேறு வகையாகப் பணிக்குமிடத்துத்தவிர, நிபுணச் சாட்சிக்காரர் எவரையும் நீதிவான் கட்டளைவிட்டழைத்து அவரது சான்றைப் பதிதலாகாது ; அத்தகைய சாட்சிக்காரரின் அறிக்கையைக் காண்பிக்குமாறும், வழக்குப்பதிவேட்டில் கோப்பிடுமாறும் மாத்திரம் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் காப்புவாசகத்துக்கமைய, குற்றஞ்சாட்டப்பட்டவர் தமக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவரிடமும் கேள்விகள் கேட்கலாமென்பதுடன், அவற்றுக்குச் சாட்சிக்காரர் தரும் மறுமொழி அவரது வாக்கு மூலத்தின் பாகமாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத்தரணியொருவரைப் பிரதிநிதியாக வைத்திருக்காவிடில், வழக்குத்தொடுநர் தரப்புச் சாட்சிக்காரர் ஒவ்வொருவரினதும் விசாரணை முடிவடைந்ததும் அச் சாட்சிக்காரரிடம் கேள்விகள் கேட்க விரும்புகின்றாரா என நீதிவான் குற்றஞ் சாட்டப்பட்டவரைக் கேட்டல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப் பட்டவர் தலைமறை வாகவிருக்கும் போது அல்லது இலங்கைக்கு வெளியே இருக்கும் போது வாக்கு மூலங்கள்.

(4) (அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(i) தலைமறைவாகவுள்ளவிடத்து அல்லது இலங்கைத் தீவை விட்டுச் சென்றுள்ளவிடத்து ; அல்லது

(ii) சுகவீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு வருவதற்கு அல்லது நீதிமன்றத்தில் வந்திருப்பதற்கு இயலாதவராக இருப்பதோடு அவர் சமூகமாக இல்லாமலே விளக்கத்தைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடாத்துவதற்குச் சம்மதித்துள்ளவிடத்து அல்லது சுகவீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு வருவதற்கு அல்லது நீதிமன்றத்தில் வந்திருப்பதற்கு இயலாதவராக இருப்பதோடு அவருக்கு பங்கம் எதுவும் ஏற்படாமல் அவர் சமூகமாக இராமலே அத்தகைய விளக்கம் தொடங்கி நடைபெற அல்லது தொடர்ந்து நடை பெறக்கூடியதாக இருக்கின்றவிடத்து ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) நீதிமன்றத்திலான அவரது நடத்தை காரணமாக விசாணை தொடர்ந்து நடாத்தப்படுவதனைத் தடை செய்கின்றவிடத்து அல்லது அதற்கு முட்டுக் கட்டையிடுமிடத்து,

நீதிவான், இந்நிகழ்வுகள் பற்றித் திருப்திப்பட்டால், குற்றஞ் சாட்டப்பட்டவர் இல்லாமலே விசாரணையைத் தொடங்கித் தொடர்ந்து நடாத்தலாம்.

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமளிக்காவிடின், சமூகமளிக் காதிருக்கும் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்காகச் சட்டத்தரணியொருவர் தோன்றலாம்.

(இ) விசாரணையானது சாத்தியமானவரை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமாகவிருப்பினுஞ்சரி சமூகமாகவில்லாவிடினுஞ்சரி மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வின் மேல் விளக்கம் நடைபெறுமிடத்து, பதியப்படும் வாக்குமூலங்களுக்கு 416 ஆம் பிரிவு ஏற்புடையதாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டிற்கும் சான்றிற்குமிடையேயுள்ள வேறுபாடு.

**149.** (1) நூற்றுநாற்பத்தாறாம் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டப்பட்ட குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கும் அத்தவறு அல்லது செயல் புரியப்பட்ட காலமாக அல்லது இடமாகச் சார்த்தப்படும் காலம் அல்லது இடம் தொடர்பில் அக்குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்படும் சான்றுக்குமிடையேயுள்ள வேறுபாடெதுவும், காலத்தைப் பொறுத்தவரை குற்றச்சாட்டானது அதனை இடுவதற்கெனச் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள காலத்திற்குள்ளாக அது உண்மையில் இடப்பட்டதெனவும், இடத்தைப் பொறுத்தவரை அதனால் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அகற்றப்படவில்லையெனவும் எண்பிக்கப்படின், முக்கியமானதாகக் கருதப்படுதலாகாது.

(2) குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கும் அதற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்ட சான்றுக்குமிடையேயுள்ள வேறேதேனும் தன்மையிலான வேறுபாடெதுவும் முக்கியமானதாகாது :

ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர், அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவறு தவிர்ந்த அந்த ஏனைய தவறானது, அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தவற்றை விளங்கிய பின்னர் இச் சட்டக்கோவையினது ஏற்பாடுகளின் கீழ்ச் சட்டமுறைப்படி அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படக்கூடிய தவறொன்றாயிருந்தாலல்லாது, அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அத்தகைய தவறல்லாத ஏனைய தவறெதற்கும் அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவிற் குறிப்பிடப்பட்டவாறான வேறுபாடெதுவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஏமாற்றப்பட்டிருக்கக் கூடிய அல்லது தவறாக வழிநடாத்தப்பட்டிருக்கக்கூடிய அத்தகையதென நீதிவானுக்குத் தோன்றுமிடத்து, நீதிவான் அவர் தக்கதென எண்ணும் அத்தகைய நியதிகளின்மீது, அவ்விசாரணையை வேறேதேனும் நாளுக்கு ஒத்தி வைத்தல் வேண்டும்.

(4) அத்தகைய வேறுபாடெதும் அவ்வாறாகத் தோன்றியதன் மேல், நீதிவான், அவர் தக்கதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய திருத்தத்தைக் குற்றச்சாட்டில் செய்யலாமென்பதுடன் சாட்சிக்காரர் எவரும் மீண்டும் அழைக்கப்பட்டு வேறுபாட்டிற்கு அல்லது திருத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு இயைபான விடயங்கள் எவற்றையும் பற்றி மேலும் கேள்விகள் கேட்கப்படுவதையும் அனுமதிக்கலாம்.

**150.** வழக்குத்தொடுநர் தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரரை விசாரணை செய்த பின்னரும் வழக்கானது 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கையாளப்பட வேண்டுமென நீதிவான் கருதாதவிடத்தும், நீதிவான், குற்றச்சாட்டைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டி, அதன் தன்மையைப் பழகு மொழியில் விளங்கப் படுத்துதல் வேண்டுமென்பதுடன் சாட்சிக்காரர்களை அழைப்பதற்கு அவருக்கு உரிமை உண்டெனவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிக்க விரும்பினால், தமது சார்பாகத் தாமே சான்றளிக்கலாமெனவும் அறிவித்தலும் வேண்டும்.

வழக்குத் தொடுநர் தரப்பு வழக்கு முடிவடைந்ததும், குற்றஞ்சாட்டப் பட்டவருக்குக் குற்றச்சாட்டு வாசித்துக் காட்டப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப் பட்டவரின் கூற்றினை எடுத்தல் பற்றிய ஏற்பாடுகள்.

**151.** (1) அதன் மேல் நீதிவான் குற்றவாளியை விளித்து பின்வரும் சொற்களை அல்லது அதே பொருள்படும் சொற்களைக் கூறுதல் வேண்டும்:-

"குற்றச்சாட்டிற்கு மறுமொழியாக எதையேனும் கூறுவதற்கு நீர் விரும்புகின்றீரா? நீர் அவ்வாறு கூற விருப்பினாலன்றி, எதையும் கூறுவதற்கு நீர் கடப்பாடுடையவரல்லர் ; ஆனால் நீர் கூறுவதெதுவும் எழுத்தில் எடுக்கப்பட்டு உமது விளக்கத்தில்போது சான்றாகப் பயன்படுத்தப்படும்."

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டுக்கு மறுமொழியாகக் கூற்றெதனையும் அளிக்குமுன்னர், அவரது குற்றத்தினை அவர் ஏற்றுக்கொள்ளும்படி அல்லது ஒப்புக்கொள்ளும்படி அவரைத் தூண்டுவதற்காக அவருக்கு முனையப்படும் சலுகை உறுதிமொழியெதிலும் நம்பிக்கை வைக்க வேண்டியதில்லையெனவும், அவருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலுக்காக அஞ்சவேண்டியதில்லையெனவும், ஆனால் அவ்வுறுதிமொழி அல்லது அச்சுறுத்தல் எவ்வாறிருப்பினும், அவர் அப்பொழுது கூறுவது எத்தன்மைத்தானதாயினும், அது, அவரது விளக்கத்தில் சான்றாகக் கொடுக்கப்படுமெனவும், நீதிவான் அவருக்குக் கூறி, அவருக்குத் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

(3) குற்றச்சாட்டிற்கு மறுமொழியாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அளிக்கும் கூற்றெதுவும், 277 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் பதியப்படுதல் வேண்டும்.

எதிரி தரப்பிலான சான்று.

**152.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்றுத்தொடர்பாக 151ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியதன் பின்னர் உடனடியாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் கூற்றொன்றை அளித்திருப்பினுஞ்சரி அளிக்காதிருப்பினுஞ்சரி, அவர் தனது சார்பாகச் சான்றளிக்க விரும்புகின்றாரா எனவும் அவர் சாட்சிக்காரர்களை அழைக்க விரும்புகிறாரா எனவும் அவரை நீதிவான் கேட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கேள்விக்கு மறுமொழியாக சான்றளிக்க விரும்புவதாகவும் ஆனால் சாட்சிக்காரர்களை அழைக்க விருப்பவில்லையெனவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் கூறினால், நீதிவான், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சான்றை உடனடியாக எடுக்க முற்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சான்று முடிவடைந்ததன் பின்னர், அவர் அவ்வாறு விரும்பினால் அவர் சார்பாக அவரது சட்டத்தரணி (குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் பிரதிநிதி எவரும் இருந்தால்) கூறுபவை கேட்கப்படுதல் வேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் கேள்விக்கு மறுமொழியாக, அவரது சார்பாகச் சான்றளிக்கவும் சாட்சிக்காரர்களை அழைக்கவும் அல்லது சாட்சிக்காரர்களை அழைக்க மட்டும் விரும்புவதாகக் கூறினால், நீதிவான், உடனடியாக, அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாகச் சட்டத்தரணியொருவரால் உரையொன்று நிகழ்த்தப்படவிரும்பின் அவ்வுரை முடிவடைந்த பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிக்க விரும்பினால் அவரது சான்றையும், வழக்கின் நிகழ்வுகள், சூழ்நிலைகள் ஆகியவை தொடர்பான எதையும் அறிந்தவரும் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றமின்மையை எண்பிக்கும் தன்மையதான எதையும் அறிந்தவரும் அவரால் அழைக்கப்பட்டவருமான சாட்சிக்காரர் எவரதும் சான்றையும் பெற்றுக்கொள்ள முற்படுதல் வேண்டும்.

(4) அழைக்கப்படவேண்டிய சாட்சிக்காரர்கள் தமக்கு உள்ளார்கள் எனவும், ஆனால் அவர்கள் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லையெனவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் கூறுவதோடு, அத்தகைய சாட்சிக்காரர் வருகைதராமைக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஏதேனும் தவறுகை அல்லது அசட்டை காரணமல்ல எனவும், அவர்கள் சமூகமளித்திருந்தால் குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பாக முக்கியமான சான்றுகளை அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டெனவும் நீதிவான் திருப்தியுமடைந்தால், நீதிவான் விசாரணையை ஒத்திவைத்து மன்றாணையை வழங்கலாம் அல்லது அத்தகைய சாட்சிக்காரர்களின் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்கு வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) குற்றஞ்சாட்டப்பட்டவரின் குணநலம் தொடர்பில் மட்டும் சாட்சிக்காரராகவிருக்கும் எவரேனும் சாட்சிக்காரரை விளக்கத்திற்கு வருகைதருமாறு நீதிவான் பிணித்தலாகாது என்பதுதவிர, குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய எவரேனும் சாட்சிக்காரரால் கொடுக்கப்படும் சான்று எழுத்தில் எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 148 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், வழக்குத்தொடுநர் தரப்பிலான சாட்சிக்காரரின் விடயத்தில் அவர்களுக்கு ஏற்புடைய தாதலைப்போன்று எதிரி தரப்பிலான சாட்சிக்காரரின் விடயத்திலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

விடுவித்தல். **153.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான சான்று அவரை விளக்கத்திற்குட்படுத்துவதற்குப் போதியதல்லவென நீதிவான் கருதினால், விசாரணை செய்யப்படும் குறித்த குற்றச்சாட்டு சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென நீதிவான் கட்டளையிடுதல் வேண்டும் ; இதற்கான காரணங்களை நீதிவான் பதிதல் வேண்டும். ஆனால், அத்தகைய விடுவித்தல், அதே நிகழ்வுகள் தொடர்பான பின்னைய குற்றச்சாட்டெதற்கும் தடையாக இருத்தலாகாது :

ஆயின், இப்பிரிவிலடங்கியுள்ளதெதுவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் எத்தவறுக்காகக் கட்டளைவிட்டழைக்கப்பட்டிருக்கக்கூடுமோ அல்லது வேறுவகையில் அவர் முன்பாகக் கொண்டுவரப்படக்கூடுமோ அல்லது மேலே சொல்லப்பட்டவாறு தள்ளுபடி செய்யப்பட்ட குற்றச்சாட்டின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர் எத்தவறைப்புரிந்துள்ளாரெனத் தோன்றுமோ அத்தவறு தொடர்பிலான வேறேதேனும் குற்றச்சாட்டினை நீதி நலன்கருதி உசிதமாகத் தோன்றக் கூடியவாறு ஒன்றில் உடனடியாக அல்லது விசாரணையின் அத்தகைய ஒத்திவைப்பின் பின்னர் புலனாய முற்பட முடியாதவாறு நீதிவானைத் தடைசெய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) முறைப்பாடானது ஆதாரமற்றது என அவரால் பதியப்படவுள்ள காரணங்களுக்காக நீதிவான் கருதினால், வழக்கின் எக்கட்டத்திலேனும் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிப்பதிலிருந்து இப்பிரிவிலுள்ளதெதுவும் நீதிவானைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது.

விளக்கத்திற்காகப் பாரப்படுத்துதல்.
§6. 14 இல 2005

**154.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குட்படுத்துவதற்குச் சான்று போதியதென நீதிவான் கருதினால், மேல் நீதிமன்றத்தின் முன்பாக விளக்கத்திற்காக நீதிவான் அவரைப் பாரப்படுத்துதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்கென மேல்நீதிமன்றத்தின் முன்னர் பாரப்படுத்தப்பட்டதன் மேல், குற்றஞ்சாட்டப்பட்டவர், மேல்நீதிமன்றத்தில் அவருக்கெதிராகக் குற்றப்பகர்வு செய்யப்படின் குறைந்த தவறொன்றுக்குக் குற்றவாளியென வாதுரையளிப்பதற்கு விரும்புவதாகக்கூறலாம் என்பதுடன், நீதிவான் அத்தகைய கூற்றைப்பதிதலும் வேண்டும். ஆயின். எவ்வாறாயினும், அத்தகையவொரு கூற்று செய்யப்பட்டுள்ளதென்னும் நிகழ்வு, மேல்நீதிமன்றத்திலான விளக்கத்தைத் தொடர்வதைக் குற்றஞ்சாட்டப்பட்டவரை எவ்வகையிலும் தடுப்பதாதலாகாது.

ஆயின், மேலும், அத்தகையவொரு கூற்று அளிக்கப்பட்டுள்ளதென்னும் நிகழ்வு. குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்தில் எவ்வகையிலும் பங்கப்படுத்துவதாதலாகாது.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர், மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு செய்யப்பட்டதன் மேல், அக்குற்றப்பகர்வின்மேல் எந்தக்குறைந்த தவறொன்றுக்கு அவர்மீது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்தக் குறைந்த தவறொன்றுக்குத் தாம் குற்றவாளியென வாதுரையளிப்பதற்கு விரும்புவதாகக்கூறுமிடத்தும், அத்துடன் நீதிமன்றம் அத்தகைய -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதுரையை ஏற்றுக்கொள்ள விரும்புமிடத்தும், நீதிபதி, குற்றஞ் சாட்டப்பட்டவருக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் தாம் குறைந்த தவறொன்றுக்குக் குற்றவாளியென வாதுரைப்பதற்கான தமது விருப்பத்தை நீதிவான் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார் என்ற நிகழ்வைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கூற்றொன்றைச் செய்துள்ளார் என்ற நிகழ்வு மேல் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட குற்றப்பகர்வின்மீது எந்தக் குறைந்த தவறொன்றுக்கு அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கலாமோ அந்தக் குறைந்த தவறொன்றுக்கு அம்மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்ட குற்றவாளியென்ற வாதுரையை ஏற்குமாறு நீதிமன்றத்தின்மீது அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின்மீது ஏதேனும் கடப்பாட்டைச் சுமத்துவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது."

குற்றஞ்சாட்டப் பட்டவரின் சாட்சிக் காரர்கள்.

**155.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குப் பாரப்படுத்தும் பொழுது, அவரது விளக்கத்தில் சான்றளிக்குமாறு எவ்வாட்களைத் தேவைப்படுத்தும்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் விரும்புகின்றாரோ அவ்வாட்களின் பெயர்களை (எவரேனுமிருப்பின்) அவ்விடத்தில் அப்பொழுதே வாய்மொழிமூலம் கூறுமாறு அவரை நீதிவான் தேவைப்படுத்துதல் வேண்டும். நிகழ்வுகளைப் பற்றிக்கூறுவதற்காக அவர் எவ்வாட்களை அழைக்க உத்தேசிக்கின்றாரோ அவ்வாட்களையும் குணநலன்பற்றி மட்டும் கூறுவதற்காக அவர் எவ்வாட்களை அழைக்க உத்தேசிக்கின்றாரோ அவ்வாட்களையும் வேறுபடுத்தி அவர்கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) நீதிவான், (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரால் பெயர் குறிக்கப்பட்டவர்களும் அவர் முன்பாக ஏற்கனவே சான்றளிக்காதவர்களுமான அத்தகைய சாட்சிக்காரர்களின் நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அறிவித்தலிற் குறித்துரைக்கப்படும் தேதியன்று விளக்க நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்தி அறிவித்தலொன்றை அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் வழங்குமாறு பிசுக்காலைப் பணித்தலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், நீதிவான், எவரேனும் சாட்சிக்காரரின் சான்று முக்கியமானதல்லதென அபிப்பிராயங்கொண்டால், அத்தகைய சாட்சிக்காரரின் பெயரை அத்தகைய நிரலிலிருந்து நீக்கிவிடலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்ட சாட்சிக்காரர் எவரும் அத்தகைய அறிவித்தலினால் பணிக்கப்பட்டவாறு விளக்கம் நடைபெறும் நீதிமன்றத்தில் தோன்றத் தவறுமிடத்து, அவ்வறிவித்தலானது 63 ஆம், 64 ஆம் பிரிவுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்திற்காக விளக்கத்தை நடாத்தும் நீதிமன்றம் விடுப்பதற்குத் தத்துவமுள்ள அழைப்புக்கட்டளையாகக் கருதப்படவேண்டுமென்பதுடன், அப்பிரிவுகளின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழான அறிவித்தலெதையும் சேர்ப்பித்தலானது 45 ஆம், 46 ஆம் பிரிவுகளில் அழைப்புக் கட்டளைகள் சேர்ப்பிப்பதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேர்ப்பித்தலை எண்பிக்கும் நோக்கத்திற்காக, 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ஆயின், முறையான கவனத்தைப் பிரயோகித்தும் சேர்ப்பித்தலை அத்தகைய முறையில் செய்யமுடியாவிடின், அச்சாட்சிக்காரர் சாதாரணமாக வதியும் வீட்டின் அல்லது மனையகத்தின் ஏதேனும் துலாம்பரமான பாகத்தில் அவ்வறிவித்தல் ஒட்டப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடயத்தில் அவ்வறிவித்தல் முறைப்படி சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான சாட்சிக்காரர்கள் தோன்று வதற்காகப் பிணைமுறி ஒன்றை எழுதிநிறை வேற்றுதல்.

**156.** (1) நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குப் பாரப்படுத்தும் பொழுது, அவர் முன்பு தோன்றி சான்றளித்துள்ளவர்களும் ஏற்கனவே பிணைமுறி ஒன்றை எழுதிநிறைவேற்றியிராதவர்களுமான வழக்குத்தொடுநர் தரப்பிலான அல்லது எதிரி தரப்பிலான முக்கிய சாட்சிக்காரர் ஒவ்வொருவரையும், விளக்கத்திலும், தேவைப்படின், சட்டத்துறைத் தலைமைதிபதியின் பணிப்பின் பேரில் நடாத்தப்படக்கூடிய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டுச் சம்பந்தமான மேலதிக விசாரணையெதிலும் சான்றளிப்பதற்கு அவர் தோன்றுவதற்காகப் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரில்லாது பிணைமுறியொன்றை எழுதி நிறை வேற்றும்படி தேவைப்படுத்துதல் வேண்டும் ; அத்துடன் அதே நோக்கத்திற்காக இதனகத்துப் பின்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் கீழ் ஆணையின் பேரில் சாட்சிக்காரரெவரையும் விசாரணைசெய்யும் நீதிவானுக்கு, அத்தகைய நீதிவான் தீர்மானிக்கக்கூடியவாறாக பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவ்வாறு விசாரணை செய்யப்படும் அத்தகைய சாட்சிக்காரரைத் தேவைப்படுத்துதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) நீதிவான், அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்காகப் பாரப்படுத்தப்படும் விடயத்தில், விசாரணையின் எக்கட்டத்திலேனும், ஒன்றில் அந் நீதிமன்றத்திலான அல்லது மேல் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளின் வேறு ஏதேனும் கட்டத்தில் தோன்றுவதற்காக இறுதியாக முற்போந்த உட்பிரிவில் கூறப்பட்டவாறான அத்தகைய பிணைமுறியை எழுதி நிறைவேற்றவேண்டுமெனச் சாட்சிக்காரர் எவரையும் தேவைப்படுத்தலாம். அந்த முறியில் மேல் நீதிமன்றத்தின் அமர்வுகளை குறித்துரைத்தல் அவசியமாகாது ; ஆனால் அவ்வாறு பிணியுண்டவர், நியாயமான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மேல், எம் மேல் நீதிமன்றத்தின் அமர்வுகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர் விளங்கப்படக்கூடுமோ அம் மேல்நீதிமன்றத்தில் சமூகமளிப்பதற்குக் கட்டுப்பட்டவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அத்தகைய முறியை எழுதி நிறைவேற்றுவதற்குச் சாட்சிக்காரரொருவர் மறுத்தால் அல்லது அசட்டை செய்தால், அத்தகைய முறி முறைப்படி எழுதி நிறைவேற்றப்படும்வரை அல்லது விளக்கம் நடைபெறும் வரை நீதிவான் அவரை மறியலுக்குப் பாரப்படுத்தலாம். அவ்வாறு மறியலில் இருக்கும்போது விளக்க நீதிமன்றத்திற்கு அவர் கட்டுக்காவலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் முறியொன்றின் மூலம் பிணிக்கப்பட்டுள்ளவர்களான அல்லது முறியொன்றை எழுதி நிறைவேற்றுவதற்கு மறுத்தமையால் மறியலுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளவர்களான எல்லா ஆட்களின் பெயர்களையும் பாரப்படுத்தல் ஆணைப்பத்திரத்தில் நீதிவான் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

(5) அத்தகைய முறியை எழுதி நிறைவேற்றும் ஒவ்வோர் ஆளும், அவ்வழக்கில் மேற்கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான எல்லா அறிவித்தல்களும் அவருக்காக அனுப்பி வைக்கப்படக் கூடிய முகவரியொன்றை நீதிவானுக்குக் கொடுத்தல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய முகவரியில் அவ்வாளுக்காக அனுப்பி வைக்கப்படும் அறிவித்தல் எதுவும் (கிடைக்கவில்லை என்பது எண்பிக்கப்பட்டாலன்றி) அவருக்குக் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

**157.** குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்குப் பாரப்படுத்தப்பட்டிருப்பின், குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடப்பட்டிருக்கின்றாரா அல்லது கட்டுக் காவலில் இருக்கின்றாரா என்பதை நீதிவான் பதிதல் வேண்டுமென்பதுடன், விசாரணை பற்றிய பதிவுகளை அவரது கைப்பட அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும். பதிவை நீதிவான் அத்தாட்சிப் படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப்பட்டவர் பொலிசிற்கு அளித்த கூற்றுக்களுக்கு உரித்துடைய வராவர் என்பது.

§9, 52 இல 1980

**158.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்காகப் பாரப்படுத்தப் பட்டுள்ளபோது, விளக்கத்திற்கு நியாயமான காலத்திற்கு முன்னர் அவர் கேட்டால், நீதிவான் முன்னிலையில் சான்று பகர்ந்துள்ள சாட்சிக்காரர்கள் பொலிசுக்களித்த கூற்றுக்களினதும், குற்றஞ்சாட்டப்பட்டவர் பொலிசுக்களித்த கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அக்கூற்றுக்களினதும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி, ஒழுங்குவிதிமூலம் அமைச்சரால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் அதற்குரிய கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் மீது, இயைபான புத்தகங்கள் வைத்திருக்கப்படும் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய வீதமொன்று அவ்வாறு விதித்துரைக்கப்படுகின்ற வரையில், வீதமானது, நூறு சொற்களுக்கு இருபத்தைந்து சதமாதல் வேண்டும்.

(2) முதலாம் அட்டவணையின் எட்டாம் நிரையில் நீதிவான் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படற்பாலதெனக் காட்டப்படாத தவறொன்று தொடர்பில் எவரேனுமாளுக்கெதிராகக் குற்றப்பகர்வொன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்ற போது, சட்டத்துறைத் தலைமையதிபதி, நீதிநலன் கருதி, குற்றப்பகர்வில் நிரற்படுத்தப்படாத எவரேனும் சாட்சிக்காரரினால் பொலிசுக்குக் கொடுக்கப்பட்ட கூற்றுக்களைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி திறந்த நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்குக் கிடைக்கச் செய்வித்தல் வேண்டும்.".

(அ) பதிவுகளின் அல்லது அதன் பாகம் எதனதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி பதிவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினாலும் ; அத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) நீதிவான் முன்னிலையில் சான்று பகர்ந்துள்ள சாட்சிக்காரர்கள் பொலிசுக்களித்த கூற்றுக்களினதும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பொலிசுக்களித்த கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அக்கூற்றுக்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இயைபான புத்தகங்கள் வைத்திருக்கப்படும் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினாலும், கொடுத்துதவப்படல் வேண்டும்.

**159.** (1) நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கத்திற்குப் பாரப்படுத்தும் பொழுது, பிணை பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமான இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அவர் ஏதேனும் மறியற்சாலையின் காண்காணிப்பாளரை விளித்து விடுக்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் மூலம், வழக்கை விளங்கும் வரையும் விளக்கத்தின் போதும் அக் குற்றஞ்சாட்டப்பட்டவரைச் சொல்லப்பட்ட கண் காணிப்பாளரின் கட்டுக்காவலுக்கு பாரப்படுத்தல் வேண்டும்.

பதிவேடு விளக்க நீதிமன்றத்திற்கும் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட பிரதி சட்டத்துறைத் தலைமையதிபதிக் கும் அனுப்பி வைக்கப்படுதல்.

(2) நீதிவான் உடனடியாக -

(அ) மேல் நீதிமன்றத்துக்கு -

(i) விசாரணைபற்றிய பதிவேட்டையும் சான்றாகக் காண்பிக்கப்பட்ட எல்லா ஆவணங்களையும் பொருள்களையும் ; அத்துடன்

(ii) அத்தகைய பதிவுகளினதும், அத்தகைய ஆவணங்களினதும், அவரது கைப்பட அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியையும் ; அத்துடன்.

(iii) புலனாய்வு பற்றிய குறிப்புகளினதும், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரால் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களினதும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகளிலொன்றையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு -

(i) விசாரணைபற்றிய பதிவினதும், சான்றாக காண்பிக்கப்பட்ட எல்லா ஆவணங்களினதும், அவரது கைப்பட அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியையும் அத்துடன் எத்தனை குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உள்ளார்களோ அத்தனை அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும், அத்துடன்

(ii) புலனாய்வு பற்றிய குறிப்புகளினதும், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரால் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளிலொன்றையும்,

அனுப்புதல் வேண்டும்.

(3) இருநூற்றறுபத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகள், இப் பிரிவின் கீழ் வழங்கப்படும் ஒவ்வோர் ஆணைப்பத்திரத்துக்கும் ஏற்புடையன வாகும்.

குற்றப்பகர்வைச் சமர்ப்பித்தலும் சேர்ப்பித்தலும்.

**160.** (1) விசாரணையொன்றின் பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி சட்டத்துறைத் தலைமையதிபதிக்குக் கிடைத்ததும், வழக்கானது குற்றப்பகர்வின்மீது மேல்நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்பட வேண்டியதொன்றென அவர் அபிப்பிராயப்பட்டால், குற்றப்பகர்வொன்று தயாரிக்கப்பட்டு, 162 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கையொப்பமிடப்பட்டதும் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படுதலும் அந்நீதிமன்றத்திற் கோப்பிடப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அக்குற்றப்பகர்வு அவ்வாறு கையொப்பமிடப்பட்டு, அனுப்பப்பட்டுக் கோப்பிலிடப்பட்டதென்னும் நிகழ்வு, குற்றஞ்சாட்டப்பட்ட அத்தவறாக அமைவதற்கும் அத்தகைய நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் கொடுத்தற்கும் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிபந்தனைகளும் குறிப்பிட்ட அவ்விடயத்தில் பூர்த்திசெய்யப்பட்டன என்னும் கூற்றுக்குச் சமமானதாதல் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் குற்றச்சாட்டுக்களை ஒன்று சேர்த்தல் தொடர்பான இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நீதிவானால் எடுக்கப்பட்ட சான்றில் வெளிவிடப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பான குற்றச்சாட்டை, அக்குற்றச்சாட்டு நீதிவானால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், குற்றப்பகர்வில் பதிலீடு செய்யலாம் அல்லது உள்ளடக்கலாம்.

161. இச்சட்டக் கோவையினதும் அல்லது வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட குற்றப்பகர்வின் மீதான எல்லா வழக்குத் தொடுப்புகளும் அந்நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரால் விளங்கப்படுதல் வேண்டும்.

யூரர்சபையால் விளக்கம் எப்பொழுது நடாத்தப்படும் என்பதும், யூரர்சபை யின்றி விளக்கம் எப்பொழுது நடாத்தப்படும் என்பதும்.

எனினும், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட தவறுகளின் நிரல் அடங்கியுள்ள ஒவ்வொரு விடயத்திலும், யூரர் சபையொன்றினால் விளங்கப்படவேண்டுமென்று குற்றஞ்சாட்டப்பட்டவர் தெரிவு செய்தால் மட்டுமே, விளக்கமானது நீதிபதியொருவர் முன்னிலையில் யூரர் சபையொன்றினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

§3, 11 இல. 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றப்பகர்வின் உள்ளடக்கம்.

**162.** (1) மேல் நீதிமன்றமொன்றில், யூரர்சபையோடு அல்லது யூரர் சபையின்றி நடைபெறும் விளக்கத்துக்கான குற்றப்பகர்வு ஒவ்வொன்றிலும், வழக்குத்தொடுநர் அழைக்கக் கருதியுள்ள சாட்சிக்காரர்களின் நிரலொன்றும், அவ்விளக்கத்தில் காண்பிக்கப்படுவதற்காகக் கருதப்படும் ஆவணங்களினதும் பொருள்களினதும் வேறொரு நிரலொன்றும் அடங்கியிருத்தல் வேண்டும் ; இந்த ஆவணங்களும் பொருள்களும் "காண்பி பொருள்கள்" என அழைக்கப்படும்.

ஆனால், இந்த உட்பிரிவிலுள்ளது எதுவும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அறிவித்தல் கொடுத்தபின்னர், குற்றப்பகர்விற் குறித்துரைக்கப்படாத எவரேனும் சாட்சிக்காரரை அழைப்பதினின்றும் அல்லது ஏதேனும் ஆவணத்தைக் காண்பித்தலினின்றும் வழக்குத்தொடுநரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) குற்றப்பகர்வு ஒவ்வொன்றுடனும் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(அ) இந்த அத்தியாயத்தின்கீழ் பூர்வாங்க விசாரணை நடைபெற்றவிடத்து, அவ்விசாரணைப் பதிவேட்டினதும் ஆவணங்களினதும் அத்துடன் மரணவிசாரணை ஒன்று நடைபெற்றிருந்தால் மரணவிசாரணை நடவடிக்கைகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இவ்வத்தியாயத்தின்கீழ் பூர்வாங்க விசாரணையொன்று நடைபெறாதவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவரும் குற்றப்பகர்வில் நிரற்படுத்தப்பட்ட சாட்சிக்காரர்களும் பொலிசுக்கு கொடுத்த கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பிரதிகளும். §10, 52 இல 1980

(இ) குற்றப்பகர்வின் நிரற்படுத்தப்பட்ட எல்லா அறிக்கைகளினதும் புறவுருக்களினதும் பிரதிகள்; அத்துடன்.

(ஈ) வழக்கைப்பற்றிய புலனாய்வின் போது நடைபெற்றிருக்கக்கூடிய அடையாள அணிவகுப்பு எதனையும் பற்றிய குறிப்புகளின் பிரதிகள்; அத்துடன்.

(உ) 127 ஆம் பிரிவின்கீழ் -

(i) குற்றஞ்சாட்டப்பட்டவராலும், அத்துடன்

(ii) குற்றப்பகர்வில் நிரற்படுத்தப்பட்ட எவரேனும் சாட்சிக்காரராலும்,

நீதிவானுக்கு அளிக்கப்பட்ட எவையேனும் கூற்றுக்களினதும் பிரிதிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) தவறொன்று பற்றிய புலனாய்வின் போது, பொலிசு அலுவலரினால் எழுதப்பட்ட குறிப்புகளில் தவறு நடந்த இடத்தைப்பற்றிய அவதானிப்புக்களைக் கொண்ட அப்பாகத்தின் பிரதிகள்.

(3) குற்றப்பகர்வானது விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், சட்டத்துறைத் தலைமையதிபதியினது பெயரில் கொணரப்படுதலும் வேண்டும் ; அத்துடன், அது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது மன்றாடியார் தலைமையதிபதியினால் அல்லது அரச சட்டவுரைஞரினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி இறப்பது காரணமாக அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவது காரணமாக வழக்கு நடவடிக்கைகள் தணிதலோ முடிவுறுதலோ ஆகாது.

விசாரணை ஒரு மாதத்துக்குள்ளாக முடிக்கப்படுதல்

**163.** இவ்வத்தியாயத்தின் கீழ் நடாத்தப்படும் விசாரணை ஒவ்வொன்றும், நீதிவானானவர், ஒரு மாத காலத்துக்கப்பாலும் விசாரணையை நீடிப்பது அவசியமெனக் கண்டாலொழிய, (இதற்கான காரணத்தை அவர் பதிதல் வேண்டும்.) வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்படாதிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக முடிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XVI

## குற்றச்சாட்டுப் பற்றி

**164.** (1) இச் சட்டக்கோவையின் கீழான குற்றச்சாட்டொவ்வொன்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் எத்தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் எனக் கூறுதல் வேண்டும். குற்றச்சாட்டுத் தவறைக் கூறுதல் வேண்டும்.

(2) அத்தவறைத் தோற்றுவிக்கும் சட்டம் அத் தவறுக்கு ஏதேனும் குறிப்பான பெயரைக் கொடுத்திருப்பின் அத்தவறானது அக்குற்றச்சாட்டில் அப்பெயர் கொண்டுமட்டும் விவரிக்கப்படலாம்.

(3) அத்தவறைத் தோற்றுவிக்கும் சட்டம் அத் தவறுக்கு ஏதேனும் குறிப்பான பெயரைக் கொடுக்காவிடின் குற்றஞ்சாட்டப்பட்டவர் எக்கருமத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அக்கருமம் பற்றி அக்குற்றஞ்சாட்டப்பட்வருக்கு விளக்கக்கூடியதாக தவறின் வரைவிலக்கணம் கூறப்படுதல் வேண்டும்.

(4) புரியப்பட்டதாகச் சொல்லப்படும் தவறு எச் சட்டத்தின்கீழும் சட்டத்தின் எப்பிரிவின்கீழும் தண்டிக்கப்படற்குரியதோ அச்சட்டமும், அச்சட்டத்தின் அப்பிரிவும் குற்றச்சாட்டில் கூறப்படுதல் வேண்டும்.

(5) குற்றச்சாட்டுச் செய்யப்பட்டதொன்றும் நிகழ்வானது, அந்தக் குறித்த வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட தவறாக அமைவதற்குச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட சட்ட நிபந்தனை ஒவ்வொன்றும் பூரத்தி செய்யப்பட்டதென்னும் கூற்றுக்குச் சமமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) குற்றச்சாட்டானது சமர்ப்பிக்கப்பட்டதும், அது விளக்கத்திற்காகப் பாரப்படுத்தலுக்கு முதனிலையாகவுள்ள விசாரணையிலாயினுஞ்சரி அல்லது விளக்கத்திலாயினுஞ்சரி, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளங்கும் மொழியில் வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டுக்கள்**

(அ) **ஆ** என்பவரைக் கொலை செய்ததாக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார், இது, தண்டனைச் சட்டக்கோவையின் 293 ஆம், 294 ஆம் பிரிவுகளில் கொடுக்கப்பட்ட கொலைக்கான வரை விலக்கணத்தினுள் **அ** என்பவரின் செயல் அதே சட்டக்கோவையின் பொது விதி விலக்குகளெதிலும் அடங்கவில்லை எனவும், அத்துடன் அது, 294 ஆம் பிரிவுக்கான ஐந்து விதிவிலக்குகளில் எதனுள்ளும் அடங்கவில்லை எனவும், அல்லது **அ** என்பவரின் செயல் 1 ஆம் விதிவிலக்கில் அடங்கினால் அதற்கு, அவ்விதிவிலக்குக்கான மூன்று காப்புவாசகங்களில் ஏதேனும் ஒன்று ஏற்புடையதாகும் எனவும் கூறும் கூற்றுக்குச் சமமானதாகும்.

(ஆ) சுடுவதற்கான ஒரு சாதனத்தினால் **ஆ** என்பவருக்கு வேண்டுமென்று கடும் காயம் விளைவித்ததாக, தண்டனைச் சட்டக்கோவையின் 317 ஆம் பிரிவின்கீழ் **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். இது, அவ்விடயத்துக்குத் தண்டனைச் சட்டக் கோவையின் 326 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படவில்லை எனவும் பொது விதிவிலக்கு அதற்கு ஏற்புடையதாகவில்லை எனவும் கூறும் கூற்றுக்குச் சமமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கொலைக்காக, ஏமாற்றுதலுக்காக, திருட்டுக்காக, வன்பறிக்காக, குற்றமுறையான அச்சுறுத்தலுக்காக அல்லது பொய்யான ஆதன அடையாளத்தினைப் பயன்படுத்தியதற்காக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டுகின்றார். குற்றச்சாட்டானது, கொலையை அல்லது ஏமாற்றுதலை அல்லது திருட்டை அல்லது வன்பறியை அல்லது குற்றமுறையான அச்சுறுத்தலை **அ** என்பவர் புரிந்துள்ளாரென அல்லது பொய்யான ஆதன அடையாளத்தினை அவர் பயன் படுத்தினாரெனத் தண்டனைச் சட்டக்கோவையிலடங்கியுள்ள அக் குற்றங்களுக்கான வரைவிலக்கணங்களைக் குறிப்பிடாது, கூறலாம்.

(ஈ) பகிரங்க சேவையாளரொருவரின் சட்டமுறையான அதிகாரத்தினால் விற்பனைக்கு விடப்பட்ட ஆதனமொன்றை விற்பனை செய்வதனை வேண்டுமென்று தடைசெய்தாரெனத் தண்டனைச் சட்டக்கோவையின் 182 ஆம் பிரிவின் கீழ் **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். குற்றச்சாட்டு அச்சொற்களில் அமைந்திருத்தல் வேண்டும்.

**165.** (1) குற்றச்சாட்டானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் எக் கருமத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அக்கருமம் பற்றி அவருக்கு விளக்கம் கொடுத்தற்கும், அத்தவறு காலவிதிப்புத் தடைக்குட்பட்டதல்ல எனக் காட்டுவதற்கும், நியாயமான அளவு போதியதாக இருக்கும் வண்ணம், சார்த்தப்படும் தவறு புரியப்பட்ட நேரம், புரியப்பட்ட இடம் என்பன பற்றியும், எவ்வாளுக்கெதிராக அது புரியப்பட்டதோ - நேரமும் இடமும் ஆளும் பற்றிய விபரங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அவ்வாள் எவரேனுமிருப்பின்) அவர் பற்றியும், எப்பொருள் தொடர்பில் அது புரியப்பட்டதோ (அப்பொருள் ஏதேனுமிருப்பின்) அது பற்றியும் கூறும் அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர், குற்றமுறையான நம்பிக்கைத்துரோகத்தின் பேரில் அல்லது அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடியதன் பேரில் குற்றஞ்சாட்டப்படும் போது, அத்தவறு, விடயத்திற் கேற்றாற்போல எந்த முழு மொத்தப் பணத்தொகை தொடர்பாக அல்லது எந்த முழு மொத்த அளவு தொடர்பாகப் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்டுள்ளதோ அந்த முழு மொத்தப்பணத்தொகையையும் அல்லது அளவையும், அவற்றுடன், அத்தவறு எத்தேதிகளுக்கிடையில் புரியப்பட்டதாகச் சார்த்தப்படுகிறதோ அத்தேதிகளையும், குறிப்பிட்ட உருப்படிகளையோ அல்லது சரியான தேதிகளையோ குறிப்பிடாமலே, குறித்துரைத்தல் போதுமானதாதல் வேண்டும் ; அவ்விதம் வகுக்கப்பட்ட குற்றச்சாட்டு 174 ஆம் பிரிவின் கருத்தொல்லைக்குட்பட ஒரு தவறுக்கான குற்றச்சாட்டாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய தேதிகளில் முதற்றேதிக்கும் கடைசித் தேதிக்குமிடையிலான காலம் ஓராண்டை விஞ்சுதலாகாது.

தவறு புரியப்படும் விதம் பற்றி எப்பொழுது கூறப்படுதல் வேண்டும் என்பது.

(3) நூற்றறுபத்துநான்காம் பிரிவிலும் இப்பிரிவின் முற்போந்த உட்பிரிவுகளிலும் குறிப்பிடப்பட்ட விபரங்கள். குற்றஞ்சாட்டப்பட்டவர் எக்கருமத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அக்கருமம் பற்றி அவருக்குப் போதிய விளக்கம் கொடுக்காத அத்தகையதாக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடயத்தின் தன்மை இருக்கும் பொழுது, அக்குற்றச்சாட்டானது, அந்நோக்கத்திற்குப் போதியதாகவிருக்கும் வண்ணம் சார்த்தப்பட்ட அத்தவறு எவ்விதத்தில் புரியப்பட்டது என்பது பற்றிய அத்தகைய விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்

## எடுத்துக்காட்டுக்கள்

(அ) குறித்த பொருளொன்றைக் குறித்த ஒரு நேரத்திலும் இடத்திலும் திருடியதற்காக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். அத்திருட்டு எவ்வாறு செய்யப்பட்டது என்பதை அக்குற்றச்சாட்டில் எடுத்துக்காட்டத் தேவையில்லை.

(ஆ) சொல்லப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் **ஆ** என்பவரை ஏமாற்றியதற்காக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். எம்முறையில் **அ** என்பவர் **ஆ** என்பவரை ஏமாற்றினார் என்பதைக் குற்றச்சாட்டு எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(இ) சொல்லப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் பொய்ச்சான்றளித்தாரென **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். குற்றச்சாட்டானது **அ** என்பவரால் கொடுக்கப்பட்ட சான்றில் பொய்யானதெனச் சார்தப்பட்ட அப்பகுதியை எடுத்துக் காட்டுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) குறிப்பிடப்பட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் **ஆ** என்னும் பகிரங்க சேவையாளரொருவரை அவரது பகிரங்கப் பணிகளை நிறைவேற்றுவதில் தடைசெய்தாரென **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். குற்றச்சாட்டு, **ஆ** என்பவர் அவரது பணிகளை நிறைவேற்றுகையில் **அ** என்பவர் அவரை எம்முறையில் தடைசெய்தாரென்பதை எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் **ஆ** என்பவரைக் கொலை செய்தாரென **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். **ஆ** என்பவரை **அ** என்பவர் எம்முறையில் கொலை செய்தாரென்பதைக் குற்றச்சாட்டுக்கூற வேண்டியதில்லை.

(ஊ) **ஆ** என்பவரைத் தண்டனையிலிருந்து காப்பாற்றும் உட்கருத்துடன் சட்டத்தின் பணிப்பொன்றுக்குக் கீழ்ப்படியாமைக்காக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். குற்றச்சாட்டானது குற்றஞ் சாட்டப்பட்ட கீழ்ப்படியாமை எது என்பதையும் மீறப்பட்ட சட்டத்தினையும் கூறுதல் வேண்டும்.

தவறொன்றை விவரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்ட சொற்களுக்கு எப்பொருள் கொடுக்கப்பட வேண்டும் என்பது.

(4) ஒவ்வொரு குற்றச்சாட்டிலும், தவறொன்றை விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொற்களானவை, அத்தகைய தவறு எச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படற்பாலதோ அச்சட்டத்தினால் அவற்றுக்கு முறையே தரப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**166.** குற்றச்சாட்டில் கூறப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தவறையோ அல்லது விவரங்களையோ கூறுவதிலான பிழை எதுவும், அத்துடன் அத்தவறை அல்லது அவ்விவரங்களைக் கூறாதுவிட்டமை எதுவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய பிழையினால் அல்லது கூறாதுவிட்டமையால் தவறாக வழிப்படுத்தப்பட்டாலொழிய, அவ்வழக்கின் எக்கட்டத்திலும் முக்கியமானதாகக் கருதப்படுதலாகாது. பிழைகளின் விளைவு.

**எடுத்தக்காட்டுகள்.**

(அ) "போலி நாணயத்தை அவரது உடைமையில் கொண்ட பொழுதே, அத்தகைய நாணயம் போலியானதென அறிந்துகொண்டு உடைமையில் வைத்திருந்தார்" என "மோசடியாக" என்றும் சொல்லைச் சேர்க்காமல் தண்டனைச் சட்டக்கோவையின் 237 ஆம் பிரிவின்கீழ் **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். இவ்விட்டுவிடுகையினால் **அ** என்பவர் உண்மையாகவே தவறாக வழிப்படுத்தப்பட்டாரெனத் தோன்றினாலொழிய, அப்பிழை முக்கியமானதாகக் கருதப்படுதலாகாது.

(ஆ) **ஆ** என்பவரை ஏமாற்றியதாக, **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார் ; ஆனால் அவர் எம்முறையில் **ஆ** என்பவரை ஏமாற்றினாரென்பது குற்றச்சாட்டில் எடுத்துக்காட்டப்படவில்லை அல்லது பிழையாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. **அ** என்பவர் தானே எதிர்வாதம் செய்கிறார் ; சாட்சிக்காரர்களைக் கூப்பிடுகின்றார் ; அத்துடன், அச்செயற்கோவை பற்றிய அவரது சொந்த விளக்கத்தைக் கூறுகின்றார். இதிலிருந்து அந்த ஏமாற்றுதல் புரியப்பட்ட முறைபற்றி எடுத்துக்காட்டாமல் விட்டமை முக்கியமானதல்ல என நீதிமன்றம் அனுமானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) **ஆ** என்பவரை ஏமாற்றியதாக **அ** என்பவர் குற்றஞ் சாட்டப்படுகின்றார் ; ஆனால் அவர் எம்முறையில் **ஆ** என்பவரை ஏமாற்றினாரென்பது குற்றச்சாட்டில் எடுத்துக்காட்டப்படவில்லை. **அ** என்பவருக்கும் **ஆ** என்பவருக்குமிடையே பல கொடுக்கல் வாங்கல்கள் இருந்தன ; அக் குற்றச்சாட்டு, அவற்றில் எதனைக் குறிப்பிடுகின்றதென்பதை அறிவதற்கு **அ** என்பவருக்கு எவ்வழிவகையுமில்லை ; ஆதலால் அவர் எதிர்வாதம் எதையும் முன்வைக்கவில்லை ; அத்தகைய நிகழ்வுகளிலிருந்து இவ்வழக்கில் ஏமாற்றிய முறையை எடுத்துக்காட்டாமல் விட்டுவிட்டமை முக்கியமானதென நீதிமன்றம் அனுமானிக்கலாம்.

நீதிமன்றம் குற்றச்சாட்டினை மாற்றலாம்.

**167.** (1) தீர்ப்பு எடுத்து மொழியப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் அல்லது மேல் நீதிமன்றத்தின் முன்னர் யூரர் சபையினால் நடாத்தப்படும் விளக்கங்களின் விடயத்தில், யூரர்சபைத்துணிபுரை கூறப்படுவதற்கு முன்னர், குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டு எதனையும் நீதிமன்றம் எதுவும் மாற்றலாம்.

(2) அத்தகைய மாற்றம் ஒவ்வொன்றும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) குற்றப்பகர்வொன்றில் ஒரு குற்றச்சாட்டுக்காக இன்னொன்றைப் பதிலீடு செய்தலும் அல்லது குற்றப்பகர்வொன்றில் புதியதொரு குற்றச்சாட்டைச் சேர்த்தலும், அத்துடன் நீதிவான் நீதிமன்றமொன்றில் ஒரு குற்றச்சாட்டுக்காக இன்னொன்றைப் பதிலீடு செய்தலும் அல்லது புதியதொரு குற்றச்சாட்டைச் சேர்த்தலும், இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் அத்தகைய குற்றப்பகர்வை அல்லது குற்றச்சாட்டை மாற்றுதலாகக் கருதப்படுதல் வேண்டும்.

168. நூற்றறுபத்தேழாம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட மாற்றமானது, விளக்கத்ததை உடனடியாகத் தொடர்ந்து நடாத்துதல் குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது எதிர்வாதத்தை நடாத்துவதில் அவருக்கோ அல்லது வழக்குத்தொடுநர் வழக்கை நடாத்துவதில் அவருக்கோ நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி பாதகமாயிருக்கும் சாத்தியக்கூறு கொண்டிராத அத்தகையதாயின், நீதிமன்றமானது, அதன் தற்றுணிபின்பேரில், அத்தகைய மாற்றம் செய்யப்பட்டபின்னர், மாற்றியமைக்கப்பட்ட குற்றப்பகர்வே அல்லது குற்றச்சாட்டே மூலக் குற்றப்பகர்வாக அல்லது மூலக் குற்றச்சாட்டாக இருந்தாற்போன்று விளக்கத்தைத் தொடர்ந்து நடாத்த முற்படலாம்.

மாற்றப்பட்ட குற்றச்சாட்டின் மீது விளக்கத்தினை எப்போது உடனடியாகத் தொடர்ந்து நடாத்தலாம் என்பது.

169. நூற்றறுபத்தேழாம் பிரிவின் கீழ்ச் செய்யப்படும் மாற்றமானது, விளக்கத்தினை உடனடியாகத் தொடர்ந்து நடாத்த முற்படுதல் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அல்லது வழக்குத் தொடுநருக்கு, நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி மேற்சொல்லப்பட்டவாறாகப் பாதகமாயிருக்கும் சாத்தியக் கூறு கொண்ட அத்தகையதாயின், நீதிமன்றமானது புதிய விளக்கமொன்றை நடாத்துமாறு பணிக்கலாம், அல்லது அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு விளக்கத்தை ஒத்திவைக்கலாம்.

புதிய விளக்கத்தை நடாத்தும்படி எப்போது பணிக்கப்படலாம் அல்லது விளக்கம் எப் போது ஒத்தி வைக்கப்படலாம் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைக் கப்பட்ட குற்றச் சாட்டிலுள்ள தவறுக்கான வழக்குத் தொடுப்புக்கு முன்னங்கீகாரம் தேவைப்படின் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

**170.** எத்தவறுக்கான வழக்குத்தொடுப்புக்கு முன்னங்கீகாரம் அவசியமோ அத்தவறொன்று புரியப்பட்டதாக நூற்றறுபத்தேழாம் பிரிவின்கீழ் மாற்றப்பட்டவாறான குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டு சார்த்துமாயின், மாற்றியமைக்கப்பட்ட குற்றச்சாட்டு எந்நிகழ்வுகளை ஆதாரமாக வைத்து நிறுவப்பட்டுள்ளதோ அதே நிகழ்வுகளின் மீது வழக்குத்தொடுப்பொன்றைச் செய்வதற்கு ஏலவே அங்கீகாரம் பெறப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய அங்கீகாரம் பெறப்படும்வரையிலும் அவ்வழக்கைத் தொடர்ந்து நடாத்துதலாகாது.

குற்றச்சாட்டு மாற்றப்படும் பொழுது சாட்சிக்காரர் களை மீள அழைத்தல்.

**171.** விளக்கம் தொடங்கியபின்னர் குற்றப்பகர்வொன்று அல்லது குற்றச்சாட்டொன்று நீதிமன்றத்தினால் மாற்றப்படும் போதிலெல்லாம், அத்தகைய மாற்றம் தொடர்பாக ஏலவே விசாரிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களான எவரேனும் சாட்சிக்காரர்களை மீள அழைத்து அல்லது மீண்டும் கட்டளைவிட்டழைத்து விசாரணை செய்வதற்கும் வழக்குத்தொடுநரும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

முக்கியமான பிழையின் விளைவு.

**172.** (1) உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மேன்முறையீட்டு அல்லது மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள் குற்றப்பகர்விலுள்ள அல்லது குற்றச்சாட்டிலுள்ள பிழையொன்றின் காரணமாகத் தமது எதிர்வாதத்தில் தவறாக வழிப்படுத்தப் பட்டாரென அபிப்பிராயப்பட்டால், அது தக்கதென எண்ணும் எம்முறையிலேனும் வகுக்கப்பட்ட குற்றச்சாட்டொன்றின்மீது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது குற்றப்பகர்வொன்றின்மீது புதிய விளக்கமொன்று நடாத்தப்படவேண்டுமென அது பணித்தல் வேண்டும், அல்லது விடயத்தின் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகையவேறு கட்டளையை ஆக்கலாம்.

(2) வழக்கின் நிகழ்வுகள், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக எண்பிக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் தொடர்பாகச் செல்லுபடியுள்ள குற்றச்சாட்டொன்றை முன்வைக்கமுடியாத அத்தகையவை என அத்தகைய நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அல்லது சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப் படுத்துமிடத்து அக்குற்றத்தீர்ப்பினைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்.

## எடுத்துக்காட்டு

**அ** என்பவர், ஒரு குற்றச்சாட்டின் பேரில் தண்டனைச் சட்டக்கோவையின் 193 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றார். உண்மையானதாக அல்லது உள்ளபடியானதாக அவர் ஊழல்முறையில் பயன்படுத்திய அல்லது பயன்படுத்த எத்தனித்த சான்றானது பொய்யானது அல்லது புனையப்பட்டது என்பதை அவர் அறிந்திருந்தாரென அக்குற்றச்சாட்டுக் கூறாது விட்டுவிட்டது. **அ** என்பவர் அவ்வாறு அறிந்திருந்தது அநேகமாகச் சாத்தியமானதெனவும் அவ்வாறு அறிந்திருந்தார் என்னும் கூற்றை அக்குற்றச்சாட்டிலிருந்து விட்டுவிட்டதால் அவர் அவரது எதிர்வாதத்தில் தவறாக வழிப்படுத்தப்பட்டிருக்கக் கூடுமெனவும் நீதிமன்றம் எண்ணினால், அது திருத்தப்பட்ட குற்றச்சாட்டொன்றின்மீது புதிய விளக்கமொன்றை நடாத்த வேண்டும் எனப்பணித்தல் வேண்டும் ; ஆனால் **அ** என்பவர் அவ்வாறு அறிந்திராமை அநேகமாகச் சாத்தியமானதென நடவடிக்கைகளிலிருந்து தோன்றினால் அது அக்குற்றத் தீர்ப்பைத் தள்ளுபடிசெய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்சாட்டுக்களை ஒன்று சேர்த்தல்

வெவ்வேறு தவறுகளுக்கு வெவ்வேறு குற்றச்சாட்டு.

**173.** தனியான எத்தவறுக்காக எவரேனும் ஆள் குற்றஞ் சாட்டப்படுகின்றாரோ அத்தவறு ஒவ்வொன்றுக்கும், தனித்தனியான ஒரு குற்றச்சாட்டு இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய குற்றச்சாட்டு ஒவ்வொன்றும் 174 ஆம், 175 ஆம், 176 ஆம், 180 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் தவிர தனித்தனியாக விளங்கப்படுதலும் வேண்டும் ; சொல்லப்பட்ட அப்பிரிவுகள் வெவ்வேறாகப் பிரயோகிக்கப்படலாம் அல்லது கூட்டாகப் பிரயோகிக்கப்படலாம்.

### எடுத்துக்காட்டு.

ஒரு சந்தர்ப்பத்தில் திருட்டுக்காகவும் வேறொரு சந்தர்ப்பத்தில் கடுங்காயத்தை விளைவித்ததற்காகவும் **அ** என்பவர் குற்றஞ் சாட்டப்படுகின்றார். அத்திருட்டுக்காவும் கடுங்காயம் விளைவித்ததற்காகவும் **அ** என்பவர் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தனித்தனியாக விளங்கப்படுதல் வேண்டும்.

ஓராண்டுக்குள் புரியப்பட்ட ஒரேவகையான மூன்று தவறுகளுக்காக ஒன்றாகக் குற்றஞ் சாட்டப்படலாம்.

**174.** (1) ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே வகையினவான தவறுகளை அத்தகைய தவறுகளில் முதலாம் தவறிலிருந்து கடைசித் தவறுவரையில் ஓராண்டுக்கால இடைவெளிக்குள் புரிந்தாரெனக் குற்றஞ் சாட்டப்படும் பொழுது அவர் அவற்றுள் எத்தனை தவறுகளுக்காகவும் (மூன்றுக்கு மேற்படாதவாறு) குற்றஞ்சாட்டப்பட்டு ஒரே விளக்கத்தில் விளங்கவும்படலாம் ; அத்துடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தண்டனைச் சட்டக்கோவையின் அல்லது ஏதேனும் சிறப்பான சட்டத்தின் அல்லது உள்ளூர்ச் சட்டத்தின் ஒரே பிரிவின்கீழ் ஒரே அளவினதான தண்டனைமூலம் தண்டிக்கப்படற்குரியனவாகத் தவறுகள் இருக்கும் போது, அவை ஒரே வகையினவாகும்.

**175.** (1) ஒரே செயற்கோவையாக அமையும் வகையில் அவ்வாறு ஒன்றாகச் சம்பந்தப்பட்டுள்ள பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர்வரிசையில் ஒரே ஆளினால் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகள் புரியப்பட்டிருப்பின், அத்தகைய தவறு ஒவ்வொன்றுக்குமாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டு ஒரே விளக்கத்தில் விளங்கப்படலாம் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கப்படலாம். ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுக்கான விளக்கம்.

(2) சார்த்தப்பட்ட செயல்களானவை, அப்போதைக்கு வலுவிலிருக்கும் எச்சட்டத்தினால் தவறுகள் வரைவிலக்கணங் கூறப்படுகின்றனவோ அல்லது தண்டிக்கப்படுகின்றனவோ அச்சட்டம் எதனதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனியான வரைவிலக்கணங்களுக்குள் அடங்குவனவாய ஒரு தவறாக அமையின், அவற்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அத்தகைய தவறுகளில் ஒவ்வொன்றுக்குமாக ஒரே விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம் ; அத்துடன் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கப்படலாம். இரண்டு வரைவிலக்கங்களுக்குள் அடங்கும் தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தவறாக அமைகின்றவையும் ஆனால் ஒன்று சேர்க்கப்படும் பொழுது வேறொருதவறாக அமைகின்ற வையுமான செயல்கள்.

(3) எந்தப் பல்வேறு செயல்களுள் ஒரு செயல் அதுவாகவே அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயல்கள் அவையாகவே ஒரு தவறாக அமையுமோ, அந்தச் செயல்கள் ஒன்று சேர்க்கப்படும் போது வேறொரு தவறாக அமையின் அவற்றுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட ஆளானவர் அத்தகைய செயல்கள் ஒன்று சேர்க்கப்படும் போது அமையும் தவறுக்காவும், அத்தகைய செயல்களில் ஏதேனும் ஒன்றினால் அல்லது அதற்கு மேற்பட்டவையினால் அமையும் ஏதேனும் தவறுக்காவும் ஒரே விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம்; மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்களில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கப்படலாம்.

(4) இப்பிரிவிலுள்ளதெதுவும் தண்டனைச் சட்டக் கோவையின் 67 ஆம் பிரிவினைப் பாதித்தலாகாது.

## எடுத்துக்காட்டுகள்.

(1) ஆம் உட்பிரிவுக்கான எடுத்துக்காட்டுக்கள்:-

(அ) சட்டமுறையான கட்டுக்காவலிலுள்ள ஆளொருவரான **ஆ** என்பவரை **அ** என்பவர் மீட்கின்றார், அவ்வாறு செய்யும் பொழுது **ஆ** என்பவரைத் தமது கட்டுக்காவலில் வைத்திருந்த **இ** என்னும் ஊர்காவலருக்குக் கடுங்காயம் விளைவிக்கின்றார். **அ** என்பவர் தண்டனைச் சட்டக்கோவையின் 220 ஆம், 324 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) **அ** என்பவர் பல இலச்சினைகளை அவை போலியாக்கப்பட்டவை என அறிந்துகொண்டும் தண்டனைச் சட்டக்கோவையின் 455 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்குரியனவான பல பொய்யாவணம் புனைதல்களைப் புரியும் நோக்கத்திற்காக அவற்றை பயன்படுத்தும் உளக்கருத்துடனும் அவரது உடைமையில் வைத்திருக்கின்றார். தண்டனைச் சட்டக் கோவையின் 461 ஆம் பிரிவின்கீழ் ஒவ்வொர் இலச்சினையையும் உடைமையில் வைத்திருந்ததற்காக **அ** என்பவர் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக் கப்படலாம்.

(இ) **அ** என்பவர் **ஆ** என்பவருக்கு ஊறு ஏற்படுத்தும் உளக்கருத்துடன் அவருக்கெதிராகக் குற்றவியல் நடவடிக்கையொன்றை, அத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு நீதியானதும் சட்டமுறையானதுமான ஏது எதுவுமில்லையென அறிந்துகொண்டு, தொடுக்கின்றார் ; அத்துடன், **ஆ** என்பவரைக் குற்றஞ்சாட்டுவதற்கு நீதியானதும் சட்ட முறையானதுமான ஏது எதுவுமில்லையென அறிந்துகொண்டு, **ஆ** என்பவர் தவறொன்றைப் புரிந்தாரென, **ஆ** என்பவரைப் பொய்யாகக் குற்றஞ்சாட்டுகின்றார். **அ** என்பவர் தண்டனைச் சட்டக்கோவையின் 208 ஆம் பிரிவின் கீழ் இரு தவறுகளுக்காகத் தனித்தனியே குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.

(ஈ) **அ** என்பவர் **ஆ** என்பவருக்கு ஊறு விளைவிக்கும் உளக்கருத்துடன், அத்தகைய குற்றச்சாட்டுக்கு நீதியான அல்லது சட்டமுறையான ஏது ஏதுவும் இல்லையெனத் தெரிந்து கொண்டு, **ஆ** என்பவர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறொன்றைப் புரிந்துள்ளாரென அவருக்கு எதிராகப் பொய்யாகக் குற்றஞ்சாட்டுகின்றார். விளக்கத்தின்போது, **ஆ** என்பவர் மரணதண்டனைக்குரிய தவறொன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படச் செய்வதற்காக அவருக்கு எதிராக **அ** என்பவர் பொய்ச்சான்று அளிக்கின்றார். **அ** என்பவர், தண்டனைச்சட்டக்கோவையின் 208 ஆம், 191 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்காகத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.

(உ) **அ** என்பவர், வேறு ஆறு பேர்களோடு சேர்ந்து கலகஞ்செய்தல், கடுங்காயம் விளைவித்தல், பகிரங்கசேவையாளரொருவர் பகிரங்கசேவையாளர் என்ற தன்மையில் அவரது கடமையை ஆற்றுவதில் அக்கலகத்தை அடக்கமுயற்சிக்கையில் அவரைத் தாக்குதல், ஆகிய தவறுகளைப் புரிகின்றார். **அ** என்பவர் தண்டனைச் சட்டக்கோவையின் 144 ஆம், 316 ஆம், 149 ஆம் பிரிவுகளின்கீழான தவறுக்களுக்காகத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.

(ஊ) **அ** என்பவர், **ஆ, இ, ஈ** என்பவர்களுக்கு அச்சம் ஏற்படுத்தும் உளக்கருத்துடன் அவர்களுக்கு உடலூறு இழைக்கப்படுமென அவர்களை ஒரே நேரத்தில் பயமுறுத்துகின்றார். **அ** என்பவர், தண்டனைச் சட்டக்கோவையின் 486 ஆம் பிரிவின் கீழ் மூன்று தவறுகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆம் உட்பிரிவுக்கான எடுத்துக்காட்டுக்கள்:

(எ) **அ** என்பவர் **ஆ** என்பவரைப் பிரம்பினால் முறைகேடாக அடிக்கின்றார். **அ** என்பவர், தண்டனைச் சட்டக்கோவையின் 343 ஆம், 314 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்குத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.

(ஏ) களவாடப்பட்ட பல தானிய மூட்டைகளை மறைத்துவைக்கும் நோக்கத்துக்காக, அவை களவாடப்பட்ட ஆதனங்கள் எனத் தெரிந்திருக்கும் **அ, ஆ,** என்பவர்களுக்கு உடைமை மாற்றிக் கொடுக்கப்படுகின்றது. அதன்மேல், **அ, ஆ** என்பவர்கள், அந்தத் தானிய மூட்டைகளை, தானியக் குழியொன்றின் அடியில் மறைத்துவைப்பதில், தன்னிச்சசையாக ஒருவருக்கொருவர் உதவுகின்றானர். **அ, ஆ.** என்பவர்கள் தண்டனைச் சட்டக்கேவையின் 394 ஆம், 396 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்குத் தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் குற்றத் தீர்ப்பளிக்கப்படலாம்.

(ஐ) **அ** என்பவர், தனது பிள்ளையைப்பாதுகாப்பின்றி வெளியே கைவிட்டால் அப்பிள்ளை இறத்தல் சாத்தியமாகும் எனத் தெரிந்து கொண்டு, அப்பிள்ளையை வெளியே பாதுகாப்பின்றிக் கைதுறந்து விடுகின்றார். அவ்வாறு வெளியே பாதுகாப்பின்றிக் கைதுறந்ததன் விளைவாக அப்பிள்ளை இறக்கின்றது. **அ** என்பவர் தண்டனைச் சட்டக்கோவையின் 308 ஆம், 297 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்குத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒ) **அ** என்பவர், பகிரங்க சேவையாளரொருவரான **ஆ** என்பவருக்குத் தண்டனைச் சட்டக்கோவையின் 163 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்பளிக்கப்படுவதற்காக, போலியாக்கப்பட்ட ஆவணமொன்றை உண்மையான சான்றாக நேர்மையீனமாகப் பயன்படுத்துகின்றார். **அ** என்பவர் அதே சட்டக்கோவையின் (455 ஆம் பிரிவோடு சேர்த்து வாசிக்கப்பட்ட) 459 ஆம், 193 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்குத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத் தீர்ப்பளிக்கப்படலாம்.

(3) ஆம் உட்பிரிவுக்கான எடுத்துக்காட்டு :-

(ஓ) **அ** என்பவர் **ஆ** என்பவரைக் கொள்ளையடிக்கின்றார் ; அவ்வாறு செய்கையில் வேண்டுமென்றே அவருக்கு ஊறுவிளைவிக்கின்றார். **அ** என்பவர் தண்டனைச் சட்டக்கோவையின் 314 ஆம், 380 ஆம், 382 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகளுக்குத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத் தீர்ப்பளிக்கப் படலாம்.

(அ) என்பதிலிருந்து (ஓ) என்பதுவரையிலான எடுத்துக்காட்டுகளில் முறையே குறிப்பிடப்பட்ட தனித்தனியான குற்றச்சாட்டுக்கள், ஒரே விளக்கத்தில் விளங்கப்படலாம் என்பதுடன் ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கவும்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**176.** எண்பிக்கப்படக்கூடிய நிகழ்வுகள் வெவ்வேறு தவறுகளுள் எத்தவறை அமைக்குமென்பதுபற்றி ஐயப்பாட்டைத் தரக்கூடிய அத்தகையதொரு இயல்பினதான தனியொரு செயலானது அல்லது பல செயல்களைக் கொண்ட ஒரு தொடர்ச்சியானது இருப்பின் குற்றஞ் சாட்டப்பட்டவர், அத்தகைய தவறுகளில் எல்லாவற்றுக்குமாகவும் அல்லது ஏதேனும் ஒன்றுக்காக அல்லது ஒன்றுக்கு மேற் பட்டவற்றுக்காகக் குற்றஞ்சாட்டப்படலாம்; அத்துடன், அத்தகைய குற்றச்சாட்டுக்களில் எவ்வெண்ணிக்கையினவானவையும் ஒரே விளக்கத்தில் விளங்கப்படலாம் என்பதுடன், மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கமொன்றில் அவை ஒரே குற்றப்பகர்வில் உள்ளடக்கவும்படலாம், அல்லது சொல்லப்பட்ட தவறுகளில், எந்தத் தவறெனக் குறித்துரைக்காது அவற்றில் ஒரு தவறைப் புரிந்துள்ளாரென அவர் குற்றஞ்சாட்டப்படலாம்.

என்ன தவறு புரியப்பட்டுள்ளது என்பதுபற்றி ஐயப்பாடுள்ள விடத்து.

## எடுத்துக்காட்டு

திருட்டாக அல்லது களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதலாக அல்லது குற்றமுறையான நம்பிக்கைத் துரோகமாக அல்லது ஏமாற்றுதலாக அமையக்கூடிய ஒரு செயலுக்காக **அ** என்பவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். அவர், திருட்டு, களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றுதல் ஆகியவற்றுக்காகக் குற்றஞ்சாட்டப்படலாம். அல்லது பின்வரும் தவறுகளில், அதாவது, திருட்டு, களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், ஏமாற்றுதல், ஆகியவற்றில் ஒன்றைப் புரிந்துள்ளாரென அவர் குற்றஞ்சாட்டப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தவறுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆளொருவர் வேறொரு தவறுக்கு எப்பொழுது குற்றத்தீர்ப் பளிக்கப்படலாம் என்பது.

**177.** நூற்று எழுபத்தாறாம் பிரிவிற் கூறப்பட்ட விடயத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்து, அப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கக்கூடிய வேறொரு தவறை அவர் புரிந்தாரெனச் சான்றிலிருந்து தோன்றினால், அவர், எத்தவறைப் புரிந்துள்ளாரென நிறுவப்பட்டுள்ளதோ அத் தவறுக்காக அவர் மீது குற்றஞ்சாட்டப்படவில்லையாயினும், அத்தவறுக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படலாம்.

## எடுத்துக்காட்டு

**அ** என்பவர் திருட்டுக்காகக் குற்றஞ்சாட்டப்படுகின்றார். குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் அல்லது களவாடிய பொருள்களைப் பெறுதல் ஆகிய தவறை அவர் புரிந்ததாகத்தோன்றுகின்றது. (விடயத்துக்கு ஏற்றாற்போல) குற்றமுறையான நம்பிக்கைத்துரோகம் அல்லது களவாடிய பொருள்களைப் பெறுதல் ஆகிய தவறுக்காக அவர் குற்றஞ் சாட்டப்படவில்லையாயினும், அத்தகைய தவறுக்காக அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படலாம்.

எண்பிக்கப்பட்ட தவறு குற்றஞ் சாட்டப்பட்ட தவறுகள் உள்ளடக்கப் படும் போது.

**178.** (1) ஆளொருவர் வெவ்வேறு விவரங்களைக்கொண்ட தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதுடன், அவ்விபரங்களில் சிலவற்றின் கூட்டொன்று மட்டுமே ஒரு முழுமையான சிறு தவறை அமைக்கின்றதாக இருக்கின்ற போதும் அத்துடன் அக்கூட்டு எண்பிக்கப்பட்டும் எஞ்சிய விவரங்கள் எண்பிக்கப்படாமலும் இருக்கின்ற போதும், அந்தச் சிறு தவறுக்காக அவர் மீது குற்றஞ்சாட்டப்படாவிடினும், அவருக்கு, அதற்காகக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆளொருவர் ஒரு தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதுடன், அதனை ஒரு சிறுதவறாகக் குறைக்கும் நிகழ்வுகள் எண்பிக்கப்பட்டுள்ள போது, அவர் அந்தச் சிறு தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்படவில்லையாயினும், அத்துடன் அத்தகைய சிறு தவறை விளங்குவதற்கான நியாயாதிக்கம் வேறொரு நீதிமன்றத்துக்குப் பிரத்தியேகமாக உரித்தாக்கப்பட்டுள்ளதாயினும், அவருக்கு அந்தச் சிறுதவறுக்காகக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படலாம்.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும் 135 ஆம் பிரிவினால் தேவைப் படுத்தப்பட்டவாறு முறைப்பாடு எதுவும் செய்யப்பட்டிருக்காத போது, அப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறுக்காக ஒரு குற்றத்தீர்ப்பு வழங்குவதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

## எடுத்துக்காட்டுகள்

(அ) **அ** என்பவர், சுமைகாவி என்ற தன்மையில் அவரிடம் பொறுப்பிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்துக்காக, தண்டனைச் சட்டக்கோவையின் 390 ஆம் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்படுகின்றார். அவ்வாதனம் தொடர்பில் 389 ஆம் பிரிவின்கீழ் அவர் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம் புரிந்துள்ளாரெனவும், ஆனால், அவ்வாதனம் அவரிடம், சுமைகாவி என்ற தன்மையில் பொறுப்பிக்கப்பட வில்லையெனவும் தோன்றுகின்றது. அவர் 389 ஆம் பிரிவின் கீழ் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகத்துக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அ என்பவர், கடுங்காயம் விளைவித்ததற்காக, தண்ணைச்சட்டக்கோவையின் 316 ஆம் பிரிவின்கீழ்க் குற்றஞ்சாட்டப்படுகின்றார். பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டலின் காரணமாக அவ்வாறு செயற்பட்டாரென அவர் எண்பிக்கின்றார். அவர் அச்சட்டக்கோவையின் 326 ஆம் பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்படலாம்.

எத்தனித்தலுக்காகத் தனியாகக் குற்றஞ்சாட்டப்படாவிடினும், தவறொன்றைப் புரிய எத்தனித்தலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதல்.

**179.** ஆளொருவர் தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அவர் அத்தவறைப் புரிய எத்தனித்தாரென்றும், அத்துடன் அத்தகைய எத்தனத்தில் அத்தவறைப் புரியும் வகையில் ஒரு செயலைப் புரிந்தாரென்றும் எண்பிக்கப்பட்டுள்ளபோது அத்தவறைப் புரிதற்கான எத்தனம் ஒன்றின்பேரில் அவர் குற்றஞ்சாட்டப்படவில்லையாயினும், அத்தவறைப் புரிதற்கான எத்தனத்துக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படலாம்.

ஆயின், அத்தவறைப் புரிதற்கான ஓர் எத்தனம் இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் தண்டிக்கப்படற்பாலதாக்கப்பட்டாலொழிய இப்பிரிவிலுள்ள எதுவும், தவறொன்றைப் புரிதற்கான ஓர் எத்தனத்துக்காக ஆளெவருக்கும் குற்றத்தீர்ப்பளிப்பதற்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**180.** ஒருவருக்குக் கூடுதலான ஆட்கள் கூட்டாக, ஒரே தவறை அல்லது ஒரே செயற்கோவையிற் புரியப்பட்ட வெவ்வேறு தவறுகளைப் புரிந்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்படும் போது அல்லது ஓர் ஆள் ஏதேனும் தவறைப் புரிந்தமைக்காகவும், வேறொருவர் அத்தகைய தவறைப் புரிய உடந்தையாயிருந்தமைக்காகவும் அல்லது எத்தனித்தமைக்காகவும் குற்றஞ்சாட்டப்படும்போது, அவர்கள் ஒன்றாக அல்லது தனித்தனியாக, நீதிமன்றம் தக்கதெனக் கருதுகின்றவாறு, குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம் ; அத்துடன் இவ்வத்தியாயத்தின் முன்னைய பாகத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகள், அத்தகைய குற்றச்சாட்டுகள் எல்லாவற்றுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும். தவறொன்றைப் புரிதலில் சம்பந்தப்பட்ட எல்லா ஆட்களும், ஒன்றாகக் குற்றஞ்சாட்டப்படலாம்.

## எடுத்துக்காட்டுகள்

(அ) **அ** என்பவரும் **ஆ** என்பவரும் ஒரே கொள்ளைக்காகக் குற்றஞ்சாட்டப்படுகின்றார்கள். **அ** என்பவரும் **ஆ** என்பவரும் குற்றப்பகர்வு செய்யப்பட்டு ஒன்றாக விளங்கப்படலாம்.

(ஆ) **அ** என்பவரும் **ஆ** என்பவரும் கொள்ளையடித்தலுக்காகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர் ; அக்கொள்ளையடித்தலின் போது **அ** என்பவர் ஒரு கொலையைப் புரிகின்றார். அக்கொலையில் **ஆ** என்பவருக்கு எந்தத் தொடர்புமில்லை. கொள்ளையடித்தலுக்காக அவ்விருவரையும், கொலைக்காக **அ** என்பவரை மாத்திரமும் குற்றஞ்சாட்டி, **அ** என்பவரும் **ஆ** என்பவரும், குற்றப்பகர்வொன்றின் மீது ஒன்றாக விளங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) **அ** என்பவர், **ஆ** என்பவர், ஆகிய இருவரும் திருட்டுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் ; அதே செயற்கோவையின் போது **ஆ** என்பவரால் புரியப்பட்ட வேறு இரண்டு திருட்டுக்களுக்கும் அவர் குற்றஞ்சாட்டப்படுகின்றார். ஒரு திருட்டுக்காக அவ்விருவரையும், ஏனைய இரண்டு திருட்டுகளுக்குமாக **ஆ** என்பவரை மாத்திரமும் குற்றஞ்சாட்டும் குற்றஞ்சாட்டின்மீது **அ** என்பவர், **ஆ** என்பவர் இருவரும் ஒன்றாக விளங்கப்படலாம்.

(ஈ) **அ** என்பவரும் **ஆ** என்பவரும், கலகமொன்றில் எதிர்மாறான கோட்டிகளைச் சேர்ந்திருந்தார்கள் என்பதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுகின்றனர். அவர்கள் தனித்தனியாகக் குற்றப்பகர்வு செய்யப்பட்டு விளங்கப்படுதல் வேண்டும்.

(உ) **அ** என்பவரும், **ஆ** என்பவரும், ஒரே நடவடிக்கையில் பொய்ச்சான்று அளித்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுகின்றனர். அவர்கள் தனித்தனியாகக் குற்றப்பகர்வு செய்யப்பட்டு விளங்கப்படுதல் வேண்டும்.

ஒரு குற்றச்சாட்டின் மீது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, எஞ்சிய குற்றச் சாட்டுக்கள் மீளப்பெறப் படலாம்.

**181.** (1) ஒரே ஆளுக்கு எதிராக ஒன்றுக்குக் கூடுதலான குற்றச்சாட்டுக்கள் செய்யப்பட்டிருந்து அவற்றில் ஒன்றுக்கே அல்லது அதற்குக் கூடுதலானவற்றுக்கே அவர்மீது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளபோது வழக்குத்தொடுப்பை நடாத்தும் அலுவலகர், நீதிமன்றத்தின் சம்மதத்துடன், எஞ்சிய குற்றச்சாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களை மீளப்பெறலாம், அல்லது நீதிமன்றம் தானாகவே அத்தகைய குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணையை அல்லது விளக்கத்தை நிறுத்திவைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) குற்றத்தீர்ப்பானது தள்ளிவைக்கப்பட்டாலொழிய, அத்தகைய மீளப்பெறுதலானது, அத்தகைய குற்றச்சாட்டினின்றும் அல்லது குற்றச்சாட்டுக்களினின்றும் விடுதலை செய்யப்பட்டார் என்ற பயனையுடைத்தாகும். குற்றத்தீர்ப்பு தள்ளிவைக்கப்படும் விடயத்தில், சொல்லப்பட்ட நீதிமன்றமானது (குற்றத்தீர்ப்பைத் தள்ளிவைக்கும் நீதிமன்றக் கட்டளைக்கு அமைய) அங்ஙனம் மீளப்பெறப்பட்ட குற்றச்சாட்டின் மீதான அல்லது குற்றச்சாட்டுக்களின் மீதான விளக்கத்தைத் தொடர்ந்து நடாத்தலாம்.

## அத்தியாயம் XVII

### சுருக்கமுறையாக விளங்குவதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்குத் தத்துவம் இருக்கின்றவிடத்து வழக்குகளை விளங்குதல்.

**182.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுமிடத்து அல்லது தோன்றுமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் போதிய ஏது இருந்தால், நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகக் குற்றச்சாட்டொன்றை வகுத்தல் வேண்டும். வழக்கின் விவரங்கள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கூறப்படுதல் வேண்டும்.

(2) நீதிவான், அத்தகைய குற்றச்சாட்டைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டி, அவருக்கு எதிராக ஏன் குற்றத்தீர்ப்பளிக்கக் கூடாதெனக் காட்டுவதற்கு அவருக்குக் காரணமெதுவும் இருக்கின்றதாவென அவரிடம் கேட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப் பட்டவரினால் தவறு ஒப்புக் கொள்ளப் படுதல்.

**183.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர், அவருக்கு எதிராக ஏன் குற்றத்தீர்ப்பளிக்கப்படக் கூடாதெனக் காட்டுவதற்கு அவருக்குக் காரணமெதுவும் இருக்கின்றதாவெனக் கேட்கப்படுவதன்மேல் அவர் எத்தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அத்தவறுக்குத் தான் குற்றவாளியென வரைபாடில்லாக் குற்றவொப்புதலாக அமையும் கூற்றொன்றை அளிப்பின், அவரது கூற்றானது கூறிய மட்டும் அவர் பயன்படுத்திய சொற்களிலேயே பதியப்படுதல் வேண்டும் ; அத்துடன் நீதிவான் குற்றவாளியெனத் துணிபுரையொன்றைப் பதிந்து, சட்டத்திற்கிணங்க அவருக்குத் தண்டனைத்தீர்ப்பு வழங்கல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத்தீர்ப்பைப் பதிதலும் வேண்டும் :

ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர், நீதிவானின் அனுமதியுடன், அவர் மீது தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்படுவதன் முன்னர் எந்நேரத்திலும் தாம் குற்றவாளி என்ற மன்றுரையை மீளப்பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு அம்மன்றுரையை மீளப்பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவர்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்படவில்லையென்றாற் போன்று விளக்கத்தைத் தொடங்க நீதிவான் முற்படுதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய கூற்றை அளிக்காவிடின் அல்லது வரைபாடில்லாக் குற்றவொப்புதலாக அமையாத கூற்றொன்றை அளிப்பின், விளக்கத்திற்குத் தயாராக இருக்கின்றாராவென, நீதிவான் அவரைக்கேட்டல் வேண்டும் என்பதுடன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்திற்குத் தயாராகவிருக்கின்றாரெனப் பதிலளித்தால், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வழக்கை விளங்க முற்படுதல் வேண்டும், ஆனால்

(ஆ) சாட்சிக்காரர்கள் வருகை தராத காரணத்தினால் அல்லது வேறு காரணத்தினால் விளக்கத்துக்குத் தயாராகவில்லையெனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் பதிலளித்தால், நீதிவான் 263 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக அப்பொழுது நிருணயிக்கப்படற்பாலதான ஒரு நாளுக்கு வழக்கைப் பின்போடுதல் வேண்டும் அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் உடனடியாக வழக்கை விளங்க முற்படுதல் வேண்டும்.

ஆனால் இதனகத்து அடங்கியுள்ளதெதுவும், வழக்குத்தொடுநர் தரப்பிலான சான்றையும் எதிரி தரப்பில் சமூகமாக விருக்கக்கூடியவர்களான அத்தகைய சாட்சிக்காரர்களின் சான்றையும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் எடுப்பதிலிருந்தும், அதன் பின்னர் 263 ஆம் பிரிவினது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவரால் எழுத்தில் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக விளக்கத்தினை அவரால் நிருணயிக்கப்படற்பாலதான ஒரு நாளுக்கு ஒத்திவைப்பதிலிருந்தும், நீதிவானைத் தடை செய்தலாகாது.

**184.** (1) நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரை விளங்க முற்படும் பொழுது முறையே வழக்குத்தொடுநர் தரப்பிலும் எதிரி தரப்பிலும் அளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் எடுத்தல் வேண்டும். விளக்கத்துக்கான நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வழக்குத்தொடுநர் தரப்பில் அழைக்கப்பட்ட எல்லாச் சாட்சிக்காரர்களையும் நீதிவானினால் அழைக்கப்பட்டவர்களும் மீளவழைக்கப்பட்டவர்களுமான எல்லாச் சாட்சிக்காரர்களையும் குற்றஞ்சாட்டப்பட்டவர் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) முறைப்பாட்டாளரும் குற்றஞ்சாட்டப்பட்டவரும் அல்லது அவர்களது வழக்குரைப்பவர்களும் அவர்களது வழக்குகளை முறையே உரைக்கத் தொடங்குவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும் ; ஆனால் முறைப்பாட்டாளர் அல்லது அவரது வழக்குரைப்பவர், குற்றஞ் சாட்டப்பட்டவராலோ அல்லது அவர் சார்பாகவோ கொடுக்கப்பட்ட சான்றின்மீது விடை என்ற வகையில் அவதானிப்பெதையும் கூறுவதற்கு உரித்துடையவராதலாகாது.

துணிபுரை.

**185.** நீதிவான், வழக்குத்தொடுநரினதும் எதிரியினதும் சான்றையும், அவர் தமது சொந்தப் பிரேரணையின் பேரில் காண்பிக்கச் செய்யக்கூடிய அத்தகைய மேலதிக (சான்று ஏதேனுமிருப்பின்) சான்றையும் எடுத்த பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியல்லரெனக்காணின், விடுதலை செய்வதற்கான துணிபுரையொன்றை அவர் உடனடியாகப் பதிதல் வேண்டும். அவர் குற்றஞ்சாட்டப்பட்ட வரைக் குற்றவாளியாகக்காணின், குற்றவாளியெனத் துணிபுரையொன்றை அவர் உடனடியாகப் பதிந்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்குச் சட்டத்திற்கிணங்கத் தண்டனைத் தீர்ப்பு வழங்கல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத்தீர்ப்பைப் பதிதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**186.** இதனகத்து முன்னர் அடங்கியுள்ளது எதுவும், வழக்கின் எக்கட்டத்திலாயினும் குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிவான் விடுவிப்பதிலிருந்து அவரைத் தடைசெய்வதாகக் கருதப்படுதலாகாது, ஆனால் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவரை எப்போதேனும் விடுவிப்பதற்கு நீதிவானுக்குள்ள தத்துவம்.

ஆயின், நீதிவானானவர் வழக்கில் மேலும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்துதல் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் குற்றவாளியெனக் காணுவதற்கு இட்டுச் செல்லாது எனத் திருப்தியடைந்தால், (இதற்கான காரணங்களை அவர் பதிதல் வேண்டும்), அவர் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தல் வேண்டும்.

**187.** (1) குற்றச்சாட்டில் குறித்துரைக்கப்பட்ட தவறல்லாத தவறாக இருப்பதும் அந்த நீதிவான் விளங்குவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருப்பதும் ஆன ஒரு தவறை, குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்துள்ளாரென்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட அல்லது எண்பிக்கப்பட்ட நிகழ்வுகளிலிருந்து தோன்றினால், நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அத்தகைய தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு குற்றத்தீர்ப்பளிப்பதற்கு முன்னர், குற்றச்சாட்டொன்றை வகுத்து அதனைத் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்துக்காட்டி, விளக்குதல் வேண்டும் ; அத்துடன் மாற்றப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான XVI ஆம் அத்தியாயத்தின் அத்தகைய ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

நடவடிக்கைகளின் போது வித்தியாசமான தவறு வெளிக்காட்டப்பட்டால், என்ன செய்ய வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது எண்பிக்கப்பட்ட நிகழ்வுகளிலிருந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(அ) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிற் தரப்பட்டுள்ள தவறுகளின் நிரலுக்குள் அடங்கும் தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தோற்றினால், நீதிவான் அவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தலாகாது. ஆனால் இவ்வத்தியாயத்தின் கீழ் நடவடிக்கைகளை நிறுத்திவைத்துவிட்டு XV ஆம் அத்தியாயத்தின் கீழ் புதிதாக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தவறுகளின் நிரலுக்குள் அடங்காததும், அவரால் சுருக்கமுறையாக விளங்கப்பட முடியாததுமான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் தோன்றினால், நீதிவான் அவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தலாகாது; ஆனால் நடவடிக்கைகளை நிறுத்திவைத்துவிட்டு, அவ்வழக்குப் பற்றிச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிவித்து, அவரது அறிவுறுத்துரைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

முறைப்பாட்டாளர் சமூகமளியாவிடின் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படலாம்.

**188.** (1) பிரிவு 136 (1) (அ) என்பதன் கீழான முறைப்பாட்டின் மீது அழைப்புக்கட்டளை வழங்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர் தோன்றுவதற்கென நியமிக்கப்பட்ட அந்த நாளன்றும் அந்த நேரத்திலும் அல்லது விசாரணை எப்போதைக்கு ஒத்திவைக்கப்படக்கூடுமோ அப்போது, முறைப்பாட்டாளர் தோன்றாவிட்டால், நீதிவான் இதனகத்து முன்னர் உள்ள எது எப்படியிருப்பினும், (வழக்கின் விசாரணையை வேறு ஒரு நேரத்திற்கு அல்லது தேதிக்கு ஒத்திவைப்பது தக்கதென எக்காரணத்துக்காகவும் அவர் எண்ணினாலொழிய), குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தல் வேண்டும் என்பதோடு, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அரச செலவுத் தொகைகளை முறைப்பாட்டாளர் செலுத்த வேண்டுமெனக் கட்டளையொன்றையும் ஆக்கலாம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், முறைப்பாட்டாளர் நியாயமான காலத்துக்குள் தோன்றி, அவர் வருகைதராமை, சுகயீனத்தினால், விபத்தினால் அல்லது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு காரணத்தினால் நிகழ்ந்தது என நீதிவானைத் திருப்திப்படுத்தினால், அப்போது, நீதிவான், இவ்வுப்பிரிவின் கீழாக்கப்பட்ட கட்டளை எதனையும் நீக்குதல் வேண்டும்.

(2) விடயத்துக்கு ஏற்றவாறு, 136 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான அல்லது 136 (1) (இ) என்னும் பிரிவின் கீழான முறைபாட்டின் மேல் அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்டு, விளக்கத்துக்கு நிருணயிக்கப்பட்ட நாளன்று வழக்குத்தொடுப்புத் தரப்பினர் ஆயத்தமாக இல்லாவிடின், எக்காரணத்துக்காவும் வழக்கின் விசாரணையை வேறொரு நேரத்துக்கு அல்லது நாளுக்கு ஒத்திவைத்தல் பொருத்தமானதென நீதிவான் எண்ணினாலொழிய, நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடுவித்தற் கட்டளையானது, ஒன்றில் - §2, 15 இல 1989

(அ) அது தள்ளிவைக்கப்படாமலும் அத்துடன் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு அத்தகைய கட்டளையின் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படாமலுமிருக்குமிடத்து; அல்லது

(ஆ) வழக்கு முறைப்படி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அத்துடன் விடுவித்தற் கட்டளை இரண்டாம் முறையும் ஆக்கப்படுமிடத்து,

விடுதலைக் கட்டளையொன்றாகச் செயற்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், விடுவித்தற் கட்டளையைத் தள்ளிவைப்பதற்கான விண்ணப்பமொன்று நீதிவானொருவர் முன்னிலையில் அல்லது மீளாய்வில் வேறு நீதிமன்றம் முன்னிலையில் முடிவுறா திருக்குமிடத்து, விடுவித்தற் கட்டளையானது, ஓராண்டு காலப்பகுதியின் முடிவில், அதனைத் தள்ளிவைப்பதற்கான விண்ணப்பத்தை மறுக்கின்ற கட்டளையை நீதிவான் அல்லது அத்தகைய நீதிமன்றம் ஆக்கும் வரையில், விடுதலைக் கட்டளையொன்றாகச் செயற்படாதிருத்தல் வேண்டும்.

முறைப்பாட்டாளரினால் குற்றச்சாட்டு மீளப் பெறப்படுதல்.

**189.** இவ்வத்தியாயத்தின் கீழான வழக்கெதிலும் தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்னர் எப்போதேனும் முறைப்பாட்டாளர், குற்றச்சாட்டை மீளப்பெறுவதற்கு அவருக்கு அனுமதியளிப்பதற்குப் போதிய காரணங்கள் உள்ளனவென எப்போதேனும் நீதிவானைத் திருப்திப்படுத்தினால், நீதிவான் அதனை மீளப்பெறுவதற்கு அவருக்கு அனுமதியளிக்கலாமென்பதுடன், அதன் மேல், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தலும் வேண்டும் ; ஆனால் அவ்வாறு செய்வதற்கான காணங்களை அவர் பதிதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இதனகத்தடங்கியுள்ளதெதுவும் 266 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தவறுகளை இணக்கஞ்செய்வதனை அனுமதிப்பதற்கு நீதிவானுக்குள்ள தத்துவங்களை விரிவுபடுத்துவதாகக் கொள்ளுதலாகாது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் நீதிவானால் விடுவிக்கப்படலாம்.

**190.** நூற்றுமுப்பத்தாறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (இ), (ஈ) என்னும் பந்திகளின் கீழான முறைப்பாடொன்றின் மேலன்றி வேறுவகையாக இவ்வத்தியாயத்தின்கீழ் விளங்கப்படும் எவ்வழக்கிலும், நீதிவான், சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன் அங்கீகாரத்துடன், விடுதலை செய்தல் பற்றிய அல்லது குற்றத்தீர்ப்பளித்தல் பற்றிய தீர்ப்பெதனையும் எடுத்துமொழியாமல் எக்கட்டத்திலேனும் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாமென்பதுடன், அதன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டவரையும், விடுவிக்கலாம் ; ஆனால் இவ்வாறு செய்வதற்கான காரணங்களை நீதிவான் பதிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**191.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைவாக, சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றாடியார் தலைமையதிபதி, அரச சட்டவுரைஞர் அல்லது சட்டத்துறைத்தலைமையதிபதியால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்பவரொருவர் இவ்வத்தியாயத்தின் கீழ் விளங்கப்படும் வழக்கெதிலும் தோன்றி, வழக்குத்தொடுப்பை நடாத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியும், மன்றாடியார் தலைமையதிபும், அரச சட்டவுரைஞர் ஒருவரும் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய வழக்குரைப்பவரொருவரும் சமூகமாகவில்லாவிடின் அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், மாநகர சபையின் அல்லது நகரசபையின் அல்லது அல்லது பட்டினசபையின் அலுவலரெவரும் அத்தகைய முறைப்பாட்டாளர் அல்லது அரசாங்கத்திணைக்களம், மாநகர சபை அல்லது நகரசபை அல்லது பட்டினசபை அக்கறை கொண்டுள்ள வழக்கெதிலும் வழக்குத்தொடர்வதற்கு தாமாக அல்லது வழக்குரைப்பவர் மூலம் தோன்றலாம் :

இவ்வத்தியாயத்தின்கீழான வழக்குத் தொடுப்புகள் எவரினால் நடாத்தப் படலாம் என்பது.

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றாடியார் தலைமையதிபதி, அரச சட்டவுரைஞர் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பொதுவாகவோ சிறப்பாகவோ அதிகாரமளிக்கப்பட்டுள்ள வழக்குரைப்பவர் ஒருவர் இல்லாதபோது, முறைப்பாட்டாளருக்காகச் சட்டத்தரணியொருவர் தோன்றாதவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் எவ்வாளுக்கெதிராக தவறு புரிந்துள்ளார் என அல்லது எவ்வாள் தொடர்பில் தவறு புரிந்துள்ளார் எனச் சார்த்தப்படுகின்றதோ அவ் ஆளின் சார்பில் தோன்றுவதற்கும் வழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கும் என எவரேனும் சட்டத்தரணியை நீதிவான் அனுமதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) முறைப்பாடானது, 136 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் கோப்பிடப்பட்டதொன்றாக இருப்பின், சட்டத்துறைத்தலைமையதிபதியோ, மன்றாடியார் தலைமையதிபதியோ, அரச சட்டவுரைஞரோ, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சிறப்பாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்போரோ, அரச அலுவலரொருவரின் அல்லது அரச ஊழியரொருவரின் உத்தியோக முறையிலான கடமைகளை நிறைவேற்றுவதோடு சம்பந்தப்பட்ட அல்லது நிறைவேற்றுதல் பற்றிய ஒரு விடயம் தொடர்பில் அத்தகைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக அத்தகைய முறைப்பாடு கோப்பிடப்பட்டிருந்தாலொழிய, முறைப்பாட்டாளரின் அத்தகைய சம்மதமின்றி அவருக்காகத் தோன்றுவதற்கு உரித்துடையவராகார்.

குற்றஞ்சாட்டப் பட்டவர் சமூகமா யில்லா திருக்கும் போதும் விளக்கம் நடைபெறலாம்

**192.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(அ) தலைமறைவாக இருக்கின்றவிடத்து அல்லது தீவைவிட்டுச் சென்றுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) சுகவீனம் காரணமாக நீதிமன்றத்துக்கு வருகை தருவதற்கு அல்லது நீதிமன்றத்தில் தங்கியிருப்பதற்கு இயலாதவராக இருப்பதோடு ஒன்றில் அவர் சமூகமாகவில்லாமலே விளக்கமானது தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடாத்தப்படுவதற்குச் சம்மதமளித்ததுமோ அல்லது அவர் சமூகமாகவில்லாமலே விளக்கமானது அவருக்கு பங்கமெதுவும் ஏற்படாத முறையில் தொடங்கித் தொடரக் கூடியதாகவுமோ இருக்குமிடத்து ; அல்லது.

(இ) நீதிமன்றத்திலான அவரது நடத்தை காரணமாக, விளக்கம் தொடர்ந்து நடாத்தப்படுவதனை அவர் தடைசெய்கின்ற விடத்து அல்லது அதற்கு முட்டுக் கட்டையிடுமிடத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்வுகள் பற்றி நீதிவான் திருப்தியடைந்தால், அவர், குற்றஞ் சாட்டப்பட்டவர் சமூகமாகவில்லாதிருக்கும் போதும் விளக்கத்தைத் தொடங்கித் தொடர்ந்து நடாத்தலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் விளக்கம் நடைபெறும்போது அல்லது விளக்கம் முடிவடைந்த பின்னர் நியாயமான காலத்துக்குள்ளாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் நீதிமன்றத்தில் தோன்றி, விளக்கம் முழுவதன்போதும் அல்லது அதன் பாகத்தின் போது தாம் நீதிமன்றத்தில் சமூகமாகவில்லாதிருந்தது நல்லெண்ணத்துடனேயே என நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துமிடத்து,

அப்போது -

(அ) அவ்விளக்கம் முடிவடையாதுள்ளவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்வரை அவருக்கெதிராகச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றானது அவருக்கு வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றை அளித்த சாட்சிக்காரர்களைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு அவருக்கு வாய்ப்பளிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்விளக்கம் முடிவடைந்துள்ளவிடத்து, நீதிமன்றம், குற்றத்தீர்ப்பையும் தண்டனைத்தீர்ப்பு எதுவும் இருந்தால், அத்தண்டனைத்தீர்ப்பையும் தள்ளிவைத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் புதிதாக விளங்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்தில் சமூகமாகவில்லாதிருந்த போது அவருக்காக எதிர்வாதிடச் சட்டத்தரணியொருவர் இருந்திருப்பின், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XVIII

## மேல் நீதிமன்றத்தின் விளக்கங்கள்

### அ. - பொதுவானவை

மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கங்கள் எவரால் நடாத்தப்படுதல் வேண்டும் என்பது.

**193.** மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் ஒவ்வொன்றிலும் வழக்குத்தொடுப்பானது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது மன்றாடியார் தலைமையதிபதியினால் அல்லது ஓர் அரச சட்டவுரைஞரினால் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அதற்கெனப் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வழக்குரைப்பவரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

சட்டத்துறைத் தலைமை யதிபதி வழக்குத் தொடுப்பை மீளப்பெறலாம்.

**194.** (1) இச்சட்டக்கோவையின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தின் எக்கட்டத்திலும், துணிபுரை வழங்கப்படுவதன் முன்னர், சட்டத்துறைத் தலைமையதிபதி, அவர் தக்கதென எண்ணினால் குற்றப்பகர்வின்மீது அல்லது அதிலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டின்மீது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக மேற்கொண்டு வழக்குத்தொடுக்க மாட்டாரென நீதிமன்றத்துக்கு அறிவிக்கலாம் என்பதுடன், அதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக இருக்கக்கூடிய, விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய குற்றப்பகர்வின் அல்லது குற்றச்சாட்டின்மீதான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அவர் அதிலிருந்து விடுவிக்கப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின் கீழான அறிவித்தல் வாய்மொழி மூலமானதாக அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் கைப்பட எழுத்து மூலமானதாக இருக்கலாம்.

(3) துணிபுரை வழங்கப்படுவதற்கு முன்னர் எக் கட்டத்திலும், வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், தலைமைவகிக்கும் நீதிபதியின் சம்மதத்துடன், குற்றப் பகர்வை அல்லது அதிலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டை மீளப்பெறலாம் என்பதோடு அதன்மேல், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிராக இருக்கக்கூடிய, விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய குற்றப்பகர்வின் அல்லது குற்றச்சாட்டின் மீதான எல்லா நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அவர் அதிலிருந்து விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

குற்றப்பகர்வு கிடைக்கப் பெற்றதன் மேல், நீதிபதிக்குள்ள கடமை.

**195.** குற்றப்பகர்வு மேல் நீதிமன்றத்தில் கிடைக்கப் பெற்றதும், எந்த நீதிநிருவாக வலயத்தில் விளக்கம் நடாத்தப்படவுள்ளதோ அந்த நீதிநிருவாக வலயத்தில் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தின் அமர்வுகளில் தலைமைதாங்கும் மேல் நீதிமன்ற நீதிபதி -

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தன் முன்னர் தோன்றும்படி அல்லது கொணரப்படும்படி செய்வித்தல் வேண்டும் ;

(ஆ) அக்குற்றப்பகர்வின் பிரதியொன்று, அதன் பின்னிணைப்புகளோடு சேர்த்து அக்குற்றப்பகர்வின்மீது விளங்கப்படவுள்ளவர்களாகிய அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளக்கத்தேதி பற்றி அறிவித்தல் வேண்டும்;

(ஈ) நானூற்றுமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது விளக்கத்துக்கென நீதிமன்றத்தில் தோன்றுவதற்காக முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவரைப் பணித்தல் வேண்டும் அல்லது ஏதேனும் மறியற்சாலையின் கண்காணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்ட ஆணை மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் விளங்கப்படும்வரையில் அவர் தடுத்து வைக்கப்படுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும் ;

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் விரலடையாளத்தை எடுப்பித்து, விரலடையாளத்தைப் பரிசோதனை செய்து அதுபற்றிய அறிக்கையை வழக்குத்தொடுக்கும் அரசசட்டவுரைஞருக்கு அளிப்பதற்காக அதை, விரலடையாளப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் ;

§4. 11 இல. 1988 (உ.உ) குற்றப்பகர்வானது, யூரர் சபையினால் விளங்கப்படக்கூடிய, தவறொன்று தொடர்பானதால் குற்றஞ்சாட்டப்பட்டவர், யூரர் சபையொன்றினால் விளங்கப்படவேண்டுமென்று தெரிவு செய்கின்றாரா அல்லவா என்பதை அவரிடம் கேட்டல் வேண்டும்.

(ஊ) விளக்கம் யூரர்சபையினால் நடாத்தப்படவிருக்குமிடத்து, குற்றஞ் சாட்டப்பட்டவரை விளங்குவதற்கு எந்த யூரர்மார் குழாங்களிலிருந்து யூரர்சபையினர் எடுக்கப்படுதல் வேண்டுமோ அந்த யூரர்மார் குழாங்களைத் தெரிவு செய்யும்படி குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பணித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட தெரிவுக்கு அவர் பிணிக்கப்பட்டவராவார் என்றும், அத்தெரிவுக்கிணங்க அவர் விளங்கப்படலாம் என்றும் அவருக்கு அறிவித்தலும் வேண்டும் ;

(எ) சட்டத்தரணி ஒருவர் வேண்டுமா எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டதன்மேல் அவர் வேண்டும் என்று கூறுமிடத்து, அவருக்காக எதிர்வாதிடுவதற்கெனச் சட்டத்தரணி யொருவரைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. - யூரர்சபையில்லாது மேல் நீதிமன்ற நீதிபதியால் நடாத்தப்படும் விளக்கம்

## விளக்கத்தைத் தொடங்குதல்.

**196.** நீதிமன்றமானது, விளக்கத்தைத் தொடங்கத் தயாராகவிருக்கும் போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அதன் முன்னிலையில் தோன்றுதல் வேண்டும் அல்லது கொண்டுவரப்படுதல் வேண்டும் ; அத்துடன் குற்றப்பகர்வானது அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளியல்லரா என அவரிடம் கேட்கப்படுதலும் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிறுத்துதல்.

**197.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் - குற்றவாளி என்ற வாதமும் தண்டனைத் தீர்ப்பளித்தலும்

(அ) அவர் எந்தத் தவறுக்குக் குற்றப்பகர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தத் தவறுக்கு குற்றவாதுரை செய்வாராயின் ; அல்லது.

(ஆ) அந்தக் குற்றப்பகர்வின் மீது எந்தக் குறைவானவொரு தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படக்கூடுமோ அந்தக் குறைவானதொரு தவறுக்குக் குற்றவாளி என வாதுரை செய்து அத்துடன் நீதிமன்றமும் சட்டத்துறை தலைமையதிபதியும் அந்த வாதுரையை ஏற்றுக்கொள்ள விரும்பின், அத்துடன் அவரது வாதுரையை அவர் சரியாகப் புரிந்துள்ளாரென நீதிபதி திருப்தியுறும் விதத்தில் தோன்றுகின்றதாயின், அவ்வாதுரை குற்றப்பகர்வில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் மீது அவர் குற்றத்தீர்ப்பளிக்கவும்படலாம் : §7. 14 இல. 2005

ஆயின் எந்தத்தவறுக்கு அவ்வாறு வாதுரைக்கப்படுகின்றதோ அந்தக்குற்றப்பகர்வு கொலையொன்றாக இருக்குமிடத்து, நீதிபதி வாதுரையை ஏற்க மறுக்கலாம் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் குற்றவாளியல்ல என வாதுரைத்துள்ளார் என்றாற்போன்று அதே முறையில் விளக்கத்தைத் தொடர்ந்தும் நடத்தலாம்.

(2) நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கையில் அவ்வாள் அவ்வாறு வாதுரைத்தார் என்ற நிகழ்வை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றுரைக்க மறுத்தால் அல்லது குற்றவாளியல்ல ரெனமன்று ரைத்தால்.

**198.** குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றுரையளிக்காவிட்டால் அல்லது அவர் தாம் குற்றவாளியல்லரென மன்றுரையளித்தால், அவர் விளங்கப்படுதல் வேண்டும்.

சட்டவுரைஞர் வழக்கைத் தொடங்குதலும் சாட்சிக்காரர் களைக் கூப்பிடுதலும்.

**199.** (1) விளக்கமானது வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் அவரது வழக்கை நீதிமன்றத்துக்கு கூறுவதன் மூலம் தொடங்குதல் வேண்டும்.

(2) பின்னர் வழக்குத்தொடுநர் தரப்பிலான சாட்சிக்காரர்கள் விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றிருப்பின், அந்த விசாரணையின்போது பதியப்பட்டவையான, குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் யாவும், வழக்குத்தொடுநர் தரப்பிலான வழக்கு முடிவுறுத்தப்படுவதன் முன்னர் சான்றாக முன்னிலைப்படுத்தப்பட்டு வாசிக்கப்படுதல் வேண்டும்.

(4) நீதிநலன் அவ்வாறு தேவைப்படுத்தினால், வழக்குத்தொடுநர் தரப்பினால் அழைக்கப்படாதவர்களான சாட்சிக்காரர்கள் எவர்களையும் நீதிமன்றம் அழைத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். ஆனால் அத்தகைய சாட்சிக்காரர்கள் வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞராலும் குற்றஞ்சாட்டப்பட்டவராலும் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு அமைந்தவர்களாக்கப்படுதல் வேண்டும்.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவர், வழக்குத்தொடுநர் தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**200.** (1) வழக்குத்தொடுநர் தரப்பிலான வழக்கு முடிவடைந்ததும், நீதிபதியானவர் வழக்குத்தொடுநர் தரப்பிலான சான்றினை முற்றாக நம்பாவிட்டால் அல்லது அத்தகைய சான்றானது குற்றப்பகர்வில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டதான தவறு அல்லது அத்தகைய குற்றப்பகர்வின் மேல் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படக்கூடியதான வேறு ஏதேனும் தவறு புரியப்பட்டதனை நிலைநாட்டத்தவறிவிட்டதெனக் கருதினால், அவர் விடுதலைத் தீர்ப்பினைப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும் ; எவ்வாறாயினும் நீதிபதியானவர் விளக்கத்தைத் தொடர்வதற்கான ஏதுக்கள் இருக்கின்றனவெனக் கருதினால், குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர்வாதிடுமாறு கேட்கலாம். நீதிமன்றமானது எதிர்வாதம் இடுமாறு கேட்காமல் விடுதலை செய்யலாம் அல்லது எதிர்வாதம் இடுமாறு கேட்கலாம்.

(2) சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் தெரிவித்தால், வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றுகளைத் தொகுத்துரைக்கும் நோக்கத்துக்காக தமது வழக்குக்கு ஆதாரமாக இரண்டாம் முறையாகவும் நீதிமன்றத்தை விளித்து உரையாற்றலாம்.

**201.** (1) சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கு உண்டு என்று குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் தெரிவித்தால் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரின் வழக்குரைப்பவர், அவர் தரப்பிலான எதிர்வாதத்தினை எடுத்துக்கூறலாம் என்பதுடன், அவர் சாட்சிக்காரர்கள் எவர்களேனும் இருப்பின் அவர்களை விசாரணையும் செய்யலாம் ; அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அல்லது அவரது வழக்குரைப்பவர் அவரது வழக்கினைத் தொகுத்துரைக்கலாம். குற்றஞ்சாட்டப் பட்டவர் தமது எதிர்வாதத்தைக் கூறலாம்.

(2) சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின்மீது சான்றளிப்பதற்கென எதிரி தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்குவிசாரணை செய்ய வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் உரித்துடையவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குத்தொடுநர் எப்போது மறுதலிக்கும் சாட்சிக்காரர்களை அழைக்க உரித்துள்ளவரென்பது.

**202.** குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் சான்று எதுவும் முன்வைக்கப்படின், வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், நீதிபதியின் அனுமதியுடன், மறுதலிப்பதற்காக சாட்சிக்காரர்களை அழைக்கலாம்.

நீதிபதி தீர்ப்பை வழங்குதல் வேண்டும்.

**203.** வழக்குத்தொடுநர் தரப்பிலும் எதிர்வாதி தரப்பிலுமான வழக்குகள் முடிவடைந்ததும், நீதிபதி உடனடியாக அல்லது விளக்கம் முடிவடைந்து பத்து நாட்களுக்குள் விடுதலை செய்வதற்கான துணிபுரையொன்றை அல்லது குற்றத்தீர்ப்பளிக்கும் துணிபுரையொன்றை, அதற்கான காரணங்களுடன் பதிதல் வேண்டும் என்பதுடன், துணிபுரை குற்றத்தீர்ப்பளிப்பதற்காகவிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குச் சட்டத்துக்கு இணங்கத் தண்டனைத் தீர்ப்பளித்தல் வேண்டும்.

## இ. - யூர்சபையால் நடாத்தப்படும் விளக்கம் விளக்கத்தைத் தொடங்குதல்.

குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிறுத்துதல்.

**204.** நீதிமன்றமானது விளக்கத்தைத் தொடங்கத் தயாராகவிருக்கும்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் அதன் முன்னிலையில் தோன்றுதல் வேண்டும் அல்லது கொண்டுவரப்படுதல் வேண்டும். அத்துடன் குற்றப்பகர்வானது அவருக்கு வாசித்துக்காட்டப்பட்டு, விளங்கப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளியல்லரா என அவரிடம் கேட்கப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**205.** குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தத் தவறுக் குற்றப் பகர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தத் தவறுக்கு அல்லது அந்தக் குற்றப்பகர்வின் மீது எந்தக் குறைவானவொரு தவறுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்படக்கூடுமோ அந்தக் குறைவானவொரு தவறுக்குக் குற்றவாதுரை செய்வாராயின் 197 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

"குற்றவாதுரையையும் தண்டனைத் தீர்ப்பளித்தலையும் கையாளுகையில் 197 ஆம் பிரிவு ஏற்புடைத்தாதல்

§8. 14 இல. 2005

**206.** குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றுரையளிக்காவிட்டால் அல்லது அவர் தாம் குற்றவாளியல்லரென மன்றுரையளித்தால் அல்லது 205 ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தில் காட்டப்பட்ட சூழ்நிலைகளில் நீதிபதி மன்றுரையை ஏற்க மறுத்தால் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வழக்கை விளங்குவதற்கு யூரர்மார் தெரிந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

மன்றுரைக்க மறுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப் பட்டவர் குற்றவாளியல்லரெனமன்றுரையளிக்குமிடத்து அல்லது குறைந்த தவறொன்றுக்குக் குற்றவாளியென மன்றுரையளிக்க விரும்புமிடத்து.

**207.** குற்றஞ்சாட்டப்பட்டவர், தாம் குற்றவாளியல்லரென மன்றுரைத்து, ஆனால் அதே குற்றப்பகர்வின்மேல் அவர் எந்தக் குறைந்த தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்தக் குறைந்த தவறுக்குக் குற்றவாளியென மன்றுரையளிப்பதற்கு விரும்புவதாகக் கூறுமிடத்தும், அத்தகைய மன்றுரையை ஏற்பதற்கு வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் விரும்புமிடத்தும், நீதிபதி, அவ்வாறு செய்வதனால் நீதிநலன் திருப்திசெய்யப்படுமெனக்கருதினால், குற்றவாளியென்ற அத்தகைய மன்றுரையைப் பதிவுசெய்யும்படி கட்டளையிடலாம் என்பதுடன், அதற்கிணங்க அதன்பேரில் தீர்ப்பும் வழங்கலாம் ; அத்துடன், அதன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டவர், குற்றப்பகர்வில் இடப்பட்ட தவறிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விடுவிப்பு விடுதலையாக அமைதலும் வேண்டும்.

விசேட யூரர்சபை கட்டளை விட்டழைக்கப் படலாம்.

**208.** (1) வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், ஏதேனும் வழக்கை விளக்குவதற்கு விசேட யூர் சபையொன்றை அழைக்கும்படி தேவைப்படுத்தும் ஒரு கட்டளையை ஆக்குமாறு எந்த வலயத்துக்கான மேல் நீதிமன்றத்தில் விளக்கம் முடிவுறாதுள்ளதோ அந்த வலயத்துக்கான மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் ; அத்தகைய விண்ணப்பம் எந்த நீதிபதியின் முன்னர் பரிசீலனைக்கு வருகின்றதோ அந்த நீதிபதி, அத்தகைய விண்ணப்பமானது நீதியானதும் நியாயமானதுமெனக் கருதினால், அதற்கு இணங்கக் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய விண்ணப்பமானது, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது மன்றாடியார் தலைமையதிபதியினால் அல்லது அரச சட்டவுரைஞரினால் செய்யப்பட்டாற்றவிர, அது ஒரு சத்தியக்கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

## யூரர்சபையைத் தெரிந்தெடுத்தல்

யூரர்சபையின் எண்ணிக்கையும் துணிபுரைக்கான நிறைவெண்ணும்.

**209.** (1) யூர்சபையானது ஏழு ஆட்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(2) அளிக்கப்படும் துணிபுரையானது ஒருமனமானதாக அல்லது ஐந்தும் இரண்டும் என்ற பெரும்பான்மைக்குக் குறையாததாக இருந்தல் வேண்டும்.

யூரர்சபையை அமைத்தல்.

**210.** (1) நீதிமன்றம் வேறு வகையாகப் பணித்தாலன்றி, குற்றஞ்சாட்டப்பட்டவரால் தெரிவுசெய்யப்பட்ட குழாத்திலிருந்து யூர்சபை தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) யூரர்சபை குலுக்குச்சீட்டு முறையினால், குழாத்திலிருந்து தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு யூரரும் தெரிந்தெடுக்கப்படும் போது அவரது பெயர் கூப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் தோற்றமளிப்பதன்மேல் அத்தகைய யூரரினால் விளக்கப்படுவதனை குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆட்சேபிக்கின்றாரா எனப் பதிவாளரினால் அவர் கேட்கப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் அல்லது ஆட்கள் எல்லோரினதும் சார்பில், காரணங்கள் கூறப்படவேண்டாத இரண்டு ஆட்சேபனைகள் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(5) கட்டளைவிட்டழைக்கப்பட்டவர்களாயும், சேவை செய்வதற்கு அங்கே கையடைவில் உள்ளவர்களாயும் உள்ள யூரர்மார் எல்லோரின் பெயர்களும் கூப்பிட்டு முடியும்வரை, பெயர் கூப்பிடப்பட்ட எத்தனை யூரர்மாரரையும் கைகாவலாகக் காத்து நிற்கும்படி, நீதிபதி, வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் ஆலோசனை தெரிவிப்பதன் பேரில், கட்டளையிடலாம். தமது ஆட்சேபனைக்கான காரணங்களைச் சட்டவுரைஞர் கூறவேண்டியதில்லை.

(6) அத்தனை பெயர்களும் கூப்பிடப்பட்டும் யூரர்சபை அமைவுறாதுபோனால், அவ்வாறு கைகாவலாகக் காத்து நிற்கும்படி கட்டளையிடப்பட்டவர்களில் ஒவ்வொருவரது பெயரும் மீளவும் கூப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், 211 ஆம் பிரிவின்கீழ், ஆட்சேபனைக்கான காரணங்கள் எவையேனும் இருப்பின் அவற்றைக் கூறும்படி வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் கேட்கப்படுதலும் வேண்டும்.

(7) எதிர்ப்புத் தெரிவிக்கப்படாத யூரர்மார் போதிய எண்ணிக்கையளவில் அங்கே இருக்காவிடில், புதிய யூரர் குழாமொன்றைக் கட்டளைவிட்டழைப்பதை இயலச் செய்யும் வகையில் விளக்கமானது ஒத்திவைக்கப்படுதல் வேண்டும்.

ஆட்சேபனைக் கான காரணங்கள்.

**211.** யூரர் ஒருவருக்கு எதிராக, பின்வரும் காரணங்களுள் எதன் மீதும் நீதிமன்றம் திருப்தியடையும்படி தெரிவிக்கப்படும் ஆட்சேபனை எதுவும் அனுமதிக்கப்படுதல் வேண்டும் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) யூரரிடம் இருப்பதாக ஊகிக்கப்படும் அல்லது உண்மையாகவே அவரிடமுள்ள பக்கச் சார்பு ;

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்மூலம் அல்லது சட்டவலுவைக் கொண்டுள்ள ஏதேனும் விதிமூலம் தேவைப்படுத்தப்பட்ட தகைமையில் குறைபாடு இருத்தல் போன்ற அத்தகைய சொந்தக் காரணம் எதுவும் ;

(இ) பொலிசின் எவையேனும் கடமைகளை அவர் நிறை வேற்றுதல் அல்லது பொலிசுக் கடமைகள் எவையும் அவரிடம் பொறுப்பிக்கப்பட்டிருத்தல்.

(ஈ) நீதிபதியின் அபிப்பிராயப்படி, யூரர் சபையில் சேவை புரிவதற்கு அந்த யூரரைத்தகுதியற்றவராக்கும் தவறு எதற்கும் அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை ;

(உ) எந்த யூரர் குழாத்திலிருந்து யூரர்சபை அமைக்கப்படுகின்றதோ அந்த யூரர் குழாத்தின் மொழியைப் புரிந்துகொள்ளுவதற்கு அவர்க்குள்ள இயலாமை ;

(ஊ) நீதிபதியின் அபிப்பிராயப்படி, யூரராவதற்கு அவரைத் தோதற்றவராகச் செய்யும் வேறேதேனும் சூழ்நிலை.

**212.** (1) யூரர் ஒருவருக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் ஆட்சேபனை ஒவ்வொன்றும் நீதிபதியால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய முடிவானது பதியப்பட்டு இறுதியானதாதலும் வேண்டும். ஆட்சேபனை பற்றிய முடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆட்சேபனையானது அனுமதிக்கப்பட்டால், அத்தகைய யூரரின் இடம் இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட வேறு எவரேனும் யூரரைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

யூரர்சபை முகாரி.

**213.** (1) யூரர்மார் தெரிந்தெடுக்கப்பட்டதும், பதிவாளர் பின்வரும் சொற்களில் அவர்களை விளித்துக் கூறுதல் வேண்டும். "யூரர்சபைப் பெரியோரே, உங்கள் முகாரியைத் தெரிந்தெடுங்கள்" அதன்மேல் அவர்கள் அவ்வாறு செய்ய முற்படுதல் வேண்டும்.

(2) நீதிபதி நியாயமானதெனக் கருதும் அத்தகைய நேரத்துக்குள், யூரர்சபையின் பெரும்பான்மையோர், முகாரியொருவரை நியமிப்பதில் இணக்கம் காணாவிட்டால், முகாரியானவர் நீதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) முகாரியானவர் நியமிக்கப்பட்டதும் யூரர்மாருக்குச் சத்தியம் எடுத்தோதுவிக்கப்படுதல் வேண்டும் அல்லது அவர்களுக்கு உறுதியுரை எடுத்து மொழியப்படுதல் வேண்டும்.

முகாரியின் கடமைகள்.

**214.** முகாரியானவர், யூரர்சபையின் விவாதங்களில் தலைமை வகித்தலும், யூரர்சபைக்கு அல்லது யூரர்மாரில் எவருக்கும் தேவையான தகவல் எதனையும் நீதிபதியிடம் கேட்டுப்பெறுதலும், யூரர்சபையின் துணிபுரையை வழங்குதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**215.** யூர்சபை மூலம் ஒரு விளக்கம் நடைபெறும் போது, துணிபுரை வழங்குவதன் முன்னர் எந்நேரத்திலும், ஏதேனும் போதிய காரணத்துக்காகக், எவரேனும் யூரர் அங்கு முழுநேரமும் சமூகமளிக்காதவாறு தடைசெய்யப்பட்டால், அல்லது எவரேனும் யூரர் வராதிருந்து, அவர் சமூகமளித்தலைக் கட்டாயப்படுத்தல் சாத்தியமற்றதாக விருந்தால், அல்லது சான்று எந்த மொழியில் அளிக்கப்படுகின்றதோ அந்த மொழியை, அல்லது அத்தகைய சான்று பேச்சு மொழிபெயர்க்கப்படுகின்றவிடத்து, பேச்சு மொழிபெயர்க்கப்பட்ட அந்த மொழியைப் புரிந்துகொள்ளுவதற்கு எவரேனும் யூரர் இயலாதவராக இருக்கின்றார் எனத்தோன்றினால், நீதிபதி, ஒன்றில் புது யூரர் ஒருவரைச் சேர்க்கும்படி கட்டளையிடலாம், அல்லது அந்த யூரர் சபையைக் கலைத்துவிட்டுப் புதிய யூரர் சபை ஒன்றைத் தெரிந்தெடுக்கும்படி கட்டளையிடலாம்.

யூரர் வருகை தராது நின்று விடுதல் முதலிய சந்தப்பங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**216.** கைதியானவர், கைதிக்கூண்டில் தொடர்ந்திருப்பதற்கு இயலாதவராகும் போதிலெல்லாம் அத்துடன், நீதிபதியின் அபிப்பிராயப்படி நீதியின் நலன் அவ்வாறு தேவைப்படுத்தும் போதிலெல்லாம் நீதிபதி யூர்சபையைக் கலைக்கலாம்.

கைதி சுகவீனமாக வுள்ள விடயத்தில் யூரர்சபை கலைக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்குத்தொடுநரதும், எதிரியினதும் வழக்கு முடியும் வரை விளக்கம் நடத்தப்படும்.

பதிவாளர், குற்றப்பகர்வினை யூரர் சபைக்கு வாசித்துக் காட்டல்.

**217.** யூரர்சபையினர் சத்தியஞ்செய்து கொண்டதும், குற்றஞ் சாட்டப்பட்டவருக்குக் கேட்கக்கூடியதாக, பதிவாளர் யூரர்சபைக்குக் குற்றப்பகர்வை வாசித்துக் காட்டுதல் வேண்டும் ; அத்துடன் சான்றினை அவதானித்துக் கேட்டு அந்தச் சான்றின்படி, குற்றப்பகர்வில் அவருக்கு எதிராக இடப்பட்ட குற்றச்சாட்டுக்கு, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவற்றுள் எக்குற்றச்சாட்டுக்காகவாயினும் அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியா அல்லரா என்று அவர்கள் துணிபுரை கொண்டு தீர்மானித்தல் அவர்களின் கடமையாகுமென நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும்; அத்துடன், அப்பாவி என்ற ஊகம், எண்பித்தற்பொறுப்பு, அவ்வழக்குக்கு இயைபாகக்கூடிய அத்தகைய வேறு சட்டநெறிகள் என்பன தொடர்பில் அவர்களைச் சுருக்கமாக நெறிப்படுத்தலாம்.

வழக்குத் தொடுநர்பக்க வழக்கைத் தொடங்குதல்.

**218.** அதன் பின்னர் வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், குற்றச்சாட்டுக்குரிய தவறின் தன்மையையும், குற்றஞ்சாட்டப்படுபவர் குற்றவாளி என்பதை எந்தச் சான்றைக் கொண்டு எண்பிப்பதற்கு அவர் உத்தேசித்துள்ளாரோ அந்தச் சான்றையும், சுருக்கமாகக் கூறித் தமது வழக்கைத் தொடங்குதல் வேண்டும் ; அதன் பின்னர் அவர், தமது சாட்சிக்காரர்களை விசாரணைசெய்தல் வேண்டும் ; அச்சாட்சிக்காரர்கள் பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்குவிசாரணை செய்யப்படலாம்.

கைதியின் கூற்றுக்கள் முன்னிலைப் படுத்தப்படுதல் வேண்டும்.

**219.** நீதிவான் நீதிமன்றத்திலான விசாரணையின்போது பதிவு செய்யப்பட்டவையான குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்றுக்கள் எவையேனுமிருப்பின், அவையெல்லாம் வழக்குத்தொடுநர் தமது வழக்கை முடிக்கு முன்னர் முன்னிலைப்படுத்தப்பட்டு சான்றாக வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**220.** (1) வழக்குத்தொடுநர் பக்க வழக்கு முடிவடைந்ததும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தவறைப் புரிந்தார் என்பதற்குச் சான்றில்லையென்று நீதிபதி கருதினால், "குற்றவாளியல்ல" எனும் துணிபுரையை வழங்கும்படி யூரர்சபையை அவர் பணித்தல் வேண்டும். வழக்குத் தொடுநர் தரப்பிலான சாட்சிக் காரர் களை விசாரணை செய்த பின்னரான நடவடிக்கை முறை.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தவறைப் புரிந்தார் என்பதற்குச் சான்று உள்ளதென நீதிபதி கருதுமிடத்து, அவர் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரை அல்லது அவரது வழக்குரைப்பவரை நோக்கி அவர் சான்றை முன்வைக்கக் கருதுகின்றாரா எனக் கேட்டல் வேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர், சான்றை முன்வைக்கும் உள்நோக்கம் தமக்கில்லை என்று தெரிவித்தல், வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சான்றுகளைத் தொகுத்துரைக்கும் நோக்கத்துக்காக, தமது வழக்குக்கு ஆதாரமாக இரண்டாம் முறையாகவும் யூரர் சபையை விளித்து உரையாற்றலாம்.

**221.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர், அதன் பின்னர் தாம் ஆதாரமாக நம்புவதற்கு எண்ணியிருக்கும் நிகழ்வுகளை அல்லது சட்டத்தைக் கூறியும், வழக்குத்தொடுநர் தரப்பிலான சான்றுகள் மீது அவர் அவசியமானதெனக் கருதும் அத்தகைய விமர்சனக் கருத்துக்களைக் கூறியும், அவரது வழக்கைத் தொடங்கலாம். அதன்மேல், அவர் தமது சாட்சிக்காரர்களைக் கூப்பிட்டு, அவர்கள் சான்று அளித்ததன் பின்னர் தமது வழக்கைத் தொகுத்துரைக்கலாம். எதிர்வாதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது சான்று பகர்வதற்கு எதிரி தரப்பில் அழைக்கப்பட்ட சாட்சிக்காரர்கள் எல்லோரையும் குறுக்குவிசாரணை செய்வதற்கு வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர் உரித்துடையவராதல் வேண்டும்.

சாட்சிக்காரர் களை விசாரணை செய்வதற்கும் அவர்களைக் கட்டளைவிட்ட ழைப்பதற்கும் குற்றஞ்சாட்டப் பட்டவருக்குள்ள உரிமை.

**222.** குற்றஞ்சாட்டப்பட்டவரால் முன்னரே பெயர் குறிப்பிடப்படாத சாட்சிக்காரர் எவரும் வந்திருந்தால், அவரை விசாரணை செய்வதற்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரை அனுமதித்தல் வேண்டும்.

மறுதலித்த லுக்கான சாட்சிக்காரர்கள்.

**223.** வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞர், நீதிபதியின் அனுதியுடன் மறுதலிப்பதற்காகச் சாட்சிக்காரர்களை அழைக்கலாம்.

தவறு புரியப்பட்ட இடத்தை யூரர்சபை பார்வையிடுதல்.

**224.** (1) குற்றஞ்சாட்டப்பட்ட தவறானது புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்ற இடத்தை அல்லது விளக்கத்துக்கு முக்கியமான வேறேதேனும் செயல் நிகழ்ந்துள்ளதாகச் சார்த்தப்படுகின்ற வேறேதேனும் இடத்தை யூரர்சபை பார்வையிடுதல் வேண்டுமென நீதிபதி எண்ணுகின்றவிடத்து, அப்பொருள்பட அமைந்த கட்டளையை அவர் ஆக்குதல் வேண்டும் ; அத்துடன், நீதிபதியினால் நியமிக்கப்பட்ட ஓர் ஆளினால் யூரர் சபையினருக்குக் காட்டப்படவேண்டிய அத்தகைய இடத்திற்கு, நீதிமன்ற அலுவலரொருவரினது கவனிப்பின்கீழ் யூரர்சபையினர் ஒரு குழுவாக அழைத்துச் செல்லப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய அலுவலர், நீதிபதியின்து அனுமதியுடன் தவிர, யூரர்சபையின் உறுப்பினர் எவருடனேனும் பேசுவதற்கோ அல்லது ஏதேனும் தொடர்புகொள்ளுவதற்கோ வேறு ஆளெவரையேனும் அனுமதித்தலாகாது ; அத்துடன், நீதிமன்றம் வேறு வகையாகப் பணித்தாலொழிய, அவர்கள் பார்வையிட்டு முடிந்ததும், உடனடியாக, நீதிமன்றத்துக்குத் திருப்பியழைத்துச் செல்லப்படுதல் வேண்டும்.

**225.** இயைபான நிகழ்வு எதனையும் பற்றி யூரர் ஒருவர் தனிப்பட்ட முறையில் அறிந்திருப்பின், அவ்வாறு தாம் அறிந்திருக்கின்றார் என்பது பற்றி நீதிமன்றத்துக்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும் ; அதன்மேல், வேறெந்தச் சாட்சிக்காரரும் விசாரிக்கப்படுகின்ற அதேமுறையில் அவர் சத்தியம் எடுத்தோதுவிக்கப்பட்டு விசாரணை செய்யப்படலாம்.

யூரர் எப்போது விசாரணை செய்யப்படலாம் என்பது.

**226.** விளக்கமொன்று ஒத்திவைக்கப்பட்டால், விளக்கம் முடிவடையும் வரையிலும் ஒத்திவைக்கப்பட்ட அமர்விலும் அதற்குப் பின்னரான ஒவ்வோர் அமர்விலும் யூரர் சபையானது சமூகமளித்தல் வேண்டும்.

ஒத்திவைக்கப் பட்ட அமர்வில் யூரர் சபை சமூகமளித்தல் வேண்டும்.

**227.** (1) ஏதேனும் வழக்கில் நீதிபதியின் தொகுப்புரைக்கு முன்னரான ஏதேனும் ஒத்திவைப்பின்போது யூர்சபையினரை ஒன்றாக வைத்திருத்தல் அவசியமாதலாகாது ; ஆனால் ஏதேனும் விளக்கத்தில் ஏதேனும் ஒத்திவைப்பின்போது, யூர்சபையினர் ஒன்றாக வைத்திருக்கப்படுதல் நீதியின் நலனுக்கு உசிதமானதென அவருக்குத் தோன்றினால் -

யூர்சபையினரை எப்போது ஒன்றாக வைத்திருக்கலாம் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அவ்வொத்திவைபின்போது யூரர் சபையினர் ஒன்றாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தல் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் விளக்கத்தின்போது யூர்சபையினர் பிரிந்திருப்பதற்கு அனுமதிக்கப்படுமிடத்து, அவ்வாறு பிரிந்திருக்கும்போது விளக்கத்துக்குரிய விடயத்தின்மீது சகயூரருடன் அல்லாது வேறு எவரேனும் ஆளுடன் தொடர்பு கொள்ளுதலாகாதென யூரர்மாருக்கு முதற்கண் சத்தியம் எடுத்தோதுவிக்கப்படலாம் அல்லது உறுதியுரை செய்விக்கப்படலாம்.

(3) அத்தகைய எவரேனும் யூரர் சக யூரரல்லாத வேறெவரேனும் ஆளுடன் அத்தகைய தொடர்பு கொண்டால், அல்லது சக யூரர் அல்லாத வேறெவரேனும் ஆள் யூரரெவருடனும் அத்தகைய ஏதேனும் தொடர்பு கொண்டால், விடயத்துக்கு ஏற்றாற்போல, அத்தகைய யூரர், அல்லது ஆள், நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்கத் தண்டிக்கப்படற்குரியவராதலும் வேண்டும்.

நீதிபதி யூரருக்கான சிற்றுண்டிகளையும் பானங்களையும் அனுமதிக்கலாம்.

**228.** நீதிபதி தொகுப்புரையாற்றுவதற்கு முன்னரேனும் அல்லது பின்னரேனும், யூர்சபை ஒன்றாக வைத்திருக்கப்படக்கூடிய எந்நேரத்திலும் அவர் தகுந்ததெனக் கருதினால், யூர்சபையினருக்கு நியாயமான அளவு சிற்றுண்டிகள், பானங்கள் அரசின் செலவில் பதிவாளரினால் வழங்கப்படவேண்டுமென நீதிபதி கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கத்தை முடித்தல்

**229.** எதிரி பக்க வழக்குரைப்பும், வழக்குத்தொடுக்கும் சட்டவுரைஞரின் மறுமொழி ஏதேனும் இருப்பின் அதுவும் முடிவடைந்ததும், நீதிபதி, சான்றுகளைத் தொகுத்துரைப்பதன் மூலமும் யூர்சபையால் பின்பற்றப்பட வேண்டிய சட்டத்தை எடுத்துக் கூறுவதன் மூலமும் யூர்சபைக்கு அறிவுரை கூறுதல் வேண்டும். யூர்சபைக் கான அறிவுரை.

**230.** பின்வருவன நீதிபதியின் கடமையாதல் வேண்டும், அதாவது :- நீதிபதியின் கடமை.

(அ) விளக்கத்தின்போது எழுகின்ற சட்டப்பிரச்சினைகள் எல்லாவற்றினையும் அத்துடன் குறிப்பாக, எண்பிப்பதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளின் இயைபுடைமையையும் சான்றின் ஏல்தகவையும் பற்றிய அல்லது கட்சிக்காரர்களால் அல்லது அவர்கள் சார்பில் கேட்கப்படும் கேள்விகளின் நேர்மையைப் பற்றிய எல்லாப்பிரச்சனையையும் முடிவு செய்தலும், அவரது தற்றுணிபின் பேரில், ஏல்தகாச்சான்று காண்பிக்கப் படுவதை, கட்சிக்காரர்களால் ஆட்சேபிக்கப்படினுஞ்சரி அல்லது ஆட்சேபிக்கப்படாவிடினுஞ்சரி, தடுத்தலும் ;

(ஆ) விளக்கத்தில் சான்றாக அளிக்கப்பட்ட எல்லா ஆவணங்களின் கருத்துக்கள் பற்றியும் அவற்றைப் பொருளமைத்துக்கொள்ளல் பற்றியும் முடிவுசெய்தலும் ;

(இ) குறித்த விடயங்கள் பற்றிய சான்று அளிக்கப்படுதலை இயலச் செய்வதற்காக எந்த நிகழ்வுக் கருமங்களை எண்பித்தல் அவசியமாகக் கூடுமோ அந்த நிகழ்வுக் கருமங்கள் பற்றிய விடயங்கள் பற்றி முடிவு செய்தலும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) எழுகின்ற ஏதேனும் பிரச்சினை தமக்குரியதா அல்லது யூரர்சபைக்கு உரியதா என்பதுபற்றி முடிவு செய்தலும், நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

நிகழ்வுபற்றிய பிரச்சினை மீதுஅல்லது சட்டப்பிரச் சினையும் நிகழ்வுப் பிரச்சினையும் தொடர்புபட்ட பிரச்சினைமீது நீதிபதி கருத்துத் தெரிவிக்கலாம்.

**231.** நீதிபதி தமது தொகுப்புரையின் போது, நிகழ்வைப் பற்றிய ஏதேனும் பிரச்சினை மீது அல்லது நடவடிக்கைகளுக்கு இயைபானதும், சட்டப்பிரச்சினை, நிகழ்வுப் பிரச்சினை ஆகிய இரண்டும் பற்றியதுமான பிரச்சினைமீது, அவர் தகுந்ததெனக் கருதினால், யூரர்சபைக்குத் தமது கருத்தைத் தெரிவிக்கலாம்.

## எடுத்துக்காட்டுகள்.

(அ) வழக்கில் ஒரு சாட்சிக்காரராகவில்லாத ஆளொருவராற் செய்யப்பட்ட ஒரு கூற்றை, அத்தகைய கூற்றின் சான்றை ஏல்தகவினதாகச் செய்யும் சூழ்நிலைகள் எண்பிக்கப்பட்டன என்ற ஏதுவின்மீது எண்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அச்சூழ்நிலைகள் இருந்தன என்பது எண்பிக்கப்பட்டதா எண்பிக்கப்படவில்லையா என்பது பற்றி முடிவு செய்யவேண்டியது நீதிபதியேயன்றி, யூரர்சபை அல்ல.

(ஆ) எந்த ஆவணத்தின் மூலப்பிரதி தொலைந்துள்ளதென அல்லது அழிந்துள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ, அந்த ஆவணம் பற்றிய இரண்டாம் நிலைச் சான்றை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மூலப்பிரதி தொலைந்துள்ளதா அல்லது அழிந்துள்ளதா என முடிவுசெய்தல் நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

232. பின்வருவன யூரர்சபையின் கடமையாதல் வேண்டும். அதாவது:- யூரர் சபையின் கடமை.

(அ) நிகழ்வுகளைப் பற்றிய எந்தக் கருத்துக்கோணம் உண்மையானதென முடிவுசெய்தலும், அதன்பின்னர், நீதிபதியின் பணிப்புக்கு இணங்க அத்தகைய கருத்துக்கோணத்தின்படி அளிக்கப்படற்பாலதான துணிபுரையை அளித்தலும் ;

(ஆ) (சட்டம் தொடர்பான சிறப்புச் சொற்களைவிட) ஏனைய தொழினுட்பம் தொடர்பான சிறப்புச் சொற்கள் எல்லாவற்றினதும் பொருளையும், வழக்கிலுள்ள கருத்துக்கு புறம்பான கருத்தில் பயன்படுத்தப்பட்டனவும், அதுபற்றித் தீர்மானித்தல் அவசியமாகவுள்ளதுமான சொற்களின் பொருளையும் (அத்தகைய சொற்களை அவ்வாவணங்களில் காணப்பட்டாலும் சரி காணப்படாவிட்டாலும் சரி) தீர்மானித்தலும் ;

(இ) சட்டத்திற்கு இணங்க, நிகழ்வையொட்டிய பிரச்சினைகளெனக் கருதப்படற்பாலவையான எல்லாப் பிரச்சினைகளையும் முடிவுசெய்தலும் ;

(ஈ) திட்பமற்ற பொதுச் சொல்லமைப்புகள், அத்தகைய சொல்லமைப்புகள் சட்ட நடவடிக்கைமுறையைக் குறித்தாலன்றி, அல்லது அவற்றின் பொருள் சட்டத்தால் நிச்சயிக்கப்படுவதாயிருந்தாலன்றி (இவ்விரண்டு சந்தர்ப்பங்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவற்றின் பொருளை முடிவுசெய்தல் நீதிபதியின் கடமையாகும்) குறித்த விடயங்களுக்கு ஏற்புடையனவாகுமா அல்லவா என முடிவுசெய்தலும்,

யூரர்சபையின் கடமையாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்துக்காட்டுகள்.

(அ) **அ** என்பவர் **ஆ** என்பவரின் கொலைக்காக விளங்கப்படுகின்றார். கொலைக்கும் கொலையாகாத குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கலுக்கும் இடையிலான வேறுபாட்டை யூரர்சபைக்கு விளக்குதலும், நிகழ்வுகளின் எக்கருத்துக்கோணங்களிலிருந்து பார்த்து **அ** என்பவர் கொலைக்காக அல்லது கொலையாகாதக் குற்றத்துக்கிடமான மனித உயிர்போக்கலுக்காக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென அல்லது விடுதலைசெய்யப்படுதல் வேண்டுமெனக் கூறுதலும் நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

நிகழ்வுகளின் எந்தக் கருத்துக்கோணம் உண்மையானதென முடிவுசெய்து நீதிபதியின் நெறிப்படுத்தல் சரியாகவிருப்பினுஞ்சரி அல்லது பிழையாகவிருப்பினுஞ்சரி, அத்துடன் அவர்கள் அதற்கு உடன்பட்டாலுஞ்சரி அல்லது உடன்படாவிட்டாலும்சரி, அதற்கு இணங்கத்துணிபுரை அளித்தலும் யூரர்சபையின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) குறித்த ஒரு விடயம் பற்றி, - உதாரணமாக வேலையானது நியாயமான திறமையுடன் அல்லது முறையான விழிப்புக் கவனத்துடன் செய்யப்பட்டதா என்பதன்மீது - ஆளொருவர் நியாயமான நம்பிக்கை வைத்திருந்தாரா அல்லவா என்பது கேள்வி, இவற்றில் ஒவ்வொன்றும் யூரர்சபை முடிவுசெய்யவேண்டிய கேள்வியாகும்.

துணிபுரை பற்றி ஆய்வதற்கு யூரர்சபை ஒதுக்கிடத் திற்குச் செல்லலாம்.

**233.** (1) தொகுப்புரையின் பின்னர், யூரர்சபையினர், தங்கள் துணிபுரை பற்றி ஆய்வதற்காக ஒதுக்கிடத்திற்குச் செல்லலாம்.

(2) யூரர் சபையினர் ஒதுக்கிடத்திற்குச் சென்றால், அவர்கள் நீதிமன்ற அலுவலரொருவரின் பொறுப்பில் விடப்படுதல் வேண்டும் ; முதற்கண் அந்த அலுவலர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சத்தியஞ் செய்தல் அல்லது உறுதியுரை மொழிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நீதிபதியின் அனுமதியுடன் தவிர, யூர்சபை உறுப்பினர் ஒருவரைத் தவிர்ந்த வேறு ஆள் எவரும், அத்தகைய யூரர்சபையின் உறுப்பினர் எவருடனும் கதைத்தலோ தொடர்பு எதனையும் வைத்திருத்தலோ ஆகாது.

234. (1) யூர்சபையின் தங்கள் துணிபுரையை அளிப்பதற்கு ஆயத்தமாகி அவர்கள் எல்லோரும் சமூகமாகவிருக்கும் பொழுது அவர்கள் ஒரே மனதினராகவுள்ளனராவெனப் பதிவாளர் முகாரியைக் கேட்டல் வேண்டும். யூரர்சபை துணிபுரை அளிப்பதற்கு ஆயத்தமான போது.

(2) யூர்சபையினர் ஒரே மனதினராகவில்லாவிடில், மேலும் ஆய்வதற்காக ஒதுக்கிடத்திற்குச் செல்லும்படி நீதிபதி அவர்களைத் தேவைப்படுத்தலாம்.

(3) நீதிபதி நியாயமானதெனக் கருதும் வகையிலான அத்தகைய மேலதிக ஆய்வின் பின்னர், அல்லது முதலாவது முறையிலேயே முகாரியானவர், யூர்சபையினர் ஒரே மனதினராகவுள்ளனரெனக் கூறினால், அல்லது நீதிபதி அவர்களை ஒதுக்கிடத்திற்குச் செல்லும்படி தேவைப் படுத்தியிருக்காவிட்டால், (யூர்மார் எல்லோரும் சமூகமாக விருக்கையில்) "குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் (அவரது பெயரைக் குறிப்பிட்டு) அவருக்கு எதிராகச் சாட்டப்பட்டுள்ள தவறுக்கு (அது என்ன தவறு என்பதைத் குறிப்பிட்டு) குற்றவாளி எனத்தீர்மானிக்கின்றீர்களா அல்லது குற்றவாளியல்லவெனத் தீர்மானிக்கின்றீர்களா" எனப் பதிவாளர் கேட்டல் வேண்டும்.

(4) இதன்மேல், யூர்சபையின் துணிபுரை என்ன வென்பதை முகாரியானவர் கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குற்றச்சாட்டின் மீதும் துணிபுரை அளிக்கப்படல் வேண்டும்.

**235.** (1) நீதிபதியால் வேறுவகையாகக் கட்டளையிடப்பட்டாலன்றி, குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்தக் குற்றச்சாட்டுக்களின்மீது விளங்கப்படுகின்றாரோ அந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றின் மீதும் யூரர்சபை துணிபுரை அளித்தல் வேண்டும் ; அவர்களின் துணிபுரை என்னவென நிச்சயப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய கேள்விகளை நீதிபதி கேட்கலாம்.

(2) யூரர்சபையால் அளிக்கப்பட்ட துணிபுரையை நீதிபதி அங்கீகரிக்காவிட்டால், அவர்களது துணிபுரையை மீளாயுமாறு அவர்களை அவர் பணிக்கலாம் ; அத்தகைய மீளாய்வின் பின்னர் அளிக்கப்பட்ட துணிபுரையானது உண்மையான துணிபுரையெனக் கருதப்படுதல் வேண்டும்.

துணிபுரையைப் பதிதலும் அதற்குக் கையொப்பமிடுதலும்.

**236.** (1) பதிவாளர், குற்றப்பகர்வில் துணிபுரையைப் பதிவு செய்து, அதன் பின்னர், பின்வரும் சொற்களை, அல்லது அதே பயனைத் தருவனவான சொற்களை யூரர்சபைக்குக் கூறுதல் வேண்டும்.

'யூரர்சபைப் பெரியோரே! தங்கள் முகாரி துணிபுரையில் கையொப்பமிடுவதை, உற்றுக்கவனிக்கவும். அ. ஆ. என்னும் கைதியானவர் "குற்றவாளி" (அல்லது "குற்றவாளியல்லர்") என்பதே உங்களின் (அல்லது விடயத்திற்கேற்றவாறாக, உங்களில் இத்தனை பேரின்) துணிபு.

(2) அவ்வாறு பதியப்பட்ட துணிபுரையில் முகாரியானவர் கையொப்பமிடல் வேண்டும் ; அவ்வாறு பதியப்பட்டுக் கையொப்பமிடப்பட்டதும் (ஆனால் அதற்கு முன்பல்ல) துணிபுரை இறுதியானதாகவிருத்தல் வேண்டும்.

(3) தற்செயலாக அல்லது தவறுதலாகப் பிழையான துணிபுரையொன்று வழங்கப்பட்டால், அதிற் கையொப்பமிடமுன்னர் அல்லது உடனடியாக அதற்குப் பின்னர் அத்துணிபுரையை யூரர்சபை திருத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**237.** யூரர்சபையினர் அல்லது அவர்களில் தேவைப்பட்ட பெரும்பான்மையாளோர் உடன்பட முடியாவிட்டால் நீதிபதி, அவர் நியாயமெனக் கருதும் அத்தகைய நேரம் கழிந்த பின்னர், யூர்சபையினரைக் கலைத்தல் வேண்டும். யூரர்சபையினர் உடன்பட முடியாவிட்டால் அவர்களைக் கலைத்தல்.

**238.** குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால், சட்டத்துக்கு இணங்க, அவர்மீது நீதிபதி உடனடியாக அல்லது நியாயமான காலத்துக்குள் தீர்ப்பு வழங்கல் வேண்டும் : குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் சந்தருப்பத்தி லான தீர்ப்பு

ஆயின், நீதிபதிக்கு உசிதமெனத் தோன்றின் அவர் தீர்ப்பு வழங்குவதற்குப் பதிலாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிபதி பணிக்கக் கூடியவாறான அத்தகைய காலத்தின்போதும், கேட்கப்படுமிடத்தும் கேட்கப்படும் போதும் தோன்றித் தீர்ப்பைப் பெறுவதற்காகப் பிணைகாரரோடு அல்லது பிணைகாரரின்றி, முறியொன்றை எழுதி, நிறைவேற்றுவதன்மேல் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுதல் வேண்டுமெனவும், அதுவரையில் அவர் அமைதியைப் பேணி நன்னடத்தையோடிருத்தல் வேண்டும் எனவும் பணிக்கலாம்.

## ஈ. - யூரர் சபையைக்கலைத்த பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரை மீள விளங்குதல்

**239.** (1) யூரர்சபை கலைக்கப்படும் போதிலெல்லாம். நீதிபதி தகுதியானதெனக் கருதுகின்றவாறு 403 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு அல்லது பிணையின் மீது விடப்பட்டு வேறொரு யூரர்சபையால் விளங்கப்படுதல் வேண்டும். குற்றஞ்சாட்டப் பட்டவரை மீண்டும் விளங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின்கீழ், கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், ஏதேனும் மறியற்சாலையின் கண்காணிப்பாளரை விளித்து விடுக்கப்பட்ட ஆணைப்பத்திரத்தினால் அவ்வாறு தடுத்து வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 264 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய ஒவ்வோர் ஆணைப்பத்திரத்துக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## உ. - முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விடயங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை

முன்னர் குற்றத் தீர்ப்பளிக் கப்பட்டுள்ள விடயங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**240.** (1) ஏதேனும் தவறுக்காக முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் விளக்கமொன்றின் விடயத்தில், இதனகத்து முன்னர் இடப்பட்ட நடவடிக்கைமுறை பின்வருமாறு திரிபு படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர், எத்தவறுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளாரோ அத்தவறைப் புரிந்த குற்றவாளியென மன்றுரைத்தால், அல்லது அத்தவறுக்காக அவர்மீது குற்றத்தீர்ப்பளிக்கப்படின், அவருக்கு எதிராக முன்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பதை அவர் ஒப்புக் கொள்ளுகின்றாராவென அதன்மேல் அவர் கேட்கப்படல் வேண்டும்.

(ஆ) முன்னர் தமக்குக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதை ஒப்புக்கொள்ளின் நீதிபதி அதற்கிணங்க அவர்மீது தீர்ப்பளிக்கமுற்படலாம்; ஆனால், அவர்மீது முன்னர் அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டது என்பதை அவர் மறுத்தால், அல்லது அத்தகைய வினாவுக்கு விடை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற மறுத்தால், அல்லது விடை கூறாவிடில், விடயத்துக்கேற்றவாறு யூரர் சபை அல்லது நீதிபதி முன்னரளித்த அத்தகைய குற்றத்தீர்ப்புகள் சம்பந்தமாக விசாரித்தல் வேண்டும் ; அத்தகைய விடயத்தில், திரும்பவும் யூரர்சபையினர் சத்தியஞ்செய்து கொள்ள வேண்டியதில்லை.

(2) இப்பிரிவில் அடங்கியுள்ளது எதுவும் எவ்வாறிருப்பினும், இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் முன்னரளித்த குற்றத்தீர்ப்புப் பற்றிய நிகழ்வு இயைபுடைய தாகவிருப்பின், முன்னரளித்த குற்றத்தீர்ப்புப் பற்றிய சான்று பின்னரான தவறுக்கான விளக்கத்தில் அளிக்கப்படலாம்.

## (ஊ). - குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகமளிக்காத போது நடைபெறும் மேல் நீதிமன்ற விளக்கங்கள்.

**241.** (1) இச்சட்டக்கோவையில் முரணாக உள்ளவை எவை எவ்வாறிருப்பினும், யூரர்சபையுடனோ யூரர்சபை இன்றியோ எவரேனும் ஆளின் குற்றப்பகர்வின் மீதான விளக்கமானது, பின்வரும் விடயங்கள் தொடர்பில் நீதிபதி திருப்திப்பட்டால் அந்த ஆள் சமூகமாகவில்லாத போதும் தொடங்கித் தொடர்ந்து நடைபெறலாம். அதாவது :- குற்றஞ்சாட்டப் பட்டவர் சமூகமாகவில்லா திருக்கும் போதும் விளக்கம் நடாத்தப்படலாம்.

(அ) அத்தகைய ஆளுக்குக் குற்றப்பகர்வு சேர்பிக்கப் பட்டுள்ள தோன்றும், அத்துடன் -

(i) அவர் தலைமறைவாகவுள்ளாரெனவும் அல்லது தீவை விட்டு வெளியேறியுள்ளாரெனவும்; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) சுகவீனம் காரணமாக அவர் நீதிமன்றத்துக்கு வருகை தருவதற்கு அல்லது அங்கு இருப்பதற்கு இயலாத வராகவுள்ளாரெனவும், அவர் இல்லாதிருக்கும் போது விளக்கத்தைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடாத்துவதற்குச் சம்மதித்துள்ளார் எனவும் ; அல்லது,

(iii) அவர் சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்கு வருவதற்கு அல்லது நீதிமன்றத்தில் இருப்பதற்கு இயலாத வராயிருக்கின்றார் எனவும், நீதிபதியின் அபிப்பிராயப்படி அவர் இல்லாதிருக்கும் போது விளக்கத்தைத் தொடங்குவதனால் அல்லது தொடர்ந்து நடாத்துவதனால் அவருக்குப் பங்கமெதுவும் ஏற்படாது எனவும் ; அல்லது,

(iv) நீதிமன்றத்திலான அவரது நடத்தை காரணமாக விளக்கம் தொடர்ந்து நடாத்தப்படுவதனை அவர் தடைசெய்கின்றார் அல்லது அதற்கு முட்டுக்கட்டை இடுகின்றார் எனவும் ;

அல்லது

(ஆ) அத்தகைய ஆள் தலைமறைவாக இருக்கின்றார் எனவும் அல்லது அவர் தீவைவிட்டு வெளியேறியுள்ளார் எனவும், குற்றப்பகர்வை அவருக்குச் சேர்ப்பிக்க முடியாமல் போய்விட்டது எனவும்,

நீதிமன்றமானது திருப்திப்பட்டால் அவ்விளக்கம் தொடங்கப்பட்டுத் தொடரப்படலாம் அல்லது தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழ் விளக்கமொன்றைத் தொடங்குதல் அல்லது தொடர்ந்து நடாத்துதல், அத்தகைய விளக்கத்தில் சட்டத்தரணி யொருவரினால் எதிர்வாதம் செய்வதற்கு அத்தகைய ஆளுக்குள்ள உரிமையைப்பாதிப்பதாகவோ பங்கப்படுத்துவதாகவோ கருதப்படுதல் அல்லது பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் கீழ் அல்லது அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் விளக்கத்தின்போது அல்லது அவ்விளக்கம் முடிந்த பின்னர் அவர், நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, முழு விளக்கத்திற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு அவர் நீதிமன்றத்திற்கு வராதிருந்தது நல்லெண்ணத்துடனேயே என, அதனைத் திருப்திப்படுத்துமிடத்து, அப்பொழுது -

(அ) அவ்விளக்கம் முடிவுபெறாதுள்ளவிடத்து, குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்வரை அவருக்கெதிராகக் கொடுக்கப்பட்ட சான்று அவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு அத்தகைய சான்றைக்கொடுத்த சாட்சிக்காரர்களைக் குறுக்குவிசாரணை செய்வதற்கு அவருக்குச் சந்தருப்பம் அளிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அவ்விளக்கம் முடிவுபெற்றிருக்குமிடத்து, நீதிமன்றமானது குற்றத்தீர்ப்பையும் தண்டனைத்தீர்ப்பையும் (ஏதேனுமிருப்பின்) தள்ளிவைத்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் புதிதாக விளங்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்தின்போது இல்லாதிருந்த போது அவர் தரப்பில் எதிர்வாதமிட சட்டத்தரணியொருவர் தோன்றியிருப்பின், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

குற்றஞ்சாட்டப் பட்டவர் சமுகமாக இல்லாதிருக்கும் போதுவிளக்கம் நடாத்துதல் பற்றிய நடவடிக்கைமுறை.

**242.** குற்றஞ்சாட்டப்பட்டவர் சமுகமாகவில்லாதிருக்கும் போது மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் அத்தகைய விளக்கங்கள் கூடியவரை விளக்கங்கள் தொடர்பிலான இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, நடாத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XIX

### சாட்சிக்காரர்களினதும் யூரர்மாரினதும் செலவுகள் பற்றி

ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.
§2, 39 இல 1982

**243.** (1) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டோடு, பின்வருவன வற்றிற்கு ஏற்பாடுசெய்து ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) இலஞ்சச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கான, மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் எதனிலும் அல்லது அத்தகைய விளக்கம் எதற்கும் முதநிலையான விசாரணையில் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் எதனிலும் சான்றளிப்பதற்கென அழைக்கப்பட்டவரான எவரேனும் ஆளினால் வருகைதந்து சான்றளிப்பதில் கூறப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான செலவுகளைத் திரட்டு நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தலும், அத்துடன் அத்தகைய கொடுப்பனவுகள் எந்நிபந்தனைகள்மீது அனுமதிக்கப்படலாமோ அந் நிபந்தனைகளும் ;

(ஆ) மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கம் எதனிலும் யூரர்களாகச் சேவை புரிவதற்கெனக் கட்டளை விட்டழைக்கப்பட்ட ஆட்களின் செலவுகளை திரட்டு நிதியத்திலிருந்து கொடுத்தல் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அத்தகைய செலவுகளின் தொகைகளை நிச்சயித்தலும் அத்தொகைகளைச் செலுத்துதலும் எவ்வாட்களால் எம்மாதிரியாகச் செய்யப்படவேண்டுமோ அவ்வாட்களும் அம்மாதிரியும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரையில் அவ் உட்பிரிவில் தரப்பட்ட விடயங்கள் பற்றியனவும், நியமித்த தேதியன்று வலுவிலுள்ளனவுமான ஒழுங்குவிதிகள் தொடர்ந்தும் ஏற்புடையனவாகவும், வலுவிலுள்ளனவாகவும் இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் XX

### யூரர்கள் பற்றி

**244.** பிரிவுகள் 245, 246 என்பனவற்றில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, இருபத்தொரு வயதை அடைந்துள்ளவரும், கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி உட்பட, ஆறு பாடங்களில் சித்தியடைந்துள்ளவரும் மாதம் ஒன்றுக்கு முந்நூறு ரூபாவுக்குக் குறையாத வருமானம் பெறுபவருமான இலங்கையில் வசிக்கும் ஒவ்வோர் ஆளும், யூரராகச் சேவை புரிவதற்கு தகைமையுடையவராதலும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரியாகவுள்ள அல்லது அதற்குச் சமமான உயர்தொழிற்றகைமை கொண்டிருக்கும் அத்தகைய ஒவ்வோர் ஆளும், மேலதிகமாக, விசேட யூரர் ஒருராகச் சேவைபுரிவதற்குத் தகைமையுடையவராதலும் ஆளாதலும் வேண்டும்.

யூரராகச் சேவை புரிவதற்குள்ள பொறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரர்மாராகச் சேவை புரிய முடியாத ஆட்கள்.

**245.** பின்வரும் ஆட்கள் யூரர்களாகச் சேவைபுரிதலாகாது.-

(அ) இலங்கைக் குடியரசின் சனாதிபதி ;

(ஆ) வலுவிலுள்ள சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் ;

(இ) பாராளுமன்ற உறுப்பினர்கள் ;

(ஈ) வெளிநாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் ;

(உ) பாராளுமன்றத்தினதும், நீதிமன்றங்களினதும், நீதி அமைச்சினதும் அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும்;

(ஊ) இந்தச் சட்டக்கோவையின் கீழ் நியமிக்கப்பட்ட விசாரணையாளர்கள் ;

(எ) சட்டத்தரணிமார் ;

(ஏ) பொலிசு அலுவலர்களும் சுங்க அலுவலர்களும் ;

(ஐ) சமய குருமார்கள் ;

(ஒ) சட்டத்துறைத் தலைமையதிபதி, மறியற்சாலைகள் ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பாதுகாவற் சேவைகள் ஆணையாளர் ஆகியோரின் திணைக்களங்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) ஒருமாத காலத்திற்கு அல்லது அதற்கும் அதிகமான காலத்திற்கு மறியற்றண்டனை அனுபவித்த ஆட்கள் ;

(ஔ) யூரரின் கடமையை ஆற்றுவதற்குத் தகுதி யற்றவர்களாய் அவர்களை ஆக்கும் அத்தகைய உடல் வலுவின்மைக்கு அல்லது மனவலு வின்மைக்கு உள்ளான ஆட்கள், அல்லது அத்தகைய சமயக்கோட்பாடுகளைப் பின்பற்றும் ஆட்கள்.

246. பின்வரும் ஆட்கள், அவர்களது சொந்தச் சம்மதத்துடன் தவிர, யூரர்களாகச் சேவைபுரிதலாகாது:- அவர்களது சொந்தச் சம்மதத் துடன்தவிர யூரர்சபை களாகச் சேவை புரியமுடியாத ஆட்கள்.

(அ) இலங்கைத் தரைப்படையில், கடற்படையில் அல்லது வான்படையில் முழுச் சம்பளத்துடன் கூடிய சேவையிலோ தீவிர சேவையிலோ ஈடுபட்டிருக்கும் ஆட்கள் ;

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் மருத்துவத் தொழிலர்களாகப் பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் ;

(இ) ஔடதங்கள் தயாரித்தளிப்பவரென முறையாகத் தகைமை பெற்று, உண்மையில் அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் ஆட்கள் ;

(ஈ) பிறப்பு, இறப்புப் பதிவாளர்களும் பிரதிப் பதிவாளர்களும் ;

(உ) அறுபது வயதிற்கு மேற்பட்ட வயதுள்ள ஆட்கள் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூர்சபையின் சேவை புரிதலின்று விலக்களித்தலும் மன்னிப்பளித்தலும்.

**247.** (1) யூரர் சபையில் சேவைபுரிவதற்கு அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்டுள்ள எவரேனும் ஆள், எத்தேதிக்கென அவருக்கு அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டதோ அத்தேதிக்கு முன்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் யூரராக அவர் சேவைபுரிந்திருந்தால், அச்சேவையிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின்

(அ) அத்தகைய ஆளை வருமாறுகூறும் அழைப்புக்கட்டளையை அவ்வாள் பெற்ற உடனே விலக்களிப்புக்கான கோரிக்கையானது, பதிவாளருக்கென முகவரியிடப்பட்ட கடிதம் மூலமாகச் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) யூரர்மார் குழாத்தை மட்டுக்குமிஞ்சிக் குறைக்காமல் விலக்களிப்பு அனுமதிக்கப்படலாம் என நீதிமன்றம் அபிப்பிராயப்படுதல் வேண்டும்

(2) ஏதேனும் நிரலில் அவரது பெயர் சேர்க்கப்பட்ட ஆள் எவரும், குறித்த ஒரு காலப்பகுதிக்கு யூரராக வந்திருத்தலினின்று தம்மை மன்னிக்கும்படி கேட்டும், விண்ணப்பம் செய்யப்படுவதற்கான காரணங்களைக் கூறியும், எழுத்துமூலம் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம் ; நீதிபதி, அதன்மீது, அவர் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) நீதிபதி, நியாயமான காரணத்திற்காக, எவரேனும் யூரரை ஒன்றில் நிபந்தனையின்றி அல்லது நீதிபதியால் நிர்ணயிக்கப்படற்பாலதான வேறேதேனும் நாளன்று அல்லது நேரத்தில் அவர் சேவை புரிதல் வேண்டும் என்னும் நிபந்தனையின்மீது, குறித்த ஏதேனும் நாளன்று அல்லது எவையேனும் நாட்களில் அல்லது ஏதேனும் நாளின் குறித்த ஏதேனும் நாளின் குறித்த ஏதேனும் நேரத்தில் வந்திருப்பதினின்றும் மன்னிப்பளிக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**248.** (1) ஒவ்வோர் அரசாங்க அதிபரும், தமது ஆதிக்க எல்லைக்குள்ளான நீதிநிர்வாக வலயம் ஒவ்வொன்று தொடர்பிலும் யூரர்மாராகச் செயற்படுவதற்குத் தகைமை யுடையவர்களும் ஆளானவர்களுமான ஆட்களின் நிரலை, அவர்களின் முழுப்பெயர்கள், செய்தொழில்கள், வதிவிடங்கள் ஆகியவற்றைக் காட்டும் வகையில், தயாரித்துப் பேணல் வேண்டும். அத்தகைய நிரல்களைத் தயாரிக்கும் அல்லது பேணும் நோக்கத்திற்காக, அரசாங்க அதிபரினால் அவ்வாறு செய்யும்படி கோரப்படும்போது ஏதேனும் தகவலைக் கொடுக்க மறுக்கும் அல்லது அசட்டை செய்யும் அல்லது பொய்யான தகவலை வேண்டுமென்றே கொடுக்கும் எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூற்று ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

யூரர்மாராகச் சேவைபுரி வதற்கு உரிய ஆட்களின் நிரல்களைத் தயாரித்தல்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதி நிர்வாக வலயங்களின் நிரல்களை ஒன்று சேர்க்குமாறு பணிப்பதற்கு அமைச்சர் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஆண்டின் யூலை மாதத்திலும், அரசாங்க அதிபர் மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு நிரல்களை அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நிரலிலிருந்தும் யூரர்மார் குழாங்கள் தயாரிக்கப் படல்.

**249.** (1) நீதிமன்ற விதிகளால் விதித்துரைக்கப்பட்ட வேண்டியவாறான அத்தகைய நடவடிக்கை முறைக்கு இணங்க, அத்தகைய யூரர்கள் வருகைதர எதிர்பார்க்கப்படும் அமர்வுகளில் தலைமைதாங்கவென நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஒவ்வொருவராலும் அமர்வுகள் தொடங்குவதற்கு இருவாரங்களுக்கு முன்னரும் அதன்பின்னர் காலத்திற்குக்காலமும், யூரர்மார் குழாங்களின் நிரல்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழ் விதிகள் விதித்துரைக்கப்படும் வரையில் நடவடிக்கைமுறை தொடர்பில் நியமித்த தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று வலுவிலுள்ள விதிகள், தொடர்ந்தும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், வணிகத்தாபனம், அல்லது தொழிற் தாபனம் அல்லது பெருந்தோட்டம் அல்லது தோட்டம் எதையேனும் சேர்ந்தவர்களில் அல்லது அதில் தொழிலுக்கமர்த்தப் பட்டவர்களில் ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களை, தவிர்க்க முடியாதிருந்தாலன்றி, ஒரே குழாத்தில் சேர்த்தலாகாது.

யூரர்மாருக்கு அழைப்புக் கட்டளை விடுத்தல்.

**250.** (1) யூரர் ஒருவருக்கான அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும், அவரது வருகை தேவைப்படுகின்ற நாளுக்கு ஆகக்குறைந்தது பத்து நாட்களுக்கு முன்னராவது அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது பிசுக்காலினால் அல்லது பதிவு அஞ்சல் மூலம், அல்லது நீதிபதி பணிக்கக்கூடிய அத்தகைய வேறுமுறையில் சேர்ப்பிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய யூரர் குறித்த ஒரு நாளன்று வருதல் அவசியமில்லையென்றும், ஆனால் எந்த நாளன்றுவருமாறு அவருக்கு விசேட அறிவித்தல் கிடைக்கக்கூடுமோ அந்த ஏதேனும் நாளன்று வந்திருந்தற்கு அவர் தயாராயிருத்தல் வேண்டுமென்றும், அழைப்புக்கட்டளையானது கூறலாம்.

**251.** ஒரு யூரர் யூரராக ஈடுபட்டிருக்கும் ஒரு விளக்கமானது இரண்டு வாரங்களின் முடிவில் முடிவுறாதிருந்தாலன்றி, இரண்டு கிழமைகளுக்கு மேற்படச் சேவைபுரியும்படி அவர் கட்டாயப்படுத்தப்படலாகாது. அத்தகைய சந்தர்ப்பத்தில், அவ்விளக்கம் முடிவடையும்வரை மாத்திரமே அவர் கட்டாயப்படுத்தப்படலாம். பதினான்கு நாட்களுக்கு மேல் சேவை புரிதல் வேண்டுமென்ற பிணிப்பு யூரர்மாருக் கில்லை.

**252.** (1) யூரராகச் சேவைபுரிவதற்கு வந்திருக்கும்படி அழைப்புக்கட்டளை விடுக்கப்பட்டவரும், சட்டப்படியான காரணமின்றிச் சமுகமளிக்கத் தவறுபவரும், அல்லது வந்திருந்தும் நீதிமன்றத்திலான அனுமதியைப் பெற்றிராது விட்டுச் செல்பவரும் அல்லது வந்திருக்கும்படி கட்டளையிடப்பட்டதன் மேல் நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் வந்திருக்கத் தவறுபவருமான எவரேனும் ஆள், நீதிபதி, தமது கட்டளை மூலம் தகுந்ததெனக் கருதும் விதமான அத்தகைய குற்றப்பணத்திற்கும், அத்தகைய குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறின், அந்தக் குற்றப்பணமானது செலுத்தப்படும் வரையில் மறியத் தண்டனைக்கும் ஆளாதல் வேண்டும் : அனுமதி யின்றி வாராதிருக்கும் யூரர் குற்றப்பண இறுப்பதற்கு ஆளாவார்.

ஆயின், நீதிபதி, அவர் தகுதியெனக் கருதினால் அவ்வாறு விதிக்கப்பட்ட குற்றப்பணம் எதனையேனும் குறைத்தல் சட்டமுறையானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) எவரேனும் ஆள் சமுகமாயிராதபோது அவ்வாறு குற்றப்பணம் விதிக்கப்பட்டால், அந்தக் குற்றப்பணத்தைச் செலுத்தும்படி, அல்லது அதை ஏன் செலுத்தவில்லை என்பதற்கு எழுநாட்களுக்குள் நீதிமன்ற முன்னிலையில் காரணம் காட்டும்படி அவரைத் தேவைப்படுத்தி, எழுத்திலான ஓர் அறிவித்தலை அவருக்குப் பதிவாளர் உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

யூரர்மார் நிரலில் அல்லது குழாத்திலுள்ள குறைபாடு அல்லது பிழைகாரணமாக நடவடிக்கை எதுவேனும் செல்லுபடியற்ற தாகாமை.

**253.** மேல் நீதிமன்றத்தாலான அல்லது மேல் நீதிமன்றத்தினது அல்லது மேல் நீதிமன்றத்திலான அல்லது மேல் நீதிமன்றத்தின் முன்னிலையிலான தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு, கட்டளை துணிபுரை அல்லது வேறு நடவடிக்கை எதுவும், அல்லது அதைப்பின்பற்றிச் செய்யப்பட்ட வேறு எதுவும், எவரேனும் யூரரின் தகைமையில் அல்லது அதன் தொடர்பில் ஏதேனும் குறைபாடு அல்லது பிழை இருந்தமை காரணமாக செல்லுபடியற்றதென அல்லது சட்டமுறையற்றதெனக் கொள்ளப்படுதல் ஆகாது. அல்லது எவ்வகையிலேனும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

விசேட யூரர் குழாம்.

**254.** விசேட யூரர்சபையொன்றைக் கட்டளை விட்டழைக்குமாறு தேவைப்படுத்தி கட்டளையொன்று ஆக்கப்படும் போதெல்லாம், விசேட யூரர்மார் அடங்கிய நிரலிலிருந்து, அக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினர் அடங்கியகுழாம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதன்மேல், பதிவாளர், அத்தகைய குழாத்திலுள்ள ஆட்களைக் கட்டளை விட்டழைத்தலும் வேண்டும் ; அத்துடன், இவ்வத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அவை ஏற்புடைத்தாகக் கூடிய அளவுக்கு அத்தகைய குழாத்தினைத் தயாரித்தல் தொடர்பாகவும் அக்கட்டளையைச் சேர்ப்பித்தல் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXI

## விசாரணைகளும் விளக்கங்களும் தொடர்பான பொது ஏற்பாடுகள்

சாட்சிக்காரர்கள் வருகையைக் கட்டாயப்படுத்துவதற்குள்ள தத்துவம்.

**255.** (1) நீதிவான் நீதிமன்ற விசாரணை அல்லது விளக்கம் எதனதும் நோக்கத்திற்காக, வழக்குத்தொடுநர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், சாட்சிக்காரர் எவரேனும் வருகை தருவதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு அவரைக் கட்டாயப்படுத்துவதற்கென மன்றாணை வழங்குமாறு நீதிவானுக்கு விண்ணப்பித்தால், நீதிவான், அவரால் பதிவுசெய்துகொள்ளப்படவேண்டிய அத்தகைய காரணகளுக்காக அவ்வாறுசெய்தல் அவசியமற்றதென அவர் கருதினாலன்றி, அத்தகைய மன்றாணையினை அவர் விடுத்தல் வேண்டும்.

(2) அலைக்கழிக்கும் அல்லது தாமதம் ஏற்படுத்தும் அல்லது நீதிநிலை நாட்டப்படுதலை முறியடிக்கும் நோக்கத்துக்காகவே, எவரேனும் சாட்சிக்காரர் வருவதனைக் கட்டாயப்படுத்துவதற்கான மன்றாணைக்கு விண்ணப்பிக்கப்படுகின்றதென நீதிவான் சந்தேகித்தால், அவர், அத்தகைய சாட்சிக்காரரின் சான்றானது முக்கியமானதென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என அவரைத் திருப்திப்படுத்தும்படி விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன், அவர் அவ்வாறு திருப்திப்படாவிட்டால் (அத்தகைய மறுப்புக்கான காரணங்களைப் பதிவு செய்துகொண்டு சாட்சிக்காரரைக்கட்டளைவிட்டழைப்பதற்கு மறுக்கலாம் அல்லது சாட்சிக்காரரைக் கட்டளை விட்டழைக்கு முன்னர் அத்தகைய சாட்சிக்காரரை வரும்படி செய்வதற்காக ஏற்படும் செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு அவசியமானதென அவர் கருதும் அத்தகைய பணத்தொகையினை வைப்பிலிடுமாறு தேவைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றத்துணை யாளிக்கு மன்னிப்பு வழங்கல்.

**256.** (1) மேல் நீதிமன்றத்தினால் மட்டுமே விளங்கப்படற்பாலதான தவறு எதனதும் விடயத்தில், அவ்வாறு செய்வதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதியின் அதிகாரத்தைப் பெற்றபின்னர் நீதிவான், அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியே, விசாரணைசெய்யப்படும் தவறில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ளவராக அல்லது அதனோடு உடன் கையாகத் தொடர்புடையவராக உள்ளாரெனக் கருதப்படும் எவரேனும் ஆளின் சான்றைப் பெறும் நோக்கத்துடன், அந்த ஆள், அத்தகைய தவறு தொடர்பாகவும் அதனைப் புரிவதில் முதல்வராக அல்லது உடந்தையாளராகத் தொடர்புள்ள வேறு ஆட்கள் ஒவ்வொருவர் தொடர்பாகவும் அவர் அறிந்தவரையிலுள்ள பூரண சந்தர்ப்பங்கள் பற்றியும் முற்றானதும் உண்மையானதுமான வெளிப்படுத்துகையைச் செய்வார் என்ற நிபந்தனையின்பேரில், அத்தகைய ஆளுக்கு மன்னிப்பு வழங்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும் ஆள் ஒவ்வொருவரும், வழக்கில் ஒரு சாட்சிக்காரராக விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய ஆள் பிணையில் விடப்படாதிருந்தால், விளக்கம் முடிவடையும்வரையில் கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**257.** சட்டத்துறைத் தலைமையதிபதியானவர், வழக்கைப் பாரப்படுத்தியதன் பின்னர் ஆனால் தீர்ப்பு எடுத்துமொழியப்படுவதன் முன்னர் எக்கட்டத்திலும், ஏதேனும் அத்தகைய தவறுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சம்பந்தப்பட்டுள்ளவர் என அல்லது உடன் கையாகத் தொடர்புபட்டவரெனக் கருதப்படுபவரான ஆள் எவரினதும் சான்றை விளக்கத்தின் போது பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அதே நிபந்தனையின் மீது அத்தகைய ஆளுக்கு மன்னிப்பினை வழங்கலாம் அல்லது மன்னிப்பிணை வழங்குமாறு நீதிவானுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

மன்னிப்பு வழங்குமாறு நீதிவானைப் பணிப்பதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

**258.** இறுதியாக முற்போந்த இரு பிரிவுகளுள் எதன்கீழாவது மன்னிப்பு அளிக்கப்படுமிடத்தும், அத்தகைய மன்னிப்பை ஏற்றுக்கொண்ட ஆள், முக்கியமான எதனையும் வேண்டுமென்றே மறைப்பதன்மூலம் அல்லது பொய்யான சான்றினை அளிப்பதன் மூலம் மன்னிப்பானது எந்நிபந்தனையின்மேல் வழங்கப்பட்டதோ அந்நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்தும், எந்தத்தவறு தொடர்பில் அவ்வாறு மன்னிப்பானது வழங்கப்பட்டதோ அந்தத்தவறு தொடர்பில் அல்லது அதே விடயம் தொடர்பாக அவர் வேறு எந்தத் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ளாரெனத் தோன்றுகின்றதோ அந்தத் தவறு தொடர்பில் அவர் விளங்கப்படலாம்.

மன்னிப்பானது எந்நிபந்தனையின் மீது வழங்கப்பட்டதோ அந் நிபந்தனைக்கு இணங்கி ஒழுகாமை.

**259.** (1) மன்னிப்பு வழங்கலை ஏற்றுக்கொண்டவரான ஆள் ஒருவரினால் அளிக்கப்பட்ட கூற்றானது, 258. ஆம் பிரிவில் கூறப்பட்டவாறு அவர் விளங்கப்படும் போது, அவருக்கு எதிராகச் சான்றாகக் கொடுக்கப்படலாம்.

மன்னிப்பு அளிக்கப்பட்ட ஆளின் கூற்றானது அவரின் விளக்கத்தில் அவருக்கு எதிராகச் சான்றாகக் கொடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய கூற்றுத் தொடர்பில், பொய்யான சான்று அளித்தலாகிய தவறுக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றி, வழக்குத் தொடர்ச்சி எதுவும் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

எதிர்வாதம் கூறுவதற்குக் குற்றஞ்சாட்டப் பட்டவருக்குக் குள்ள உரிமை.

**260.** குற்றவியல் நீதிமன்றம் எதன் முன்னரேனும் குற்றஞ்சாட்டப்படுபவரான ஆள் ஒவ்வொருவரும், உரிமை வழியாகச் சட்டத்தரணிமூலம் எதிர்வாதம் கூறலாம். என்பதுடன், இடருற்றவரான கட்சிக்காரர் ஒவ்வொருவரும், சட்டத்தரணி ஒருவரை நீதமன்றத்தில் தமது பிரதிநிதியாக வைத்திருப்பதற்கு உரிமை கொண்டவராதலும் வேண்டும்.

கூட்டுத்தாபன மொன்றுக்காக நீதிமன்றத்தில் தோன்றுதல்.

**261.** (1) கூட்டுத்தாபனமொன்று குற்றஞ்சாட்டப்பட்ட ஆளாக உள்ள ஏதேனும் நீதிமன்றத்திலான விளக்கம் எதிலும் அக்கூட்டுத்தாபனமானது, அக்கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பணிப்பாளர்மூலம், செயலாளர்மூலம் அல்லது அவர்போன்ற அலுவலர் ஒருவர்மூலம் அல்லது கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியாக எழுத்துமூலம் முகாமைப்பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் மூலம் பிரதிநிதித்துவம் வகிக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்க இணங்க, நியமிக்கப்பட்ட வேறெவரேனுமாள் மூலம் கூட்டுத்தாபனம் ஒன்று பிரதிநிதித்துவம் வகிக்கப்படுமிடத்து -

(அ) அத்தகைய ஆள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றஞ்சாட்டுக்கு விடையளிக்கலாம் என்பதுடன், ஏதேனும் நோக்கத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவரின் சம்மதம் தேவைப்படுமிடத்து, அத்தகைய சம்மதத்தையும் வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உள்ளனவான எல்லா உரிமைகளையும் அல்லது உரிமைகளுள் எவற்றையும் பிரயோகிக்கலாம் ; அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன்னிலையில் எதுவும் செய்யப்படுதல் வேண்டும் என்ற அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு வாசித்துக் காண்பிக்கப்பட வேண்டும் என்ற அல்லது கூறப்பட வேண்டும் என்ற இச்சட்டக்கோவையின் தேவைப்பாடு எதுவும், அத்தகைய ஆள் முன்னிலையில் அத்தகைய காரியம் செய்யப்படுதல் வேண்டும் என்ற அல்லது அத்தகைய ஆளுக்கு வாசித்துக் காண்பிக்கப்படுதல் வேண்டும் என்ற அல்லது அத்தகைய ஆளுக்குக் கூறப்படவேண்டும் என்ற தேவைப்பாடொன்றாகப் பொருள் அமைத்துக் கொள்ளப் படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நியமிக்கப்பட்டவரான வேறெவரேனுமாள் மூலம் கூட்டுத்தாபனம் ஒன்று பிரதிநிதித்துவம் வகிக்கப்படாதவிடத்து, நீதிமன்றமானது, கூட்டுத்தாபனத்திற்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்திப்பட்டால், கூட்டுத்தாபனம் விளக்கத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கப்படவில்லை என்ற நிகழ்வு எப்படியிருப்பினும், விளக்கத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் முடிவுறுத்துவதற்குமான தத்துவத்தை உடையதாயிருந்தல் வேண்டும்.

**262.** குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் பித்துப் பிடித்தவரா யில்லாதிருந்தும், நடவடிக்கைகளை அவர் விளங்கிக்கொள்ளச் செய்ய முடியாதிருப்பின், விடயத்துக்கேற்றவாறு, நீதிவான் நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றம், விசாரணையினை அல்லது விளக்கத்தினைத் தொடர்ந்து நடாத்தலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின் விளைவாகப் பாரப்படுத்தப்படின் அல்லது அத்தகைய விளக்கத்தின்-

பிடித்துப்பிடித்தவரா யில்லாத குற்றஞ் சாட்டப்பட்டவர் நடவடிக்கைகளை விளங்கிக் கொள்ளா தவிடத்துப் பின் பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாகக் குற்றத்தீர்ப்பொன்று அளிக்கப்படின், வழக்கின் சூழ்நிலைகள் பற்றிய அறிக்கையொன்றுடன் வழக்கு நடவடிக்கைக்குறிப்புகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அதன் மீது நீதிமன்றம், அது தகுதியானதெனக் கருதுகின்றவாறு அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

நடவடிக்கைகளைப் பின்போடுவதற்கு அல்லது ஒத்திவைப் பதற்குள்ள தத்துவம்.

§9, 14 இல 2005

**263.** (1) சாட்சிக்காரர் ஒருவர் வந்திராததன் காரணமாக, அல்லது வேறேதேனும் நியாயமான காரணத்துக்காக, ஏதேனும் விசாரணையை அல்லது விளக்கத்தைத் தொடங்குதலைப் பின்போடுவது, அல்லது ஏதேனும் விசாரணையை அல்லது விளக்கத்தை ஒத்திவைப்பது அவசியமாயின் அல்லது புத்திக்கியைந்ததாக இருந்தால், நீதிமன்றம், காலத்திற்குக் காலம், நியாயமானதென அது கருதும் அத்தகைய காலத்துக்கு, தகுதியானதென அது கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளின்மீது பின்போடுவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்குக் கட்டளையிடலாம் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர் கட்டுக்காவலில் இருந்தால் அவரை விளக்கமறியலுக்கு அனுப்பலாம் அல்லது அவரைக் கட்டுக்காவலில் வைக்கலாம் அல்லது அவர் தோன்றுவதற்காக அவரே சொந்தப் பிணைப்பத்திரம் ஒன்றை முடித்துகொடுத்ததன் பேரில் அல்லது பிணைகாரருடனான பிணையின் மேல், அவரைப் பிணையில் விட்டுவிடலாம்

ஆயின், எவ்வாறாயினும், யூரர் சபையுடன் அல்லது யூரர் சபையின்றி மேல்நீதிமன்றத்திலான விளக்கம் ஒவ்வொன்றும், செயல் முறைக்குகந்த அளவுக்கு நாளுக்குநாள் நடைபெறுதல் வேண்டும்".

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் அழைப்புக்கட்டளையின்பேரில் நீதிமன்றத்திற்கு வருகைதந்துள்ளவிடத்து, அவர் சொந்தப் பிணைப்பத்திரம் முடித்துக்கொடுத்தன்பேரில் அல்லது தோன்றுவர் என்ற அவரது சாதாரண பொறுப்பேற்பின்பேரில், பதிவுசெய்து கொள்ளப்படவேண்டியனவான காரணங்களுக்காக நீதிமன்றம் வேறுவகையாகக் கட்டளையிட்டாலன்றி, அவர் விட்டு விடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்.** - குற்றஞ்சாட்டப்பட்டவர் தவறொன்றினைப் புரிந்திருக்கக்கூடும் என்ற நியாயமான சந்தேகத்தைத் தோன்றுவிப்பதற்கான போதுமான சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட்டால், அத்துடன், விளக்கமறியலில் வைப்பதன் மூலம் மேலும் சான்றுகள் பெற்றுக்கொள்ளப்படும் எனத்தோன்றினால், விளக்கமறியலில் வைப்பதற்கு இது போதுமான காரணியாகும்.

(3) சாட்சிக்காரர் ஒருவரின் சான்றானது விசாரணைக்கு அல்லது விளக்கத்துக்கு முக்கியமானதெனவும், அவர் வருவதனை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவெனவும் நீதிவானானவர் முதலில் தம்மைத் திருப்திப்படுத்தி, அத்தகைய சாட்சிக்காரரின் பெயரையும், அவர் கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுவதான சான்றின் தன்மையையும் பதிந்திருந்தாலொழிய, அத்தகைய சாட்சிக்காரர் வராததன் காரணமாக விசாரணை அல்லது விளக்கம் ஒன்று பின்போடப்படுதலோ ஒத்திவைக்கப்படுதலோ ஆகாது.

(4) இப்பிரிவின்கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டவரான அல்லது கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தப்பட்டவரான ஆள் ஒவ்வொருவரும், மறியற்சாலைக் கண்காணிப்பாளரை விளித்து எழுதப்பட்டதான ஆணைப்பத்திரம் ஒன்றின்மூலம் அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்படுதல் வேண்டும், அல்லது பாரப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் 264 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரப்படுத்தல் ஆணைப் பத்திரம் முதலியன வழங்குவது தொடர்பான நடவடிக்கை முறை.

**264.** (1) நூற்றுப்பதினைந்தாம் பிரிவின்கீழ், 159 ஆம் பிரிவின் கீழ், 239 ஆம் பிரிவின்கீழ் அல்லது 263 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்டவையான தடுத்துவைத்தல் ஆணைப்பத்திரம், பாரப்படுத்தல் ஆணைப்பத்திரம் அல்லது விளக்கமறியலில் வைத்தற்கான ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும், விதிக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் நீதிபதியினாற் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். அத்தகைய ஆணைப்பத்திரம், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலரொருவருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அலுவலர், அதைப்பெற்றுக் கொண்டதன்மேல் அதன்கண் பெயர்குறிக்கப்பட்டவரான ஆளைப் பொறுப்பேற்று, அதன்கண் பெயர் குறிக்கப்பட்டதான மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கட்டுக் காவலுக்கு ஒப்படைத்தலும் வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட ஆணைப்பத்திரமானது அவ்வாறு செய்வதற்கும் அந்நோக்கத்திற்கெனச் சொல்லப்பட்ட ஆளைத் தடுத்து வைத்தற்கும் மறியற்சாலைத் திணைக் களத்தின் சொல்லப்பட்ட அலுவலருக்குப் பூரண அதிகாரம் வழங்குவதாகும்.

(2) சொல்லப்பட்ட கண்காணிப்பாளரானவர், ஆணைப்பத்திரத்தில் பெயர் குறிக்கப்பட்டவரான ஆள், மேற்சொல்லப்பட்டவாறாக அவரிடம் ஒப்படைக்கப்பட்டதன்மேல், அவ்வாளை ஆணைப்பத்திரத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்திற்கு, தடுத்துவைத்தல் ஆணைப்பத்திரத்தை, பாரப்படுத்தல் ஆணைப் பத்திரத்தை அல்லது விளக்கமறியல் ஆணைப்பத்திரத்தை ஆக்கும் நீதிமன்றத்தின் சார்பில் தடுத்துவைத்துக் கட்டுக்காவலில் வைத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைப்பத்திரத்தினது நியதிகளுக்கும், அத்தகைய ஆள் தொடர்பில் நீதிமன்றம் எதனாலும் அவருக்கு வழங்கப்பட்ட சட்டமுறையான கட்டளையெதற்கும் வேறு வகையில் இணங்கியொழுகுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**265.** (1) இருநூற்று அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யபட்டவாறான ஆணைப்பத்திரமானது, மறியற்சாலைக் கண்காணிப்பாளர், அத்தகைய ஆளைத் தடுத்து வைத்தற்கும் கட்டுக்காவலில் வைப்பதற்குமான பூரண அதிகாரத்தை அவருக்கு வழங்குவதாகும்.

ஆணைப் பத்திரமானது மறியற்சாலைக் கண்காணிப் பாளருக்குப் பூரண அதிகாரம் வழங்குவதாகும்.

(2) நீதிபதியின் கைப்பட எழுதப்பட்டதான ஆணைப்பத்திரத்தின் பிரதியொன்று வழக்கில் கோப்பிடப்பட்டுப் பதிவேட்டில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

**266.** (1) அடுத்துப் பின்வரும் பட்டியலிலுள்ள முதலாவது நிரையிலும் இரண்டாவது நிரையிலும் விவரிக்கப்பட்ட தவறுகள், அத்தகைய தவறுக்கான குற்றவழக்கொன்று நீதிவான் நீதிமன்றத்தில் முடிவுறாததாக இல்லாதபோது, அப்பட்டியலிலுள்ள மூன்றாம் நிரையிலுள்ள நேரொத்த பதிவுகளில் குறிப்பிடப்பட்ட ஆளினால் இணக்கஞ்செய்யப்படலாம் ; நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவழக்கொன்று முடிவுறாததாகவுள்ளபோது அந்நீதிமன்ற நீதிவானின் சம்மதத்தோடு அவ்வாளினால் இணக்கஞ் செய்யப்படலாம்.

தவறுகளை இணக்கஞ் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

# பட்டியல்.

| தவறு | ஏற்புடைத்தான தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு. | எந்த ஆட்களால் தவறுகள் இணக்கஞ் செய்யப்படலாம் என்பது. |
|---|---|---|
| கலவரம். | 157 | கலவரம் புரியும் ஆட்கள். |
| வேண்டுமென்று காயம் விளைவித்தல். | 314, 315 325 | எந்த ஆளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டதோ அந்த ஆள். |
| வேண்டுமென்று கடும்காயம் விளைத்தல் அல்லது ஆத்திரமூட்டப்படுதலின் மீது கடும் காயம் விளைத்தல். | 316,326 | |
| உயிரினை அல்லது பிறரின் காப்பினை ஆபத்துக்குட்படுத்தும் செயல் மூலம் காயம் விளைவித்தல். | 328 | |
| உயிரினை அல்லது பிறரின் காப்பினை ஆபத்துக்குட்படுத்தும் செயல் மூலம் கடும்காயம் விளைவித்தல். | 329 | |
| எவரேனும் ஆளை முறைகேடாகத் தடுத்துவைத்தல் அல்லது மறித்து வைத்தல். | 332,333 | தடுத்துவைக்கப்பட்ட ஆள் அல்லது மறித்துவைக்கப்பட்ட ஆள். |
| தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரத்தைப் புரிதல். | 343, 346 348, 349 | தாக்கப்பட்ட ஆள் அல்லது எந்த ஆள்மீது குற்றவியல் வலோற்காரம் பிரயோகிக்கப் பட்டதோ அந்த ஆள் |
| நேர்மையீனமாக ஆதனத்தைக் கையாடல் இழப்பு தனிப்பட்ட ஆளுக்கானதாக இருக்குமிடத்து. | 386 | எவ்வாளுக்கு இழப்பு நேர்ந்ததோ அவ்வாள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

| | | |
|---|---|---|
| சொத்தழிவு - ஏற்பட்ட நட்டம் அல்லது இழப்பானது தனிப்பட்ட ஆளுக்கானதாக இருக்குமிடத்து. | 409, 410 | |
| பத்து ரூபா பெறுமதியுள்ள ஏதேனும் விலங்கைக் கொல்லுதல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலமான சொத்தழிவு, இழப்பானது தனிப்பட்ட ஆளுக்கானதாக இருக்குமிடத்து. | 411 | எவ்வாளுக்கு இழப்பு அல்லது நட்டம் நேர்ந்ததோ அவ்வாள். |
| கால்நடை முதலியவற்றைக் கொல்லல் அல்லது உறுப்புக் குறைத்தல் மூலமான சொத்தழிவு, இழப்பானது தனிப்பட்ட ஆளுக்கானதாக இருக்குமிடத்து. | 412 | |
| குற்றமுறையான அத்துமீறல் | 433 | ஆதனத்தை உடைமை கொண்டுள்ள ஆள். |
| வீட்டத்துமீறல். | 434 | |
| அவதூறு | 480 | |
| ஒரு விடயம் அவதூறானது என அறிந்து கொண்டு அதனை அச்சிடுதல் அல்லது செதுக்குதல். | 481 | அவதூறு செய்யப்பட்ட ஆள். |
| அவதூறான விடயத்தைக் கொண்டுள்ளதென அறிந்திருந்தும் அதைக் கொண்டுள்ள அச்சிடப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை விற்றல். | 482 | அவதூறு செய்யப்பட்ட ஆள். |
| சமாதானக் குலைவை ஏற்படுத்தும் உளக் கருத்துடன் வேண்டுமென்று நிந்தை செய்தல். | 484 | நிந்தைசெய்யப்பட்ட ஆள். |
| குற்றமுறையான அச்சுறுத்தல். | 486 | அச்சுறுத்தப்பட்ட ஆள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின்கீழ் தவறெதுவும் இணக்கிக்கொள்ளக் கூடியதாகும் போது, அத்தகைய தவறினைப் புரிவதற்கு உடந்தையளித்தலானது அல்லது அத்தகைய தவறினைப் புரிவதற்கு எத்தனித்தலானது, (அத்தகைய எத்தனித்தலே ஒரு தவறாகும் போது) அதே முறையில் இணக்கிக்கொள்ளப்படலாம்.

(3) வேறு வகையில் இப்பிரிவின்கீழான தவறொன்றினை இணக்கிக்கொள்வதற்குத் தகுதிவாய்ந்தவரான ஆள் பராயமடையாத ஒருவராக இருந்தால், மூடன் ஒருவராக இருந்தால் அல்லது சித்தசுவாதீனமற்ற ஒருவராக இருந்தால், அவர் சார்பில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குத் தகுதிவாய்ந்தவரான ஆள் எவரும், அத்தகைய தவறினை இணக்கிக் கொள்ளலாம்.

§5, 11 இல 1988 (4) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பிரிவின் கீழ் ஏதேனும் தவறு இணகஞ் செய்யப்படுதல்,

(அ) அத்தகைய தவறுக்கான குற்ற வழக்கொன்று நீதிவான் நீதிமன்றத்தில் முடிவுறாததாக இல்லாத போது, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதான பயனை உடையதாதலாகாது.

(ஆ) அத்தகைய தவறுக்கான குற்ற வழக்கு ஒன்று நீதிவான் நீதிமன்றமொன்றில் முடிவுறாததாக இருக்கும்போது குற்றஞ் சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதான பயனை உடையதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் விபரிக்கப்படாததான தவறெதுவும் இணக்கிக் கொள்ளப்படுதலாகாது.

கேட்பின்போது அல்லது விசாரணையின் போது நீதிவானை மாற்றுதல்.

**267.** நீதிவான் எவரும் விசாரணை ஒன்றிலான அல்லது விளக்கம் ஒன்றிலான சான்று முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கேட்டு, பதிந்தபின்னர், அதன்கண் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்காதொழிந்து, அவர் இருந்த-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற்கு அத்தகைய நியாயாதிக்கத்தை உடையவரும் பிரயோகிப்பவருமான இன்னொரு நீதிவான் வரும்போதிலெல்லாம், அவ்வாறு பின்னர் வரும் நீதிவானானவர், அவருக்கு முன்னர் இருந்தவரால் ஏற்கனவே பதியப்பட்ட அல்லது அவருக்கு முன்னர் இருந்தவரால் பகுதியளவிலும் தம்மாற் பகுதியளவிலும் பதியப்பட்ட சான்றின் மேல், செயலாற்றலாம் அல்லது சாட்சிக்காரர்களை மீண்டும் கட்டளை விட்டழைத்து விசாரணையை அல்லது விளக்கத்தை மீண்டும் தொடங்கலாம் :

ஆயின், ஏதேனும் விளக்கத்தில், இரண்டாவது நீதிவான் அவரது நடவடிக்கைகளைத் தொடங்கும் போது, சாட்சிக்காரர்கள் அல்லது அவர்களுள் எவரும் மீண்டும் கட்டளை விட்டழைக்கப்பட்டு மீண்டும் விசாரிக்கப்படல் வேண்டுமெனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கோரலாம்.

**268.** மேல்முறையீடொன்று செய்யக்கூடியதாக இருப்பினுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி குற்றத்தீர்ப்பு எந்த நீதிவானால் அளிக்கப்பட்டதோ அந்த நீதிவானால் சான்றானது முழுமையாகப் பதியப்படாமையால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கணிசமான அளவுக்குப் பங்க மேற்பட்டுள்ளதென, உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் அபிப்பிராயப்படின், அவ்வாறான சான்றின்மீது அளிக்கப்பட்ட ஏதேனும் குற்றத்தீர்ப்பை அத்தகைய நீதிமன்றம் தள்ளிவைக்கலாம் என்பதுடன், புதிய விளக்கமொன்றை நடாத்துமாறும் கட்டளையிடலாம். கணிசமான அளவு பங்கமேற்பட்டுள்ள விடத்து உயர் நீதிமன்றம் அல்லது மேன் முறையீட்டு நீதிமன்றம் குற்றத் தீர்ப்பைத் தள்ளி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத் திற்குவரும் தவறாளிகதைத் தடுத்து வைத்தல்.

**269.** (1) கைதுசெய்யப்படாதவராய் அல்லது கட்டளை விட்டழைக்கப்படாதவராய் குற்றவியல் நீதிமன்றமொன்றிற்கு வரும் எவரேனுமாள், அத்தகைய நீதிமன்றம் கவனத்துக்குட்படுத்தக் கூடியதாயுள்ளதும், அவர் புரிந்துள்ளதாகச் சான்றிலிருந்து தோன்றக் கூடியதுமான ஏதேனும் தவறுபற்றி விசாரிக்கும் அல்லது விளங்கும் நோக்கத்துக்காக, அத்தகைய நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்படலாம் என்பதுடன், கைது செய்யப்பட்டாற்போன்று அல்லது கட்டளைவிட்டழைக் கப்பட்டாற்போன்று அவருக்கெதிராக நடவடிக்கையெடுக்கவும்படலாம்.

(2) தடுத்துவைத்தல் பதினைந்தாம் அத்தியாயத்தின்கீழான ஒரு விசாரணையின்போது அல்லது விளக்கமொன்று தொடங்கியதன் பின்னர் நிகழ்ந்தால், அத்தகைய ஆள் தொடர்பான நடவடிக்கைகள் புதிதாகத் தொடங்கப்பட்டு, சாட்சிக்காரர்கள் மீள விசாரிக்கப்படுதல் வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் நடவடிக்கைகள் நடைபெறலாம்.

**270.** ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தின் நடவடிக்கையெதுவும் ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது பகிரங்க விடுமுறை நாளன்று நடைபெற்றதென்ற காரணத்தினால் செல்லுபடியற்றதாகாது.

குற்றஞ்சாட்டப் பட்டவர் வழக்குரைப்பவர் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படா விடின் அவருக்கு, வழக்குத் தொடுநர் தரப்பின் வழக்கு விளங்கப்படு த்தப்படுதல் வேண்டும் என்பது.

**271.** (1) ஒவ்வொரு விளக்கத்தின்போதும், நீதிமன்றம் குற்றஞ் சாட்டப்பட்டவரை அவரது எதிர்வாதத்தினைத் தருமாறு அழைக்கும் போது, அவர் வழக்குரைப்பவர் ஒருவர் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படாவிட்டால், அவர் சார்பில் அவரே சான்று தரலாம் என்ற அவருக்குள்ள உரிமையை அவருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அவர் தனது சார்பில் சான்று சொல்லத் தீர்மானித்தால், நீதிமன்றமானது, குற்றஞ் சாட்டப்பட்டவருக்கும் பாதகமாக வழக்குத்தொடுநர் தரப்பின் சான்றிலுள்ள பிரதான அம்சங்களுக்கு (அவற்றை விளக்குவதற்கான ஒரு சந்தர்ப்பத்தைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக) கவனத்தை ஈர்த்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒவ்வொரு விளக்கத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவரால் சாட்சி அழைக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, குற்றஞ்சாட்டப்பட்டவர் மறுமொழி தருவதற்கு உரிமையுள்ளவராதல் வேண்டும்.

(3) ஏதேனும் விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட எவரும் அல்லது விடயத்திற்கேற்றாற் போல, குற்றஞ்சாட்டப்பட்டவரின் கணவன் அல்லது மனைவி சான்று சொல்வதற்குத் தவறியமையானது வழக்குத்தொடுநரின் பாதகமான கண்டனத்துக்கு இலக்காக்கப் படுதலாகாது.

## அத்தியாயம் XXII

## விசாரணைகளிலும் விளக்கங்களிலும் சான்றுபெறும் முறை பற்றியும் பதிவுசெய்யும் முறை பற்றியும்

**272.** வேறு வகையாக வெளிப்படையாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றவிடத்துத் தவிர இச்சட்டக்கோவையின் கீழான விசாரணைகளில் அல்லது விளக்கங்களில் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாச் சான்றுகளும், குற்றஞ்சாட்டப்பட்டவர் சமுகமாயிருக்கையில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும் அல்லது அவரது நேர்முகமான வருகை தேவைப்படுத்தப்படாது விட்டுவிடப்படுள்ளபோது அவரது வழக்குரைப்பவர் சமுகமாயிருக்கையில் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் சமுகமாயிருக்கையில் சான்று பெற்றுக் கொள்ளப் படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்று எப்படிப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது.

**273.** (1) மேல் நீதிமன்றத்திலும், நீதிவான் நீதிமன்றங்களிலும் சாட்சிக்காரர் ஒவ்வொருவரினதும் சான்றானது நீதிபதியினால் அல்லது அவரது சமுகத்திலும் அவருக்குக் கேட்கும்படியாகவும், அவரது நேரடியான பணிப்பின் கீழும், கண்காணிப்பின் கீழும் எழுத்தில் குறித்துக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிபதியால் கையொப்பமிடப்பட்டுத் தேதியிடப்படலும் வேண்டும் ; அத்துடன் சான்றானது விசாரணை ஒன்றில் பெற்றுக்கொள்ளப்படுமிடத்து, பேச்சு மொழிபெயர்ப்பாளர் எவரேனும் அமர்த்தப்பட்டிருந்தால் அப்பேச்சு மொழிபெயர்ப்பாளராலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(2) சான்றானது சாதாரணமாகக் கேள்வி பதில் வடிவத்தில் குறித்துக்கொள்ளப்படுதலாகாது ; ஆனால் தற்கூற்றுக்கதை வடிவத்தில் பதியப்படுதல் வேண்டும் ; ஆனால் நீதிபதியானவர் அவரது தற்றுணிபில், குறிப்பிட்ட கேள்வி பதில் எதனையும் குறித்துக்கொள்ளலாம் :

ஆயின், எவ்வாறாயினும், மேல் நீதிமன்றத்தில் கேள்வி பதில் வடிவத்தில் சான்று எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) சாட்சிக்காரர்களை அடையாளங் கண்டுகொள்ளும் நோக்கத்திற்காக ஒவ்வொருவர் பற்றியும் பின்வரும் விவரங்கள் குறித்துக்கொள்ளப்படுதல் வேண்டும் :-

(அ) முழுப்பெயர் ;

(ஆ) மணமான பெண்ணாயின், கணவர் பெயர் ;

(இ) வயது ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) தொழில் ;

(உ) வதிவிடம் ;

(ஊ) வெளிநாட்டைச் சேர்ந்தவராயின், அவர்தம் தேசிய இனம் ;

(4) சாட்சிக்காரர் ஒருவரின் சான்றினைப் பதிவுசெய்து கொள்பவரான நீதிபதி ஒவ்வொருவரும், விசாரணையின் போது அத்தகைய சாட்சிக்காரரின் வெளித்தோற்ற நடத்தை தொடர்பில் நீதிபதி முக்கியமானவையெனக் கருதும் அத்தகைய குறிப்புரைகளைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

சான்று பெற்று முடிவுற்றதும், அத்தகைய ஒவ்வொரு சான்று தொடர்பிலுமான நடவடிக்கை முறை.

**274.** (1) விசாரணை ஒன்றில் சாட்சிக்காரர் ஒவ்வொருவரினதும் சான்றானது பெறப்பட்டு முடிவுற்றதும், அல்லது பாரப்படுத்துவதற்கு முன்னர் எக்காலத்திலேனும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அங்கு சமுகமாயிருந்தால் அக்குற்றஞ்சாட்டப்பட்டவரின் முன்னிலையில் அல்லது அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்குரைப்பவர் ஒருவர் மூலம் தோன்றியிருந்தால் அவ்வழக்குரைப்பவரின் முன்னிலையில் நீதிவானால் சாட்சிக்காரருக்கு வாசித்துக் காண்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவசியமாயின் திருத்தங்கள் செய்யப்படுதலும் வேண்டும்.

(2) சாட்சிக்காரரானவர் அவருக்குச் சான்று வாசித்துக் காண்பிக்கப்படும் போது, சான்றினது பாகம் எதனதும் செம்மையினை மறுப்பாராயின், நீதிவானானவர், சான்றினைத் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துவதற்குப் பதிலாக, சாட்சிக்காரரால் அதுபற்றித் தெரிவிக்கப்பட்ட மறுப்பினைப் பற்றிய விவரக்குறிப்பினை அதன்மேல் குறித்துக்கொண்டு, அவர் அவசியமானவையெனக் கருதும் அத்தகைய குறிப்புரைகளையும் அதில் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3) சாட்சிக்காரரானவர் சான்று பதிவுசெய்து கொள்ளப்பட்ட மொழியினை விளங்கிக்கொள்ளமாட்டாதவராக இருந்தால், அச்சான்றானது எம்மொழியில் கொடுக்கப்பட்டதோ அம்மொழியில் அவருக்கு மொழிபெயர்த்துக் கூறப்படுதல் வேண்டும்.

(4) சான்றானது சாட்சிக்காரருக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு எவையேனும் திருத்தங்கள் சாட்சிக்காரரால் வேண்டப்படின், அத்திருத்தம் ஒவ்வொன்றும் செய்யப்பட்டதும் அல்லது குறித்துக்கொள்ளப்பட்டதும், சாட்சிக்காரரானவர், அவ்வாக்கு மூலத்தின் கீழே ஒப்பமிடுதல் வேண்டும். அவர், அவ்வாறு செய்வதற்கு மறுக்கும் பட்சத்தில் நீதிவானானவர் அத்தகைய மறுப்பினைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

நீதிவான்களால் வாக்கு மூலங்களுக்குச் சான்றுரை வழங்கப்படுதல்.

(5) வாக்குமூலமொன்று சாட்சிக்காரர் ஒருவருக்கு வாசித்துக் காட்டப்பட்டு, அது செம்மையானதென அங்கீகரிக்கப்பட்டதும், நீதிவானன்வர் சாட்சிக்காரரின் சான்றுக்கு, பின்வரும் பயன்படவுள்ளதும் அவரது கையொப்பத்தினால் அல்லது முதலெழுத்தொப்பத்தினால் ஒப்பமிடப்பட்டதுமான சான்றுரை ஒன்றினை இணைத்தல் வேண்டும். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) பதிவு எம்மொழியில் வைக்கப்பட்டுள்ளதோ அம்மொழியில் சான்று அளித்த சாட்சிக்காரர் ஒருவரின் விடயத்தில் : "பகிரங்க நீதிமன்றத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சமுகத்தில் சாட்சிக்காரருக்கு வாசித்துக் காட்டப்பட்டு, செம்மையானதெனச் சாட்சிக்காரரால் ஒப்புக்கொள்ளப் பட்டது" ; அத்துடன்

(ஆ) ஏனைய சாட்சிக்காரர்களின் விடயத்தில்: "பகிரங்க நீதிமன்றத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் சமுகத்தில் சாட்சிக்காரருக்கு வாசித்துக்காட்டப்பட்டு மொழிபெயர்த்துக் கூறப்பட்டு, செம்மையானதெனச் சாட்சிக்காரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது" ;

(6) குற்றஞ்சாட்டப்பட்டவர் சமுகமாகவில்லாத போது பதியப்படும் வாக்கு மூலங்களின் விடயத்தில் (5) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அச்சான்றுரையிலிருந்து, "குற்றஞ்சாட்டப்பட்டவரின் சமுகத்தில்" என்னுஞ் சொற்கள் நீக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் ஏனைய தேவைப்பாடுகள் உண்மையில் இணங்கியொழுகப்பட்டன என்பது, ஏனைய சான்றுமூலம் எண்பிக்கப்பட்டால், வாக்குமூலமொன்றின்கண் அத்தகைய சான்றுரை இல்லாமை, அவ்வாக்கு மூலத்தைச் சான்றாக முன்வைப்பது விரும்பத்தக்கதாகவுள்ள வழக்கு எதனிலும் அவ்வாக்குமூலமானது சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தடையாக இருத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு சான்றை மொழி பெயர்த்துக் கூறுதல்.

**275.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளங்காத மொழியொன்றில் சான்று எதுவும் கொடுக்கப்பட்டுள்ளவிடத்தும், அவர் நேர்முகமாகச் சமூகமளித்திருக்கின்றவிடத்தும், சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துவம் வகிக்கப்படாதவிடத்தும் அச்சான்றானது பகிரங்க நீதிமன்றத்தில் அவரால் புரிந்துகொள்ளக்கூடியதான மொழியில் அவருக்கு மொழிபெயர்த்துக் கூறப்படுதல் வேண்டும்.

(2) விதிமுறைப்பட்ட எண்பிப்பின் நோக்கத்திற்கென ஆவணங்கள் முன்வைக்கப்படும் போது நீதிமன்றமானது, அதன் தற்றுணிபில், ஆவணங்களின் எப்பகுதியை மொழிபெயர்த்துக் கூறுவது அவசியமானதெனத் தோன்றுகின்றதோ அத்தகைய பகுதியை மட்டுமே மொழிபெயர்த்துக் கூறுதல் வேண்டும்.

ஆவணச் சான்று.

**276.** (1) நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணை ஒவ்வொன்றிலும், விளக்கம் ஒவ்வொன்றிலும் ஆவணச் சான்றுகள் எல்லாம், பதிவேட்டில் கோப்பிடப்பட்டு நீதிவானால் முதலெழுத் தொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரினாற் பெறப்பட்ட அந்தத் தேதி அதன்கண் இடப்படுதலும் வேண்டும்.

(2) ஆவணங்கள் எதுவும் நீதிமன்ற மொழியில் இல்லாதவிடத்து, அத்தகைய ஆவணத்தின் அல்லது அதில் முக்கியமானதாகவுள்ள அத்தகைய பகுதியின் நீதிமன்ற மொழியிலான மொழிபெயர்ப்பொன்று அதனோடு கோப்பிடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நீதிபதியொருவர், தமக்கு எம்மொழி தெரிந்துள்ளதோ அம்மொழியில் ஆவணம் எதையும் மொழிபெயர்க்கும்படி தேவைப்படுத்துதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) பதிவேட்டில் கோப்பிடுதல் சாத்தியமற்றதாக அல்லது வசதியற்றதாக இருக்கின்ற அத்தகைய இயல்பிற்றானதாக ஏதேனும் ஆவணச்சான்றானது இருக்கின்றவிடத்து, நீதிவானானவர், இணங்காண்பதற்கென அதன்மீது முதலெழுத்தொப்பமிட்ட பின்னர் அவ்வாவணத்தை அதனைக் காண்பித்த ஆளுக்குத் திருப்பியொப்படைத்தல் வேண்டும் ; அத்தகைய ஆள், விளக்கம் நடைபெறும் நீதிமன்றத்தின் முன்னர் அதனைப் பின்னரும் காண்பிப்பதற்குச் சட்டமுறையாகப் பிணிக்கப்பட்டவராதல் வேண்டும் ; ஆனால், அத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிவானானவர், ஆவணத்தின் இயைபானதான அத்தகைய பாகத்தின் அல்லது பகுதியின் பிரதியை எடுப்பித்து அதனைப் பதிவேட்டில் கோப்பிடும்படி செய்தல் வேண்டும்.

**277.** (1) அத்தியாயம் XV என்பதன் கீழான விசாரணை ஒன்றின் போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிவான் ஒருவருக்கு முன்பாகக் கூற்றொன்றினைச் செய்யும் போதிலெல்லாம், அத்தகைய கூற்று முழுவதும் பூரணமாகப் பதிவுசெய்து கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவானது அவருக்குக் காண்பிக்கப்படுதலும் வேண்டும் அல்லது வாசித்துக்காண்பிக்கப்படுதலும் வேண்டும் அல்லது அது எம்மொழியில் எழுதப்பட்டுள்ளதோ அம்மொழியினை விளங்கிக்கொள்ள முடியாதவராக அவர் இருந்தால், அவர் விளங்கிக்கொள்ளும் மொழியில் அவருக்கு அது மொழிபெயர்த்துக்கூறப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவர் அக்கூற்றை விளக்குவதற்கு அல்லது அக்கூற்றுடன் எதனையேனும் சேர்த்துக்கொள்வதற்குச் சுதந்திரமுடையவராய் இருத்தல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப் பட்டவரின் கூற்று அல்லது அவரின் விசாரணை எவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உண்மையானதென அவர் வெளிப்படுத்தும் அத்தகையதாக முழுக்கூற்றும் ஆக்கப்பட்டதும், அப்பதிவானது, நீதிவானால் ஒப்பமிடப்படுதல் வேண்டும் ; அவர் அது அவரது முன்னிலையில பெறப்பட்டதெனவும் அவருக்குக் கேட்கக்கூடியதாகப் பெறப்பட்டதெனவும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்று முழுவதையும் செம்மையாகக் கொண்டிருக்கின்றதெனவும், அவரதுகைப்படச் சான்றுபடுத்துதல் வேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய கூற்றில் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும் அல்லது அவரது அடையாளத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் ; அத்துடன் அவர் அவ்வாறு செய்வதற்கு மறுக்கின்ற சந்தர்ப்பத்தில், அவ்வாறு மறுக்கின்றார் என்பதனை நீதிவானானவர் பதிவு செய்தல் வேண்டும்.

தலைமை தாங்கும் நீதிபதி சான்றின் குறிப்புகளைக் குறித்துக்கொள்ளுதல் வேண்டும் அல்லது குறித்துக் கொள்ளுமாறு செய்வித்தல் வேண்டும்.

**278.** மேல் நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்படும் வழக்குகளில், தலைமைதாங்கும் நீதிபதி சான்றின் குறிப்புகளை எழுத்தில் குறித்துக்கொள்ளுதல் வேண்டும் அல்லது எழுத்தில் குறித்துக்கொள்ளும்படி செய்வித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXIII

## தீர்ப்புப் பற்றி

**279.** இச்சட்டக்கோவையின் கீழான ஒவ்வொரு விளக்கத்திலுமான தீர்ப்பு, துணிபுரை பதியப்பட்ட பின்னர் உடனடியாகவேனும் அல்லது 203 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற விடத்துத்தவிர அதன் பின்னர் எப்பொழுதேனும் (இதுபற்றிக் கட்சிக்காரர்களுக்கு அல்லது அவர்களின் வழக்குரைப்பவர்களுக்கு உரிய முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்) பகிரங்க நீதிமன்றத்தில் எடுத்து மொழியப்படுதல் வேண்டும்; அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கத்தின்போது நேர்முகமாக சமூகமாயிருத்தல் அவசியமற்றதாக்கப்பட்டிருப்பதோடு தண்டனைத் தீர்ப்பானது குற்றப்பணத்தை மாத்திரம் கொண்டதாகவுமுள்ள சந்தர்ப்பங்களில் தவிர அல்லது அவர் விளக்கத்தில் சமூகமளித்திராதபோது தவிர, குற்றஞ்சாட்டப்பட்டவர் தீர்ப்பு வழங்கப்படுவதைக் கேட்பதற்காக கட்டுக்காவலிலிருந்தால் அவர் கொண்டுவரப்படுதல் வேண்டும், அல்லது அவர் கட்டுக்காவலில் இல்லாதவிட்டால், வருமாறு அவர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். தீர்ப்பு வழங்கும் முறை.

**280.** மேல் நீதிமன்றத்தில் மரணதண்டனைத் தீர்ப்பு எடுத்து மொழியப்படுவதன் முன்னர், அவருக்கு எதிராக மரண தண்டனைத்தீர்ப்பு ஏன் வழங்கப்படலாகாது என்பதற்கான காரணமாக அவர் சொல்லுவதற்கு எதுவும் உள்ளதா எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கேட்கப்படுதல் வேண்டும். மரணதண்டனைத் தீர்ப்பின்முன், குற்றவாளியின் கூற்று வினாவுதல் விளித்துரை.

**281.** மரண தண்டனை விதிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளெவரேனும், பதினெட்டு வயதிற்குக் குறைந்தவராக நீதிமன்றத்திற்குத் தோன்றுமிடத்து, நீதிமன்றமானது, அவ்வாளுக்கு மரண தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டதான தண்டனைத் தீர்ப்பினை எடுத்து மொழியலாம். பதினெட்டு வயதிற் குக்குறைந்த ஆட்களுக்கு மரணதண்டனைக்குப்பதிலாக, தடுத்துவைத்த தற்கானதண்டனைவிதித்தல். §11, 52 இல 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணதண்டனைக் குரியதான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பெண் ஒருத்தி கருவுற்றிருப்பதாகச் சார்த்தினால் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**282.** (1) மரணதண்டனை விதிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு ஒரு பெண் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அவள், தான் கருவுற்றுள்ளாள் எனச்சார்த்தினால் அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் ஒரு பெண்ணுக்கு அவ்வாறு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகிறதோ அந்த நீதிமன்றமானது அந்தப் பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினைக்கு முடிவு காணுதல் உசிதமானது எனக் கருதுமிடத்து, அத்தகைய பிரச்சினையானது, அவள்மீது தண்டனைத்தீர்ப்பு வழங்கப்படுமுன்னர் பின்வருவோரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அதாவது

(அ) அப்பெண் யூர்சபை இல்லாது, மேல் நீதிமன்றத்து மூன்று நீதிபதிகளால் நீதாய விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அந்த நீதிபதிகளால் ; அல்லது

(ஆ) அப்பெண் விளக்கத்தின் பின்னர் யூர்சபையால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, குற்றவாளி என்ற துணிபுரையை வழங்கிய யூர்சபையினால், (அத்தகைய யூர்சபை உறுப்பினர்கள் மீண்டும் சத்தியஞ் செய்துகொள்ள வேண்டியதில்லை)

தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வருவதான விடயங்களில் -

(அ) அப்பெண்மீது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரும் பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினையில் யூர்சபை துணிபுரையினை வழங்குவதன் முன்னரும், எவரேனும் யூரர் போதுமான ஏதேனும் காரணத்தினால் விசாரணை முழுவதிலும் சமுகமளிக்கமுடியாதவாறு தடுக்கப்பட்டால் அல்லது எவரேனும் யூரர் வருகைதராமலிருந்து அவர் வருவதைக் கட்டாயப்படுத்துதல் சாத்தியமற்றதாக இருப்பின் அல்லது எவரேனும் யூரர் எம்மொழியில் சான்று கொடுக்கப்பட்டதோ அம்மொழியை, விளங்கிக்கொள்ளா மலிருந்தால், அல்லது அத்தகைய சான்று மொழி பெயர்த்துக்கூறப்படும் போது அவ்வாறு மொழிபெயர்க்கப் படும் மொழியினை விளங்கிக்கொள்ளாமலிருந்தால், நீதிமன்றமானது ஒன்றில் புதிதாக ஒரு யூரரைச் சேர்த்தக் கொள்ளுமாறு அல்லது யூரர்சபையைக் கலைத்து விட்டுப் புதிய யூரர் சபையைத் தெரிவு செய்யுமாறு கட்டளையிடலாம்.

(ஆ) தீர்மானிக்கப்படவேண்டியதான பிரச்சினையில் யூரர் சபையானது ஏகமனதாகவோ அல்லது ஐந்துக்கு இரண்டு என்ற பெரும்பான்மை மூலமோ உடன்பாடு காணாதிருந்தால், அல்லது நீதிமன்றத்தின் கருத்தில் நீதியின் நலன் அவ்வாறு தேவைப்படுத்துவதாக நீதிமன்றமானது கருதினால், அது, யூரர் சபையைக் கலைத்துவிட்டு, புதிய யூரர் சபையைத் தெரிவு செய்யுமாறு கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நீதிமன்றமானது, இவ்வுட்பிரிவின் (அ), அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ் புதிதாக யூரர்சபையைத் தெரிவுசெய்யுமாறு கட்டளையிடுமிடத்து, அத்தகைய யூரர்சபையானது, விளக்கம் ஒன்றிற்கு யூரர்சபை தெரிவுசெய்யப்படும் அதே வகையில் அமைக்கப்படுதல் வேண்டும் அத்தகைய யூரர்சபை ஒவ்வொன்றும், அத்துடன் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்ச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு புதிய யூரரும், நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் சத்தியஞ்செய்து கொள்ளுதல் வேண்டும்.

(3) பெண் கருவுற்றுள்ளாளா இல்லையா என்ற பிரச்சினை விடயத்திற்கு ஏற்ப, பெண்ணின் தரப்பில் அல்லது வழக்குத் தொடுநர் தரப்பில் நீதிபதிகளின் முன்னிலையில் அல்லது யூரர்சபையின் முன்னிலையில் வைக்கப்படும் அத்தகைய சான்றின், அடிப்படையில் நீதிபதிகளால் அல்லது யூரர்சபையால், தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிபதிகள் அல்லது யூரர்சபை, விடயத்திற்கு ஏற்ப, பெண் கருவுற்றுள்ளாள் என அவர்கள் திருப்திப்படும் வகையில் உறுதியாக எண்பிக்கப்பட்டாலன்றி, பெண் கருவுற்றிருக்கவில்லை என முடிவுசெய்தலும் வேண்டும்.

கருவுற்ற பெண்ணுக்கு மரண தண்டனைக்குப் பதிலாக மறியற்றண்டனை.

(4) பெண் கருவுற்றுள்ளாள் என்று முடிவுசெய்யப்பட்டதாயின், நீதிமன்றமானது மரணதண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாகத் தண்டனைச் சட்டக்கோவையின் 54 ஆம் பிரிவினால்ஏற்பாடு செய்யப்பட்டவாறான மறியற்றண்டனை ஒன்றினை எடுத்து மொழிதல் வேண்டும்.

உயர்நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றந்தவிர்ந்த ஏனைய நீதி மன்றங்களின் தீர்ப்புகள்.

**283.** உயர் நீதிமன்றத்தை அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தைத் தவிர்ந்த ஏனைய நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தீர்ப்பானது வழக்கை விசாரித்தவரான நீதிபதியால் எழுதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதனை எடுத்து மொழியும் நேரத்தில் பகிரங்க நீதிமன்றத்தில் தேதியிடப்பட்டு ஒப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன், மேன்முறையீடு செய்யக்கூடிய விடயங்களில், தீர்ப்பானது தீர்மானிக்கப் படுதற்குரிய மையக்கூறை அல்லது மையக்கூறுகளையும் அவற்றின் மீதான முடிவையும், அத்தகைய முடிவுக்கான காரணங்களையும் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எந்தத் தவறுக்காகவும், எந்தச் சட்டப்பிரிவின் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரோ அந்தத் தவறையும் அந்தச் சட்டப்பிரிவையும், அத்துடன் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையையும் அந்தத் தீர்ப்புக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) தீர்ப்பானது விடுதலைத் தீர்ப்பாயிருப்பின், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தத் தவறு தொடர்பில் விடுதலை செய்யப்படுகின்றார் என்பதை அத்தீர்ப்பானது கூறுதல் வேண்டும்.

(4) ஒரு தீர்ப்பு அவ்வாறு கையொப்பமிடப்பட்டதும், அத்தகைய தீர்ப்பை வழங்கிய நீதிமன்றத்தால் அது மாற்றப்படுதலோ அல்லது மீளாயப்படுதலோவாகாது :

ஆயின், எழுத்து வழு எந்நேரத்திலேனும் சரியாக்கப்படலாம் என்பதுடன், வேறேதேனும் வழு, அன்றையத் தினம் நீதிமன்றம் கலைவதற்கு முன்னர் எந்நேரத்திலேனும் சரியாக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) தீர்ப்பானது, அதனால் பாதிக்கப்படும் குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு விளக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவர் விண்ணப்பித்தால், அதன் பிரதியொன்று, தாமதமின்றி அவருக்கு கொடுபடவும் வேண்டும்.

(6) மூலப் பிரதியானது, நடவடிக்கைகளில் பதிவேடுகளுடன் கோப்பிடப்படுதல் வேண்டும்.

மாற்றாக அமைந்த தீர்ப்பு.

**284.** குற்றத்தீர்ப்பானது தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தாய் இருக்கும்போதும், அச்சட்டக்கோவையின் இரண்டு பிரிவுகளில் எப்பிரிவின் கீழ் அல்லது ஒரே பிரிவின் இரண்டு பாகங்களில் எப்பாகத்தின் கீழ் அத்தவறு அடங்குகின்றது என்பது பற்றி ஐயப்பாடு இருக்கும்போதும், நீதிமன்றமானது அது பற்றித் தெளிவாகக் கூறி, தீர்ப்பினை மாற்றாக வழங்குதலும் வேண்டும்.

மரணதண்டனைத் தீர்ப்பும் சவுக்கடியும்.

**285.** (1) ஆள் ஒருவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளபோது, அத்தண்டனைத் தீர்ப்பானது, சனாதிபதியால் தீர்மானிக்கப்படுவதான நாளிலும் இடத்திலும், அவ்வாளை இறக்கும் வரையில் கழுத்திற்கட்டித் தூக்கிலிடுதல் வேண்டும் எனப் பணித்தல் வேண்டும்.

§3, 21 இல 2005

(2) நீக்கப்பட்டுள்ளது. §3, 21 இல 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXIV

### தண்டனைத் தீர்ப்புகளும் அவற்றை நிறைவேற்றுதலும் பற்றி

**286.** மரணதண்டனைத்தீர்ப்புகள் தொடர்பாக பின்வரும் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும் :- மரணதண்டனைத் தீர்ப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பான ஏற்பாடுகள்.

(அ) மரணதண்டனைத்தீர்ப்பு எடுத்துமொழியப்பட்டதன் பின்னர், ஒரு மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கட்டுக்காவலில் தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளை ஒப்படைப்பதற்காக ஆணைப்பத்திரமென்று தயாரிக்கப்பட்டு, தண்டனைத் தீர்ப்பை வழங்கிய நீதிபதியால் அல்லது அவரது சக நீதிபதியால் அல்லது அப்பதவிக்கு அடுத்துவருபவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஆணைப் பத்திரம் ஒவ்வொன்றும் அத்தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படும் வரை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் எந்த மறியற்சாலையில் வைக்கப்பட்டுவுள்ளாரோ அந்த மறியற்சாலைக் கண்காணிப்பாளரை விளித்து எழுதப்படுதல் வேண்டும் என்பதுடன், 290 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(ஆ) மரணதண்டனைத் தீர்ப்பு எடுத்து மொழியப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடியளவு விரைவாக, வழக்கு விளக்கத்தின்போது தலைமைவகித்தவரான மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது அவர் வருகைதராதபோது அல்லது அவர் இயலாத வராகவிருக்கும் போது அவரது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக நீதிபதி அல்லது அப்பதவிக்கு அடுத்துவருபவர் வழக்கு விளக்கத்தின்போது நீதிபதியால் செய்து கொள்ளப்பட்ட சான்றுக்குறிப்புகளை, மரணதண்டனைத் தீர்ப்பு நிறை வேற்றப்படவேண்டுமா இல்லையா என்பதற்கான காரணங்கள் எவையேனும் இருக்கின்றனவா என்பது பற்றியும், அக்காரணங்கள் எவை என்பது பற்றியும் அவருக்குள்ள அபிப்பிராயத்தை எடுத்துக்காண்பிக்கும், எழுத்திலானதும் அவரால் ஒப்பமிடப்பட்டதுமான அறிக்கை ஒன்றுடன்சேர்த்து, சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் ;

(இ) சனாதிபதியானவர், சொல்லப்பட்ட அறிக்கையினை ஆராய்ந்ததன் பின்னர், அதன்மேல் அவர் தீர்மானித்திருக்கக் கூடியதான கட்டளை எதனையும் மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஈ) சனாதிபதி ஆணை நிறைவேற்றப்படுவதனைச் சிறிது காலத்திற்குப் பின்போடுமாறு கட்டளையிடலாம் அல்லது அது நிறைவேற்றப் படுவதற்கான தேதியையும் நேரத்தினையும் இடத்தினையும் நியமிக்கலாம் ;

(உ) (i) தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படும் போது மறியற்சாலைக் காண்காணிப்பாளர் அல்லது சிறைச்சாலை அதிகாரி, மறியற்சாலை மருத்துவ அலுவலர், விடயத்திற்கேற்றாற் போல, கண் காணிப்பாளர் அல்லது சிறைச்சாலை அதிகாரி தேவைப்படுத்தக்கூடிய மறியற்சாலையின் அத்தகைய வேறு அலுவலர்கள், சமுகமாக இருந்தல் வேண்டும் என்பதுடன் மரணதண்டனை நிறைவேற்றுகையானது மறியற்சாலை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவுகளுக்குள்ளாக நடைபெறு வதாயிருந்தால் மறியற் சாலையில் வருகைதந்துள்ளவரான சமயகுரவரும், மறியற் சாலைக் கண்காணிப்பாளர் அனுமதிப்பது தகுந்ததெனக் கருதும் கைதியின் அத்தகைய உறவினர்கள் அல்லது வேறு ஆட்களும் சமூகமாயிருக்கலாம் ;

(ii) மரணதண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டதும் கூடியவரை விரைவாக மறியற்சாலை மருத்துவ அலுவலர் மரண தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்ட ஆளின் உடலைப் பரிசோதித்தல் வேண்டும் என்பதுடன், அவர் இறந்துவிட்டாரா என்பதனை உறுதிப் படுத்துதலும் வேண்டும். அத்துடன் அதுபற்றிச் சான்றிதழ் ஒன்றில் கையொப்பமிடுதலும் வேண்டும். மேலும் அதனை மறியற்சாலைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும் ;

(iii) மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இடமானது எந்தப்பிரிவில் அமைந்துள்ளதோ அந்தப் பிரிவின் நீதிவான் ஒருவர், மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள்ளாக தண்டனையளிக்கப்பட்டவரின் ஆள் அடையாளம் பற்றியும், மரணதண்டனைதீர்ப்பு முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விசாரித்து, தம்மைத் திருப்திப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் இணைப் பிரதிகளிலான அறிக்கை ஒன்றினை ஆக்குதலும் வேண்டும் மூலப்பிரதிகளுள் ஒன்று மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு கோப்பிடப்படுதல் வேண்டும். என்பதுடன் மற்றைய பிரதி, நீதிஅமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு கோப்பிடப்படுதலும் வேண்டும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) மரணதண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டவரான ஆள் விளக்கத்தின் போது சமுகமளிக்காமையால் அல்லது மறியற்சாலையிலிருந்து தப்பி ஓடியமையால் மரணதண்டனைத் தீர்ப்பு நிறை வேற்றப்படமுடியாதபோதும், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை நிறைவேற்றுதலானது, விடயத்துக்கேற்றவாறு, அவ்வாள் கைப்பற்றப்பட்டபின்னர் அல்லது மீண்டும் கைப்பற்றப்பட்டபின்னர் சனாதிபதி கட்டளையிடுகின்றவாறான அத்தகைய வேறு காலத்தில் பயனுறுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்டதான கட்டளை அல்லது ஆணைப்பத்திரம் எதனிலுமுள்ள நேரமும் இடமும் தொடர்பான தவிர்வு அல்லது வழு எதுவும் அத்துடன் அத்தகைய கட்டளையின் அல்லது ஆணைப்பத்திரத்தின் படிவ முறைபற்றியதான குறைபாடு எதுவும் அத்துடன் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகத் தவறியமை எதுவும், அத்தகைய கட்டளையின்கீழ் அல்லது ஆணைப்பத்திரத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டதான மரணதண்டனை நிறைவேற்றுகை எதனையும் அல்லது அவ்வாறு நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட நிறை வேற்றுகை எதனையும் சட்டமுறையற்றதாக்குவதாகக் கொள்ளப்படுதலாகாது அல்லது மற்றப்படிக்குச் சட்ட முறையானதாக இருந்திருக்கும் நிறைவேற்றுகை எதனையும் சட்டமுறையற்றதாக்குதல் ஆகாது.

இப்பிரிவிலும் 288 ஆம் பிரிவிலும், "சனாதிபதி" என்னுஞ் சொல்லமைப்பு, இலங்கைக் குடியரசின் சனாதிபதி எனப்பொருள் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**287.** மரணதண்டனைத்தீர்ப்புத் தவிர்ந்த மேல் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்புத் தொடர்பாக, பின்வரும் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்:-

மரண தண்டனைத் தீர்ப்புத் தவிர்ந்த மேல் நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல்.

(அ) தண்டனைத்தீர்ப்பு எடுத்துமொழியப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடியளவு விரைவாக, பதிவாளரானவர், பாரப்படுத்தல் ஆணைப்பத்திரம் ஒன்றினை ஆக்குதல் வேண்டும்; அது தண்டனைத்தீர்ப்பினை வழங்கிய நீதிபதியினால் அல்லது அவரது சக நீதிபதியினால் அல்லது அப்பதவிக்கு அடுத்துவருபவரால் கையொப்பமிடப்பட வேண்டும் என்பதோடு தண்டனைத் தீர்ப்பு எந்தத் தேதியன்று வழங்கப்பட்டதோ அந்தத்தேதி அவரால் இடப்படலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும் விதிக்கப்பட்டபடிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், மறியற்சாலை எதனதும் கண்காணிப்பாளருக்கு விளித்தெழுதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் 290 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**288.** எவரேனும் ஆள் தண்டனைச் சட்டக்கோவையினது 53 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதி விரும்பும்வரைக்கும், தடுத்து வைக்கப்பட வேண்டுமெனத் தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ள விடத்து, அவர், ஏதேனும் சட்டவாக்கம் அதற்கு முரணாக இருப்பது எப்படியிருப்பினும், சனாதிபதி காலத்திற்குக் காலம் பணிக்கக்கூடிய அத்தகைய இடத்திலும் அத்தகைய நிபந்தனைகளின்கீழும் தடுத்துவைக்கப்படுவதற்கு ஆளானவராதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள போது சட்டமுறையான கட்டுக்காவலில் இருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவின் கீழான தண்டனைத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றம் தவிர்ந்த வேறு நீதிமன்றங்களின் தண்டனைத் தீர்ப்புக்களை நிறைவேற்றுதல்

**289.** உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் மேல் நீதிமன்றமும் தவிர்ந்த ஏனைய நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புத் தொடர்பாகப் பின்வரும் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்:-

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக் கப்படுமிடத்து, தண்டனைத்தீர்ப்பினை வழங்குவதான நீதிமன்றம், நீதிபதியால் அல்லது அவரது சகநீதிபதியால் அல்லது பதவிக்கு அடுத்துவருபவரால் கையொப்பமிடப்பட்டதும் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டதான தேதியன்று தேதியிடப்பட்டதுமான ஆணைப் பத்திரம் ஒன்றினை உடனடியாகத் தயாரித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும் விதிக்கப் பட்டபடிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், மறியற்சாலை எதனதும் கண்காணிப்பாளரை விளித்து எழுதப்படுதலும் வேண்டும் ; அத்துடன், 290 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒவ்வொரு ஆணைப்பத்திரம் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பிரிவுகள் 286, 287, 289 ஆகியனவற்றின் கீழான ஆணைப்பத்திரங்களை வழங்குவதன் மீதான நடவடிக்கை முறை.

**290.** (1) பிரிவு 286, பிரிவு 287 அல்லது பிரிவு 289 என்பதில் குறிப்பிடப்பட்டதான அத்தகைய ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும், விதிக்கப்பட்ட படிவத்தில் மறியற்சாலைகள் திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் அத்தகைய அலுவலர் அந்த ஆணைப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டதன்மேல், அதன்கண் பெயர் குறிக்கப்பட்டவரான ஆளைப் பொறுப்பேற்று அவரை, நீதிபதியின் கைப்பட எழுதிய ஆணைப்பத்திரத்தோடு, ஆணைப் பத்திரத்தின்கண் பெயர் குறிக்கப்பட்டவரான மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கட்டுக்காவலுக்கு ஒப்படைத்தல் வேண்டும். சொல்லப்பட்ட ஆணைப்பத்திரமானது, அந்நோக்கத்திற்காகச் சொல்லப்பட்ட ஆளைத் தடுத்து வைத்திருப்பதற்கும் ஆணைப்பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்ட மறியற்சாலைக்கு அவரை இட்டுச் செல்லுவதற்கும் பூரண அதிகாரம் வழங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சொல்லப்பட்ட கண்காணிப்பாளர், மேற்சொல்லப்பட்டவாறாக ஆணைப்பத்திரத்தில் பெயர்குறிக்கப்பட்ட ஆளைப் பொறுப்பேற்றதன் மேல், தண்டனைத்தீர்ப்பானது நிறைவேற்றப்படும் வரையில் அவரைத் தடுத்துவைத்து கட்டுக்காவலில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன், வேறுவகையில் ஆணைப்பத்திரத்தினதும் அத்தகைய ஆள் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தினால் அவருக்குச் சட்டமுறையாக வழங்கப் பட்டதான ஏதேனும் கட்டளையினதும் நியதிகளுக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

(3) மேற்சொல்லப்பட்ட ஆணைப்பத்திரமானது அவ்வாறு தடுத்து வைப்பதற்கும் கட்டுக்காவல் செய்வதற்கும் தண்டனைத் தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கும், கண்காணிப்பாளருக்குப் பூரண அதிகாரம் வழங்குவதாதல் வேண்டும்.

(4) நீதிபதியின் கைப்பட எழுதிய ஆணைப்பத்திரத்தின் ஒரு பிரதி, வழக்குப் பதிவேட்டில் கோப்பிடப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவிலுள்ளது எதுவும் சவுக்கடித் தண்டனைத்தீர்ப்பினை நிறைவேற்றுதல் தொடர்பாக இச்சட்டக்கோவையிலுள்ள ஏற்பாடுகளைப் பாதிப்பதாகாது.

**291.** (1) அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டம் எதனதும் அதிகாரத்தின் கீழ், குற்றப்பணம் எதுவும் விதிக்கப்படுமிடத்து அத்தகைய சட்டத்தில் உள்ளதான அத்தகைய குற்றப்பணம் தொடர்பான வெளிப்படையான ஏற்பாடு எதுவும் இல்லாதிருப்பின் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்; அவையாவன :- குற்றப்பணத் தண்டனைத் தீர்ப்புக்கள் தொடர்பான ஏற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) குற்றப்பணம் எந்த அளவினதாக இருக்கலாம் என்பது தொடர்பில் தொகை எதுவும் கூறப்படவில்லையாயின், தவறாளர் எத்தொகைக்கு ஆளாவர் என்பது பற்றி வரையறையில்லை; ஆனால் மிகையானதாக இருத்தல் ஆகாது ;

(ஆ) மறியற்றண்ணையினாலும் குற்றப்பணத்தினாலும் தண்டிக் கப்படற்பாலதான தவறொன்றின் விடயம் ஒவ்வொன்றிலும் தவறாளர் மறியற்றண்டனையுடன் கூடஅல்லது மறியற்றண்டனையின்றித் தனித்துக் குற்றப்பணத்திற்குத் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்படுமிடத்தும், அத்துடன் குற்றப்பணத்தினால் மாத்திரமே தண்டிக் கப்படற்பாலதான தவறொன்றன் விடயம் ஒவ்வொன்றிலும், தவறாளருக்கு. குற்றப்பணததிற்குத் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்படுமிடத்தும், தண்டனைத்தீர்ப்பினை வழங்குகின்ற நீதிமன்றம், அதன் தற்றுணிபில், குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறும்பட்சத்தில் தவறாளர், ஒரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டும் எனத் தண்டனைத்தீர்ப்பின்மூலம் பணிக்கலாம். அக்காலப்பகுதியானது தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடிய வேறு ஏதேனும் மறியற் றண்டனைக்கு அல்லது மாற்றிய தண்டனைத்தீர்ப்பின் கீழ் அவர் ஆளாகியிருக்கக்கூடியதான மறியற்றண்டனைக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்;

(இ) பந்தி (ஆ) என்பதன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் தவறாளருக்கு விதிக்கப்பட்டதான குற்றப்பணம் பத்து ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து, நீதிமன்றம் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதற்காக மறியற்றண்டனையினை வழங்கு தலாகாது ; ஆனால் 15 (2) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கட்டளையை ஆக்கலாம் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) குற்றப்பணம் ஒன்றினைச் செலுத்தத் தவறியமைக்காக தவறாளரை மறியலுக்கனுப்பவேண்டும் என நீதிமன்றம் பணிப்பதான காலமானது, தவறானது மறியற்றண்டனையினாலும் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படற்பாலதானதாயின் அத்தவறுக்கென நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய மறியற்காலத்தின் நான்கிலொரு பகுதிக்கு அதிகமானதாக இருத்தலாகாது ;

(உ) குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியமைக்காக நீதிமன்றம் விதிக்கின்ற மறியற்றண்டனையானது, தவறாளர் தவறுக்கெனத் தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக்கூடிய விவரணங்களுள் எவ்விவரணத்தினதாகவும் இருக்கலாம்; தவறானது குற்றப்பணத்தினால் மாத்திரமே தண்டிக்கப்படற்பாலதாக இருப்பின், மறியற்றண்டனை யானது சாதாரணமானதாக இருத்தல் வேண்டும்;

(ஊ) தவறானது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதல்லாததாயின், குற்றப்பணத்தினைச் செலுத்தத் தவறியதற்காக நீதிமன்றம் தவறாளரை மறியலில் வைக்குமாறு பணிக்கின்ற காலப்பகுதி பின்வரும் அளவுகளுக்கு அதிகமானதாக இருத்தலாகாது; அவையாவன-

(i) குற்றப்பணத்தொகை பத்துரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் இருபத்தைந்து ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து, ஏழு நாட்காலத்துக்கு ;

(ii) குற்றப்பணத்தொகை இருபத்தைந்து ரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் ஐம்பது ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து, பதினான்கு நாட்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்திற்கு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) குற்றப்பணத்தொகை ஐம்பது ரூபாவுக்கு அதிகமானதாக, ஆனால் நூறு ரூபாவுக்கு அதிகமாகாததாக இருக்குமிடத்து, மூன்று மாதங்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்திற்கு;

(iv) குற்றப்பணத்தொகை நூறு ரூபாவுக்கு அதிகமானதாக இருக்குமிடத்து ஆறுமாதங்களுக்கு அதிகமாகாத ஏதேனும் காலத்திற்கு.

(எ) குற்றப்பணம் ஒன்றினைச் செலுத்தத் தவறியதற்காகவிதிக்கப்பட்டதான மறியற்றண்டனையானது, அத்தகைய குற்றப்பணம் செலுத்தப்பட்டவுடனும் அல்லது சட்டமுறையாக அறவிடப் பட்டவுடனும் முடிவுறுதல் வேண்டும் ;

(ஏ) குற்றப்பணம் செலுத்தத் தவறியதற்காக நிர்ணயிக்கப்பட்டதான மறியற்றண்டனைக்காலம் முடிவடைவதன் முன்னர், செலுத்தத் தவறியதற்காக அனுபவிக்கப்பட்டதான மறியற்றண்டனைக்காலம் இன்னும் செலுத்தப்படாததாயுள்ள குற்றப்பணத்தின் பாகத்துக்கான விகிதசமத்திலும் குறைவானதாக வில்லாத குற்றப்பணத்தின் அத்தகைய விகிதாசாரமான தொகை செலுத்தப்பட்டால் அல்லது அறவிடப்பட்டால், மறியற்றண்டனை முடிவுறுதல் வேண்டும்.

(ஐ) செலுத்தப்படாதிருப்பதான குற்றப்பணம் அல்லது அதன் ஏதேனும் பாகம் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் ஆறு ஆண்டுகட்குள்ளாக எப்போதாயினும், அறவிடப்படலாம் அத்துடன் தண்டனைத்தீர்ப்பின்கீழ் தவறாளர் ஆறு ஆண்டுகட்கு அதிகமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு ஆளாகுமிடத்து, அப்போது, அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் எப்போதாயினும் அறவிடப்படலாம் என்பதுடன், தவறாளரின் இறப்பானது, அவர் இறந்த பின்னர் அவரது கடன்களுக்கு. சட்டமுறையாகப் பொறுப்பாகக்கூடிய ஆதனம் எதையும் பொறுப்பிலிருந்து விடுவிப்பதுமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தவறாளர் ஒருவர் அப்போதைக்கு வலுவிலுள்ளதான சட்டம் எதனதும் அதிகாரத்தின்கீழ் குற்றப்பணம் ஒன்றினைச் செலுத்தவேண்டும் எனத் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள போதிலெல்லாம், குற்றப்பணம் செலுத்தத் தவறியதன் பேரில் தவறாளர் மறியலில் வைக்கப்பட வேண்டும் என தண்டனைத் தீர்ப்பானது பணித்திருந்தாலும், அத்தண்டனைத்தீர்ப்பினை விதிக்கும் நீதிமன்றமானது அதன் தற்றுணிபில், தவறாளருக்குச் சொந்தமான அசைவுள்ள ஆதனம் எதனையும் கைப்பற்றி விற்பதன்மூலம் பணத்தொகையினை அறவிடுவதற்கென ஆணைப்பத்திரம் ஒன்றினை வழங்கலாம். அத்தகைய ஆணைப்பத்திரமானது நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கையிலுள்ள எந்த இடத்திலேனும் அது நிறைவேற்றப்படலாம், ஆனால் அதனை வழங்கியதான நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்கு வெளியாக நிறைவேற்றப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டால், அது அவ்வாறு நிறைவேற்றப்படவுள்ள இடத்தில் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான் ஒருவரால் புறக்குறிப்பு இடப்படுதல் வேண்டும்.

(3) தவறாளர் ஒருவரினதும் அவரது குடும்பத்தினதும் உடுதுணியும் அத்துடன் விதைத்தானியங்கள் உட்பட, இருநூற்றைம்பது ரூபா பெறுமதியான அவரது தொழிற் கருவிகள். உபகரணங்கள் என்பன கைப்பற்றாணை ஒன்றின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுதலாகாது.

(4) (அ) தவறாளர் குற்றப்பணத்திற்கு மாத்திரம், அத்துடன் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன்பேரில் மறியற்றத் தண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளவிடத்து தவறாளர், ஒரு குற்றப்பணம் என்ற வகையில் வருமதியான முழுப்பணத் தொகையையும் முழுமையாக செலுத்துகின்ற ஏதேனும் விடயத்தில் தவிர, நீதிமன்றம் பின்வருவனவற்றுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் செய்யலாம் :- §2, 04 இல 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கென கால அவகாசம் வழங்கலாம் ;

2) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைத் தவணைப் பணங்களாகச் செலுத்துமாறு பணிக்கலாம் ;

3) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கு ஆளான ஆள், சொல்லப்பட்ட குற்றப்பணத்தினை அல்லது அதன் எவையேனும் தவணைப்பணங்களைச் செலுத்துவதற்கென பிணைகாரருடன் அல்லது பிணைக்காரர்களுடன் அல்லது பிணைக்காரரின்றி அல்லது பிணைக்காரர்களின்றி, விதித்துரைக்கப்பட்ட இயைபான படிவத்தில் முறி ஒன்றினை நீதிமன்றம் திருப்திபடும்படி எழுதித்தருவதற்கு சுதந்திர முடையவராதல் வேண்டும் எனப் பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய முறி, இச்சட்டக் கோவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வகையில் தரப்படலாம் என்பதுடன் வலுவுறுத்தவும்படலாம்.

ஆயினும், குற்றப்பணத்திற்கு மாத்திரமும் அத்துடன் அத்தகைய குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன்பேரில் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள தவறாளர் ஒருவர் தொடர்பில் நீதிமன்றம் (!) ஆம் (11) ஆம் (111) ஆம் உப்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லா விடயங்கயையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யாதவிடத்து, விதிவிலக்கிற்குட்பட்ட சந்தர்ப்பங்களிலும் அத்துடன் செய்யப்படவேண்டிய காரணங்களுக்காகவும் தவிர, நீதிமன்றமானது அந்தத் தவறாளர் தொடர்பில், அதே தவறு தொடர்பாக அதே தவறாளர் அடுத்துறும் தவறுகையொன்றின் விடயத்தில் அத்தகைய உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லா விடயங்களையும் அல்லது அவற்றுள் எதையும் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இந்த உட்பிரிவு வலுவுக்கு வரும் திகதியன்று, குற்றப்பணம் ஒன்றின் கொடுப்பனவின் தவறுகையொன்றிற்கு ஆளெவரும் மறியல் தண்டனைக்காலப் பகுதியொன்றை அனுபவிக்குமிடத்து (அ) என்ற பந்திக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கென அவருக்கு தண்டனைத் தீர்ப்பளித்த நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளை கொணர்வது அவரது தண்டனை தீர்ப்பை அவர் எந்த மறியற்சாலை அனுபவிக்கின்றாரோ அந்தமறியற்சாலையின் கண்காணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) என்பதன் (1) ஆம் அல்லது (11) ஆம் உட்பந்தியின் கீழ் கொடுப்பனவு எதுவும் செய்யப்பட வேண்டியுள்ளவிடத்து, அத்தகைய கொடுப்பனவு செய்யுமாறு பணிக்கும் நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் எவரேனும் பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் அக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் இந்நோக்கத்திற்கென, குற்றப் பணத்தின் தொகையையும் ஒவ்வொரு தவணைக்கொடுப்பனவின் குற்றப்பணம் எந்ததவணைப்பணங்களில் செலுத்தப்பட வேண்டும் என்பதனையும் இயைபான வேறு விபரங்களையும் கொடுத்து விதித்துரைக்கப்பட்ட படிவத்திலானதும் அத்தகைய வங்கியில், எவரேனும் பெரும்பாகச் செயளாலரின் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் அத்தகைய கொடுப்பனவை செய்யும் போது முன்வைக்கப்பட வேண்டியதுமான கூற்றொன்றை நீதிமன்றம் தவறாளருக்கு வழங்குதல் வேண்டும். வங்கி, பெரும்பாகச் செயலாளர் அல்லது அத்தகைய அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபர் விடயத்திற்கேற்ப அத்தகைய குற்றப்பணத்தின் அல்லது தவணைப்பணத்தின் கொடுப்பனவை ஏற்றுக் கொண்டதன்பேரில் அதன் பயனுக்கு அக்கூற்று புறக்குறிப்பு ஒன்றைச் செய்தலும் அத்தகைய கூற்றைத் தவறாளருக்கு திருப்பியனுப்புதலும் அத்துடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விடயத்திற்கேற்ப அத்தகைய குற்றப்பணத்தின் அல்லது தவணைப் பணத்தின் கொடுப்பனவிற்கான எண்பிப்பை அத்தகைய கொடுப்பனவை செய்யுமாறு பணிக்கும் நீதிமன்றத்திற்கு அத்கைய கொடுப்பனவு செய்யப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பிந்தாமல் அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) இவ்வுட்பிரிவில் " அங்கீகரிக்கப்பட்ட வங்கி " என்பது 1988 ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் குறித்துரைக் ககூடியவாறன உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கி என்று பொருட்படும்."

(அ) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கெனக் கால அவகாசம் வழங்கலாம் ;

(ஆ) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைத் தவணைப்பணங்களாகச் செலுத்துமாறு பணிக்கலாம் ;

(இ) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கு ஆளானவரான ஆள், சொல்லப்பட்ட குற்றப்பணத்தினை அல்லது அதன் எவையேனும் தவணைப்பணங்களைச் செலுத்துவதற்கென, பிணைக்காரருடன் அல்லது பிணைகாரர்களுடன் அல்லது பிணைக்காரரின்றி அல்லது பிணைக்காரர்களின்றி, முறி ஒன்றினை, நீதிமன்றம் திருப்பதிப்படும்படி அதற்கு எழுதித் தருவதற்கு சுதந்திரமுடையவராதல் வேண்டும் எனப்பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய முறி, இச்சட்டக்கோவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வகையில் தரப்படலாம் என்பதுடன் வலுவுறுத்தவும்படலாம்.

(5) குற்றப்பணம் ஒன்று தவணைப்பணங்களாகச் செலுத்தப்படவேண்டும் எனப் பணிக்கப்பட்டபோதும், தவணைப்பணம் ஏதேனும் ஒன்றினைச் செலுத்தத் தவறுமிடத்தும், அப்போது செலுத்தப்படாதிருப்பதான தவணைப்பணங்கள் எல்லாவற்றையும் செலுத்தத் தவறியிருந்தார்போன்று அதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**292.** தவறாளர் ஒருவர் குற்றப்பணத்திற்கு மாத்திரமும், குற்றப்பணத்தினைச் செலுத்தத் தவறியபோது மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுமிடத்தும், நீதிமன்றம் 291 ஆம் பிரிவின் கீழ் ஆணைப்பத்திரம் ஒன்றினை வழங்கும் போதும், நீதிமன்றம் மறியற்றண்டனைத் தீர்ப்பு நிறைவேற்றப்படுவதை இடைநிறுத்திவைக்கலாம் என்பதுடன், அத்தகைய ஆணைப்பத்திரத்தைத் திருப்பியனுப்புவதற்கு நியமிக்கப்பட்டதானநாளில் (இது முறியினை எழுதி நிறைவேற்றிய நேரத்திலிருந்து பதினைந்து நாட்களுக்கு அதிகமாகாதநாளாக இருத்தல் வேண்டும்) அத்தகைய நீதிமன்றத்திற்கு முன்னர் அவர் தோன்றுவார் என்ற நிபந்தனையின் பேரில் பிணைக்காரர்களுடன் அல்லது பிணைகாரரின்றி முறி ஒன்றினைத் தவறாளர் எழுதி நிறைவேற்றியதன்மேல் தவறாளரை விடுவிக்கலாம் என்பதுடன், அந்நாளில் குற்றப்பணம் செலுத்தப்படாத விடத்து அல்லது கைக்கிட்டாதவிடத்து, நீதிமன்றமானது மறியற்றண்டனைத் தீர்ப்பினை உடனடியாக நிறைவேற்றும்படி பணிக்கலாம் :

ஆயின், குற்றப்பணமானது மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்படுமிடத்து, முறியானது, அதன்கண் பெயர் குறிக்கப்பட்டதான நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் தவறாளர் தோன்றுவார் என்ற நிபந்தனையின் பேரிலானதாக இருக்கலாம் என்பதுடன், அத்தகைய நீதிவான் நீதிமன்றம், அவர் அவ்வாறு தோன்றும் நாளில், குற்றப்பணம் செலுத்தப்பட வில்லையாயின் அல்லது கைக்கிட்டவில்லையாயின், மறியற்றண்டனைத் தீர்ப்பினை உடனடியாக நிறைவேற்றும்படி பணிக்கலாம்.

**293.** தண்டனைத்தீர்ப்பு எதனையும் நிறைவேற்றுவதற்கான ஆணைப்பத்திரம் ஒவ்வொன்றும், தண்டனைத் தீர்ப்பினை விதித்தவரான நீதிபதியால் அல்லது அவரின் சக நீதிபதியால் அல்லது பதவியில் அவருக்கு பின் வந்தவரால் வழங்கப்படலாம். ஆணைப் பத்திரத்தை எவர் வழங்கலாம் என்பது

**294 - 298** நீக்கப்பட்டுள்ளது. § 3, 21 இல 2005 §3, 21 இல 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பியோடிய குற்றத்தீர்ப்ப ளிக்கப்பட்ட வர்கள் மீதான தண்டனைத் தீர்ப்புக்கள்.

**299.** (1) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் மறியற்சாலையிலிருந்து தப்பியோடியுள்ளார் என்ற காரணத்துக்காக சாதாரண அல்லது கடூழிய மறியற்றண்டனையில் முடிவுறாதிருக்கும் காலம் எதனையும் அல்லது அவர் தப்பியோடுவதற்கு முன்னர் அவருக்கு விதிக்கப்பட்டதான தண்டனைத்தீர்ப்பு அல்லது தண்டனைத்தீர்ப்புகள் எதனதும்கீழ் அவர் ஆளாகியுள்ள வேறு தண்டனை எதனையும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் எவரும் தவிர்த்தலாகாது.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது விளக்கத்திற்குச் சமூகமளிக்காதபோது அவர்மீது தண்டனைத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து. அவர் கைது செய்யப்பட்டதன்மேல் உடனடியாக அத்தகைய தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

§4, 21 இல. 2005

(3) தப்பியோடிய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர்மீது மரண தண்டனை அல்லது மறியலுடனான அல்லது மறியலில்லாத குற்றப்பணம் ஆகிய தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்படும் போது, அத்தகைய தண்டனைத்தீர்ப்பானது, மரணத்துக்கானதாக அல்லது குற்றப்பணத்துக்கானதாக இருந்தால் இதனகத்து முன்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உடனடியாகப் பயனுறுதல் வேண்டும். அத்துடன் புதிய தண்டனைத் தீர்ப்பின் கீழ் மறியல் தண்டனை கடூழியமானதாக இருத்தலோடு, அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர் தப்பியோடும்போது சாதாரண மறியற்றண்டனை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருந்தால், கடூழிய மறியற்றண்டனை உடனடியாகப் பயனுறுதல் வேண்டும் என்பதுடன், முன்னர் உள்ள தண்டனைத்தீர்ப்புடன் ஒருங்கே வலியுறுத்தப்படுதலும் வேண்டும். ஆயின், அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் தப்பியோடும்போது கடூழிய மறியற்றண்டனை அனுபவிப்பவராக இருந்தால், புதிய தண்டனைத்தீர்ப்பின் கடூழிய மறியற்றண்டனையானது அத்தகைய தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டவர் அவர் மீண்டும் கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, அவர் தப்பியோடிய நேரத்தில் முந்திய தண்டனைத்தீர்ப்பு முடிவுறாதிருக்கின்ற காலத்திற்குச் சமமான மேலதிக ஒரு காலப்பகுதிக்குக் கடூழிய மறியற்றண்டனை அனுபவித்த பின்னர் பயனுறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**300.** ஆள் ஒருவர், மறியற்றண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, மறியற்றண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டால், அத்தகைய மறியற்றண்டனையானது, அவர் எந்த மறியற்றண்டனைக்கு முன்னர் தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்டாரோ அந்த மறியற்றண்டனை முடிவடையும்போது, தொடங்குவதாதல் வேண்டும். ஏற்கனவே வேறு தவறுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட தவறாளர் மீதான தண்டனைத் தீர்ப்பு.

**301.** தண்டனைச் சட்டக்கோவையின் 55 ஆம், 67 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், எத்தன்மைத்தான எல்லாத் தவறுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். தண்டனைச் சட்டக்கோவையின் குறித்த சில பிரிவுகள் எல்லாத்தவறுகளுக்கும் ஏற்புடையனவாதல்.

**302.** தண்டனைத்தீர்ப்பு ஒன்று முற்றாக நிறைவேற்றப்பட்டதும், அதனை நிறைவேற்றியவரான அலுவலர், ஆணைப்பத்திரம் எந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்துக்கு, தண்டனைத்தீர்ப்பு எந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனைத் தமது கைப்படச் சான்றுப்படுத்திய ஒரு புறக்குறிப்புடன், அந்த ஆணைப்பத்திரத்தைத் திருப்பி அனுப்புதல் வேண்டும். தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப் பட்டதன்மேல், ஆணைப்பத்திரத் தினைத் திருப்பி அனுப்புதல்.

**303.** (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நீதிமன்றமொன்று தவறாளரொருவருக்கு ஒரு காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பளிப்பதன்மேல், பின்வருவனவற்றைக் கவனத்திற் கொண்டு அச்சூழ்நிலைகளில் தண்டனைத் தீர்ப்பு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் தோதானதென எழுத்தில் கூறப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் திருப்திப்படின், அது அவ்வாறு ஆக்கலாம் :- நிறுத்தி வைக்கப்படும் மறியற்றண்டனைத் தீர்ப்பு

§2, 47 இல. 1999

(2) மறியற்றண்டனையை முன்னெப்போதும் அனுபவித்திராத தவறாளர் ஒருவர்மீது, தவறு ஒன்று தொடர்பாக ஆறு மாதங்களுக்கு மேற்படாதகாலத்திற்கு மறியற்றண்டனையை விதிக்கும் நீதிமன்றம், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அத்தவறு, பலாத்காரத்தைப் பயன்படுத்தலை அல்லது பலாத்காரத்தைப் பயன்படுத்தும் அச்சுறுத்தலை, அல்லது சுடுபடைக்கலத்தை, வெடிபொருளை அல்லது தீங்கு விளைவிக்கும் ஆயுதத்தைப் பயன்படுத்தலை அல்லது வைத்திருத்தலைச் சம்பந்தப் படுத்தினாலன்றி ; அல்லது

(ஆ) நன்னடத்தைப்பாதுகாவலுக்கான கட்டளை அல்லது நிபந்தனையோடு கூடிய விடுவிப்புக்கான கட்டளை யொன்று முன்னரே அது தொடர்பில் ஆக்கப்பட்டிருந்த அத்தகைய தவறாக இருந்தாலன்றி ; அல்லது

(இ) தவறு புரியப்பட்டபொழுது தவறாளர் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டிருந்தாலன்றி ; அல்லது

(ஈ) இவ்வுட்பிரிவின் நியதிகளின்படி தவறாளர் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல் அவ்விடயத்தின் சூழ்நிலையில், எழுத்தில் கூறப்படவேண்டியனவான காரணங்களின்பேரில், தோதாகவிராதென அந்நீதிமன்றம் கருதினாலன்றி,

ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்.

(3) ஒரு தவறு சம்பந்தமாக நிறுத்திவைக்கப்படும் தண்டனைத் தீர்ப்பை எவர்மேலாவது விதிக்கும் நீதிமன்றமொன்று, அதே நடவடிக்கையில் வேறு ஒரு தவறு தொடர்பாக மறியற்றண்டனைத் தீர்ப்பை வழங்கலாகாது.

(4) நிறுத்திவைக்கப்படும் தண்டனைத்தீர்ப்பை விதிக்கும் பொழுது, அத்தண்டனைத்தீர்ப்பின் நடைமுறைக்காலத்தில் தவறாளர், பின்னர் ஒரு தவறைப் புரிந்தால், 304 ஆம் பிரிவின்கீழ் அவர் எவ்வாறு பொறுப்புக்கு ஆளானவராகிறார் என்பதனைச் சாதாரண மொழிநடையில் நீதிமன்றம் தவறாளருக்கு விளக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) தவறாளர் நடைமுறைக் காலத்தின் பின்னர், ஒரு தவறைப் புரியாவிட்டால் தவறாளர்மீது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பும் நிறுத்தி வைக்கப்படும் தண்டனைத்தீர்ப்பும், எல்லா நோக்கங்களுக்கும் ஒருபோதும் எழுதப்பட்டிராததாக அல்லது விதிக்கப்பட்டிராததாகக் கருதப்படல் வேண்டும்;

ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர், அத்தண்டனைத்தீர்ப்பின் விளைவாக, தண்டம் வகையாகவோ, செலவுத்தொகை வகையாகவோ அல்லது நட்டஈடு வகையாகவோ, குற்றப் பணத்தை அல்லது அதன் பாகத்தைக் கொடுத்துள்ளவிடத்து, அவர் அக்குற்றப்பணத்தை அல்லது அப்பணத்தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராகார்.

(6) நிறுத்திவைக்கப்படும் தண்டனைத்தீர்ப்பு ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்படுமுன்பு, தவறாளரை அடையாளங் காண்பதற்கும் அவரின் கைவிரலடையாளம் எடுப்பதற்கும் என நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(அ) எத்தவறு தொடர்பில் தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்படுகின்றதோ அத்தவறுக்கு விதித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய தண்டம்;

(ஆ) தவறின் தன்மையும் பாரதூரமும்;

(இ) தவறுக்காகத் தவறாளரின் குற்றத்தன்மையும் பொறுப்புடைமையின் அளவும் ;

(ஈ) தவறாளரின் முன்னைய பண்பு ;

(உ) தவறு புரியப்பட்டமையிலிருந்து நேரடியாக விளைகின்ற ஏதேனும் ஊறுபாடு, நட்டம் அல்லது சேதம் ;

(ஊ) தவறாளர் தொடர்பாக ஏதேனும் குற்றத்தை அதிகரிக்கின்ற அல்லது குற்றத்தைத் தணிக்கின்ற காரணி உள்ளமை;

(எ) சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் நீதியாகவுள்ள ஓர் அளவுக்கும் ஒரு முறையிலும் தவறாளரைத் தண்டிக்க வேண்டிய தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஏ) இதேபோன்ற அல்லது இதையொத்த தவறுகளைப் புரிவதிலிருந்து தவறாளரை அல்லது வேறு ஆட்களைத் தடுப்பதற்கான தேவை

(ஐ) தவறாளர் எவ்வகையினதான நடத்தையில் ஈடுபட்டிருந்தாரோ, அவ்வகையினதான நடத்தை நீதிமன்றத்தினால் தண்டிக்கப் படுவதனை வெளிப்படுத்துவதற்கான தேவை:

(ஒ) உத்தரித்தவரை அல்லது சமுதாயத்தைத் தவறாளரிடமிருந்து பாதுகாப்பதற்கான தேவை :

(ஓ) தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் தவறுக்குத் தாம் குற்றவாளியெனக் கூறியிருப்பதுடன் அத்தகைய ஆள் பயபக்தியாகவும் உண்மையாகவும் இரக்கப்படுகின்றார் என்ற நிகழ்வு : அல்லது

(ஔ) மேலேயுள்ளவற்றுள் இரண்டின் அல்லது அதற்கதிகமானவற்றின் சேர்க்கையும்.

(2) (அ) எத்தவறு தொடர்பில் தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்படுகின்றதோ அத்தவறுக்காகச் சட்டத்தினால் கட்டாயமான குறைந்தபட்ச மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றும் விதித்துரைக்கப்பட்டிருப்பின் : அல்லது

(ஆ) நிறுத்திவைக்கப்பட்டிராத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனையை தவறாளர் அனுபவித்துக் கொண்டிருப்பின் அல்லது அனுபவிக்க வேண்டியவராகவிருப்பின் : அல்லது

(இ) தவறாளர் நன்னடத்தை பாதுகாவல் கட்டளைக்கு அல்லது நிபந்தனைகளுடனான விடுதலைக்கு அல்லது விடுப்புக்கு அமைந்தவராகவிருந்த போது தவறானது புரியப்பட்டிருப்பின் அல்லது

(ஈ) விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலம் அல்லது தவறாளர் அதே வழக்கு நடவடிக்கைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து கூட்டு மொத்த மறியற்றண்டனைக் காலங்கள் இரண்டாண்டுகளை விஞ்சியிருப்பின்,

மறியற்றண்டனைத் தீர்ப்பை நிறுத்திவைக்கின்ற கட்டளையொன்றை நீதிமன்றமொன்று ஆக்குதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) (இதனகத்துப்பின்னர் "தொழிற்படு காலப்பகுதி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) ஒரு தண்டனைத் தீர்ப்பின் முழுமையும் அல்லது அதன் ஏதேனும் பாகம் எக்காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்தி வைக்கின்ற கட்டளையை ஆக்குகின்ற போது நீதிமன்றத்தினால்:

(அ) தீர்மானிக்கப்படுதல் வேண்டும் : அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின் அத்தகைய காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது அதன் பாகத்தை நிறுத்திவைக்கின்ற கட்டளைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுக்குக் குறைவானதாகவிருத்தலாகாது.

(4) நிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட தவறாளரொருவர்:-

(அ) தொழிற்படு காலப்பகுதியின் போது, தவறாளர் எந்தச் தவறுக்கான நியதிச்சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதாகவுள்ளதோ அந்த இன்னொரு தவறைப் புரிந்தாலொழியவும் : அத்துடன்

(ஆ) (13) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையை நீதிமன்றம் ஆக்கினாலொழியவும்:-

நிறுத்திவைக்கப்பட்ட மாறியற்றண்டனையின் ஏதேனும் பாகத்தை அனுபவித்தலாகாது.

(5) தொழிற்படு காலப்பகுதியானது, தண்டனைத் தீர்ப்பின் முழுமையை அல்லது பாகத்தை நிறுத்திவைக்கின்ற கட்டளைத் தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) தொழிற்படு காலப்பகுதியின்போது தவறாளர் ஒருவருக்கு, தொழிற்படு காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் புரியப்பட்ட இன்னொரு தவறுக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படின், தவறாளர் அந்தத் தண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருக்கையில் தொழிற்படு காலப்பகுதி தொடர்ந்து கழிந்துபோகின்றது.

(7) நிறுத்திவைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட தவறாளரொருவர், தொழிற்படு காலப்பகுதி முடிவுற்றதன் மேல் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(8) நிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பானது, பதவிக்கான தகைமையீனம் அல்லது பதவி இழப்பு அல்லது ஓய்வூதியங்கள் அல்லது வேறு நன்மைகள் இழப்பிக்கப்படுகை அல்லது இடைநிறுத்துகை என்பவற்றுக்கு ஏற்பாடு செய்கின்ற ஏதேனும் சட்டம் தவிர்ந்த சட்டம் எதனதும் நோக்கத்துக்காக மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றாகவிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) உட்பிரிவு (13) இன் கீழ் முழுமையாக நிறுத்திவைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு முழுவதையும் அல்லது அதன் பாகத்தை அனுபவிக்கும்படி தவறாளரொருவருக்குக் கட்டளையிடப்படின், அப்போது, பதவிக்கான தகைமையீனம் அல்லது பதவி இழப்பு அல்லது ஓய்வூதியங்கள் அல்லது வேறு நன்மைகள் இழப்பிக்கப்படுகை அல்லது இடைநிறுத்துகை நோக்கங்களுக்காக, அவ்வுட்பிரிவின் கீழ் கட்டளை ஆக்கப்பட்ட நாளன்று தவறாளர் மறியற்றண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளவரெனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(10) உட்பிரிவுகள் (8), (9) என்பவற்றின் நோக்கங்களுக்காக "சட்டம்" என்பது, பாராளுமன்றத்தின் சட்டவாக்கம் ஏதேனும் பாராளுமன்றச் சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், விதிகள், துணைவிதிகள், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகள் மற்றும் அமைச்சரவையினால் ஆக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டக்கோவைகள் அல்லது விதிகளை உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) எந்தத் தவறுக்கான நியதிச் சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதோ அந்தத் தவறுக்காக நீதிமன்றமொன்று ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிப்பின் அத்துடன் அந்தத் தவறு இன்னொரு தவறு தொடர்பான தொழிற்பாடு காலப்பகுதியின் போது புரியப்பட்டிருப்பின், ஏதேனும் நீதிமன்றம் (13) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளுக்கெதிராக நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(12) (அ) எந்தத் தவறுக்கான நியதிச்சட்ட முறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதோ அந்தத் தவறுக்காக ஆளொருவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பின் அத்துடன் அந்தத் தவறானது இன்னொரு தவறு தொடர்பான தொழிற்படு காலப்பகுதியின் போது புரியப்பட்டிப்பின், அப்போது அக்கருமங்களைச் சார்ந்தி. மற்றைய தவறு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை விதித்த நீதிமன்றத்துக்கு முறைப்பாடொன்று செய்யப்படலாம்.

(ஆ) பந்தி (அ) வின் கீழான முறைப்பாடொன்று,

(i) வேறெவரேனுமாளினால்,

(ii) தொழிற்படு காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து இரண்டாண்டுகளுக்குப் பிந்தாமல்,

செய்யப்படலாம்.

(இ) பந்தி (அ) வின் கீழான முறைப்பாடொன்று எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், முறைப்பாட்டாளரிடமிருந்தான சத்தியக்கடதாசி யொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(ஈ) சத்தியக்கடதாசியினால் ஆதாரப்படுத்தப்பட்ட எழுத்திலான முறைப்பாடொன்று (அ) என்னும் பந்தியின் கீழ் நீதிமன்றத்தினால் பெறப்படின், எந்த ஆள் தொடர்பில் நீதிமன்றம் நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பை விதித்துள்ளதோ அந்த ஆளையும், (அ) என்னும் பந்தியின் கீழ் முறைப்பாட்டைச் செய்கின்ற ஆளையும், குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் அதன் முன்னர் தோன்றும்படி அது கட்டளைவிட்டழைத்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) பந்தி (ஈ) இன் கீழ் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட அழைப்புக்கட்டளை அந்த ஆளுக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது அந்த ஆள் கடைசியாக வசித்ததாக அறியப்பட்ட இடத்தில் விட்டுவிடப்படல் வேண்டும்.

(ஊ) பந்தி (ஈ) இன் கீழ் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்படி கட்டளைவிட்டழைக்கப்பட்ட எவரேனுமாள், அழைப்புக்கட்டளைக்கு இணக்கமாக நீதிமன்றத்தில் தோன்றுவதற்குத் தவறுவாராயின், அவரைக் கைதுசெய்து அதன் முன்னர் கொண்டுவருவதற்கு நீதிமன்றம் பிடியாணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(13) (அ) பன்னிரெண்டாம் உட்பிரிவின் கீழான முறைப்பாட்டின் கேட்பின்மீது, எந்தத் தவறுக்கான நியதிச்சட்டமுறையான தண்டம் மறியற்றண்டனையாகவுள்ளதோ அல்லது அதனை உள்ளடக்குகின்றதோ அந்தத் தவறுக்கு ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென்றும், எந்தத் தவறு தொடர்பில் நீதிமன்றம் நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றை விதித்துள்ளதோ அந்தத் தவறு தொடர்பான தொழிற்படு காலப்பகுதியின் போது தவறானது புரியப்பட்டதென்றும் நீதிமன்றம் திருப்திப்படின், நீதிமன்றமானது, (7) ஆம் உட்பிரிவில் எது எப்படியிருப்பினும் :-

(i) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பை அல்லது பகுதியளவிலான தண்டனைத் தீர்ப்பை மீட்டு அதனை அனுபவிக்கும்படி தவறாளருக்கும் கட்டளையிடலாம் : அல்லது

(ii) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் பாகத்தை அல்லது பகுதியளவிலான தண்டனைத்தீர்ப்பை மீட்டு அதனை அனுபவிக்கும்படி தவறாளருக்குக் கட்டளையிடலாம் : அல்லது

(iii) முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் விடயத்தில், கட்டளைத்தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குப் பிந்தாத ஒரு தேதிக்குத் தொழிற்படு காலப்பகுதியை நீடிக்கலாம் :- அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு தொடர்பில் கட்டளையெதனையும் ஆக்காதிருக்கலாம்.

அத்துடன் சேர்ந்து, அத்தகைய ஆளின்மீது இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விதிக்கலாம் .

(ஆ) நிறுத்திவைக்கப்பட்டுள்ள மறியற்றண்டனைக் காலத்தை அனுபவிக்கும்படி நீதிமன்றம் தவறாளர் ஒருவருக்கு (அ) என்னும் பந்தியின்கீழ் கட்டளையிடின், அக்காலமானது, நீதிமன்றம் வேறு வகையாகக் கட்டளையிட்டாலொழிய :-

(i) உடனடியாக அனுபவிக்கப்படுதல் வேண்டும் : அத்துடன்

(ii) தவறாளர் அனுபவித்துக்கொண்டிருக்கும் அல்லது அனுபவிக்கவுள்ள வேறேதேனும் மறியற்றண்டனைக் காலப்பகுதியுடன் ஒருங்கியைபாக உட்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) ஏதேனும் பின்னரான தவறு பற்றிய நிகழ்வு உட்பட, நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்பட்டதிலிருந்து எழுந்துள்ள அல்லது அறியவந்துள்ள எல்லாச் சூழ்நிலைகளினதும் நோக்கில் (13) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் (ii) ஆம் அல்லது (iii) ஆம் உட்பந்தியின்கீழ் நீதிமன்றம் கட்டளையொன்றை ஆக்குதல் அநீதியானதாகவிருக்குமென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டா லொழிய, அவ்வாறாக்குதல் வேண்டுமென்பதுடன், அது அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பின், நீதிமன்றமானது அதன் காரணங்களை எழுத்தில் கூறுதலும் வேண்டும்.

(ஈ) உட்பிரிவு (12) இன் கீழ் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் தவறாளருக்கெதிராக உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்கு நீதிமன்றத்துக்கு இயலாதிருப்பின், அது விதிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மேல் பிணையின்மீது அவரை விடுதலை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையின் பயனை நீதிமன்றம் தவறாளருக்கு விளக்குதல்.

§2, 47 இல 1999

**304.** மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை நிறுத்திவைக்கின்ற கட்டளையை ஆக்குவதற்கு உத்தேசிக்கின்ற நீதிமன்றமொன்று, அத்தகைய கட்டளையை ஆக்குமுன்னர் -

(அ) (i) உத்தேசிக்கப்பட்ட கட்டளையின் நோக்கத்தையும் பயனையும் அத்துடன்

(ii) தொழிற்படு காலப்பகுதியின் போது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான இன்னுமோர் தவறைத் தவறாளர் புரிந்தால் எழக்கூடிய விளைவுகளையும்.

தவறாளருக்கு உடனும் விளக்கக்கூடிய ஒரு மொழியில் விளக்குதல் வேண்டும், அல்லது விளக்குவித்தல் வேண்டும் :

(ஆ) தவறாளரை அடையாளம் காண்பதற்காகவும் அவரின் கைவிரலடையாளங்களை எடுப்பதற்காகவும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்."

**305.** நீக்கப்பட்டுள்ளது §3, 47 இல 1999

## அத்தியாயம் XXV

## தவறாளர்களை நிபந்தனையின்பேரில் விடுவித்தல் முதலியன

தவறாளர்களை நிபந்தனையின் பேரில் விடுவிப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

**306.** (1) எவரேனும் ஆள் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர், அத்தகைய நீதிமன்றத்தாற் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கெனக் குற்றஞ்சாட்டப்பட்டபோதும் குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டதெனக் கருதியிருந்தும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் நடத்தை, முன்வரலாறு, வயது, உடல் நிலை, அல்லது மனநிலை என்பவற்றை அல்லது தவறின் அற்பத்தன்மை அல்லது எவ்வாறான குற்றந் தணிக்கும் சூழ்நிலையில் தவறு புரியப்பட்டது என்பது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தண்டனை எதனையும் அல்லது பெயரளவிலான தண்டனை தவிர்ந்த வேறு தண்டனை எதனையும் கொடுப்பது உசிதமற்றதென அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தவறாளரை நிபந்தனையின் பேரில் விடுவித்தல் உசிதமானதென நீதிமன்றம் அபிப்பிராயப்படும் போதும், நீதிமன்றமானது, குற்றத்தீர்ப்பு வழங்கமுற்படாது, ஒன்றில் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அத்தகைய கண்டத்தலின்பின்னர் அத்தகைய தவறாளரை விடுவிக்குமாறு கட்டளையிடலாம் ; அல்லது

(ஆ) நன்னடத்தையுள்ளவராக இருப்பாரெனவும், மூன்று ஆண்டுகட்கு அதிகமாகாததும், நீதிமன்றத்தின் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதானதும் ஆன அத்தகைய காலப்பகுதியினுள் எப்போதேனும் அழைக்கப்பட்டால் குற்றத்தீர்ப்புக்கும் தண்டனைத்தீர்ப்புக்கும் தோன்றுவாரெனவும் கூறும் நிபந்தனையில் பிணைக்காரருடன் அல்லது பிணைக்காரரின்றி பிணைப்பத்திரமொன்றை முடிப்பதன் பேரில் தவறாளரை விடுவிக்கலாம்.

(2) எவரேனும் ஆள் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதற்குமென குற்றப்பகர்வின்மேல் குற்றத்தீர்ப்பு வழங்கப்படுமிடத்தும், குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் நடத்தை முன்வரலாறு, வயது, உடல்நிலை, அல்லது மனநிலை என்பவற்றை அல்லது தவறின் அற்பத்தன்மை அல்லது எவ்வாறான குற்றந்தணிக்கும் சூழ்நிலையில் தவறுபுரியப்பட்டது என்பது ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, தண்டனை எதனையும் அல்லது பெயரளவினதான தண்டனை தவிர்ந்த தண்டனை எதனையும் கொடுப்பது உசிதமற்றதென அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தவறாளரை நிபந்தனையின்பேரில் விடுவித்தல் உசிதமானதென நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டபோதும், நீதிமன்றமானது, மறியற்றண்டனைத் தீர்ப்பினை விதிப்பதற்குப் பதிலாக, நன்னடத்தையுள்ளவராக இருப்பாரெனவும், மூன்று ஆண்டுகட்கு அதிகமாகாததும் நீதிமன்றத்தின் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதும் ஆன அத்தகைய காலப்பகுதியினுள் எப்போதேனும் அழைக்கப்பட்டால் தண்டனைக்குத் தோன்றுவாரெனவும் கூறும் நிபந்தனையில் பிணைக்காரருடன் அல்லது பிணைக்காரரின்றி பிணைப்பத்திரமொன்றை முடிப்பதன்பேரில் தவறாளரை விடுவித்துக் கட்டளையாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கக்கூடிய கட்டளை எதற்கும் மேலதிகமாக -

(i) இச்சட்டக்கோவையின் 17 (4) என்னும் பிரிவின்கீழான நட்டஈட்டையும் ; அத்துடன்

(ii) நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத தொகையிலான அரசின் செலவுகளையும்,

கொடுக்குபடி தவறாளருக்குக் கட்டளையிடலாம்.

(4) இப்பிரிவின் கீழான கட்டளை ஒன்று, நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் ஆக்கப்படுமிடத்து, அக்கட்டளையானது, களவாடப்பட்ட ஆதனத்தை மீள உரித்தாக்கும் அல்லது மீட்கும் நோக்கத்திற்காகவும், சொந்தக்காரருக்கு அந்த ஆதனத்தை மீளளிப்புச் செய்தல் அல்லது ஒப்படைத்தல் சம்பந்தமாகவும், அத்துடன் அத்தகைய மீளளித்தலின் மீது அல்லது ஒப்படைத்தலின் மீது அல்லது மீளளித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாகப் பணம் செலுத்துவது சம்பந்தமாகவும் கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்தை இயலச் செய்யும் நோக்கத்திற்காகவும் குற்றத்தீர்ப்பொன்று என்றாற் போன்று அதே பயனுடையதாதல் வேண்டும்.

பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகள்.

**307.** இவ்வத்தியாயத்தின் கீழ் எழுதி நிறைவேற்றப்பட்ட பிணைப்பத்திரமொன்று, நீதிமன்றமானது, அவ்விடயத்தின் குறிப்பான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அதன்கண் உட்புகுத்தப்படற்பாலனவென நீதிமன்றமானது கட்டளையிடக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளை உள்ளடக்கியிருக்கலாம்:-

(அ) திருடர்களுடன் அல்லது விரும்பத்தகாத ஆட்களுடன் கூடுவதினின்றும், அல்லது விரும்பத்தகாத இடங்களுக்குப் பலகால் செல்லுவதினின்றும் தவறாளரைத் தடைசெய்தல் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குடிபோதையில் இருந்தார் என்பதே தவறாயிருக்குமிடத்து அல்லது குடிபோதையின்போது தவறானது புரியப்பட்டிருக்கின்றவிடத்து, வெறியூட்டும் மதுவை அருந்தாதிருக்கும்படி கூறுதல் ;

(இ) பொதுவாக, தவறாளர் நேர்மையானதும், முயற்சியுடையதுமான வாழ்க்கையை நடாத்தும்படி செய்தல் ;

(ஈ) கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில் தவறாளர் அவரது பிணைகாரர் எவரேனும் இருப்பின் அவருடன், அல்லது பிணைகாரர்கள் எவர்களேனும் இருப்பின் அவர்களுடன், ஏதேனும் நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் முன்னர் அவரது தனியறையில் தோன்றுதலுக்கான ஏற்பாடு செய்தல்.

**308.** இச்சட்டக்கோவையின் கீழ் ஆளெவரேனும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத் தீர்ப்புக்காகத் தோன்றுவதற்கு பிணைப்பத்திரத்தினால் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றமானது, தவறாளருக்கு அறிவித்த பின்னர், பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளை மாற்றலாம் என்பதுடன், பிணைப்பத்திரமானது விடுவிக்கப்படல் வேண்டும் என்னும் வகையில் அந்த ஆளின் நடத்தையானது அத்தகைய தாயுள்ளதெனத் திருப்தியடைவதன்மேல் பிணைப்பத்திரத்தை விடுவிக்கலாம்.

பிணைப்பத்திர நிபந்தனைகளை மாற்றுவதற்குள்ள தத்துவம்.

**309.** (1) இவ்வத்தியாயத்தின் கீழ் தவறாளர் ஒருவர் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத்தீர்ப்புக்காகத் தோன்றுவதற்கு பிணைப்பத்திரத்தினால் கட்டுப்பட்டுள்ளாரோ, எந்த நீதிமன்றமானது தவறாளர் அவரது பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளில் எவற்றையேனும் கடைப்பிடிக்கத் தவறியுள்ளாரென, சத்தியத்தின்மீதான அல்லது உறுதியுரையின் மீதான தகவலின் மூலம் திருப்தியடைந்தால் அது அவரைக் கைப்பற்றுவதற்கென ஆணைப்பத்திரம் ஒன்றினை வழங்கலாம். அல்லது அது தகுந்ததெனக் கருதினால், முதலில் ஆணைப்பத்திரத்தினை வழங்குவதற்குப் பதிலாக, அழைப்புக் கட்டளையில்

தவறாளர் பிணைப்பத்திர நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் போதுள்ள ஏற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நீதிமன்றத்தில் அத்தகைய நேரத்தில் அவரை அல்லது அவர்களை வருகைதருமாறு தேவைப்படுத்தும் அழைப்புக்கட்டளை ஒன்றினை தவறாளருக்கும், அவரது பிணைகாரர்கள் எவர்களேனுமிருப்பின், அவர்களுக்கும் வழங்கலாம்.

(2) தவறாளர், கைப்பற்றப்பட்டதும், குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத்தீர்ப்புக்காக பிணைப்பத்திரத்தினால் எந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதாக கட்டுப்பட்டுள்ளாரோ அந்நீதிமன்றத்தின் முன்னர் உடனடியாகக் கொண்டுவரப்படாவிட்டால், நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(3) தவறாளர், கைப்பற்றப்பட்டதன்மேல் எந்த நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுவாரோ அந்த நீதிமன்றம் அல்லது முன்னர் சொல்லப்பட்டவாறான அத்தகைய அழைப்புக்கட்டளையைப் பின்பற்றி, அவர் எந்த நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுகின்றாரோ அந்த நீதிமன்றம், குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத் தீர்ப்புக்காக எந்த நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்குப் பிணைப்பத்திரத்தினால் கட்டுப்பட்டாரோ அந்தநீதிமன்றமாக இல்லாதிருந்தால், இறுதியாகச் சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படும்வரையில் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதல் அல்லது பிணையில் விடப்படுதல் வேண்டும்.

(4) ஆளொருவர் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத்தீர்ப்புக்காகவும், தண்டனைத்தீர்ப்புக்காவும் தோன்றுவதற்கு அவரது பிணைப்பத்திரத்தால் கட்டுப்பட்டுள்ளாரோ, அந்த நீதிமன்றமானது, அவரது பிணைப்பத்திரத்தின் ஏதேனும் நிபந்தனையைக் கடைப்பிடிப்பதற்குத் தவறியுள்ளாரெனத் திருப்பதியடைவதன்மேல், அவரது குற்றத்துக்கான மேலதிக எண்பிப்பின்றி, முதலாவதான தவறுக்காக அவர்மீது உடனடியாகக் குற்றத்தீர்ப்பளித்துத் தண்டனைத்தீர்ப்பளிக்கலாம் ; அல்லது நீதிமன்றமானது முதற்றடவையிலேயே சிறுவர்கள், இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ், அங்கீகாரம் பெற்ற அல்லது சான்றிதழ் பெற்ற பாடசாலைக்குத் தவறாளரை அனுப்பிவைக்கும்படி கட்டளையிட்டிருக்கக்கூடியவொரு சந்தர்ப்பமாயிருப்பதோடு தவறாளர் வெளித்தோற்றத்தில் பதினாறு வயதிற்குக் குறைந்தவராகவும் தோன்றினால் அத்தகைய ஒரு கட்டளையை இடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**310.** இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுத்துவதற்கான விதிகள் 453 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படலாம். விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.

## அத்தியாயம் XXVI

### தண்டனைத்தீர்ப்புக்களை நிறுத்திவைத்தலும், தளர்த்தலும் மாற்றித்தணித்தலும்.

**311.** (1) ஆளெவரும் ஒரு தவறுக்காகத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, சனாதிபதி எப்போதேனும் நிபந்தனைகளின்றி அல்லது தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஏற்றுக்கொள்ளும் எவையேனும் நிபந்தனைகள்மீது தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படுதலை நிறுத்திவைக்கலாம் அல்லது அவருக்குத் தீர்க்கப்பட்ட தண்டனையின் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தையும் தளர்த்தலாம். சனாதிபதி, நிபந்தனைகள் மீது தண்டனைத் தீர்ப்புகளை நிறுத்தி வைக்கலாம் அல்லது தளர்த்தலாம்.

(2) தண்டனைத்தீர்ப்பொன்றை நிறுத்திவைக்குமாறு அல்லது தளர்த்துமாறு சனாதிபதிக்கு விண்ணப்பஞ்செய்யப்படும் போதிலெல்லாம், சனாதிபதி, குற்றத்தீர்ப்பானது எந்நீதிமன்றத்தின் முன்னர் அல்லது எந்நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டதோ அல்லது உறுதிப்படுத்தப் பட்டதோ அந்நீதிமன்றத்தின் தலைமைதாங்கும் நீதிபதியை, அவ்விண்ணப்பம் அனுமதிக்கப்படுதல் வேண்டுமா அல்லது மறுக்கப்படுதல் வேண்டுமா என்பதுபற்றிய அவரது அபிப்பிராயத் தையும், அதனுடன் சேர்த்து, அத்தகைய அபிப்பிராயத்துக்கான அவரது காரணங்களையும் கூறுமாறு தேவைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) எந்த ஆளுக்குச் சாதகமாக தண்டனைத்தீர்ப்பொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதோ, அல்லது தளர்த்தப்பட்டுள்ளதோ அந்த ஆள், சனாதிபதியினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால், சனாதிபதி அவ்வாறு நிறுத்திவைப்பதனை அல்லது தளர்த்துவதனை இல்லாதொழிக்கலாம் ; அதன்மேல், அத்தகைய ஆள், விடுதலைபெற்றிருந்தால், பொலிசு அலுவலர் எவராலும் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட்டு தண்டனைத் தீர்ப்பின் முடிவுறாதிருக்கும் பகுதிக்குத் தண்டனையை அனுபவிப்பதற்காக நீதிவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்படலாம்.

(4) இதனகத்து அடங்கியுள்ள எதுவும் மன்னிப்புகள், தண்டனை ஒத்திவைப்புக்கள், காலந்தாழ்த்தல்கள் அல்லது தண்டனைத் தளர்த்தல்கள் வழங்குவதற்குச் சனாதிபதிக்குள்ள உரிமையோடு குறுக்கிடுவதாகக் கருதப்படுதலாகாது.

சனாதிபதி தண்டனைத் தீர்ப்பினை மாற்றித் தணிக்கலாம்.

**312.** சனாதிபதி, தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் சம்மதமின்றி, பின்வரும் தண்டனைத்தீர்ப்புக்களில் ஏதேனுமொன்றை நேரொத்த பதிவுகளில் குறித்துக்காட்டப்பட்ட மாற்றித்தணித்த தண்டனைத் தீர்ப்புகளில் ஏதேனுமொன்றாக மாற்றித் தணிக்கலாம்:-

| தண்டனைத் தீர்ப்பு | மாற்றித்தணிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பு. |
|---|---|
| மரணம் | ஆயுட்காலத்துக்கான அல்லது வேறு ஏதேனும் காலத்துக்கான கடுழிய அல்லது சாதாரண மறியற்றண்டனை. |
| கடுழிய மறியற்றண்டனை | ஏதேனும் குறைவான காலத்துக்கான கடுழிய மறியற்றண்டனை, அல்லது அத்தகைய ஆள் எக்காலத்துக்குத் தண்டனைத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அக்காலத்தினும் மேற்படாத ஏதேனும் காலத்துக்கான சாதாரண மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம். |
| சாதாரண மறியற்றண்டனை | ஏதேனும் குறைவான காலத்துக்கான சாதாரண மறியற்றண்டனை, அல்லது குற்றப்பணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**313.** இவ்வத்தியாயத்தில் "சனாதிபதி" என்ற சொல்லமைப்பு, இலங்கைக் குடியரசின் சனாதிபதி எனப்பொருள்படும். இவ்வத்தியாயத்தில் "சனாதிபதி" என்ற சொல்லமைப்பின் பொருள்.

## அத்தியாயம் XXVII

## முன்பு விடுதலைத்தீர்ப்பளிக்கப்பட்டமை அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமை பற்றி

**314.** (1) தவறொன்றுக்காக, தகுதிவாய்ந்த நியாயதிக்கமுடைய நீதிமன்றமொன்றினால் ஒரு முறை விளங்கப்பட்டு அத்தகைய தவறுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்ட ஆளொருவர், அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது விடுதலைத்தீர்ப்பு வலுவிலிருக்கும்போதில், அதே தவறுக்காகவோ அல்லது அவருக்கெதிராகச்செய்யப்பட்ட குற்றச்சாட்டிலும் வேறுபட்டதான ஒரு குற்றச்சாட்டு அதே நிகழ்வுகளின் அடிப்படையில் வேறெந்தத் தவறுக்காக 176 ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்படக் கூடுமோ அந்தத் தவறுக்காகவோ அல்லது அதே நிகழ்வுகளின் அடிப்டையில் வேறெந்தத் தவறுக்காக 177 ஆம் பிரிவின் கீழ் அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படக் கூடுமோ அந்தத் தவறுக்காகவோ மீளவும் விளங்கப்படுவதற்கு ஆளாதலாகாது.(4) இதனகத்து அடங்கியுள்ள எதுவும் மன்னிப்புகள், தண்டனை ஒத்திவைப்புக்கள், காலந்தாழ்த்தல்கள் அல்லது தண்டனைத் தளர்த்தல்கள் வழங்குவதற்குச் சனாதிபதிக்குள்ள உரிமையோடு குறுக்கிடுவதாகக் கருதப்படுதலாகாது. ஒரே தவறுக்காக ஆளெவரும் இருமுறை விளங்கப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஏதேனும் தவறுக்கான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்ட அல்லது அத்தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர், 175 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தத் தனிவேறான தவறுக்காக முன்னைய விளக்கத்தில் அவருக்கெதிராகத் தனிப்பட்ட குற்றச்சாட்டுச் செய்யப்பட்டிருக்கக் கூடுமோ அந்தத் தனிவேறான தவறு எதற்குமாகப் பின்னர் விளங்கப்படலாம்

(3) பின்விளைவுகளை உண்டாக்கும் ஏதேனும் செயலினால் அமையும் ஏதேனும் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆளொருவர், அப்பின் விளைவுகள் அத்தகைய செயலுடன் சேர்த்து, அவருக்கு எத்தவறுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அத்தவறினின்றும் வேறுபட்ட ஒரு தவறாக அமைந்து, அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நேரத்தில் அப்பின்விளைவுகள் நிகழ்ந்திருக்காவிடின், கடைசியாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய தவறுக்காகப் பின்னர் விளங்கப்படலாம்.

(4) எவையேனும் செயல்களினால் அமையும் ஏதேனும் தவறுக்கான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்ட அல்லது அத்தவறுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆளொருவர், அத்தகைய விடுதலைத்தீர்ப்பு அல்லது குற்றத்தீர்ப்பு எவ்வாறாயினும், முதலில் அவர் எந்நீதிமன்றத்தினால் விளங்கப்பட்டாரோ அந்நீதிமன்றமானது பின்னர் அவர் எத்தவறின்பேரில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அத்தவறை விளங்குவதற்குத் தகுதியற்றதாக இருந்திருப்பின், அவர் புரிந்திருக்கக்கூடிய அதே செயல்களினால் அமையும் வேறேதேனும் தவறின்பேரில் அவர் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம்

## எடுத்துக்காட்டுக்கள்

(அ) அ என்பவர் சேவையாளர் என்ற முறையில், திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில் விளங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அவர் பின்னர் விடுதலைத் தீர்ப்பானது வலுவிலிருக்கும்போது, சேவையாளர் என்ற முறையில் திருட்டுக்காக அல்லது அதே நிகழ்வுகளின்பேரில் வெறுமனே திருட்டுக்காக, அல்லது குற்றவியல் நம்பிக்கைத் துரோகத்திற்காக குற்றஞ்சாட்டப்பட முடியாது.

(ஆ) அ என்பவர் கொலைக் குற்றச்சாட்டின்பேரில் விளங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். கொள்ளையடித்ததாகக் குற்றச்சாட்டு இல்லையானாலும், அக்கொலை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியப்பட்ட நேரத்தில் அ என்பவர் கொள்ளையடித்தல் புரிந்தார் என நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்றது. அவர் பின்னர் கொள்ளை யடித்தலுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளங்கப்படலாம்.

(இ) அ என்பவர் கடுங்காயம் விளைவித்தற்காக விளங்கப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றார். காயமுற்ற ஆள் பின்னர் இறக்கின்றார் . அ என்பவர் மறுபடியும் குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கலுக்காக விளங்கப்படலாம்.

(ஈ) அ என்பவர். ஆ என்பவரின் குற்றத்துக்கிடமான மனித உயிர்போக்கலுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக் கப்படுகின்றார். அ என்பவர் ஆ என்பவரின் கொலைக்காக, பின்னர் அதே நிகழ்வுகளின்மீது விளங்கப்படுதலாகாது.

(உ) அ என்பவர் ஆ என்பவருக்கு, வேண்டுமென்றே காயம் உண்டாக்கிறார் என்பதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றார். அ என்பவர் ஆ என்பவருக்கு வேண்டுமென்றே கடுங்காயம் உண்டாக்கினார் என்பதற்காக அதே நிகழ்வுகளின்மீது, அவ்வழக்கு இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கு உட்பட்டாலன்றி, பின்னர் விளங்கப்படுதலாகாது.

**315.** (1) முன்பு விடுதலைத்தீர்ப்பு அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டது என்ற மன்றுரையானது, ஒன்றில் வாய்மொழியாக அல்லது எழுத்துமூலமாகச் சமர்ப்பிக்கப்படலாம் என்பதோடு, அது பின்வரும் வடிவத்தில் அல்லது பின்வரும் பொருள்பட அமையலாம் :- முன்பு விடுதலைத் தீர்ப்பு அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப் பட்டவர் என்ற மன்றுரை.

"எதிரி, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 314 ஆம் பிரிவின் பயனாக, தாம் விளங்கப்படுவதற்கு ஆளாகார் எனக்கூறுகின்றார்."

(2) அத்தகைய மன்றுரையானது, வேறேதேனும் மன்றுரையுடன் சேர்த்து ஒன்றாகச் சமர்ப்பிக்கப்படலாமாயினும் ஏனைய மன்றுரைகளால் எழுப்பப்பட்ட பிரச்சினைகளை விளங்குவதற்கு முன்னர், அத்தகைய மன்றுரையால் எழுப்பப்பட்ட பிரச்சினையானது விளங்கப்பட்டுத் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) முன்னர் ஒரு விடுதலைத்தீர்ப்பு அல்லது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டது என்று மன்றுரையின்மீதான பிரச்சினையொன்றை விளங்குகையில், முந்திய விளக்கத்தில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட வாக்குமூலங்கள், நீதிபதியின் குறிப்புகள் (அவை கிடைக்கக்கூடியனவாயின்), பின்னைய குற்றச்சாட்டின்மீது நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியன, அக் குற்றச்சாட்டுகளின் ஒரே தன்மையை எண்பித்தலுக்காக அல்லது பொய்ப்பித்தலுக்காகச் சான்றாக ஏற்கப்படத் தக்கனவாதல் வேண்டும்.

# பாகம் VII

## மேன்முறையீடு, ஆற்றுப்படுத்துகை, மீளாய்வு என்பன பற்றி

## அத்தியாயம் XXVIII

### மேன்முறையீடுகள் பற்றி

ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தவிர, மேன்முறையீடு எதுவும் செய்தலாகாது.

**316.** இச்சட்டக்கோவையினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, குற்றவியல் நீதிமன்றமொன்றின் ஏதேனும் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் அமைதலாகாது.

**அ. - நீதிவான் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கெதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்**

குறித்த சில விடயங்களில் மேன்முறையீடு கள் செய்தல் ஆகாது என்பது.

§5, 21 இல 2005

**317.** (1) (அ) நீக்கப்பட்டுள்ளது. § 5, 21 இல 2005

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர், 183 ஆம் பிரிவின் கீழ், தாம் குற்றவாளியென வரைப்பாடில்லாக் குற்றவொப்புக்கோளொன்றைச் செய்திருந்து, நீதிவான் நீதிமன்றமொன்றினால், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து.

அத்தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேற்குறித்தது தவிர்ந்த எல்லா விடயங்களிலும் ஒரு சட்டப் பிரச்சினையின் மீதான மேன்முறையீடொன்று இருத்தல் வேண்டும். §5, 21 இல. 2005

**318.** சட்டத்துறைத் தலைமையதிபதியின் வேண்டுதலின்பேரில் அல்லது அவரது எழுத்திலான அனுமதியோடு தவிர, நீதிவான் நீதிமன்றமொன்றினால் அளிக்கப்பட்ட விடுதலைத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது. விடுதலைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்தல்.

**319.** நீதிவான் நீதிமன்றமொன்று மன்றாணை விடுப்பதற்கு மறுத்துள்ளவிடத்து, அத்தகைய மன்றாணையை விடுக்கும்படி அத்தகைய நீதிமன்றத்தைத் கட்டாயப் படுத்துவதற்கு ஆணையீட்டெழுத்தாணையொன்று அமைதல் வேண்டும் ; ஆனால், சட்டத்துறைத் தலைமையதிபதியின் வேண்டுதலின்பேரில் அல்லது அவரது எழுத்திலான அனுமதியோடு தவிர, அத்தகைய மறுப்புக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் இருந்தலாகாது. மன்றாணை விடுக்க மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடு.

**320.** (1) முந்நூற்றுப்பதினேழாம், 318 ஆம், 319 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆளெவரும், அவர் ஒரு கட்சிக்காரராகவுள்ள ஒரு குற்றவியல் வழக்கில் அல்லது விடயத்தில் நீதிவான் நீதிமன்றம் எதனாலும் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்பினால் அல்லது இறுதிக்கட்டளையினால், அதிருப்தியடைந்தால், சட்டம் சம்பந்தமான அல்லது நிகழ்வு சம்பந்தமான ஏதேனும் பிழை தொடர்பில் அத்தகைய தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு, பின்வரும் முறையில் மேன்முறையீடு செய்யலாம் :- மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அத்தகைய தீர்ப்பு அல்லது கட்டளை அளிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட நேரத்திலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தில், உயர் நீதிமன்றத்தை விளித்தெழுதப்பட்ட மேன்முறையீட்டு மனுவொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ; அல்லது.

(ஆ) மேற்கூறப்பட்ட காலத்துக்குள்ளாக, அத்தகைய நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அல்லது அப்போதைக்கு அவர் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மறியற்சாலையின் சிறைக்காவலருக்கு, மேன்முறையீடு செய்வதற்குத் தமக்குள்ள விருப்பத்தையும், அதற்கான ஏதுக்களையும் பற்றிக் கூறுவதன்மூலமும் அதே நேரத்தில் ஐந்து ரூபா பெறுமதியான ஒரு முத்திரையை அளிப்பதன்மூலமும் ; அதன்மேல், மேன்முறையீட்டு மனுவொன்றைத் தயாரித்து அத்தகைய தீர்ப்பு அல்லது கட்டளை எந்நீதிமன்றத்தால் எடுத்துமொழியப்பட்டதோ அந்நீதிமன்றத்திற் சமர்ப்பித்தல், விடயத்துக்கேற்றவாற் போல, அத்தகைய பதிவாளரின் அல்லது சிறைக்காவலரின் கடமையாதல் வேண்டும்.

(2) முந்நூற்றுப் பதினேழாம் பிரிவின் இயைபான ஏற்பாடுகளுக்கு அமைவாக, குற்றவியல் வழக்கு அல்லது விடயம் எதிலும் நீதிவான் நீதிமன்றமொன்றினால் எடுத்து மொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கு எதிராக, சட்டத்துறைத் தலைமையதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அவர் அவ்வாறு மேன்முறையீடு செய்யுமிடத்து அல்லது அவர் ஒரு மேன் முறையீட்டுக்கு அனுமதியளிக்குமிடத்து, மேன்முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்படவேண்டிய காலவரையறை இருபத்தெட்டு நாட்களாக விருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்** :- குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விளக்கத்துக்குப் பாரப்படுத்தி 154 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒரு கட்டளை அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விடுவித்து 153 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒரு கட்டளை, ஒரு தீர்ப்போ அல்லது இறுதிக்கட்டளையோ ஆகாது.

**321.** (1) ஒரு மேன்முறையீடு எக்காலத்துக்குள்ளாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதைக் கணக்கிடுவதில், எந்தத் தீர்ப்பு அல்லது கட்டளை பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதோ அந்தத் தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்துமொழியப்பட்ட நாள் சேர்க்கப்படுதல் வேண்டும், ஆனால் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும் பொதுவிடுமுறை நாட்களும் நீக்கிவிடப்படுதல் வேண்டும். காலத்தைக் கணக்கிடுதல்.

(2) மேன்முறையீட்டு மனுவொன்று எக்காலத்துக்குள்ளாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமோ அக்காலமானது, நீதிமன்ற அலுவலகம் மூடப்பட்டுள்ளதான ஒரு நாளில் முடிவடையின், அத்தகைய அலுவலகம் அதன் பின்னர் திறந்திருக்கும் முதல் நாளன்று அத்தகைய மனு சமர்ப்பிக்கப்பட்டால், மேன் முறையீடானது உரிய காலத்துக்குள் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**322.** (1) மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும், மேன் முறையிட்டுக்கான ஏதுக்களைச் சுருக்கமாகக் கூறுதல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும். மேன்முறையீட்டு மனு எதனைக் கூறுதல் வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேன்முறையீடானது ஒரு சட்டப் பிரச்சினை மீதானதாக இருக்கின்றவிடத்து, மனு, விவாதிக்கப்படவேண்டிய சட்டவிடயம் பற்றிய கூற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சட்டவிடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நீதித்தீர்ப்பு அளிக்கப்படுவதற்குத் தகுந்த பிரச்சினையாகுமெனச் சட்டத்தரணி யொருவரின் சான்றுரையைக் கொண்டிருத்தலும் வேண்டும் :

(3) அத்தகைய மனு ஒவ்வொன்றும் ஐந்து ரூபாவுக்கான முத்திரையைக் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின்-

(அ) மேன்முறையீடு, 320 (2) ஆம் பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்படின், அல்லது

(ஆ) 136 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எழுத்திலான அறிக்கைமீது தொடுக்கப்பட்ட எவையேனும் நடவடிக்கைகளில் நீதிவான் நீதிமன்றமொன்றினால் எடுத்துமொழியப்பட்ட ஒரு தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கு எதிரான மேன்முறையீடு ஒன்றின் விடயத்தில், மேன்முறையீடானது, அத்தகைய அறிக்கையை ஆக்கிய ஆளினால் சமர்ப்பிக்கப்படுமிடத்து,

அத்தகைய முத்திரை எதுவும் அவசியமாகாது :

ஆயின். மேலும், எந்த நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த நீதிமன்றம், அது தகுந்ததெனக் கருதினாலும், மேன்முறையீட்டின்மீது தீர்ப்பு அளிக்கப்படும்வரையில் முத்திரைக் கட்டணம் கொடுத்தலைப் பிற்போடுவதற்கு அனுமதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) மேன்முறையீட்டுத் தீர்ப்பானது முழுமையாக அல்லது பகுதியளவில் மேன்முறையீட்டாளருக்குச் சாதகமாக முடிவு செய்யப்பட்டால், முத்திரைக் கட்டணத் தொகை, அத்தகைய கட்டணத்தொகை செலுத்தப்பட்டிருப்பின், அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) மேன்முறையீட்டுத் தீர்ப்பானது மேன்முறையீட்டாளருக்கு எதிராக முடிவுசெய்யப்படின், அத்தகைய முத்திரைக் கட்டணம், அத்கைய கட்டணம் கொடுபடாதிருந்தால், மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய முத்திரைக்கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் குறைத்தல் தகுதியெனக் கருதினாலன்றி அவரால் கொடுக்கப்படுதல் வேண்டும் ; அல்லது குற்றப்பணம் என்றாற்போன்று அவரிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய முத்திரைக் கட்டணம் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் குறைத்தல் தகுதியெனக் கருதும் விடயத்தில், அவ்வாறு குறைக்கப்படாத அத்தகைய பாகம் மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும்.

பிணைப் பொறுப்பு அளிப்பதன் மேல் மேன் முறையிட்டாளர் விடுவிக்கப் படுதல் வேண்டும்.

**323.** (1) ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளபோது எந்த நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த நீதிமன்றம், மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலிலிருப்பின், அவரை, அத்தகைய நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையிலும், பிணைக்காரரோடும் அல்லது பிணைக்காரரின்றியும் அல்லது பிணைக்காரர்களோடும் அல்லது பிணைக்காரர்களின்றியும் பிணைப்பத்திரமொன்றை அவர் முடித்துக்கொடுப்பதன்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்கியொழுகுவார் என்றும், தீர்த்தளிக்கப்படக்கூடிய அத்தகைய செலவுத்தொகைகளைச் செலுத்துவர் என்றும், கூறும் நிபந்தனையின் பேரில்விடுவிக்கப்படும்படி கட்டளையிடுதல் வேண்டும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எப்போதும், எந்த நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த நீதிமன்றம் தகுந்ததெனக் கருதினால், மேன்முறையீட்டாளர், பிணைப்பத்திரமொன்றை முடித்துக் கொடுப்பதற்குப் பதிலாக, அந்த நீதிமன்றம் போதுமானதெனக் கருதக்கூடியவாறு அத்தகைய நீதிமன்றத்தில் பணம் வைப்பிலிடப்படுவதன்மூலம் அல்லது வேறுவகையாக அத்தகைய வேறு பிணைப்பொறுப்பை அளிக்கலாம்.

(2) மேன்முறையீட்டாளர் மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய பிணைப்பத்திரத்தை முடித்துக்கொடுப்பதன் மேல் அல்லது அத்தகைய வேறு பிணைப்பொறுப்பை அளிப்பதன் மேல், கட்டுக்காவலிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் மறியற்சாலையிலிருப்பின், அத்தகைய பிணைப்பத்திரம் மறியற்சாலைக் கண்காணிப்பாளர் முன்னர் அல்லது சிறைக்காவலர் முன்னர் முடித்துக்கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு முடித்துக்கொடுக்கப்பட்டால் அது, எந்த நீதிமன்றத்திலிருந்து மேன் முறையீடு செய்யப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன்னர் செய்யப்பட்டுள்ளதைப் போன்று எல்லாவகைகளிலும் செல்லுபடியுள்ளதாக விருத்தல் வேண்டும் ; அத்துடன் இந் நோக்கத்திற்காக நீதிமன்றம், மேன்முறையீடு செய்யப்படும் விடயத்தில் கொடுக்கப்படவேண்டிய பிணைப் பொறுப்பின் தொகையையும் தன்மையையும் பாரப்படுத்தல் ஆணைப் பத்திரத்தில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

(4) ஒரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்ட ஆளொருவர் மேன்முறையீடு செய்திருந்து, ஆனால் தேவைப்படுத்தப்பட்ட பிணைப்பத்திரத்தை அல்லது வேறு பிணைப்பொறுப்பை அளிக்கவியலாதபோது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு அறிவிக்கப்படும் வரையில் அவர் கடின ஊழியமில்லாத கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) அத்தகைய மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் அவ்வாறு கழித்த காலம் அல்லது அதன் ஏதேனும் பாகம், அவரது தண்டனைத் தீர்ப்புக் காலத்தின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(6) மேன்முறையீட்டு மனுவொன்று சமர்ப்பிக்கப்படுவதன்மேல் நீதிவான், வழக்குப் பதிவேடுகளை மேன்முறையீட்டு மனுவுடன் சேர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், எத்தீர்ப்புக்கு அல்லது எக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அத்தீர்ப்பு அல்லது அக்கட்டளை எக்கட்சிக்காரருக்குச் சாதகமாக எடுத்து மொழியப்பட்டதோ அல்லது ஆக்கப்பட்டதோ அல்லது எக்கட்சிக்காரருக்கு மாறாக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அக்கட்சிக்காரருக்கு, (அக்கட்சிக்காரர் முறைப்பாட்டாளராயினுஞ்சரி குற்றஞ்சாட்டப்பட்டவராயினுஞ்சரி) உடனடியாக அதுபற்றி அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

*நடவடிக்கைக் குறிப்புகள் மேன் முறையீட்டு நீதி மன்றத்துக்கு அனுப்பப்படவேண் டும் என்பதும் எத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன் முறையீடுசெய்யப் பட்டதோஅத்தீர்ப்பு அல்லது அக் கட்டளைஎக்கட்சிக் காரருக்குச்சாதகமாக எடுத்து மொழியப் பட்டதோஅக்கட்சிக் காரருக்குஅறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் என்பது.*

**324.** (1) பதிவேடுகளும் மேன்முறையீட்டு மனுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளபோது, பதிவாளர் அந்த மேன்முறையீட்டுக்கு எண்ணிட்டு, அதனை மேன்முறையீட்டு நிரலில் பதிதல் வேண்டும் ; அத்தகைய நிரல், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகத்தில் தொங்கவிடப்படல் வேண்டும்.

*மேன்முறை யீட்டின் மீது மேன்முறை யீட்டு நீதிமன்றத்தி லான நடவடிக்கை முறை.*

(2) சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்கு மேலும் அறிவிப்புகளின்றி, அந்த மேன்முறையீடு அதன் ஒழுங்குமுறைப்படி விளக்கத்துக்கு வருதல் வேண்டும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் நீதிமன்றமானது அதன் சொந்தப் பிரேரணையின் பேரில் அல்லது சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் பேரில், வழக்குத் தொடுப்புப்பற்றி அல்லது மேன்முறையீட்டுச் செலவுத் தொகைகள் பற்றி அல்லது வேறுவகையில் அது தகுந்ததெனக் கருதக்கூடிய அத்தகைய எவையேனும் நியதிகளின்மீது, ஒரு மேன்முறையீட்டின் விளக்கத்தைத் துரிதப்படுத்தலாம் அல்லது பிற்போடலாம்.

மேன்முறையீட்டாளர் முதலில் விசாரிக்கப் படுவார் என்பது.

**325.** (1) மேன்முறையீடு விசாரணைக்கு வரும்போது, மேன்முறையீட்டாளர் சமூகமாகவிருப்பின், மேன்முறையீட்டுக்கு ஆதரவாக முதலில் அவர் விசாரிக்கப்படுதல் வேண்டும் ; அதன் பின்னர் எதிர்வாதி சமூகமாகவிருந்தால், அவர் மேன்முறையீட்டுக்கு எதிராக விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(2) மேன்முறையீட்டாளர் அவரது மேன்முறையீட்டுக்கு ஆதாரமளிப்பதற்கெனத் தோன்றாவிட்டால், நீதிமன்றம் மேன்முறையீட்டை ஆய்தல் வேண்டும் என்பதுடன், அது தகுந்ததெனக் கருதக்கூடியவாறு, அதன்மீது அத்தகைய கட்டளையையும் ஆக்கலாம்.

எதிர்வாதி சமூகமாயிரா விடின் பின் பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**326.** மேன்முறையீடொன்றின் விசாரணையின்போது எதிர்வாதி சமூகமாகவில்லாவிடின், அத்துடன் மேன்முறையீடு பற்றிய அறிவித்தல் அவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டமை பற்றி நீதிமன்றம் திருப்தியடையாவிடின், அவர் தோன்றுவதற்காக மேன்முறையீட்டின் விசாரணையை வேறொரு நாளுக்கு நீதிமன்றம் ஒத்திவைக்கலாம் ; அத்துடன் அச்சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் அவருக்குப் பிசுக்கால் மூலம் சேர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படும் அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; ஆனால் மேற்சொல்லப்பட்டவாறு நீதிமன்றம் அவ்வாறு திருப்தியடைந்தாலன்றி, எதிர்வாதி சமூகமாகவில்லாதபோது அவருக்குப் பங்கமாகக் கட்டளையெதனையும் ஆக்குதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**327.** விடுதலைத் தீர்ப்பொன்றுக்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைதுசெய்து அதன் முன்னர் கொண்டுவரும்படி பணித்து ஆணைப்பத்திரம் ஒன்றை வழங்கலாம் என்பதுடன், மேன்முறையீடு பற்றி முடிவு செய்யப்படும்வரை அவரை மறியலுக்குப் பாரப்படுத்தலாம் அல்லது பிணையில் போவதற்கு அனுமதிக்கலாம்.

விடுதலைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்.

**328.** மேன்முறையீட்டு விசாரணையில், நீதிமன்றம், அது தலையிடுவதற்குப் போதிய ஏது இல்லையெனக் கருதினால், மேன்முறையீட்டைத் தள்ளுபடிசெய்யலாம் அல்லது -

மேன்முறையீடுகள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

(அ) விடுதலைத்தீர்ப்புக் கட்டளைக்கு எதிரான மேன்முறையீட்டின் விடயத்தில், அத்தகைய கட்டளையை நேர்மாறாக்கி, மேலும் விசாரணை நடாத்தப்படல் வேண்டுமென அல்லது விடயத்துக்கு ஏற்றாற்போல, குற்றஞ்சாட்டப்பட்டவர் திரும்ப விளங்கப்படுதல் வேண்டுமென அல்லது விளக்கத்துக்குப் பாரப்படுத்தப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம் அல்லது அவரைக் குற்றவாளியாகக் கண்டு, சட்டத்துக்கு இணங்க அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கலாம் ;

(ஆ) குற்றத்தீர்ப்புக்கெதிரான மேன்முறையீட்டில் -

(i) துணிபுரையையும் தண்டனைத்தீர்ப்பையும் நேர்மாறாக்கி, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் அல்லது விடுவிக்கலாம், அல்லது தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட நீதிமன்றமொன்றினால் அவர் திரும்ப விளங்கப்படும்படி அல்லது விளக்கத்துக்கு பாரப் படுத்தப்படும்படி கட்டளையிடலாம் ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) தண்டனைத்தீர்ப்பை மாற்றாமல் அவ்வாறேயிருக்க தீர்ப்புரையை மாற்றலாம், அல்லது தீர்ப்புரையை மாற்றியோ மாற்றாமலோ தண்டனைத்தீர்ப்பின் அளவை அல்லது அதன் தன்மையைக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம் ;

(இ) வேறு ஏதேனும் கட்டளைக்கு எதிரான மேன்முறையீட்டில் அத்தகைய கட்டளையை மாற்றலாம் அல்லது நேர்மாறாக்கலாம் :

ஆயின், எப்போதும், மேன்முறையீட்டின்மீது அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பானது, முதனிலை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய தண்டனைத்தீர்ப்புக்கு மேற்படுதலாகாது.

மேன்முறையீட்டு நீதிமன்றம், மேலதிகச் சான்றைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது பெற்றுக் கொள்ளும் படி பணிக் கலாம்.

**329.** (1) இவ்வத்தியாயத்தின் கீழ் மேன்முறையீடொன்றைக் கையாளுகையில், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேலதிக சான்று அவசியமானதெனக் கருதினால், ஒன்றில் தானாகவே அத்தகைய மேலதிக சான்றைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நீதிவான் எவராலும் அது பெற்றுக்கொள்ளப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(2) மேலதிக சான்று பெற்றுக்கொள்ளப்படும்போது அதனைப் பெற்றுக்கொள்கின்ற நீதிவான் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றை முறையாக அத்தாட்சிப்படுத்தி, அத்தகைய சான்றின்மீதான அவரது அபிப்பிராயத்தோடு சேர்த்து அதனை உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலன்றி, இப்பிரிவின் கீழும் 328 ஆம் பிரிவினகீழும் மேலதிக சான்று எதுவும் பெற்றுக்கொள்ளப்படும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழக்குரைப்பவர் சமூகமளித்தல் வேண்டும்.

(4) அத்தகைய சான்று பெற்றுக்கொள்ளுதல் XV ஆம் அத்தியாயத்தின்கீழான விசாரணையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**330.** (1) மேன்முறையீட்டு விசாரணை முடிவடைந்ததன்மேல் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றில் உடனடியாகவோ அல்லது வேறேதேனும் நாளிலோ (அந்நோக்கத்துக்காக அந்த நாள் அப்போது நிருணயிக்கப்படும்) பகிரங்க நீதிமன்றத்தில், அதன் முடிவுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு, தீர்ப்பு வழங்குதல் வேண்டும். மேன்முறையீட்டிலான தீர்ப்பு, பகிரங்க நீதிமன்றத்தில் அளிக்கப் படுதல் வேண்டும்.

(2) அவ்வாறு நிருணயிக்கப்பட்ட நாளன்று, நீதிமன்றம் அதன் தீர்ப்பை அளிப்பதற்குத் தயாராகவில்லாவிடின், அந்நோக்கத்துக்காக மேலும் வேறொரு நாள் நிருணயிக்கப்பட்டு அறிவிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ - மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகளும், மேன்முறையீடு செய்வதற்கு அனுமதிகோரும் விண்ணப்பங்களும்

மேன்முறையீட்டு மனுவை அல்லது மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்தைக் கோப்பிடுதல்.

**331.** (1) எந்தக் குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத்தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்பட்டுள்ளதோ அந்தக் குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்துமொழியப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு மேன்முறையீட்டு மனுவொன்றை அல்லது மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இவ்வத்தியாயத்தின்கீழான மேன்முறையீடொன்று செய்யப்படலாம் :

ஆயின், மறியற்சாலையில் உள்ளவரான ஆள் ஒருவர், மேன்முறையீடு செய்வதற்குத் தமக்குள்ள விருப்பத்தைப் பற்றியும் அதற்கான ஏதுக்களைப் பற்றியும், மேற்சொல்லப்பட்ட காலத்துக்குள்ளாக, அப்போதைக்கு அவர் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மறியற்சாலையின் சிறைக்காவலருக்குக் கூறுவதன்மூலம் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கலாம்; அத்துடன், அதன்மேல் மேன்முறையீட்டு மனுவொன்றைத் தயாரித்து எக்குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்பட்டதோ அக்குற்றத் தீர்ப்பினை, தண்டனைத்தீர்ப்பினை அல்லது கட்டளையினை எடுத்துமொழிந்த மேல் நீதிமன்றத்துக்கு அதனைச் சமர்ப்பித்தல் அத்தகைய மறியற்சாலையின் சிறைக்காவலரின் கடமையாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒரு மேன்முறையீடு எக்காலத்துக்குள்ளாகச் சமர்பிக்கப்படுதல் வேண்டும் என்பதைக் கணக்கிடுவதில் எந்தத் தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்தத் தீர்ப்பு அல்லது இறுதிக்கட்டளை எடுத்து மொழியப்பட்ட நாள் சேர்க்கப்படுதல் வேண்டும் ; ஆனால் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும் பொது விடுமுறை நாட்களும் நீக்கிவிடப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு மனுவொன்று, எக்காலத்துக்குள்ளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமோ அக்காலமானது நீதிமன்ற அலுவலகம் மூடப்பட்டுள்ளதான ஒரு நாளன்று முடிவடையின், அத்தகைய அலுவலகம் அதன் பின்னர் திறந்திருக்கும் முதல் நாளன்று அம்மனு சமர்ப்பிக்கப்பட்டால் மேன்முறையீடு உரிய காலத்துக்குள்ளாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு மனுவானது நல்லதும் பொருத்தமானதுமான கடுதாசியில் தெளிவாக எழுதப்பட்டு, மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியினால் கையொப்பமிடப்பட்டுத் தேதியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) எந்த மேல் நீதிமன்ற அமர்வுகளில் மேன்முறையீடு செய்யப்பட்ட குற்றத்தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்துமொழியப்பட்டதோ அந்த மேல் நீதிமன்ற அமர்வுகள்.

(ஆ) வழக்கின் இலக்கம்.

(இ) மேன்முறையீட்டாளரதும் எதிர்வாதியினதும் பெயர்களும் முகவரிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான விளிப்புரை.

(உ) விடயத்துக்கேற்றாற்போல, எந்தத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்படுகின்றதோ அந்தத் தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்து மொழியப்பட்ட தேதி.

(ஊ) மேன்முறையீட்டுக்கான ஏதுக்கள் பற்றிய தெளிவானதும் சுருக்கமானதுமான கூற்று.

(எ) கோரப்பட்ட நிவாரணம்.

(5) ஐந்து ரூபா பெறுமதியான முத்திரைகள் அத்தகைய மேன்முறையீட்டாளரினால் ஒட்டப்படுதல் வேண்டும் ; ஆனால் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அல்லது மரணதண்டனைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுமிடத்து, முத்திரைக் கட்டணம் தேவைப்படமாட்டாது.

மேன்முறையீடு திருத்தப் படலாம் அல்லது நிராகரிக்கப் படலாம்.

**332.** இதனகத்து விதித்துரைக்கப்பட்ட முறையில் மேன்முறையீடு அளிக்கப்பட்டாவிட்டால், நீதிமன்றத்தால் நிருணயிக்கப்படற்பாலதான காலத்துக்குள்ளாக, திருத்தப்படும் நோக்கத்திற்காக மேன் முறையீட்டாளருக்குத் திருப்பியனுப்பப்படலாம், அல்லது அப்பொழுதே அவ்விடத்திலேயே திருத்தப்படலாம். பணிக்கப்பட்டவாறு மேன்முறையீடு திருத்தப்பட்டாவிட்டால், நீதிமன்றம், அதனாற் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, மேன்முறையீட்டை நிராகரிக்கலாம். ஏதேனும் மேன்முறையீடு திருத்தப்படும் போது நீதிபதி அல்லது அதன்சார்பில் அவர் நியமிக்கின்ற அவரது நீதிமன்றத்தின் அத்தகைய வேறு அலுவலர் அத்திருத்தத்தை அவரது கையொப்பத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**333.** (1) மேன்முறையீடானது ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் அத்தகைய வழக்கிலான எல்லா மேலதிக நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட மேன்முறையீடும் அத்துடன் சேர்த்து, வழக்குப் பதிவேடும் அதன் எட்டுப்பிரதிகளும், நீதிபதியால் எடுக்கப்பட்ட சான்றுகள் பற்றிய குறிப்புகளும் இயலக்கூடியளவு விரைவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

மேன்முறையீட்டை ஏற்றுக் கொள்ளுவதன் மேல் மேற்கொண்டு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்.

(2) விடுதலைத் தீர்ப்புக்கு எதிராக ஒரு மேன்முறையீடு செய்யப்படும்போது நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவர் கைதுசெய்யப்பட்டு அதன் முன்னர் கொண்டுவரப்பட வேண்டுமெனப் பணித்து ஆணைப்பத்திரம் ஒன்றை விடுக்கலாம் ; அத்துடன் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை அவரை மறியலுக்குப் பாரப்படுத்தலாம் அல்லது அவரைப் பிணையிற் செல்ல அனுமதிக்கலாம்.

(3) குற்றத்தீர்ப்புக்கு எதிராக ஒரு மேன்முறையீடு செய்யப்படும் போது, மேல் நீதிமன்றம், (4) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரையில் மேன்முறையீட்டாளரைப் பிணையிற் செல்ல அனுமதிக்கலாம். பிணையிற் செல்ல அனுமதிக்கப்படாத மேன்முறையீட்டாளர் ஒருவர், அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை, மறியற்சாலைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் கருதப்பட்டுக் கையாளப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

§2. 13 இல. 1988

(4) குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள விடத்து, மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை அவரது தண்டனை நிறைவேற்றப்படாது நிறுத்திவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் அவர் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(5) மேன்முறையீட்டாளர் ஒருவர் அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை பிணையிற் செல்ல அனுமதிக்கப்படும் காலமும் (ஏதேனும் மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் முரணாகக் கொடுக்கக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கமைவாக) மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் இருந்தால், இப்பிரிவின்கீழ் அவர் மேன்முறையீட்டாளராகச் சிறப்பாகக் கருதிக்கொள்ளப்படும் காலமும் தண்டனைத்தீர்ப்பின்கீழான மறியற்றண்டனைக் காலம் எதனதும் பாகமாகக் கணக்கிடப்படுதல் ஆகாது ; அத்துடன், ஏதேனும் மறியற்றண்டனையானது மேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் கீழானதாயினுஞ்சரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் கீழானதாயினுஞ்சரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பணிப்புக்களுக்கு அல்லது கட்டளைக்கு அமைவாக, மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் இருந்தால், அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் நாளன்றிலிருந்தும், அவர் கட்டுக்காவலில் இல்லாதிருந்தால், தண்டனைத்தீர்ப்பின் கீழ், அவர் மறியற்சாலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளன்றிலிருந்தும், விடயம் தேவைப்படுத்துவதற்கேற்ப, மீளத் தொடங்குவதாக அல்லது ஆரம்பிக்கத் தொடங்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**334.** (1) யூரர்சபையின் துணிபுரையொன்றின்மீது ஆக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கெதிரான ஏதேனும் மேன்முறையீட்டின் மீது, மேன்முறையீட்டு நீதிமன்றம், நியாயமற்றது என்ற அல்லது சான்றைக் கருத்துக்கெடுத்துப்பார்க்கும்போது ஆதாரமளிக்கப்பட முடியாதது என்ற ஏதுவின்மீது அல்லது எந்த நீதிமன்றத்தின் முன்னர் மேன்முறையீட்டாளர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு ஏதேனும் சட்டப்பிரச்சினை பற்றிய பிழையான முடிவாகும் என்ற ஏதுவின்மீது அல்லது நீதிநெறிப்பிறழ்வு காணப்படுகின்றது என்ற ஏதேனும் ஏதுவின்மீது அத்தகைய துணிபுரை தள்ளிவைக்கப்படவேண்டுமென அது நினைத்தால் மேன்முறையீட்டை அனுமதித்தல் வேண்டும் ; அத்துடன், வேறு எவ்விடயத்திலும் மேன்முறையீட்டைத் தள்ளுபடிசெய்தல் வேண்டும் :

யூரர்சபை மூலமான விளக்கங்களின் விடயங்களில் செய்யப்படும் மேன்முறை யீடுகளைத் தீர்மானித்தல்.

ஆயின், நீதிமன்றமானது, மேன்முறையீட்டில் எழுப்பட்ட விடயம் மேன்முறையீட்டாளருக்குச் சாதகமாக முடிவுசெய்யப்படலாம் என அபிப்பிராயப்படுகின்றது என்பது எப்படியிருப்பினும், உண்மையில் கணிசமானளவு நீதிநெறிப்பிறழ்வு ஏற்படவில்லையென அது கருதினால், மேன்முறையீட்டைத் தள்ளுபடிசெய்யலாம்.

(2) இச்சட்டக்கோவையினது சிறப்பு ஏற்பாடுகளுக்கமைவாக, மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றத்தீர்ப்பொன்றுக்கெதிரான மேன்முறையீட்டொன்றை அனுமதித்தால், அக்குற்றத்தீர்ப்பை இல்லாதொழித்து, விடுதலைத் தீர்ப்பொன்று புதியப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும் :

ஆயின், எந்த ஒழுங்கீனத்தை அடிப்படையாக வைத்து மேன்முறையீடு அனுமதிக்கப்பட்டதோ அந்த ஒழுங்கீனம் இல்லாவிட்டால், குற்றஞ்சாட்டப்பட்டவர் நியாயமாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படக்கூடிய சான்று யூரர்சபை முன்னர் உள்ளதென மேன்முறையீட்டு நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால் புதிய விளக்கமொன்றை நடாத்துமாறு அது கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) குற்றத்தீர்ப்பானது எந்த விளக்கத்தின் போது அளிக்கப்பட்டதோ அந்த விளக்கம், அதனை நடாத்திய நீதிமன்றத்தின் அமைப்பில் உள்ள ஏதேனும் குறைபாடு காரணமாக அல்லது வேறுவகையாக வறிதானதாக இருந்துள்ளபோது, புதிய விளக்கமொன்றை நடாத்துமாறு கட்டளையிடு வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குள்ள தத்துவத்தை இப்பிரிவில் உள்ள எதுவும் பாதித்தல் ஆகாது.

(4) மேன்முறையீட்டாளர் ஒருவர், குற்றப்பகர்வின் ஏதேனும் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின்மீது தகுந்தமுறையில் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிராயினும், குற்றப்பகர்வின் வேறேதேனும் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின்மீது தகுந்த முறையில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றினால் அந்த நீதிமன்றம் விளக்கத்தில் மேன் முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை ஒன்றில் உறுதிப்படுத்தலாம் அல்லது அதற்குப் பதிலாக, அது தக்கதெனக் கருதுவதும், குற்றப்பகர்வின் எந்தக் குற்றச்சாட்டின் மீது அல்லது பாகத்தின்மீது மேன்முறையீட்டாளர் முறையாகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டாரென அந்த நீதிமன்றம் கருதுகின்றதோ அந்தக் குற்றப்பகர்வின் குற்றச்சாட்டின்மீது அல்லது பாகத்தின்மீது சட்டத்தில் அத்துணிபுரையால் தேவைப்படுத்தப்படக்கூடியதுமான அத்தகைய தண்டனைத் தீர்ப்பை அளிக்கலாம்.

(5) மேன்முறையீட்டாளர் தவறொன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்து, யூரர்சபை குற்றப்பகர்வின் மீது வேறேதேனும் தவறுக்காக அவரைக் குற்றவாளியாகக் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிருக்கக்கூடியதாகவுள்ள விடத்தும், அந்த வேறு ஏதேனும் தவறுக்கு அவரைக் குற்றவாளியாக எண்பித்த நிகழ்வுகள் பற்றி அந்த யூரர்சபை திருப்தியடைத்திருக்குமென அந்த யூரர்சபையின் துணிபுரையிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்தும், அந்த நீதிமன்றம், மேன்முறையீட்டை அனுமதிப்பதற்குப் பதிலாக அல்லது தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக, யூரர்சபை அளித்த துணிபுரைக்குப்பதிலாக, அந்த வேறு தவறுக்குக் குற்றவாளியெனும் துணிபுரையைப் பதிலீடுசெய்து, விளக்கத்தில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக, அந்த வேறு தவறுக்காகச் சட்டத்தில் தேவைப்படுத்தப்படக்கூடியதும், கூடிய கடுமையான தண்டனைத் தீர்ப்பாக இல்லாததுமான அத்தகைய தண்டனைத்தீர்ப்பை அளிக்கலாம்.

(6) மேன்முறையீட்டாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் யூரர்சபை விசேட துணிபுரையொன்றை வழங்கியிருந்து, அந்தத் துணிபுரையின் விளைவாக எந்த நீதிமன்றத்தின் முன்னர் மேன்முறையீட்டாளர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தால் பிழையான முடிவு எடுக்கப்பட்டுள்ளதென மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம், மேன்முறையீட்டை அனுமதிப்பதற்குப் பதிலாக, சட்டத்தில் அத்துணிபுரையால் தேவைப்படுத்தப்படுவதாக நீதிமன்றத்துக்குத் தோன்றும் அத்தகைய முடிவு பதிவுசெய்யப்படவேண்டுமெனக் கட்டளையிட்டு, விளக்கத்தில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சட்டத்தில் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய தண்டனைத்தீர்ப்பை அளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரர்சபை இல்லாத விளக்கங் களில், மேன்முறை யீடுகளைத் தீர்மானித்தல்.

**335.** (1) யூரர்சபை இல்லாத விளக்கத்தில் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் அளித்த துணிபுரைக்கு எதிரான ஒரு மேன் முறையீட்டில், மேன்முறையீட்டு நீதிமன்றம், அது தலையிடுவதற்குப் போதிய ஏதுக்களில்லையெனக் கருதினால், மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.

(2) யூரர்சபையில்லாத விளக்கத்தில், மேல்நீதிமன்ற நீதிபதி யொருவரினால் அளிக்கப்பட்ட குற்றதீர்ப்புக்கு எதிரான மேன் முறையீட்டில், மேன்முறையீட்டு நீதிமன்றம் :-

(அ) துணிபுரையையும் தண்டனைத்தீர்ப்பையும் நேர்மாறாக்கி, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் அல்லது விடுவிக்கலாம் அல்லது அவர் மீள விளங்கப்படும்படி கட்டளையிடலாம் ; அல்லது

(ஆ) தண்டனைத் தீர்ப்பை மாற்றாது துணிபுரையை மாற்றலாம் அல்லது துணிபுரையை மாற்றியோ அல்லது மாற்றாமலோ தண்டனைத்தீர்ப்பின் அளவை அல்லது அதன் தன்மையை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரைக் குற்றப்பகர்வின்மீது குற்றவாளியாகக் கண்டிருக்கக்கூடிய வேறொரு தவறுக்கான குற்றத் தீர்ப்பொன்றைப் பதிலீடு செய்து, அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சட்டத்தினால் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய தண்டனைத் தீர்ப்பொன்றைப் பதிலாக வழங்காலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**336.** யூர்சபையுள்ள விளக்கத்தின் பின்னராயினுஞ்சரி அல்லது யூர்சபையில்லாத விளக்கத்தின் பின்னராயினுஞ்சரி, அளிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றம், வேறொரு தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கருதினால், அந்தத் தண்டனைத்தீர்ப்பை இல்லாதொழித்து, அதற்குப் பதிலாக, சட்டத்தின்படி துணிபுரையால் தேவைப்படுத்தப்பட்டதும் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென அது கருதுவதுமான வேறொரு தண்டனைத்தீர்ப்பை (அது கூடிய கடுமையானதாக விருப்பினுஞ்சரி அல்லது கடுமை குறைந்ததாகவிருப்பினுஞ்சரி) அளித்தல் வேண்டும் ; வேறேதேனும் விடயத்திலாயின், மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும். தண்டனைத் தீர்ப்பிலிருந்து மேன்முறை யீடுகள்.

**337.** (1) விடுதலைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு ஒன்றில், மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய கட்டளையை நேர்மாறாக்கி, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீள விளங்கப்படும்படி பணிக்கலாம் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றப்பகர்வின் மீது குற்றவாளியாகக் காணப்படக்கூடிய அதே அல்லது வேறு தவறுக்கு அவரைக் குற்றவாளியாகக் கண்டு, சட்டத்துக்கிணங்க அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கலாம். விடுதலைத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறை யீடுகள்.

(2) வேறேதேனும் கட்டளைக்கு எதிரான மேன்முறையீட்டில், மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய கட்டளையை மாற்றலாம் அல்லது நேர்மாறாக்கலாம் அல்லது தள்ளிவைக்கலாம் அல்லது மேல் நீதிமன்றத்தின் கட்டளைக்குப் பதிலாக, சட்டத்தால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டாளர், குற்றவாளியாகக் காணப்பட்டு, ஆனால் சித்த சுவாதீனமற்றவராகவுள்ள விடத்து.

**338.** ஏதேனும் மேன்முறையீட்டின்மீது, மேன்முறையீட்டாளர் அவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்ட செயலுக்கு அல்லது செய்யாதுவிட்டமைக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டவராயினும், அச்செயல் புரியப்பட்டபோது அல்லது செய்யாதுவிடப்பட்டபோது, சித்தசுவாதீனமின்மை காரணமாக, அச்செயலின் தன்மையை, அல்லது அது பிழையானதென அல்லது சட்டத்துக்கு முரணானதெனத் தெரிந்துகொள்ளுவதற்கு இயலாதவராக விருந்தாரென மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றினால் அந்த நீதிமன்றம் விளக்கத்தில் அளிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பை இல்லாதொழித்துவிட்டு, நீதிமன்றம் தக்கதென நினைக்கும் அத்தகைய இடத்திலும் முறையிலும் மேன்முறையீட்டாளர் பாதுகாப்பான கட்டுக்காவலில் வைக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதோடு, அவ்வழக்குப்பற்றி அமைச்சரின் கட்டளைக்காக அவருக்கு அறிவித்தலும் வேண்டும். அத்தகைய அறிவித்தலின் மேல், XXXI ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டக்கோவையின் 381 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், அமைச்சரின் கட்டளைக்காக அவரின் வழக்கு அறிவிக்கப்பட்டுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஆதனத்தைக் கையாளுதல்

**339.** (1) குற்றப்பகர்வின் மீது ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இச்சட்டக்கோவையின் XXXVIII ஆம் அத்தியாயத்தின் கீழ் ஆதனத்தைக் கையாளுவதற்காக மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையின் நடைமுறையும் அத்தகைய ஏதேனும் குற்றத்தீர்ப்பின் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிப்பதன் மேல் களவாடப்பட்ட பொருள்களாகவுள்ள ஆதனத்தை மீளவரித்தாக்குதல் பற்றியனவும் பொருள்கள் விற்பனைக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளனவும் ஆன ஏற்பாடுகளின் நடைமுறையும் (நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி ஆதனத்துக்கான உரித்து பிணக்கிலில்லாதுள்ள ஏதேனும் விடயத்தில் எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகின்றதோ அந்த நீதிமன்றம் முரணாக பதித்தலான்றி)-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) எந்தவிடயத்திலாயினும், குற்றத்தீர்ப்பளித்த தேதியின் பின்னரான பதினான்கு நாட்கள் முடிவடையும்வரை ; அத்துடன்

(ஆ) மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை -

இடைநிறுத்திவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் கட்டளையின் நடைமுறை அல்லது சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் நடைமுறை மேன்முறையீடு பற்றித் தீர்மானிக்கப்படும்வரையில் இடைநிறுத்தி வைக்கப்படுமிடத்து மேன்முறையீட்டின்மேல் குற்றத்தீர்ப்பு இல்லாதொழிக்கப்பட்டால், பிரச்சினையிலுள்ள ஆதனம் தொடர்பில் அக்கட்டளை பயனுறுதலாகாது. அத்தகைய ஏதேனும் கட்டளை அல்லது சொல்லப்பட்ட ஏற்பாடுகள் நடைமுறையிலிருத்தல் இடைநிறுத்தி வைக்கப்படும்வரையில் ஏதேனும் ஆதனம் பாதுகாப்பான கட்டுக்காவலில் வைப்பிக்கப்படுவதற்காக 453 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகள் மூலமாக ஏற்பாடுகள் செய்யப்படலாம்.

(2) ஒரு விளக்கத்தின்போது, ஏதேனும் ஆதனத்தைக் கையாளுவதற்காக ஆக்கப்பட்டகட்டளை எதனையும் மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றத்தீர்ப்பு இல்லாதொழிக் கப்படாவிடினும், கட்டளை மூலமாக வெற்றாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம் ; அக்கட்டளை, வெற்றாக்கப்படின் பயனுறுதலாகாது என்பதுடன், வேறுபடுத்தப்படின் அவ்வாறு வேறுபடுத்தப்பட்டதாகப் பயனுறுத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்தைக் கோப்பிடுதல்.

**340.** மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிகோரும் விண்ணப்பம் எந்தக் குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத்தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட நாடப்படுகின்றதோ அந்தக் குற்றத்தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு அல்லது கட்டளை எடுத்துமொழியப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன்மூலம் செய்யப்படலாம் என்பதுடன், 331 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் ஏற்பாடுகளும் அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், உட்பிரிவுகளின் ஏற்பாடுகளும், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய விண்ணப்பத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

மேன்முறையீட்டுக்கான அனுமதி கோரும் விண்ணப்பத்தைக் கையாளுதல்.

**341.** மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பத்தின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் -

(அ) அத்தகைய அனுமதியை வழங்கலாம் ; அல்லது

(ஆ) விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.

அனுமதி வழங்கப்படுவதன்மேல், மேல் நீதிமன்றம் பதிவேடுகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**342.** மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பத்தின் மீது மேன்முறையீட்டுக்கான அனுமதி வழங்கப்படுவதன்மேல், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் மேல்நீதிமன்றத்துக்கு அவ்வாறு அறிவித்தல் வேண்டும் ; அதன் பின்னர், 333 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய விண்ணப்பத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேன்முறையீடுகளையும், மேன்முறையீட்டுக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களையும் நிரற்படுத்தலும் விசாரித்தலும்.**

**343.** (1) மேன்முறையீடு அல்லது மேன்முறையீடு செய்வதற்கான அனுமதிகோரும் விண்ணப்பம் கிடைத்ததும், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர், உடனடியாக விடயத்துக்கு ஏற்றவாறு, அந்த மேன்முறையிட்டுக்கு அல்லது விண்ணப்பத்துக்கு எண்ணிடுதலும், அத்தகைய எண்ணையும், கட்சிக்காரர்களின் பெயர்களையும் மேன்முறையீட்டு இடாப்பில் பதிவு செய்தலும் கட்சிக்காரர்களுக்கு அறிவித்தலும் வேண்டும். அதன் பின்னர், விடயத்துக்கு ஏற்றவாறு அந்த மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் விசாரணைக்காகக் குறித்துவைக்கப்பட்ட தோதான **(தீர்க்கப்படாதிருக்கும் மேன் முறையீடுகள் பட்டியலில்)** பதியப்படுதல் வேண்டும். மேன்முறையீடுகளும் விண்ணப்பங்களும் எண்ணிடப்படுதலும் மேன்முறையீடுகள் இடாப்பில் பதியப் படுதலும் வேண்டும்.

(2) **(தீர்க்கப்படாதிருக்கும் மேன்முறையீடுகள் பட்டியலில்)** உள்ள மேன்முறையீடுகளினதும் விண்ணப்பங்களினதும் நிரல், மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகத்திற்கு வெளியே வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

**344.** தோதான **(தீர்க்கப்படாதிருக்கும் மேன்முறையீடுகள் பட்டியலிற்)** பதியப்பட்ட ஒரு மேன்முறையீடு அல்லது மேன் முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பம், அது, பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒழுங்கு வரிசைப்படி கட்சிக்காரர்களுக்கு மேற்கொண்டு அறிவித்தல் அளிக்காது, விசாரணைக்கு எடுக்கப்படுதல் வேண்டும். மேன்முறையீடுகளும் விண்ணப்பங்களும் விசாரணைக் காக நிரற்படுத்தப் படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டுக் கானஅனுமதி வழங்கப்பட்டவிடத்து விண்ணப்பம் மேன்முறையீடாகக் கருதப்படுதல் வேண்டும்.

**345.** மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பம் பற்றிய விசாரணையில் மேன்முறையீட்டுக்கான அனுமதி வழங்கப்பட்டவிடத்து, அத்தகைய விண்ணப்பமானது, அதன் பின்னர், ஒரு மேன்முறையீடாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டவாறு விசாரணைக்கு வருதலும் வேண்டும்.

மேன்முறையீடு அல்லது மேன் முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பம் ஆகக்குறைந்தது ஏழுநாட்களுக்கு வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

**346.** மேன்முறையீடு அல்லது மேன்முறையீட்டுக்கான அனுமதிகோரும் விண்ணப்பம் எதுவும், விடயத்துக்கு ஏற்றவாறு அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை, 343 ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்ட விதத்தில் பட்டியலிற் பதிவுசெய்து வெளிக்காட்டிவைத்தபின்னர் ஆகக்குறைந்தது ஏழு நாட்கள் முடிவடையும்வரையில் விசாரணைக்கு நிரற்படுத்தப்படுதலாகாது.

மேன்முறையீடு களையும் மேன்முறையீட்டுக்கு அனுமதிகோரும் விண்ணப்பங்களின் விசாரணையையும் துரிதப்படுத்தலும் பின்போடுதலும்.

**347.** மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் சொந்தப் பிரேரணையின்பேரில் அல்லது ஒரு கட்சியின் விண்ணப்பத்தின் பேரில் ஒரு மேன்முறையீட்டின் அல்லது மேன்முறையீட்டுக்கு அனுமதிகோரும் விண்ணப்பத்தின் விசாரணையை, அது தக்கதெனக் கருதும் அத்தகைய நியதிகளின்மீது துரிதப்படுத்தலாம் அல்லது பின்போடலாம்.

மேன்முறையீடு களை ஒன்று சேர்த்தலும் மேன்முறையீட்டு க்கு அனுமதி கோரும் விண்ணப்பங்களை ஒன்றுசேர்த்தலும்.

**348.** ஒரே விடயத்திலிருந்து எழுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மேன்மறையீடுகள் அல்லது மேன் முறயைீட்டுக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் இருக்கின்ற விடத்தும் அவை ஒன்றுசேர்க்கபட்டால், நீதிமன்றத்துக்கும், சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் வசதியாகவிருக்குமென மேன்முறையீட்டு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்தும் அந்த நீதிமன்றம் அவ்வாறு பணிக்கலாம் ; அத்துடன், அத்தகைய ஒன்று சேர்க்கப்பட்ட மேன்முறையீடுகளும், விண்ணப்பங்களும், அதன் பின்னர், எல்லா நோக்கங்களுக்காகவும், விடயத்துக்கு ஏற்றவாறு, ஒரே மேன்முறையீடாக அல்லது ஒரே விண்ணப்பமாகக் கருதப்படுதல் வேண்டும்.

**349.** (1) நீதிமன்றம், மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரிக்கும்போது, விடயத்துக்கு ஏற்றவாறு, மேன்முறையீட்டாளரையும் அல்லது விண்ணப்பகாரரையும், எதிர்வாதியையும், அல்லது அவர்களது சட்டத்தரணிமாரையும், சமர்ப்பணங்களைச் செய்யுமாறு கேட்கலாம். விசாரணையில் பின்பற்றப்படும் நடவடிக்கை முறை.

(2) ஓராம் உப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, மேன்முறையீட்டுக்கு அல்லது விண்ணப்பத்துக்கு ஆதாரமாக மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் முதலில் விசாரிக்கப்படுதல் வேண்டும். நீதிமன்றம் அதன்மேல் அந்த மேன்முறையீட்டை உடனடியாகத் தள்ளுபடி செய்யாவிட்டால் அல்லது எந்தத் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்தத் தீர்ப்பை அல்லது கட்டளையை உறுதிசெய்யாது விட்டால், எதிர்வாதியை விசாரித்தல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய விடயத்தில், பதிலிறுப்பதற்கு மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர், தமது மேன்முறையீட்டுக்கு அல்லது விண்ணப்பத்துக்கு ஆதாரமளிப் பதற்குத் தோன்றவில்லையாயின், நீதிமன்றம், மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை ஆய்ந்து, அதன்மீது தகுந்ததென அது கருதக்கூடிய அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்காவலிலுள்ளமேன் முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் சமூகமாக விருப்பதற்கு உரித்துடையவர்

**350.** கட்டுக்காவலிலுள்ள மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் அவர் அவ்வாறு விரும்பினால், அவரினது மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் விசாரிக்கப்படும்போது, சமுகமாகவிருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

நீதிமன்றத்துக் குள்ள குறைநிரப்புத் தத்துவங்கள்.

**351.** மேன்முறையீட்டு நீதிமன்றம், மேன்முறையீடொன்றைக் கையாளுகையில், நீதி நலன் கருதி அவசியமானதென அல்லது உசிதமானதென அது கருதினால் -

(அ) நடவடிக்கைகளோடு தொடர்புபட்டதும், வழக்கைத் தீர்மானிப்பதற்காகக் காண்பிக்கப்படுதல் அவசியமானதெனத் தோன்றுவதுமான ஏதேனும் ஆவணத்தை காண்பொருளை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கும்படி கட்டளையிடலாம்;

(ஆ) தாமாகவே மேலதிகச் சான்றைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது முதனிலை நீதிமன்றமொன்றின் நீதிபதி எவரும் அல்லது அந்நோக்கத்துக்கென மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவரான வேறு ஆள் எவரும் அதனைப் பெற்றுக்கொள்ளும்படி பணிக்கலாம் :

ஆயினும், மேலதிகச் சான்று, மேன்முறையீட்டு நீதிமன்றமல்லாத வேறு நீதிமன்றத்தின் முன்னர் பெற்றுக் கொள்ளப்படும்போது, அதனைப் பெற்றுக்கொள்ளும் அலுவலர், அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றினை முறையாக அத்தாட்சிப்படுத்தலும், அத்தகைய சான்றைப் பற்றிய அவரது அபிப்பிராயத்தோடு, அதனை மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

352. (1) மேன்முறையீட்டின் அல்லது விண்ணப்பத்தின் விசாரணை முடிவடைந்ததும், மேன்முறையீட்டு நீதிமன்றம், உடனடியாக அல்லது அந்நோக்கத்துக்கென அப்போது நியமிக்கப்பட வேண்டிய பிந்திய ஏதேனும் தேதியன்று பகிரங்க நீதிமன்றத்தில் தீர்ப்பை எடுத்து மொழிதல் வேண்டும். தீர்ப்பு வழங்குதல்.

(2) அவ்வாறு நிருணயிக்கப்பட்ட நாளன்று நீதிமன்றம் அதன் தீர்ப்பை அளிப்பதற்குத் தயாராகவில்லாவிடில், அந் நோக்கத்துக்காகப் பிந்திய தேதியொன்று நியமிக்கப்பட்டு, அறிவிக்கப்படலாம்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு, எழுத்தில் எடுக்கப்பட்டும், நீதிபதிகளினால் கையொப்பமிடப்பட்டும் தேதியிடப்பட்டுமிருத்தல் வேண்டும் என்பதோடு, பின்வருவன வற்றைப் பற்றிக் கூறுதலும் வேண்டும் :-

(அ) தீர்மானத்துக்கான விடயங்கள் ;

(ஆ) அவைபற்றிய நீதிபதிகளின் முடிவு ;

(இ) அந்த முடிவுக்கு வழிவகுத்த காரணங்கள் ; அத்துடன்.

(ஈ) வழங்கப்பட்ட நிவாரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது ஏற்பாடுகள்

மேன்முறையீட்டாளருக்குச் சட்ட உதவி அளித்தல்.

**353.** நீதி நலன் கருதி, மேன்முறையீட்டாளருக்குச் சட்ட உதவி அளித்தல் விரும்பத்தக்கதென்றும் அவ்வுதவியைப் பெறுவதற்கு அவரை இயலச் செய்வதற்கான போதிய பொருள் வசதிகள் அவரிடம் இருக்கவில்லையென்றும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அப்பிப்பிராயத்தின்படி அதற்குத் தோன்றினால், மேன்முறையீட்டு நீதிமன்றம், எப்போதேனும், மேன்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின்மீது, குற்றவியல் வழக்கு, கருமம் அல்லது நடவடிக்கை எதிலும், மேன்முறையீட்டாளருக்குச் சட்டத்தரணியொருவரைக் குறித்தொதுக்கலாம்.

செலவுகள்.

**354.** இவ்வத்தியாயத்தின் கீழ் மேன்முறையீட்டாளருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவரேனும் சட்டத்தரணியின் செலவுகளும், நீதிமன்றக் கட்டளையின்பேரில் சமூகமளிக்கின்ற அல்லது மேன்முறையீட்டின் இடைநேர்விளைவான எவையேனும் நடவடிக்கைகளின்போது விசாரணை செய்யப்பட்ட எவரேனும் சாட்சிக்காரரின் செலவுகளும், அத்துடன் அந்நோக்கத்துக்கென நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் சாட்சிக்காரர்களை விசாரணை செய்வதற்கான அல்லது அதன் இடைநேர்விளைவான எல்லாச் செலவுகளும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படும் ஒரு தொகைவரையும், ஆனால் 453 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கொடுப்பனவு வீதங்களுக்கும் கொடுப்பனவு அளவுத் திட்டங்களுக்கும் அமைவாகக் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும். விதிகள் ஆக்கப்படும்வரை, நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் வலுவுடையனவாக இருந்த கொடுப்பனவு வீதங்கள், அளவுத்திட்டங்கள் ஆகியவை தொடர்பான விதிகள், தொடர்ந்தும் வலுவுடையனவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**355.** (1) மேன்முறையீடொன்று சமர்ப்பித்தல் பற்றிய இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் ஏதேனும் வழு, செய்யாமை, அல்லது தவறுகை உள்ளவிடத்து, அத்தகைய வழு, செய்யாமை அல்லது தவறுகை எவ்வாறிருப்பினும், மேல் நீதிமன்றமானது, இயைபான எல்லாப் பத்திரங்கள், நடவடிக்கைக் குறிப்புகள் ஆகியவற்றுடன் சேர்த்து, மேன்முறையீட்டு அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுவதில் ஏற்படும் வழுவின், செய்யாமையின் அல்லது தவறுதலின் பயன்.

(2) மேன்முறையீட்டாளர் இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகையில், அவரின் பாலுள்ள ஏதேனும் வழு, செய்யாமை, அல்லது தவறுகை காரணமாக மாத்திரம், அத்தகைய மேன்முறையீட்டில் எதிர்வாதியாகவுள்ளவருக்கு அதனால் பெருமளவிலான பாதிப்பு ஏற்பட்டிருந்தாலன்றி, மேன் முறையீடொன்றை நிராகரிப்பதற்கு அல்லது தள்ளுபடிசெய்வதற்கு இச்சட்டக் கோவையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை அத்தகைய நீதிமன்றம் பிரயோகித்தலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படாததும் அல்லது தள்ளுபடி செய்யப் படாததுமான ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில், அவ்வாறு குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வழுவை, செய்யாமையை, அல்லது தவறுகையைச் சரிப்படுத்தும், நிரப்பும் அல்லது ஈடுசெய்யும் நோக்கத்துக்காக, மேன்முறையீட்டு நீதிமன்றம் அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய பணிப்புகளிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள்ளும் அத்தகைய நிபந்தனைகள் மீதும் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகும்படி அந்நீதிமன்றம் மேன் முறையீட்டாளரைப் பணித்தல் வேண்டும் என்பதுடன், மேன்முறையீட்டாளர் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், அந்த மேன்முறையீட்டை நிராகரித்தல் வேண்டும் அல்லது தள்ளுபடி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை மேல் நீதிமன்றத்துக்கு உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.

**356.** (1) இந்த அத்தியாயத்தின்கீழ், மேன்முறையீட்டின் மீது ஒரு வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் முடிவுசெய்யப்படும் போதெல்லாம், அந்த நீதிமன்றம், அக்கட்டளையை, அதன் இலச்சினையின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், பதிவேடுகளையும், மேன்முறையீட்டு மனுவையும், அவற்றுடன் சேர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட காரணங்களின் அல்லது அதன் கட்டளையின் ஒரு பிரதியையும் மேல் நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதலும் வேண்டும்.

(2) எந்த மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை உறுதிப்படுத்தப்படுகின்றதோ அந்த மேல் நீதிமன்றம், அதன்மேல் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைக்கு இவைவானவையான அத்தகைய கட்டளைகளை ஆக்குதல் வேண்டும் ; அவசியமெனில், அதற்கிணங்கப் பதிவேடுகள் திருத்தப்படுதல் வேண்டும்.

(3) அதன் பின்னர், மேல் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

செலவுத் தொகைகள்.

**357.** இந்த அத்தியாயத்தின் கீழான எல்லா நடவடிக்கைகளிலும், மேன்முறையீட்டு நீதிமன்றம் தக்கதெனக் கருதுகின்றவாறான செலவுத் தொகைகள் அந் நடவடிக்கைகளின் கட்சிக்காரர்களினால் அல்லது அந்த நடவடிக்கைகளின் கட்சிக்காரர்களுக்குச் செலுத்தப்படும்படி தீர்ப்பளிப்பதற்கு அந்த நீதிமன்றம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

ஆயின், எவ்விடயத்திலும், அத்தகைய கட்டளை, சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எதிராக ஆக்கப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. - மேன்முறையீடுகள், மேன்முறையீட்டுக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் ஆகியவை அற்றுப்போதலும் மீளப்பெற்றுக்கொள்ளப்படுதலும்.

**358.** (1) இச்சட்டக்கோவையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு மேனமுறையீடும், மேன்முறையீட்டுக்கு அனுமதிகோரும் ஒவ்வொரு விண்ணப்பமும், குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்ததன்மேல் அற்றுப்போதல் வேண்டும் : அற்றுப்போதல்.

ஆயின், மேன்முறையீடு அல்லது விண்ணப்பம், குற்றத் தீர்ப்பொன்றிற்கு எதிரானதாகவிருக்குமிடத்து, இன்னலுறும் ஆளொருவர், மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரிக்கின்ற நீதிமன்றத்தின் அனுமதியுடன், குற்றத்தைக் கண்டுபிடித்தல் சம்பந்தப்பட்ட அளவுக்கு மட்டும் தலையிட்டு, மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தைத் தொடரலாம்.

(2) "இன்னலுறும் ஆள்" என்னும் சொல்லமைப்பு 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டதாதல் வேண்டும்.

**359.** இந்தச் சட்டக்கோவையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, விடயத்துக்கு ஏற்றவாறு, மேன்முறையீடொன்றை அல்லது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ள எவரேனும் மேன்முறையீட்டாளர் அல்லது விண்ணப்பகாரர் அவரது மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு - மேன்முறையீடுகளை அல்லது மேன்முறையீட்டுக்கு அனுமதிகோரும் விண்ணப்பங்களை மீளப்பெற்றுக் கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நேரத்திலும் விண்ணப்பிக்கலாம் ; அந்நீதிமன்றமானது, அது அவசியமானதெனக் கருதக்கூடிய அத்தகைய விசாரணையின் பின்னர், அது விதிப்பது பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய நியதிகளின் மீது அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை மீளப் பெற்றுக்கொள்வதை அனுமதிக்கலாம்; அதன் மேல் அந்த மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டதாதல் வேண்டும்.

## ஈ. - மேன்முறையீடுகளில் அரசுக்கான பிரதிநிதியாகவிருத்தல்

அரசுக்கான பிரதிநிதியாக விருத்தல்.

**360.** (1) அரசை அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரை ஒரு கட்சிக்காரராகக்கொண்டதும், இச்சட்டக்கோவையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படுவதுமான மேன்முறையீடு ஒவ்வொன்றிலும் சட்டத்துறைத் தலைமையதிபதி அரசுக்காகத் தோன்றுதல் வேண்டும்; சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு இப்பிரிவின்கீழான அவரது கடமைகளின் நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடியவாறானவையும் நடவடிக்கைகளோடு தொடர்புபட்டவையுமான அத்தகைய எல்லா ஆவணங்களும், காண்பிபொருள்களும், ஏனைய பொருள்களும், சட்டத்துறைத்தலைமையதிபதிக்கு, அத்தகைய ஆவணங்களையும், காண்பிபொருள்களையும், ஏனைய பொருள்களையும் கட்டுக்காவலில் வைத்திருக்கும் நீதிமன்றப் பதிவாளரினால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றாடியார் தலைமையதிபதி அல்லது ஓர் அரச சட்டவுரைஞர் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அதன்சார்பில் சிறப்பாக அல்லது பொதுவாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சட்டத்தரணி, அத்தகைய மேன்முறையீடு எதிலும் அரசுக்காக சட்டத்துறைத் தலைமையதிபதியின் சார்பில் தோன்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXIX

## ஆற்றுப்படுத்துகையும் மீளாய்வும் பற்றி

**361.** (1) சுருக்கமுறை நியாயாதிக்கத்திற் செயற்படுகின்ற நீதிவான் நீதிமன்றம் எதுவும், தகுந்ததென அது கருதினால், ஆள் எவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏதேனும் தண்டத்துக்கு அல்லது தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்படும் போதிலெல்லாம், அந்நடவடிக்கைகளில் எழுகின்ற சட்டப்பிரச்சினை எதனையும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆய்வுக்கென ஒதுக்கிவைக்கலாம். சட்டநுணுக்கங்களை ஒதுக்கி வைத்தல்.

(2) அவ்வாறு ஒதுக்கிவைக்கப்பட்ட சட்டப்பிரச்சினை ஒவ்வொன்றும் சிறப்பு வழக்கொன்றின் வடிவத்தில், சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய சிறப்பு வழக்கு ஒவ்வொன்றும், எந்த நீதிவான் முன்னர் வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டனவோ அந்தநீதிவானினால் வரையப்படுதல் வேண்டுமென்பதோடு, எண்பிக்கப்படவேண்டியனவென நீதிவானினால் கருதப்படும் நிகழ்வுகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுதலும் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சட்டப்பிரச்சினையைக் கூறுதலும் வேண்டும்.

(4) அத்தகைய சிறப்பு வழக்கு ஒவ்வொன்றும் நீதிவானினால் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் விவாதத்துக்கென நிரற்படுத்தப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், சிறப்பு வழக்கு முடிவு செய்யப்படும் வரை மறியற்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்படுதல் வேண்டும் அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதினால், பிணையில் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

தீர்மானமும் அதன்மீதான கட்டளைகளும்

**362.** மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய சிறப்பு வழக்கில் எழும் சட்டப்பிரச்சினையை விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், எந்தத்தீர்மானம் தொடர்பாகச் சிறப்பு வழக்கொன்று கூறப்பட்டதோ அந்தத்தீர்மானத்தை அதன்மேல் உறுதிப்படுத்துதல், திருத்துதல் அல்லது நேர்மாறாக்குதல் வேண்டும்; அல்லது அக்கருமம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம் :

ஆயின், எப்பொழுதும், இச்சட்டக்கோவையினைப் பின்பற்றி, சிறப்பு வழக்கொன்றைக் கூறி ஒப்படைக்கின்ற நீதிவான் ஒருவர், அவ்வழக்குத் தொடர்பிலான செலவுத்தொகைகள் எவற்றிற்கும் பொறுப்புடையவராதல் ஆகாது.

மேல் நீதிமன்றத்தில் எழும் பிரச்சினைகளை ஒதுக்கிவைப்ப தற்குள்ள தத்துவம்.

**363.** (1) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் முன்னிலையிலான விளக்கமொன்றில் எவரேனும் ஆள் தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனைத் தீர்ப்பளிக்கப்படும் போது, நீதிபதியானவர், தகுந்ததெனக் கருதினால், விளக்கத்தின்போது எழுந்துள்ள சட்டப்பிரச்சினை எதனையும் ஒதுக்கிவைத்து அப்பிரச்சினை எழுந்துள்ள சிறப்புச் சூழ்நிலைகளைக் கூறி, அவரால் கையொப்பமிடப்பட்ட வழக்கு வடிவத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுக்காக அப்பிரச்சினையை ஆற்றுப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய பிரச்சினை எதனையும் நீதிபதி ஒதுக்கிவைக்குமிடத்து, குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள், அது பற்றிய முடிவு பெறப்படும்வரை மறியற்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்படுதல் வேண்டும் அல்லது நீதிபதி தகுந்ததெனக் கருதினால், பிணையில் விட்டுவிடப்படுதல் வேண்டும்; அத்துடன் மேன்முறையீட்டு நீதிமன்றமானது அப்பிரச்சினையை விசாரித்து, இறுதியாகத் தீர்மானிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல், தீர்ப்பை நேர்மாறாக்குவதற்கு, உறுதிப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு அல்லது நீதிநெறிமுறை தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும்.

(3) மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் முன்னிலையிலான விளக்கமொன்றில் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, அத்தகைய விளக்கத்தில் எழுகின்றதும், இப்பிரிவின் கீழ் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்காததுமான ஏதேனும் சட்டம் பற்றிய பிரச்சினை மேலும் ஆயப்படுதல் வேண்டுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டால், அவர் அதற்கிணங்க தமது கைப்பட அத்தாட்சிப் படுத்தலாம்; அத்துடன், அதன்மேல் அவ்வழக்கை அல்லது அவசியமாகக்கூடியவாறான அதன் அத்தகைய பாகத்தை மீளாய்வு செய்து அத்தகைய பிரச்சினையை இறுதியாகத் தீர்மானிப்பதற்கும் அதன் மேல், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய பிரச்சினை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றதென்றாற் போன்று அதே முறையில், தீர்ப்பை நேர்மாறாக்குவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது திருத்துவதற்கும் அல்லது நீதிநெறிமுறை தேவைப் படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு கட்டளையை ஆக்குவதற்கும், மேன்முறையீட்டு நீதிமன்றம் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

மேல் நீதி மன்றத்தின் அல்லது நீதிவான் நீதிமன்றத்தின் பதிவேட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் தருவிக்கலாம்.

**364.** மேன்முறையீட்டு நீதிமன்றம், ஏதேனும் மேல் நீதிமன்றத்தில் அல்லது நீதிவான் நீதிமன்றத்தில் ஏற்கனவே விளங்கப்பட்டிருக்கும் அல்லது விளக்கம் முடிவுறாதிருக்கும் ஏதேனும் வழக்கில் அளிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை சட்டமுறையானதா அல்லவா என்பது பற்றி அல்லது ஒழுங்கு முறையானதா அல்லவா என்பது பற்றித் அல்லது அத்தகைய நீதிமன்றத்தினது நடவடிக்கைகள் செம்மையானவையா அல்லவா என்பது பற்றித் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக. அவ்வழக்கின் பதிவேட்டைத் தருவித்துப் பரிசோதனை செய்யலாம்.

மீளாய்வு செய்வதில் நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.

**365.** (1) எந்த வழக்கின் நடவடிக்கைகள் பற்றிய பதிவேடு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தருவிக்கப்பட்டுள்ளதோ அல்லது அதனால் வேறுவகையில் அறியப்படுகின்றதோ அந்த வழக்கு எதிலும் மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் தற்றுணிபின்படி XXVIII ஆம் அத்தியாயத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர், நேர்முகமாக அல்லது அவர் சார்பில் எதிர்வாதஞ் செய்யத் தோன்றும் சட்டத்தரணி மூலம் விசாரிக்கப்படுவதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தாலன்றி. அவருக்குப் பங்கம் விளைவிப்பதான எக்கட்டளையும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், விடுதலைத் தீர்ப்பு முடிவொன்றைக் குற்றத்தீர்ப்பு முடிவாக மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

**366.** மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அந்த நீதிமன்றத்தின் முன்னர் நேர்முகமாகவோ அல்லது வழக்குரைப்பவர் மூலமாகவோ விசாரிக்கப்படுவதற்கு எக்கட்சிக்காரருக்கும் எவ்வித உரிமையுமில்லை : — மீளாய்வின் போது கட்சிக்காரரை விசாரித்தல் நீதிமன்றததின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

ஆயின், நீதிமன்றமானது அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில், தகுந்ததென அது கருதினால், நேர்முகமாகவோ அல்லது வழக்குரைப்பவர் மூலமாகவோ, கட்சிக்காரர் எவரையும் விசாரணை செய்யலாம்.

**367.** முந்நூற்று அறுபத்துநான்காம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஏதேனும் வழக்கின் பதிவேடுகள் தருவிக்கப்படும் போது, மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், அப்பதிவேடுகளோடு சேர்த்து, அவரது முடிவுக்கான அல்லது கட்டளைக்கான காரணங்களையும், பிரதானமானவையென அவர் கருதும் எவையேனும் நிகழ்வுகளையும் காட்டும் கூற்றொன்றையும் சமர்ப்பிக்கலாம் ; அத்துடன், நீதிமன்றம் சொல்லப்பட்ட முடிவை அல்லது கட்டளையைப் புறத்தொதுக்குமுன்னர் அல்லது தள்ளிவைக்கு முன்னர், அத்தகைய கூற்றை ஆய்தல் வேண்டும். — மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பதிவேடுகள் தருவிக்கப்படும் போது மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் முடிவுக்கான காரணங்களின் கூற்றைச் சமர்ப்பிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**368.** (1) இவ்வத்தியாயத்தின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழக்கொன்று மீளாயப்படும்போது அத்தகைய நீதிமன்றம், அதன் இலச்சினையின் கீழ் அதன் கட்டளையை, மீளாயப்பட்ட துணிபுரை, தண்டனைத்தீர்ப்பு, அல்லது கட்டளை எந்த நீதிமன்றத்தால் பதியப்பட்டதோ அல்லது அளிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்துக்கு, அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், பதிவேடுகளையும், அவற்றுடன், அக்கட்டளைக்கு மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட காரணங்கள் பற்றிய பிரதியொன்றையும் சேர்த்து அந்நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(2) எந்த நீதிமன்றத்துக்குக் கட்டளை அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்படுகின்றதோ அந்த நீதிமன்றம், அதன்மேல், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டளைக்கு இசைவாகுமாறான அத்தகைய கட்டளைகளை ஆக்குதல் வேண்டும் என்பதுடன், அவசியமாயின், அதற்கு இணங்க, பதிவேடு திருத்தப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் VIII

## சிறப்பு நடவடிக்கைகள்

## அத்தியாயம் XXX

### இறப்புகள் பற்றிய விசாரணைகள்

**369.** இச்சட்டக்கோவையினது ஏற்பாடுகளின் கீழன்றி, இறப்புகள் பற்றிய விசாரணை எதுவும் நடாத்தப்படுதலாகாது. இறப்புகள் பற்றிய விசாரணை.

**370.** (1) ஆளொருவர் - விசாரணை யாளருக்குள்ள கடமை.

(அ) தற்கொலை புரிந்துள்ளாரென ; அல்லது

(ஆ) விலங்கினால் அல்லது இயந்திரத்தினால் அல்லது விபத்தினால் கொல்லப்பட்டுள்ளாரென ; அல்லது

(இ) திடீரென இறந்துள்ளாரென அல்லது அறிந்து கொள்ளப்படாத காரணத்தினால் இறந்துள்ளாரென

தகவல் கிடைத்ததும், விசாரணையாளர் ஒவ்வொருவரும் இறந்த அத்தகைய ஆளின் உடல் இருக்குமிடத்திற்கு உடனடியாகச் சென்று, அங்கு விசாரணை செய்து, அவ்வுடலில் காணப்படக்கூடியவாறான அத்தகைய காயங்களையும் முறிவுகளையும். உராய்வுகளையும் ஊறுக்கான வேறு அடையாளங்களையும், அவரது அபிப்பிராயப்படி அவ்விறப்பிற்கான காரணத்தோடு தொடர்புபட்டனவாக இருக்கக்கூடியவாறான -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய அடையாளங்களையும், பொருள்களையும், சூழ் நிலைகளையும் விவரித்தும், அத்துடன், அத்தகைய அடையாளங்கள் எவ்விதத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவெனத் தோன்றுகின்றன என்பதைப் பற்றிக் கூறியும், இறப்புக்கான மேலீடான காரணத்தைப்பற்றி அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அவ்வறிக்கையானது அத்தகைய விசாரணையாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆகக்கிட்டவிருக்கின்ற நீதிவானுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) நீதிவான் முன் இருக்கும் அறிக்கை அல்லது வேறு விடயம் குற்றமொன்று புரியப்பட்டுள்ளதென்பதற்கான நியாயமான ஐயுறவு உள்ளதென வெளிப்படுத்தினால், நீதிவான் XIV ஆம், XV ஆம் அத்தியாயங்களின்கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய சந்தர்ப்பத்தில், விசாரணையின் பதிவேடும் விசாரணையாளரின் அறிக்கையும், நீதிவான் முன்னரான நடவடிக்கைகளின் பதிவேட்டுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளில் கூறப்பட்ட நிகழ்ச்சிகளில் எதுவும் நீதிவான் ஒருவரின் கவனத்துக்குக் கொணரப்படும் போதிலெல்லாம், இச்சட்டக்கோவையின் 9 ஆம் பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் ஒரு விசாரணையை உடனடியாக அவர் நடாத்துதலை இதனகத்துள்ள எதுவும் தடைசெய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) எவரேனும் விசாரணையாளர், இவ்வத்தியாயத்தின் கீழான ஏதேனும் விசாரணையின் நோக்கத்துக்காக, அவ்வாறு செய்தல் உசிதமானதென அவர் கருதினால், தம்முன் சான்று அளிப்பதற்கென, அல்லது ஆவணம் எதையும் அல்லது வேறு பொருள் எதையும் காண்பித்தற்கென எவரேனும் சாட்சிக்காரரை வருகை தருமாறு கட்டாயப்படுத்துவதற்கு மன்றாணை விடுக்கலாம். விசாரணையாளருக்குள்ள தத்துவங்கள்.

(6) அவ்வாறு கட்டளைவிட்டழைக்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய அழைப்புக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதருவதற்குத் தவறினால் அல்லது அசட்டை செய்தால் விசாரணையாளர் அத்தகைய ஆளைப்பிடித்து, தம்முன் கொண்டு வருவதற்கென ஆணைப்பத்திரமொன்றை விடுக்கலாம்.

(7) அவ்வாறு வருகைதருவதற்குத் தவறுகின்றவரான, அல்லது சாட்சிக்காரருக்குரிய சத்தியத்தைச் செய்ய மறுக்கின்றவரான, அல்லது அவரிடஞ் சட்டப்படி கேட்கப்படவேண்டியதான ஏதேனும் கேள்விக்கு விடையளிக்க மறுக்கின்றவரான, அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்கத் தவறுகின்றவரான அல்லது மறுக்கின்றவரான ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதற்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஏதேனும் காலத்துக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாரின் கட்டுக்காவலில் அல்லது மனநோய் மருத்துவமனையில் அல்லது தொழுநோய் மருத்துவமனையிலுள்ள ஆளின் இறப்பு.

**371.** (1) எவரேனும் ஆள் பொலிசாரின் கட்டுக்காவலில் இருக்கும்போது அல்லது மனநோய் அல்லது தொழுநோய் மருத்துவமனையில் அல்லது மறியற்சாலையில் இருக்கும்போது இறந்தால், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய ஆளைக் கட்டுக்காவலில் வைத்திருந்தவரான அல்லது அத்தகைய மருத்துவமனைக்கு அல்லது மறியற்றாலைக்குப் பொறுப்பாக விருந்தவரான அலுவலர், எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் இறந்தவரின் உடல் காணப்பட்டதோ, அந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவானுக்கு, அத்தகைய இறப்புப்பற்றி உடனடியாகத் தகவலளித்தல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய நீதிவான், இறந்தவரின் உடலைப் பார்வையிட்டு இறப்புக்கான காரணம் பற்றி விசாரணை நடாத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழான ஒரு விசாரணையின் நோக்கங்களுக்காக, தவறொன்று பற்றிய விசாரணையொன்றை நடத்துவதில் ஒரு நீதிவானுக்கு எந்தத் தத்துவங்கள் இருக்குமோ அந்தத் தத்துவங்கள் யாவற்றையும் நீதிவான் ஒருவர் உடையவராகவிருத்தல் வேண்டும்.

சான்றும் முடிவும் பதிவு செய்யப் படுதல் வேண்டும்.

**372.** (1) இவ்வத்தியாயத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட விசாரணையை நடாத்தும் நீதிவான் அல்லது விசாரணையாளர் அதன் மீதான சான்றையும் தனது முடிவையும் பதிவுசெய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இவ்வத்தியாயத்தின்கீழ், இறப்புப்பற்றிய விசாரணை நடாத்தப்படும் இடமானது, பொதுமக்கள் வருகை தருவதற்குரிய, இடமாக இருத்தல் வேண்டும். ஆனால் இறப்புப்பற்றிய ஒரு விசாரணையை நடத்துகின்ற ஒரு நீதிவான் அல்லது விசாரணையாளர், தமது தற்றுணிபின்பேரில், பொதுமக்கள் நலம்பேணும் கொள்கையாகிய அல்லது உசிதம் என்ற வகையிலான விசேட காரணங்கள்மீது, விசாரணையின் எக்கட்டத்திலும், அந்த விசாரணை நடாத்தப்படுகின்ற இடத்திலிருந்து பொதுமக்களை விலக்கிவைக்கலாம்.

**373.** (1) நீதிவான் அல்லது அதற்கென அமைச்சரால் தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் விசாரணையாளர், அவர் அவ்வாறு செய்தல் உசிதமெனக் கருதினால், உயிரற்ற உடலைச் சவப்பரிசோதனை செய்து, இறப்புக்கான காரணம் பற்றி அத்தகைய நீதிவானுக்கு அல்லது விசாரணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாவட்டத்தின் அரசாங்க மருத்துவ அலுவலரை, அல்லது வேறெவரேனும் மருத்தவத் தொழிலரை, கேட்டல் வேண்டும். சவப் பரிசோதனைகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சவப்பரிசோதனையின் நோக்கங்களுக்காக, நீதிவான் உயிரற்ற உடல் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்தால், அவ்வுடல் தோண்டியெடுக்கப் படும்படி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தயாயம் XXXI

## சித்தசுவாதீனமற்ற ஆட்கள்

குற்றஞ்சாட்டப் பட்டவர் சித்தசுவாதீன மற்றவராக வுள்ள விடயத்தில், பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**374.** (1) ஒரு விசாரணையை அல்லது விளக்கத்தை நடாத்துகின்ற நீதிவான் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவர் சித்தசுவாதீனமற்றவரென்றும் அதன் விளைவாக அவர் தமக்காக எதிர்வாதஞ்செய்யுந் திறனற்றவரென்றும் நம்புவதற்குக் காரணம் உள்ளவிடத்து, அத்தகைய சித்தசுவாதீனமின்மை பற்றி விசாரணை செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளை, அம்மாவட்டத்தின் அரசாங்க மருத்துவ அலுவலரைக் கொண்டு அல்லது வேறெவரேனும் மருத்துவ அலுவலரைக் கெண்டு பரிசோதனை செய்வித்தலும் வேண்டும் ; அதன்மேல், அத்தகைய அலுவலரை ஒரு சாட்சிக்காரராக விசாரணை செய்து, அவ்விசாரணையை எழுத்திலெடுத்தல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சித்தசுவாதீனமற்றவரென்றும் அதன்விளைவாகத் தமக்காக எதிர்வாதஞ்செய்யுந் திறனற்றவரென்றும் நீதிவான் நீதிமன்றம் அபிப்பிராயப்படின், அந் நீதிமன்றம் அவ்வழக்கில் மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுத்தலைப் பிற்போடுதல் வேண்டும்.

மேல் நீதிமன்றத் தின் முன்னர் பாரப்படுத்தப்பட்ட ஆள் சித்தசுவா தீன மற்றவராக விருக்கும் விடய த்தில் பின்பற்றப் பட வேண்டிய நடவடிக்கைமுறை

**375.** (1) மேல் நீதிமன்றத்தின் முன்னர் விளக்கத்துக்குப் பாரப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் விளக்கத்தின்போது, சித்த சுவாதீனமற்றவரென்றும் அதன் விளைவாக அவர் தமக்காக எதிர்வாதஞ் செய்யுந் திறனற்றவரென்றும் நீதிமன்றத்துக்குத் தோன்றினால், மேல் நீதிமன்றத்தின் யூரர்சபை அல்லது (விளக்கம், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூர்ச்சபையின்றி நடாத்தப்பட்டால்) மேல் நீதிமன்றத்தின் நீதிபதி முதலாவதாக, அத்தகைய சித்தசுவாதீனமின்மை பற்றியும் திறனின்மை பற்றியும் விளங்குதல் வேண்டும் என்பதுடன், அவை பற்றித் திருப்திப்பட்டால், அதற்கிணங்க முடிவு செய்தலும் வேண்டும்; அதன்மேல், விளக்கம் பிற்போடப்படுதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சித்தசுவாதீனமின்மை பற்றியதும் திறனின்மை பற்றியதும் ஆன விளக்கமானது, நீதிமன்றத்தின் முன்னரான அவரது விளக்கத்தின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறா திருக்கும் போது சித்தசு வாதீனமற்ற ஆளை விடுவித்தல்.

**376.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் சித்தசுவாதீன மற்றவரென்றும் அவர் தமக்காக எதிர்வாதஞ்செய்யுந் திறனற்றவரென்றும் காணப்படும் போதிலெல்லாம், நீதிமன்றம், அவ்வழக்கானது குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடப்படக்கூடிய வொன்றாகவிருப்பின், அவர் தகுந்த முறையில் கவனிக்கப் படுவாரெனவும், அவர் தமக்கோ அல்லது வேறெவரேனும் ஆளுக்கோ ஊறு ஏற்படுத்துவதிலிருந்து தடுக்கப்படுவாரெனவும், நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நீதிமன்றம் இதன் சார்பில் நியமிக்கக்கூடியவரான அத்தகைய அலுவலரின் முன்னர், தேவைப்படுத்தப்படும் போது, தோன்றுவாரென்பதற்காகவும் போதிய பிணைப்பொறுப்பு அளிக்கப்படுவதன்மேல், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அந்த வழக்கானது குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடமுடியாததொன்றாகவிருப்பின் அல்லது போதிய பிணைப்பொறுப்பு அளிக்கப்படாவிடின், நீதிமன்றம் அவ்வழக்கைப் பற்றி அமைச்சருக்கு அறிக்கை செய்தல் வேண்டும்; அமைச்சர், அமைச்சின் செயலாளர் கைப்பட எழுத்துமூலமாக, குற்றஞ்சாட்டப்பட்டவரை மனநோயாளர் மருத்துவ மனையொன்றில் அல்லது பாதுகாப்பான கட்டுக்காவலுக்குரிய வேறு பொருத்தமான இடத்தில் மறித்து வைக்கும்படி கட்டளையிடலாம் ; நீதிமன்றம் அத்தகைய கட்டளைக்குப் பயனளித்தல் வேண்டும்.

விசாரணையை அல்லது விளக்கத்தை மீண்டும் தொடர்ந்து நடாத்துதல்.

**377.** (1) முந்நூற்று எழுபத்துநான்காம் 375 ஆம் பிரிவின்கீழ் ஒரு விசாரணை அல்லது விளக்கம் பிற்போடப்படும் போதிலெல்லாம், நீதிமன்றம் எந்நேரத்திலும் விசாரணையை மீண்டும் தொடர்ந்து நடாத்தலாம் அல்லது விளக்கத்தைப் புதிதாகத் தொடங்கலாம் என்பதுடன், குற்றஞ் சாட்டப்பட்டவரை அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்படியும் அல்லது அவரைக் கொண்டுவரும்படியும் தேவைப்படுத்தலாம்.

(2) முந்நூற்று எழுபத்தாறாம் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டு, அவர் தோன்றுவார் எனப்பிணைநின்ற பிணைக்காரர்கள், நீதிமன்றம் இதன் சார்பில் நியமிக்கும் அலுவலரின் முன்னர் அக்குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிலைப்படுத்தும்போது, குற்றஞ் சாட்டப்பட்டவர் தமக்காக எதிர்வாதஞ்செய்யுந் திறனுடையவர் என்று கூறும் அத்தகைய அலுவலரின் சான்றிதழ், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப் பட்டவர் நீதி மன்றத்தின் முன்னர்தோன்று போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**378.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்போது அல்லது அவர் மீண்டும் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படும் போது, அவர் தமக்காக எதிர்வாதஞ்செய்யுந் திறனுடையவரென நீதிமன்றம் கருதினால், விசாரணை அல்லது விளக்கம், தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் தமக்காக எதிர்வாதஞ் செய்வதற்கு இன்னமும் திறனற்றவராகவுள்ளாரென நீதிமன்றம் கருதினால், அது விடயத்துக்கு ஏற்றவாறு, 374 ஆம் பிரிவின் அல்லது 376 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, மீண்டும் செயற்படுதல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சித்தசுவாதீனமற்றவராக இருந்துள்ளாரெனத் தோன்றுமிடத்து.

**379.** குற்றஞ்சாட்டப்பட்டவர், விசாரணை நடாத்தப்படும் போது சித்தசுவாதீனமுள்ளவரெனத் தோன்றுமிடத்தும், நீதிமன்றத்தின் முன்னர் அளிக்கப்பட்ட சான்றிலிருந்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் சித்த சுவாதீனமுள்ளவராகவிருந்தால் எந்தச் செயலானது தவறொன்றாக அமைந்திருக்குமோ அந்த ஒரு செயலை அவர் புரிந்துள்ளாரென நம்புவதற்குக் காரணமுண்டென்றும், அச்செயல் புரியப்பட்ட நேரத்தில் சித்தசுவாதீனமில்லாத காரணத்தினால் அச்செயலின் தன்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு அல்லது அது பிழையானதென அல்லது சட்டத்துக்கு முரணானதெனத் தெரிந்துகொள்ளுவதற்குத் திறனில்லாதவராக இருந்தாரெனவும் நீதிவான் நீதிமன்றம் திருப்தியடையுமிடத்தும் XV ஆம் அத்தியாயத்தில் பணிக்கப்பட்டுள்ளவாறு நீதிமன்றம் வழக்கைத் தொடர்ந்து நடாத்துதல் வேண்டும்.

சித்தசுவாதீனமின்மை என்ற ஏது வின் மீது விடுதலைத் தீர்ப்பு அளித்தல்.

**380.** எவரேனும் ஆள், ஒரு தவறை எந்தநேரத்தில் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்படுகின்றாரோ அந்த நேரத்தில் அவர், சித்தசுவாதீனமற்றவராக இருந்த காரணத்தினால், அத்தவறாக அமைகின்றதெனச் சார்த்தப்படும் செயலின் தன்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு அல்லது அச்செயல் பிழையானதென அல்லது சட்டத்துக்கு முரணானதெனத் தெரிந்து கொள்ளுவதற்குத் திறனற்றவராக இருந்தார் என்ற ஏதுவின்மீது விடுதலை செய்யப்படும் போதிலெல்லாம், அவர் அச்செயலைப் புரிந்துள்ளாரா புரியவில்லையாவெனத் துணிபுரையிற் குறிப்பாகக்கூறப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தசுவாதீன மனின்மை என்ற ஏது வின் மீது விடுதலை செய்யப்பட்ட ஆள், பாது காப்பான கட்டுக்காவ லில்வைத் திருக்கப் படுதல் வேண்டும்.

**381.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவர், சார்த்தப்பட்ட செயலைப் புரிந்துள்ளாரெனத் துணிபுரையிற் கூறப்படும் போதிலெல்லாம், எந்த நீதிமன்றத்தின்முன்னர் விளக்கம் நடைபெற்றுள்ளதோ அந்த நீதிமன்றம், அவரிடம் காணப்பட்ட திறனின்மை இல்லாதிருந்தால் அச்செயல் ஒரு தவறாக அமைந்திருப்பின், அத்தகைய ஆள், நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் அத்தகைய இடத்திலும் முறையிலும் பாதுகாப்பான கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அமைச்சரின் கட்டளைக்காக அவருக்கு அவ்வழக்குப் பற்றி அறிக்கை செய்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், அமைச்சுச் செயலாளரின் கைப்பட, எழுத்து மூலமாக, அத்தகைய ஆள், மேற்கொண்டு கட்டளையிடப்படும் வரை, மனநோய் மருத்துவமனையொன்றில், மறியற்சாலையில், அல்லது பாதுகாப்பான கட்டுக்காவலுள்ள வேறு பொருத்தமான இடத்தில், மறித்துவைக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

இவ்வத்தியாயத்தின்கீழ் மறித்து வைக்கப்படும் ஆட்களை, மறியற்சாலைகள் ஆணையாளர் அல்லது மனநோய் மருத்துவ மனைப் பார்வையாளர்கள்சென்று பார்த்தல் வேண்டும்.

**382.** இவ்வத்தியாயத்தினது ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் ஆள் மறித்துவைக்கப்படும்போது, அத்தகைய ஆள், மறியற்சாலையொன்றில் மறித்துவைக்கப்படின் மறியற்சாலைகள் ஆணையாளர், அல்லது அத்தகைய ஆள் மனநோய் மருத்துவமனையொன்றில் மறித்துவைக்கப்பட்டிருப்பின், மனநோய் மருத்துமனைப் பார்வையாளர்கள் அல்லது அவர்களில் எவரேனும் இருவர் அத்தகைய ஆளின் மனநிலையைக் கண்டறிவதற்காக அவரைச் சென்று பார்த்தல் வேண்டும்; அத்துடன் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கும் ஆகக் குறைந்தது ஒரு முறையாயினும் அத்தகைய ஆணையாளர் அல்லது மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய பார்வையாளர்களில் எவரேனும் இருவர் அவரைச் சென்று பார்த்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளின் மனநிலைபற்றி அத்தகைய ஆணையாளர் அல்லது பார்வையாளர்கள் விசேட அறிக்கையொன்றைத் தயாரித்து அமைச்சருக்கு அளித்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**383.** அத்தகைய ஆள் 376 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மறித்துவைக்கப்பட்டிருந்து, அத்தகைய ஆணையாளர் அல்லது பார்வையாளர்கள், தமது அல்லது தங்கள் அபிப்பிராயத்தில், அத்தகைய ஆள் தமக்காக எதிர்வாதஞ் செய்யுந் திறனுள்ளவரென அத்தாட்சிப்படுத்தினால், எந்நீதிமன்றத்தினது பணிப்பின்படி அவர் மறித்துவைக்கப்பட்டாரோ அந்நீதிமன்றத்தின் முன்னர், அத்தகைய நீதிமன்றம் நிருணயிக்கும் அத்தகைய நேரத்தில் கொணரப்படுதல் வேண்டும் எனபதுடன், 378 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் நீதிமன்றம் அத்தகைய ஆள்மீது நடவடிக்கை மேற்கொள்ளுதலும் வேண்டும் ; அத்துடன், மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய ஆணையாளரின் அல்லது பார்வையாளர்களின் அத்தாட்சிப்பத்திரம் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். 376 ஆம் பிரிவின்கீழ் மறித்து வைக்கப்பட்ட ஆள், தமக்காக எதிர்வாதஞ் செய்யுந்திற னுடையவரென அறிக்கை செய்யப்படு மிடத்து பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**384.** அத்தகைய ஆள் 376 ஆம் பிரிவின் அல்லது 381 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் மறித்துவைக்கப்பட்டு, அத்தகைய ஆணையாளர் அல்லது பார்வையாளர்கள், தமது அல்லது தங்களது மதிப்பீட்டின்படி, அத்தகைய ஆள் தமக்கோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்கோ ஊறு ஏற்படுத்தும் ஆபத்தின்றி விடுவிக்கப்படலாமென, அத்தாட்சிப்படுத்தினால், அதன்மேல், அத்தகைய ஆளை விடுவிக்கும்படி அல்லது கட்டுக்காப்பில் தடுத்துவைக்கும்படி அல்லது அவர் மனநோய் மருத்துவமனையொன்றுக்கு ஏற்கனவே அனுப்பப்படாவிட்டால் மனநோய் மருத்துவமனையொன்றுக்கு மாற்றியனுப்பும்படி அமைச்சர் கட்டளையிடலாம்; அவரை, மருத்துவமனையொன்றுக்கு அனுப்பப்படும்படி அமைச்சர் கட்டளையிடும் விடயத்தில், அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சான்றுகளை எடுத்து, அத்தகைய ஆளின் மனநிலை பற்றி முறைமையான விசாரணை செய்வதற்கும், 376 ஆம் அல்லது 381 ஆம் பிரிவுகளின் கீழ் மறித்து வைக்கப்பட்ட ஆள்விடுவிக் கப்படுவதற்குத் தகுந்தவரென வெளிப்படுத்தப் படுமிடத்து, பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சருக்கு அறிக்கை தயாரித்து அளிப்பதற்குமாக ஒரு நீதிவானும் இரு மருத்துவ அலுவலர்களும் அடங்கிய விசாரணைக் குழுவொன்றை அமைச்சர் நியமிக்கலாம் ; அமைச்சர் அவர் தகுந்ததெனக் கருதுகின்றவாறு, அத்தகைய ஆளை விடுவிக்கும்படி அல்லது தடுத்துவைக்கும்படி கட்டளையிடலாம்.

மறித்துவைக்கப்பட்ட ஆளை, அவரது உறவினர்களது அல்லது நண்பர்களது கவனிப்புக்கு ஒப்படைத்தல்.

**385.** (1) முந்நூற்று எழுபத்தாறாம் பிரிவின் அல்லது 381 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் மறித்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளின் உறவினர் அல்லது நண்பர் எவரும் அவ்வாறு மறித்து வைக்கப்பட்ட ஆள் தம்முடைய கவனிப்பிலும் கட்டுக்காவலிலும் இருப்பதற்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டுமென விரும்பும்போதிலெல்லாம், அத்தகைய உறவினர் அல்லது நண்பர் விண்ணப்பஞ்செய்வதன் பேரிலும், ஒப்படைக்கப்பட்ட ஆள் தகுந்த முறையில் கவனிக்கப் படுவாரென்றும், தமக்கோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்கோ ஊறு ஏற்படுத்துவதிலிருந்து தடுக்கப்படுவாரென்றும் அமைச்சர் திருப்தியடையும்படி அத்தகைய உறவினர் அல்லது நண்பர் பிணைப்பொறுப்பு அளிப்பதன்மேலும், அத்தகைய ஆள் அத்தகைய உறவினரிடம் அல்லது நண்பரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென அமைச்சர் கட்டளையிடலாம்.

(2) அத்தகைய ஆள், அவ்வாறு ஒப்படைக்கப்படும் போதிலெல்லாம், அத்தகைய ஒப்படைத்தலானது, அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய அலுவலரால் அத்தகைய நேரத்தில் பார்வையிடப்படுவதற்கென அத்தகைய ஆள் கொண்டுவரப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் மீதானதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) முந்நூற்று எண்பத்திரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளும் 384 ஆம் பிரிவின் ஏற்பாடுகளும் ஏற்ற மாற்றங்களுடன், இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆட்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பார்வையிடல் அலுவலரின் அத்தாட்சிப்பத்திரம் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

**386.** முந்நூற்று எண்பத்துநான்காம் பிரிவின்கீழ் நடவடிக்கைகளைத் தொடருகின்ற ஒரு நீதிவான், சித்தசுவாதீன மற்றவரெனச் சந்தேகிக்கப்படும் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஆளெவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி, அத்தகைய ஆளை, ஒரு முறையோ அல்லது அதற்குக் கூடுதலான முறைகளோ, விளக்க மறியலுக்கான கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறான, அத்தகைய நியாயமான காலத்துக்கு அத்தகைய ஆள், ஒரு மறியற்சாலைக் கண்காணிப்பாளரால் மறியற்சாலையில் தடுத்து வைக்கப்படுவதற்காக அவரது கட்டுக்காவலின் கீழ் விளக்கமறியலில் வைத்தல் வேண்டும் அல்லது மனநோய்கள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அவதானிப்பு இல்லத்துக்கு அல்லது அவதானிப்பு இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் அத்தகைய அவதானிப்பு இல்லத்தில் அல்லது அவதானிப்பு இடத்தில் தடுத்துவைக்கப்படுவதற்காக அத்தகைய அலுவலரின் கட்டுக்காவலின் கீழ், விளக்கமறியலில் வைத்தல் வேண்டும். அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்படும் ஆள் ஒவ்வொருவரும், அவர் எந்த அவதானிப்பு இல்லத்தில் அல்லது அவதானிப்பு இடத்தில் தடுத்துவைத்திருக்கப்படக் கூடுமோ அந்த அவதானிப்பு இல்லத்தின் அல்லது அவதானிப்பு இடத்தின் மருத்துவ அலுவலரினது பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

சித்தசுவாதீன மற்றவரெனச் சந்தேகிக்கப் படும் ஆள், எவ்விடத்தில் எம்முறையில் விளக்கமறியலில் வைத்திருக்கப் படுதல் வேண்டும் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XXXII

### நீதி நிருவாகத்தைப் பாதிக்கும் குறித்த சில தவறுகளின் விடயத்திலான நடவடிக்கைகள்

135 (1) என்னும் பிரிவின் (ஆ) (இ) என்னும் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலான நடவடிக்கை முறை.

**387.** (1) நீதிவான் நீதிமன்றமொன்றல்லாத ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நீதிமன்றமானது நீதிமுறை நடவடிக்கையொன்றின் பொழுது அதன் முன்னர் புரியப்பட்டதும் அல்லது அதன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் 135 (1) என்னும் பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான ஏதேனும் தவறு பற்றி விசாரணைசெய்வதற்கான ஏது இருக்கின்றதென அபிப்பிராயப்படும் பொழுது, அத்தகைய நீதிமன்றம், அவ்வழக்கை விசாரணைக்காக அல்லது விளக்கத்திற்காக மிக்க அண்மையிலுள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பலாம் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கட்டுக்காவலிலும் வைக்கலாம், அல்லது அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்காகப் போதிய பிணைப்பொறுப்பும் எடுக்கலாம்; அத்துடன், அத்தகைய விசாரணையில் அல்லது விளக்கத்தில் தோன்றி சான்று கொடுப்பதற்கென முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய நீதிவான் நீதிமன்றம், அதன்மேல் சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

(2) அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அல்லது அதன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அத்தகைய நீதிமன்றத்தில் தலைமைதாங்கும் அலுவலர் மிக்க அண்மையிலுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் ஒருவராகவும் இருக்குமிடத்து, அவர், குற்றஞ்சாட்டப்பட்டவரை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குதலாகாது; ஆனால், மேல் நீதிமன்றமொன்றிற்கு விளக்கத்திற்காகப் பாரப்படுத்தும் கருத்துடன் XV ஆம் அத்தியாயத்தின் கீழ் தாமாக விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும் அல்லது அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் வேறொரு நீதிவானால் விளங்கப்படுவதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கமறியலில் வைத்தல் வேண்டும் அல்லது பிணையில் விட்டுவிடுதல் வேண்டும்.

(3) நீதிவான் நீதிமன்றமொன்றின் விடயத்தில், அதன் முன்னர் அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அல்லது அதன் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நேரத்தில் அத்தகைய நீதிமன்றத்தில் தலைமைதாங்கும் நீதிவான், மேல் நீதிமன்றமொன்றிற்கு விளக்கத்திற்காகப் பாரப்படுத்தும் கருத்துடன் XV ஆம் அத்தியாயத்தின்கீழ் தாமாக விசாரணையொன்றை நடாத்தலாம் அல்லது அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் வேறொரு நீதிவானால் விளங்கப்படுவதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கமறியலில் வைக்கலாம் அல்லது பிணையில் அவரை விட்டுவிடலாம்.

**388.** (1) தண்டனைச் சட்டக்கோவையின் 173 ஆம், 176 ஆம், 177 ஆம், 178 ஆம், அல்லது 223 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய தவறு, உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றம் தவிர்ந்த ஏதேனும் குற்றவியல் அல்லது குடியியல் நீதிமன்றத்தின் பார்வைக்குட்பட்ட இடத்தில் - குறித்த சில அவமதிப்பு விடயங்களிலான நடவடிக்கைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அதன் சமூகத்தில் புரியப்படும்போதிலெல்லாம், அத்தகைய நீதிமன்றம் தவறாளரைக் கட்டுக்காவலில் தடுக்குமாறு செய்விக்கலாம் என்பதுடன், அதே நாளில் நீதிமன்றம் கலைவதற்கு முன்னதாக எந்நேரத்திலாவது அது தகுந்ததென எண்ணினால், அத்தவறு பற்றி நீதிநெறிக் கவனத்துக்குட்படுத்தி, அத்தவறாளருக்கு, மாவட்ட நீதிமன்ற மொன்றாக இருந்தால், ஆயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும்; அது செலுத்தப்படத் தவறினால் அத்தகைய குற்றப்பணம் விரைவில் செலுத்தப்பட்டாலன்றி, மூன்று மாதங்கள்வரை நீடிக்கக்கூடிய சாதாரண மறியற்றண்டனைக்கும் ; நீதிவான் நீதிமன்றமொன்றாக இருந்தால், ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் ; அது செலுத்தப்படத் தவறினால், அத்தகைய குற்றப்பணம் விரைவில் செலுத்தப்பட்டாலன்றி, இரண்டு மாதங்கள்வரை நீடிக்கக்கூடிய சாதாரண மறியற்றண்டனைக்கும் தண்டனைத்தீர்ப்பு வழங்கலாம்.

(2) அத்தவறானது, தண்டனைச்சட்டக்கோவையின் 223 ஆம் பிரிவின்கீழானதெனில், இடையீடு செய்யப்பட்ட அல்லது அவமதிக்கப்பட்ட நீதிமன்றம், எத்தன்மைத்தான நீதிநெறி நடவடிக்கைகளிலும் அதன் எக்கட்டத்திலும் அமர்விலிருந்தது என்பதனையும் இடையீட்டின் அல்லது அவமதிப்பின் தன்மையையும் பதிவேடு காட்டுதல் வேண்டும்.

(3) நீதிமன்றமானது, அதன் தற்றுணிபில் தவறாளரை விட்டுவிடலாம் அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளைக்கு அல்லது தேவைப்படுத்தாணைக்கு அவர் கீழ்ப்படிந்ததன்பேரில் அல்லது நீதிமன்றம் திருப்திப்படுமளவுக்கு மன்னிப்புக் கோரியதன்பேரில் அத் தண்டனையைக் குறைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**389.** (1) ஏதேனும் நீதிவான் நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றம், ஏதேனும் வழக்கில் 388 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவையும் நீதிமன்றத்தின் பார்வைக்குட்பட்ட இடத்தில் அல்லது அதன் சமூகத்தில் புரியப்பட்டவையுமான தவறுகளுள் எதற்காகவேனும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், அதன்கண் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இல்லாமல், வேறு விதமாகத் தண்டிக்கப்படவேண்டுமென நீதிமன்றம் கருதினால், அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவ்வழக்கு அப்பிரிவின் கீழ் முடிவு செய்யப்படலாகாதென அந்நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அந்நீதிமன்றம், அத்தவறாயமையும் நிகழ்வுகளையும் இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப் பட்டவாறாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கூற்றையும் பதிவுசெய்த பின்னர், வழக்கைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்துரைகளுக்கு இணங்கி யொழுகுதலும் வேண்டும். 388 ஆம் பிரிவின்கீழ் வழக்கானது கையாளப் படுதலாகாதென நீதிமன்றம் கருதுமிடத்திலான நடவடிக்கை முறை.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் அத்தகைய வழக்கு கிடைக்கப்பெற்றதும், நிகழ்வுகள் பற்றித் திருப்தியடைந்தால் தோதான நீதிவான் நீதிமன்றத்தில் தவறாளருக்கெதிராக வழக்குத் தொடருதல் வேண்டும் அல்லது மேல் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படுவதற்கெனத் தவறாளரைப் பாரப்படுத்தும் நோக்கத்துடன் XV ஆம் அத்தியாயத்தின்கீழ் விசாரணையொன்றை நடாத்தும்படி நீதிவானைப் பணிக்கலாம் அல்லது மேல் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படுவதற்காகத் தவறாளரை நேரடியாகக் குற்றப்பகர்வு செய்யலாம் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், மேல் நீதிமன்றத்திலான விளக்கமானது, யூரர்சபை இல்லாத விளக்கமாக இருத்தல் வேண்டும் :

ஆயின், மேலும், எந்தவொரு நீதிவானின் பார்வைக்குட்பட்ட இடத்தில் அல்லது அவரது சமுகத்தில் அத்தவறு புரியப்பட்டதோ அந்த நீதிவான், வழக்கைச் சுருக்கமுறையாக விளக்குதல் ஆகாது.

மறுமொழி அளிக்க அல்லது ஆவணங் களைக் காண்பிக்க மறுக்கின்ற ஆளை மறியலில் வைத்தல் அல்லது பாரப்படுத்தல்.

**390.** (1) எவரேனும் ஆள், உயர் நீதிமன்றம் அல்லது மேல் முறையீட்டு நீதிமன்றம் தவிர்ந்த நீதிமன்றமொன்றிற்கு முன்பாக அவரிடம் கேட்கப்படுகின்ற அத்தகைய கேள்விகளுக்கு மறுமொழிகூற மறுத்து, அல்லது நீதிமன்றம் காண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்துகின்றதும் அவருடைய உடைமையில் அல்லது தத்துவத்தில் இருக்கின்றதுமான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்க மறுத்து, அவ்வாறு மறுப்பதற்கான நியாயமான காரணம் எதனையும் காட்டாது விட்டால், அத்தகைய நீதிமன்றம், (இதற்கிடையில் அத்தகைய ஆள் விசாரணைசெய்யப்படவும் மறுமொழி கூறவும் அல்லது ஆவணத்தைக்காண்பிக்கவும் சம்மதித்தாலொழிய) எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, அத்தகைய ஆள் எழு நாட்களுக்கு மேற்படாத ஏதேனும் காலத்திற்கு கைதியொருவராகத் தடுத்துவைக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம். சொல்லப்பட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர், அவர் தொடர்ந்து மறுத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் 388 ஆம் அல்லது 389 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின் கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்படும் ஒவ்வொருவிடயத்திலும், நீதிமன்றமானது மறுப்புப் பற்றிய நிகழ்வுகளை, அவ்வாறு மறுக்கும் ஆளினால் கூற்றெதுவும் செய்யப்பட்டிருப்பின் அதனோடு சேர்த்துப் பதிவுசெய்தல் வேண்டுமென்பதோடு, அதனால் ஆக்கப்பட்ட கட்டளையின் பிரதியொன்றுடன் சேர்த்து அத்தகைய பதிவேட்டின் பிரதியொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் தகுந்ததெனக் கருதினால் அதனை மீளாய்வு செய்வதற்கு அதற்குள்ள தத்துவத்தைப் பிரயோகிப்பதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

**391.** இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, 135 (1) ஆம் பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறு, எவரேனும் மாவட்ட நீதிபதி அல்லது நீதிவான் முன்னிலையில் அல்லது அவருடைய அதிகாரத்தை அவமதித்துப் புரியப்பட்டுள்ள பொழுது அல்லது நீதிநெறி நடவடிக்கையின்போது அத்தகைய மாவட்ட நீதிபதி அல்லது நீதிவான் என்ற முறையில் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள பொழுது, அத்தகைய மாவட்ட நீதிபதி அல்லது நீதிவான் அத்தகைய தவறுக்காக எவரேனுமாளை விளங்குதலாகாது.

மாவட்ட நீதிபதிகளும் நீதிவான்களும் 135 (1) ஆம் பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் அவர்களுக்கு முன்பு புரியப்படும்பொழுது அவற்றை விளங்குதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் நீதிமன்றம் குறிப்பிட்ட சில தவறுகளை நீதிநெறிக் கவனத்திற்குட் படுத்தலாம்.

**392.** இச்சட்டக்கோவையில் முரணாக எது எவ்விதமிருப்பினும் தண்டனைச் சட்டக்கோவையின் 173 ஆம், 176 ஆம், 177 ஆம் அல்லது 178 ஆம் பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் அத்தகைய தவறு அல்லது இச்சட்டக்கோவையின் 135 (1) ஆம் பிரிவின் (இ), (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் அத்தகைய தவறு.-

(i) மேல் நீதிமன்றத்தின் பார்வைக்குட்பட்ட இடத்தில் அல்லது அதன் சமூகத்தில் புரியப்பட்டுள்ளவிடத்தும், அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றப்பகர்வு செய்யப்படாமல் நீதிநெறி நடவடிக்கையொன்றின் பொழுது மேல் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளவிடத்தும் ;

அத்துடன்

(ii) ஏனைய சந்தர்ப்பங்களில் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றப்பகர்வு செய்யப்படுவதன்மீதும்,

மேல் நீதிமன்றம் அத்தகைய தவறினை நீதிநெறிக் கவனத்துட் படுத்தலாம் என்பதுடன், அதனை விளங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் IX

## குறைநிரப்பு ஏற்பாடுகள்

## அத்தியாயம் XXXIII

### சட்டத்துறைத் தலைமையதிபதியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி

**393.** (1) பின்வரும் விடயங்களில், தகவலை வெளிக் காட்டுதலும், குற்றப்பகர்வு செய்தலும் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுத்தலும், மேற்கொள்ளுதலும் அல்லது நடாத்துதலும், சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்; அவையாவன :- சட்டத்துறைத் தலைமையதிபதியின் தத்துவங்கள்.

(அ) XV ஆம் அத்தியாயத்தின் கீழ் நீதிவானொருவரால் பூர்வாங்க விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமென வலுக்கட்டாயமானதாக்கப்பட்டுள்ள அல்லது நடாத்தப்பட வேண்டுமென்று சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பணிக்கப்பட்டுள்ள ஏதேனும் தவறொன்றின் விடயத்தில்;

(ஆ) தவறானது பிணையில் விடப்பட முடியாததாக இருக்கின்ற ஏதேனும் விடயத்தில் ;

(இ) குற்றவியல் நடவடிக்கைகள் தொடுக்கப்படவேண்டுமென அவர் கருதுவதும், அரச திணைக்களமொன்றினால் அவருக்கு ஆற்றப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் விடயத்தில் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) முக்கியமானதென அல்லது இடர்பாடுள்ளதென அவருக்குத் தென்படுவதும் அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவருடைய தலையீட்டினைத் தேவைப்படுத்துவதும், இச்சட்டக்கோவையின் 136 (1) (அ) என்னும் பிரிவின் கீழ்க் கோப்பிடப்பட்டது அல்லாததுமான ஏதேனும் விடயத்தில் ;

(உ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றப்பகர்வொன்று மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அல்லது தகவல் வெளிக்காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, முக்கியத்துவம் வாய்ந்த அல்லது இடர்பாடுடைய ஏதேனும் குற்றவியல் விடயம் பற்றி, விண்ணப்பத்தின் மீதாயினுஞ்சரி அல்லது அவருடைய சொந்த முயற்சியின் மீதாயினுஞ்சரி, அரச திணைக்களங்களுக்கும், பகிரங்க அலுவலர்களுக்கும், பொலிசு அலுவலர்களுக்கும். கூட்டுத் தாபனங்களிலுள்ள அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்குதல் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதி, -

(அ) ஏதேனும் குற்றவியல் நடவடிக்கையைத் தொடங்கும் அல்லது தொடரும் ; அல்லது

(ஆ) முக்கியத்துவம் வாய்ந்த அல்லது இடர்பாடுடைய ஏதேனும் குற்றவியல் விடயத்தில் அறிவுரை வழங்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்திற்காக, எவையேனும் புத்தகங்களுடன் அல்லது ஆவணங்களுடன் தமது அலுவலகத்திற்கு வருகைதரும்படி அரசின் அல்லது கூட்டுத்தாபனமொன்றின் அல்லது பொலிசிலுள்ள எவரேனும் அலுவலரைக் கட்டளைவிட்டழைப்பதற்கும் தமது அலுவலகத்தில் அவருடன் உரையாடுவதற்கும் உரித்துடைய வராதல் வேண்டும். அத்தகைய சம்பந்தப்பட்ட அலுவலர் அழைப்புக்கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன், கொண்டுவரும்படி அழைப்புக்கட்டளை விடுக்கப் பட்டிருக்கக்கூடிய அத்தகைய புத்தகங்களுடனும் ஆவணங்களுடனும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அலுவலகத்திற்கு வருகைதருதலும் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி, ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் குற்றவழக்கினை நடாத்துவதற்கென ஓர் அரச சட்டவுரைஞரைப் பெயர் குறித்து நியமிக்கலாம் அல்லது எவரேனும் சட்டத்தரணியை வேலைக்கமர்த்தலாம் என்பதோடு, அத்தகைய சட்டத்தரணிக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களையும் தீர்மானிக்கலாம்.

(5) (அ) XV ஆம் அத்தியாயத்தின்கீழ்ப் பூர்வாங்க விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டுமென வலுக்கட்டாயமாக தாக்கப்படுமிடத்து ; அல்லது

(ஆ) நடவடிக்கைகளைத் தொடருவதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதம் அல்லது அனுமதி தேவைப்படுமிடத்து ; அல்லது

(இ) அத்தகைய அறிக்கைக்கான வேண்டுகோளொன்று சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்டுள்ள விடத்து ; அல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) சட்டத்துறைத் தலைமையதிபதியின் ஆலோசனை அல்லது உதவி அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென அத்தகைய கண்காணிப்பாளர் அல்லது உதவிக் கண்காணிப்பாளர் கருதுமிடத்து ; அல்லது

(உ) நீதிவான் அவ்வாறு பணிக்குமிடத்து ; அல்லது

(ஊ) தவறானது, பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படக் கூடியதொன்றாக இருக்குமிடத்து, குற்றவழக்குத் தொடர்ச்சி மீளப்பெறப்பட்டுள்ளவிடத்தும் அல்லது மேற்கொண்டு நடாத்தப்பட முடியாதவிடத்தும்,

ஏதேனும் பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசுக் கண் காணிப்பாளர் அல்லது உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர், அவருடைய இடப்பரப்பிற்குள்ளாகப் புரியப்பட்ட ஒவ்வொரு தவறு பற்றியும் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் நியதிகளின்படி அறிக்கை செய்யும் பொழுது, விடயத்திற்கு ஏற்றாற்போல, பொலிசுக் கண்காணிப்பாளர் அல்லது உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்-

(அ) சூழ்நிலைகள் பற்றிய பூரண கூற்றொன்றையும் ;

(ஆ) சாட்சிக்காரர்கள் எல்லோரினதும் கூற்றுக்களின் பிரதிகளையும் ;

(இ) இயைபானவையாகக்கூடிய அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கோரப்படக்கூடிய அத்தகைய வேறு தகவலையும் ஆவணங்களையும் அல்லது காண்பி பொருள்களையும் ; அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) மரண விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளவிடத்து, மரணவிசாரணை நடவடிக்கைகளின் பிரதி யொன்றையும், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தில் அடங்கியுள்ள வேறெவை யேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தவறின் தன்மையை அல்லது வேறெவையேனும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு, ஏதேனும் சுருக்கமுறைத் தவறு தொடர்பில், சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் - §12, 52 இல. 1980

(அ) குற்றப்பகர்வொன்றினை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புதல், அல்லது

(ஆ) பூர்வாங்க விசாரணையொன்றில் பதிவுசெய்யப்பட்ட சான்றானது, குற்றப்பகர்வொன்றினைத் தயாரிப்பதற்கு அவசியமானதாகும் என அவர் அபிப்பிராயப்படுகின்ற விடத்து, அவரால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில், XV ஆம் அத்தியாயத்தில் தரப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க, பூர்வாங்க விசாரணையொன்றினை நடாத்தும்படி நீதிவானைப் பணித்தல்,

அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர், அத்தகைய தவறானது, நீதிவான் நீதிமன்ற மொன்றினால் விளங்கப்படற்பாலதாதலும் ஆகாது."

(8) இப்பிரிவின்கீழ்ச் சட்டத்துறைத் தலைமையதிபதி, அவருடைய தத்துவங்களைப் பிரயோகிப்பதனையும் அவருடைய கடமைகளைப் புரிவதனையும் இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா இடைநேர்விளைவான அல்லது குறைநிரப்பு ஏற்பாடுகளையும் கொண்டுள்ள ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஆட்கள் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப் பட்டுள்ளவர் களாகக் கருதப்படுவர்கள் என்பது.

§13, 52 இல 1980

**394.** எவ்வாட்களுக்கு எதிராக குற்றப் பகர்வு செய்யப்பட்டுள்ளதோ, மேல் நீதிமன்றத்தில் தோன்றுகின்றவர்களான அந்த எல்லா ஆட்களும் முரணானது காண்பிக்கப்பட்டாலொழிய, சட்டத்தின் முறையான போக்கில், நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப் பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் (இதனகத்து அடங்கியுள்ள கட்டுப்பாடுகளுக்கு அமைவாக) அவ்வாறு செய்யப்பட்ட குற்றப்பகர்வின்மீது விளங்கப்படுதலும் வேண்டும்.

மூலப்பதிவேட்டி னையும் காண்பி பொருட்களையும் கோருவதற்குச் சட்டத்துறைத் தலைமையதி பதிக் குள்ள தத்துவம்.

**395.** (1) நூற்று ஐம்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் அனுப்பிவைக்கப்பட்ட, விசாரணைபற்றிய பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்திய பிரதியைச் சட்டத்துறைத் தலைமையதிபதி பெற்றபின்னர், அவ்விடயத்தைத் தகுந்தவாறு அவர் ஆய்வதற்கு, அவ்விசாரணையின் மூலப்பதிவேடு, எந்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதோ அந்நீதிமன்றத்திலிருந்து (சான்றாகக் காண்பிக்கப்பட்ட எவையேனும் ஆவணங்களுடன் சேர்த்து) அத்தகைய பதிவேட்டினைக் கோருவதும், அத்துடன் பதிவாளரிடமிருந்து ஆவணச்சான்றல்லாத வேறு காண்பிபொருட்களைக் கோருவதும் அவசியமானதென அவர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளுதல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கோரப்பட்ட ஏதேனும் பதிவேட்டை அல்லது காண்பிபொருளை, சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல், மேல் நீதிமன்றப் பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.

பாரப்படுத்துகை யைத் தள்ளு படி செய்து, நீதிவானுக்கு அறிவுறுத்துரை கள் வழங்கு வதற்கு,சட்டத் துறைத் தலைமையதி பதிக்குள்ள தத்துவம்.

**396.** நூற்று ஐம்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் அனுப்பி வைக்கப்பட்ட விசாரணை பற்றிய பதிவேட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்டபிரதியானது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், விளக்கத்திற்குப் பாரப்படுத்துவதைத் தேவைப்படுத்துமளவுக்குப் போதியசான்று இல்லையெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டால் அல்லது ஏதேனும் காரணத்திற்காக அம்முறைப் பாட்டிலிருந்து, தகவலிலிருந்து அல்லது குற்றச்சாட்டிலிருந்து, அத்துடன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப்பட்டவர் கட்டுக்காவலிலிருப்பின் மேலும் தடுத்து வைக்கப் படுதலிலிருந்து அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படவேண்டுமென அவர் அபிப்பிராயப்பட்டால், அவர் எழுத்திலான கட்டளைமூலம் எந்நீதிவானால் செய்யப்பட்ட பாரப்படுத்துகையைத் தள்ளுபடிசெய்யலாமென்பதுடன், அவ்விசாரணைபற்றிய பதிவேட்டை நீதிவான் நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்புமாறு மேல் நீதிமன்றப் பதிவாளருக்குப் பணிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான அம்முறைப்பாட்டை, தகவலை அல்லது குற்றச்சாட்டை முடிவு செய்வதற்கு உசிதமானவையென அவருக்குத் தோன்றும் அத்தகைய பணிப்புரைகளை அந்நீதிவானுக்கு வழங்கலாமென்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் அந்நீதிவானின் கடமையாதலும் வேண்டும்.

மேலும் சான்று எடுக்கப்பட வேண்டு மெனச் சட்டத்துறைத் தலைமை யதிபதி கட்டளையிட லாம்.

**397.** (1) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான நடவடிக்கைகளில் குற்றவியல் தவறொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் ஆனால் ஏற்கனவே எடுக்கப்பட்ட சான்று ஏதேனும் முக்கிய விவரத்தில் அல்லது தன்மையில் பிழையானதாயிருக்கும் காரணத்தால், முழுமையானதும் தக்கதுமான விளக்கத்திற்கான அடிப்படையைக் கொடுப்பதற்கு அது போதுமானதல்ல எனவும் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டால், ஒன்றில் ஏற்கனவே சாட்சியமளித்த சாட்சியொருவரை புதுவதாக விசாரணை செய்யும்வகையில், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அல்லது காட்டப்பட்டவாறான அத்தகைய மேலதிக சான்றை எடுக்குமாறு அல்லது வேறுவகையாக விசாரணையைத் தொடருமாறு நீதிவான் நீதிமன்றத்தைத் தேவைப்படுத்தி, எழுத்திலான கட்டளையொன்றை ஆக்கலாம் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன்மேல் அவ்விசாரணைபற்றிய பதிவேடு நீதிவான் நீதிமன்றத்திற்குத் திருப்பி அனுப்பப்படவேண்டுமெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி பணித்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், மேல் நீதிமன்றப் பதிவாளர் பதிவேட்டை அங்ஙனம் திருப்பியனுப்புதலும் வேண்டும். அந்நீதிவான் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கட்டளைக்கிணங்கி யொழுகுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, அவசியமானதென நினைத்தால், எவரேனும் நிபுணச் சாட்சிக்காரரின் அல்லது பொலிசு அலுவலரின் சான்றைப் பதியும்படி நீதிவானைப் பணிக்கலாம் ; அந்நீதிவான், அதன்பின் அத்தகைய பணிப்புகளுக்கிணங்கி யொழுகுதல் வேண்டும்.

(3) குறைநிரப்பு விசாரணையானது, நீதிவான் நீதிமன்றத்தில் மூல விசாரணையை நடாத்திய நீதிவானல்லாத வேறொரு நீதிவானால் நடாத்தப்படலாம்.

சட்டத்துறைத் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும் போது மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிவான் ஆகியோர், வழங்கு நடவடிக்கைகளை அவருக்கு அனுப்பி வைத்தல்.

398. (1) A சட்டத்துறைத் தலைமையதிபதியினால் எழுத்துமூலம் தேவைப்படுத்தப்படும் போதிலெல்லாம் மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிவான் ஆகியோர் தம்முன்னர் விசாரணை அல்லது விளக்கம் நடாத்தப்பட்டுள்ள அல்லது நடாத்தப்படுகின்ற குற்றவியல் வழக்கு எதனதும் நடவடிக்கைகளைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மேல் அத்தகைய விசாரணை அல்லது விளக்கம், அது ஒத்திவைக்கப்பட்ட தென்றாற்போன்று அதே முறையிலும் அதே மாதிரியாகவும், இடைநிறுத்திவைக்கப்படுதலும் வேண்டும் :

ஆயின் சட்டத்துறைத் தலைமையதிபதியானவர் அத்தகைய பதிவேட்டை, அது அவரது அலுவலகத்தில் கிடைத்ததன் பின்னர் இரண்டு மாதங்களுக்குப் பிந்தாமல், அத்தகைய நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் நீதிவானொருவரால் ஏதேனும் வழக்கிலான நடவடிக்கைகள் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் மேல், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய நடவடிக்கைகள் எவ்விசாரணை சம்பந்தப்பட்டனவோ அவ்விசாரணை தொடர்பாக, தேவையானவை என அவர் கருதக்கூடிய அத்தகைய அறிவுறுத்துரைகளைச் சட்டத்துறைத் தலைமையதிபதி கொடுப்பதற்கு அதிகார முடையவராதல் வேண்டும் அத்துடன் அதன்மேல், இச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைவாக, சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்துரைகளைப் பயனுறச் செய்தலும், அத்தகைய அறிவுறுத்துரைகளின் நியதிகளுக்கிணங்க அத்தகைய விசாரணையை நடாத்தி முடித்தலும் நீதிவானின் கடமையாதல் வேண்டும்

குற்றஞ்சாட்டப் பட்டவர் விடு விக்கப்பட்டிருத்த லாகாதென அபிப்பிராயப்படும் பொழுது. பாரப்படுத்தப் படுவதற்காக அல்லதுபுதிய விசாரணை நடாத்தப்படு வதற்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதி கட்டளையிடலாம்.

**399.** நூற்றைம்பத்துமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை விடுவித்திருந்து அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டிருத்தலாகாதெனச் சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்படும் போதிலெல்லாம், அத்தகைய குற்றஞ்சட்டப்பட்டவரை மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு சட்டத்துறைத் தலைமையதிபதி அவரைப் பணிக்கலாம் அல்லது விசாரணையை மீண்டும் தொடரும்படி அத்தகைய நீதிமன்றத்தின் நீதிவானுக்குக் கட்டளையிட்டு, அதுபற்றித் தேவையானதென அவருக்குத் தோன்றும் அத்தகைய அறிவுறுத்துரைகளைக் கொடுக்கலாம் ; அத்துடன் அதன்மேல், அத்தகைய அறிவுறுத்துரைகளைப் பயனுறச் செய்தல் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

நீதிவான் முன்னர் எவர் குற்றவழக்குத் தொடுப்பை நடாத்தலாம் என்பது.

**400.** (1) நீதிவான் நீதிமன்றமொன்றின் நீதிவான் விசாரணைசெய்யும் வழக்கெதிலும் சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றாடியார் தலைமையதிபதி அரச சட்டவுரைஞர் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்போர் அல்லாத வேறு ஆளெவரும், குற்றவழக்குத்தொடுப்பு நடாத்துதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்றாடியார் தலைமையதிபதி, அரச சட்டவுரைஞர் அத்துடன் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வழக்குரைப்போர் எவரும் இல்லாதபொழுது, நீதிவான் குற்ற வழக்குத் தொடுப்பை நடாத்துதல் வேண்டும். ஆனால் விசாரணையெதனையும் நடாத்துவதில் எவரேனும் வழக்குரைப்பவரின் அல்லது பகிரங்க அலுவலரின் உதவியை நாடுவது விரும்பத்தக்கதென நீதிவானொருவர் கருதினால் இப்பிரிவிலுள்ளதெதுவும் அவர் அவ்வாறு உதவி நாடுவதிலிருந்து அவரைத் தடைசெய்தல் ஆகாது.

மன்றாடியார் தலைமையதிபதியினதும் அரச சட்டவுரைஞரினதும் பணிகளின் நோக்கெல்லை.

**401.** மன்றாடியார் தலைமையதிபதியும், அரச சட்டவுரைஞரும் சட்டத்துறைத் தலைமையதிபதியின், ஒன்றில் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரை மூலம், வழக்கைக் கைவிட உடன்படுதலைப் நொல்லே புறோசிக்கியூ, பதிதலும், குற்றத்துணையாளரொருவருக்கு மன்னிப்பளித்தலும், விடுதலைத் தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடொன்றுக்கு அனுமதியளித்தலும் ஆகிய தத்துவங்கள் தவிர்ந்த, ஏனைய எல்லாத் தத்துவங்களையும் அல்லது அத்தத்துவங்களிலெதனையும் பிரயோகிக்கலாமென்பதுடன் இச்சட்டக்கோவையினால், சட்டத்துறைத் தலைமையதிபதியின் மீது சுமத்தப்பட்ட எல்லாக் கடமைகளையும் அல்லது அக் கடமைகளிலெதனையும் புரியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXXIV

## பிணை பற்றி

**402.** பிணையில் விடப்பட முடியாத தவறுக்குக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஆளொருவர் தவிர்ந்த எவரேனும் ஆள், நீதிமன்றத்தின் முன்னர் தோன்றும்போதும் அல்லது நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் போதும், அந்நீதிமன்றத்தின் முன்னர் நடைபெறும் நடவடிக்கைகளின் எக்கட்டத்திலேனும் எந்நேரத்திலேனும் பிணைசெலுத்துவதற்கு அவர் தயாராகவிருப்பின், அத்தகைய ஆள் பிணையில் விடப்படுதல் வேண்டும்: பிணையில் விடத்தகு தவறின் விடயத்தில் பிணை ஏற்றுக் கொள்ளப் படுதல்.

ஆயின், நீதிமன்றம் அது தகுந்ததென எண்ணினால், அத்தகைய ஆளிடமிருந்து பிணை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அவர் தோன்றுவதற்காகப் பிணைகாரரின்றி முறியொன்றை எழுதி நிறைவேற்றுவதன்மேல், அவரை விட்டுவிடலாம்.

**403** (1) நீதிவான் ஒருவர் அல்லது மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், விடயத்திற்கேற்ப ஏதேனும் விசாரணையின் அல்லது விளக்கத்தின் ஏதேனும் கட்டத்திலேனும், பிணையில் விடப்பட முடியாத தவறெதற்குமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளை அவரது தற்துணிபின்பேரில் பிணையில் விட்டுவிடலாம் ; பிணையில் விடப்பட முடியாத தவறின் விடயத்தில், எப்பொழுது பிணை ஏற்றுக் கொள்ளப் படலாம் என்பது.

ஆயின், தண்டனைச் சட்டக்கோவையின் 114, 191, 296 ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றை அவர் புரிந்துள்ளாரென அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரெனச் சந்தேகிக்கப்பட்டால் அல்லது புரிந்துள்ளாரென சந்தேககிக்கப்பட்டால், அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருந்தாரென சார்த்தப்பட்டால், மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவரினாலல்லாது ஏதேனும் விசாரணை அல்லது விளக்கத்தின் எந்தக் கட்டத்திலேனும், விட்டுவிடுதலாகாது: §2, 04 இல 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டிருந்தாரெனச் சார்த்தப்பட்டால் அல்லது புரிந்துள்ளாரெனச் சந்தேகிக்கப்பட்டால், அல்லது பரிவதில் சம்பந்தப்பட்டிருந்தாரெனச் சந்தேகிக்கப்பட்டால் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதி இருந்தால், தவிரவும் 1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் வலுவில் இருக்கும்வரை அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அல்லாது, அவ்வாறு பிணையில் விட்டு விடுதலாகாது.

(2) பிணையில் விடப்படமுடியாத தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளொருவர் அத்தகைய தவறைப் புரிந்துள்ளாரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இல்லையெனவும் ஆனால் மேலும் விசாரணை செய்வதற்கு, அல்லது விளங்குவதற்குப் போதிய ஏதுக்கள் உள்ளன எனவும், விடயத்திற்கு ஏற்றாற்போல, விசாரணையின் அல்லது விளக்கத்தின் எக்கட்டத்திலேனும் நீதிமன்றத்திற்குத் தோன்றினால், அத்தகைய விசாரணை முடிவடையும்வரை அக்குற்றஞ்சாட்டப்பட்டவரை, இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அவர் தோன்றுவதற்கான நிபந்தனையாக அத்தகைய நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறு ஒரு பிணைகாரருடன் அல்லது பிணைகாரர்களுடன் அல்லது பிணைகாரரொருவரின்றி அல்லது பிணைகாரர்களின்றி அத்தகைய பணத்தொகைக்கு பிணைப்பத்திரமொன்றை எழுதி நிறைவேற்றுவதன்மீது விடுவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றின் கீழ் பிணையில் விடப்பட முடியாத தவறொன்று தொடர்பில் விளக்கத்திற்காக எவரேனுமாளை நீதிவானொருவர் பாரப்படுத்தியுள்ளவிடத்து, அத்தகைய ஆள் மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரினால் அல்லாத பிணையில் விடப்படுதலாகாது தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் பிணையில் விடப்படமுடியாத வேறு ஏதேனும் தவறொன்றுக்காக ஆளொருவர் விளக்கத்திற்கென நீதிவானால் பாரப்படுத்தப்பட்டுள்ள விடத்து, அத்தகைய நீதிவான், தமது தற்றுணிபில் அத்தகைய ஆளைப் பிணையில் விடலாம். §2. 04 இல 1993

பிணைத் தொகை மிகையாக விருத்தலா காது என்பதுடன் மேன்முறையீட்டு நீதிமன்றம் எச்சந்தர்ப்பத் திலும் பிணையில் விட அனுமதிக் கலாம்.

404. இவ்வத்தியாயத்தின்கீழ் எழுதி நிறைவேற்றப்படும் முறி ஒவ்வொன்றினதும் தொகை, வழக்கின் சூழ்நிலைகளை முறைப்படி கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மிகையானதாகவிருத்தலுமாகாது ; அத்துடன் இச்சட்டக்கோவையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் கட்டுக்காவலிலுள்ள ஆளெவரும் பிணையில் விடப்படவேண்டுமென அல்லது மேல் நீதிமன்றத்தால் அல்லது நீதிவானொருவரால் நிருணயிக்கப்பட்ட பிணைத்தொகை குறைக்கப்படவேண்டுமென அல்லது அதிகரிக்கப்படவேண்டுமென அல்லது மேல் நீதிமன்ற நீதிபதியால் அல்லது நீதிவானொருவரால் பிணையில் விடப்பட்ட எவரேனும் ஆள் கட்டுக்காவலில் விளக்கமறியலுக்குட்படுத்தப்படவேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் எவ்விடயத்திலும் பணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றஞ்சாட்டப் பட்டவர்களினதும் பிணைகாரர்களினதும் பிணைமுறி.

**405.** (1) ஆளெவரும் பிணையில் விடப்படுமுன்னர் அல்லது அவரது சொந்தப் பிணைமுறியின்மீது விடப்படுமுன்னர், விடயத்திற்கேற்றாற்போல, அலுவலர் அல்லது நீதிமன்றம் போதுமானதென எண்ணும் அத்தகைய பணத்தொகைக்கான பிணைமுறியொன்று அத்தகைய ஆளால் எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும் ; அத்துடன், போதிய ஒரு பிணைகாரரால் அல்லது கூடுதலான பிணைகாரரால் அவர் பிணையில் விடுவிக்கப்படும் பொழுது, பிணைமுறியில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய ஆள் சமூகமளித்தல் வேண்டும் என்பதும், வேறுவகையாகப் பணிக்கப்படும்வரை அவ்வாறு தொடர்ந்து சமூகமளித்தல் வேண்டும் என்பதுமான நிபந்தனைகளின்பேரில், முறி எழுதி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) விடயம் அவ்வாறு தேவைப்படுத்தினால், குற்றஞ்சாட்டிற்கு மறுமொழியளிக்கும்படி கேட்கப்படும் பொழுது மேல் நீதிமன்றத்தில் அல்லது வேறு நீதிமன்றத்தில் தோன்றுவதற்கும், அவ்விளக்கம் பின்போடப்படக்கூடிய அல்லது ஒத்திவைக்கப்படக்கூடிய ஒவ்வொரு தேதியிலும் அவ்வாறு தொடர்ந்து தோன்றுவதற்கும் பிணைமுறியானது பிணையில் விடப்பட்ட அவ்வாளைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

கட்டுக்காவலிலிருந்து விடுவித்தல்.

**406.** (1) பிணைமுறி எழுதி நிறைவேற்றப்பட்டவுடன் எவ்வாள் தோன்றுவதற்காக அது எழுதி நிறைவேற்றப்பட்டதோ அவ்வாள் விடுவிக்கப்படுதல் வேண்டும் ; அவர் மறியற்சாலையிலிருக்கும் பொழுது, அவருக்குப் பிணை அனுமதிக்கின்றதான நீதிமன்றம், மறியற்சாலைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு விடுவிப்புக்கட்டளையொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளை கிடைத்ததும் அத்தகைய அலுவலர் அவரை விடுவித்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவில் அல்லது 402 ஆம் பிரிவில் அல்லது 403 ஆம் பிரிவில் உள்ளதெதுவும், பிணைமுறி எவ்விடயம் தொடர்பாக எழுதி நிறைவேற்றப்பட்டதோ அவ்விடயம் அல்லாத வேறு எவ்விடயத்திற்காவும் தடுத்துவைக்கப்படவேண்டிய எவரேனும் ஆளை விடுவிப்பதனைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படல் ஆகாது.

முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணை போதாததாக விருக்கும் பொழுது போதியபிணை செலுத்துமாறு கட்டளையிடுவதற்குள்ள தத்துவம்.

**407.** பிழை காரணமாக, மோசடி காரணமாக அல்லது வேறு வகையாகப் போதியதல்லாத பிணைகாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது அவர்கள் பின்னர் போதாதவர்களாகிவிட்டால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆள் அதன் முன்னர் கொண்டுவரப்படவேண்டுமெனப் பணித்து, நீதிமன்றம் பிடியாணையொன்றை வழங்கலாமென்பதுடன் போதிய பிணைகார்களைக் கொணருமாறு அவரைப் பணிக்கலாம் அவர் அவ்வாறு செய்யத் தவறியதன்மேல், அவரை மறியற்சாலைக்குப் பாரப்படுத்தலாம்.

பிணைகாரர் பொறுப்பிலிருந்து விடுபடுதல்.

**408.** (1) பிணையில் விடுவிக்கப்பட்ட ஆளொருவரின் வருகைக்கும் தோன்றுகைக்குமான பிணைகாரர்கள் அனைவரும் அல்லது எவரும், அம்முறியின் பொறுப்பிலிருந்து தம்மை முழுமையாகவோ அல்லது அம் முறி அவ் விண்ணப்பகாரர்களுடன் தொடர்புபடும் அளவுக்கு விடுவிக்கவேண்டுமென, எப்போதேனும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய விண்ணப்பஞ் செய்யப்படுவதன் மேல், அவ்வாறு விட்டுவிடப்பட்ட ஆள், அதன் முன்னர் கொணரப்படவேண்டுமெனப் பணித்து, நீதிமன்றம் பிடியாணையொன்றை விடுத்தல் வேண்டும்.

(3) பிடியாணையினைப் பின்பற்றி, அத்தகைய ஆள் தோன்றுவதன்மேல் அல்லது தாமாகவே முன்வந்து சரணடைவதன் மேல் முறியானது முழுமையாகவோ, அல்லது அது விண்ணப்ப காரருடன் தொடர்புபடும் அளவுக்கோ பொறுப்பிலிருந்து விடுபடுவதற்கு நீதிமன்றம் பணித்தல் வேண்டும் என்பதுடன், போதுமான வேறு பிணைகாரர்களைக் கொணரும்படி அத்தகைய ஆளையும் கோரலாம் ; அவர் அவ்வாறு கொணரத் தவறினால் அவரைக் கட்டுக்காவலுக்கும் பாரப்படுத்தலாம்.

(4) எவ்வாளின் வருகைக்கும் தோன்றுகைக்குமெனப் பிணைகாரரொருவர் பிணிக்கப்பட்டவராயுள்ளாரோ, அவ்வாள் தலை மறைவாயிருக்குமிடத்து, அவரை அப் பிணைகாரர் எந்நேரத்திலேனும் கைது செய்யலாம் என்பதுடன், அவரை உடனடியாக நீதிமன்றத்தின் முன்னர் கொண்டும் வரலாம் ; அந்நீதிமன்றம் அதன்மேல் அத்தகைய பிணைகாரரின் முறியைப் பொறுப்பிலிருந்து விடுவித்து, போதுமானவரான வேறொரு பிணைகாரரைக் கொணரும்படி அத்தகைய ஆளைக் கோருதல் வேண்டுமென்பதுடன், அவர் அவ்வாறு செய்யத் தவறின், அவரைக் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பிணைகாரரானவர், எவ்வாட்கள் பிணைசெலுத்த வேண்டுமெனக் கட்டளையிடப்படுகின்றனரோ அவ்வாட்களுக்காக வழக்கமாகவே பிணைநிற்கும் ஆளொருவர் எனவும், அவர் தம்மை விடுவிக்கும்படி கோரிச் செய்யும் விண்ணப்பமானது, போதிய காரணம் அற்றதெனவும் நீதிமன்றம் திருப்திப்பட்டால், அத்தகைய பிணைகாரர்மீது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தை விதித்தலும், அது செலுத்தப்படத் தவறினால் ஆறுமாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான சாதாரண மறியற்றண்டனையை அனுபவிப்பதற்காக அவரை மறியலுக்குப் பாரப்படுத்துதலும் நீதிமன்றத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## அத்தியாயம் XXXV

### சாட்சிக்காரர்களை விசாரணை செய்வதற்கான கட்டாணைகள் பற்றி

சமூகமாயிராத சாட்சிக்காரரின் சான்றைப் பெறுவதற்கு நீதிமன்றம் கட்டாணை வழங்கலாம்.

**409.** இச்சட்டக்கோவையின் கீழான ஒரு விசாரணையின் போது, விளக்கத்தின்போது அல்லது வேறு நடவடிக்கையின் போது நீதிநெறிமுறையின் நோக்கத்திற்காகச் சாட்சிக் காரரொருவரை விசாரிப்பது அவசியமாக விருக்கின்றதெனவும், அவ்விடயத்தின் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது நியாயமற்றதாகவிருக்கும் அளவினதான தாமதம், செலவு அல்லது வசதியீனம் இல்லாமல் அத்தகைய சாட்சிக்காரரின் வருகையைப் பெறமுடியாதெனவும் நீதிமன்றமொன்றிற்குத் தோன்றுகின்றபோதிலெல்லாம், அத்தகைய நீதிமன்றம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய வருகையை அவசியமாக்காது விட்டு விடலா மென்பதுடன் கட்சிக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர், அத்தகைய சாட்சிக்காரர் எந் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரோ அந் நியாயாதிக்கத்தின் உள்ளூர் எல்லையினுள் உள்ள அதேபோன்ற அல்லது அதிலும் குறைந்த நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிமன்றத்திற்கு அவரது சான்றைப் பெறுமாறு கட்டாணை யொன்றை வழங்கலாம்.

கட்டாணை வழங்கப்பட்ட தன் மீதான நடவடிக்கை முறை.

**410.** (1) எந் நீதிமன்றத்திற்கு அக்கட்டாணை வழங்கப்பட்டதோ அந் நீதிமன்றம் அக்கட்டாணையைப் பெற்றதன்மேல் அக் கட்டாணையில் பெயர் குறிக்கப்பட்டுள்ள சாட்சிக்காரரைக் கட்டளைவிட்டு அதன் முன் அழைத்தல் வேண்டும் ; அல்லது சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக அவரது வருகையை நியாயமாகப் பெறமுடியாதிருப்பின், நீதிபதி சாட்சிக்காரர் இருக்கும் இடத்திற்குச் செல்லுதல் வேண்டும்.

(2) இச்சட்டக்கோவையின் கீழ் விசாரணை நடாத்தும் நீதிவானொருவர் சான்று எடுக்கும் அதே முறையில், சாட்சிக்காரரின் சான்று நீதிபதியால் எடுக்கப்பட வேண்டுமென்பதுடன், அந்நோக்கத்திற்காக நீதிவானொருவர் பிரயோகிக்கும் அதே தத்துவங்கள் நீதிபதியால் பிரயோகிக்கவும்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**411.** (1) இச்சட்டக்கோவையின் கீழான எந்நடவடிக்கையில் கட்டாணை வழங்கப்பட்டதோ அவ்வேதேனும் நடவடிக்கைக்கான கட்சிக்காரர்கள், நடவடிக்கை இடம்பெற்ற நீதிமன்றம் வழக்கெழுவினாவுக்கு இயைபானவையென எண்ணக்கூடிய எழுத்திலான கேள்விக் கொத்துக்களை முறையே அனுப்பிவைக்கலாம் ; அத்துடன், அத்தகைய விசாரணையை மேற்கொள்ளும் நீதிபதி அத்தகைய கேள்விக் கொத்துக்களின் மீது சாட்சிக்காரரை விசாரணை செய்தல் வேண்டும்.

சட்சிக்காரர்கள் கேள்விக் கொத்துக்களை அனுப்பலா மென்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது வழங்குரைப்பவர் சாட்சிக்காரரை விசாரணை செய்யலாம்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்குரைப்பவர் மூலம் அத்தகைய நீதிபதிமுன் தோன்றலாம் அல்லது அவர் கட்டுக்காவலில் இல்லாவிடின் தாமாகத் தோன்றி, சொல்லப்பட்ட சாட்சிக்காரரை விசாரணை செய்யலாம், குறுக்கு விசாரணை செய்யலாம், அத்துடன் மீள விசாரணையும் செய்யலாம்.

**412.** கட்டாணை எதுவும் முறையாக நிறைவேற்றி வைக்கப்பட்டதன் பின்னர், அதன் கீழ் விசாரணை செய்யப்பட்ட சாட்சிக்காரரின் வாக்குமூலத்துடன், அது எந் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டதோ அந்நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், கட்டாணையும், அதற்கான திருப்பியனுப்பற் கூற்றும் வாக்கு மூலமும் கட்சிக்காரர்கள் பார்வையிடுவதற்கென நியாயமான எல்லா நேரங்களிலும் கிடைக்கக்கூடியனவாயிருத்தலும் வேண்டும் ; அத்துடன், அவை எல்லா நீதியான விதிவிலக்கு களுக்கும் அமைவாக இரு கட்சிக்காரர்களில் எக்கட்சிக்காரரினாலும் வழக்கில் சான்றாக வாசிக்கப்படலாமென்பதுடன், பதிவேட்டின் பாகமாக அமைதலும் வேண்டும்.

கட்டாணைக் கான திருப்பியனுப் பற்கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையை அல்லது விளக்கத்தை ஒத்தி வைத்தல்.

**413.** நானூற்று ஒன்பதாம் பிரிவின் கீழ் கட்டாணையொன்று வழங்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும், கட்டாணை நிறைவேற்றப்பட்டுத் திருப்பியனுப்பப்படுவதற்கு நியாயமாகப் போதியதாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திற்கு அவ் விசாரணை, விளக்கம் அல்லது வேறு நடவடிக்கை ஒத்திவைக்கப்படலாம்.

## அத்தியாயம் XXXVI

### சான்று தொடர்பான சிறப்பேற்பாடுகள்

குறித்த சில விடயங்களில் மருத்துவச் சாட்சிககாரர் களினதும் வேறுசிறப்புச் சாட்சிக்காரர் களினதும் வாக்கு மூலமும் அரசாங்கப் பகுப்பாய்வாளரினதுஅல்லது அரசாங்க ஊடுகதிரியக்க மருத்துவரினது அறிக்கைகளும் சான்றாகப் பெறப்படுதல்.

§6. 11 இல. 1988

**414.** (1) அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப் பரிசோதகரிடம், விரலடையாளப் பதிவாளரிடம் அல்லது மோட்டார் வாகனப் பரிசோதகரிடம் அல்லது அரசாங்க மருத்துவ அலுவலகரிடம் பரிசோதனைக் கென அல்லது பகுப்பாய்வுக்கும் அறிக்கைக்குமென முறையாகச் சமர்ப்பிக்கப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும் பொருள் அல்லது பதார்த்தம் பற்றிய அவரின் கைப்பட்ட அறிக்கை யொன்றெனக் கொள்ளப்படும் ஏதேனும் ஆவணம் அல்லது அரசாங்க ஊடுகதிரியக்க மருத்துவரொருவரினாற் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் ஊடுகதிர் நிழற்படம் பற்றிய அரசாங்க மருத்துவ அலுவலரின் அறிக்கையும் அல்லது அத்தகைய நிழற்படமும், அந்நிழற்படம் பற்றிய அத்தகைய ஊடுகதிரியக்க மருத்துவரின் கைப்பட்ட அறிக்கையொன்றெனக் கொள்ளப்படும் ஏதேலும் ஆவணமும் அத்தகைய அலுவலர் சாட்சிக்காரரொருவராக அழைக்கப்படாவிடினும், இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் விசாரணையில், விளக்கத்தில் அல்லது வேறு நடவடிக்கையில் சான்றாகப்பயன்படுத்தலாம் :

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், அவ்வாறு சோதனை செய்யப்பட்ட அல்லது பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட ஆளின், பதார்த்தத்தின் அல்லது பொருளின் அடையாளத்தைக் காண்பிக்கும் அவசியத்தைப் பாதித்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், அவ்வாறு சோதனை செய்யப்பட்ட அல்லது பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட ஆளின், பதார்த்தத்தின் அல்லது பொருளின் அடையாளத்தை எண்பிக்கும் அவசியத்தைப் பாதித்தலாகாது.

(2) நீதிவானால் அல்லது சமாதான நீதிவானால் நடாத்தப்பட்ட அடையாள அணிவகுப்புப் பற்றிய வாக்குமூலங்களும் அல்லது அவைபற்றிய குறிப்புக்களும், அடையாள அணிவகுப்பை நடாத்துவதற்கு அந்நீதிவானுக்கு அல்லது சமாதான நீதிவானுக்கு உதவிபுரிந்த சாட்சிக்காரர்களின் வாக்குமூலங்களும் அல்லது அவர்களால் செய்யப்பட்ட சத்தியக்கடுதாசிகளும், குறிப்பிட்ட வாக்குமூலமளிப்பவர்கள் அல்லது நீதிவான் அல்லது சமாதான நீதிவான் அல்லது சாட்சிக்காரர்கள், சாட்சிக்காரர்களாகச் சான்றளிக்க அழைக்கப்படாவிடினும், இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் விசாரணையில், விளக்கத்தில் அல்லது நடவடிக்கையில் சான்றாகக் கொடுக்கப்படலாம்.

(3) அரசாங்க மருத்துவ அலுவலரொருவரல்லாத மருத்துவ சாட்சிக்காரர் ஒருவரால் சமாதான நீதிவானொருவர் முன்பாகச் செய்யப்பட்டு, உண்மையென்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறிக்கையானது, அத்தகைய ஆள் சாட்சிக்காரர் ஒருவராக அழைக்கப்படாடிவிடினும், சான்றாகக் கொடுக்கப்படலாம்.

(4) சமாதான நீதிவானொருவர் முன்பாகச் செய்யப்பட்டு உண்மையென்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், தவறொன்று புரிவதில் பயன்படுத்தப்பட்டதான அல்லது பரிசோதனைக்கென அல்லது பகுப்பாய்வுக்கென எவரேனும் அரச அலுவலரிடம் அனுப்பப்பட்டதான ஏதேனும் பொருளின் அல்லது பதார்த்தத்தின் கட்டுக்காப்பு அல்லது ஒழிப்பு தொடர்பிலானதுமான எவரேனும் சாட்சிக்காரரின் அறிக்கையும், அவரினாற் செய்யப்பட்ட வரைபடமொன்றின் அல்லது நில அளவையொன்றின் அல்லது புறவுருவொன்றின் செம்மைபற்றிய அறிக்கையும், அத்தகைய ஆள் சாட்சிக்காரரொருவராக அழைக்கப்படாவிடினும், சான்றாகக் கொடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) மரணமெய்திய ஆளொருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றை எண்பிக்கும் நோக்கத்திற்காக அக்கூற்று எந்நீதிவானால் பதியப்பட்டதோ அந்நீதிவானினதும் அக்கூற்றை மொழிபெயர்த்துக் கூறியவர் எவரேனுமிருப்பின் அவரதும் அறிக்கைகள், அத்தகைய ஆட்கள் சாட்சிக்காரர்களாக அழைக்கப்படாவிடினும் சான்றாகக் கொடுக்கப்படலாம்.

§6, 11 இல 1988 (5.அ) பகிரங்க அலுவலர் அவரது பதவியின் ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரியும் பொழுது அல்லது நிறைவேற்றும் பொழுது அவரால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக, சத்தியக் கடதாசியினால் உறுதிப்படுத்தப்பட்ட, ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர் தவிர்ந்த, பகிரங்க அலுவலரொருவரின் எழுத்திலான கூற்று, அத்தகைய அலுவலர் சாட்சிக்காரரொருவராக அழைக்கப் படாதிருப்பினும், இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் விசாரணையில், விளக்கத்தில் அல்லது வேறு நடவடிக்கையில், சான்றாகக் கொடுக்கப்படலாம்.

(6) இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணமெதிலுமுள்ள கையொப்பம் உண்மையானதெனவும் அதனைக் கையொப்பமிட்ட ஆள், அவர் கையொப்பமிட்ட நேரத்தில் வகிப்பதாக அவர் கூறிய பதவியை வகித்தாரெனவும் நீதிமன்றம் ஊகிக்கலாம்.

§6, 11 இல 1988 "ஆயின், அவ்வாக்கு மூலம் அல்லது அறிக்கை, குறிப்பிட்ட எந்த விளக்கம் பற்றிக் குறிப்பீடு செய்கின்றதோ அவ்விளக்கம் எதனிலும் சான்றளிப்பதற்காக முற்போந்த உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட, அரசாங்க மருத்தவ அலுவலர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வேறு மருத்துவச் சாட்சிக்காரர் அல்லது அரசாங்கப்பகுப்பாய்வாளர் அல்லது ஆட்சேபிக்கப்பட்ட ஆவணங்களின் அரசாங்கப்பரிசோதகர் அல்லது விரலடையாளப் பதிவாளர் அல்லது மோட்டார் வாகனப் பரிசோதகர் அல்லது அரசாங்க ஊடுகதிரியக்க மருத்துவர் அல்லது நீதிவான் அல்லது சமாதான நீதிவான் அல்லது பேச்சு மொழிபெயர்ப்பாளர் அல்லது வேறு எவரேனும் சாட்சிக்காரர் சமூகமளித்தல் அவசியமானதென, எவரேனும் சாட்சிக்காரரின் விண்ணப்பத்தின் மீதும் வேறுவகையிலும் அத்துடன் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காவும் ஏதேனும் வழக்கில் விளக்க நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், சான்றளிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய சாட்சிக்காரர் மற்றைய வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சிக்காரரைக் கட்டளை விட்டழைக்கும் அதேமுறையில் கட்டளைவிட்டழைக்கப்படுதல் வேண்டும்."

**415.** சத்தியக்கடுதாசியொன்று -

சத்தியக் கடுதாசிகள் எவர்முன்னர் செய்யப்படல் வேண்டும் என்பது.

(அ) இலங்கையில் எவரேனும் சமாதான நீதிவான் முன்னர், அல்லது எவரேனும் நீதிபதி முன்னர் ;

(ஆ) வேறேதேனுமிடத்தில், நீதிபதியொருவர் முன்னர் அல்லது நீதிவான் முன்னர் அல்லது சமாதான நீதிவானொருவர் முன்னர் அல்லது அவ்விடத்தில் சத்தியங்களை எடுத்தோதுவிப்பதற்குத் தகைமையுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்தினால் போதுமானதெனக் கருதப்படும் வேறேதேனும் வழியில் தகைமையுள்ள வேறு ஆள் முன்னர் ; அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) இலங்கைக்கு வெளியே சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கு உயர் நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் முன்னர்,

சத்தியத்தின்மீது செய்யப்பட்டால் அல்லது உறுதியுரையின்மீது செய்யப்பட்டால், அது குற்றவியல் நீதிமன்றமொன்றில் பயன் படுத்தப்படலாம்.

குற்றஞ்சாட்டப் பட்டவர் இல்லாத போது சான்றைப் பதிதல்.

416. குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் தலைமறைவாக இருக்கின்றாரெனவும், அவரைக் கைதுசெய்வது உடனடியாகச் சாத்தியமானதல்லவெனவும் எண்பிக்கப்பட்டால், முறைப்பாடு செய்யப்பட்ட தவறுக்காக அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரை விளங்குவதற்கு அல்லது விளக்கத்திற்காகப் பாரப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றம், அவர் இல்லாதிருக்கும்போதே, வழக்குத்தொடுநர் தரப்புக்குச் சார்பாகக் கொண்டுவரப்பட்ட சாட்சிக்காரர்களை (எவரேனுமிருப்பின்) விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களைப் பதியலாம். அத்தகைய ஏதேனும் வாக்குமூலம் அவ்வாக்குமூலம் அளிப்பவர் இறந்துவிட்டால் அல்லது சான்றளிக்க இயலாதவராகினால் அல்லது அவ்விடயத்தின் சூழ்நிலைகளில் நியாயமற்றதாகவிருக்கும் அளவினதான தாமதம், செலவு அல்லது வசதியீனம் இல்லாமல் அவரது வருகையைப் பெறமுடியாவிட்டால், அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் கைதுசெய்யப்பட்டதன்மேல் அவர் குற்றஞ்சாட்டப்பட்ட தவறுக்கான விசாரணையில் அல்லது விளக்கத்தில் அவருக்கெதிராகச் சான்றாகக் கொடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**417.** மரணமெய்திய ஆளொருவரினால் கூறப்பட்ட ஏதேனும் கூற்றை எண்பிக்கும் நோக்கத்திற்காக அக்கூற்று எந்நீதிவானால் பதியப்பட்டதோ அந்நீதிவானும் அக்கூற்று எவ்வாளால் மொழிபெயர்த்துக் கூறப்பட்டதோ அவ்வாள் எவரேனுமிருப்பின், அவரும், ஏதேனும் தவறு பற்றிய விசாரணையின்போது விசாரணைசெய்யப்படுமிடத்து, அக்குற்றவாளியின் சமூகத்தில் வேறு நீதிவானொருவரால் எடுக்கப்பட்டு உண்மையென்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய நீதிவானின் அல்லது அத்தகைய ஆளின் வாக்குமூலமானது, அவ்வாக்குமூலம் அளித்தவர் சாட்சிக்காரரொருவராக அழைக்கப்படாவிடினும், அக்குற்றஞ் சாட்டப்பட்டவரின் விளக்கத்தில் சான்றாகக் கொடுக்கப்படலாம் :

குறித்த சில விடயங்களில் நீதிவான்களினதும் மொழிபெயர்த்துக் கூறுவோர்களினதும் வாக்கு மூலங்கள் சான்றாகப் பெறப்படற்பாலன வாதல்.

ஆயின் -

(அ) அத்தகைய வாக்குமூலம் அளித்தவர் எவரும் அவ்விளக்கத்தில் சான்றளிப்பதற்குச் சமூகமாயிருத்தல் அவசியமானதென அல்லது உசிதமானதென அக்குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பாரப்படுத்தும் நீதிவான் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது அத்தகைய வாக்குமூலமளித்தவர் எவரும் சமூகமாயிருக்க வேண்டுமென வழக்கிற்கான கட்சிக்காரரொருவர், கேட்டுக் கொள்ளுமிடத்து, குற்றவழக்குத் தொடுநர் தரப்புக்கான மற்றைய சாட்சிக்காரரொருவர் போன்று அதே முறையில் சான்றளிப்பதற்காக அத்தகைய வாக்குமூலமளித்தவர் சாட்சிக்காரரொருவராகக் கட்டளைவிட்டழைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இப்பிரிவிலுள்ளதெதுவும், எந்நேரத்திலேனும் அத்தகைய வாக்குமூலமளித்தவரைச் சாட்சிக்காரரொருவராகக் கட்டளைவிட்டழைத்து விசாரணை செய்வதற்கு விளக்கத்தை நடாத்தும் நீதிமன்றத்திற்குள்ள தத்துவத்தைப் பாதித்தலாகாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளுவோர் முதலியோர் குற்றஞ்சாட்டப்படும் பொழுது வேறு விடயங்களிலான சான்று அனுமதிக்கப்படுதல்.

**418.** களவாடப்பட்டவையென அறிந்துகொண்டு பொருள்களை ஏற்றுக்கொண்டமைக்காக அல்லது களவாடப்பட்ட ஆதனத்தை அவரது உடைமையில் வைத்திருந்தமைக்காக ஆளொருவருக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளவிடத்து, அந் நடவடிக்கைகளின் எக் கட்டத்திலேனும் முற்போந்த பன்னிரண்டு மாதகாலப் பகுதிக்குள்ளாகக் களவாடப்பட்ட வேறு ஆதனம், அத்தகைய ஆளின் உடைமையில் கண்டுபிடிக்கப்பட்டதெனச் சான்றளிக்கப்படலாம் ; அத்துடன், அத்தகைய சான்று அவருக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பொருளாயமையும் அவ்வாதனம் களவாடப்பட்டதென்பதனை அத்தகைய ஆள் அறிந்திருந்தாரென எண்பிக்கும் நோக்கத்திற்காகக் கருத்துக்கெடுத்துக்கொள்ளப்படலாம்.

ஒப்புதல்கள் பற்றிய விவரக் குறிப்பு (ஏதேனுமிருப்பின்) பதிவேட்டுடன் கோப்பிலிடப்படுதல் வேண்டும்.

§7, 11 இல 1988

**419.** (1) பதினைந்தாம் அத்தியாயத்தின்கீழான சுருக்கமுறையல்லாத நடவடிக்கைகளின் முடிவில், ஆய்நிகழ்விலுள்ள விடயங்கள் பற்றி அல்லது எவரேனும் ஆளின், பதார்த்தத்தின் அல்லது பொருளின் அடையாளம், அடையாள அணிவகுப்பொன்று நடாத்தப்பட்டு அவ்வணி வகுப்பில் குறிப்பிட்ட சாட்சிக்காரர் குறிப்பிட்ட ஆளொருவரை அடையாளங்காட்டினாரென்ற நிகழ்வு, குறிப்பிட்ட பதார்த்தம் அல்லது பொருள் ஒன்று குறிப்பிட்ட ஆளொருவரின் சமூகத்தில் இலச்சினையிடப்பட்டுப் பரிசோதனைக்காகவும், பகுப்பாய்வுக்காகவும் அரசாங்கப்பகுப்பாய்வாளரிடம் அனுப்பப்பட்டதென்ற நிகழ்வு, பகுப்பாய்வுக்காகவும், பரிசோதனைக்காகவும் அரசாங்கப் பகுப்பாய் வாளரிடம அனுப்பப்பட்ட குறிப்பிட்ட பதார்த்தம் அல்லது பொருள் அத்தகைய பரிசோதனைக்கும் பகுப்பாய்வுக்கும் பின்னர் அவரால் நீதிமன்றத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டதென்ற நிகழ்வு, குறிப்பிட்ட அளவையொன்று அல்லது புறவுருவரைபு ஒன்று குறிப்பிட்ட ஆளொருவரால் ஆக்கப்பட்டதென்ற நிகழ்வு என்பன உட்பட, ஆய்நிகழ்விலுள்ள விடயங்களுடன் இயைபான நிகழ்வுகள் பற்றி எவையேனும் ஒப்புதல்களைச் செய்வதற்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் உடன்படுகின்றாரா அல்லவா என்று அவரிடமிருந்து விசாரித்தறிவது நீதிவானின் கடமையாதல் வேண்டும். அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அவரது சட்டத்தரணி மூலம் அத்தகைய ஏதேனும் ஒப்புதலைச்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய உடன்பட்டால் நீதிவான் உடன்பட்ட கருமங்கள் பற்றிய விபரக்குறிப்பொன்றை தயாரித்தல் வேண்டும். அத்தகைய விபரக்குறிப்பு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு, அவர் விளங்கக்கூடிய ஒரு மொழியில் வாசித்து, விளக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விபரக் குறிப்பானது ஒப்புதல்கள் செம்மையான பதிவு எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் உடன்பட்டவர் அவர் அவ்விவரக்குறிப்பில் கையொப்ப மிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விவரக்குறிப்பு பதிவேட்டில் கோப்பிடப்படுதலும் வேண்டும். மேல் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள்மீது தண்டத்தீர்ப்பை வழங்கும் போது, அவர் இப்பிரிவின்கீழ் ஒப்புதலொன்று செய்துள்ளாரென்ற நிகழ்வைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தில் அவ்வுடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருமங்கள், முறையாக எண்பிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஒப்புதல்கள் செய்யப்பட்ட அந்நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத்தரணியொருவரைத் தமது பிரதிநிதியாக வைத்திருந்தாலன்றி இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

**420.** (1) ஏதேனும் சுருக்கமுறையான குற்றவழக்குத் தொடர்ச்சியில் அல்லது குற்றப்பகர்வு மீதான விளக்கத்தில், ஆய்நிகழ்விலுள்ள விடயங்கள் பற்றி அல்லது எவரேனும் ஆளின், பதார்த்தத்தின் அல்லது பொருளின் அடையாளம், அடையாள அணிவகுப்பொன்று நடாத்தப்பட்டு அவ்வகுப்பில் குறிப்பிட்ட சாட்சிக்காரர் குறிப்பிட்ட ஆளொருவரை அடையாளங் காட்டினாரென்ற நிகழ்வு, குறிப்பிட்ட பதார்த்தம் அல்லது பொருள் ஒன்று குறிப்பிட்ட ஆளொருவரின் சமூகத்தில் இலச்சினையிடப்பட்டு, பரிசோதனைக்காகவும், பகுப்பாய்வுக்காகவும், அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் அனுப்பப்பட்டதென்ற நிகழ்வு, பகுப்பாய்வுக்காகவும் பரிசோதனைக்காவும் அரசாங்கப் பகுப்பாய்வாளரிடம் அனுப்பப்பட்ட குறிப்பிட்ட பதார்த்தம் அல்லது பொருள் அத்தகைய பரிசோதனைக்கும் பகுப்பாய்வுக்கும் பின்னர் அவரால் நீதிமன்றத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டதென்ற நிகழ்வு, குறிப்பிட்ட அளவையொன்று அல்லது படவரைபு ஒன்று குறிப்பிட்ட ஆளொருவரால்-

ஏற்றுக்கொள்ளப்பட்ட கருமங்களை மேற்கொண்டு எண்பித்தல் அவசியமாகாது.

§8, 11 இல 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டதென்ற நிகழ்வு என்பன உட்பட, ஆய்நிகழ்விலுள்ள விடயங்களுடன் இயைபான நிகழ்வுகள் பற்றி எவையேனும் ஒப்புதல்களைச் செய்வதற்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் உடன்படுகின்றாரா அல்லவா என்று அவரிடமிருந்து விசாரித்தறிவது நீதிவானின் கடமையாதல் வேண்டும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அவரது சட்டத்தரணி மூலம் அத்தகைய ஏதேனும் ஒப்புதலைச் செய்ய உடன்பட்டால், நீதிமன்றம் அத்தகைய ஒப்புதலைப் பதிதல் வேண்டும். நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் மீது தண்டனைத்தீர்ப்பை வழங்கும்போது, அவர் இப்பிரிவின் கீழ் ஒப்புதலொன்றைச் செய்துள்ளாரென்ற நிகழ்வைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

§8. 11 இல.1988 (2) ஏதேனும் சுருக்கமுறையான குற்ற வழக்குத் தொடர்ச்சியில் அல்லது குற்றப்பகர்வு மீதான விளக்கத்தில் இரண்டிலொரு கட்சிக்காரர், எதிர்க் கட்சிக்காரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் நிகழ்வு பற்றிய எண்பிப்பை முன்வைத்தல், அல்லது எந்த ஆவணங்களின் உண்மை பற்றியும் நியதிகள் பற்றியும் பிணக்கு எழாதிருக்கின்றதோ அந்த எவையேனும் ஆவணங்களை எண்பித்தல் அவசியமானதாதல் ஆகாதென்பதுடன், கட்சிக்காரர்களின் உடன்படிக்கையின்படி எவையேனும் ஆவணங்களின் பிரதிகள், மூல ஆவணங்களுக்குச் சமமானவையாக ஏற்றுக்கொள்ளவும் படலாம்.

அத்தகைய ஒப்பபுதல்கள் விளக்கத்திற்கு முன்னர் அல்லது விளக்கத்தின்போது செய்யப்படலாம் :

அத்தகைய ஒப்புதல்கள், வேறு சான்றின்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்வின் அல்லது நிகழ்வுகளின் போதிய எண்பிப்பாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஒப்புதல் செய்யப்பட்ட நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் சட்டத்தரணியொருவரைத் தமது பிரதிநிதியாக வைத்திருந்தாலன்றி இப்பிரிவு ஏற்புடையதாகாது :

ஆயின், மேலும், அத்தகைய ஒப்புதல்கள் விளக்கத்தின் முன்னர் செய்யப்பட்டுள்ளவிடத்து, அவை எழுத்திலிடப்பட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டவரினால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், அவற்றின் செம்மை பற்றியும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அடையாளமும் கையொப்பமும் பற்றியும் சட்டத்தரணியொருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXXVII

## பிணை முறிகள் பற்றிய ஏற்பாடுகள்

**421.** பிணைகாரரின்றி பிணைமுறியொன்றை எழுதி நிறைவேற்றும்படி எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்படும் பொழுது, அத்தகைய நீதிமன்றம், நன்னடத்தைக்கான முறியொன்றின் விடயத்தில் தவிர, அத்தகைய பிணைமுறியினை எழுதி நிறைவேற்றுவதற்குப் பதிலாக, நீதிமன்றம் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய தொகைக்கு, ஒன்றில் புழக்கத்திலுள்ள நாணயத்தில் அல்லது தாள்களில் ஒரு தொகையான பணத்தை வைப்பிலிடுவதற்கு அனுமதிக்கலாம். பிணை முறிக்குப் பதிலாகப் பணம் வைப்பிலிடப் படுதல்.

**422.** (1) இச்சட்டக்கோவையின்கீழ் பிணை முறியொன்றை ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றத்தின் திருப்திக்கு அல்லது பிணைமுறியானது ஒரு நீதிமன்றத்தின் முன்னர் தோன்று வதற்கானதாகவிருப்பின் அத்தகைய நீதிமன்றத்தின் திருப்திக்கு அத்தகைய பிணைமுறி இழப்பிக்கப்பட்டுள்ளதென எண்பிக்கப்படும் போதிலெல்லாம், நீதிமன்றம் அத்தகைய எண்பிப்புக்கான ஏதுக்களைப் பதிதல் வேண்டுமென்பதுடன், அதற்கான தண்டத்தைச் செலுத்தும்படி அல்லது அது ஏன் செலுத்தப்படக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படி அத்தகைய பிணை முறியினால் பிணிக்கப்பட்ட எவரேனும் ஆளைக் கோரலாம். பிணைமுறி இழப்பிக்கப் படுவதன் மீதான நடவடிக்கை முறை.

(2) போதிய காரணம் காட்டப்படாமலும் தண்டம் செலுத்தப்படாமலுமிருப்பின் அத்தகைய ஆளுக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்வதற்கான ஆணையொன்றை வழங்குவதன்மூலம் நீதிமன்றம் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அத்தகைய ஆணை அதனை வழங்கிய நீதிமன்றத்தினது இட நியாயாதிக்க எல்லையினுள் நிறைவேற்றப்படலா மென்பதுடன், அத்தகைய எல்லைகளுக்கப்பால் உள்ளதும் அத்தகைய ஆளுக்குச் சொந்தமானதுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக்கைப்பற்றி விற்பனைசெய்வதற்கு அவ்வாதனம் எந்த நீதிபதியின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள் உள்ளதோ அந்த நீதிபதியால் புறக்குறிப்பிடப்பட்டதும், அது அதிகாரமளித்தலும் வேண்டும்.

(4) அத்தகைய தண்டம் செலுத்தப்படாமலிருந்து அத்தகைய பற்றலின் மூலமும் விற்பனையின் மூலமும் அதனை அறவிட முடியாமலிருந்தால், அவ்வாறு பிணிக்கப்பட்ட ஆள், ஆணையை வழங்கிய நீதிமன்றத்தின் கட்டளை மூலம் ஆறுமாதங்களுக்கு நீடிக்கக்கூடியவொரு காலத்துக்கான சாதாரண மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(5) நீதிமன்றம் அதன் தற்றுணிபின்பேரில் குறிப்பிடப்பட்ட தண்டத்தின் ஏதேனும் பகுதியைக் குறைத்து பகுதியளவில் மட்டும் கொடுப்பனவு செய்யுமாறு வலியுறுத்தலாம்.

கொள்வனவு காரருக்கு உரித்து மாற்றல் உறுதியை எழுதி நிறைவேற்று வதற்குப் பிசுக்காலுக் குள்ள தத்துவம்.

**423.** இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் அசைவற்ற ஆதனம் விற்பனை செய்யப்பட்டபோதிலெல்லாம், கொள்வனவுகாரரின் பெயரில் உரித்து மாற்றல் உறுதியொன்றை எழுதி நிறைவேற்றுதல், எப்பிசுக்காலின் பணிப்பின்பேரில் அப்பற்றுதலும் விற்பனையும் செய்யப்பட்டதோ அப்பிசுக்காலுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட உரித்துமாற்றல் உறுதி, எவ்வாளுக்கெதிராக அத்தகைய அசைவற்ற ஆதனத்தின் பற்றுதலுக்காகவும் விற்பனைக்காகவும் ஆணை வழங்கப்பட்டதோ அவ்வாளால் அத்தகைய உரித்துமாற்றல் உறுதி எழுதி நிறைவேற்றப்பட்டாற்போன்று அதே முறையில் விற்பனை செய்யப்பட்ட ஆதனத்தைக் கொள்வனைகாரருக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

பிணைப்பத்திரத்தின் மீது வருமதியான தொகையை அறவிடுமாறு பணிப்பதற்குள்ள தத்துவம்.

**424.** மேல் நீதிமன்றமானது, அத்தகைய மேல் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கும் வருகைதருவதற்குமான பிணைமுறியொன்றின்மீது வருமதியான தொகையை அறவிடுமாறு நீதிவானெவரையும் பணிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXXVIII

## தவறுகளின் விடயப்பொருளாயமைந்த ஆதனத்தைக் கையாளுதல் பற்றி

எந்தஆதனந் தொடர்பில் தவறுபுரியப் பட்டதோ அந்த ஆதனத்தைக் கையாளுவதற் கான கட்டளை.

**425.** (1) குற்றவியல் நீதிமன்றமெதிலும் ஒரு விசாரணை அல்லது விளக்கம் முடிவடைந்ததும் அதன்முன்னர் காண்பிக்கப்பட்ட எந்த ஆவணம் அல்லது வேறு ஆதனம் தொடர்பாக ஏதேனும் தவறு புரியப்பட்டுள்ளதெனத் தோன்றுகின்றதோ அல்லது எந்த ஆவணம் அல்லது வேறு ஆதனம் ஏதேனும் தவறைப் புரிவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஆவணத்தை அல்லது வேறு ஆதனத்தைக் கையாளல் தொடர்பில் நீதிமன்றம் தகுந்ததெனக்கருதும் வகையிலான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(2) மேல் நீதிமன்றம் அத்தகைய கட்டளையை ஆக்கி, அதன் சொந்த அலுவலர்கள் மூலம் அவ்வாதனத்தை அத்தகைய கட்டளையின்கீழ் அதற்கு உரித்தானவரிடம் வசதியாக ஒப்படைப்பதற்கு இயலாதிருக்கும் போது, அத்தகைய நீதிமன்றமானது அக்கட்டளை நீதிவானொருவரால் பயனுறச் செய்யப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(3) மேன்முறையீடு செய்வதற்கு வசதியிருக்கும் ஒரு வழக்குத் தொடர்பில் இப்பிரிவின்கீழ்க் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து (ஆதனமானது கால்நடைகளாக அல்லது விரைவாகவும் இயற்கையாகவும் அழுகிப்போகக்கூடியனவாக இருந்தாலன்றி) அக்கட்டளையானது, மேன்முறையீடு சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் முடியும்வரை அல்லது அத்தகைய காலத்தினுள் அத்தகைய மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய மேன்முறையீடு முடிவுசெய்யப் படும்வரை, நிறைவேற்றப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) இப்பிரிவில் "ஆதனம்" என்னுஞ்சொல், எவ்வாதனம் தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதெனத் தோன்றுகின்றதோ அந்த ஆதனத்தின் விடயத்தில், எவரேனும் கட்சிக்காரரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் தொடக்கத்திலிருந்தே இருந்துள்ள அத்தகைய ஆதனத்தை மட்டுமன்றி, அது எவ்வாதனமாக மாற்றப்படக்கூடுமோ அல்லது எவ்வாதனத்துக்காகக் கொடுத்து மாறப்படக்கூடுமோ அவ்வாதன மெதனையும், அத்துடன் உடனடியாகவோ வேறு வகையிலோ அத்தகைய மாற்றலால் அல்லது கொடுத்து மாற்றலால் கொள்ளப்பட்ட எதனையும் உட்படுத்தலாம்.

கட்டளைக்குப் பதிலாக, ஆதனம் கையாளப்படு வதற்காக நீதிவானுக்கு அனுப்பப் படலாம்.

**426.** நானூற்று இருபத்தைந்தாம் பிரிவின்கீழ்க் கட்டளையொன்றை ஆக்குவதற்குப் பதிலாக அவ்வாதனம் நீதிவானொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென மேல் நீதிமன்றம் பணிக்கலாம் ; அத்தகைய விடயங்களில், நீதிவான், அது பொலிசாரால் கைப்பற்றப்பட்டு இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அக்கைப்பற்றுகை அவருக்கு அறிவிக்கப்பட்டாற்போன்று அதனைக் கையாளுதல் வேண்டும்.

குற்றமறியாத அப்பாவிக் கொள்வனவு காரருக்கு, குற்றஞ்சாட்டப் பட்டவரிடம் காணப்படும் பணம் கொடுக்கப் படுதல்.

**427.** களவை உட்படுத்தும் அல்லது களவாயமையும் அல்லது களவாடப்பட்ட ஆதனத்தைப் பெற்றுக்கொள்வதை உட்படுத்தும் அல்லது களவாடப்பட்ட ஆதனத்தைப்பெற்றுக்கொள்ளவதாயமையும் ஏதேனும் தவறுக்காக ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, வேறெவரேனும் ஆள், அது களவாடப்பட்டதென்பதனை அறியாமல் அல்லது நம்புவதற்குக் காரணமில்லாமல் அவரிடமிருந்து அக்களவாடப்பட்ட ஆதனத்தைக் கொள்வனை செய்தாரெனவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் உடைமையிலிருந்து அவர் கைதுசெய்யப்பட்டதன்மேல் பணமெதுவும் எடுக்கப்பட்டதெனவும் எண்பிக்கப்பட்டிருக்கும்பொழுது, நீதிமன்றமானது, அத்தகைய கொள்வனைகாரரின் விண்ணப்பத்தின்பேரிலும், அக்களவாடப்பட்ட ஆதனத்தை அதன் உடைமைக்கு உரித்துடைய -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கு மீளக் கொடுத்ததன் பேரிலும், அத்தகைய பணத்திலிருந்து அத்தகைய கொள்வனைகாரரால் கொடுக்கப்பட்ட விலைக்கு மேற்படாத ஒரு பணத்தொகை அவருக்குக் கொடுக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

**428.** இவ்வத்தியாயத்தின் முற்போந்த பிரிவுகளின் கீழ் மேல் நீதிமன்றமொன்றினால் அல்லது நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்படும்வரை நிறுத்திவைக்கப்படவேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிக்கலாமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய கட்டளையைத் திரிவுப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது வறிதாக்கலாம்.

இவ்வத்தியாயத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை நிறுத்திவைத்

**429.** (1) தண்டனைச் சட்டக்கோவையின் 285 ஆம், 286 ஆம், 481 ஆம் அல்லது 482 ஆம் பிரிவுகளின் கீழான குற்றத்தீர்ப்பொன்றின்மீது, எவ்விடயம் தொடர்பாகக் குற்றத்தீர்ப்பானது அளிக்கப்பட்டதோ அவ்விடயம் பற்றியவையும் நீதிமன்றத்தின் கட்டுக்காவலில் இருக்கின்றவையும் அல்லது குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட ஆளின் உடைமையில் அல்லது தத்துவத்தில் இருக்கின்றவையுமான எல்லாப் பிரதிகளையும் அழிக்கும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

அவதூறான பொருட்களையும் வேறு பொருட்களையும் அழித்தல்.

(2) அதே போன்று, தண்டனைச் சட்டக்கோவையின் 265 ஆம், 266 ஆம், 267 ஆம் அல்லது 268 ஆம் பிரிவுகளின் கீழான குற்றத்தீர்ப்பொன்றின்மீது, எந்த உணவு, குடிவகை, ஔடதம் அல்லது மருத்துவத் தயாரிப்பு தொடர்பாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அவ்வுணவை, குடிவகையை, ஔடதத்தை அல்லது மருத்துவத் தயாரிப்பை அழிக்கும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவற்ற ஆதனத்தின் உடைமையை மீளவளிப்பதற்கான தத்துவம்.

**430.** (1) ஆளொருவர் குற்றமுறையான வலோற்காரம் பயன்படுத்தப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, அத்தகைய வலோற்காரத்தால் ஆளெவரும் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை இழந்துள்ளாரென நீதிமன்றத்திற்குத் தோன்றும் போதிலெல்லாம், நீதிமன்றமானது அது தகுந்ததெனக் கருதினால், அத்தகைய ஆளுக்கு அதன் உடைமை மீளளிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(2) குடியியல் துடர்ச்சியொன்றில் எவரேனும் ஆள் நிலைநாட்ட இயலக்கூடியதான அத்தகைய அசைவற்ற ஆதனத்துக்கான ஏதேனும் உரிமைக்கு அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறைக்கு அத்தகைய கட்டளையெதுவும் பங்கம் விளைவித்தலாகாது.

29 ஆம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட அல்லது களவாடப்பட்ட ஆதனங்கள் கைப்பற்றப்பட்டதன்மேல் அறிவித்தல் மூலமான நடவடிக்கை முறை.

**431.** (1) இருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட அல்லது களவாடப்பட்டதாகச் சார்த்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட அல்லது ஏதேனும் தவறு புரியப்பட்டதெனும் சந்தேகத்தினை உண்டாக்கக்கூடிய சூழ்நிலையில் காணப்பட்ட ஆதனத்தை எவரேனும் பொலிசு அலுவலர் கைப்பற்றுதல் உடனடியாக நீதிவானொருவருக்கு அறிவிக்கப்படல் வேண்டும் : அந்நீதிவான் அத்தகைய ஆதனத்தை அதன் உடைமைக்கு உரித்துடைய ஆளிடம் ஒப்படைத்தல் பற்றி அல்லது அத்தகைய ஆளைக் கண்டறிய முடியாவிடில் அத்தகைய ஆதனத்தைக் கட்டுக்காவலில் வைத்திருத்தலும் காண்பித்தலும் பற்றி அவர் தகுந்ததென எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அவ்வாறு உரித்துடைய ஆள் கண்டறியப்பட்டால் நீதிவான் தக்கதென எண்ணும் அத்தகைய நிபந்தனைகளின் மீது (எவையேனுமிருப்பின்) அவ்வாதனம் அவ்வாளிடம் ஒப்படைக் கப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம். அத்தகைய ஆள் கண்டறியப்படாவிடில் நீதிவான் அதனைத் தடுத்துவைக்கலாமென்பதுடன், அத்தகைய விடயத்தில் அத்தகைய ஆதனம் எப்பொருள்களைக் கொண்டுள்ளது என்பதைக் குறித்துரைத்து, அதற்கு உரிமை கோரக்கூடிய எவரேனும் ஆளைப் பகிரங்க அறிவித்தல் ஒன்று கொடுக்கப்படும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக அவர் முன்பாக வந்து அவரது கோரிக்கையை நிலைநாட்டும்படி தேவைப்படுத்திப் பகிரங்க அறிவித்தலொன்றை நீதிமன்ற அறிவித்தற் பலகையிலும் நீதிவானினால் முடிவு செய்யப்படவேண்டிய இருவேறு பகிரங்க இடங்களிலும் வெளியிடுதல் வேண்டும்.

(3) அவ்வாதனத்தின் பெறுமதி இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக இருப்பின், அத்தகைய அறிவிப்பு நீதிவான் பொருத்தமானதெனக் கருதினால், சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் புதினப்பத்திரிகைகளில் ஒரு முறையாவது வெளியிடப்படுதல் வேண்டும்.

ஆறுமாதங்களுக் குள்ளாகக் கோரிக்கை யாளரெவரும் தோன்றா விடத்துப் பின்பற்றப்படும் நடவடிக்கை முறை.

**432.** ஆளெவரும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய ஆதனத்திற்கான அவரது கோரிக்கையை நிலைநாட்டாவிடின், அத்துடன் அத்தகைய ஆதனம் எவ்வாளின் உடைமையில் காணப்பட்டதோ அவ்வாள் அது தம்மால் சட்டமுறையாகக் கொள்ளப்பட்டதென்பதைக் காண்பிக்க இயலாவிடின், அத்தகைய ஆதனம் அரசினால் கையாளப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிவானினது கட்டளையின்கீழ் விற்பனை செய்யவும்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பதற்குள்ள தத்துவம்.

**433.** அத்தகைய ஆதனத்தின் உடைமைக்கு உரித்துடைய ஆளைத் தெரியாதிருந்தால் அல்லது அத்தகைய ஆள் வருகை தராதிருந்தால், அத்துடன் அவ்வாதனம் விரைவாகவும் இயற்கையாகவும் அழுகிப் போகக்கூடியதாக இருந்தால் அல்லது அதனைக் கைப்பற்றியது பற்றி எந்நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டதோ அந்நீதிவான் அதனை விற்பனை செய்தல் சொந்தக்காரருக்கு நன்மை பயக்குமென அபிப்பிராயப்பட்டால், அது விற்பனை செய்யப்படவேண்டுமென எந்நேரத்திலேனும் நீதிவான் கட்டளையிடலாமென்பதுடன், அத்தகைய விற்பனையினாலான தேறிய வரும் படிக்கு 431 ஆம், 432 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் கிட்டத்தட்டச் சாத்தியமாகக்கூடிய அளவுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

வாடகைக் கொள்வனவு உடன் படிக்கையின் விடயமான சொத்தின் ஆட்சிப் பொறுப்பு

§2, 12 இல. 1990

**433அ** (1) வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு விடப்பட்ட ஒரு வாகனத்தின் விடயத்தில், (204 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அத்தகைய வாகனத்தின் பூரண சொந்தக்காரராக பதிவு செய்யப்பட்டுள்ள ஆள் இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக அத்தகைய வாகத்தின் ஆட்சிப்பொறுப்பாளராகக் கருதப்படல் வேண்டும்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தின் ஆட்சிப்பொறுப்பாளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், காலத்தைப் பொறுத்தமட்டில் அத்தகைய வாகனத்தின் பேரில் அவ்வாறு முதலில் பதிவு செய்யப்பட்ட ஆள் இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய வாகனத்தின் ஆட்சிப் பொறுப்பாளராகக் கருதப்படல் வேண்டும்.".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XXXIX

## வழக்கு நடவடிக்கைகளில் ஏற்படும் ஒழுங்கீனங்கள் பற்றி

**434.** ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பெதுவும், எவ்விசாரணையின், விளக்கத்தின் அல்லது வேறு நடவடிக்கையின்போது அத்தீர்ப்பு வழங்கப்பட்டதோ அவ்விசாரணை, விளக்கம், அல்லது வேறு நடவடிக்கை, பிழையான உள்ளூர் இடப்பரப்பில் நடைபெற்றதென்ற ஏதுவின் மீது மட்டுமே, அத்தகைய பிழையினால் நீதிநெறிப் பிறழ்வு ஏற்பட்டதெனத் தோற்றினாலல்லாது, தள்ளிவைக்கப்படுதலாகாது. பிழையான இடத்தில் இடம்பெறும் நடவடிக்கைகள்.

**435.** இச்சட்டக்கோவையினது ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சாட்சிக்காரரொருவரின் வாக்குமூலமொன்று அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரின் கூற்றொன்று எந்நீதிமன்றத்தின் முன்னர் சான்றாகக் கொடுக்கப்பட்டதோ அந்நீதிமன்றம் எதுவும், அச்சான்றை அல்லது கூற்றைப் பதியும் நீதிவானால் இச்சட்டக்கோவையினது ஏற்பாடுகள் முழுமையாக இணங்கியொழுகப்படவில்லையெனக் காண்டால், அத்தகைய சாட்சிக்காரர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் முறைப்படி சான்றளித்தாரென அல்லது பதியப்பட்ட கூற்றைக் கூறினாரெனக் கூறும் சான்றை எடுக்கலாம் ; அத்துடன் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 91 ஆம் பிரிவு எப்படியிருப்பினும், அப்பிழை, நியாயங்களின் மீதான அவரது எதிர்வாதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பாதிக்காவிடின் அத்தகைய சான்று அல்லது கூற்று ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்சாட்டிலுள்ள அல்லது வேறு நடவடிக்கைகளிலுள்ள பிழை அல்லது தவிர்வு காரணமாக, முடிவு அல்லது தண்டனைத் தீர்ப்பு எப்போது நேர்மாறாக்கப்படலாம் என்பது.

**436.** இதனகத்து முன்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய ஒரு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பெதுவும் -

(அ) இச்சட்டத்தின்கீழான விளக்கத்துக்கு முன்னர் அல்லது விளக்கத்தின்போது, முறைப்பாட்டில், அழைப்புக் கட்டளையில், ஆணைப்பத்திரத்தில், குற்றச்சாட்டில், தீர்ப்பில், தொகுப்புரையில் அல்லது வேறு நடவடிக்கைகளில் உள்ள அல்லது ஏதேனும் விசாரணையில் அல்லது வேறு நடவடிக்கைகளில் உள்ள ஏதேனும் பிழை, தவிர்வு அல்லது ஒழுங்கீனம் காரணமாக ; அல்லது

(ஆ) 135 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அனுமதி இல்லாமை காரணமாக,

அத்தகைய பிழை, தவிர்வு, ஒழுங்கீனம் அல்லது அனுமதியின்மை நீதிநெறிப்பிறழ்வை ஏற்படுத்தினாலல்லாது, மேன்முறையீட்டின்மீது அல்லது மீளாய்வின்மீது நேர்மாறாக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் ஆகாது.

நடவடிக்கையிலான குறைபாடு காரணமாகக் கைப்பற்றாணை சட்டவிரோதமானதாகாது.

**437.** அழைப்புக்கட்டளையில் அல்லது முந்திய வேறு குற்றத்தீர்ப்பில், கைப்பற்றாணையில் அல்லது அவை தொடர்பான வேறு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடு அல்லது விதிமுறை பின்பற்றப்படாமை காரணமாக, இச்சட்டக்கோவையின்கீழ் விடுக்கப்பட்ட கைப்பற்றாணை எதுவும் சட்டமுறையற்றதாகக் கருதப்படுதலாகாது; அத்துடன், அதனை விடுவிக்கும் ஆளெவரும் அத்துமீறுபவரொருவராகக் கருதப்படுதலுமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் XL

## பொதுவான ஏற்பாடுகள்

**438.** தப்பியோடிய ஆட்கள் தொடர்பான நியாயாதிக்கமானது தப்பியோடிய ஆட்கள் தொடர்பாகவும் அவர்களை மீளவொப்படைத்தல் தொடர்பாகவும் அப்போதைக்கு வலுவிலிருப்பதான சட்டத்திற்கு இணங்கப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

தப்பியோடிய ஆட்களைக் கையாளுதல் தொடர்பான நியாயாதிக்கம்.

**439.** நீதிமன்றம் எதுவும் இச்சட்டக்கோவையின்கீழான ஒரு விசாரணையின், விளக்கத்தின் அல்லது வேறு நடவடிக்கையின் எக்கட்டத்திலேனும் ஆளெவரையும் சாட்சிக்காரரொருவராகக் கட்டளைவிட்டழைக்கலாம் அல்லது சாட்சிக்காரரொருவராகக் கட்டளைவிட்டழைக்கப்படாவிடினும் சமூகமாயிருக்கும் எவரேனும் ஆளை விசாரணை செய்யலாம் அல்லது ஏற்கனவே விசாரணை செய்யப்பட்ட ஆளெவரையும் மீள அழைத்து மீள விசாரணை செய்யலாம் ; அத்துடன் அத்தகைய எவரேனும் ஆளினது வழக்கின் நீதியானமுடிவுக்குச் சான்று இன்றியமையாதது எனத்தோன்றினால், நீதிமன்றம் அவரைக் கட்டளைவிட்டழைத்து விசாரணை செய்தல் வேண்டும் அல்லது மீளவழைத்து மீளவிசாரணை செய்தல் வேண்டும்.

முக்கிய சாட்சிக்காரரைக் கட்டளைவிட்டழைப்பதற்குள்ள அல்லது வருகைதந்துள்ள ஆளை விசாரணை செய்வதற்குள்ள தத்துவம்.

**440.** (1) நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதிருக்கும் வழக்கெதிலும், ஏதேனும் மறியற்சாலையில் மறித்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளைச் சாட்சிக்காரரொருவராக விசாரணைசெய்ய விரும்பும் ஏதேனும் குற்றவியல் நீதிமன்றம், அத்தகைய கைதியை விசாரணை செய்வதற்காக, கட்டளையில் குறிப்பிடப்படும் நேரத்தில் தகுந்த கட்டுக்காவலுடன் கொண்டுவருமாறு தேவைப்படுத்திச் சொல்லப்பட்ட மறியற்சாலைக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கட்டளையொன்றை விடுக்கலாம்.

சிறையிலுள்ள கைதிகள் விசாரணைக்காகக்கொண்டுவரப்படவேண்டுமெனக் கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அவ்வாறு பொறுப்பாகவுள்ள அலுவலர் அத்தகைய கட்டளையைப் பெற்றுக்கொண்டதன்பேரில் அதற்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், மேலே சொல்லப்பட்ட நோக்கத்திற்காக அக்கைதி மறியற்சாலையில் இல்லாதிருக்கும்போது அவரது பாதுகாப்பானர் கட்டுக்காவலுக்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்

கொடுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடப் பட்ட பணம் குற்றப்பணங் களாக அற விடப்படுதல்

**441.** இச்சட்டக்கோவையின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையின் பயனைக் கொண்டு கொடுபடற்பாலதான (குற்றப் பணமல்லாத) பணம் எதுவும், அது குற்றப்பணமானாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

ஏதேனும் வாக்குமூல த்தின் அல்லது பதிவேட்டி லுள்ள வேறுபாகத்தின் பிரதிகள்.

**442.** ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் அல்லது இறுதிக்கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆள் ஏதேனும் வாக்குமூலத்தின் அல்லது பதிவேட்டினது வேறு பாகத்தின் பிரதி யொன்றைப் பெற விரும்பினால் அவர் அப்பிரதிக்காக விண்ணப்பிப்பதன் பேரில், ஏதேனும் சிறப்பான காரணத்திற்காக அதனைச் செலவுத் தொகையின்றிக் கொடுத்துதவுதல் தக்கதென நீதிமன்றம் எண்ணினாலல்லாது, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறாக நூறு சொற்களுக்கு இருபத்தைந்து சதம் என்ற வீதத்தில் கொடுப்பனவு செய்ததன் மேல் நீதிமன்றத்தினால் அப்பிரதிகொடுத்துதவப்படுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**443.** நீதிமன்றத்தின் பதிவாளர், தமக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளின் (அவை முடிவுறாதிருப்பினுஞ்சரி அல்லது முடிவுற்றிருப்பினுஞ்சரி) முழுமையினது அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தினது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை - " வழக்கு நடவடிக்கைகள் முடிவுற்றிருப்பினுஞ் சரி அல்லது முடிவுறாதிருப்பினுஞ் சரி அவற்றின் முழுமையினது அல்லது அவற்றின் பாகத்தினது அத்தாட்சிப்படுத்திய பிரதியைப்பெறு வதற்குசட்டத் துறைத்தலைமை யதிபதியும். முறைப்பாட்டாளரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளும் உரித்துடை யோராதல்."

§14, 52 இல. 1980

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு, (அவர் கொடுப்பனவு எதிலுமிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்) அல்லது

(ஆ) நானூற்றி நாற்பத்திரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் மேல் முறைப்பாட்டாளருக்கு,

**444.** (1) குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் எத்தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டாரோ அதனைப் புரிதல் தொடர்பான முதலாவது தகவலினதும், எந்த ஆளுக்கு எதிராக அல்லது எந்த ஆள் தொடர்பில் ஒரு தவறு புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்த்தப்படுகின்றாரோ அந்த ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றினதும், முறையாக அத்தாட்சிப்படுத்திய பிரதியை, அதற்காக விண்ணப்பஞ்செய்யும் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு அல்லது அவரது சட்டத்தரணிக்கு, ஒவ்வொரு விசாரணையாளரும் அல்லது ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பான ஒவ்வோர் அலுவலரும், வழங்குதல் வேண்டும். முதலாவது தகவலின் பிரதிக்குக் குற்றஞ்சாட்டப் பட்ட ஆள் உரித்துடைய வராதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இச்சட்டக்கோவையின் கீழான ஒவ்வொரு நடவடிக்கையிலும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் தகவலின் அல்லது கூற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதியைக் காண்பித்தலானது, அதைப் பதிவுசெய்த விசாரணையாளருக்கு அல்லது பொலிசு அலுவலருக்கு அத்தகைய தகவல் கொடுக்கப்பட்டதான அல்லது அத்தகைய கூற்று செய்யப்பட்டதான நிகழ்வுக்கு முதற்றோற்ற அளவிலான சான்றாதல் வேண்டும் ; அத்துடன், வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய அத்தாட்சிப்படுத்திய பிரதியைக் காண்பிக்கும் நோக்கத்துக்காக மாத்திரம், அத்தகைய விசாரணையாளரை அல்லது அலுவலரைச் சாட்சிக்காரராக அழைத்தல் அவசியமாதலாகாது.

(3) நீதிவான் நீதிமன்றத்திலான விளக்கம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது, நீதிவானானவர், நீதிநலன்கருதி, 110 ஆம் பிரிவின்கீழ்ப் பதியப்பட்டதும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டுக்காதாரமாக எந்த சாட்சிக்காரரின் சான்று குற்றவழக்குத் தொடுநர் தரப்பினரால் நம்பியிருக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் சாட்சிக்காரரால் செய்யப்பட்டதுமான சாட்சிக்காரர் எவரினதும் கூற்றை, குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி பகிரங்க நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்காக அவருக்குக்கிடைக்கச்செய்யலாம்.

படை நீதிமன்றத்தினால் விளங்கப்படற்பாலதான ஆட்களை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தல்.

**445.** (1) இராணுவச் சட்டத்திற்கு அமைவான ஆட்கள் எவ்விடயங்களில் இச்சட்டக்கோவை ஏற்புடைத்தாகும் ஒரு நீதிமன்றத்தினால் விளங்கப்படவேண்டுமோ அவ்விடயங்கள் பற்றி, இச்சட்டக்கோவைக்கும் அப்போதைக்கு வலுவுடையதாகவிருக்கும் இராணுவச்சட்டத்திற்கும் அல்லது அதையொத்த வேறு சட்டத்திற்கும் இசைவான விதிகள் 453 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படலாம் ; அத்துடன் எவரேனுமாள் நீதிவானொருவர் முன்னர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டு, இராணுவச் சட்டத்தின்கீழ் விளங்கப்படுவதற்கு அவர் ஆளாகின்றவராயுள்ள தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படும் போது அத்தகைய நீதிவான் அத்தகைய விதிகளைக் கருத்திற் கொண்டு தகுந்த விடயங்களில் அவர் எத்தவறுக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அத்தவறு பற்றிய கூற்றொன்றுடன், இராணுவச் சட்டத்திற்கிணங்க விளங்கப்படும் நோக்கத்துக்காக, அவர் எக்கப்பலை, எப்படை வகுப்பணியை, எப்படைப்பிரிவை, அல்லது சிறப்புப் பணிக்குரிய எப்படைப்பிரிவைச் சேர்ந்துள்ளாரோ அதன் ஏவும் அலுவலரிடம், அல்லது விடயத்திற்கேற்ப, மிக்க அண்மையிலுள்ள கடற்படையின், தரைப்படையின் அல்லது வான்படையின் ஏவும் அலுவலரிடம் அவரை ஒப்படைத்தல் வேண்டும்.

இவ்வுப்பிரிவில், "இராணுவச் சட்டம்" என்னும் சொல்லமைப்பு, தரைப்படைச்சட்டம், கடற்படைச்சட்டம், வான்படைச் சட்டம் என்பனவற்றை உள்ளடக்கும் என்பதுடன், "இராணுவச்சட்டத்திற்கு அமைவான ஆட்கள்" என்னும் சொல்லமைப்பு, சொல்லப்பட்ட சட்டங்களுள் ஏதேனும் ஒன்றுக்கு அமைவான ஆட்கள் எல்லோரையும் உள்ளடக்கும்.

(2) நீதிவான் ஒவ்வொருவரும், அத்தகைய ஏதேனும் இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள அல்லது பணிக்கமர்த்தப்பட்டுள்ள படை அணியினர் குழு எதனதும் ஏவும் அலுவலரால் அந்நோக்கத்திற்கெனச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பமொன்றைப்பெற்றுக்கொண்டதன்பேரில், அத்தகைய தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் எவரையும் பிடித்துப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குத் தம்மாலான ஆகக்கூடிய முயற்சியைப் பயன்படுத்துதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணையின் மீது விடுவிக்கப்படும் ஆள். சேர்ப்பிப்பதற்கான முகவரியைக் கொடுத்தல்.

**446.** ஆளெவரும் பிணையின்மீது அல்லது அவரது சொந்தப் பிணைமுறியின்மீது விடுவிக்கப்படும் போது, எல்லா அறிவித்தல்களும் மன்றாணைகளும் அவருக்குச் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றை நீதிமன்றத்திற்கு அல்லது அத்தகைய பிணையை எடுக்கும் அல்லது பிணைமுறியைச் செய்விக்கும் அலுவலருக்குக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் அவரைக் கண்டுபிடிக்க முடியாவிடின் அல்லது வேறு காரணங்களுக்காக அவருக்குச் சேர்ப்பிக்க முடியாவிடின் அத்தகைய முகவரியில் அவருக்கெனவிடப்பட்ட ஏதேனும் அறிவித்தல் அல்லது மன்றாணை அவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

கடத்திச் செல்லப்பட்ட பெண்பாலாரை மீளவொப்படைக்கும்படி கட்டாயப்படுத்தற்குள்ள தத்துவம்.

**447.** ஏதேனும் சட்டவிரோதமான நோக்கத்திற்காக ஒரு பெண் அல்லது பதினான்கு வயதுக்குட்பட்ட ஒரு பெண்பிள்ளை கடத்திச் செல்லப்பட்டதுபற்றி நீதிவானொருவருக்குச் சத்தியத்தின் மீது முறைப்பாடு செய்யப்பட்டதன்மேல், நீதிவானானவர் அவர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின், அத்தகைய பெண் அல்லது பிள்ளை அவரது பிரிவுக்குள்ளிருப்பின் அத்தகைய பெண்ணை அவளின் சுதந்திரமான நிலைக்கு விட்டுவிடுவதற்கென அல்லது அவளது கணவனிடம், அல்லது அப்பெண் பிள்ளை அவளது பெற்றாரிடம், பாதுகாவலரிடம் அல்லது அத்தகைய பிள்ளையின் சட்டமுறையான பொறுப்பை உடைய வேறு ஆளிடம் மீள ஒப்படைக்கப்படுவதற்கெனக் கட்டளையொன்றை ஆக்கலாமென்பதுடன், அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தி அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகும்படியும் கட்டாயப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**448.** (1) மேல் நீதிமன்றத்தின் முன்னரான ஒரு விளக்கத்தின்போது எவரேனும் சாட்சிக்காரர் ஏதேனும் முக்கியமான விடயத்தில் வெளிப்படையாக அல்லது அவசியமான உட்கிடை மூலம் ஏலவே நீதிவான் முன்னர் அவரால் கொடுக்கப்பட்ட சான்றுக்குமாறாக எதுவும் கூறினால், அத்தகைய விளக்கம் முடிவுற்றதன் மேல் நீதிமுறை நடவடிக்கையின் கட்டமொன்றில் வேண்டுமென்று பொய்ச் சான்றளித்தமைக்கான குற்றப்பகர்வொன்றின்மீது அத்தகைய சாட்சிக்காரரை மன்றின்முன் நிறுத்தி விளங்குதல், தலைமைதாங்கும் நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். குற்றப்பகர்வானது பதிவாளரினால் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றஞ் சாட்டப்பட்டவர் முதலாவது குறிப்பிடப்பட்ட விளக்கம் யூரர்சபையினால் நடாத்தப்பட்டுள்ளவிடத்து அதே யூர்சபையினால் விளங்கவும்படலாம் அல்லது முதலாவது குறிப்பிடப்பட்ட விளக்கம் யூர்சபையினால் நடாத்தப்படாதவிடத்து நீதிபதியினால் மாத்திரம் விளங்கவும்படலாம்.

பொய்ச்சான்றளித்தற்கான மாற்றுக் குற்றச்சாட்டின் பேரில் சாட்சிக்காரரைச் சுருக்கமுறையாக விளங்குதல்.

(2) கூறப்பட்டதாகக் குற்றப்பகர்விற் சார்த்தப்படும் மாறுபட்ட கூற்றுக்களைக் குற்றஞ்சாட்டப்பட்டவர் கூறினாரென எண்பிப்பது அத்தகைய விளக்கத்தில் போதுமானதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், அக்கூற்றுக்களுள் எது பொய்யானதென எண்பிப்பது அவசியமாதலுமாகாது.

(3) தலைமைதாங்கும் நீதிபதி, அவர் உசிதமானதென எண்ணினால், அத்தகைய சாட்சிக்காரரின் விளக்கத்தைத் தகுந்ததென அவர் கருதும் அத்தகைய காலத்திற்கு ஒத்திவைத்து, அத்தகைய சாட்சிக்காரரைக் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தலாம் அல்லது அவர் தோன்றுவதற்காக அவரது சொந்தப்பிணைப்பத்திரத்தின்பேரிலான அல்லது பிணைகாரருடனான பிணையை ஏற்கலாம். அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட விளக்கம், அத்தகைய விளக்கம் யூர்சபை முன் நடைபெற்றிருந்தால் நீதிபதி பணிக்குமாறு அதே யூர்சபை முன்பாக அல்லது வேறு யூர்சபை முன்பாக நடைபெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க நீதிமன்றத்தில் பொய்ச்சான்றளிப்பதற்கான சுருக்கமுறைத் தண்டனை.

**449.** (1) இச்சட்டக்கோவையின்கீழான நீதிமுறை நடவடிக்கையெதிலும் பகிரங்க நீதிமன்றத்தில் ஏதேனும் விடயம்பற்றிச் சான்றளிக்கும் எவரேனும் ஆள், அந்நீதிமுறை நடவடிக்கை எந்நீதிமன்றத்தின் முன்னர் நடாத்தப்படுகின்றதோ அந்நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி, தண்டனைச் சட்டக்கோவையின் 188 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குட்படப் பொய்ச் சான்று அளித்தால், நீதிமன்றமானது உயர் நீதிமன்றமாக, மேன்முறையீட்டு நீதிமன்றமாக, அல்லது மேல் நீதிமன்றமாகவிருப்பின் நீதிமன்றத்தை அவமதித்தமைக்குத் தண்டனைத் தீர்ப்பளித்தலைப்போன்று இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஏதேனும் காலப்பகுதிக்கான சாதாரண அல்லது கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஏதேனும் தொகையைக் கொண்ட குற்றப்பணத்திற்குச் சுருக்கமுறையாகத் தண்டனைத் தீர்ப்பளித்தல் அல்லது அத்தகைய நீதிமன்றம் கீழ்நிலை நீதிமன்றமொன்றெனில், ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் கொடுக்க வேண்டுமென அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஏதேனும் காலப்பகுதிக்குக் கடூழிய அல்லது சாதாரண மறியற்றண்டனையை அனுபவிக்க வேண்டுமென அத்தகைய சாட்சிக்காரருக்குக் கட்டளையிடுதல் அந்நீதிமன்றத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். இப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவம் உயர் நீதிமன்றம் அல்லாத அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றமல்லாத வேறு ஒரு நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் போதிலெல்லாம், அத்தகைய தண்டனையை விதிப்பதற்கான காரணங்களை அத்தகைய நீதிமன்றத்தின் நீதிபதி பதிதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் மறியற்றண்டனைத் தீர்ப்பை அனுபவித்துள்ள அல்லது குற்றப்பணம் எதனையும் கொடுத்துள்ள ஆளெவரும் அதே தவறுக்காக மீண்டும் தண்டிக்கப்படுவதற்காளானவராதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லாத வேறு ஏதேனும் நீதிமன்றத்தினால் எவ்வாளுக்கு எதிராக ஏதேனும் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அவ்வாள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றும் இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாயிருத்தலும் வேண்டும்.

(4) நீதிமன்றமானது, அது பொருத்தமானதெனக் கருதினால் இப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, இச்சட்டக்கோவையினால் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவரை இயலச் செய்யும் வண்ணம், நீதிமுறை நடவடிக்கையின் பதிவேட்டை அவருக்கு அனுப்பிவைக்கலாம்.

**450.** (1) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில், அல்லது இச்சட்டக்கோவையின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறாயினும், தண்டனைச் சட்டக்கோவையின் 114ஆம், 115ஆம் அல்லது 116ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளின் விளக்கம் மேல்நீதிமன்றத்தின் முன்பாக, யூரர் சபையொன்றின்றி மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதாயத்தினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

யூரர் சபையின்றி மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் விளங்கலாம்.
§2, 21 இல 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தவறின் தன்மை காரணமாக அல்லது தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளினதும், தவறுபுரியப்பட்டமை தொடர்பான சூழ்நிலைகளினதும் காரணமாக; நீதிநலன்கருதி, நீதாய விளக்கமொன்று நடாத்தப்பட வேண்டுமெனப் பிரதம நீதியரசர் கருதுகின்றவிடத்து, பிரதம நீதியரசரானவர், அவரது கைப்பட்டதான கட்டளை மூலம், அத்தவறுக்காக எவரேனும் ஆளின் விளக்கமானது மேல் நீதிமன்றத்தின் முன்பாக யூரர் சபையின்றி மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதாயத்தினால் நடாத்தப்படல் வேண்டும் எனக் பணிக்கலாம்.

(3) மேல்நீதிமன்றத்தின் முன்னர் நடாத்தப்படும் இப் பிரிவின்கீழான விளக்கமொன்று சட்டத்துறைத்தலைமை அதிபதியால் செய்யப்பட்ட குற்றப்பகர்வின் மீது அல்லது அவரால் வெளிக்காட்டப்பட்ட தகவலின் மீது நடாத்தப்படலாம்.

(4) இச்சட்டக்கோவையில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மேல்நீதிமன்றத்தின் முன்பாக யூரர் சபையின்றி, மூன்று நீதிபதிகளைக்கொண்ட நீதாயத்தினால் விளங்கப்படவேண்டிய ஏதேனும் தவறு தொடர்பில் சட்டத்துறைத் தலைமையதிபதி மேல் நீதிமன்றத்திற்குத் தகவலை வெளிக்காட்டலாம்.

(5) (அ) இப்பிரிவின் கீழ் நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னரான நீதாய விளக்கமானது இயலுமானவரை விரைவாகவும், சாத்தியமானவரை நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படக்கூடியவாறான அல்லது இச் சட்டக்கோவையின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய திரிபுகளுக்கமைவாக மேல்நீதிமன்றத்தின் முன்னரான யூரர்சபையில்லாத விளக்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது போன்ற அதே முறையில் தொடர்ந்து நடாத்தப்படல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) நீதாய மேல்நீதிமன்றத்திலான விளக்கமொன்று, விதிவிலக்கான சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்தினாலன்றி, அதன் துரிதமான கையாளுகையை உறுதிப்படுத்துவதற்காக நாளாந்தம் விசாரிக்கப்படுதல் வேண்டும். நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கத்தில் குறிப்பிட்டவொரு தேதியன்று தோன்றுதற்காக குறித்தவொரு சட்டத்தரணியின் இயலாமை (வேறேதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் அந்தத் தேதியன்று தோன்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருத்தல் உட்பட) சொந்த காரணங் களுக்காக விளக்கத்தின் தொடக்கத் தேதியைப் பின்போடு வதற்கானதோர் ஏதுவாகவிருந்தலோ அல்லது விளக்கத்தைப் பின்போடுவதைத் தேவைபடுத்தும் ஒரு விதிவிலக்கான சூழ்நிலையாக கொள்ளப்படுதலோ ஆகாது.

(இ) இவ்வுப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், இப்பிரிவின்கீழ் நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னரான விளக்கமொன்றில் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பிலிருந்தான, தண்டனைத் தீர்ப்பிலிருந்தான அல்லது கட்டளையிலிருந்தான மேன்முறையீட்டை விசாரித்துக் கையாள்வதற்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஈ) நீதாய மேல்நீதிமன்றத்தின் நீதிபதி எவரும் விளக்கமானது தொடங்குமுன்பு அல்லது அதன் பின்னர் இறக்கின்றவிடத்து அல்லது பதவிதுறக்கின்றவிடத்து, அல்லது முழு விளக்கத்ததையும் அல்லது ஏதேனும் பாகத்தைக் கேட்பதினின்று விடுவிக்கின்றபடி வேண்டுகின்ற விடத்து அல்லது செயலாற்றுகின்றவிடத்து அல்லது இயலாதவராக வருகின்றவிடத்து பிரதம நீதியரசரானவர், முழு விளக்கத்தையும் அல்லது இயலாதவராக வரும்விடத்து பிரதம நிதியரசரானவர், முழு விளக்கத்தையும் அல்லது அத்தயை விளக்கத்தின் ஏதேனும் பாகத்தை விசாரிப்பதற்கான அவரது இடத்தில் இலங்கை மேல் நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியினை பெயர்குறித்து நியமிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) அத்தகைய பெயர் நியமனம் செய்யப்படும்வரையில், விளக்கமானது மேல்நீதிமன்றத்தின் எஞ்சியிருக்கும் நீதிபதியை அல்லது நீதிபதிகளைக்கொண்ட நீதாயத்தின் முன்பு தொடர்ந்து நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயர் குறித்த நியமனமெதுவும் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இறப்பின், பதவிதுறப்பின், விடுவிப்பின், செயலாற்றமறுத்தலின் அல்லது இயலாமையின்பின் ஒரு வாரத்திற்குள் செய்யப்படாவிடின், விளக்கமானது, நீதாய மேல் நீதிமன்றத்தின் எஞ்சியிருக்கும் நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் முன்னர் தொடர்ந்து நடாத்தப்பட்டு முடிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) பந்தி (ஈ) என்பதன்கீழ் புதிய நீதிபதி ஒருவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அப்பெயர் குறித்த நியமனத்திற்கு முன்னர் எடுக்கப்பட்டதான சான்று எதுவும் திரும்பவும் எடுக்கப்படுதல் அவசியமானதாதலாகாது என்பதுடன், நீதாய மேல்நீதிமன்றமானது, விளக்கமானது அத்தகைய பெயர்குறித்த நியமனத்திற்கு நேர்முன்னர் எந்தக்கட்டத்தில் இருந்ததோ அந்த கட்டத்திலிருந்து அதனைத் தொடர்ந்து நடாத்துவதற்கு உரித்துடையதாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் விளக்கத்தில், நீதிமன்றம் அல்லது அதன் தலைமை வகிக்கும் நீதிபதி, இப்பிரிவின் கீழான குற்றப்பகர்வின் பேரில் அல்லது இப்பிரிவின் கீழ் வெளிக்காட்டப்பட்ட தகவலின் மூலம் நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட தகவலின் மூலம் நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்ட எல்லா ஆட்களையும் கட்டளை விட்டழைப்பதற்காக, கைதுசெய்வதற்காக, கட்டுக்காவலில் வைப்பதற்காக, அல்லது பிணையில் விடுவதற்காகப் பணிப்புக்கள் வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் எவரும், சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடனன்றி பிணையில் விடப்படுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) இப்பிரிவின் கீழான தகவலொன்றின் பேரில் மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆள் எவரும், அத்தகைய விளக்கம் தொடங்குவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னரேனும், மேல் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் எழுத்திலான விண்ணப்பத்தின்மூலம், குற்றவழக்குத்தொடுநர் தரப்பினர் அழைக்கக்கருதியுள்ள சாட்சிக்காரர்களினால் செய்யப்பட்ட கூற்றுக்களினதும், குற்ற வழக்குத்தொடுநர் தரப்பினர் விளக்கத்தின்போது காண்பிக்கக் கருதியுள்ள ஆவணங்களினதும் பிரதிகளை தமக்குக் கொடுத்துதவும்படி வேண்டுகோள் விடுக்கலாம். அத்துடன் அத்தகைய எல்லாக் கூற்றுக்களினதும் அல்லது ஆவணங்களினதும் பிரதிகளை அல்லது நீதிமன்றம் அதன் தற்றுணிபின்படி தகுதியெனக் கருதும் அத்தகைய கூற்றுக்களினதும் அல்லது ஆவணங்களினதும் பிரதிகளை மட்டும் சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய ஆளுக்குக் கொடுக்கும்படி நீதிமன்றம் பணிக்கலாம்.

(8) இப்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தின் முன்னரான எவரேனும் ஆளின் விளக்கமானது, அவர் தலைமறைவாகியுள்ளாரென அல்லது சுகவீன முற்வராகப் பாசாங்கு செய்கின்றாரென, அல்லது இலங்கையைவிட்டுச் சென்றுள்ளாரென அல்லது வேறுவகையில் நீதிமன்றத்தின் முன்னர் சமுகமளித்தலைத் தவிர்க்கின்றாரென அல்லது நீதிமன்றத்தில் சமுகமாகவிருந்து விளக்கம் நடைபெறுதலைத் தடுக்கின்றாரென அல்லது அதற்கு இடையூறு செய்கின்றாரென நீதிமன்றம் திருப்தியடைந்தால் அத்தகைய ஆள் இல்லாமலே தொடங்கலாம் அல்லது தொடர்ந்து நடைபெறலாம்.

**451.** (1) நானூற்றைம்பதாம் பிரிவின்கீழ் மேல்நீதிமன்றத்தின் முன்னரான நீதாய விளக்கத்தின் ஒவ்வொரு விடயத்திலும், நீதித்துறைச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகள், நீதிமன்ற நீதிபதிகளைப்பெயர் குறித்து நியமித்தல், அத்தகைய விளக்கம் நடாத்தப்படவேண்டிய இடம் ஆகிய விடயங்களில் ஏற்புடையனவாதல் வேண்டும். நீதிபதிகளைப் பெயர் குறித்து நியமித்தலும், மேன்முறையீடுகளும். §3, 21 இல. 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிரதம நீதியரசர், அதே வலயத்தில் அல்லது மாகாணத்தில் விளக்கங்களை விசாரிப்பதற்கான நீதாய மேல் நீதிமன்றங்களை தவிசுகளைப் பெயர் குறித்து நியமிக்கலாமென்பதுடன், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தவிசுகள், ஒரே நேரத்தில் அவற்றின் விசாரணைகளைத் தொடங்கி தொடர்ந்தும் நடாத்தலாம்.

(3) இச்சட்டக்கோவையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 430 ஆம் பிரிவின் கீழான விளக்கமொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக, தண்டனைத் தீர்ப்புக்கெதிராக அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடியதாதல் வேண்டும். அத்தகைய மேன்முறையீடு உயர் நீதிமன்றத்திற்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பிரதம நீதியரசரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அந்நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகளுக்குக் குறையாதவர்களைக்கொண்ட தவிசினால் விசாரிக்கப்படுதல் வேண்டும். பிரதம நீதியரசர் அத்தகைய தவிசுக்குத் தம்மைப் பெயர் குறித்து நியமித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) யூரர் சபையில்லாமல் விளங்கப்படும் வழக்குகளில் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களிலிருந்தும் தண்டனைத் தீர்ப்புகளிலிருந்தும் கட்டளைகளிலிருந்தும் மேன்முறையீடுகளை நெறிப்படுத்துகின்ற இச்சட்டக்கோவையினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகள் 450 ஆம் பிரிவின்கீழ் நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னர் நடைபெறும் விளக்கமொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்புகளிலிருந்தும் தண்டனைத் தீர்ப்புகளிலிருந்தும், கட்டளைகளிலிருந்தும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**451அ.** (1) சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்கான குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டு எந்த நீதிமன்றத்தில் அணைக்கப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றத்திற்கு, எந்தச் சிறுபிள்ளை தொடர்பில் சிறுபிள்ளை துஷ்பிரயோகம் புரியப்பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்தச் சிறுபிள்ளைக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகின்றதெனத் தோன்றுமிடத்து, விளக்கம் முடிவுறாதிருக்கையில் அத்தகைய பிள்ளை பராமரிப்பிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் பாதுகாப்பு இடமொன்றில் வைக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

பாதுகாப்பு இடமொன்றிற்கு பாதிக்கப்பட்டவரின் கட்டுக்காப்பை அளிப்பதற்கான ஆணைப் பத்திரம்.

§4, 28 இல1998

(2) எந்தச் சிறுபிள்ளை தொடர்பில் சிறுபிள்ளை துஷ்பிரயோகம் புரியப் பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்தச் சிறுபிள்ளை பராமரிப்பிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் நிறுவனமொன்றில் வைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, பொருளளவில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான ஆணைப்பத்திர மொன்று நீதிமன்றத்தால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு ஏற்புடைத்தாக்கப்படுதல் வேண்டும்."

**452.** விசாரணை அல்லது விளக்கம் முடியும்வரை எவரேனுமாளைக் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்துவதற்கு அல்லது விளக்கமறியலில் வைப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்கிலும், அத்தகைய ஆள் பெண்ணாக அல்லது பதினாறு வயதிற்கு உட்பட்டவராக இருந்தால், நீதிமன்றம் அத்தகைய ஆளை மறியற்சாலையொன்றினது கண்காணிப்பாளரின் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்துவதற்குப்பதிலாக அல்லது விளக்கமறியலில் வைப்பதற்குப் பதிலாக அச்சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் எந்தக் காலப்பகுதிக்கு அவ்வாறு பாரப்படுத்தப்படவேண்டுமென அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்ட வேண்டுமென வேறுவிதமாகக் கட்டளையிடப்படக் கூடுமோ அந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய ஆள் நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரொருவரின் கட்டுக்காவலில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இல்லமொன்றில் வைக்கப்படவேண்டுமென்று பணிக்கலாம்.

விசாரணை அல்லது விளக்கம் முடியும்வரை பெண்களை அல்லது பதினாறு வயதுக்குட்பட்ட ஆட்களைக் கட்டுக் காவலில் வைத்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரிவில், "அங்கீகரிக்கப்பட்ட இல்லம்" என்பது, கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும், பெண்களுக்கான அல்லது பதினாறு வயதிற்குட்பட்ட ஆட்களுக்கான இல்லம் அல்லது இதை ஒத்த வேறு நிறுவனம் எனப்பொருள்படும்.

விதிகளை ஆக்குவதற்கு உயர்நீதி மன்றத்திற்குள்ள தத்துவம்.

**453.** (1) இச்சட்டக்கோவையின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றிவைப்பதற்காகவும் அல்லது அவற்றிற்குப் பயன்கொடுப்பதற்காகவும், எந்த நீதிமன்றங்களின் நடவடிக்கைக்குப் படிவமொன்று ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனப் பிரதம நீதியரசர் கருதுகின்றாரோ அந்த நீதிமன்றங்கள் எல்லாவற்றிலுமான ஒவ்வொரு நடவடிக்கைக்கும் படிவங்களை விதித்துரைப்பதற்காகவும், எந்தக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டக்கோவையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்தக் கருமங்களுக்காகவும், அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, பிரதம நீதியரசர், உயர் நீதிமன்றத்தின் எவரேனும் மூன்று நீதிபதிகளோடு காலத்துக்குக் காலம் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் ஆக்கப்படுதல் வேண்டும்.

விளக்கங்களுக்கும் மேன்முறையீடுகளுக்கும் முந்துரிமை.
§5. 28 இல. 1998

**453அ.** நீதிமன்றம் ஒவ்வொன்றும் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக அத்தகைய நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்ட அல்லது குற்றப்பகர்வு செய்யப் பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்திற்கும் அத்துடன் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக எவரேனும் ஆளின் குற்றத்தீர்ப்பினின் றெழுவதும் அத்தகைய குற்றத்தீர்ப்பின்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரானதுமான விசாரணைக்கும் முந்துரிமை கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**454.** நானூற்று ஐம்பத்துமூன்றாம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவத்திற்கு அமைய, ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளும் தேவைப்படுத்தக்கூடிய அத்தகைய வேறுபடுத்தலுடன் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படிவங்கள், அவற்றில் முறையே குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். படிவங்கள்.

**455.** இச்சட்டக்கோவையின் கீழான ஏதேனும் ஆதனத்தின் விற்பனை தொடர்பில் ஏதேனும் கடமையைப் புரிய வேண்டியுள்ள பகிரங்க ஊழியரொருவர் அத்தகைய விற்பனையில் ஆதனத்தைக் கொள்வனவு செய்தலோ அல்லது அதற்காக விலை கேட்டலோ ஆகாது. இச்சட்டக் கோவையின் கீழான விற்பனைகளில் பகிரங்க ஊழியர்கள் விலைகேட்க லாகாது.

**456.** கொலைக்காக அல்லது தேசத்துரோகத்திற்காகக் குற்றவழக்குத்தொடரும் உரிமை, ஏதேனும் கால எல்லையினால் தடைசெய்யப்படுதலாகாது ; ஆனால் வேறு ஏதேனும் குற்றத்திற்கு அல்லது தவறுக்கு (சட்டத்தின் மூலம் சிறப்பேற்பாடுசெய்யப்பட்டவை அல்லது செய்யப்படவேண்டியவை நீங்கலாகவும், அவை தவிரவும்) குற்றவழக்குத் தொடரும் உரிமை, குற்றம் அல்லது தவறு புரியப்பட்ட காலத்திலிருந்து இருபது ஆண்டுகள் கழிவதன் பின்னர் தடைசெய்யப்படுதல் வேண்டும். குற்றங்களுக் கான அல்லது தவறுகளு க்கான காலவிதிப்புத் தடை. §15, 52 இல 1980

**456அ.** இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுடன் இணங்கி யொழுகத் தவறுகையானது, அத்தகைய தவறுகை கணிசமான நீதிப்பிறழ் வொன்றினை ஏற்படுத்தியிருந்தாலன்றி, ஏதேனும் முறைப்பாட்டின், பாரப்படுத்தலின் அல்லது குற்றப்பகர்வின் செல்லுபடியாந் தன்மையை அல்லது ஏதேனும் சான்றினது எவ்தகைமையைப் பாதித்தலோ அல்லது பாதித்திருந்ததாகக் கருதப்படுதலோ ஆகாது.". சட்டத்துக்கு இணங்கி யொழுகத் தவறுகை, முறைப்பாடு முதலியவற்றின் செல்லுபடியாந் தன்மையைப் பாதிக்காமை.

**457.** (1) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதிநிருவாகச் சட்டத்தின் II ஆம், IV ஆம் அத்தியாயங்கள் இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றன. நீக்கங்களும் பேணலும் நிலைமாறு கால ஏற்பாடுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) நியமித்த தேதிக்கு நேரே முற்போந்த நாளன்று ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவு பெறாமலிருக்கும் ஏதேனும் மேன்முறையீடு, விண்ணப்பம், விளக்கம், விசாரணை அல்லது புலன்விசாரணை இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் சாத்தியப்படக்கூடியவரை, விடயத்திற் கேற்றவாறு, கையாளப்படலாம், தொடர்ந்து நடாத்தப்படலாம், நடாத்தப்படலாம் அல்லது செய்யப்படலாம்.

(3) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின்கீழ் அடங்கும் தவறொன்று நியமித்த தேதியின் முன்னர் புரியப்பட்டு, ஆனால், அத்தவறு தொடர்பிலான குற்றப்பகர்வொன்று கோப்பிடப்படாதுள்ள விடத்து, XV ஆம் அத்தியாயத்தின்கீழ் முதனிலை விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டுமென்றும், இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் என்றும் சட்டத்துறைத் தலைமையதிபதி நீதிவானைப் பணித்தால், நீதிவான் அவ்வாறு செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் தவறு தொடர்பாக, தவறின் தன்மையையும் தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, சட்டத்துறைத் தலைமையதிபதி, பொருத்தமானதெனக் கருதுகின்றவிடத்து, மேன்நீதிமன்றமொன்றில் யூரர்சபை முன்னர் விளங்கப்படும்படி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு நேரடியாகக் குற்றப்பகர்வு செய்யலாம் ; அத்துடன் அதன் பின்னர், விளக்கமானது, கூடியஅளவு சாத்தியமானவரை, இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய மேல் நீதிமன்றத்தில் யூர்சபையொன்றின் முன்னர் நடாத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி தவறின் தன்மையையும் தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு பொருத்தமானதெனக் கருதுமிடத்து, நியமித்த தேதிக்கு முன்னர் புரியப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பாக (1978 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நீதித்துறைச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் பற்றிய நிரலில் அடங்காததானதவறு) யூரர்சபையொன்றில்லா விளக்கத்திற்கு மேல் நீதிமன்றமொன்றில் குற்றப்பகர்வை நேரடியாகக் கோப்பிடலாம். அதன் பின்னர் அத்தகைய விளக்கம், சாத்தியமானவரை இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய மேல் நீதிமன்றத்தில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) நியமித்த தேதிக்கு நேர்முன்னர் வலுவிலுள்ள சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட எல்லா அறிவித்தல்களும், விடுக்கப்பட்ட பிரகடனங்களும், அளிக்கப்பட்ட தத்துவங்களும், விதிக்கப்பட்ட படிவங்களும், வரையறுக்கப்பட்ட இட நியாயாதிக்கங்களும், அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளும், ஆக்கப்பட்ட கட்டளைகளும் விதிகளும், செய்யப்பட்ட நியமனங்களும், இச்சட்டக்கோவையின் நேரொத்த ஏற்பாடுகளின்கீழ் முறையே வெளியிடப்பட்டனவாக, விடுக்கப்பட்டனவாக, அளிக்கப்பட்டனவாக, விதித்துரைக்கப்பட்டனவாக, வரையறுக்கப் பட்டனவாக, அளிக்கப்பட்டனவாக, ஆக்கப்பட்டனவாக அல்லது செய்யப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.கிடைக்கப்பெறாத வேறு நிவாரணம் இச்சட்டக்கோவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற நிகழ்வின் காரணத்தினால் மாத்திரம், அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தைக் கோப்பிடச்செய்ய அல்லது நடவடிக்கையைத் தொடங்க அல்லது நடவடிக்கைமுறையில் நடவடிக்கையை எடுக்க இச்சட்டக்கோவையிலுள்ள எதுவும் இயலச் செய்வதாக பொருள்கொள்ளப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட எந்த அனுமதியை, அல்லது கொடுக்கப்பட்ட எந்த இசைவைப் பின்பற்றி அச்சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கை தொடங்கப்படவில்லையோ அல்லது நியமித்த தேதிக்கு நேர்முன்னரான நாளன்று நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றனவோ, அந்த அனுமதி அல்லது இசைவு, இச்சட்டக்கோவையின் நேரொத்த ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்டதாக அல்லது கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அனுமதியை அல்லது இசைவைப் பின்பற்றி இச்சட்டக்கோவையின்கீழ், விடயத்துக்கு ஏற்றவாறு, நடவடிக்கைகள் தொடங்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(7) மேன்முறையீடொன்றை அல்லது விண்ணப்பமொன்றை அல்லது வேறு நடவடிக்கையைக் கோப்பிடுவதற்கு அல்லது நடவடிக்கைமுறை நடவடிக்கையொன்றை எடுப்பதற்கு, நியமித்த தேதிக்கு நேர் முன்னர் வலுவிலுள்ள சட்டத்தினால் விதிக்கப்பட்ட காலமானது நியமித்த தேதிக்கு முன்னர் முடிவடைந்தவிடத்து, அதற்காகக் கூடியகாலம் இச்சட்டக்கோவையினால் விதிக்கப்பட்டது அல்லது கால நீடிப்பிற்கு இச்சட்டக்கோவையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன அல்லது முன்னர் -

(8) நியமித்த தேதிக்கு நேர் முன்னரான நாளன்று மேல் நீதிமன்றத்தில் தீர்க்கப்படாமலிருக்கும் குற்றப்பகர்வின் மீதான எல்லா விளக்கங்களும், அத்தகைய குற்றப்பகர்வுகள் சாத்தியமான வரை இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் கோப்பிடப்பட்டவை என்றாற்போன்று அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் விளங்கப்பட்டுக்கையாளப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8அ) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்ட தவறுகளின் நிரலில் அடங்காத தவறினை உள்ளடக்கிய அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகள் உள்ளவிடத்து அவற்றில் ஏதேனும் ஒன்றை உள்ளடக்கிய குற்றப்பகர்வின்மீது நியமித்த தேதிக்கு முன்னர் மேல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருந்து அத்தகைய நடவடிக்கைகள் நியமித்த தேதிக்கு நேர் முந்திய நாளன்று முடிவுறாதுள்ளவிடத்து, அத்தகைய குற்றப்பகர்வின் மீதான விளக்கம் யூர்சபையில்லாது அமரும் மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் நடைபெறுதல் வேண்டும். §2. 36 இல 1979

(8ஆ) இந்தச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் மேல் நீதிமன்றத்தினால் புறநீங்கலாக விளங்கப்படற்குரிய ஒரு தவறு தொடர்பில் நியமித்த தேதிக்கு முன்னர் நடவடிக்கைகள் நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்து அத்தகைய நடவடிக்கைகள் நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவிடத்து, அத்தகைய நீதிவான் நீதிமன்றம், இச்சட்டக்கோவையின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அத்தகைய விடயத்தைக் கேட்கவும் தீர்மானிக்கவும், அல்லது தொடர்ந்து நடாத்தி நிறைவு செய்ய நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும். §2. 36 இல 1979

(9) 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 3 (1) (இ) என்னும் பிரிவினால் நீக்கப்பட்டவையாகக் கருதப்பட்ட குற்றத்தடுப்புக் கட்டளைச்சட்டத்தினதும் தவறாளர்களின் நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளைச்சட்டத்தினதும் அத்தகைய ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும் நீக்கப்பட்டனவாகக் கருதப்படாதவை என்றாற் போன்று நடைமுறையில் இருந்திருப்பவையாகவும் இருப்பவையாகவும் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு விதிகள்.

**458.** (1) எக்கருமங்களுக்காக இச்சட்டக்கோவையினால் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கசெற்றின் தேதியன்று அல்லது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், இயன்றளவு விரைவாக, பாராளுமன்றத்தின் முன்னர், அதன் அங்கீகாரத்துக்காகக் கொணரப்படுதல் வேண்டும் ; அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று இல்லாதொழிக்கப்பட்டதாக அவ்வாறு கருதப்படுகின்றதோ அத்தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அட்டவணை

## (பிரிவுகள்: 10, 11)

## தவறுகளின் அட்டவணை வடிவக்கூற்று

## விளக்கக் குறிப்புகள்

(1) முறையே "தவறு", "தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தண்டனை" என்ற தலைப்புகள் கொண்ட, இவ்வட்டவணையின் இரண்டாம், ஏழாம் நிரைகளிலுள்ள பதிவுகள், தண்டனைச் சட்டக்கோவையின் பல்வேறு நேரொத்த பிரிவுகளில் விவரிக்கப்பட்டவையான தவறுகளினதும் தண்டனைகளினதும் வரைவிலக்கணங்களாக, அல்லது அப்பிரிவுகளின் பொழிப்புகளாகக் கருதப்படவில்லை; ஆனால் எப்பிரிவுகளின் இலக்கங்கள் ஓராம் நிரையில் தரப்பட்டுள்ளனவோ அப்பிரிவுகளின் பொருள்பற்றிய குறிப்பீடுகளாக மட்டுமே கருதப்படும்.

(2) இவ்வட்டவணையின் மூன்றாம் நிரையிலுள்ள பதிவுகள், சமாதான அலுவலர்களால் பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்கானவையும், அவர்களால் சட்டமுறையாகப் பிரயோகிக்கப்படக்கூடியவையுமான தத்துவங்களை எவ்வகையிலேனும் மட்டுப்படுத்துவனவாகக் கருதப்படுவனவல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் V - உடந்தை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 102 | உடந்தையளிக்கப்பட்ட செயல் உடந்தையளித்தலின் விளைவாகப் புரியப்பட்டு அதனைத் தண்டித்தற்கு வெளிப்படையான ஏற்பாடு செய்யப்படாதவிடத்து, ஏதேனும் தவறுக்கு உடந்தையளித்தல். | உடந்தையளிக்கப்பட்ட தவறிற்கெனப் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைது செய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்ட தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்ட தவறு இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்ட தவறுக்குரிய அதே தண்டனை. | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலதோ அந்த நீதிமன்றத்தால். |
| 103. | உடந்தையளிக்கப்பட்ட ஆள் உடந்தையாளரின் உளக் கருத்திலும் வேறான உளக்கருத்தொன்றுடன் செயலாற்றுமிடத்து, ஏதேனும் தவறுக்கு உடந்தையளித்தல். | ” | ” | ” | ” | ” | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 104 | காப்புவாசகத்திற்கு அமைய, ஒரு செயலுக்கு உடந்தையளிக்க வேறொரு செயல் புரியப்படுமிடத்து, ஏதேனும் தவறுக்கு உடந்தையளித்தல். | உடந்தையளிக் கப்பட்ட தவறிற் கெனப்பிடியாணை யின்றிக் கைது செய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்ட தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்ட தவறு இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தைய ளிக்க உத்தேசிக் கப்பட்ட தவறுக்குரிய அதே தண்டனை. | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பால தோ அந்த நீதிமன்றத்தால். |
| 106 | உடந்தையளிக்கப்பட்ட செயலில் இருந்து உடந்தையாளரினால் கருதப்பட்டதற்குவேறான பயன் ஏற்படுமிடத்து, ஏதேனும் தவறுக்கு உடந்தையளித்தல். | ,, | ,, | ,, | ,, | புரியப்பட்ட தவறுக்குரிய அதே தண்டனை. | ,, |
| 107 | தவறுபுரியப்படும் பொழுது உடந்தையாளர் சமூகமாயிருந்தால், தவறு எதற்கும் உடந்தையளித்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 108 | மரணத்தினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்கு உடந்தையளித்தல், அவ்வுடந்தையளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படாவிடின். | ,, | ,, | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ்செய்யக் கூடியதன்று | எழு ஆண்டுகட்கு இருவகையி லொருவகை மறியலும் குற்றப்பணமும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| | அவ்வுடந்தையளித்தலின் விளைவாகத் தீமை விளைக்கும் செயலொன்று புரியப்படின். | உடந்தையளிக் கப்பட்ட தவறிற் கெனப்பிடியாணையின்றிக் கைது செய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று | பதினான்கு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும். | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலதோ அந்த நீதிமன்றத்தால். |
| 109 | மறியலினால் தண்டிக்கப் படக்கூடிய தவறொன்றுக்கு உடந்தையளித்தல், அவ்வுடந்தையளித்தலின் விளைவாக அத்தவறு புரியப்படாவிடின். | ,, | ,, | உடந்தையளிக்கப் பட்ட தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தையளிக்கப் பட்ட தவறு இணக்கஞ்செய்யக் கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்து. | அத்தவறுக்கென ஏற்பாடுசெய்யப் பட்டமிகநீண்ட காலத்தின் கால்வாசிக்கு நீடிப்பதும் ஏதேனும் விவரணம் கொண்டதுமான மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உடந்தையாளர் அல்லது உடந்தையளிக்கப் பட்டவர் தவறினைத் தடுக்குங் கடமையுடைய பகிரங்க சேவையாளராயிருப்பின். | உடந்தையளிக் கப்பட்ட தவறிற் கெனப்பிடியாணை யின்றிக் கைது செய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து | உடந்தையளிக்கப் பட்ட தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | உடந்தையளிக்கப் பட்ட தவறு இணக்கஞ்செய்யக் கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்து | அத்தவறுக்கென ஏற்பாடுசெய்யப் பட்டமிகநீண்ட காலத்தின் அரைவாசிக்கு நீடிப்பதும் ஏதேனும் விவரணம் கொண்டதுமான மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பால தோ அந்த நீதிமன்றத்தால். |
| 110 | பொதுமக்களால் அல்லது பத்து ஆட்களுக்கு மேற்பட்டோரால் தவறு புரியப்படுதற்கு உடந்தையளித்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையில் ஒருவகையான மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும், | ,, |
| 111 | மரணத்தின் மூலம் அல்லது இருபது ஆண்டுகள் கொண்ட மறியல் மூலம் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப்புரியவுள்ள சூழ்ச்சியை மறைத்தல், அத்தவறுபுரியப்பட்டால், | ,, | ,, | பிணையில் அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று | ஏழு ஆண்டு கட்கு இரு வகையில் ஒருவகையான மறியலும் குற்றப்பணமும் | ,, |
| | அத்தவறு புரியப்படாவிடின். | ,, | ,, | ,, | ,, | மூன்றாண்டுட்கு இருவகையில் ஒருவகையான மறியலும் குற்றப்பணமும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 112 | தவறொன்று புரியப்படுதலைத் தடுத்தல் தமது கடமையாகவுள்ள பகிரங்க சேவையாளர் ஒருவர் அத்தவறு புரிதற்கான சூழ்ச்சியை மறைத்துவைத்தல், அத்தவறு புரியப்பட்டால், | உடந்தையளிக் கப்பட்ட தவறிற் கெனப்பிடியாணை யின்றிக் கைது செய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | உடந்தையளிக்கப் பட்ட தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று | அத்தவறுக் கெனஏற்பாடு செய்யப்பட்ட மிகநீண்ட காலத்தின் அரைவாசிக்கு நீடிப்பதும் ஏதேனும் விவரணம் கொண்டதுமான மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் அலலது இரண்டும். | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலதோ அந்த நீதிமன்றத்தால் |
| .. | அத்தவறு மரண தண்டனையினால் தண்டிக்கப்படற்பால தாயின் | ,, | ,, | பிணையிற்செல்ல அனுமதித்தற்பால தன்று. | ,, | பத்தாண்டு கட்கு இரு வகையில் ஒருவகை மறியல். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| .. | அத்தவறு புரியப்படாவிடின் | உடந்தையளிக் கப்பட்டதவறிற் கெனப்பிடியாணை யின்றிக் கைது செய்யப்படலாமெனில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம், இல்லையெனில் ஆகாது. | உடந்தையளிக்கப் பட்ட தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | உடந்தையளிக் கப்பட்டதவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | அத்தவறுக்கென ஏற்பாடுசெய்யப் பட்டமிகநீண்ட காலத்தின் கால் வாசிக்குநீடிப்பதும் ஏதேனும் விவரணம் கொண்டதுமான மறியற்றண்டனை அல்லது குற்றப பணம் அல்லது இரண்டும். | உடந்தையளிக் கப்பட்ட தவறு எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பால தோ அந்த நீதிமன்றத்தால். |
| 113 | மறியலினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்று புரியப்படுதற்குள்ள சூழ்ச்சியை மறைத்துவைத்தல், அத்தவறு புரியப்படின். | ” | ” | ” | ” | ” | ” |
| | அத்தவறு புரியப்படாவிடின். | ” | ” | ” | ” | அத்தவறுக்கென ஏற்பாடுசெய்யப் பட்டமிகநீண்ட காலத்தின்எட்டில் ஒருபாகத்திற்கு நீடிப்பதும்ஏதேனும் விவரணம்கொண்ட துமான மறியற் றண்டனை அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் Vஅ - சதி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 113ஆ. | ஏதேனும் தவறினைப் புரிவதற்கு அல்லது அதற்கு உடந்தையளிப் பதற்கு ஆன சதி | சதியின் குறிக்கோளான தவறிற்கெனப் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம் என்றால் பிடியாணை யின்றிக் கைது செய்யலாம், இல்லையெனில் ஆகாது. | சதியின் குறிக்கோளான தவறிற்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப்படக் கூடியதைப் பொறுத்து. | சதியின் குறிக்கோளான தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | சதியின் குறிக்கோளான தவறுக்கு உடந்தையளிப் பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட அதே தண்டனை. | சதியின் குறிக்கோளான தவறு நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கற்பால தாயின், நீதிவான் நீதிமன்றத்தால் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் VI - அரசுக்கெதிரான தவறுகள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 114 | இலங்கைக் குடியரசுக்கெதிராகப் போர்புரிதல் அல்லது போர்புரிய எத்தனித்தல் அல்லது போர்புரிய உடந்தையளித்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | பதினாறு வயதுக்குக் குறைந்த ஆட்களின் விடயத்தில் சனாதிபதி விரும்பும் காலம் வரையில் தடுத்து வைத்தலும் ஆதனத்தைஇழப்பித்தலும்; கருவுற்றுள்ள பெண்களின் விடயத்தில், ஆயுட்காலத்திற்கானமறியலும் ஆதனத்தைஇழப்பித்தலும், ஏனைய விடயங்களில்,மரண தண்டனைஅல்லது பத்துஆண்டுகட்குக் குறையாத ஆனால் இருபதுஆண்டுகட்கு அதிகமாகாதகாலத்துக்கு இருவகையில் ஒரு வகை மறியலும், ஆதனத்தை இழப்பித்தலும். |
| 115 | இலங்கைக் குடியரசுக்கெதிராகக் குறித்த சில தவறுகளைப் புரிவதற்கான சதி. | ,, | ,, | ,, | | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 116 | இலங்கைக் குடியரசுக்கெதிராகப் போர்புரியும் உளக்கருத்துடன் படைக்கலங்கள் முதலியவற்றைச் சேகரித்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், ஆதனத்தை இழப்பித்தலும். | - |
| 117 | போர்புரிவதற்கான சூழ்ச்சியொன்றுக்கு வசதியளிக்கும் உளக்கருத்துடன் அதனை மறைத்தல். | " | " | பிணையில் விடற்பாலதன்று | " | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும் | - |
| 118 | சனாதிபதியை அவமதிக்க எத்தனித்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்டு சாதாரண மறியலும் குற்றப்பணமும் | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 119 | சட்டமுறையான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தலைக் கட்டாயப்படுத்தும் அல்லது தடைசெய்யும் உளக்கருத்துடன் சனாதிபதி முதலியோரைத் தாக்குதல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம் | பிடியாணை | பிணையில் விடற்பாலதன்று | இணக்கஞ்செய்யக் கூடியதன்று | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும் | - |
| 120 | வெறுப்பைத் தூண்டிவிடுதல் அல்லது தூண்டிவிட எத்தனித்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு சாதாரணமறியல் | - |
| 121 | இலங்கைக் குடியரசோடு உறவுள்ள அல்லது சமாதானமுள்ள நாட்டுக்கெதிராகப் போர்புரிதல் அல்லது அத்தகைய போர்புரிதற்கு உடந்தையாக இருத்தல். | " | " | " | " | பத்துஆண்டுகட்கு இருவகையிலொருவகைமறியலும் குற்றப்பணமும் அல்லது குற்றப்பணம். | - |
| 122 | இலங்கைக் குடியரசோடு நேசஉறவுள்ள அல்லது சமாதானமுள்ள ஏதேனும் நாட்டின் ஆள்புலங்களில் சூறையாடுதல். | " | " | " | " | ஏழுஆண்டிக்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப்பணமும் அத்துடன் குறித்த சில ஆதனங்களை இழப்பித்தலும் | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 123 | பிரிவுகள் 121, 122 என்பவற்றில் குறிப்பிடப்பட்டவாறாக, போரினால் அல்லது சூறையாடுதலினால் பெறப்பட்ட ஆதனத்தைப் பெற்றுக்கொள்ளல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையில் விடற்பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும், அத்துடன்குறித்தசில ஆதனங்களை இழப்பித்தலும். | - |
| 124 | அரசகைதியை,அல்லது போர்க் கைதியைத் தம்கட்டுக்காவலில் வைத்திருக்கும் பகிரங்க சேவையாளர் வேண்டுமென்றுஅவரைத் தப்பிச்செல்லவிடுதல். | ,, | ,, | ,, | ,, | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும். | - |
| 125 | அரசகைதியை,அல்லது போர்க் கைதியைத் தம் கட்டுக்காவலில் வைத்திருக்கும பகிரங்க சேவையாளர் அவர் தப்பிச்செல்லக்கவனையீனமாக இருத்தல். | ,, | ,, | பிணையில் விடற்பாலது. | ,, | மூன்று ஆண்டுகட்கு சாதாரண மறியலும் குற்றப்பணமும். | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 126 | அத்தகைய கைதி தப்பிச் செல்வதில் துணைபுரிதல், அவரை மீட்டல் அல்லது அவருக்கப் புகலிடமளித்தல், அல்லது அத்தகைய கைதியை மீளக் கைப்பற்றுதலை எதிர்த்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில் விடற்பாலதன்று | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | - |

## அத்தியாயம் VII - கடற்படை, தரைப்படை, வான்படை தொடர்பான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 128 | உத்தியோகத்தர், மாலுமி, தரைப்படைவீரர் அல்லது வான்படைவீரர் ஒருவர் கலகஞ்செய்ய உடந்தையளித்தல் அல்லது அவரைக் கடமையிலிருந்து அல்லது விசுவாசத்தில் இருந்து மருட்டிக் கொடுத்தல். | ,, | ,, | ,, | ,, | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | - |
| 129 | அதன் விளைவாகக் கலகம் புரியப்படின், கலகத்துக்கு உடந்தையளித்தல். | ,, | ,, | ,, | ,, | மரணதண்டனை, அல்லது இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும். | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப்படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ்செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 130 | உயர்நிலை உத்தியோகத்தர் தமது கடமையைப்புரியும்பொழுது, உத்தியோகத்தர், மாலுமி, தரைப்படை வீரர் அல்லது வான் படைவீரர், அவரைத் தாக்குவதற்கு உடந்தையளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில் விடற்பாலதன்று | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | மூன்று ஆண்டுகட்டு இருவகையிலொருவகை மறியலும், குற்றப்பணமும் | நீதிவான் நீதிமன்றம். |
| 131 | தாக்குதல் புரியப்படின், அத்தகைய தாக்குதலுக்கு உடந்தையளித்தல். | " | " | " | " | ஏழு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகைமறியலும் குற்றப்பணமும் | " |
| 132 | உத்தியோகத்தர், மாலுமி தரைப்படைவீரர் அல்லது வான்படைவீரர் படைவிட்டோக உடந்தையளித்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல்அல்லது குற்றப்பணம், அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 133 | படைவிட்டேகிவரும் அத்தகைய உத்தியோகத்தர், மாலுமி, படைவீரர் அல்லது வான்படைவீரர் ஒருவருக்குப் புகலிடமளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில் விடற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம், இரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| 134 | கப்பற்றலைவரின் அல்லது கப்பலுக்குப் பொறுப்பான ஆளின் கவனவீனத்தல்,வணிகக் கப்பலில்மறைந்துகொள்ளும் படைவிட்டேகியவர். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | ” | ” | ஐந்நூறு ரூபாக் குற்றப்பணம். | ” |
| 135 | உத்தியோகத்தர், மாலுமி, தரைப்படைவீரர் அல்லது வான்படைவீரர் ஒருவரின் கீழ்ப்படியாச் செயலுக்கு உடந்தையளித்தல், அச்செயலின் விளைவாகத் தவறு புரியப்படின், | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | ” | ” | ஆறு மாங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 137 | மாலுமி, தரைப்படைவீரர் அல்லது வான்படைவீரர் பயன்படுத்தும் உடையைத் தாம் அத்தகைய மாலுமி,தரைப்படைவீரர், அல்லது வான்படைவீரர் எனநம்பப்படலாம் என்ற உளக்கருத்துடன் அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தைக் கொண்டு செல்லுதல். | ” | அழைப்புக்கட்டளை | ” | ” | மூன்றுமாதங்கட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம், அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |

## அத்தியாயம் VIII - பொது அமைதிக்கெதிரான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 140 | சட்டவிரோதமான கூட்டம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராக இருத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையில் விடற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறுமாதங்க ளுக்கு இரு வகையிலொரு வகைமறியல் அல்லதுகுற்றப் பணம்அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 141 | மரணம் விளைக்கும் ஏதேனும் ஆயுதந் தாங்கி சட்டவிரோதமான கூட்டத்தில் சேர்தல். | " | பிடியாணை | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 142 | சட்டவிரோதமான கூட்டமொன்று கலைந்து செல்லும்படி கட்டளையிடப்பட்டதென அறிந்து கொண்டு அதிற்சேருதல் அல்லது தொடர்ந்து வருதல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையில் விடற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 144 | கலகம் விளைத்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 145 | மரணம் விளைக்கும் ஆயுதந்தாங்கிக் கலகம் விளைத்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையி லொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |
| 146 | சட்டவிரோதமான கூட்டம் ஒன்றின் உறுப்பினர் ஒருவரால் தவறொன்று புரியப்படின் அத்தகைய கூட்டத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். | அத்தவறுக்குப் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாமா இல்லையா என்பதைப் பொறுத்து. | அத்தவறுக்குப் பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை வழங்கப் படலாமா இல்லையா என்பதைப் பொறுத்து. | அத்தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | தவறு இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பதைப் பொறுத்து | தவறுக்குள்ள அதே தண்டனை. | தவறு எந்த நீதி மன்றத்தால் விளங்கற் பாலதோ அந்த நீதி மன்றத்தால். |
| 147 | சட்டவிரோதமான கூட்டமொன்றில் சேரும்படி ஆட்களைக்கூலிக்கமர்த்தல், ஈடுபடுத்தல் அல்லது தொழிலுக்கமர்த்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | கூலிக்கமர்த்தப்பட்ட, ஈடுபடுத்தப்பட்ட, அல்லது தொழிலுக் கமர்த்தப்பட்ட ஆள் புரிந்த தவறைப் பொறுத்து. | தவறு பிணையில் விடற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | அத்தகைய கூட்டத்தின்உறுப்பினர் ஒருவருக்குள்ளது போன்றும், அத்தகையகூட்டத்தின் உறுப்பினர் எவரினாலும் புரியப் பட்டதவறுஎதற்கும் உள்ளதுபோன்றும் | நீதிவான் நீதிமன்றம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 148 | கலைந்து செல்லும்படி பணிக்கப்பட்ட பின்னர், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களின் கூட்டத்தில், அறிந்து கொண்டு சேருதல் அல்லது தொடர்ந் திருத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறுமாதத்திற்கு இருவகையில் ஒருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 149 | கலகம் முதலியவற்றை அடக்கும் போது பகிரங்க சேவையாளரைத் தாக்குதல் அல்லது தடைசெய்தல். | " | பிடியாணை | " | " | மூன்று ஆண்டுகட்கு இருவகையி லொருவகை மறியல்அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | " |
| 150 | கலகம் விளைக்கக் கருதித் தேவையின்றி ஆத்திரமூட்டல் கலகம் புரியப்பட்டால் | " | " | " | " | ஓர்ஆண்டுக்கு இருவகையில் ஒருவகை மறியல்அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ... | புரியப்படாவிடின். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையில்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறுமாதங் களுக்கு இருவகையி லொருவகை மறியில் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 151 | கலகம் முதலியன பற்றிக் காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தகவர் தராமை. | பிடியாணையின்றிக் கைதுசெய்யத லாகாது. | ” | ” | ” | ஆயிரம் ரூபா குற்றப்பணம். | ” |
| 152 | எவ்வாளின் நன்மைக்காக அல்லது எவ்வாள்சார்பாக கலகம் புரியப்படுகின்றதோ அவர் அதனைத் தடுப் பதற்குச் சட்டமுறையான எல்லா வழிகளையும் பயன்படுத்தலாம். | ” | பிடியாணை | ” | ” | குற்றப்பணம். | ” |
| 153 | எச்சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சி யாளரின் நன்மைக்காகக் கலகம் புரியப்படுகின்றதோ அவரின் முகவர் அதனைத் தடுப்பதற்குச் சட்டமுறையான எல்லா வழிகளையும் பயன்படுத்தாமை. | ” | ” | ” | ” | ” | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 154 | சட்டவிரோதமான கூட்டத்திற்கெனக்கூலிக் கமர்த்தப்பட்ட ஆட்களுக்குப் புகலிடமளித்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | ஆறுமாதங்களுக்குஇருவகையி லொருவகை மறயில்அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | நீதிவான் நீதிமன்றம். |
| 155 | சட்டவிரோதமான கூட்டமொன்றில் அல்லது கலகத்தில் பங்கு கொள்வதற்கெனக் கூலிக்கமர்த்தப்படல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 156 | அல்லது ஆயுதந்தாங்கிச் செல்வதற்கு. | ,, | ,, | ,, | ,, | இரண்டு ஆண்டுகட்கு இருவகையி லொருவகை மறயில்அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | ,, |
| 157 | பொதுவிடச் சண்டை புரிதல். | ,, | அழைப்புக் கட்டளை | ,, | இணக்கஞ் செய்யக் கூடியது. | ஒரு மாதத் திற்கு இரு வகையிலொரு வகைமறியல் அல்லதுநாறு ரூபாக்குற்றப் பணம்அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் IX - பகிரங்க சேவையாளர்களினால் செய்யப்படும் அல்லது அவர்கள் தொடர்பான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 158 | பகிரங்க சேவையாளராக இருந்து கொண்டு அல்லது பகிரங்க சேவையாளராக வர எதிர்பார்த்து இருந்து கொண்டு, உத்தியோகச் செயல் தொடர்பில் சட்டமுறையான ஊதியம் அல்லாத அவா நிறைவினைப் பெறுதல். | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையில்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 159 | பகிரங்க சேவையாளரொருவரின் மீது செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கென ஊழலான அல்லது சட்டவிரோதமான வழிகளில் அவாநிறைவொன்றைப் பெறுதல். | ” | ” | ” | ” | ” | ” |
| 160 | பகிரங்க சேவையாளர் ஒருவரிடத்தில் செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கென அவாநிறைவொன்றைப் பெறுதல். | ” | ” | ” | ” | ஓராண்டுக்கு சாதாரண மறியல் அல்லது குற்றப்பணம். அல்லதுஇரண்டும் | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 161 | இறுதியாக முற்போந்த இரண்டு வாசகங்களிலும் வரைவிலக்கணம் கூறப் பட்டதவறுகள் அவர் தொடர்பில் புரியப்படு வதற்குப் பகிரங்க சேவையாளர் உடந்தை யளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்றாண்டுகட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 162 | எவரேனும் ஆளுக்கு ஊறு ஏற்படுத்தும் உளக்கருத்துடன் பகிரங்க சேவையாளர் சட்டப்பணிப்புக்குக் கீழ்ப் படியாமை. | ,, | ,, | ,, | ,, | ஓராண்டுக்கு சாதாரண மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |
| 163 | ஊறுவிளைக்கும் உளக் கருத்துடன் பகிரங்க சேவையாளர் சரியானதல் லாத ஆவணம் ஒன்றைத் தயாரித்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 164 | அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்துத் திணைக்களப் பகிரங்க சேவையாளர் மோசடியாக அல்லது தீயநோக்கத் துடன் கடமைதிறம்பல் | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | நீதிவான் நீதிமன்றம். |
| 165 | அஞ்சல், தொலைச் செய்திப்போக்குவரத்துத் திணைக்களப் பகிரங்க சேவையாளரின் தீய ஒழுக்கம் | ” | ” | ” | ” | மூன்றுமாதங்களு க்கு இருவகையி லொருவகைமறியல் அல்லது ஐம்பது ரூபாவரைசெல்லக் கூடியகுற்றப்பணம் அல்லதுஇரண்டும் | ” |
| 166 | அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்துத் திணைக்களப் பகிரங்க சேவையாளரின் மோசடி. | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | ” | ” | இரண்டு ஆண்டு கட்குநீடிக்கக்கூடிய இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 167 | அஞ்சல், தொலைச் செய்திப் போக்குவரத்துத் திணைக்களப் பகிரங்க சேவையாளர்களால் செய்தி முதலியவற்றிற்கு புரியப்படும் ஊறு. | ” | ” | ” | ” | ஏழு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 168 | பகிரங்க சேவையாளர் ஒருவரை ஆள்மாறாட்டஞ் செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 169 | மோசடியான உளக்கருத்துடன் பகிரங்க சேவையாளரால் பயன் படுத்தப்படும் உடையை அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தை கொண்டு செல்லுதல். | ” | அழைப்புக்கட்டளை | ” | ” | மூன்றுமாதங்களு க்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் IXஅ - தேர்தல்கள் தொடர்பான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 169உ | தேர்தல் ஒன்று தொடர்பிலான இலஞ்சம் | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | ஐந்நூறு ரூபா குற்றப்பணம் | நீதிவான் நீதிமன்றம். |
| | விருந்தளித்தல் மூலமான இலஞ்சமானால். | " | " | " | " | இருநூறு ரூபாக் குற்றப்பணம் | " |
| 169ஊ | தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்கு | " | " | " | " | ஐந்நூறு ரூபாக் குற்றப்பணம் | " |
| | தேர்தல் ஒன்றில் ஆள் மாறாட்டம் செய்தல். | " | " | " | " | முந்நூறு ரூபாக் குற்றப்பணம். | " |
| 169எ | தேர்தல் ஒன்று தொடர்பில் பொய்யான கூற்று | " | " | " | " | முந்நூறு ரூபாக் குற்றப்பணம். | " |
| 169ஏ | தேர்தல் கணக்குகளை வைத்திருக்கத் தவறுதல். | " | " | " | " | முந்நூறு ரூபாக் குற்றப்பணம். | " |

## அத்தியாயம் X - பகிரங்க சேவையாளர்களின் சட்டமுறையான அதிகாரத்தை அவமதித்தல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 170 | பகிரங்க சேவையாளரின் அழைப்புக் கட்டளை அல்லது வேறு கட்டளை சேர்ப்பிக்கப்படாது தவிர்ப்பதற்கெனத் தலை மறைவாக இருத்தல். | " | " | " | " | ஒரு மாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |
| | அழைப்புக்கட்டளை அல்லது அறிவித்தல், நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கானதாயின். | " | " | " | " | ஆறுமாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 171 | ஏதேனும்அழைப்புக் கட்டளை அல்லது அறிவித்தல் சேர்ப்பிக்கப் படுதலை அல்லது ஒட்டப் படுதலைத்தடுத்தல்,அல்லது அது ஒட்டப்பட்டிருக்கும் போது அகற்றுதல், அல்லது பிரகடனம்செய்யப் படுதலைத்தடுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஒரு மாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| | அழைப்புக்கட்டளை முதலியன நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்று வதற்கானதாயின். | ,, | ,, | ,, | ,, | ஆறு மாதங்களு க்கு சாதாரண மறியல் அல்லது நூறுரூபாக்குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |
| 172 | குறித்த ஓர் இடத்தில், நேரிலோ அல்லது முகவர் மூலமோ சமூகமாயிருக் கும் படியானசட்டமுறை யான கட்டளைக்குப் பணியாமை அல்லது அதிகாரமில்லாமல் அங்கிருந்து அகன்று செல்லல். | ,, | ,, | ,, | ,, | ஒரு மாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| " | அக்கட்டளை சட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கானதாயின். | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | ஆறுமாதங்களுக்கு சாதாரணமறியல் அல்லது நூறு ரூபாக்குற்றப்பணம் அல்லதுஇரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 173 | பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு ஆவணம் ஒன்றினைக்காண்பிப்பதற்கு அல்லது சேர்ப்பிப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவர் அதனை வேண்டு மென்று காண்பிக்கத் தவறுதல். | " | " | " | " | ஒரு மாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | அத்தியாயம் XXXIIஇன் ஏற்பாடுகளுக்கு அமையதவறு புரியப்பட்ட நீதிமன்றம் அல்லது ஒரு நீதிமன்றத்தில் புரியப்படாவிடின் நீதிவான் நீதிமன்றம். |
| | ஆவணமானது நீதிமன்ற மொன்றின் முன்னர் காண்பிக்கப்பட வேண்டிய தொன்றாயின் அல்லது ஒப்படைக்கப்படவேண்டிய தொன்றாயின். | " | " | " | " | ஆறுமாதங்களுக்கு சாதாரணமறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 174 | பகிரங்க சேவையாளருக்கு அறிவித்தல் அல்லது தகவல் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆளொருவர் அதனை அச்சேவையாளருக்கு வேண்டு மென்று கொடுக்காதுவிடல். | " | " | " | " | ஒரு மாதத்திற்கு சாதாரணமறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படலாம் என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| ... | தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் அல்லது தகவல் தவறொன்று புரியப்படுதல் தொடர்பிலானதாயின். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 175 | பகிரங்க சேவையாளருக்கு அறிந்து கொண்டு தவறான தகவலைத் தருதல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| | தேவைப்படத்தப்பட்ட தகவல் தவறொன்று புரியப்படுதல் தொடர்பிலானதாயின். | ,, | ,, | ,, | ,, | இரண்டு ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 176 | பகிரங்க சேவையாளரொருவரால் சத்தியஞ்செய்து கொள்ள முறைப்படி தேவைப்படுத்தப்படுமிடத்து சத்தியஞ் செய்யமறுத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | ஆறுமாதங்களுக்கு சாதாரணமறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | அத்தியாயம் XXXIIஇன் ஏற்பாடுகளுக்கு அமைய,தவறு புரியப்பட்டநீதி மன்றம்அல்லது நீதிமன்றம் ஒன்றில் புரியப்படாவிடின், நீதிவான் நீதிமன்றம். |
| 177 | சட்டப்படி உண்மை சொல்லக் கட்டுப்பட்டவர், விடையளிக்க மறுத்தல். | ,, | ,, | ,, | ,, | ஆறுமாதங்களுக்கு சாதாரணமறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | அத்தியாயம் XXXIIஇன் ஏற்பாடுகளுக்கு அமைய,தவறு புரியப்பட்ட நீதிமன்றம் அல்லது நீதிமன்றம் ஒன்றில் புரியப்படாவிடின், நீதிவான் நீதிமன்றம். |
| 178 | சட்டப்படிகையொப்பமிடுமாறு தேவைப்படுத்தப்பட்டவர், பகிரங்க சேவையாளருக்குச் செய்யப்பட்ட கூற்றொன்றினைக் கையொப்பமிட மறுத்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்றுமாதத்திற்கு சாதாரணமறியல், அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 179 | பகிரங்கசேவையாளருக்குச் சத்தியத்தின்மீது, பொய்யான எதனையும் அது பொய்யானதென அறிந்து கொண்டு உண்மையானதெனக் கூறுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 180 | எவரேனும் ஆளுக்கு ஊறு விளைக்கும் அல்லது தொந்தரவு தரும் வகையில் பகிரங்க சேவை யாளரை அவரின் சட்டமுறைத் தத்து வத்தைப்பயன்படுத்தச் செய்யும் உளக் கருத்துடன் பொய்த் தகவல் கொடுத்தல். | ” | அழைப்புக்கட்டளை | ” | ” | ஆறு மாதத்திற்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும் | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 181 | பகிரங்க சேவையாளரொருவரின் சட்டமுறையான அதிகாரத்தின் மீது ஆதனமெடுக்கப் படுதலை எதிர்த்தல். | பிடியணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | ஆறு மாதத்திற்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபா குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| .. | பகிரங்க சேவையாளரொருவரின் அதிகாரத்தின் மீது விற்க முனையப்படும் ஆதனத்தின் விற்பனையைத் தடை செய்தல். | ” | ” | ” | ” | ஒரு மாதத்திற்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 183 | பகிரங்க சேவையாளர் அவரது பகிரங்கப் பணிகளை நிறைவேற்றுவதில் தடைசெய்தல். | ” | ” | ” | ” | மூன்றுமாதங்களுக்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 184 | பகிரங்க சேவையாளருக்கு உதவியளிக்க சட்டப்படி கட்டுப் பட்டுள்ளபொழுது உதவியளிக்காதுவிடல். | ” | ” | ” | ” | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| | மன்றாணையை நிறைவேற்றுதல், தவறுகள் முதலியனவற்றைத்தடுத்தல் முதலியவற்றில் உதவி கோருபவரான பகிரங்க சேவையாளர்ஒருவருக்கு உதவிசெய்யாது வேண்டு மென்று கவனயீனமாக இருத்தல். | ” | ” | ” | ” | ஆறு மாதங்களுக்கு சாதாரண மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 185 | பகிரங்க சேவையாளர் ஒருவரால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியாமை அத்தகைய கீழ்ப் படியாமை சட்டப்படி தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஆட்களுக்குத் தடை மனக்குலைவு அல்லது ஊறு ஏற்படுத்துவதாயின். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலனது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஒருமாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| | அத்தகைய கீழ்ப்படியாமை மனிதவுயிருக்கு, உடனலத்திற்கு, அல்லது பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படுத்தினால். | ,, | ,, | ,, | ,, | ஆறு மாதத்திற்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லதுஇரண்டும். | ,, |
| 186 | பகிரங்க சேவையாளர் ஒருவர் ஏதேனும் அலுவலக முறையான செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாது விடுமாறு தூண்டுவதற்காக அப்பகிரங்கசேவையாளருக்கு அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள வேறுஎவரேனும் ஆளுக்கு ஊறுவிளைவிக்கப் போவதாக அச்சுறுத்தல். | ,, | ,, | ,, | ,, | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 187 | ஊறிலிருந்து பாதுகாப்பு கோரிச்சட்ட முறையான விண்ணப்பமொன்றைச் செய்யாது விடுமாறு தூண்டுதற்கு ஆளெவரையும் அச்சுறுத்துதல். | பிடியணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஓராண்டுக்கு இருவகை யிலொருவகை மறியல், அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | நீதிவான் நீதிமன்றம். |

## அத்தியாயம் XI - பொய்ச்சான்று அளித்தலும் பொது நீதிக்கெதிரான தவறுகளும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 190 | நீதிமுறை நடவடிக்கை யொன்றில் பொய்ச் சான்று அளித்தல் அல்லது புனைதல். | ” | பிடியாணை | ” | ” | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| | வேறு ஏதேனும் விடயத்தில் பொய்ச் சான்று அளித்தல் அல்லது புனைதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 191 | ஆளொருவர் மரண தண்டனைக்குரிய தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்புப் பெறச் செய்யவேண்டுமென்னும் உளக்கருத்துடன் பொய்யச்சான்றளித்தல் அல்லது பொய்ச்சான்று புனைதல். | ” | ” | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று | ” | பத்து ஆண்டு கட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| ... | நிரபராதியான ஆள் அதனால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தூக்கிலிடப்படின். | பிடியாணையின்றிக் கைது செய்த லாகாது. | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பதினாறுவயதிற்கு உட்பட்ட ஆட்களின் விடயத்தில்சனாதிபதி விரும்பிய காலம் வரையில் தடுத்து வைத்தல்,கருத்தரித்த பெண்கள் விடயத்தில் ஆயுட் கால மறியற்ற ண்டனை, ஏனைய எல்லாவிடயங்களிலும் மரணதண்டனை. | நீதிவான் நீதிமன்றம். |
| 192 | ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட மறியலினால் தண்டிக்கப்படக்கூடிய தவறுக்குக் குற்றத் தீர்ப்பைப்பெறச்செய்யும் உளக்கருத் துடன் பொய்ச்சான்றளித்தல் அல்லது பொய்ச்சான்று புனைதல் | ,, | ,, | ,, | ,, | தவறுக்குள்ள அதே தண்டனை. | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 193 | பொய்யானதென அல்லது புனையப்பட்ட தென அறிந்த சான்றை நீதிமுறை நடவடிக்கை யொன்றில் பயன் படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | பிடியாணை | அத்தகைய சான்றளிப்பதான தவறுபிணையிற் செல்ல அனு மதித்தற்பாலதா இல்லையா என்பதைப் பொறுத்து. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பொய்ச் சான்றை அளிக்கின்றதற்கு அல்லது புனைவதற்கு உள்ளது போன்ற அதே தண்டனை | நீதிவான் நீதிமன்றம். |
| 194 | சட்டத்தினால் சான்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் நிகழ்வுபற்றிய பொய்யான சான்றிதழை அறிந்துகொண்டு வழங்குதல் அல்லது அதில் ஒப்பமிடல். | ,, | ,, | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது. | ,, | பொய்ச் சான்றை அளிக்கின்ற தற்குள்ளது போன்ற அதே தண்டனை. | ,, |
| 195 | முக்கியமானதொரு விடயத்தில் பொய்யானதென அறியப்பட்ட சான்றிதழை உண்மையானதெனப் பயன்படுத்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 196 | சான்றாகச்சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதேனும் வெளிப்படுத்து கையில் செய்யப்படும் பொய்க்கூற்று. | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 197 | பொய்யானதென அறிய ப்பட்ட அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்து கையை உண்மையான தெனப் பயன்படுத்துதல். | ,, | ,, | ,, | ,, | ,, | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 198 | தவறாளரை மறைப்பதற் கெனப்புரியப்பட்ட தவறு பற்றியசான்றை இல்லா மற்செய்தல் அல்லது அது பற்றிப் பொய்த் தகவல் கொடுத்தல், மரணதண்டனை விதிக் கப்படக்கூடியதவறானால் | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| | பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படற்பாலதானால். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகையிலொருவகை மறியலும்குற்றப்பணமும் | ” |
| | பத்தாண்டுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப் படற்பாலதானால். | ” | ” | ” | ” | அத்தவறுக்கென ஏற்பாடுசெய்யப்பட டுள்ள ஆக்ககூடிய காலத்தின் நாலி லொரு பாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற் கானதும் அத்தகையதவறுக்கு ஏற்பாடு செய்யப்பட டுள்ள அவ்விவரண த்தைக் கொண்டது மான மறியல்அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 199 | சட்டப்படி தகவல்தரக் கட்டுப்பட்ட ஆள் ஒருவர் தவறுபற்றிய தகவலை வேண்டுமென்று தராதுவிடல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதிததற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறுமாதத்திற்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 200 | புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் பொய்த் தகவல் கொடுத்தல். | ” | பிடியாணை | ” | ” | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரணடும். | ” |
| 201 | சான்றாகக் காண்பிக் கப்படுவதனைத்தடுப்பதற் காக ஆவணமொன்றை மறைத்துவைத்தல் அல்லது அழித்தல். | ” | ” | ” | ” | ” | ” |
| 202 | துடர்ச்சியில் அல்லது குற்றவழக்குத் தொடுப்பில் ஏதேனும் செயலின் அல்லது நடவடிக்கையின் நோக்கத்திற்காகபொய்யாக ஆள் மாறாட்டஞ் செய்து வருதல், பிணையாக வருதல் அல்லது,பிணைப் பொறுப்பளிக்க வருதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 203 | ஆதனமொன்று பறிமுதலொன்றாக அல்லது தண்டனைத்தீர்ப்பின்கீழான குற்றப்பணமொன்றாக அல்லது தீர்வையின் நிறைவேற்றுகையாகக் கைப்பற்றப்படுவதனைத் தடுப்பதற்கென அதனை மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்து வைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 204 | பறிமுதலொன்றாகக் கைப்பற்றப்படுவதனை அல்லது தண்டனைத் தீர்ப்பின் கீழான குற்றப் பணத்தைத் திருப்தி செய்வதனை அல்லது தீர்வையை நிறைவேற்றுவதனைத்தடுப்பதற்காகத் தமக்கு உரிமையற்ற ஆவணத்தைக் கோருதல் அல்லது அதன் உரிமை தொடர்பில் ஏமாற்றுதல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 205 | வருமதியாக இல்லாத ஒரு தொகைக்கான தீர்வை ஒன்று ஆக்கப் படுவதற்கு மோசடியாகச் சம்மதித்தல் அல்லது வருமதியான தொகை யானது கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னரும் தீர்வையானது நிறை வேற்றப்படுவதற்குச் சம்மதித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | பிடியாணை | பிணையில்செல்ல அனுமதித்தற் பாலனது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 206 | நீதிமன்றமொன்றில் பொய்க்கோரிக்கை ஒன்றினைச் செய்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 207 | வருமதியாகவிலாத ஒரு தொகைக்குமோசடியாகத் தீர்வையைப் பெறுதல் அல்லது கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் மோசடியாகத் தீர்வையை நிறைவேற்றுமாறு செய்வித்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | " |
| 208 | ஊறுபடுத்தும் உளக்கருத்துடன் செய்யப்படும் தவறுபற்றிய பொய்க்குற்றச் சாட்டு. | " | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| ..... | சாட்டப்பட்ட தவறானது மரணதண்டனை விதிக்கப்படற்பாலதாயின் அல்லது ஏழு ஆண்டு கட்கு மேற்பட்ட காலத்திற்கான மறியலினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாயின். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | பிடியாணை. | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 209 | மரண தண்டனை விதிக் கப்படற்பாலதான தவறொன்றாயின் தவறாளருக்குப் புகலிடமளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | ” | ” | ” | ஐந்துஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| | பத்து ஆண்டுகட்கு மறியலினால் தண்டிக்கப் படற்பாலதாயின். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ... | பத்தாண்டுகளுக்கல்லாது ஓராண்டுக்கு மறியலினால் தண்டிக்கப்படற்பாலதாயின். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆகக் கூடியகாலத்தின் நாலிலொருபாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகையதவறுக் குஏற்பாடு செய யப்பட்டுள்ளவிரணைத்தைக்கொண்ட மறியல் அல்லது குற்றப் பணம் அல்லதுஇரண்டு | புகலிடமளிக் கப்பட்ட ஆளினால் புரியப்பட்ட தவறு நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கற்பாலதாயின் நீதிவான் நீதிமன்றம். |
| 210 | தவறாளரைத் தண்டனையிலிருந்து மறைப்பதற்கென அவாநிறைவு முதலியன பெறல்; மரணதண்டனை விதிக்கற்பாலதான தவறானால். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| | பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படற்பாலதானால். | " | " | " | " | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| ... | பத்தாண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப்படற்பால தானால். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | அத்தவறுக்கு ஏற் பாடு செய்யப்பட் டுள்ள ஆகக் கூடிய காலத்தின் நாலிலொருபாகத் திற்கு நீடிக்கக் கூடிய ஒரு கால த்திற்கு அத்த கைய தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள விவர ணத்தைக்கொண்ட மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும். | தவறாளர் நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கற்பால ராயின் நீதிவான் நீதிமன்றம். |
| ... | குற்றப்பணத்தினாலாயின். | ” | ” | ” | ” | குற்றப்பணம். | நீதிவான் நீதிமன்றம். |
| 211 | தவறாளரைமறைப்பதற்காக அவாநிறைவைக்கொடுக்க அல்லது ஆதனத்தை மீளஅளிக்க முனைதல் மரணதண்டனை விதிக் கற்பாலதான தவறானால். | ” | ” | ” | ” | எழுஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியிலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| .... | பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படற்பாலதானால் | பிடியாணையின்றிக் கைதுசெய்தலாகாது | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்குச்செய்யக் கூடியதன்று. | மூன்றுஆண்டுக்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| | பத்தாண்டுகளுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப்படற்பாலதானால் | ,, | ,, | ,, | ,, | அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆக்க கூடியகாலத்தின் நாலிலொருபாகத்திற்குநீடிக்கக்கூடிய ஒருகாலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விவரணத்தைக் கொண்ட மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | தவறாளர் நீதிவான் நீதிமன்றத் தால் விளங்கற் பாலதாயின் நீதிவான் நீதிமன்றம். |
| | குற்றப்பணத்தினாலாயின் | ,, | ,, | ,, | ,, | குற்றப்பணம் | நீதிவான் நீதிமன்றம். |
| 212 | தவறாளர் கைது செய்யப்படாமல் தவறொன்றின் மூலம் ஆளொருவர் இறந்துள்ள அசைவுள்ள ஆதனம் முதலியவற்றை மீட்க உதவிசெய்வதற்கென அவாநிறைவு பெறுதல். | ,, | ,, | ,, | ,, | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 213 | கட்டுக்காவலிலிருந்து தப்பியோடிய அல்லது கைது செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள்ள தவறாளருக்குப் புகலிடமளித்தல்; மரணதண்டனை விதிக்கற்பாலதான தவறானால். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | ஏழுஆண்டுகட்கு இருவகையிலொரு வகைமறியலும் குற்றப்பணமும். | - |
| | பத்தாண்டு மறியலினால் தண்டித்தற்பாலதானால். | ” | ” | ” | ” | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப் பணமின்றி மூன்று ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல். | நீதிவான் நீதிமன்றம். |
| | பத்தாண்டுக்கல்லாது ஓராண்டுக்கான மறியலினாலானால். | ” | ” | ” | ” | அத்தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத்தின் நாலிலொருபாகத்திற்கு நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கு அத்தகைய தவறுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள விவரணத்தைக் கொண்ட மறியல் அல்லது குற்றப்பணமும் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 214 | தண்டனையிலிருந்து ஆளை அல்லது பறிமுதலிலிருந்து ஆதனத்தைக் காக்கும் உளக்கருத்துடன் பகிரங்கசேவையாளர் சட்டப்பணிப்பொன்றுக்குக் கீழ்ப்படியாமை. | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 215 | தண்டனையிலிருந்து ஆளை அல்லது பறிமுதலிலிருந்து ஆதனத்தைக் காக்கும் உளக்கருத்துடன் பகிரங்கசேவையாளர் செம்மையில்லாத பதிவேட்டை அல்லது எழுத்தைத் தயாரித்தல். | ” | பிடியாணை | ” | ” | மூன்று ஆண்டுகளுக்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ” |
| 216 | தவறாளர் ஒருவரைக் கைது செய்வதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள பகிரங்க சேவையாளர் ஒருவர் வேண்டுமென்று கைதுசெய்யாதுவிடல் அத்தவறுமரணதண்டனை விதிக்கப்படற்பாலதானால். | ” | ” | ” | ” | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல். | ” |
| | பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படற்பாலதானால். | ” | ” | ” | ” | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழுங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| .. | பத்தாண்டுக்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப் படற்பாலதானால். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல். | நீதிவான் நீதிமன்றம். |
| 217 | நீதிமன்றத்தின் தண்டனை தீர்ப்புப் பெற்ற ஆளொருவரைக்கைதுசெய்வதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள பகிரங்க சேவையாளர் வேண்டுமென்று கைது செய்யாது விடல்; அந்த ஆள் மரணதண்டனை விதிக்கப்பட்டவரானால். | ,, | ,, | பிணையிற்செல்ல அனுமதித்தற்பால தன்று. | ,, | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப்பணமின்றி பதினான்கு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல். | ,, |
| | பத்து ஆண்டுகட்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான மறியற்றண்டனைத் தீர்ப்புக்குட்பட்டவரானால் | ,, | ,, | ,, | ,, | குற்றப்பணத்துடன் அல்லது குற்றப் பணமின்றி எழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பத்து ஆண்டுகட்கு குறைந்த மறியற்றண்டனைத் தீர்ப்புக்குட்பட்டவரானால், அல்லது சட்டமுறையான கட்டுக்காவலுக்கப் பாரப் படுத்தப்பட்டவரானால். | பிடியாணையின்றிக் கைதுசெய்தலா காது | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 218 | பகிரங்கசேவையாளர் ஒருவர் கவனவீனமாக விட்டமையினால் அடைத்து வைத்தலிலிருந்து தப்பிச் செல்லல். | " | அழைப்புக் கட்டளை | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | " |
| 219 | ஆளொருவர்தாம் சட்டமுறையாகக் கைது செய்யப்படுதலை எதிர்த்தல் அல்லது தடுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 219அ | குடியியல் மன்றாணை யின் கீழ்ச் சட்டமுறை யாகக் கைது செய்யப் படுதலை எதிர்த்தல் அல்லது தடைசெய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | அழைப்புக்கட்டளை | " | " | ஆறு மாதங்களு க்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 220 | வேறோராள் சட்ட முறையாகக் கைது செய்யப்படுதலை எதிர்த்தல் அல்லது தடைசெய்தல் அல்லது சட்டமுறை யான கட்டுக்காவலி லிருந்து அவரை மீட்டல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| | பத்துஆண்டுகளுக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரெனில் | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| | மரணதண்டனை விதிக் கப்படக்கூடியதவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டவரெனில் | ” | ” | ” | ” | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| | குற்றஞ்சாட்டப்பட்டஆள் பத்து ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற் பட மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டவரெனில் | ” | ” | ” | ” | ” | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ... | மரணதண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டவரானால். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | பத்தாண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம. |
| 220அ | வேறுவகையாக ஏற்பாடு செய்யப்படாத விடயங்களில் எதிர்த்தல், தடை செய்தல். | " | " | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | " | ஆறுமாதங்கட்க இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |
| 221 | நன்னடத்தை உடையவராய் இருப்பதற்கெனப் பிணைப்பொறுப்புக் கொடுக்கத்தவறியதற்காகக் கட்டுக்காவலில் வைக்கப் படும்போது தப்பிச செல்லல் அல்லது தப்பிச் செல்ல எத்தனித்தல். | " | " | " | " | ஓராண்டிற்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |
| 222 | தண்டனைக்குறைப்பு நிபந்தனையை மீறுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலதன்று | " | முதற்றண்டனைத் தீர்ப்பில் விதிக்கப்பட்டதண்டனை அல்லது அத் தண்டனையின் எப்பாகத்தையேனும் அவர் அனுபவித்திருந்தால், அத் தண்டனையின் மீதி | முதற்தவறு எந்நீதிமன்றத்தால் விளங்கற்பாலதோ அந் நீதிமன்றம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 223 | நீதிமுறை நடவடிக்கை யின் எக்கட்டத்திலே னும் அமர்ந்துள்ள பகிரங்கசேவையாளரை வேண்டுமென்று நிந்தனைசெய்தல் அல்லது இடையீடு செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | அத்தியாயம் XXXII ஏற் பாடுகளுக்கு அமைவாக தவறு புரியப்பட்ட நீதிமன்றம். |
| 224 | யூரரொருவரை அல்லது மதிப்பீட்டாளரை ஆள் மாறாட்டஞ் செய்தல். | ” | ” | ” | ” | இரண்டு ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும்.. | நீதிவான் நீதிமன்றம். |

## அத்தியாயம் XII - நாணயங்கள், அரசாங்க முத்திரைகள் தொடர்பிலான தவறுகள்.

| பிரிவு | தவறு | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
|---|---|---|---|---|---|---|---|
| 226 | நாணயத்தினைப் போலி புனைதல் அல்லது போலி புனைவதற்கான செய்முறையின் எப்பாக த்தையேனும் புரிதல். | பிடியணையின்றிக் கைது செய்யப் படலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | ” | ஏழு ஆண்டு கட்கு இருவகையில் ஒரு வகை மறியலும் குற்றப்பணமும | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 227 | புழக்கத்திலுள்ள நாணயத்தினைப் போலி புனைதல் அல்லது போலி புனைவதற்கான செய்முறையின் எப் பாகத்தையேனும் புரிதல். | பிடியணையின்றிக் கைது செய்யப் படலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 228 | நாணயதைப் போலி புனைதற்கான சாதனத தைத் தயாரித்தல் வாங்குதல் அல்லது விற்றல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ,, |
| 229 | புழக்கத்திலுள்ள நாணயத்தைப் போலி புனைதற்கான சாதனத்தைத் தயாரித்தல், வாங்குதல் அல்லது விற்றல். | ,, | ,, | ,, | ,, | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ,, |
| 230 | நாணயத்தைப் போலி புனைவதற்கெனப் பயன்படுத்தும் நோக்கத்திற்கென சாதனத்தை அல்லது பொருளை உடை மையில் வைத்திருத்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ,, |
| | புழக்கத்திலுள்ள நாணயமாயின். | ,, | ,, | ,, | ,, | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 231 | இலங்கைக்கு வெளியே நாணயத்தைப் போலி புனைவதற்கு இலங்கையில் உடந்தையளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | இலங்கையினுள்ளே அத்தகையநாணயத்தைப் போலிபுனைவதற்கு உடந்தையளித்தற்கு ஏற்பாடு செய்யப்பட்ட தண்டனை | நீதிவான் நீதிமன்றம். |
| 232 | போலி நாணயத்தை, அது போலியானது என அறிந்துகொண்டு, இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் | ,, | ,, | ,, | ,, | மூன்றுஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |
| 233 | புழக்கத்திலுள்ள போலி நாணயத்தை, அது போலியானதென அறிந்து கொண்டு, இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல். | ,, | ,, | ,, | ,, | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |
| 234 | உடைமையில் வரும் போது போலியானதென அறிந்து கொண்டும், போலி நாணத்தை, உடைமையில் வைத்திருத்தல் அதனை வேறொருவரிடம் ஒப்படைத்தல் முதலியன. | ,, | ,, | ,, | ,, | ஐந்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 235 | உடைமையில் வரும் போது போலியானதென அறிந்து கொண்டும், புழக்கத்திலுள்ள போலி நாணயத்தை உடைமையில் வைத்திருத்தல், அதனை வேறொருவரிடம் ஒப்படைத்தல் முதலியன. | பிடியணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 236 | நாணயத்தைப்போலியானதெனஅறியாது முதலில் உடைமையில் வைத்திருப்பவர் அதனைபோலியானதெனஅறிந்துகொண்டு உண்மையானதெனவேறொருவரிடம் ஒப்படைத்தல். | ” | ” | ” | ” | இரண்டுஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது போலி புனைந்தநாணயத்தின் பத்துமடங்கு பெறுமதியான, குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 237 | போலி நாணயத்தை உடைமையிற் கொண்டபொழுது அது போலியானதென அறிந்த ஆளெவரினாலும் போலி நாணயம் உடைமையில் வைத்திருக்கப்படுதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப் பணமும். | ” |
| 238 | புழக்கத்திலுள்ளநாணத்தை உடைமையிற் கொண்டபொழுது அது போலியானதென அறிந்த ஆளொருவரினால் புழக்கத்திலுள்ள நாணயம் உடைமையில் வைத்திருக்கப்படுதல். | ” | ” | ” | ” | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 239 | மோசடியாக ஏதேனும் நாணயத்தின் நிறையைக் குறைத்தல் அல்லது சேர்க்கையை மாற்றுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டு கட்கு இருவகையி லொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 240 | புழக்கத்திலுள்ள ஏதேனும் நாணத்தின் நிறையை மோசடியாகக் குறைத்தல் அல்லது சேர்க்கையை மாற்றுதல். | ” | ” | ” | ” | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 241 | பிறிதொரு விவரணத் தைக் கொண்ட நாணமொன்றாக அது தோன்ற வேண்டும் என்ற உளக்கருத்துடன் ஏதேனும் நாணயத்தின் தோற்றத்தை மாற்றுதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 242 | பிறிதொரு விவரணத்தை கொண்டநாணயமொன்றாக அது தோன்ற வேண்டும் என்ற உளக்கருத்துடன் புழக்கத்திலுள்ள நாணய த்தின் தோற்றத்தினை மாற்றுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 243 | அது மாற்றமடைந்து ள்ளது என்ற அறிவுடன் உடைமையில் வைத்தி ருக்கப்பட்ட நாணயத்தை வேறொருவரிடம் ஒப்படைத்தல். | ” | ” | ” | ” | ஐந்து ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 244 | அது மாற்றமடைந்து ள்ளது என்ற அறிவுடன் புழக்கத்திலுள்ள நாண யத்தை ஒப்படைத்தல். | ” | ” | ” | ” | பத்து ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 245 | உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்ற மடைந்ததென அறிந்த ஆளொருவரினால் மாற்ற மடைந்த நாணயம் உடைமையில் வைததிருக்கப்படுதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 246 | உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்ற மடைந்ததென அறிந்த ஆளொருவரினால் புழக் கத்திலுள்ள நாயணம் உடைமையில் வைத்தி ருக்கப்படுதல். | ” | ” | ” | ” | ஐந்து ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 247 | உடைமையிற் கொண்ட பொழுது அது மாற்ற மடைந்துள்ளதென்பதனை அறியாது நாணயத்தை உண்மையானதென வேறொருவரிடம் ஒப்படைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நாணயத்தின் பத்துமடங்கு பெறுமதியான குற்றப்பணம். | நீதிவான் நீதிமன்றம். |
| 248 | அரசாங்க முத்திரை யொன்றைப் போலிபுனைதல். | ” | ” | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | ” | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 249 | அரசாங்க முத்திரையொன்றைப் போலி புனையும் நோக்கத்துக்கான சாதனத்தை அல்லது பொருளை உடமையில் வைத்திருத்தல். | ” | ” | ” | ” | ” | ” |
| 250 | அரசாங்க முத்திரை யொன்றைப் போலி புனையும் நோக்கத்துக்கானசாதனத்தைத் தயாரித்தல், வாங்குதல் அல்லது விற்றல். | ” | ” | ” | ” | ” | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 251 | போலியான அரசாங்க முத்திரையினை விற்றல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 252 | போலியான அரசாங்க முத்திரையினை உடைமையில் வைத்திருத்தல். | ” | ” | ” | ” | ” | ” |
| 253 | போலியானதென அறியப்பட்ட அரசாங்க முத்திரை ஒன்றை உண்மையானதெனப் பயன்படுத்தல். | ” | ” | ” | ” | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 254 | அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தும் உளக்கருத்துடன் அரசாங்க முத்திரை ஒன்று தாங்கியுள்ளபொருளிலிருந்து ஏதேனும் எழுத்தைச்சிதைத்தல் அல்லது ஆவணமொன்றுக்குப்பயன்படுத்தப்பட்டுள்ள முத்திரையை அதிலிருந்து அகற்றுதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 255 | முன்னர் பயன்படுத்தப் பட்டதென அறியப்பட்ட அரசாங்க முத்திரையைப் பயன் படுத்தல். | ” | ” | ” | ” | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 256 | முத்திரை பயன்படுத்தப் பட்டதெனக் குறிப்பிடும் குறியை அழித்தல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டு கட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் XIII - நிறுவைகள், அளவைகள் தொடர்பான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 257 | நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனத்தை அது பொய்யானதென அறிந்து கொண்டு பயன்படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஓராண்டுக்கு இரு வகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 258 | பொய் நிறையை அல்லது அளவையினைப் பயன் படுத்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |
| 259 | பொய்யான நிறுக்கும் அல்லது பொய்யான அளக்கும் சாதனத்தை அல்லது பொய்யான நிறையை அல்லது பொய்யான நீட்டல அல்லது முகத்தல அளவையினைப் பயன் படுத்துவதற்கென வைத்திருத்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 260 | பொய்யான நிறுக்கும் அல்லது அளக்கும் சாதனத்தை அல்லது நிறையை அல்லது நீட்டல் அல்லது முகத்தல் அளவையினை மோசடியான பயன்படுத்து கைக்கெனச் செய்தல் அல்லது விற்றல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை. | பிணையில்செல்ல அனுமதித்தற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |

## அத்தியாயம் XIV - பொதுமக்கள் உடனலம், பாதுகாப்பு, வசதி, நல்லொழுக்கம், நன்னடத்தை என்பனவற்றைப் பாதிக்கும் தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 262 | உயிர்வாழ்வுக்கு ஆபத்தான ஏதேனும் நோய்த் தொற்றுப்பரவு தலை ஏற்படுத்தக் கூடியதான செயலைக் கவனவீனமாகச் செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | " | " | " | ஆறு மாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 263 | உயிர்வாழ்வுக்கு ஆபத்தான ஏதேனும் நோய்த்தொற்றுப்பரவுதலை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் செயலை வன்மமாகச் செய்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 264 | நோய் தடுக்கும் விதியை அறிந்து கொண்டு அதற்குக் கீழ்ப்படியாது விடல். | " | " | " | " | ஆறுமாதங்களுக்கு இருவகையிலொரு வகைமறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 265 | விற்கக் கருதப்பட்டுள்ள உணவை அல்லது பானத்தைக் கேடு உண்டாக்கும் உணவாகக் கலந்து கெடுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை. | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | ஆறுமாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 266 | கேடு உண்டாக்கும் என அறிந்துகொண்டு ஏதேனும் உணவை அல்லது பானத்தை உணவாகவும் பானமாகவும் விற்றல். | " | " | " | " | " | " |
| 267 | விற்பனைக்குள்ள ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அதன் ஆற்றல் குறையும் வண்ணம் அல்லது அதன்செயற்பாட்டை மாற்றும் அல்லது கெடுதியானதாக்கும் வண்ணம் கலந்திளக்கமாக்குதல். | " | " | " | " | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 268 | ஏதேனும் மருந்துப்பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அது கலந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொண்டு, விற்பனைக்கு வெளிக் காட்டி வைத்தல் அல்லது மருந்துச்சாலை யிலிருந்து வழங்குதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | அழைப்புக்கட்டளை. | பிணையில்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறு மாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 269 | ஏதேனும் மருந்துப்பொருளை அல்லது மருந்துத்தயாரிப்பை வேறொரு மருந்துப்பொருளாக அல்லது தயாரிப்பாக விற்றல் அல்லது மருந்துச்சாலை யிலிருந்து வழங்குதல். | " | " | " | " | " | " |
| 270 | பொது நீரூற்றின் அல்லது நீர்த்தேக்கத்தின் நீரை அசுத்தப்படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | " | " | " | மூன்றுமாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 271 | வளிமண்டலத்தை உடன லத்துக்குக் கேடு உண்டாக்குவதாக்கல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | " | " | " | நூறு ரூபாக் குற்றப்பணம். | " |
| 272 | உயிர் வாழ்வுக்கு ஆபத் தான வகையில் பகிரங்க வழி ஒன்றில் அசட்டுத் துணிவாக அல்லது கவனயீனமாக வாகனம் ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல் முதலியன. | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | " | " | " | ஆறு மாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 273 | மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் கலம் ஒன்றை அசட்டுத் துணிவாக அல்லது கவனவீனமாகச் செலுத்துதல் முதலியன. | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறுமாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 274 | பொய்யான வெளிச் சத்தை, குறியை அல்லது மிதப்பினை வெளிக்காட்டி வைத்தல். | " | பிடியாணை | " | " | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல், அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |
| 275 | உயிர் வாழ்வுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய வகையில் அளவுக்கு மிஞ்சிப் பாரமேற்றப் பட்டுள்ள அல்லது பாதுகாப்பற்ற கலத்தில் நீர் மீது வாடகைக்கு ஆளை ஏற்றிச் செல்லல். | " | அழைப்புக்கட்டளை | " | " | ஆறுமாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 276 | பகிரங்க வழி எதிலும் அல்லது கலத்தின் பாதையில் ஆபத்து அல்லது தடை அல்லது ஊறு ஏற்படுத்துதல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம் | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ்செய்யக் கூடியதன்று. | நூறு ரூபாக் குற்றப்பணம். | நீதிவான் நீதிமன்றம். |
| 277 | மனித உயிர் முதலிய வற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியதான வகையில் ஏதேனும் நச்சுப்பதார்த்தத்தைக் கையாளுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | ” | ” | ” | ஆறுமாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 278 | மனித உயிர் முதலிய வற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியதான வகையில் ஏதேனும் தீயை அல்லது எளிதில் தீப்பற்றக்கூடியபொருளைக் கையாளுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | ” | ” | ” | ” | ” |
| 279 | மனிதஉயிர்முதலியவற்று க்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியதான வகையில் ஏதேனும் வெடிப் பொரு ளைக் கையாளுதல். | ” | ” | ” | ” | ” | |
| 280 | மனித உயிர் முதலிய வற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தத் கூடியதான வகையில் இயந்திரத்தைக் கையாளுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | ” | ” | ” | ” | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 281 | ஏதேனும் கட்டடத்தை இடித்து வீழ்த்துதலில் அல்லது பழுதுபார்த்த லில் அல்லது உரிமை யுள்ளவரான ஆள், அவ்வாறு வீழ்த்து வதினால் அல்லது பழுது பார்த்தலினால் மனித உயிரு க்குண்டாகக் கூடிய ஆபத்திலிருந்து காப்பதற்குத் தவறுதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஆறு மாதங்களு க்கு இருவகையி லொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 282 | தமது உடைமை யிலுள்ள ஏதேனும் விலங்கு தொடர்பில், அத்தகைய விலங்கினால் மனித உயிருக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து அல்லது கடும் காயத்திலிருந்து காப்பதற்கு ஒழுங்கு செய்யாது விடுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | " | " | " | " | நீதிவான் நீதிமன்றம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 283 | பொதுத் தொல்லை புரிதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது மூன்று மாதங்கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 284 | நிறுத்துவதற்கான உத்தரவுக்குப் பின்னர் தொல்லை தொடர்ந்திருந்துவரல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | ” | ” | ” | ஆறு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 285 | ஆபாசப் புத்தகங்கள் முதலியன விற்றல் முதலியன. | ” | பிடியாணை | ” | ” | மூன்று மாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல், அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ” |
| 286 | விற்பனைக்காக அல்லது பொதுமக்கள் காட்சிக்காக ஆபாசப் புத்தகங்கள் முதலியவற்றை உடைமையில் வைத்திருத்தல். | ” | ” | ” | ” | ” | |
| 287 | ஆபாசப் பாடல்கள் | ” | ” | ” | ” | ” | ” |
| 289 | நியதிச்சட்டமுறையான கடமையை வேண்டுமென்று புரியாதுவிடல் | பிடியாணையின்றிக் கைதுசெய்தலா காது. | அழைப்புக்கட்டளை | ” | ” | குற்றப்பணம் | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படலாது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் XV - சமயம் தொடர்பான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 290 | ஏதேனும் வகுப்பினரின் சமயத்தை நிந்திக்கும் உளக்கருத்துடன் வழிபாட்டிடம் ஒன்றை அழித்தல் அல்லது சேதப்படுத்தல் அல்லது தூய்மைகொடுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 290அ | ஏதேனும் வகுப்பினரின் சமயத்தை நிந்திக்கும் உளக்கருத்துடன் வழி பாட்டிடம் அல்லது பரிசுத்தமானதென அல்லது வணக்கத்துக்குரியதெனப் போற்றப்படும் பொருள் எதிலும் அல்லது அதன் மீது அல்லது அதன் அயலில் ஏதேனும் செயலைச் செய்தல். | ” | ” | ” | ” | ஓராண்டிற்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 291 | சமய வழிபாடொன்றில் ஈடுபட்டிருக்கும் கூட்டம் ஒன்றைக் குழப்புதல். | ” | ” | ” | ” | ” | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 291அ | சமய உணர்வுகளைப் புண்படுத்த வேண்டும் என்ற உளக்கருத்துடன் கேட்கக் கூடியதாகச் சொல் எதனையும் சொல்லுதல் அல்லது ஓசையை எழுப்புதல் அல்லது காணக்கூடிய தாக ஏதேனும் அசை வைச்செய்தல் அல்லது ஏதேனும் பொருளை வைத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்தலா காது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியது | ஓராண்டிற்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 291ஆ | ஏதேனும் வகுப்பினர் சார்ந்த சமயத்தை அல்லது அவர்களது சமய நம்பிக்கைகளை நிந்தை செய்வதன மூலம் அவ்வகுப்பின் சமய உணர்வுகளைப் பாதிக்கக் கருதப்பட்ட திட்டமிட்ட வன்மமான செயல். | ” | ” | ” | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ” |
| 292 | ஆள் எவரினதும் உணர் வுகளைப் புண்படுத்தும் அல்லது சமயத்தை நிந்தை செய்யும் உளக் கருத்துடன் வழிபாட்டிடத் தில் அல்லது கல்லறை யடக்கத் தலத்தில் அத்துமீறுதல் அல்லது மரணக் கிரிகையினைக் குழப்புதல் அல்லது மனித பிரேதத் திற்கு மரியாதைக் குறைவு காண்பித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | ” | ” | ” | ஓராண்டிற்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் XVI - மனித உடலைப் பாதிக்கும் தவறுகள், உயிரைப் பாதிக்கும் தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 296 | கொலை. | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பதினாறு வயதிற்தக்குறைந்த வயதுள்ள ஆட்களின் விடயத்தில் சனாதிபதி விரும்பியவரையில் தடுத்து வைத்தல் கருத்தரித்த பெண்களின் விடயத்தில் ஆயுட்காலத் தண்டனை ஏனைய எல்லா விடயங்களிலும் மரண தண்டனை. | - |
| 297 | கொலைக்குற்றமாகாத குற்றத்துக்கிடமான மனித உயிர்போக்கல் மரணம் விளைத்தசெயல்மரணத்தை விளைக்கும் உளக்கருத்துடன் செய்யப்பட்டால். | | ,, | ,, | ,, | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | - |
| | அச்செயல் மரணம் விளைக்கக்கூடும் என்ற அறிவுடன் ஆனால் மரணம் விளைக்கும் உளக் கருத்து எதுவுமின்றிச் செய்யப்பட்டால். | | ,, | ,, | ,, | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 298 | அசட்டுத் துணிச்சலாக அல்லது கவனவீனமாக மரணம் விளைத்தல் | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை. | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஐந்து ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம. |
| 299 | தற்கொலைக்கு உடந்தையளித்தல். | ” | ” | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | ” | பதினாறு வயதிற்குக்குறைந்த வயதுள்ள ஆட்களின் விடயத்தில் சனாதிபதி விரும்பிய வரையில் தடுத்துவைத்தல் கருத்தரித்த பெண்களின் விடயத்தில் ஆயுட்காலத்தண்டனை ஏனைய எல்லா விடயங்களிலும் மரணதண்டனை. | - |
| 300 | கொலை புரிய எத்தனம். | ” | ” | ” | ” | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | - |
| | அத்தகைய செயலினால் ஆளெவருக்கேனும் காயம் ஏற்பட்டால். | ” | ” | ” | ” | இருபதுஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | - |
| 301 | குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கலைப் புரிய எத்தனித்தல். | ” | ” | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | ” | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும் | நீதிவான் நீதிமன்றம் |
| | அத்தகைய செயலினால் ஆளெவருக்கேனும் காயம் உண்டாகினால். | ” | ” | ” | ” | எழு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும் | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 302 | தற்கொலை புரிய எத்தனித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஓராண்டுக்கு இரு வகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| கருச்சிதைவேற்படுத்தல்; பிறவாத பிள்ளைக்கு ஊறுகள் செய்தல் ; சிசுக்களைக் கைவிடுதல் ; பிள்ளைப் பேற்றை மறைத்தல். | | | | | | | |
| 303 | கருச்சிதைவேற் படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | ” | ” | ” | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லதுஇரண்டும் | ” |
| | அப்பெண் கருவுடையவளாய் இருந்தால். | ” | ” | ” | ” | ஏழு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ” |
| 304 | பெண்ணின் சம்மதமின்றிக் கருச் சிதைவேற்படுத்தல் | ” | ” | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | ” | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலோரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 305 | கருச்சிதைவேற்படுத்தும் உளக்கருத்துடன் செய்யப்பட்ட ஒரு செயலினால் மரணம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | இருபது ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 306 | பிள்ளை உயிருடன் பிறப்பதைத் தவிர்க்கும் உளக்கருத்துடன் அல்லது பிறந்த பின்னர் இறக்கச் செய்யும் உளக்கருத்துடன் செய்யப்படும் செயல். | ” | ” | ” | ” | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 307 | குற்றத்துக்கிடமான மனித உயிர் போக்கலாகக்கூடிய செயல் ஒன்றினால் உயிர்ப்புள்ள பிறக்காத பிள்ளையின் மரணத்தை ஏற்படுத்தல். | ” | ” | ” | ” | பத்து ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 308 | பன்னிரண்டு வயதிற்குட்பட்ட பிள்ளையொன்றை அதன் பெற்றோர் அல்லதுஅதனைக் கவனித்தற்குப் பொறுப்பான ஆள் அதனை முற்றாகக் கைவிடும் உளக்கருத்துடன் விட்டு நீங்குதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | ” | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | ” | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 309 | இறந்தவுடலை இரகசியமாக அப்புறப்படுத்தல் மூலம் பிறப்பினை மறைத்தல். | ” | ” | ” | ” | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| | | | **காயம்.** | | | | |
| 314 | வேண்டுமென்று காயம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதித்தற்பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது. | ஓராண்டிற்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 315 | அபாயகரமான ஆயுதங்களினால் அல்லது வழிகளினால் வேண்டுமென்று காயம் விளைத்தல். | " | பிடியாணை | " | சட்டத்துறைத் தலைமையதிபதி யின் சம்மதத் துடன் இணக் கஞ்செய்யக் கூடியது. | மூன்று ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் இதனோடு கூட சவுக்கடியும். | " |
| 316 | வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். | " | " | " | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும்,குற்றப்பணமும் காயம் விளைக்கப்பட்ட ஆள் பெண்ணாயின் அல்லது பிள்ளையா யின் இதனோடுகூடசவுக் கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 317 | அபாயகரமான ஆயுதங் களினால அல்லது வழி களினால் வேண்டுமென்று கடுங்காயம் விளைத்தல். | பிடியணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும்,குற்றப்பணமும். இதனோடுகூடசவுக்கடியும். | நீதிவான் நீதிமன்றம். |
| 318 | ஆதனத்தை அல்லது பெறு மதியான பிணைப் பொறுப்பை அச்சுறுத்திப் பெறுதற்காக அல்லது சட்ட விரோதமான அல்லது தவறொன்று புரியப்படு வதற்கு வசதியளிக்கக் கூடிய எதனையும் செய்யக் கட்டாயப்படுத்தும் நோக்கத் திற்காக வேண்டுமென்று காயம் விளைத்தல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | " |
| 319 | காயம் முதலியன விளைக்கும் நோக்கத்துடன் உணர்வு கெடுக்கும் மருந்து ஊட்டுதல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 320 | ஆதனத்தை அல்லது பெறு மதியான பிணைப்பொறு ப்பை அச்சுறுத்திப் பெறு வதற்காக அல்லது சட்ட விரோதமான அல்லது தவறொன்று புரியப்படு வதற்கு வசதியளிக்கக் கூடிய எதனையும் செய்யக் கட்டாயப்படுத்தும் நோக்க த்திற்காக வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். | " | " | " | " | இருபது ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் அல்லது சவுக்கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணைத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 321 | குற்ற ஒப்புதலை அல்லது தகவலை அச்சுறுத்திப் பெறுவதற் காக அல்லது ஆதனம் முதலியவற்றை ஒப்படைக்குமாறு கட்டாயப் படுத்துவதற்காகவேண்டு மென்றுகாயம்விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 322 | குற்ற ஒப்புதலை அல்லது தகவலை அச்சுறுத்திப் பெறுவதற்காக அல்லது ஆதனம் முதலியவற்றை மீள ஒப்படைக்கக் கட்டாயப்படுத்துவதற்காக வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். | " | " | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று | " | பத்து அண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 323 | பகிரங்க சேவையாளரை அவரதுகடமையிலிருந்து தடுப்பதற்கெனவேண்டுமென்று காயம் விளைவித்தல். | " | " | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | " | மூன்றுஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லதுகுற்றப்பணம் அல்லதுஇரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 324 | பகிரங்க சேவையாளரை அவரது கடமையிலிருந்து விலக்குவதற்கெனவேண்டு மென்று கடும் காயம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பத்து ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 325 | ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதாது பாரதூரமான திடீர் ஆத்திர மூட்டப்படுதலின் மீது வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியது | ஒருமாதத்துக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |
| 326 | ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதாது பாரதூரமான திடீராத்திர மூட்டப்படுதலின்மீது வேண்டுமென்று கடும் காயம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | ,, | ,, | ,, | நான்கு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது இரண்டாயிரம் ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |
| 327 | மனிதவுயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத் தை ஏற்படுத்தக் கூடிய செயல் எதனையும் அசட் டையாக அல்லது கவன வீனமாகச் செய்தல். | ,, | ,, | ,, | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று மாதங் கட்கு இருவகை யிலொரு வகை மறியல் அல்லது நூறுரூபாக்குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 328 | மனிதவுயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றினை அசட்டையாக அல்லது கவனவீனமாகச் செய்தலினால் காயம் விளைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது. | ஆறு மாதங்களுக்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 329 | மனிதவுயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக் கூடிய செயல் ஒன்றினை அசட்டையாக அல்லது கவனவீனமாகச் செய்தலினால் கடும் காயம் விளைத்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |

## முறைகேடாகத் தடுத்துவைத்தலும் முறைகேடாக அடைத்துவைத்தலும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 332 | எவரேனும் ஆளை முறைகேடாகத் தடுத்து வைத்தல் | " | " | " | " | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 333 | எவரேனும் ஆளை முறை கேடாகத் அடைத்து வைத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலது. | இணக்கஞ்செய்ய க்கூடியதன்று. | ஓராண்டிற்கு இருவகை யிலொருவகைமறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| 334 | மூன்று நாட்களுக்கு அல்லது அதற்கு மேற்பட முறை கேடாக அடைத்துவைத்தல். | ,, | ,, | ,, | ,, | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லதுகுற்றப் பணம்அல்லதுஇரண்டும். | ,, |
| 335 | பத்து அல்லது அதற்கு மேற் பட்ட நாட்களுக்கு முறை கேடாக அடைத்துவைத்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும்குற்றப்பணமும். | ,, |
| 336 | ஆள் எவரையும் விடுதலை செய்வதற்காக எழுத்தாணை யொன்று வழங்கப்பட்டுள்ள தென்பதைஅறிந்துகொண்டும் அவரை முறைகேடாக அடைத்து வைத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | ,, | ,, | ,, | வேறுஏதேனும் பிரிவின் கீழான மறியலுடன் சேர்த்து இரண்டு ஆண்டுகட்கு இருவகை யிலொருவகை மறியல். | ,, |
| 337 | இரகசியமாக முறைகேடாக அடைத்து வைத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | ,, | ,, | ,, | ,, | ,, |
| 338 | ஆதனத்தை அச்சுறுத்திப்பெ றும் அல்லது சட்டவிரோதமான செயலைக் கட்டாயப் படுத்தும் நோக்கத்திற்காக முறைகேடாக அடைத்து வைத்தல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலெரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |
| 339 | குற்ற ஒப்புதலை அல்லது தகவலை அச்சுறுத்திப்பெறும் அல்லது ஆதனத்தை மீள ஒப்படைக்கக்கட்டாயப்படுத்தும் நோக்கத்திற்காக முறைகேடாக அடைத்து வைத்தல். | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| | **குற்றமுறை வலோற்காரமும் தாக்குதலும்.** | | | | | | |
| 343 | பாரதூரமான தாக்குதல் அல்லது ஆத்திரமூட்டப் பட்டதன் மீதன்றி குற்ற முறையாக விலோற்காரத் தைப் பிரயோகித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடியது | மூன்று மாதங்களுக்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம்அல்லதுஇரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 344 | பகிரங்க சேவையாளரொரு வரை அவரது கடமையை நிறைவேற்றுவதிலிருந்து விலக்குவதற்கெனத் தாக்குதல் அல்லது குற்ற முறையான வலோற்காரத் தைப் பிரயோகித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | ” | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | இரண்டு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல், அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ” |
| 345 | ஒரு பெண்ணை மானபங்கம் செய்யும் உளக்கருத்துடன் தாக்குதல் அல்லது அவள் மீது குற்றமுறையான வலோற்காரம் புரிதல். | ” | ” | ” | ” | ” அத்துடன் சவுக்கடியும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 346 | பாரதூரமான திரைாத்திர மூட்டப்பட்டதன் மீதன்றி ஆளொருவரை அவமரியாதை செய்யும் உளக் கருத்துடன் தாக்குதல் அல்லது அவர் மீது குற்றமுறையான வலோற்காரம் புரிதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை. | பிணையில்செல்ல அனுமதித்தற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடியது | இரண்டு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 347 | ஆளொருவர் அணிந்திருக்கின்ற அல்லது எடுத்துச் செல்கின்ற ஆதனத்தைத் திருடும் எத்தனத்தில் தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரம் புரிதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமமதித்தாற்பால தன்று | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | இரண்டு ஆண்டு கட்கு இரு வகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |
| 348 | முறைகேடாக ஆளை அடைத்து வைக்க எத்தனிப்பதில் தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரம் புரிதல். | ,, | ,, | பிணையிற்செல்ல அனுமதித்தாற்பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது | ஓராண்டிற்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |
| 349 | பாரதூரமான திரைாத்திர மூட்டப்படுதலின்மீது தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரம் புரிதல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | ,, | ,, | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| | **ஆட்கவர்தல், ஆட்கடத்தல், அடிமைத் தொழில், கட்டாய ஊழியம்.** | | | | | | |
| 354 | ஆட்கவர்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 355 | கொலை புரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | ,, | ,, | ,, | ,, | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும். | ,, |
| 356 | ஆளொருவரை இரகசியமாகவும் முறைகேடாகவும் அடைத்து வைக்கும் உளக்கருத்துடன் ஆட் கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | ,, | ,, | ,, | ,, | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |
| 357 | ஒரு பெண்ணைத் திருமணம் ஒன்றிற்குக் கட்டாயப்படுத்துவதற்கு அல்லது தூய்மை கெடுத்தல் முதலியவற்றிற்குக் கவர்ந்து செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல். | ,, | ,, | ,, | ,, | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 358 | கடுங்காயம், அடிமைத் தொழில் முதலியவற்றிற்கு உட்படுத்துவதற்கென ஆட் கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | நீதிவான் நீதிமன்றம். |
| 359 | கவர்ந்து செல்லப்பட்ட ஆளை முறைகேடாக மறைத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல். | " | " | " | " | ஆட்கவர்வதற்குரிய அல்லது ஆட் கடத்துவதற்குரிய அதே தண்டனை | " |
| 360 | பிள்ளையொன்றை அத்தகைய பிள்ளையின் உடம்பிலிருந்து ஆதனத்தைக் களவாடும் உளக்கருத்துடன், கவர்ந்து செல்லுதல் அல்லது கடத்திச் செல்லுதல் | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | " |
| 360அ | இருபத்தொருவயதுக்குட்பட்ட எவரேனும் ஒரு பெண்பிள்ளையை அல்லது பெண்ணை அவளின் சம்மதத்துடனாயினுஞ்சரி, சம்மதமில்லாமலாயினுஞ்சரி, ஆளெவருடனும் கள்ளமான பாலுறவு கொள்ளவைக்கும் நோக்கத்துடன் இலங்கையை விட்டுப் புறப்படச் செய்தல் அல்லது புறப்படச் செய்ய எத்தனிக்கச் செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியலும் ஆணாக இருந்தால் அத்த கைய மறியல் எதனுடனும் மேலதி கமாக சவுக்கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 361 | ஆள் எவரையும் அடிமையாக விலைக்குப் பெறுதல் அல்லது ஒழிபு செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 362 | வழக்கமான அடிமை வியாபாரம் | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | " | பதினைந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 362அ | ஆணொருவர் சட்டமுறை யாகத் திருமணம் செய்துள்ளாரென்ற நம்பிக்கையை வஞ்சனையால் தூண்டு வதன் மூலம் உண்டாகும் மனை வாழ்க்கை. | பிடியாணையின்றிக் கைது செய்யத லாகாது. | " | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது. | " | பத்து ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 362ஆ | இருதார மணம் | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது | " | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | " | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணம் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 362இ | மது முன்னைய திருமணம் பற்றி மறைத்துப் புரியும் இருதாரமணம். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | பத்து ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 362ஈ | மோசடியான உளக் கருத்துடன் திருமணச் சடங்கு மேற்கொள்ளப் படல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | " |

## கற்பழிப்பு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 364 | கற்பழிப்பு. | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | " | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | " | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், குற்றப் பணமும் அத்துடன் சவுக்கடியும். | " |
| 364அ | பன்னிரண்ட வயதினை யுடைய அல்லது அதற்கு மேற்படவும் பதினான்கு வயதிற்குட்படவும் உள்ள பெண் பிள்ளையின் தூய்மையைக் கொடுத்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும், அத்துடன் சவுக்கடியும். | " |
| 365 | இயற்கைக்கு விரோதமான தவறு. | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப் பணமும், அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 365அ | ஆண்பாலர்க்கிடையில் கீழ்த்தரமான இழிவான செயல்கள். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டுகட்கு நீடிக்கக்கூடிய இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | நீதிவான் நீதிமன்றம். |

## அத்தியாயம் XVII ஆதனத்துக்கெதிரான தவறுகள் - திருட்டு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 367 | திருட்டு | " | " | " | " | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 368 | கால்நடையை அல்லது நிலத்து விளை பொருளைத் திருடுதல். | " | " | " | " | திருட்டுக்கான தண்டனையுடன் சேர்ந்து சவுக்கடி | " |
| 369 | வாழ்மனை முதலியவற்றில் திருடுதல். | " | " | " | " | எழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 370 | எழுதுவினைஞர் அல்லது சேவையாளர் எசமானின் அல்லது தொழில் தருநரின் உடைமையி லுள்ள ஆதனத்தைத் திருடுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 371 | திருட்டினைப்புரியும் பொருட்டு, அல்லது அத்திருட்டினைப்புரிந்து விட்டுத் தப்பிச் செல்லும் பொருட்டு, அல்லது அத்திருட்டினால் பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தைத் தம்முடன் வைத்திருக்கும் பொருட்டு மரணம் காயம் அல்லது தடை ஏற்படுத்த அல்லது மரணம் விளையும் அல்லது காயம் ஏற்படும் அல்லது தடை உண்டாகும் என்ற பயத்தினை ஏற்படுத்த, ஏற்பாடு செய்துவிட்டுப் பின்னர் திருடுதல். | " | " | " | " | பத்து ஆண்டு கட்குக் கடூழிய மறியலும் குற்றப் பணமும் அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |

## அச்சுறுத்திப் பெறுதல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 373 | அச்சுறுத்திப் பெறுதல் | " | " | " | " | மூன்று ஆண்டு கட்கு இரு வகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 374 | அச்சுறுத்திப்பெறுவதற்காக ஆள் ஒருவரைக் காயம் ஏற்படும் என்ற பயத்திற் குட்படுத்தல் அல்லது உட்படுத்த எத்தனித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 375 | ஆள் ஒருவரை மரணம் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்திற்குட்படுத்தி அச்சுறுத்திப் பெறுதல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 376 | அச்சுறுத்திப்பெறுவதற்காக ஆளொருவரை மரணம் அல்லது கடுங்காயம் ஏற்படும் என்ற பயத்திற்குட் படுத்தல் அல்லது பயத் திற்குட்படுத்தஎத்தனித்தல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 377 | மரணதண்டனையினால் அல்லது பத்தாண்டு மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்போவதாகப் பயமுறுத்தி அச்சுறுத்திப் பெறுதல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ... | அச்சுறுத்தப்பட்ட தவறு இயற்கைக்கு விரோதமானதாயின். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும் அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | நீதிவான் நீதிமன்றம். |
| 378 | அச்சுறுத்திப்பெறுவதற்கென மரணதண்டனை அல்லது பத்து ஆண்டுகள் மறியல் விதித்துத்தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றைப் புரிந்துள்ளதாகச் சாட்டி ஆளொருவரைப் பயத்திற்குட் படுத்தல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் அத்துடன் சேர்த்துச் சவுக்கடியும். | " |
| | அத்தவறு இயற்கைக்கு விரோதமானதாயின் | " | " | " | " | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும், அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |

## கொள்ளை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 380 | கொள்ளை | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும், அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |
| | அக்கொள்ளை சூரியன் மறைந்ததற்கும் சூரியன் உதிப்பதற்கும் இடையில் நெடுஞ்சாலையொன்றில் புரியப்பட்டதாயின். | " | " | " | " | பதினான்கு ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும், அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 381 | கொள்ளைபுரிய எத்தனித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும் அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | நீதிவான் நீதிமன்றம். |
| 382 | கொள்ளைபுரிவதில் அல்லது கொள்ளைபுரிய எத்தனித்தலில் எவரே னுமாள் வேண்டு மென்று காயம் விளைத்தால் அவ்வாளும், அத்தகைய கொள்ளை புரிவதில் அல்லது கொள்ளைபுரிய எத்தனித்தலில் கூட்டாகச் சம்பந்தப்பட்ட வேறு ஆளும் | ” | ” | ” | ” | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும், குற்றப்பணமும், அத்துடன் சேர்த்து சவுக்கடியும். | ” |
| 383 | மரணம் அல்லது கடுங்காயம் விளைக்கும் எத்தனத்துடனான கொள்ளை | ” | ” | ” | ” | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும் சவுக்கடியும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 384 | மரணம் விளைக்கக்கூடிய ஆயுதந்தாங்கியபடி கொள்ளையுரிய எத்தனித்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை. | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இருபது ஆண்டுகட்கு கடூழிய மறியலும் சவுக்கடியும். | நீதிவான் நீதிமன்றம. |
| 385 | திருட்டினை வழக்கமாகப் புரிவதற்கெனச் சேர்ந்துள்ள அலைந்து திரியும் ஆட்கள் கூட்டம் எதனையும் சேர்ந்திருத்தல். | „ | „ | „ | „ | ஏழு ஆண்டுகட்கு கடூழிய மறியலும் குற்றப்பணமும். | „ |

## குற்றமுறையான ஆதனக் கையாடல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 386 | அசைவுள்ள ஆதனத்தை நேர்மையீனமாகக் கையாடுதல் அல்லது சொந்தப் பயனுக்கு மாற்றுதல். | „ | „ | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது | இரண்டு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | „ |
| 387 | ஆளொருவர் இறக்கும் நேரத்தில் அவரின் உடைமையில் அவ்வாதனம் இருந்ததெனவும் சட்டமுறையாக அவ்வுடைமைக்கு உரித்துடைய ஆளெவரதும் உடைமையில் அதன்பின்னர் அது இருக்கவில்லையெனவும் அறிந்துகொண்டு அவ்வாதனத்தை நேர்மையீனமாகக் கையாடுதல். | „ | „ | „ | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | „ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| ... | அத்தவறாளர் அத்தகைய ஆள் இறக்கும் நேரத்தில் எழுதுவினைஞர் ஒருவ ராக அல்லது அவரால் வேலைக்க மர்த்தப்பட்ட ஒருவராக இருந்தால். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 389 | குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். | " | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | " | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லதுஇரண்டும் | " |
| 390 | பொருள்களை ஏற்றிஇறக்கு பவர் கப்பற்றுறை மேடை உரிமையாளர் முதலியோ ரால் புரியப்படும் குற்ற முறையான நம்பிக்கைத் துரோகம். | " | " | " | " | ஏழு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 391 | எழுதுவினைஞர் அல்லது சேவையாளர் ஒருவரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத்துரோகம். | " | " | " | " | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 392 | பகிரங்க சேவையாளரால் அல்லது வங்கியாளரால் வணிகரால், அல்லது முகவர் முதலியோரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 392அ | பணம் அல்லது பணத்தின் இருப்புத் தொடர்பில் பகிரங்க சேவையாளரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். | „ | „ | „ | „ | „ | „ |
| 392ஆ | அஞ்சற் பொருள்கள் தொடர்பில் முகவரால் புரியப்படும் குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம். | „ | „ | „ | „ | „ | „ |

## களவாடப்பட்ட ஆதனத்தைப் பெறுதல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 394 | களவாடப்பட்ட ஆதனத்தை அது களவாடப்பட்ட ஆதனம் என அறிந்து கொண்டு நேர்மையீனமாகப் பெறுதல். | „ | „ | „ | „ | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | „ |
| 395 | களவாடப்பட்ட ஆதனங்களில் வழமையாக வியாபாரஞ் செய்தல். | „ | „ | „ | „ | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | „ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்குவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 396 | களவாடப்பட்ட ஆதனத்தை, அது களவாடப்பட்டதென அறிந்து கொண்டு, ஒளித்து வைப்பதில் அல்லது கையுதிர்ப்பதில் உதவிபுரிதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 397 | களவாடப்பட்ட கால் நடையை அல்லது நிலத்தின் விளைபொருளைப் பெறுதல். | ,, | ,, | ,, | ,, | வேறு தண்டனைகளுடன் மேலதிகமாகச் சவுக்கடி | ,, |

## ஏமாற்றுதல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 400 | ஏமாற்றுதல் | ,, | ,, | ,, | ,, | ஓராண்டிற்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |
| 401 | சட்டத்தின்மூலமோ சட்ட முறையான ஒப்பந்தமூலமோ எவ்வாளின் அக்கறையைத் தவறாளர் பாதுகாக்கக் கட்டுப்பட்டுள்ளாரோ அவ்வாளை ஏமாற்றுதல். | ,, | ,, | ,, | ,, | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 402 | ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும் | நீதிவான் நீதிமன்றம் |
| 403 | ஆளொருவரை ஏமாற்றி, ஏதேனும் ஆதனத்தை ஒப்படைக்குமாறு அல்லது பெறுமதியான பிணைப்பொறுப்பு ஒன்றினை ஆக்குமாறு, மாற்றுமாறு அல்லது அழிக்குமாறு நேர்மையீனமாகத் தூண்டுதல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | " |

## மோசடியான உறுதிகளும் ஆதன உரித்துமாற்றல்களும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 404 | கடன்தருநர்க்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுதலைத் தவிர்த்தற்காக ஆதனம் முதலியவற்றை மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்துவைத்தல் | " | " | " | " | இரண்டு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 405 | தவறாளருக்கு வருமதியான கடனை அல்லது கோரிக்கையை அவரின் கடன்தருநருக் குக் கிடைக் காதிருக்கும் வண்ணம் மோசடியாகத் தடுத்தல். | " | " | " | " | " | " |
| 406 | பிரதிபயன் பற்றிப் பொய்யான கூற்றைக் கொண்டுள்ள அறுதியுறுதியை மோசடியாக எழுதி நிறைவேற்றுதல். | " | " | " | " | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 407 | தமக்கோ அல்லது வேறொருவருக்கோ சொந்தமான ஆதனத்தை மோசடியாக அகற்றுதல் அல்லது ஒழித்துவைத்தல் அல்லது அவ்வாறு செய்வதில் உதவுதல், அல்லது அவருக்குரித்துடைய ஏதேனும் கோரிக்கையினை அல்லது உரிமைக் கோரிக்கையினை நேர்மையீனமாக விட்டுவிடுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | இரண்டு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | நீதிவான் நீதிமன்றம். |

## சொத்தழிப்பும் அழிபாடுகளைச் சட்டவிரோதமாக அகற்றிச் செல்லுதலும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 409 | சொத்தழிப்பு. | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது | அழைப்புக்கட்டளை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடியது | மூன்று மாதங்களுக்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லதுஇரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 410 | சொத்தழிப்பை ஏற்படுத்துதலும் அதனால் ஐம்பது ரூபாவிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட சேதம் விளைத்தலும். | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடியது | இரண்டு ஆண்டு கட்கு இருவகை யிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| 411 | பத்து ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள ஏதேனும் விலங்கைக் கொல்லல், நஞ்சூட்டல், உறுப்புக் குறைத்தல், பயனற்றதாக்கல் மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்துதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | ” | ” | ” | ” | ” |
| 412 | எப்பெறுமதியினையுமுடைய ஏதேனும் யாணை,ஒட்டகம், குதிரை, முதலியனவற்றை அல்லது ஐம்பது ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுள்ள வேறெதேனும் விலங்கை கொல்லுதல், நஞ்சூட்டல், உறுப்புக் குறைத்தல் அல்லது பயனற்றதாக்கல் மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்துதல | ” | ” | ” | ” | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 413 | கமத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்படும் நீரில் குறைவேற்படுத்தும் எதனையும் செய்வதன் மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்துதல். | ” | ” | | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | ” | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 414 | ஏதேனும் பகிரங்க வீதியை, பாலத்தை, கப்பலோடத்தக்க ஆற்றை, அல்லது கப்பலோடத்தக்க கால்வாயை ஊறுபடுத்திக் கடந்து செல்லமுடியாததாக அல்லது போக்குவரத்துக்கு அல்லது ஆதனங்களை எடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்புக் குறைந்ததாக ஆக்குகின்ற செயலைச் செய்வதன்மூலம் சொத்தழிப்பை ஏற்படுத்துதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற்பாலது | இணக்கஞ் செய்யக்கூடியதன்று | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 415 | பொது வடிகாலுக்குச் சேதத்தோடு கூடின தேக்கம் அல்லது தடைமூலமான சொத்தழிப்பு. | ,, | ,, | ,, | ,, | ,, | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 416 | வெளிச்சவீட்டை அல்லது கடற்குறியை அழித்தல், இடம் பெயர்த்தல் அல்லது பயன் குறைந்த தாக்கல் அல்லது பொய்யான வெளிச்சங்களை வெளிக்காட்டி வைத்தல் மூலமான சொத்தழிப்பு. | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதிததற் பாலது. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| 417 | பகிரங்கசேவையாளரொருவரின் அதிகாரத்தினால் நிறுவப்பட்ட நிலக்குறியை அழித்தல் அல்லது இடம்பெயர்த்தல் முதலியன மூலமான சொத்தழிப்பு. | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | " | " | " | ஓராண்டிற்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 418 | நூறு ரூபா அல்லது அதற்கு மேற்படச் சேதம் விளைக்கும் உளக்கருத்துடன் தீயினால் அல்லது வெடிப் பொருளினால் சொத்தழிப்பை ஏற்படுத்துதல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | " |
| 419 | வீடு முதலியவற்றை அழிக்கும் உளக்கருத்துடன் தீயினாலான அல்லது வெடிப்பொருளினா லான சொத்தழிப்பு. | " | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | " | பதினைந்து ஆண்டு கட்கு இருவகையி லொருவகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 420 | தளமுள்ள அல்லது பத்துத் தொன் அல்லது அதற்கு மேற்பட்ட சுமையுடைய கலம் ஒன்றை அழிக்கும் அல்லது ஆபத்தானதாக்கும் உளக் கருத்துடனான சொத்தழிப்பு. | " | " | " | " | பத்து ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 421 | இறுதியான பிரிவில் விவரிக்கப்பட்ட சொத்தழிப்பு தீயினால் அல்லது ஏதேனும் வெடிப் பொருளினால் புரியப்பட்டிருப்பின், அதற்கான தண்டனை. | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 422 | களவு முதலியன புரியும் உளக்கருத்துடன் கலத்தைக் கரைக்குக் கொண்டுவருதல். | ” | ” | ” | ” | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 423 | கலமொன்றைக் காப்பாற்றுவதைத் தடைசெய்தல். | ” | ” | ” | ” | ஐந்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |
| 424 | கப்பற் சேதப்பொருளை அகற்றுதல் அல்லது இரகசியமாக மறைத்து வைத்தல். | ” | ” | ” | ” | ஓராண்டிற்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 425 | கப்பற் சேதப்பொருளைப் பிறநாட்டுத்துறைமுகத்திற் கொடுத்துச் செல்லல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமமதித்தாற் பாலதன்று | இணக்கஞ் செய்யக் கூடியதன்று | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லதுஇரண்டும். | நீதிவான் நீதிமன்றம் |
| 426 | மரணம் அல்லது காயம் முதலியன விளைக்க முன்னேற்பாடு செய்தபின் புரியப்படும் சொத்தழிப்பு. | " | " | " | " | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | " |

## குற்றமுறையான அத்துமீறல்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 433 | குற்றமுறையான அத்துமீறல் | " | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தாற் பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது | மூன்றுமாதங்களுக்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 434 | வீடத்துமீறல் | " | பிடியாணை | " | " | ஓராண்டிற்கு இருவகையிலொருவகைமறியல் அல்லது ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 435 | மரண தண்டனை மூலம் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல். | " | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக் கூடியதன்று | இருபது ஆண்டுகட்கு கடுழிய மறியலும் குற்றப்பணமும். | " |
| 436 | பத்து ஆண்டுகளுக்கு மறியலினால் தண்டிக்கப் படக்கூடியதவறொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல் | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 437 | பத்து ஆண்டுகளுக்குக் குறைந்த ஒரு காலத்திற் கான மறியலினால் தண்டிக் கப்படக்கூடிய தவறொன்றைப் புரிவதற்காக வீடத்துமீறல் | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| | தவறு திருட்டாயின். | | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | " | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 438 | எவரேனுமாளுக்குக் காயம் விளைத்தல், தாக்குதல் முத லியவற்றிற்கு முன்னேற்பாடு செய்த பின்னர் வீடத்துமீறல். | " | " | " | " | " | " |
| 439 | பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடுபுகுதல் | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 440 | மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றைப் புரிவதற்காகப் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடுபுகுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையில்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | நீதிவான் நீதிமன்றம். |
| | தவறு திருட்டாயின். | ” | ” | ” | ” | இரண்டு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ” |
| 441 | எவரேனும் ஆளுக்குக் காயம் விளைவித்தல், தாக்குதல் முதலியவற்றிற்கு முன்னேற் பாடு செய்த பின்னர் பதுங்கி வீடத்துமீறல் அல்லது வலிந்து வீடு புகுதல். | ” | ” | ” | ” | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குறற்ப்பணமும். | ” |
| 442 | இரவில் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |
| 443 | மறியலினால் தண்டிக்கப்படக் கூடிய தவறொன்றைப் புரிவதற்காக இரவில் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது இரவில் வலிந்து வீடு புகுதல் | ” | ” | ” | ” | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும் | ” |
| | தவறு திருட்டாயின். | ” | ” | ” | ” | பதினான்கு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 444 | காயம் முதலியன விளைவிப்பதற்கு முன்னேற்பாடு செய்த பின்னர் இரவில் பதுங்கியிருந்து வீடத்துமீறல் அல்லது இரவில் வலிந்து வீடுபுகுதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | பதினான்கு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| 445 | பதுங்கியிருந்து வீடத்துமீறலை அல்லது வலிந்து வீடு புகுதலைப் புரியும் பொழுது கடுங்காயம் விளைத்தல். | " | " | " | " | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். அல்லது சவுக்கடி. | " |
| 446 | இரவில் பதுங்கியிருந்து வீடத்துமீறல் முதலியன புரிவதில் கூட்டாக ஈடுபட்டுள்ள பல ஆட்களுள் ஒருவரால் மரணம் அல்லது கடுங்காயம் விளைக்கப்படுதல். | " | " | " | " | இருபது ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியலும் குற்றப்பணம் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 447 | ஆதனத்தைக்கொண்டுள்ள தான அல்லது கொண்டு ள்ளதாக எண்ணப்படும் மூடப்பட்ட ஏதேனும் கொள்கலனை நேர்மையீ னமாக வலிந்து திறத்தல் அல்லது கட்டவிழ்த்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | இரண்டு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியல அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | நீதிவான் நீதிமன்றம். |
| 448 | ஆதனத்தைக்கொண்டுள்ள தான அல்லது கொண்டு ள்ளதாக அவர் நம்பும் மூட்டப்பட்ட கொள்கலனை நம்பி ஒப்படைக்கப்பட்ட போது அதனை நேர்மையீ னமாகத் திறத்தல். | " | " | " | " | மூன்று ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 449 | வீடு புகுதற்கான சாதனங் களை அல்லது தீங்கு விளைவிக்கும் ஆயுதங் களை உடைமையில் வைத்திருத்தல். | " | " | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 450 | சட்டவிரோதமான நோக்கங் களுக்காகக் கட்டடம் முதலியவற்றில் காணப்படுதல். | " | " | " | " | மூன்று மாதங்களுக்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது ஐம்பது ரூபாக் குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 451 | பெயர்பெற்ற திருடன் அலைந்து திரிதல். | " | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | " | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

## அத்தியாயம் XVII - ஆவணங்கள், ஆதனக்குறிகள், தாள் நாணயங்கள், வங்கிப் பத்திரங்கள் என்பன தொடர்பிலான தவறுகள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 454 | பொய்யாவணம் புனைதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஐந்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 455 | நீதிமன்றப்பதிவேட்டை அல்லது பகிரங்க சேவையாளரால் வைத்திருக்கப்படும் பிறப்புக்கள் பற்றிய இடாப்பு முதலியவற்றைப் பொய்யாகப் புனைதல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும், குற்றப்பணமும். | " |
| 456 | பெறுமதியான பிணைப் பொறுப்பை, மரண சாதனத்தை, அல்லது பெறுமதியான பிணைப்பொறுப்பை ஆக்க அல்லது மாற்ற அல்லது ஏதேனும் பணம் முதலியவற்றைப் பெற அதிகாரமளிக்கும்,ஆவணத்தைப் பொய்யாகப் புனைதல். | " | " | " | " | இருபது ஆண்டு கட்கு இருவகையி லொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 457 | ஏமாற்றும் நோக்கத்திற்காகப் பொய்யாவணம் புனைதல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும்,குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 459 | பொய்யாகப் புனையப்பட்டதென அறிந்துகொண்டு பொய்யாகப் புனையப்பட்ட ஆவணமொன்றை உண்மையானதாகப் பயன்படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம்.. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | பொய்யாவணம் புனைந்ததற்கான தண்டனை. | நீதிவான் நீதிமன்றம். |
| 460 | தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 456 இன் கீழ்த் தண்டிக் கப்படற்பாலதான ஏதேனும் பொய்யாவணம் புனைதலைப் புரியும் உளக்கருத்துடன் போலி யான இலச்சினை, தகடு முதலி யனவற்றை ஆக்குதல் அல்லது போலி புனைதல் அல்லது போலியாகப் புனையப்பட்டதென அறிந்து கொண்டு அத்தகைய உளக்கருத்துடன் அத்தகைய ஏதேனும் இலச்சினை, தகடு முதலியவற்றை உடைமையில் வைத்திருத்தல். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 461 | தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு456 தவிர்ந்தவேறுஏதேனும் பிரிவின்கீழ்த் தண்டிக்கப்படற் பாலதான ஒரு பொய்யாவணம் புனைதலைப்புரியும் உளக்கருத் துடன் போலியான இலச்சினை, தகடு முதலியவற்றை ஆக்குதல் அல்லது போலிபுனைதல் அல் லது போலியாகப் புனையப்பட்ட தென அறிந்துகொண்டு, அத்த கைய உளக்கருத்துடன் இலச் சினை, தகடு முதலியவற்றை உடைமையில் வைத்திருத்தல். | " | " | " | " | ஏழு ஆண்டு கட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 462 | அந்த ஆவணம் தண்டனைச் சட்டக்கோவையின் 455 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவரணமொன்றை உடைய தாயிருப்பின், பொய்யாகப் புனையப்பட்டதென அறிந்து கொண்டு உண்மையானதெனப் பயன்படுத்தும் உளக் கருத்துடன் ஆவணம் ஒன்றினைத் தமது உடைமை யில் வைத்திருத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம். |
| | அவ்வாவணம் 456ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவரணமொன் றைக் கொண்டதாயின். | " | " | " | " | பத்து ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 463 | தண்டனைச்சட்டக்கோவையின் 456 ஆம் பிரிவில் விவரிக்கப் பட்ட ஆவணங்களின் உண் மையை உறுதிப்படுத்தப்பயன் படுத்தப்படும் சின்னத்தை அல்லது குறியைப் போலி யாகப் புனைதல் அல்லது போலியாகக் குறிப்பிடப்பட்ட பொருளை உடைமையில் வைத்திருத்தல். | " | " | " | | ஏழு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 464 | தண்டனைச் சட்டக்கோவையின் 456 ஆம் பிரிவில் விவரிக்கப் படாதவையான ஆவணங்களின் உண்மையை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்படும் சின்னத்தை அல்லது குறியைப் போலியாகப் புனைதல் அல்லது போலியாகக் குறியிடப்பட்ட பொருளை உடைமையில் வைத்திருத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | நீதிவான் நீதிமன்றம் |
| 465 | தந்தி மூலம் பொய்யான செய்தியை அனுப்புதல். | " | " | " | " | ஓராண்டிற்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 466 | மரணசாதனம் முதலியவற்றை மோசடியாக அழித்தல் அல்லது உருவழித்தல் அல்லது அழிக்க அல்லது உருவழிக்க எத்தனித் தல் அல்லது இரகசியமாக மறைத்தல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | " |
| 467 | கணக்குகளைப் பொய்ப்பித்தல். | " | " | " | " | ஏழு ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | " |
| 468 | ஏதேனும் நாணயத்தாள், வங்கிப்பத்திரம் அல்லது நாணயம் ஆகியவற்றின் போலியுருவை உடைமையில் வைத்திருத்தல். | " | அழைப்புக்கட்டளை | " | " | இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07, | 08 |

## ஆதனக் குறிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 471 | எரேனுமாளை வஞ்சிக்கும் அல்லது ஊறுபடுத்தும் உளக்கருத் துடன் பொய் ஆதனக் குறியைப்பயன் படுத்துதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஓராண்டிற்கு இருவகையி லொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 472 | சேதம் அல்லது ஊறு விளைக்கும் உளக்கருத் துடன் வேறொருவரால் பயன்படுத்தப்படும் ஆதனக் குறியைப் போலிபுனைதல். | ” | ” | ” | ” | இரண்டு அண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | ” |
| 473 | பகிரங்கசேவையாளர் ஒரு வரால் பயன்படுத்தப்படும் ஆதனக்குறியொன்றை அல்லது ஏதேனும் ஆத னத்தின் உற்பத்தி, தரம் முதலியவற்றைக் குறிப் பதற்காக அவரால் பயன் படுத்தப்படும் ஏதேனும் குறியைப் போலிபுனைதல். | ” | ” | ” | ” | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | ” |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 474 | ஏதேனும் பகிரங்க அல்லது தனிப்பட்ட ஆதனக்குறியைப் போலிபுனைவதற்காக ஏதேனும் வார்ப்புக்கருவியை தகட்டினை அல்லது வேறு சாதனத்தை மோசடியாகச் செய்தல் அல்லது உடைமையில் வைத்திருத்தல். | பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம். | பிடியாணை. | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்ற. |
| 475 | போலி ஆதனக் குறியால் அடையாளமிடப்பட்ட பண்டங்களை அறிந்து கொண்டு விற்றல். | " | " | " | " | ஓராண்டிற்கு இரு வகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 476 | பண்டங்களையுள்ளடக்கியுள்ள ஏதேனும் பொதியின் மீது அல்லது கொள்கலனின் மீது, அவை கொண்டிராத பண்டங்களைக் கொண்டுள்ளன என நம்பச்செய்யும் உளக்கருத்துடன், மோசடியாகப் பொய்யானகுறிகளை இடுதல். | " | " | " | " | மூன்று ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |
| 477 | அத்தகைய பொய்க்குறியெதனையும் பயன்படுத்துதல். | " | " | " | " | " | " |
| 478 | ஊறுவிளைக்கும் உளக்கருத்துடன் ஏதேனும் ஆதனக் குறியை அகற்றுதல் அழித்தல் அல்லது உருவழித்தல். | " | " | " | " | ஓராண்டிற்கு இரு வகையிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| | | | **நாணயத்தாள்களும் வங்கிப்பத்திரங்களும்.** | | | | |
| 478அ | நாணயத்தாள்களை அல்லது வங்கிப்பத்திரங்களைப் போலியுனைதல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற்பாலதன்று. | இணக்கஞ் செய்யக்கூடியதன்று. | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | - |
| 478ஆ | பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலி புனையப்பட்ட நாணயத்தாள்களை அல்லது வங்கிப் பத்திரங்களை உண்மையானவையெனப் பயன்படுத்தல். | ” | ” | ” | ” | ” | - |
| 478இ | பொய்யாகப் புனையப்பட்ட அல்லது போலி புனையப்பட்ட நாணயத்தாள்களை அல்லது வங்கிப்பத்திரங்களை உடைமையில் வைத்திருத்தல். | ” | ” | ” | ” | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லதுஇரண்டும் | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 478ஈ | நாணயத்தாள்களை அல்லது வங்கிப்பத்தரங் களைப் பொய்யாகப் புனைவதற்கான சாதனத்தை அல்லது பொருள்களை உண்டாக்குதல் அல்லது உடைமையில் வைத்திருத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று. | இணக்கஞ் செய்யக் கூடியதன்று. | இருபது ஆண்டுகட்கு இரு வகையிலொரு வகை மறியலும் குற்றப்பணமும். | |

## அத்தியாயம் XIX அவதூறு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 480 | அவதூறு | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது | " | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக் கூடியது. | இரண்டு ஆண்டுகட்கு சாதாரணமறியல், அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும், அத் துடன் முன்னர், பன்னிரண்டு மாதங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட தண்டனைத் தீர்ப்புப் பெற்றிருக்கும் விடயத்தில் இரண்டு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப் பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றுணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 481 | ஒருவிடயம் அவதூறான தென அறிந்து கொண்டு அதனை அச்சிடுதல் அல்லது செதுக்குதல். | பிடியாணையின்றிக் கைது செய்த லாகாது. | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடியது | இரண்டு ஆண்டுகட்கு சாதாரண மறியல், அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும், அத்துடன் முன்னர் பன்னிரண்டு மாதங்களு க்கு அல்லது அதற்கு மேற்பட தண்டனைத் தீர்ப்புப் பெற்றிருக்கும் விடயத்தில் இரண்டு ஆண்டுகட்கு இருவகை யிலொருவகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 482 | அவதூறான விடயத்தைக் கொண்டுள்ள அச்சிடப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை, அத்தகைய விடயத்தை அது கொண்டு ள்ளது என அறிந்து கொண்டு விற்றல். | " | " | " | | " | " |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் XX - குற்றமுறையான அச்சுறுத்தல், நிந்தை, மனக்குலைவு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 484 | சமாதானக்கேட்டை ஏற்படுத்தும் உளக்கருத்துடன் நிந்தை செய்தல். | பிடியாணையின்றிக் கைது செய்த லாகாது. | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது. | இணக்கஞ் செய்யக் கூடியது. | இரண்டு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |
| 485 | படைக்கலகத்தை அல்லது பொதுமக்களின் அமைதிக்கெதிரான தவறை ஏற்படுத்தும் உளக்கருத்துடன் பொய்யான கூற்று வதந்தி முதலியவற்றை பாரப்புதல். | ,, | ,, | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக் கூடியதன்று | ,, | ,, |
| 486 | குற்றமுறையான அச்சுறுத்தல். | ,, | ,, | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக் கூடியது. | ,, | ,, |
| | மரணம் அல்லது கடும் காயம் முதலியன விளைப்பதற்கான அச்சுறுத்தலானால். | ,, | ,, | ,, | ,, | ஏழு ஆண்டு கட்கு இரு வகையிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | ,, |
| 487 | அநாமதேயத் தகவல் மூலம் அல்லது அச்சுறுத்தல் எங்கிருந்து வருகிறதென்பதை மறைப்பதற்கு முன்னெச்சரிக்கை செய்து கொண்டு குற்ற முறையான அச்சுறுத்தல். | ,, | ,, | ,, | இணக்கஞ் செய்யக் கூடியதன்று | மேலேயுள்ள பிரிவின் கீழான தண்டனையுடன் மேலதிகமாக, இரண்டு ஆண்டுகட்கு இருவகையிலொரு வகை மறியல். | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணை யின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| 488 | மதுமோதை நிலையில் பொது இடம் முதலியவற்றில் தோன்றி எவரேனும் ஆளுக்கு மனக்குலைவை ஏற்படுத்தல். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம் | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று. | ஒரு மாதத்திற்கு சாதாரண மறியல் அல்லது நூறு ரூபாக் குற்றப் பணம், அல்லது இரண்டும். | நீதிவான் நீதிமன்றம். |

## அத்தியாயம் XXI - சட்டவிரோதமான சத்தியம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 489 | இருபது ஆண்டுகட்கு மறியலினால் தண்டித்தற்பால தான தவறொன்றைப் புரியுமாறு சத்தியத்தை எடுத்தோதுதல் அல்லது செய்தல் அல்லது எடுத்தோதலுக்கு அல்லது செய்தலுக்கு உடந்தையளித்தல். | பிடியாணையின்றிக் கைது செய்ய லாகாது | ,, | ,, | ,, | இருபது ஆண்டு கட்கு இரு வகை யிலொரு வகை மறியல் அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும் | ,, |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ... | அத்தவறு இருபது ஆண்டு கட்குக் குறைந்த மறியல் மூலம் தண்டிக்கப்படக்கூடிய தொன்றாயின். | பிடியாணையின்றிக் கைது செய்தலா காது. | பிடியாணை | பிணையிற் செல்ல அனுமதித்தற் பாலது | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | சத்தியம் தொடர்புபட்ட தவறுக்கு விதிக்கப் படக்கூடிய அதே தண்டனை. | நீதிவான் நீதிமன்றம் |

## அத்தியாயம் XXII - தவறுகள் புரிவதற்கான எத்தனங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 490 | மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படக்கூடிய தவறொன்றைப்புரிய எத்தனித்து, அத்தகைய எத்தனத்தில் அத்தவறு புரியப்படுவதற்கான ஏதேனும் செயலைச் செய்தல். | பொலிசு அத்த வறு தொடர்பில் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாமா இல்லையா என்ப தைப் பொறுத்து | பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை அத்தவறு தொடர்பில் சாதாரணமாக வழங்கப்படலாமா இல்லையா என்பதைப் பொறுத்து. | தவறாளரால் எண்ணப்பட்டவாறான அத்தவறு பிணையிற்செல்ல அனுமதித் தற்பாலதா இல்லை யா என்பதைப் பொறுத்து. | தவறு இணக் கஞ்செய்யக் கூடியதா இல் லையா என்ப தைப் பொறு த்து. | தவறுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய காலத் தின் அரைவாசிக்கு மேல் நீடிக்காத மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம் அல்லது இரண்டும். | எத்தனிக் கப்பட்ட தவறு எந்நீதி மன்றத் தால் விளங்கற் பாலதோ அந்நீதி மன்றத் தால். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிரிவு | தவறு | சமாதான அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாமா இல்லையா என்பது | முதற்றருணத்திலேயே பிடியாணை அல்லது அழைப்புக் கட்டளை சாதாரணமாக வழங்கப்படலாமா என்பது | பிணைவழங்கப் படக்கூடியதா இல்லையா என்பது | இணக்கஞ் செய்யக்கூடியதா இல்லையா என்பது | தண்டனைச் சட்டக்கோவை யின்கீழான தண்டனை | மேல் நீதிமன்றம் அல்லாத எந்த நீதிமன்றத்தால் விளங்கற்பாலது என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04. | 05 | 06 | 07 | 08. |
| | **மற்றச் சட்டங்களுக்கு எதிரான தவறுகள்** | | | | | | |
| .. | மரணதண்டனையினால் அல்லது ஏழு ஆண்டுகட்கு அல்லது அதற்குமேற்பட்ட மறியலினால் தண்டிக்கப்படற்பாலதாயின். | பிடியாணையின்றிக் கைது செய்யலாம். | பிடியாணை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலதன்று | இணக்கஞ் செய்யக்கூடிய தன்று | - | இச்சட்டக் கோவையின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க. |
| | மூன்று ஆண்டுகட்கு அதற்கு மேற்படவும், ஆனால் ஏழு ஆண்டுகட்குக் குறைந்த மறியலினால் தண்டிக்கப்படற்பாலதாயின் | " | " | " | " | - | |
| | மூன்று ஆண்டுகட்குக் குறைவான மறியலினால் தண்டிக்கப்படற்பாலதாயின் | பிடியாணையின்றிக் கைது செய்தலாகாது. | அழைப்புக்கட்டளை | பிணையிற்செல்ல அனுமதித்தற் பாலது | " | - | |
| | குற்றப்பணத்தினால் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதாயின். | " | " | " | " | - | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அட்டவணை

## படிவங்கள்

## இல. 01

## குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கான அழைப்புக்கட்டளை.

**கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தில்

**கொழும்பு, காலி வீதி, 157 ஆம் இலக்கத்திலுள்ள சார்ல்ஸ் பெர்னான்டோ என்ற கடைக்காரருக்கு**

மேற்சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ள, **கொம்பனித் தெருவின்** பெருந்தெருவில், 20.... ஆம் ஆண்டு .............. மாதம் ..... ஆம் நாளன்று, மேற்சொல்லப்பட்ட **கொம்பனித் தெருவைச்** சேர்ந்த **ஜுவானிசு அப்பு** எனப்படும் ஒருவரை, நீவிர் ஒரு பொல்லினால் அடித்ததன் மூலம் வேண்டுமென்று அவருக்குக் காயம் விளைவித்தீர் என்றும், அதன் மூலம் நீவிர், தண்டனைச் சட்டக்கோவையின் **314** ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படற்குரிய தவறொன்றைப் புரிந்தீரென்றும், மேற்சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவருமான நீதிவானொருவர் முன்னிலையில் இந்நாள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது ஆதலால் :

ஆகவே சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு மறுமொழியளிப்பதற்காகவும் சட்டத்துக்கிணங்க உமக்கெதிராக மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவும், **இம்மாதம் 11 ஆம் தேதியாகிய** எதிர்வரும் **வெள்ளிக்கிழமையன்று** முற்பகல் பத்து மணிக்கு, **கொழும்பு, புதுக்கடையிலுள்ள** நீதிவான் நீதிமன்றத்தில், சமுகமளித்து நேர்முகமாகத் தோன்றும்படி இத்தால் உமக்குக் கட்டளையிடப்படுகின்றது.

**கொழும்பில்** மேற்சொல்லப்பட்ட பிரிவில், 20 ..... ஆம் ஆண்டு ................ மாதம் ........ ஆம் நாளாகிய இன்று, எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்)** : க. கா.
நீதிவான்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கிய குறிப்பு.** - சமூகமளிப்பதற்கு விரும்பாத சாட்சிக்காரர் எவரையும் நீவிர் கூப்பிட விரும்பினால், அவரை அவ்வாறு கட்டாயப்படுத்துவதற்கான அழைப்புக்கட்டளைக்காக இப்பிரிவுக்கான நீதிவானுக்கு உடனடியாக நீவிர் விண்ணப்பித்தல் வேண்டும்.

**இல. 02**

**அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்கப்பட்டமை பற்றிய சத்தியக்கூற்று**

(அழைப்புக்கட்டயையிற் புறக்குறிப்பிடப்படவேண்டியது)

..............................பிசுக்கால் அலுவலராகிய, ..........................என்னும் இடத்தைச் சேர்ந்த இ. ஈ. ஆகிய நான், .................................. என்னும் இடத்தில், 20...... ஆம் ஆண்டு .................. மாதம் .... ஆம் நாளன்று இதனகத்துள்ள அழைப்புக்கட்டளையின் இணைப்படியொன்றை/ இணைப்படியொன்றையும் அதன் மொழிபெயர்ப்பையும் அதனகத்துப் பெயர் குறிக்கப்பட்டுள்ள **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவருக்கு ஒப்படைத்ததன் மூலம், இதனகத்துள்ள அவ்வழைப்புக்கட்டளையை அவரிடம் சேர்ப்பித்தேன் எனச் சத்தியஞ்செய்கின்றேன் (அல்லது பயபக்தியுடனும், விசுவாசத்துடனும், உண்மையாகவும் வெளிப்படுத்தி உறுதிசெய்கின்றேன்.)

.......................................
**(வாக்குமூலமளிப்பவரின் கையொப்பம்)**

**(சத்தியம் எடுத்தோதும் அலுவலரின் பெயரும் பதவியும்)**

........................... ஆகிய எனது முன்னிலையில் 20 .... ஆம் ஆண்டு ...........மாதம் ....... ஆம் நாளாகிய இன்று .............................. என்னும் இடத்தில் சத்தியஞ்செய்யப்பட்டது. (**அல்லது** உறுதிசெய்யப்பட்டது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல. 03

## அழைப்புக்கட்டளைக்கிணங்கித் தோன்றத் தவறுபவர்களைக் கைது செய்வதற்கான பிடியாணை

**கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தில் (**பிடியாணையை நிறைவேற்றவேண்டிய ஆளின் அல்லது ஆட்களின் பதவியும் பெயரும்)** என்பவருக்கு.

**கொழும்பு, காலி வீதி, 157 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சார்ல்ஸ் பெர்னான்டோ என்ற கடைக்காரர்** மேற்சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ள, **கொம்பனித் தெருவின்** பெருந்தெருவில் 20 ..... ஆம் ஆண்டு ..............மாதம் ...... ஆம் நாளன்று, மேற்சொல்லப்பட்ட **கொம்பனித் தெருவைச்** சேர்ந்த **ஜுவானிசு அப்பு** எனப்படும் ஒருவரை, ஒரு பொல்லினால் அடித்ததன் மூலம் வேண்டுமென்று அவருக்குக் காயம் விளைவித்தாரென்றும், அதன்மூலம் அவர், தண்டனைச் சட்டக்கோவையின் **314** ஆம் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்குரிய தவறொன்றைப் புரிந்தாரென்றும், சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவரும் இதன் கீழ்க் கையொப்பமிட்டவருமான நீதிவானொருவர், முன்னர், சென்ற ...................... மாதம் ......... ஆம் நாளன்று முறைப்பாடு செய்யப்பட்டது ஆதலாலும்

சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு விடையளிப்பதற்காகவும் சட்டத்துக்கிணங்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவும் **இம்மாதம் 11 ஆம் தேதியாகிய வெள்ளிக்கிழமையன்று**, முற்பகல் பத்து மணிக்கு, **புதுக்கடையிலுள்ள கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தில் சமூகமளித்து, நேர்முகமாகத் தோன்றும்படி சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவருக்குக் கட்டளையிட்டு அவருக்கு நான் அப்போது அழைப்புக்கட்டளை விடுத்தேன் ஆதலாலும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட அழைப்புக்கட்டளையானது சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவரிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, சத்தியத்தின் மீது **(அல்லது** உறுதியுரையின்மீது) இப்போது எண்பிக்கப்பட்டுள்ளபோதிலும், சொல்லப்பட்ட அழைப்புக் கட்டளையிலும் சொல்லப்பட்ட அழைப்புக்கட்டளையினாலும் அவ்வாறு நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் சமூகமளித்துத் தோன்றுவதற்கு அவர் அசட்டை செய்துள்ளார் ஆதலாலும் :

ஆகவே சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு விடையளிப்பதற்கும், சட்டத்துக்கிணங்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவரை உடனடியாகப் பிடித்து மேற்சொல்லப்பட்ட **புதுக்கடையிலுள்ள கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவரைக் கொண்டுவருமாறு இத்தால் உமக்குக் கட்டளையிடப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட பிரிவில், **புதுக்கடையில்** 20 ........ ஆம் ஆண்டு ...................... மாதம் ........... ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

..................................................

**(ஒப்பம்)** க. கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 04

## முதற்றடவையிலேயே கைதுசெய்வதற்கான பிடியாணை

**கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தில் **(பிடியாணையை நிறைவேற்ற வேண்டிய ஆளின் அல்லது ஆட்களின் பதவியும் பெயரும்)** என்பவருக்கு.

சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவில், **வெள்ளவத்தையைச்** சேர்ந்தவரும், **புகையிரதத் திணைக்களத்தில் தொழில்புரியும் ஒரு தொழிலாளியுமான கங்காணிகே கரோலிஸ் அப்பு** என்பவர், **இம்மாதம் 12 ஆம் தேதியாகிய** சென்ற **வெள்ளிக்கிழமை** இரவு, பொழுதுபட்டதற்குப் பின்னரும் பொழுதுபுலர்வதற்கு முன்னரும், திருட்டுப் புரிவதற்காக, **புதுக்கடையில் ஏபிரகாம் பெர்னான்டோ** எனப்படும் ஒருவர் வதியும் வீட்டிற்குள் வலிந்துபுகுந்து அதன் மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் **443** ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படற்குரிய தவறொன்றைப் புரிந்தாரென்று, சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவரும் இதன்கீழ்க் கையொப்பமிட்டவருமான நீதிவானொருவர் முன்னர், இந்நாள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாதலால் :

ஆகவே, சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு விடையளிப்பதற்காகவும் சட்டத்துக்கிணங்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவும் சொல்லப்பட்ட **கங்காணிகே கரோலிஸ் அப்பு** என்பவரை உடனடியாகப்பிடித்து, மேற்சொல்லப்பட்ட **புதுக்கடையிலுள்ள கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அவரைக் கொண்டுவருமாறு, இத்தால் உமக்குக் கட்டளையிடப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட பிரிவில், **புதுக்கடையில்,** 20 ... ஆம் ஆண்டு ....... மாதம் ......... ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்)** ................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 05

## குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரை நீதிமன்றத்தில் தோன்றுமாறு தேவைப்படுத்தும் பிரகடனம்

........................................................ நீதிவான் நீதிமன்றத்தில்.

அ. ஆ. என்பவர், இந்த நீதிமன்றத்தின் நியாயாத்திக்கவெல்லைக்குள் என்னும் இடத்தில் 20 ...... ஆம் ஆண்டு .......... மாதம் .......... ஆம் நாளன்று, **(பிடியாணையில் உள்ளவாறு குறிப்பிடுக)** ............... ஐப் புரிந்தார் என்ற முறைப்பாடொன்றுக்கு விடையளிப்பதற்கென .................. என்ற இடத்தைச் சேர்ந்த **(பெயரையும் வதிவிடத்தையும் தொழிலையும் இங்கு உட்புகுத்துக) அ. ஆ** என்பவரைப் பிடிப்பதற்காக சொல்லப்பட்ட ......... பிரிவில் உள்ளவரும் அப்பிரிவுக்கானவரும் இதன் கீழ்க் கையொப்பமிட்டவருமான நீதிவானொருவரால் 20 ....... ஆம் ஆண்டு ...... மாதம் ....... ஆம் நாளன்று பிடியாணை விடுக்கப்பட்டது ஆதலாலும்.

அத்துடன் சொல்லப்பட்ட **அ. ஆ** . என்பவர் காணப்படவில்லையென சொல்லப்பட்ட பிடியாணைக்கான திருப்பியனுப்பற் கூற்றொன்று ஆக்கப்பட்டுள்ளது ஆதலாலும்.

சொல்லப்பட்ட **அ. ஆ.** என்பவர் தலைமறைவாகவுள்ளாரெனவும் **(அல்லது** மறைந்திருக்கின்றார் எனவும்) அதனால் சொல்லப்பட்ட பிடியாணையை நிறைவேற்ற முடியாதுள்ளதெனவும் நாள் திருப்திப்படும்படியாகக் காட்டப்பட்டுள்ளதாதலாலும்.

ஆகவே, சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு விடையளிப்பதற்காகச் சொல்லப்பட்ட **அ. ஆ.** என்பவர், 20 ..... ஆம் ஆண்டு ............ மாதம் ..... ஆம் நாளன்று, முற்பகல் .......... மணிக்கு, .................................. என்னும் இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் தோன்றுமாறு தேவைப்படுத்தப்படுகின்றாரென இத்தால் பிரகடனஞ் செய்யப்படுகின்றது.

20 ...... ஆம் ஆண்டு ............ மாதம் ....... ஆம் நாளாகிய இன்று, சொல்லப்பட்ட பிரிவிலுள்ள ............. என்னும் இடத்தில் எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்)** : க. கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 06

## தேடுதல் ஆணைப்பத்திரம்
## (68 ஆம் பிரிவு)

வழக்கு இல :-

............................................... இல் அமரும்
மேல் நீதிமன்றத்தில்.

............................................... நீதிவான்
நீதிமன்றத்தில்.

தேடுதல் ஆணைப்பத்திரம் ஒன்றை வழங்குவதற்குத் தேவைப்படும் ஏதுக்கள் உள்ளன என நம்புவதற்கு, கீழே கையொப்பமிடும் எனக்குக் காரணமுள்ளது ஆதலால்,

...............................................
(இவ்விடயத்தில், வளவின் விவரணத்தைக் கூறுக)

ஆகிய வளவில், தேடுதல் நடாத்தவும், அதனைப் பார்வையிடவும், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச்சட்டத்தில் அதற்கெனத் தரப்பட்டவாறான தத்துவங்களைப் பிரயோகிக்கவும், கடமைகளைப் புரியவும் நான்,

...............................................
(அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர்)

ஆகிய உமக்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

.................. ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் இந்த ஆணைப்பத்திரத்துக்கான உமது திருப்பியனுப்பற் கூற்றை அளிக்குமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

20 ........ ஆம் ஆண்டு ......... மாதம் ........ ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) :- ...............................................
மேல் நீதிமன்றம் நீதிபதி
நீதிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 07

## மேல் நீதிமன்றத்தால் மறியற்றண்டனை, அல்லது குற்றப்பணம் தீர்ப்பளிக் கப்பட்டதன் மீதான பாரப்படுத்து ஆணைப்பத்திரம்.

வழக்கு இல. :-

.......................................... மேல் நீதிமன்றத்தில்.
.......................................... மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு.

.................................................. ஆம் இலக்க வழக்கில் ........... ஆவது[1] குற்றஞ்சாட்டப்பட்டவராகிய[2] ............................. என்பவர் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கவெல்லைக்குள் .............................................. என்னும் இடத்தில், 20 ........... ஆம் ஆண்டு ........................மாதம் ........... ஆம் நாளன்று[3] ........................ ஆகிய தவறை/ தவறுகளைப் புரிந்தள்ளாராதலாலும் அதன்மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் .........ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படுவதற்குரிய தவறொன்றைப் புரிந்ததற்காக [4] .......................... ஆகிய என் முன்னர், முறையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, [5] ................................ மறியற்றண்டனைக்கும், ரூபா .................. குற்றப்பணம் கொடுக்குமாறும் அல்லது அக்குற்றப்பணத்தைக் கொடுக்கத் தவறினால் ........... காலத்துக்கு மறியற்றண்டனையை அனுபவிக்குமாறு தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டார் ஆதலாலும், சொல்லப்பட்ட குற்றப்பணம் கொடுக்கப்பட வில்லையாதலாலும்.

ஆகவே, சொல்லப்பட்ட ............................................ என்பவரை நீவிர் உம்மோடு கூட்டிச்சென்று, மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்பாளரிடம், இந்த ஆணைப்பத்திரத்தோடு, பாதுகாப்பாக ஒப்படைக்குமாறு மறியற்சாலைத் திணைக்கள அலுவலராகிய உமக்கு இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

அத்துடன், சொல்லப்பட்ட ................................ என்பவரை, சொல்லப்பட்ட மறியற்சாலையில் உமது கட்டுக்காவலில் ஏற்றுக்கொள்ளுமாறும், மேற்சொல்லப்பட்ட தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படும் வரையில் அந்த மறியற்சாலையில் அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும், சொல்லப்பட்ட மறியற்சாலைக் கண்காணிப்பாளர் ஆகிய உமக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

20 ............. ஆம் ஆண்டு ...................... மாதம் .......................... ஆம் நாளாகிய இன்று ...................................... என்னும் இடத்தில் எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்)** : க. கா. ...............................
மேல் நீதிமன்ற நீதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

1. விடயத்துக்கேற்றவாறு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது
2. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர்,
3. தவறை அல்லது தவறுகளைச் சுருக்கமாகக் கூறவும்.
4. பதவிப் பெயரும், பெயரும்.
5. தண்டனையை முழுமையாகவும் தெளிவாகவும் கூறுக.

அவசியமில்லாத சொற்களை நீக்கிவிடுக.

## இல. 08

### சாட்சிக்காரருக்கான அழைப்புக்கட்டளை

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் — **கொழும்பு, காலி வீதி, 179 ஆம் இலக்கத்திலுள்ள டொன் சார்லஸ் அப்புகாமி என்ற கடைக்காரருக்கு**

**(இங்கு, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக விடுக்கப்பட்ட அழைப்புக் கட்டளையில் அல்லது ஆணைப்பத்திரத்தில் உள்ளவாறு கூறுக)** ............ பரியப்பட்டுள்ளதாக கொழும்புப் பிரிவிலுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது ஆதலாலும், குற்றவழக்குத் தொடுநர் (**அல்லது** எதிரி) தரப்பில் நீவிர் சாட்சியமளிக்கக்கூடுமெனச் சொல்லப்பட்ட பிரிவுக்கான நீதிவானொருவருக்குத் தோன்றுமாறு செய்யப்பட்டுள்ளது ஆதலாலும்.

சொல்லப்பட்ட முறைப்பாட்டின் விடயம் சம்பந்தமாக உமக்குத் தெரிந்தது பற்றிச் சான்று பகர்வதற்கு, 20 ....... ஆம் ஆண்டு .................... மாதம் ........... ஆம் நாளன்று முற்பகல் பத்து மணிக்கு, **கொழும்பு புதுக்கடையிலுள்ள** நீதிமன்றத்தில் சமுகமளித்து அப்போது அங்கிருக்கக்கூடியவரான அத்தகைய நீதிவான் முன்னர் தோன்றுமாறும், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அங்கிருந்து வெளியே செல்லக்கூடாதென்றும் நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். அத்துடன், சொல்லப்பட்டதேதியன்று, நியாயமான காரணமின்றி, நீவிர் தோன்றுவதற்கு அசட்டைசெய்தால் அல்லது மறுத்தால், நீவிர் சமுகமளித்தலைக் கட்டாயப்படுத்துவதற்கு ஆணைப்பத்திரம் விடுக்கப்படும்.

20 ........ ஆம் ஆண்டு .................................. மாதம் .................. ஆம் நாளாகிய இன்று, மேற்சொல்லப்பட்ட பிரிவிலுள்ள புதுக்கடையில், எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்)** : க. கா. ..............

நீதிவான் / அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 09

## தடுத்துவைத்தற்கான ஆணைப்பத்திரம்.

வழக்கு இல. : ..........................................................

.......................................................... மேல் நீதிமன்றத்தில்.

.......................................................... நீதிவான் நீதிமன்றத்தில்.

.......................................................... இல் உள்ள மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு.

1979 ஆம் ஆண்டின் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் .......................................... ஏற்பாடுகளின் நியதிகளின்படி [1] ..................... என்பவர் .......................................... நீதிவான் நீதிமன்றத்துக்கு 20..... ஆம் ஆண்டு ......................... மாதம் ........................... ஆம் நாளன்று அனுப்பிவைக்கப்பட்டார் ஆதலாலும், மேலும் புலன்விசாரணைகள் / விளக்கம் முடியும்வரை, சொல்லப்பட்ட[2] ................................... என்பவரைத் தடுத்துவைத்தல் அவசியமாகியுள்ளதாதலாலும்.

சொல்லப்பட்ட ................................. என்பவரைக் கூட்டிச்சென்று, இந்த ஆணைப்பத்திரத்துடன் சேர்த்து, அவரை மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கண்காணிப்பாளரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்குமாறு மறியற்சாலைத் திணைக்களத்தின் அலுவலராகிய உமக்கு இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

அத்துடன், சொல்லப்பட்ட ......................................... என்பவரை உமது கட்டுக்காவலில் சொல்லப்பட்ட மறியற்சாலையில் ஏற்றுக்கொள்ளுமாறு, ................ பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவருமான நீதிவானொருவராகிய / நீதி நிருவாக வலயத்தில் உள்ளவரும் அந்நீதி நிருவாக வலயத்துக்கானவருமான மேல் நீதிமன்றநீதிபதியாகிய கீழே கையொப்பமிடுபவரின் முன்னர், அல்லது சொல்லப்பட்ட பிரிவுக்காக /நீதி வலயத்துக்காக அப்போது அங்கிருக்கக்கூடிய அத்தகைய வேறு நீதிவான் / மேல் நீதிமன்ற நீதிபதி முன்னர், சட்டத்துக்கிணங்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவரைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்துமாறு சொல்லப்பட்ட கண்காணிப்பாளராகிய நீவிர் தேவைப்படுத்தப்படும் நாளாகிய 20 ......... ஆம் ஆண்டு ......................... மாதம் ......................... ஆம் நாள் வரையில் அவரை அங்கு பாதுகாப்பாக வைத்திருக்குமாறு நான் இத்தால் உமக்குக் கட்டளையிடுகின்றேன்.

20 ......... ஆம் ஆண்டு ......................... மாதம் ......................... ஆம் நாளாகிய இன்று, மேற்சொல்லப்பட்ட ......................... பிரிவில் / நீதி நிருவாக வலயத்தில் எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) க. கா

நீதிவான் /மேல் நீதிமன்ற நீதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

1. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயரும் வதிவிடமும், பதவிப்பெயர் முதலியனவும்.

2. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர்.

## இல. 10

## யூரர்சபையைக் கலைத்தபின்னர் தடுத்துவைத்தற்கான ஆணைப்பத்திரம்.

வழக்கு இல :- ..............................................

.............................................. இல் நடாத்தப்பெறும் மேல் நீதிமன்றத்தில்.

.............................................. மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு.

[1] .............................. என்பவர், 20 .................... ஆம் ஆண்டு .............................. மாதம் ...................... ஆம் நாளன்று, இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கவெல்லைக்குள், .............................. என்னும் இடத்தில் [2] ...................... என்பதற்காகவும், அதன் மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் ...................... ஆம் பிரிவின் கீழான தவறொன்றைப் புரிந்தாரென்பதற்காகவும், அவர் .............................. என்னுமிடத்தில் 20 ......... ஆம் ஆண்டு ...................... மாதம் ...................... ஆம் நாளன்று என்முன்னிலையில் விளங்கப்பட்டார் ஆதலாலும்;

சொல்லப்பட்ட தவறின்மீது சொல்லப்பட்ட [3] ........................ என்வரை விளங்குவதற்கென அமைக்கப்பட்ட யூரர்சபையானது 1979 ஆம் ஆண்டின் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கலைக்கப்பட்டதாதலாலும், [3] .................................... என்பவர் கோரப்பட்ட ரூபா .............................. ஆகிய பணத்தொகையிலான பிணைப்பொறுப்பைக் கொடுப்பதற்கு[4] தவறியிருப்பதால், அவர் வேறொரு யூரர்சபையினால் விளங்கப்படும் வரையில் கட்டுக்காவலில் தடுத்துவைப்படுதல் அவசியமாகியுள்ளது ஆதலாலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட [3] ......................... என்பவரைக் கூட்டிச்சென்று இந்த ஆணைப்பத்திரத்துடன் சேர்த்து, மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கண்காணிப்பாளரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்குமாறு மறியற்சாலைத் திணைக்கள அலுவலராகிய உமக்கு இது கட்டளையிடுவதற்கானதாகும்.

அத்துடன் சொல்லப்பட்ட [3] .............................. என்பவரை உமது கட்டுக்காவலில் சொல்லப்பட்ட மறியற்சாலையில் ஏற்றுக்கொள்ளுமாறும், வேறொரு யூரர்சபையினால் அவர் விளங்கப்படுவதற்காக ................................ மேல் நீதிமன்றத்தின் முன்னர் அவரைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்துமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படும் நாளாகிய 20 ...... ஆம் ஆண்டு ................ மாதம் ......................... ஆம் நாள் வரையில் அவரை அங்கு பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் நான் இத்தால் சொல்லப்பட்ட மறியற்சாலையின் கண்காணிப்பாளராகிய உமக்குக் கட்டளையிடுகின்றேன்.

20 ...... ஆம் ஆண்டு ........................... மாதம் ................. ஆம் நாளாகிய இன்று, .......................... என்னுமிடத்தில், எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) : க. கா.
மேல் நீதிமன்ற நீதிபதி.

1. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயரும் வதிவிடமும், பதவிப் பெயர் முதலியனவும்.

2. தவறை அல்லது தவறுகளைச் சுருக்கமாகக் கூறுக.

3. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர்.

4. அவசியமற்ற சொற்களை நீக்கிவிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 11

### விளக்கத்துக்காகப் பாரப்படுத்தற்கான ஆணைப்பத்திரம்

வழக்கு இல. :- ........................................

............................................................ நீதிவான் நீதிமன்றத்தில்.

........................................ மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு,

[1] ...................................................... என்பவரை (அல்லது என்பவர்களை) பின்வரும் குற்றச்சாட்டு [2, 3] ...................... மீது விளக்கத்துக்காக நான் பாரப்படுத்தியுள்ளேன் ஆதலால்,

சொல்லப்பட்ட [4] .................................... என்பவரை உமது காட்டுக்காவலில் சொல்லப்பட்ட மறியற்சாலையில் ஏற்றுக்கொள்ளுமாறும், மேல் நீதிமன்றத்தின் முன்னர் சொல்லப்பட்ட குற்றச்சாட்டின் மீதான [5] .................. விளக்கம் வரையிலும் அவ்விளக்கத்தின் போது அல்லது சட்டத்தின் இயல்பான முறையின்படி அதிலிருந்து விடுவிக்கப்படும் வரையில் [6] ........................ பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் மறியற்சாலைத் திணைக்கள அலுவலராகிய உமக்கு இது கட்டளையிடுவதற்கானதாகும்.

மேலும் சொல்லப்பட்ட [4] .......... என்பவர், சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னரான[5] ................................ விளக்கத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் போதெல்லாம், மேல் நீதிமன்றத்தின் முன்னர் அவரைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்துமாறு சொல்லப்பட்ட கண்காணிப்பாளராகிய உமக்கு இத்தாற் கட்டளையிடப்படுகின்றது.

20 ...... ஆம் ஆண்டு ............... மாதம் ...................... ஆம் நாளாகிய இன்று ................................ என்னும் இடத்தில் எனது கைப்பட வழங்கப்பட்டது.

(ஒப்பம்) :- க. கா.

..............................................பிரிவுக்கான நீதிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

1. குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வதிவிடம், வதிவிடங்கள், பதவிப்பெயர் முதலியன, பெயர் அல்லது பெயர்கள்.
2. அல்லது ஒன்றினுள் கூடியனவாயின் "குற்றச்சாட்டுகள்".
3. விடயத்துக்கு ஏற்றவாறு, குற்றச்சாட்டை அல்லது குற்றச்சாட்டுக்களை உட்புகுத்துக.
4. குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர் அல்லது பெயர்கள்.
5. விடயத்துக்கு ஏற்றவாறு "அவரது" அல்லது "அவர்களது".
6. விடயத்துக்கு ஏற்றவாறு "அவரை" அல்லது "அவர்களை".

## இல. 12

## விளக்கத்தைப் பின்போடுவதன்மீது அல்லது ஒத்திவைப்பதன்மீது விளக்கமறியலில் வைப்பதற்கான அல்லது கட்டுக்காவலில் வைத்திருப்பதற்குப் பாரப்படுத்துவதற்கான ஆணைப்பத்திரம்.

வழக்கு இல :- ........................

.................................... உள்ள .............................. நீதிமன்றத்தில்.

............................................................ மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு,

[1] ........................................ என்பவர் 20 ......... ஆம் ஆண்டு ...................... மாதம் ................ ஆம் நாளன்று [2] .................................................................. புரிந்தாரென ........................... இல் உள்ள ........................ நீதிமன்றத்துக்கு 20 ................. ஆம் ஆண்டு ........................... மாதம் ........................ ஆம் நாளன்று முறைப்பாடு செய்யப்பட்டதாதலாலும் குற்றப்பகர்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாதலாலும் **(குற்றஞ்சாட்டப்பட்டவர் விளங்கப்படுமிடத்து,** "சொல்லப்பட்ட [3] ........................ என்பவர் என் முன்னர் விளக்கத்துக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளார் ஆதலாலும்" என்பதையும் **சேர்க்க)** :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான சாட்சிக்காரரொருவர் வராத காரணத்தினால் சொல்லப்பட்ட முறைப்பாட்டின் விடயம் பற்றிய விசாரணையை/ விளக்கத்தை ............................ இல் 20 ............ ஆம் ஆண்டு ............ மாதம் ...................... ஆம் நாள்வரையில் பின்போடுதல் **(அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு** ஒத்திவைத்தல்) அவசியமாகியுள்ளது ஆதலாலும், அதற்கிடையில் சொல்லப்பட்ட [3] .................................. என்பவர் கட்டுக்காவலில் விளக்கமறியலில் வைக்கப்படுதல் வேண்டும் **(அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு** கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தப்படுதல் வேண்டும்) என்பது அவசியமான தாதலாலும் [5]

சொல்லப்பட்ட [3] ............................ என்பவரைக் கூட்டிச்சென்று, அவரையும் ஆணைப்பத்திரத்தோடு சேர்த்து, மேலே குறிப்பீடுசெய்யபபட்ட கண்காணிப்பாளருக்குப் பாதுகாப்பாக ஒப்படைக்குமாறு மறியற்சாலைத் திணைக்கள அலுவலராகிய உமக்கு இது கட்டளையிடுவதற்கானதாகும். அத்துடன் சொல்லப்பட்ட [3] ...................................... என்பவரைச் சொல்லப்பட்ட மறியற்சாலையில் உமது கட்டுக்காவலில் ஏற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட விசாரணையானது / விளக்கமானது எந்த நேரத்துக்கும் இடத்துக்கும் பின்போடப்படுகின்றதோ **(அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு,** ஒத்தி வைக்கப்படுகின்றதோ) அந்த நேரத்திலும் இடத்திலும், சொல்லப்பட்ட முறைப்பாட்டுக்கு / குற்றப்பகர்வுக்கு மேலும் விடையளிப்பதற்கும் சட்டத்துக்கிணங்க மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காகவும், கீழே கையொப்பமிடுபவர் முன்னர் அல்லது அப்போதைக்கு அங்கு இருக்கக்கூடிய அத்தகைய எவரேனும் நீதிவானின் **(அல்லது விடயத்துக்கு ஏற்றவாறு,** மேல் நீதிமன்ற நீதிபதியின்) முன்னர், சொல்லப்பட்ட கண்காணிப்பாளராகிய நீவிர் அவரைக் கொண்டுவந்து முன்னிலைப்படுத்துமாறு இத்தால் தேவைப்படுத்தப்படும் நாளாகிய 20 ....... ஆம் ஆண்டு .................. மாதம் ......................... ஆம் நாள் வரையில், அவரை அங்கு பாதுகாப்பாக வைத்திருக்குமாறு, சொல்லப்பட்ட மறியற்சாலையின் சொல்லப்பட்ட கண்காணிப்பாளராகிய உமக்கு, இத்தால் கட்டளையிடுகிறேன்.

**(ஒப்பம்)** : க. கா. ..............................

நீதிவான்/ மேல் நீதிமன்ற நீதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.**

1. குற்றஞ்சாட்டப்பட்டவரின் வதிவிடம், பதவிப்பெயர் முதலியவையும், பெயரும்.
2. அழைப்புக்கட்டளையில் அல்லது ஆணைப்பத்திரத்தில் உள்ளவாறு தவறை அல்லது தவறுகளைக் கூறவும்.
3. குற்றஞ்சாட்டப்பட்டவரின் பெயர்.
4. வேறு வகையாகவிருப்பின், பின்போடுதலின் அல்லது ஒத்திவைப்பின் காரணத்தைக்கூறுக.
5. தவறானது குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடக்கூடிய தவறாகவிருப்பின், "கோரப்பட்ட ரூபா ............ ஆகிய பணத்தொகையிலான பிணைப்பொறுப்பைக் கொடுப்பதற்கு அவர் தவறினார் ஆதலாலும்" என்பதைச் சேர்க்கவும்.

**இல. 13.**

**நீதிவானொருவரால் வழங்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பின் மீது பாரப்படுத்தற்கான ஆணைப்பத்திரம்.**

| | |
|---|---|
| **கொழும்பு,** நீதிவான் நீதிமன்றத்தில் | **வெலிக்கடை** மறியற்சாலைக் கண் காணிப்பாளருக்கு |

**சார்லஸ் பெர்னான்டோ** என்பவர், சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவினுள், **கொம்பனித்தெருவில்,** 20 ......... ஆம் ஆண்டு ................ மாதம் ஆம் நாளன்று **ஜுவானிசு அப்பு** எனப்படும் ஒருவருக்கு வேண்டுமென்று காயம் விளைவித்து அதன் மூலம், தண்டனைச் சட்டக்கோவையின் **314** ஆம் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படற்குரிய தவறொன்றைப் புரிந்தமைக்காக, சொல்லப்பட்ட **கொழும்புப்** பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவரும் கீழே கையொப்பமிடுபவரான, நீதிவானின் முன்னர் இந்நாள் முறையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாராதலாலும், அதனால் ஒரு மாதக் கடூழிய மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டாராதலாலும்.

சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவரைக் கூட்டிச் சென்று, இந்த ஆணைப் பத்திரத்தோடு, மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கண்காணிப்பாளரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்குமாறும், சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவரைச் சொல்லப்பட்ட மறியற்சாலையில் உமது கட்டுக்காவலில் பெற்றுக்கொண்டு அங்கு மேற்சொல்லப்பட்ட தண்டனைத்தீர்ப்பை நிறைவேற்றுமாறு, சொல்லப்பட்ட மறியற்சாலையின் சொல்லப்பட்ட கண்காணப்பாளராகிய உமக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மேற்சொல்லப்பட்ட பிரிவில், **கொழும்பில்,** 20 .... ஆம் ஆண்டு ............ மாதம் ..........ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

**(ஒப்பம்) க. கா. ................**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## இல. 14

## குற்றத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டிற்கான பிணைப்பத்திரம்

**கொழும்பு** நீதிவான் நீதிமன்றத்தில்,

**கொழும்பு, கொள்ளுப்பிட்டி, 159 ஆம் இலக்கத்திலுள்ளவரும் கடைக்காரருமாகிய பேர்டினன்ட்டோத சில்வா** என்பவரும், மேற் சொல்லப்பட்ட **கொழும்பு, புறக்கோட்டை 239 ஆம் இலக்கத்திலுள்ளவரும், கடைக்காரருமாகிய டொன் சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவரும், 20 ...................... ஆம் ஆண்டு ................. ஆம் மாதம் ............. ஆம் நாளன்று, அப்பிரிவிலுள்ளவரும் அப்பிரிவுக்கானவருமாகிய பதிவாளராகிய என்முன்னர் வந்து நேர்முகமாக, அவர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு ரூபா [1] .................................. ஆகிய பணத்தொகை கொடுக்குமதியாகவுள்ளதென்பதும் பின்வரும் நிபந்தனையில் தவறுகை புரிந்தால், அவர்கள் ஒவ்வொருவரினதும் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை இலங்கை அரசாங்கத்தின் பிரயோகத்துக்காக அவர்கள் ஒவ்வொருவரும் இழக்கக்கடவர் என்றும் **ஒம்பாடு** தெரிவித்தனர் என்பது நினைவுகூரற்பாலது.

மேற்சொல்லப்பட்ட பிரிவுக்கான நீதிவானொருவரான, **வில்லியம் ஹென்றி** அவர்களின் கைப்பட அளிக்கப்பட்டதான குறித்தவொரு குற்றத்தீர்ப்பின் மூலம் சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவர், அவர் 20 ................. ஆம் ஆண்டு ........................ மாதம் ........................... ஆம் நாளன்று (குற்றத் தீர்ப்பில் கூறப்பட்டவாறான தவறைக் கூறுக) புரிந்ததற்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டாராதலாலும்.

சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவர் சொல்லப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்துள்ளார் ஆதலாலும்.

சொல்லப்பட்ட **சார்ல்ஸ் பெர்னான்டோ** என்பவர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்கியொழுகி அவர், அத்தகைய நீதிமன்றம் தீர்த்தளிக்கும் அத்தகைய செலவு தொகைகளை (எவையேனும் இருப்பின்) கொடுப்பின், இந்தப் பிணைப் பத்திரம் வெற்றானதாகிவிடுமென்பது இந்தப் பிணைப்பத்திரத்தின் நிபந்தனையாகும்.

**(ஒப்பம்) : க. கா.** ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

................................ அன்று என்முன்னர் எடுக்கப்பட்டு ஓம்பாடு அளிக்கப்பட்டது.

[1]பணத்தொகையைக் கூறுக.

**முக்கிய குறிப்பு** : மேல் நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பொன்றுக்கு எதிரான மேன்முறையீட்டின் மீதான பிணைப்பத்திரத்துக்கு அவசியமான மாற்றங்களுடன் இதே படிவத்தை உபயோகிக்கவும்.

## இல. 15.

## குற்றப்பகர்வுப்படிவம்

**வெள்ளவத்தையைச்** சேர்ந்த

**கங்கானிகே கரோலிஸ் அப்பு** என்பவருக்கு,

இலங்கைக் குடியரசின் சட்டத்துறைத் தலைமையதிபதி ....................................... ஆகியவரின் பணிப்பின்பேரில் உமக்கு எதிராகக் குற்றம்பகரப்படுகின்றது. 20 .................. ஆம் ஆண்டு .......................... மாதம் .................. ஆம் தேதி இரவு, பொழுதுபட்டதன்பின்னரும் பொழுதுபுலர்வதன் முன்னரும், திருட்டுப்புரிவதற்காக, **கொழும்பு** நீதி நிருவாக வலயத்தில் .................. என்னும் இடத்திலுள்ள ............................ என்பவர் வதியும் வீட்டுக்குள் வலிந்து புகுந்து, அதன் மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் **443** ஆம் பிரிவின்கீழ்த் தண்டிக்கப்படற்குரிய தவறொன்றை நீவிர் புரிந்துள்ளீர் என்பது உமக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டாகும்.

**(ஒப்பம்)** : ..................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

## காண்பிபொருள்களின் நிரல்

1. ஓர் அலவாங்கு.
2. ஒரு மண்வெட்டி.
3. கல்கிசை பொலிசு நிலையத்தில் வைத்திருக்கப்பட்ட தகவற்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

## சாட்சிக்காரர்களின் நிரல்

1. கொழும்பு, காசில் ஒழுங்கை 5 ஆம் இலக்கத்திலுள்ள மாரியா பெர்னான்டோ.
2. இரத்மலானை. கிராமசேவை உத்தியோகத்தர், டொன் சார்ல்ஸ் அப்புகாமி.
3. கல்கிசையிலுள்ள பொலிசு சார்ஜன்டு, வில்லியம் தோமஸ்.

## இல. 16.

## மேன்முறையீட்டு மனுவுக்கான படிவம்

இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்.

மாண்புமிகு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கும் ஏனைய நீதிபதிகளுக்கும்,

**அ. ஆ.** என்பவரின் மனு

பின்வருமாறு கூறுவதாவது :-

1. *தங்கள் மனுதாராகிய மேற்சொல்லப்பட்ட **அ. ஆ.** என்பவர் (இங்கு, குற்றச்சாட்டைச் சுருக்கமாக விவரிக்க) என்பதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு, 20 ........ ஆம் ஆண்டு ................ மாதம் ..................... ஆம் நாளன்று ........................................................ என்றும் இடத்தில் நடாத்தப்பட்ட ........................................ நீதிவான் நீதிமன்றத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட / விடுதலைத் தீர்ப்பளிக்கப்பட்டு ** அதன் பேரில் பின்வரும் தீர்ப்பு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.

(தீர்ப்பின் பொழிப்பைச் சுருக்கமாக இங்கு கூறுக)

2. பின்வரும் காரணங்களுக்காக, சொல்லப்பட்ட தீர்ப்பில் தங்கள் மனுதார் * அதிருப்தி கொண்டுள்ளார்.

(மேன்முறையீட்டாளர், மேன்முறையீட்டுக்கான எந்த ஏதுக்களின் மீது நம்பியுள்ளாரோ, அவ்வேதுக்களைக் கூறி, தொடர் வரிசைப்படி எண்ணிடவும்)

3. நீதிமுறை தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகைய தீர்ப்பை நேர்மாறாக்குமாறு அல்லது அத்தகைய கட்டளையை ஆக்குமாறு தங்கள் மனுதார் * இறைஞ்சிக் கேட்கின்றார்.

(ஒப்பம்) : ..........................................

* சட்டத்துறைத் தலைமையதிபதி மேன்முறையீட்டாளராகவிருப்பின், "தங்கள் மனுதாராகிய" என்ற சொற்களை விட்டுவிடுக.

** ஏற்புடையனவாகாதவற்றை நீக்கிவிடவும்.

மு. கு. - மேன்முறையீடு அல்லது மேன்முறையீட்டுக்கு அனுமதிகோரும் விண்ணப்பமானது, மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராகவுள்ளவிடத்து, ஏற்ற திரிபுகளோடு இப்படிவம் பயன்படுத்தப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்.**

**இல. 17**

**சிறப்பு வழக்கிற்கான படிவம்**

இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்.

**அ. ஆ.** என்பவர் முறைப்பாட்டாளராகவும், **க. ச.** என்பவர் எதிரியாகவும் உள்ள முறைப்பாடொன்றின் விடயத்தில்,

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் **XXIX** ஆம் அத்தியாயத்தின் ஏற்பாட்டின்கீழ் கீழே கையொப்பமிட்டவரினால் எடுத்துக் கூறப்பட்ட வழக்கு.

20 ......... ஆம் ஆண்டு ................................ மாதம் .................. ஆம் நாளன்று, கீழே கையொப்பமிட்டவரின் முன்னர் ........................................................ என்னும் இடத்தில் நடாத்தப்பட்ட ..................................... நீதிவான் நீதிமன்றத்தில் / மேல் நீதிமன்றத்தில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிரி, **க. ச.** என்பவர் பின்வருமாறு குற்றஞ்சாட்டப்பட்டார்:

**(விடயத்துக்கேற்றாற்போல குற்றச்சாட்டை அல்லது குற்றப்பகர்வை இங்கு கூறுக)**

சொல்லப்பட்ட குற்றச்சாட்டு / குற்றப்பகர்வு பற்றிய விசாரணையில் பின்வருமாறு எண்பிக்கப்பட்டது. **(அனுமதிக்கப்படல் வேண்டும் எனக் கருதப்பட்டுள்ள சட்டப்பிரச்சினையை அல்லது சட்டப்பிரச்சினைகளை எழுப்புவதற்கு அவசியமாகக்கூடியவாறான எத்தனை நிகழ்வுகள் எண்பிக்கப்பட்டனவோ அத்தனை நிகழ்வுகளையும் இங்கு கூறுக)**

அதன் மேல், எதிரி தரப்பில் பின்வருமாறு வாதிடப்பட்டது. **(எழுப்பப்பட்ட சட்ட ஆட்சேபனையை இங்கு கூறுக.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், **(நீதிமன்றம் எந்த ஏதுவின் மீது வழக்கை முடிவுசெய்ததோ அத்த ஏதுவை இங்கு கூறுக)** என நான் அபிப்பிராயம் கொண்டுள்ளேனாதலால், **(நீதிமன்றத்தின் முடிவையும் தீர்ப்பையும் இங்கு கூறுக)** என நான் தீர்மானிக்கின்றேன்.

சட்டப்பிரச்சினை தொடர்பில் சொல்லப்பட்ட தீர்மானம் செம்மையானதா என்பதும், முற்கூறப்பட்டவை பற்றி செய்ய வேண்டியது யாது என்பதுமே இந்நீதிமன்றத்தின் ஆலோசனைக்குரிய விடயங்களாகும்.

20 ............ ஆம் ஆண்டு .......................... மாதம் ............ ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

**(ஒப்பம்)** : க. கா. ..............................

## இல. 18.

## யூர்சபையொன்று எவ்வலுவலரின் பொறுப்புக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வலுவலரினால் செய்யப்படவேண்டிய சத்தியத்துக்கான படிவம்.

அவர்களுடன் எவரும் பேசுவதனை நீர் அனுமதித்தலாகாது என்பதுடன், அவர்கள் தங்களுக்கிடையில் உடன்பட்டுக்கொண்டார்களாவெனக் கேட்பதற்குத்தவிர நீதிபதியின் அனுமதியின்றி நீரும் அவர்களுடன் பேசுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை

## (விசேட ஏற்பாடுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தங்கள் அமுலுக்கு வந்த திகதிகள்.

| | |
|---|---|
| 36 இல 1979 | 31 வைகாசி 1979 |
| 68 இல 1979 | 19 கார்த்திகை 1979 |
| 52 இல 1980 | 11 மார்கழி 1980 |
| 39 இல 1982 | 12 ஐப்பசி 1982 |
| 49 இல 1985 | 27 மார்கழி 1985 |
| 11 இல 1988 | 19 வைகாசி 1988 |
| 12 இல 1988 | 19 வைகாசி 1988 |
| 13 இல 1988 | 19 வைகாசி 1988 |
| 21 இல 1988 | 15 ஆடி 1988 |
| 15 இல 1989 | 03 கார்த்திகை 1989 |
| 12 இல 1990 | 06 பங்குனி 1990 |
| 04 இல 1993 | 12 மாசி 1993 |
| 04 இல 1995 | 10 மாசி 1995 |
| 20 இல 1995 | 19 ஐப்பசி 1995 |
| 19 இல 1997 | 12 ஆவணி 1997 |
| 28 இல 1998 | 04 ஆனி 1998 |
| 47 இல 1999 | 10 மார்கழி 1999 |
| 12 இல 2002 | 17 ஆடி 2002 |
| 14 இல 2005 | 31 வைகாசி 2005 |
| 21 இல 2005 | 02 ஆவணி 2005 |
| 07 இல 2006 | 27 பங்குனி 2006 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

---

(2007,ஒற்றோபர் மாதம் 09 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**2007,** ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் **II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

[2007, ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**புலனாய்வுகளை நடத்துவதற்கு வசதியளிப்பதற்காக பிடியாணையின்றிக் கைது செய்யப்பட்டவர்களின் தடுப்புக் காலப்பகுதியை நீடிப்பதற்கும், குறித்த சில வழக்குகளில் சுருக்கமுறையற்ற விசாரணையை நடத்துவதனைத் தவிர்ப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும், வழக்குத் தொடுநருக்கான சாட்சிக்காரர்களின் சத்தியத்தின்மீதான வாக்குமூலத்தை எடுப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும். அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் சட்டமாக்கப்படுவதாகுக -

1. இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 43 (அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளைத் தவிர, அச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எவரேனும் சமாதான அலுவலர், பிடியாணையொன்றில்லாமல் கைது செய்யப்பட்ட ஆளொருவரை விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளின் கீழும் நியாயமானதைவிட- கைதுசெய்யப்பட்ட ஆளைத் தடுத்த வைக்கும் காலப் பகுதி குறித்த சில விடயங்களில் இருபத்துநான்கு மணித்தியாலங் களுக்கு அல்லது நாற்பத்தெட்டு மணித்தியாலங் களுக்கு மேற் படுத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டவொரு காலப்பகுதிக்கு கட்டுக்காவலில் தடுத்துவைத்தலோ அல்லது வேறு வகையில் மறித்துவைத்தலோ ஆகாது என்பதுடன், அத்தகைய காலப்பகுதியானது கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவான் முன்னிலைக்கு பிரயாணம் செய்வதற்கு அவசியமான நேரம் நீங்கலாக இருபத்து நான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

ஆயினும், கைதுசெய்தலானது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தவறு தொடர்பிலானதாக இருக்குமிடத்து, பொலிசு கட்டுக்காப்பில் அத்தகைய தடுப்புக் காலப்பகுதியானது, கைதுசெய்யப்பட்ட ஆள் அவர் முன்னிலையில் முன்வைக்கப்படுவதன்மீதும் மேலும் புலனாய்வுகளின் நோக்கத்திற்கு அத்தகைய ஆளைத் தடுத்துவைப்பது அவசியம் என்ற பயன்பட சொல்லப்பட்ட இருபத்துநான்கு மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் உதவிப் பொலிசு கண்காணிப்பாளரின் பதவி வரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலரொருவரால் கோப்பிடப்பட்ட சான்றிதழொன்றின் மீதும் அதன் சார்பில் நீதிவானால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மேல் இருபத்துநான்கு மணித்தியாலங்களை விஞ்சாத மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம். ஆயினும், தடுத்துவைத்தலின் கூட்டுமொத்தக் காலப்பகுதி நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

ஆயினும், மேலும், மேலுமொரு காலப்பகுதியொன்றுக்கு கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அத்தகைய தடுப்புக் காலத்தின் போது அவர் விரும்பும் சட்டத்தரணியைக் கலந்தாலோசிப்பதற்கும் அவர் விரும்பும் எவரேனும் உறவினருடன் அல்லது நண்பருடன் தொடர்பு கொள்ளுவதற்கும் சந்தர்ப்பமொன்று செய்து கொடுக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமடையும் சூழ்நிலைகளில் புரியப்படும் தவறின் விடயத்தில் நேரடிக் குற்றப்பகர்வு.

3. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும் மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறைப்புரிதல் தொடர்பில் பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் நிலவுமிடத்து. குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புவது சட்டத்துறை தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குற்றப்பகர்வை நேரடியாக அனுப்புகையில், தன்னியக்கத்தால் அல்லது இயைபான பதிவேடு நீதிவானிடமிருந்து கிடைக்கப்பெற்றதன்மீது அவ்வாறு செய்ய முனைதல் வேண்டும்.

நீதிவான் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதி பதிக்கு அனுப்புதல்.

4. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிதல் தொடர்பில் மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் இருக்குமிடத்து, நீதிவான் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV இன் நியதிகளின்படி பூர்வாங்க விசாரணையொன்றை நடத்துதலாகாது என்பதுடன், நடவடிக்கைகளின் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உடனடியாக அனுப்புதலும் வேண்டும் அத்துடன், அதன் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின்படி செயற்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி நடவடிக்கைகளின் பதிவேடு நீதிவானால் கிடைக்கப்பெற்றதன்மீது சட்டத்துறைத் தலைமையதிபதி -

(அ) மோசமடையும் சூழ்நிலைகள் அல்லது மேற்சொல்லப்பட்ட தவறுபுரிதல் தொடர்பில் பொதுமக்களின் அமைதியைக் குழப்பத் தூண்டும் சூழ்நிலைகள் இருப்பதாக அவர் அபிப்பிராயப்படுமிடத்து குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) சூழ்நிலைகள் குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுவதைத் தேவைப்படுத்த வில்லை என அவர் அபிப்பிராயப்படுமிடத்து, பதிவேடுகள் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவற்றை நீதிவானுக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதுடன் பூர்வாங்க விசாரணையொன்று 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV இன் நியதிகளின்படி நடைபெற வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்.

(3) நீதிவான், மேற்கூறப்பட்ட சட்டக்கோவையின் அத்தியாயம் XV என்பதன் நியதிகளின்படி பூர்வாங்க விசாரணையொன்றை நடத்த முன்வருவாராயின், சட்டத்துறைத் தலைமையதிபதி, குற்றப்பகர்வை மேல் நீதிமன்றத்திற்கு நேரடியாக அனுப்புதனைக் கருத்திற்கொள்ளும் நோக்கத்திற்கு வழக்கு நடவடிக்கையின் பதிவேட்டைக் கோருதல் வேண்டும். அத்தகைய விடயத்தில் நீதிவான் வழக்கு நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்தம் செய்து வழக்கு நடவடிக்கைகளின் பதிவேட்டைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். அத்துடன், அதன் பின்னர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின்படி செயற்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு நடவடிக்கைகள் தொண்ணூறு நாட்களுக்குள் முடிவுறுத்தப் படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதன் கீழான வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

சத்தியத்தின் மீதான வாக்குமூலம்.

6. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV என்பதில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மேற்கூறப்பட்ட அத்தியாயத்தின்கீழ் விசாரணையொன்றை நடத்துகையில், நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் தெரிந்த ஆட்களின் கூற்றுக்களை எடுப்பதற்கு பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நீதிவான், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XI என்பதன் நியதிகளின்படி நடத்தப்பட்ட புலனாய்வின் போது சாட்சிக்காரரால் அளிக்கப்பட்ட கூற்றைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் சாட்சிக்காரரின் முன்னிலையிலும் அவருக்குக் கேட்கும் விதத்திலும் வாசித்தல் அல்லது வாசிக்கச் செய்வித்தல் வேண்டும். அத்துடன், கூற்று அவரால் பொலிசுக்குச் செய்யப்பட்ட கூற்றின் செம்மையான பதிவேடொன்றானதா என்பதையும் சாட்சியிடம் கேட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) (அ) சாட்சிக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் செய்யப்பட்ட விசாரணையொன்றுக்கு மறுமொழியாக, கூற்றானது, அவர் பொலிசுக்குக் கூறியதன் செம்மையான பதிவேடொன்றாகும் எனக்கூறுவாராயின் நீதிவான் அந்நிகழ்வைப் பதிதல் வேண்டும். நீதிவான் சாட்சிக்காரர் அவ்வாறு விரும்பினால் அவர் செய்த ஆரம்பக்கூற்றுக்கு அத்தகைய சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும். அத்தகைய சேர்த்தல் அல்லது மாற்றல் ஒவ்வொன்றும் பதியப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், சாட்சிக்காரர் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் ஏதேனும் குறுக்கு விசாரணை செய்யப்படுவதனை அனுமதித்தலாகாது. ஆனால் நீதிவான், புலனாய்வின் பொழுது சாட்சிக்காரரால் செய்யப்பட்ட கூற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம்பற்றி அல்லது அவரது ஆரம்பக்கூற்றுக்கான எவையேனும் சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைப்பற்றி, அவ்வாறு ஏதேனும் இருப்பின் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் விடயம் பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம். அவ்வாறு செய்யப்பட்ட விளக்கம் ஒவ்வொன்றும் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

ஆயினும், பொலிசுக்குச் செய்யப்பட்ட சாட்சியொருவரின் கூற்றில் அடங்கியுள்ள விடயத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு வழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்குவிசாரணை செய்யப்படுவதற்காகச் சாட்சிக்காரரை முன்நிறுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நீதிவான் அதன்பின்னர் புலனாய்வின் போது சாட்சிக்காரரால் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட கூற்றினதும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவரால் தரப்பட்ட விளக்கங்களினதும், அவ்வாறு எவையேனுமிருப்பின், (3) ஆம் உட்பிரிவின் கீழ் அவரால் அவரது ஆரம்பக்கூற்றுக்குச் செய்யப்பட்ட சேர்த்தல்களினதும் அல்லது மாற்றங்களினதும், அவ்வாறு எவையுமிருப்பின், செம்மையை உறுதிப்படுத்தி சாட்சிக்காரரால் நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட கூற்றை சாட்சிக்காரருக்கு வாசித்தல் அல்லது வாசிக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட விடயங்களின் உண்மையை சத்தியஞ்செய்யுமாறு அல்லது உறுதியுரை செய்யுமாறு சாட்சிக்காரரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(5) (அ) மறுபுறத்தில் சாட்சிக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் செய்யப்பட்ட விசாரணையொன்றுக்கு மறுமொழியாக, கூற்று அதன் முழுமையில் அல்லது பகுதியளவில் தாம் பொலிசுக்கு கூறியிருந்ததன் செம்மையான பதிவொன்றல்ல எனக் கூறுவாராயின் நீதிவான், தவறு தொடர்பிலான சூழ்நிலைகளின் விபர விளக்கமொன்றைக் கொடுப்பதற்கு அல்லது விடயத்திற்கேற்ப சாட்சிக்காரர் செய்ய விரும்பக்கூடியவாறான அத்தகைய சேர்த்தல்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்குச் சாட்சிக்காரரை அனுமதித்தல் வேண்டும்.

(ஆ) நீதிவான், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் சாட்சிக்காரர் குறுக்கு விசாரணை எதுவும் செய்யப்படுவதனை அனுமதித்தலாகாது. ஆனால், சாட்சிக்காரரால் தரப்பட்ட விபர விளக்கத்திலிருந்து அல்லது செய்யப்பட்ட சேர்த்தல்களில் அல்லது மாற்றங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம்பற்றிக் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விளக்கத்தை நீதிவான் சாட்சிக்காரரிடம் கேட்கலாம் அல்லது அத்தகைய விடயம்பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், சாட்சிக்காரர் ஒருவரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றில் அடங்கியுள்ள விடயத்தின் தன்மையைக் கருத்திற் கொண்டு வழக்குத்தொடுநர், குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்காகச் சாட்சிக்காரரை முன்நிறுத்தலாம்.

(இ) நீதிவான், (அ) என்னும் பந்தியின் கீழ் சாட்சிக்காரரால் தரப்பட்ட விபர விளக்கத்தையும் அல்லது செய்யப்பட்ட சேர்த்தல்களையும் அல்லது மாற்றங்களையும், (ஆ) என்னும் பந்தியின்கீழ் தரப்பட்ட எவையேனும் விளக்கங்களையும் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைச் சாட்சிக்காரருக்கு வாசித்தலும் அல்லது வாசிக்கச் செய்வித்தலும் வேண்டும். அத்துடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட விடயங்களின் உண்மையைச் சத்தியஞ்செய்யுமாறு அல்லது உறுதியுரை செய்யுமாறு சாட்சிக்காரரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(6) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகச் சாட்சிக்காரரொருவரை முன்நிறுத்துவதற்கு முன்னர், நீதிவான், புலனாய்வின் போது அந்தச் சாட்சிக்காரரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றைத் திறந்த நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்கு குற்றஞ்சாட்டப் பட்டவரை அல்லது அவரது வழக்குரைப்பவரை அனுமதித்தல் வேண்டும்.

(7) நீதிவான், புலனாய்வின் போது சாட்சிக்காரரால் பொலிசுக்கு அளிக்கப்பட்ட கூற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை ஒப்பமிடுதலும் சாட்சிக்காரரை ஒப்பமிடச் செய்தலும் வேண்டும் என்பதுடன், அதனைக் கோப்பிடச் செய்வித்தலும் வேண்டும். அவ்வாறு கோப்பிடப்பட்ட பிரதி எல்லா நோக்கங்களுக்காகவும் விசாரணைப் பதிவேட்டின் ஒருபாகமாக அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) நீதிவான் நிபுணச் சாட்சிக்காரர் ஒருவரையோ அல்லது பொலிசு அலுவலர் ஒருவரையோ கட்டளைவிட்டழைத்தலாகாது. ஆனால் விடயத்துக்கேற்ப அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரின் அறிக்கையை அல்லது அத்தகைய பொலிசு அலுவலரின் சத்தியக்கடதாசியை முன்வைக்கச் செய்வித்தலும் கோப்பிடச் செய்வித்தலும் வேண்டும்.

ஆயினும், நீதிவான் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், நிபுணச் சாட்சிக்காரர் ஒருவரின் விடயத்திலும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன்சம்மதத்துடன் பரிசீலனைக்கென நீதிமன்றத்தில் சமுகமாயிருக்குமாறு நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரை ஆணையிட்டழைக்கலாம்.

(9) நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் (8) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அழைப்பாணைக்கு மறுமொழியாக நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து நீதிவான் அத்தகைய நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் குறுக்கு விசாரணை செய்யப்பட அனுமதித்தலாகாது. ஆனால் விடயத்திற்கேற்ப நிபுணச் சாட்சிக்காரரின் அறிக்கையினின்று அல்லது பொலிசு அலுவலரின் சத்தியக் கடதாசியின்று அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரின் அல்லது பொலிசு அலுவலரின் பரிசோதனையினின்றெழும் எதேனும் விடயம் பற்றிய குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது அவரது வழக்குரைப்பவரால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் விளக்கங்களை அத்தகைய நிபுணச் சாட்சிக்காரரிடம் அல்லது பொலிசு அலுவலரிடம் கேட்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் விடயம்பற்றி நீதிவான் தாமே தேவைப்படுத்தக்கூடிய ஏதேனும் விளக்கத்தைச் சாட்சிக்காரரிடம் கேட்கலாம். அவ்வாறு செய்யப்படும் விளக்கம் ஒவ்வொன்றும் பதியப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) நிபுணச் சாட்சிக்காரர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட கூற்றொன்றும் இப்பிரிவின் கீழ் குறுக்குவிசாரணைக்கென முன்நிறுத்தப்பட்ட சாட்சிக்காரர் ஒருவரால் செய்யப்பட்ட சத்தியத்தின் மீதான வாக்குமூலமும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் நியதிகளின்படி சாட்சியத்தில் ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(11) (அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(i) தலைமறைவாக இருக்குமிடத்து அல்லது நாட்டைவிட்டுச் சென்றிருக்குமிடத்து. அல்லது

(ii) சுகவீனம் காரணமாக நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்க, முடியாதிருக்குமிடத்து அல்லது அங்கு தொடர்ந்திருக்க முடியாதிருக்குமிடத்து அத்துடன் அவர் இல்லாமலேயே ஒன்றில் விசாரணையைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்ந்து நடத்துவதற்கு சம்மதமளித்திருக்குமிடத்தும், அத்தகைய விசாரணை அவருக்குப் பங்கமெதுவுமின்றி தொடங்கப்படலாம் அல்லது தொடர்ந்து நடத்தப்படலாம். அல்லது

(iii) நீதிமன்றத்தில் அவரது நடத்தை காரணமாக விசாரணையின் முன்னேற்றத்தை தடைசெய்யுமிடத்து அல்லது தடுக்குமிடத்து.

நீதிவான் இந்நிகழ்வுகளையிட்டுத் திருப்திப்படுவாராயின் குற்றஞ்சாட்டப்பட்டவர் இல்லாமலேயே விசாரணையைத் தொடங்கலாம் தொடரலாம் அல்லது தொடர்ந்து நடத்தலாம்.

(ஆ) சட்டத்தரணியொருவர், சமூகமளிக்காத அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்காகத் தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வொன்றின்மீது விசாரணையொன்று இருக்குமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல் நீதிமன்றத்தில் சமூகமாயிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 416 ஆம் பிரிவு பதிவுசெய்யப்பட்ட சத்தியத்தின் மீதான வாக்குமூலம் ஏற்புடையதாதலாகாது என்பதைத் தவிர இயலுமானவரை விசாரணையானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும்.

(12) புலனாய்வின்போது சாட்சிக்காரர் ஒருவரால் பொலிசுக்குச் செய்யப்பட்ட கூற்று, விடயத்திற்கேற்ப (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விளக்கங்கள், எவையுமிருப்பின் அல்லது (4) உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட சேர்த்தல்கள், மாற்றங்கள், விளக்கங்கள் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான விளக்க விபரம் என்பவற்றுடன்சேர்த்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அந்தச் சாட்சிக்காரரின் சத்தியத்தின்மீதான வாக்குமூலமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(13) விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக முன்நிறுத்தப்பட்ட சாட்சிக்காரர் ஒவ்வொருவரும் சட்டத்தரணியொருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(14) மேலே தரப்பட்ட நடவடிக்கை முறை முடிவுற்றதன் பின்னர், வழக்கு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கிணங்கக்கையாளப்பட வேண்டுமென நீதிவான் கருதாவிடில் நீதிவான், குற்றச்சாட்டை, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்து அதன் இயல்பைச் சாதாரண மொழியில் விளங்கப்படுத்துதலும் அத்துடன் சாட்சிகளை அழைப்பதற்கும் அவர் அவ்வாறு விரும்பினால் தமது சார்பில் சாட்சியமளிப்பதற்குமான உரிமையொன்று அவருக்குண்டு என அவருக்கு அறிவித்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XV இன் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடாத்தப்படும் ஏதேனும் பூர்வாங்க விசாரணைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

சட்டத்தின் கால வெல்லை.

7. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2007, மே மாதம் முப்பத்தோராம் தேதியிலிருந்து தொடங்குகின்ற இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர், இச்சட்டம் நடைமுறையிலிருக்கும் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரான ஒரு மாத காலப்பகுதிக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் சட்டத்தின் நடைமுறையை மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம். ஆயினும் ஏதேனும் ஒரு நீடிப்பின் கூட்டுமொத்தக் காலப்பகுதி வர்த்தமானியில் குறித்துரைக்கப்படுகின்றவாறு அத்தகைய நீடிப்பின் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை பாராளுமன்றத்திற்கு அதன் அங்கீகாரத்திற்கென முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(4) கட்டளை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தேதியைக் குறித்துரைக்கும் அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுபடியாக்குதல்.

8. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் நாளன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது எந்தச் செயல் அல்லது காரியத்திற்காக இயலச்செய்கின்ற ஏற்பாடு இச்சட்டத்தின்கீழ் செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயல் அல்லது காரியம் செல்லுபடியானதாகச் செய்யப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

## அட்டவணை

(பிரிவு 2)

| நிரை I | நிரை II |
|---|---|
| 01. அட்டவணையில் தரப்பட்டுள்ள தவறொன்றுக்கு உடந்தையாயிருத்தல், உடந்தையளிக்கப்பட்ட செயல் புரியப்படின் | பிரிவு 102 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 02. அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறுக்கு உடந்தையளிக்க அல்லது தவறைப்புரிய சூழ்ச்சி செய்தல். | பிரிவு 113ஆ - தண்டனைச் சட்டக்கோவை. |
| 03. கொலை. | பிரிவு 296 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 04. கொலையாகாத குற்றமுடைய மரணம் | பிரிவு 297 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 05. கொலை முயற்சி. | பிரிவு 300 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 06. கொலை புரிவதற்காக ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 355 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 07. ஆளொருவரை தவறாக அடைத்து வைக்கும் உளக்கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 356 - தண்டனைச் சட்டக்கோவை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 08. | ஆளொருவரை முறைகேடாக கடுங் காயத்திற்கு உட்படுத்தும் உளக்கருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல். | பிரிவு 358 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 09. | கவர்ந்து செல்லப்பட்ட ஆளை மறைத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல். | பிரிவு 359 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 10. | கற்பழிப்பு. | பிரிவு 364 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 11. | மரணத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு முதலியன செய்துவிட்டு புரியப்படும் திருட்டு. | பிரிவு 371 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 12. | மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கும் முயற்சியில் கொள்ளை. | பிரிவு 383 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 13. | மரணம் விளைவிக்கக்கூடிய ஆயுதந்தாங்கியபடி கொலை முயற்சி. | பிரிவு 384 - தண்டனைச் சட்டக்கோவை. |
| 14. | மேற்கூறப்பட்ட எவையேனும் தவறுகளைப்புரியும் முயற்சி. | பிரிவு 490 - தண்டனைச் சட்டக்கோவை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 15. வெடிப்பொருட்களை, தீங்கு விளைவிக்கும் ஆயுதம் ஒன்றை அல்லது துவக் கொன்றைப் பயன்படுத்திப் புரியப்படும் தவறு. | வெடிபொருட்கள் என்பது (183 ஆம் அத்தியாயமான) வெடி பொருட்கள் சட்டத்தில் வரை விலக்கணப் படுத்தப்பட்டவாறு. தீங்கு விளைவிக்கும் ஆயுதம் 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு அத்துடன் துவக்கு என்பது, (182 ஆம் அத்தியாயமான) சுடு படைக்கலங்கள் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டவாறு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமறியல் மறியற்காரர்களை விடுவித்தல் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1991 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, விளக்கமறியல் மறியற்காரர்களை விடுவித்தல் சட்டம்.

---

(1991, மார்ச் மாதம் 08 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

1991, டிசம்பர் மாதம் 08 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் **II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1991 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, விளக்கமறியல் மறியற்காரர்களை விடுவித்தல் சட்டம்.**

(1991, மார்ச்சு மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவைச் சட்டத்தைத் திருத்து வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 1991 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க, விளக்கமறியல் மறியற்காரர்களை விடுவித்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் :- சட்டத்தின் ஏற்புடைமை.

(அ) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள தவறொன்றைப் புரிந்துள்ளாரென அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளாரென சந்தேகிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பவரும், அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் விடுவிக்கப்படாமல் அதனையடுத்து, அவரால் புரியப்பட்டிருப்பதாகச் சார்ந்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் தவறு தொடர்பில், எத் தவறு தொடர்பில் அவர் முன்னர் விளக்கமளியலில் வைக்கப் பட்டிருந்தாரோ அத்தவறுக்கான விளக்கம் முடிவடைவதற்கு முன்னர் விளக்கமறியில் வைக்கப் பட்டுள்ளவரும்,

ஆன குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்ட அத்தகைய ஆள் இதனகத்துப் பின்னர் "இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவரான குற்றஞ் சாட்டப்பட்ட ஆளொருவர் தொடர்பில் நீதிமன்றத்தின் தத்துவம்.

3. (1) இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அவருக்குப் பிணை வழங்கப்பட்டு, ஆனால் பிணை கொடுத்துதவுவதற்கு அவரது இயலாமையின் காரணமாக, விளக்கமறியற் கட்டளையின் தேதியிலிருந்து ஒரு மாதம் முடிவுற்றதன்மேல் தொடர்ந்தும் விளக்க மறியலில் இருந்து வருமிடத்து, அத்தகைய ஆள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மறியற் சாலையின் கண்காணிப்பாளர், அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்தின் முன்னிலையில் அவரை கொணருதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றத்தில் அத்தகைய ஆள் தோன்றுவதற்காக பிணைகாரர் இல்லாமலே பிணைமுறியொன்றை அவர் எழுதி நிறைவேற்றுவதன் மேல், நீதிமன்றம் அவரை விடுவித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர், விளக்கமறியல் கட்டளையின் தேதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு விளக்கமறியலில் இருக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மறியற்சாலையின் கண்காணிப்பாளர், மூன்று மாதங்கள் முடிவுற்றதன்மேல் அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்தின் முன்னிலையில் அவரைக் கொணருதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றமானது, அவ்வாறு அவர் கொணரப்பட்ட நேரத்தில் அத்தகைய ஆளுக்கு எதிராக, வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தொடுக்கப்பட்டிராதவிடத்து, நீதிமன்றத்தில் அத்தகைய ஆள் தோன்றுவதற்காக பிணைகாரர் இல்லாமலே முறியொன்றை அவர் எழுதி நிறைவேற்றுவதன்மேல் அவரை விடுவித்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர் ஓராண்டை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு விளக்கமறியலில் இருக்குமிடத்து, அத்தகைய ஆள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மறியற்சாலையின் கண்காணிப்பாளர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்றதன் மேல், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்தின் முன்னிலையில் அத்தகைய ஆளைக் கொணருதல் வேண்டும் என்பதுடன்

(அ) அத்தகைய ஆளை அவ்வாறு கொணரும் போது, அத்தகைய ஆளுக்கெதிரான விளக்கம் தொடங்கப்பட்டிராத விடத்து, நீதிமன்றத்தில் அத்தகைய ஆள் தோன்றுவதற்காகப் பிணைகாரர் இன்றி முறியொன்றை அவர் எழுதி நிறைவேற்றுவதன்மேல், நீதிமன்றம் அவரை விடுவித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய ஆளை அவ்வாறு கொணரும் போது விளக்கம் தொடங்கப்பட்டிருக்குமிடத்து, அவர் அவ்வாறு விடுவிக்கப்படல் ஆகாது என்பதற்கு நல்லவையும் போதுமானவையுமான காரணங்கள் பதியப்படவேண்டுமென நீதிமன்றத்துக்குத் தோன்றினாலன்றி, நீதிமன்றத்தில் அத்தகைய ஆள் தோன்றுவதற்காகப் பிணைகாரர் இன்றி முறியொன்றை அவர் எழுதி நிறைவேற்றுவதன்மேல் நீதிமன்றம் அவரை விடுவித்தல் வேண்டும்.

4. அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் தொடர்பில் விளக்கமறியல் கட்டளையொன்றை ஆக்கும் நீதிமன்றம் ஒவ்வொன்றும், குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் எச்சட்டஏற்பாட்டின் கீழ் அவ்வாறு விளக்கமறியல் ஆணைப்பத்திரம் மீது புறக்குறிப்பிடப்படச் செய்வித்தல் வேண்டும். குற்றஞ்சாட்டப் பட்டவர் எச் சட்டவாக்கத்தின் கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுளா ரென்பதை ஆணைப்பத்திரம் குறித்துரைத்தல்

5. எந்நீதி நிருவாகப் பிரிவு தொடர்பாக நீதிவான் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்நீதி நிருவாகப் பிரிவினுள் அமைந்துள்ள மறியற்சாலை ஒவ்வொன்றுக்கும் வருகைதருவது அந்நீதிவான் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும். மறியற் சாலைக்கு வருகைதரு வதற்கு நீதி வானுக்குள்ள கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டம் ஏற்புடைத் தாகும் ஆளை வருகை தரும் நீதிவான் முன்னிலையில் கொணருதல்.

6. மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுவதாக இச்சட்டம் ஏற்புடையதாகும் எவரேனும் ஆளை அவரை விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்தின் முன்னிலையில் அவ்வாறு கொணருவது மறியற்சாலைகள் கண்காணிப்பாளருக்கு உகந்ததாக இல்லாதிருக்குமிடத்து அவர் அப்பயன்படவமைந்த அறிக்கையொன்றை உடனடியாக அத்தகைய நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக அத்தகைய மறியற்சாலைக்கு வருகைதருகின்ற நீதிவான் முன்னிலையில் அத்தகைய ஆளைக் கொணருதலும் வேண்டும்.

இச்சட்டம் ஏற்புடைத் தாகும் ஆட்கள் வருகைதரு கின்ற நீதி வான் முன்னிலையில் கொணரப் படுதலும், அத்தகைய நீதிவானின் தத்துவங்களும்

7. (1) இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவர், 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுவதாக மறியற்சாலைக்கு வருகை தருகின்ற நீதிவானொருவர் முன்னிலையில் கொணரப்படுமிடத்து, அத்தகைய நீதிவான், அத்தகைய ஆள் தொடர்பில், விளக்கமறியல் கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றத்துக்கு 3 ஆம் பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றவரும், மறியற்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவருமான ஆளொவ்வொருவரினதும், விளக்கமறியல் தொடர்பிலான விபரங்களை, அத்தகைய மறியற்சாலை ஒவ்வொன்றினதும் கண்காணிப்பாளர், அத்தகைய ஆளை, விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழ் எந்த நீதிவான் முன்னிலையில் கொணரப்படுகின்றாரோ அந்த நீதிவான், அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைத்த நீதிவானாக இல்லாதவிடத்து, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் தொடர்பில் தோதான கட்டளையொன்றை ஆக்குவதற்கு முதலில் குறிப்பிட்ட நீதிவானை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அவருக்குத் தமது கைப்பட எழுதப்படும் அத்தகைய விபரங்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஐந்தாம் பிரிவுக்கிணங்க மறியற்சாலையொன்றுக்கு வருகை தரும் நீதிவானொருவர். இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆளொருவரை அவரது தோன்றுகைக்காக பிணைகாரர் இன்றி முறியொன்றை அவர் எழுதி நிறைவேற்றுவதன்மேல், விடுவிப்பதற்குக் கட்டளையிடுமிடத்து, அத்தகைய விடுவிப்பு குறித்து அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைக்கின்ற நீதிமன்றத்துக்கு அறிவிக்கச் செய்வித்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்ட முறியின் பிரதியொன்றையும் அந்த நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கச் செய்வித்தல் வேண்டும்.

8. ஐயங்களைத் தவிர்ப்பதற்கென இச்சட்டம் தொடங்கும் தேதியன்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்களுக்கும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகுமென, இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. சட்டம் தொடங்கும் தேதியன்று விளக்கமறியலில் இருக்கும் குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு சட்டம் ஏற்பு டையதாகுதல்.

9. இச்சட்டத்துக்கும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் நீங்கலாகவுள்ள பிணை தொடர்பான எழுத்திலான வேறு ஏதேனும் சட்டம் என்பவற்றுக்குமிடையில் ஒவ்வாமை ஏதேனுமிருக்கும் சந்தர்ப்பத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும். முரண்படும் சந்தர்ப்பத்தில் இச்சட்டம் மேலோங்கி நிற்றல்.

10. பாராளுமன்றமானது, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, இச்சட்டத்துக்கான அட்டவணையை, ஏதேனும் தவறை அத்துடன் சேர்ப்பதன் மூலம் அல்லது ஏதேனும் தவறை அதிலிருந்து விட்டுவிடுவதன் மூலம் தீர்மானத்தினால் திருத்தலாம். இச்சட்டத்துக் கான அட்ட வணையைத் திருத்து வதற்குப் பாராளுமன்ற த்துக்குள்ள தத்துவம்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில், ஒவ்வாமை ஏதேனும் காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை (பிரிவு 2)

1. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் எத்தவறுக்காக எழுத்தாணை ஒன்றுடன் மாத்திரமே கைதுசெய்வதற்கு, சமாதான அலுவலர் ஒருவர் தத்துவமளிக்கப் பட்டுள்ளாரோ அத்தவறு.

2. தண்டனைச் சட்டக்கோவையின் கீழான பின்வரும் தவறுகளில் ஏதேனும் ஒன்று :-

(01) பிரிவு 157
(02) பிரிவு 314
(03) பிரிவு 315
(04) பிரிவு 316
(05) பிரிவு 326
(06) பிரிவு 328
(07) பிரிவு 329
(08) பிரிவு 332
(09) பிரிவு 333
(10) பிரிவு 348
(11) பிரிவு 386
(12) பிரிவு 411
(13) பிரிவு 412
(14) பிரிவு 433
(15) பிரிவு 434
(16) நஞ்சுகள், அபின், அபாயகரமான ஒளடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 54அ (ஈ) என்னும் பிரிவின் கீழ் :-

(அ) ஐந்து கிலோகிராமிற்குக் குறைவான தொகை கன்னபிசை;

(ஆ) ஒரு கிராமிற்குக் குறைவான ஒரு தொகை ஹிரோயினை, உடமையில் வைத்திருந்தமைக்கான தவறுகள்.

(17) ஆதனமானது ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான ஒரு பெறுமதியையுடைய தாயிருக்குமிடத்து, தண்டனைச்சட்டக்கோவையின் 367 ஆம் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டம்.

---

(1997, நவம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

---

1997, நவம்பர் மாதம் 28 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி **II** இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1997ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டம்

(1997, நவம்பவர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டவர்கள் என அல்லது தவறொன்றைப் புரிந்துள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும் ஆட்களைப் பிணையில் விடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் எதிர்நோக்கிய பிணை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இச் சட்டத்தை செயற்படுத்துவதில் பிணை வழங்குதல் வழி காட்டும் நெறியாக இருத்தல் வேண்டும்.

2. இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான விதிவிலக்குகளுக்கு அமைய, பிணை வழங்குதல் விதியாகவும், பிணை வழங்க மறுத்தல் விதிவிலக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் வழிகாட்டும் நெறியாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில சட்டங்களின் கீழ் புரியப்படும் தவறுகள் தொடர்பில் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்படைய னவாகா.

3. (1) இச்சட்டத்திலுள்ள எதுவும், 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் என்பனவற்றின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான தவறுகளைப் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்படும் ஆட்களைப் பிணையில் விடுவித்தல் தொடர்பில் வெளிப்படையான ஏற்பாட்டைச் செய்கின்ற அத்தகைய எழுத்திலான வேறு சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்ற அல்லது தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆள் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளுக்கு, ஏற்புடையதாகாது.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் பிணை தொடர்பில், 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடொன்று பற்றிக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குறிப்பீடானது, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து, இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடு பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிணைவழங்கப் படற்பாலதான தவறொன்றைப் புரிகின்ற அல்லது புரிவதில் சம் பந்தப்பட்டிருக் கின்ற ஆட்கள் பிணையில் விடுவிக்கப்படுதல்

4. பிணை வழங்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டவர்கள் என அல்லது தவறொன்றைப் புரிந்துள்ளவர் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஏற்பாடுகளுக்கிணங்க, பிணையில் விடுவிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பதின்மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பிணை வழங்கப்படற்பாலதல்லாத தவறு ஒன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அல்லது புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர், நீதிமன்றத்தின் தற்றுணிபின் பேரில் எந்நேரத்திலும் பிணையில் விடுவிக்கப்படலாம்.

பிணைவழங்கப் படற்பாலதல்லாத தவறொன்றைப் புரிகின்ற அல் லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்கள் நீதிமன்றத்தின் தற்றுணிபின் பேரில் விடு விக்கப்படுதல்

6. (1) பொலிசினால் புலன் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் தவறொன்று, பிணை வழங்கப்படற்பாலதான தவறொன்றாக இருக்கின்றவிடத்து, பொலிசு நிலையப் பொறுப்பதிகாரி, அந்நிலையத்தின் கட்டுக்காவலின் கீழ் உள்ள சந்தே நபரை, அத்தகைய தவறுமீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் முன்கொணரும்படி தேவைப் படுத்தப்படலாகாது. ஆனால், அத்தகைய அலுவலர், சந்தேகநபர் கட்டுக்காவலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 24 மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அவரை எழுத்திலான பொறுப்பேற்பொன்றின் மேல் விடுவித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சந்நதேக நபரை கொடுக்கப்பட்ட ஒரு திகதியன்று நீதிவான் முன் தோன்றுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

பொலிசினால் பிணைவழங்கப் படற்பாலதான தவறொன்று புலன்விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஆட்களை விடுவித்தல்

ஆயின், புலன் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் சார்த்தப்பட்ட தவறுக்குப் பொதுமக்களின் கருத்தலையானது, சமாதானக் குலைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உண்டெனப் பொறுப்பதிகாரி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அத்தகைய தவறுமீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவர்முன் கட்டுக்காவலில் உள்ள சந்தேகநபரைக் கொணர்தல் வேண்டும்: அத்துடன் நீதிவான், அதன்மேல் பொருத்தமானதென அவர் கருதத்கூடியவாறாக 7ஆம் பிரிவின்கீழ் அல்லது 14 ஆம் பிரிவின்கீழ் கட்டளையென்றை ஆக்குதல் வேண்டும்.

ஆயின் புலன் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் சார்த்தப்பட்ட தவறுக்குப் பொதுமக்களின் கருத்தலையானது. சமாதானக் குலைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறு உண்டெனப் பொறுப்பதிகாரி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர், அத்தகைய தவறுமீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவர்முன் கட்டுக்காவலில் உள்ள சந்தேகநபரைக் கொணர்தல் வேண்டும் அத்துடன் நீதிவான், அதன் மேல் பொருத்தமானதென அவர் கருத்தகூடியவாறாக 7ஆம் பிரிவின்கீழ் அல்லது 14ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய சந்தேக நபரினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான பொறுப்பேற்பு ஒன்றின்மீது, பொலிசு நிலையமொன்றின் பொறுப்பதிகாரியொருவரினால் விடுவிக்கப்படும் சந்தேகநபர் ஒருவர், கொடுக்கப்பட்ட தேதியன்று நீதிவான்முன் தோன்றுவதற்குத் தவறுகின்றவிடத்து, அவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கும் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான சாதாரண-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியற்றண்டனையினால் அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டினால் தண்டிக்கப்படுதலும் வேண்டும் அத்துடன், நீதிவான், தமது தற்றுணிபின்பேரில், விடயத்திற் கேற்றவாறு, குறித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய சந்தேகநபரை விடுவிக்குமாறு கட்டளையிடுதல் வேண்டும் அல்லது கட்டுக்காவல் விளக்கமறியலில் வைத்திருக்கும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

7. (1) பிணை வழங்கப்படற்பாலதல்லாததான அல்லது பிணை வழங்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப் பட்டுள்ளவர் என அல்லது புரிந்துள்ளவர் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆள் எவரும், நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிமன்றத்திற்குமுன் கொண்டுவரப்படும்போது அல்லது நீதிமன்றத்தில் அவர் சரணடையும்போது, நீதிமன்றம் அத்தகைய ஆளை-

பிணை வழங்கப் படற்பாலதான அல்லது பிணை வழங்கப்படற்பால தல்லாத தான தவறொன்றுக்காகச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர் எம்முறையில் பிணையில் விடு விக்கப்படலாம் என்பது.

(அ) தேவைப்படும்போது தோன்றுவாரென அவரால் கொடுக்கப்படும் பொறுப்பேற்பொன்றின்மீது

(ஆ) அவரின் சொந்தப்பொறுப்புப் பிணையின்மீது.

(இ) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பிணைப் பொறுப்பாளர்களுடன் அவர் பிணைமுறியொன்றைச் செய்துகொள்வதன்மீது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவறான நியாயமான அளவு பணத்தொகை ஒன்றை அவர் வைப்பிலிடுவதன்மீது: அல்லது

(உ) நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படும் விவரணத்தைக் கொண்ட நியாயாமான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணையைக் கொடுத்துதவியதன் மேல், விடுவிக்கலாம்.

ஆயின், அழைப்பாணையின்மேல் அவ்வாள் நீதிமன்றத்துக்கு முன் தோன்றி, அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கட்டளையிடப்படுகின்றவிடத்து, பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக நீதமன்றம் வேறு வகையில் கட்டளையிடப் பட்டாலொழிய, அவர், அவரது சொந்தப் பொறுப்புப் பிணையின்மேல் அல்லது தேவைப்படுத்தப்படும்போது நீதிமன்றத்தின்முன் தாம் தோன்றுவார் என அவர் பொறுப்பேற்பொன்று கொடுத்ததன்மேல், அவர் பிணையில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் பிணை முறியொன்றை நிறைவேற்ற வேண்டும் என ஆளெவரும் தேவைப்படுத்தப்படுகின்ற விடத்து, அத்தகைய பிணை முறியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, பொருத்தமான வங்கியொன்றில் நீதிமன்றத்தின் கணக்கில் வரவில் பணத்தொகையொன்றை வைப்புச்செய்ய நீதிமன்றம் அத்தகைய ஆளை அனுமதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பிணைகாரர்களுடன் பிணை முறியொன்றை அவர் நிறைவேற்றியதன்மேல், ஆளெவரும் விடுவிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் பிணைமுறியில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் வருகை தருதல் வேண்டும் என்பதுடன், வேறு வகையில் பணிக்கப்படும் வரை தொடர்ந்து அவ்வாறு செய்தலும் வேண்டும்.

கட்டுக் காவலில் இருந்து விடுதலை செய்தல்.

8. ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் பிணைமுறி நிறைவேற்றப்பட்டதும் எவ்வாள் தோன்றுவதற்காக அது நிறைவேற்றப்பட்டிருக்கின்றதோ, அவ்வாள் விடுவிக்கப்படல் வேண்டும் அத்துடன் அவர் மறியலில் இருக்கும்போது அவரைப் பிணையில் விடுவிக்கும் நீதிமன்றம் மறியற்சாலைக்குப் பொறுப்பாக இருக்கும் அலுவலருக்கு விடுவித்தல் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலர் அக்கட்டளை கிடைக்கப்பெற்றதும் அவரை விடுவித்தலும் வேண்டும்.

முதலாவதாக எடுக்கப்பட்ட பிணை போதுமானதாக இல்லாத போது போதுமான பிணைக்குக் கட்டளையிடுவதற்கான தத்துவம்.

9. பிழையாக, மோசடியாக அல்லது வேறுவகையில் போதுமானதாக இல்லாத பிணைப்பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் அல்லது அவர்கள் பின்னர் போதுமானவர்களல்லாமல் வந்தால், நீதிமன்றம், பிணையில் விடுவிக்கப்பட்டவரை நீதிமன்றத்தின் முன்கொண்டுவரும்படி பணிக்கின்ற பிடிவிறாந்தொன்றை வழங்கலாம் அத்துடன் போதுமான பிணைப்பொறுப்பாளர்களைக் கொடுத்துதவுமாறு அவருக்குக் கட்டளை இடலாம் என்பதுடன், அவ்வாறு செய்ய அவர் தவறுகின்றவிடத்து அவரை மறியற்சாலைக்கு பாரப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளொருவர் போதுமான பிணைகாரர் என்பதைத் தீர்மானித்தல்

10. ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக ஆள் ஒருவர் போதுமான பிணைகாரர் எனத் தீர்மானிப்பதில் நீதிமன்றம் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் வருகையை பிணைமுறியின் நியதிகளின்படி அத்தகைய ஆள் பெற்றுக்கொடுக்க இயலுமான சாத்தியம் உள்ளதா என்னும் வினாவைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

பிணை முறியின் அளவு.

11. (1) விடயத்திற்கேற்றவாறு, நிறைவேற்றப்படவேண்டிய பிணைமுறியொன்றின் தொகையை, 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ), (ஈ) அல்லது (உ) என்னும் பந்தியின் கீழ் ஆள் எவரினாலும் வைப்புச்செய்யப்பட வேண்டிய பணத்தொகையை அல்லது கொடுத்துதவப்படவேண்டிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணையை, தீர்மானிப்பதற்கு நீதிமன்றம் எதுவும் தேவைப்படுகின்றவிடத்து, சந்தேகிக்கப்பட்டவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் புரிந்திருக்கிறார் எனச் சார்த்தப்படும் தவறின் தன்மையையும், அதற்கெனச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனையையும், அத்தகைய சந்தேகிக்கப்பட்டவரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் வருவாய்களையும் முறையாகக் கருத்திற்கொண்டு, நீதிமன்றம் அவ்வாறு செய்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தீர்மானிக்கப்படும் தொகையானது மிதமிஞ்சியதாக இருத்தலும் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகைக்கான பிணைமுறியொன்று சந்தேகிக்கப்பட்டவரால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரால் அல்லது பிணைகாரர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை அல்லது வைப்புச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட பணத்தொகை வைப்புச்செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது கொடுத்துதவப்பட வேண்டிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிணை கொடுத்துதவப் பட்டிருக்கவில்லை என்ற ஏதுவின்மேல் சந்தேகிக்கப்பட்டவர் ஒருவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் விடுவிக்கப் பட்டிருக்காதிருக்கின்றவிடத்து, நீதிமன்றம், அவர் கட்டுக்காவலில் இருக்கும்போது எந்நேரத்திலும் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகையைக் குறைக்கலாம்.

விடுவிக்கப் படும் ஆள் எம்முகவரியில் அறிவித்தல் கள் மற்றும் மன்றாணை கள் அவரிடம் சேர்ப்பிக்கப் படலாம் என்பதைக் கொடுத்தல் வேண்டும்.

12. (1) ஆளெவரும் பிணையில் விடுவிக்கப்படுகின்றவிடத்து அவர் நீதிமன்றத்துக்கு அல்லது அத்தகைய பிணையை எடுக்கின்ற அலுவலருக்கு எம்முகவரியொன்றில் அவரிடம் எல்லா அறிவித்தல்களும் மன்றாணைகளும் சேர்ப்பிக்கப்படலாமோ, அம்முகவரியைக் கொடுத்தல் வேண்டும். அதன் பின்னர், அவரைக்கண்டு பிடிக்கமுடியாவிட்டால், அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரிடம் சேர்ப்பிக்கமுடியாவிட்டால் அவருக்கென அம்முகவரியில் விடப்படும் அறிவித்தல் அல்லது மன்றாணைகள் எதுவும் அவரிடம் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டன எனக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தனது அறிவுக்கெட்டியவரை பொய்யானதெனத் தெரிந்து கொண்டே முகவரியொன்றை ஆளொருவர் கொடுக்கின்றவிடத்து, அவர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், ஆறு மாதங்களை விஞ்சாத ஒரு காலத்துக்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

மரணதண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரால் தவிர பிணைவழங்கப்படுதலாகாது.

13. மரணதண்டனையினால் அல்லது ஆயுள் தண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அல்லது புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளொருவர், மேல்நீதிமன்ற நீதிபதியொருவரினால் தவிர பிணையில் விடுவிக்கப்படுதலாகாது.

நீதிமன்றம் எக்காரணங்களுக்காகப் பிணை மறுக்கலாம் அல்லது விடுவிப்புக்காக ஏலவே உள்ளதான கட்டளை ஒன்றைஇல்லாதாக்கலாம் என்பது.

14. (1) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எப்படியிருப்பினும், பிணைவழங்கப்படற்பாலதான அல்லது பிணை வழங்கப்படற்பாலதான அல்லது பிணை வழங்கப் படற்பாலதல்லாத தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அல்லது புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆள் ஒருவர், நியாயாதிக்கம் கொண்ட -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தில் தோன்றுகின்றபோது அல்லது சரணடையும்போது அல்லது நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்படும் போது, நீதிமன்றம் அத்தகைய ஆளைப் பிணையில் விட மறுக்கலாம் அல்லது அதற்கெனப் பொலிசு அலுவலர் ஒருவரினால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேலும் சம்பந்தப்பட்ட ஆளுக்கு அறிவித்தல் வழங்கி அவரை நேரடியாக அல்லது அவரது சட்டத்தரணி மூலம் விசாரித்த பின்னரும் -

(அ) அத்தகைய ஆள் -

(i) அவரது விசாரணைக்கு அல்லது விளக்கத்துக்கு முகம் கொடுப்பதற்கு தோன்றமாட்டாரென

(ii) சாட்சிக்காரர்களிடம் அல்லது அவருக்கு எதிரான சாட்சியத்தில் தலையிடுவார் அல்லது நீதிநெறிமுறைக்கு வேறுவகையில் முட்டுக்கட்டை போடுவார் அல்லது

(iii) பிணையில் இருக்கும் போது தவறொன்றைப் புரிவார் அல்லது

(ஆ) சார்த்தப்பட்ட தவறின் குறிப்பிட்ட பாரதூரத் தன்மையும் அத்தவறு தொடர்பில் பொது மக்களின் செயற்பாடு பொது மக்களின் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும்.

என நீதிமன்றம் நம்புவதற்குக் காரணம் இருந்தால், அத்தகைய ஆளைப் பிணையில் விடுவதற்காக ஏலவே உள்ளதான கட்டளையொன்றை இல்லாதாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளெவரையும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பிணையில் விடுவதற்கு நீதிமன்றமொன்று மறுக்கின்றவிடத்து அல்லது அத்தகைய ஆளைப் பிணையில் விடுவதற்காக ஏலவே உள்ள கட்டளையொன்றை இல்லாதாக்குகின்ற விடத்து, நீதிமன்றம் அத்தகைய சந்தேகிக்கப்பட்ட ஆளை அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைக் கட்டுக்காவலில் வைக்கும்படி கட்டளையிடலாம்.

(3) வழக்குச் சம்பந்தமாக சூழ்நிலைகளில் மாற்றமொன்று நிகழ்ந்திருக்கிறதென நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து அது எந்நேரத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை இல்லாதொழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

பிணைவழங்க மறுப்பதற்கான அல்லது பிணை வழங்குவது தொடர்பிலான கட்டளை யொன்றை இல்லாதாக்கு வதற்கான அல்லது இல்லாதொழிப் பதற்கான அல்லது வேறுபடுத்து வதற்கான காரணங்கள் கொடுக்கப் படுதல் வேண்டும்.

15. ஏதேனும் தவறைப் புரிந்துள்ளவர் என அல்லது ஏதேனும் தவறைப் புரிவதில் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆள் எவரையும் பிணையில் விடுவதற்கு நீதிமன்றம் ஒன்று மறுக்கின்றவிடத்து அல்லது ஆளொருவரைப் பிணையில் விடுவதற்கு ஏலவே உளதான கட்டளையொன்றை இல்லாதாக்குகின்ற விடத்து அல்லது ஏலவே உளதான கட்டளையொன்றை இல்லாதாக்குகின்ற கட்டளையொன்றை இல்லாதொழிக்கின்றவிடத்து அல்லது வேறுபடுத்துகின்றவிடத்து அது விடயத்திற்கேற்றவாறு அத்தகைய மறுத்தலுக்கான, இல்லாதாக்கலுக்கான அல்லது இல்லா தொழித்தலுக்கான அல்லது வேறுபடுத்தலுக்கான காரணங்களை எழுத்தில் கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பதினேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றமொன்றினால் ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய ஆள் எவரும், அவர் கைது செய்யப்பட்ட திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்குக் கட்டுக்காவலில் தடுத்து வைத்திருக்கப்படுதலாகாது.

கட்டுக்காவலில் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல் ஆளெவரும் தடுத்த வைத்திருக்கப் படுதலாகாது.

17. பதினாறாம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் சட்டத்துறை தலைமையதிபதியினால் அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேல், ஏதேனும் வலயத்தில் நடைபெறும் மேல்நீதிமன்றம் அல்லது அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்படும் மேல்நீதிமன்றமொன்று, பதியப்படவேண்டிய போதிய நற்காரணங்களுக்காக, நீதிமன்றம் ஒன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டில்லாதவரான ஆளொருவர் பன்னிரண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்குக் கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிடலாம்:

தடுத்து வைத்திருக் கப்படும் காலப் பகுதியை எப்படி நீடிப்பது என்பது.

ஆயின், இப்பிரிவின்கீழ் கட்டளையிடப்படும் தடுத்துவைத்தற் காலப்பகுதி, எவ்விடயத்திலும் ஒரு நேரத்தில் மூன்று மாதங்களையும், கூட்டுமொத்தமாகப் பன்னிரண்டு மாதங்களையும் விஞ்சுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணை காரர்களை விடுவித்தல்

18. (1) பிணையில் விடுவிக்கப்பட்ட ஆள் ஒருவர் வருகை தருவதற்கான அல்லது தோன்றுவதற்கான எல்லாப் பிணைகாரர்களும் அல்லது அவர்களின் எவரும், எந்நேரத்திலும் முறியை ஒன்றில் முழுமையாகவோ அல்லது அது விண்ணப்பகாரரை அல்லது விண்ணப்பகாரர்களைத் தொடர்புறுத்தும் அளவுக்கோ விடுவிக்கும்படி கோரி நீதிமன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல் நீதிமன்றம், அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஆள் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டுமென்று பணிக்கின்ற பிடிவிறாந்தொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) அத்தகைய பிடிவிறாந்தொன்றைப் பின்பற்றி அத்தகைய ஆள் தோன்றியதன் மேல், அல்லது அவர் தன்னிச்சையாகவே சரணடைந்ததன்மேல் நீதிமன்றம் முறி ஒன்றில் முழுமையாக அல்லது அது விண்ணப்பகாரரை அல்லது விண்ணப்பகாரர்களைத் தொடர்புறுத்தும் அளவுக்கு விடுவிக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும் அத்துடன், வேறு போதுமான பிணைகாரர்களைக் கொணருமாறு அத்தகைய ஆளைப் பணித்தல் வேண்டும் அத்துடன் அவர் அவ்வாறு செய்யத்தவறுகின்றவிடத்து, அவரைக் கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) பிணைகாரர் ஒருவர், அவர் எவ்வாள் வருகைதருவதற்கு அல்லது தோன்றுவதற்கு அவர் பிணைகாரர் ஒருவராக இருக்கின்றாரோ, அவ்வாளை, அவர் தலைமறைவாகியிருக்கின்ற விடத்து, எந்நேரத்திலும் கைது செய்யலாம் என்பதுடன் அவரை உடனடியாக நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டுவருதலும் வேண்டும் அத்துடன், நீதிமன்றம், அதன்மேல், அத்தகைய பிணைகாரரின் முறியை விடுவித்தல் வேண்டுமென்பதுடன், இன்னொரு போதுமான பிணைகாரரைக் கொண்டுவருமாறு அத்தகைய ஆளைப் பணித்தலும் வேண்டும். அத்துடன், அவ்வாறு செய்வதற்கு அவர் தவறுகின்ற விடத்து, அவரை கட்டுக்காவலுக்குப் பாரப்படுத்தலும் வேண்டும்.

(5) பிணைகாரர் ஆனவர், எவ்வாட்களுக்குப் பிணைக்கட்டளை விடுவிக்கப்படுகின்றதோ, அவ்வாட்களுக்கு வழமையாகப் பிணைகாரராக நிற்கின்ற ஆளொருவர் எனவும், அத்துடன் அவரை விடுவிப்பதற்கான விண்ணப்பம் போதுமான காரணம் இல்லாமல் இருக்கின்றதெனவும் நீதிமன்றம் திருப்திப்பட்டால், அத்தகைய பிணைகாரர் மீது ஆயிரத்து ஐநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விதிப்பதுவும் அத்துடன், அதனைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சாதாரண மறியற்றண்டனைக்கு அவரைப் பாரப்படுத்துவது, நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைப் பொறுப்புக் கொடுத்ததன் மேல் மேன்முறை யீட்டாளர் விடுவிக்கப் படுதல் வேண்டும்.

19. (1) நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட விடுதலையொன்றுக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்ற விடத்து, நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டுவரப்படுதல் வேண்டப்படுதல் வேண்டும் எனப் பணிக்கின்ற பிடியாணை ஒன்றை வழங்கலாம் அத்துடன் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை, அவரை மறியற்சாலைக்குப் பாரப்படுத்தலாம் அல்லது அவரைப் பிணையில் விடுவிக்கலாம்.

(2) நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட குற்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றவிடத்து, எந்நீதிமன்றத்தின்ற தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ, அந்நீதிமன்றம், தவறின் பாரதூரமான தன்மையையும் குற்றஞ் சாட்டப்பட்டவரின் முன்வரலாறுகள் ஆகியவற்றையும் கருத்துக்கெடுத்துக் கொண்டபின், மேன்முறையீட்டாளரைப் பிணையில் விட மறுக்கலாம்.

(3) குற்றத்தீர்ப்பொன்றுக்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீடொன்றில், மேன்முறையீட்டாளர் ஒருவர், அத்தகைய தொகையிலும், பிணைகாரருடனும் அல்லது பிணைக்காரர்களுடனும் அல்லது பிணைகாரரின்றியும் அல்லது பிணைகாரர்களின்றியும் பிணைப்பொறுப்பு முறியொன்றைச் செய்து கொள்ளுவதன் மீது பிணையில் விடுவிக்கப்படுகின்றவிடத்து, மேன்முறையீடு எந்நீதிமன்றத்திலிருந்து செய்யப்படுகின்றதோ அந்நீதிமன்றம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானதென எண்ணினால், மேன்முறையீட்டாளர் பிணைப்பொறுப்பு முறியொன்றைச் செய்து கொள்ளுவதற்குப் பதிலாக, அத்தகைய நீதிமன்றத்தில் பணத்தை வைப்பிடுவதன்மூலம் அல்லது அந்நீதிமன்றம் போதுமானதெனக் கருதுகின்றவாறு வேறுவகையில், அத்தகைய வேறு பிணைப்பொறுப்பைக் கொடுக்கலாம்.

(4) மேன்முறையீட்டாளர் அத்தகைய பிணை முறியைச் செய்துகொள்வதன் மீது அல்லது மேற்சொல்லப்பட்டவாறான அத்தகைய வேறு பிணைப்பொறுப்பைக் கொடுப்பதன் மீது அவர் கட்டுக்காவலிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய பிணைப்பொறுப்பு முறியானது, மேன் முறையீட்டாளர்கள் மறியற்சாலையில் இருந்தால், மறியற்சாலையின் கண்காணிப்பாளர் அல்லது மறியற்காப்போர் முன்னிலையில் செய்துகொள்ளப்படுதல் வேண்டுமோ அவ்வாறு செய்து கொள்ளப்பட்டால், அது, மேன்முறையீடு எந்நீதிமன்றத்திலிருந்து செய்யப்பட்டதோ அந்நீதிமன்றத்தின் முன்னிலையில் செய்யப்பட்டிருக்கின்றது என்றாற்போன்று எல்லாவகையிலும் செல்லுபடியுடையதாக வேண்டும். அத்துடன் இந்நோக்கத்திற்காக நீதிமன்றமானது, மேன்முறையீடொன்று செய்யப்படுகிற விடயத்தில் கொடுக்கப்பட வேண்டிய பிணைப்பொறுப்பின் தொகையையும் தன்மையும் பாரப்படுத்தல் எழுத்தாணையின் மீது புறக்குறிப்பிடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) கடூழிய மறியற்றண்டனைக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் மேன்முறையீடொன்றைச் செய்திருந்து, தேவையான பிணைப்பொறுப்பு முறியை அல்லது வேறு பிணைப்பொறுப்பைக் கொடுக்க இயலாதவராக விருக்குமிடத்து, மேன்முறையீடு எந்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டிருக்கிறதோ அந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மறியற்சாலைக் கண்காணிப்பாளருக்கு அறியத்தரப்படுகின்ற வரையில், அவர் கட்டுக்காவலில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

மேல்நீதிமன்றத் திலிருந்து மேன்முறையீடு ஏற்றுக் கொள்ளப் படுவதன்மீது பிணையில் விடுவிக்கப் படுதல்.

20. (1) மேல்நீதிமன்றமொன்றினால் செய்யப்பட்ட விடுதலைக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்ற விடத்து, நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு, அதன் முன்னிலையில் கொணரப்படுதல் வேண்டும் எனப்பணிக்கும் பிடியாணையொன்றை வழங்கலாம் என்பதுடன், மேன்முறையீடு தீர்மானிக்கின்றவரையில் அவரை மறியற்சாலைக்குப் பாரப்படுத்தலாம் அல்லது அவரை பிணையில் விடுவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேல்நீதிமன்றமொன்றினால், செய்யப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றவிடத்து, மேல்நீதிமன்றமானது, (3) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, மேன்முறையீட்டாளரின் மேன்முறையீடு தீர்மானிக்கப்படுகின்ற வரையில், மேன்முறையீட்டாளரைப் பிணையில் விடுவிக்கலாம். பிணையில் விடுவிக்கப்படாத மேன்முறையீட்டாளர் ஒருவர், மேன்முறையீடு தீர்மானிக்கப்படுகிற வரையில், மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு, மரணதண்டனைத் தீர்ப்பளிக்கப் படுகின்றவிடத்து, தண்டனை நிறைவேற்றமானது, நிறுத்தி வைக்கப்பட்டு, மேன்முறையீடு தீர்மானிக்கப்படுகிற வரையில் அவர் மறியற்சாலையில் விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டாளர் ஒருவர், அவரது மேன்முறையீடு தீர்மானிக்கப்படுகிறவரையில் எக்காலப்பகுதிக்குப் பிணையில் விடுவிக்கப்படுகின்றாரோ அக்காலப்பகுதியும், (மேன்முறையீடு எந்நீதிமன்றத்திற்குச் செய்யப்படுகின்றதோ அந்நீதிமன்றம் ஏதேனும் மேன்முறையீட்டில் முரணாக வழங்கக்கூடிய எவையேனும் பணிப்புகளுக்கு அமைவாக) மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் இருந்தால், எக்காலப்பகுதிக்கு இப்பிரிவின் கீழ் மேன்முறையீட்டாளர் ஒருவராக அவர் விசேடமாக நடாத்தப்படுகின்றாரோ அக்காலப்பகுதியும் அவரது மறியற்றண்டனைத் தீர்ப்பின் கீழான -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறியற்றண்டனைக் காலப்பகுதி எதனதும் பகுதியாகக் கணிக்கப்படுதல் ஆகாது அத்துடன் மேன்முறையீட்டாளரின் மறியற்றண்டனை எதுவும், அது மேல்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின்கீழாக இருப்பினுஞ்சரி அல்லது மேன்முறையீடு எந்நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டதோ அந்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் கீழாக இருப்பினுஞ்சரி, மேன்முறையீடு எந்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டதோ அந்நீதிமன்றத்தின் பணிப்புகளுக்கு அல்லது கட்டளைக்கு அமைவாக, மேன்முறையீட்டாளர் கட்டுக்காவலில் இருந்தால், மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்ட நாளிலிருந்தும் அவர் கட்டுக்காவலில் இல்லாதிருந்தால், தண்டனைத் தீர்ப்பின்கீழ் அவர் மறியற்சாலையில் ஏற்கப்பட்ட நாளிலிருந்தும் மீளத் தொடங்கியதாக அல்லது தொடர ஆரம்பித்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

எதிர் நோக்கிய பிணை

21. (1) பிணையில் விடப்படற்பாலதல்லாத தவறொன்றைப் புரிந்துள்ளார் என அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருக்கின்றார் எனச் சந்தேகிக்கப்படுவதன்பேரில், தாம் கைது செய்யப்படுவார் என ஆள் எவரும் நம்புவதற்கு காரணம் இருக்குமிடத்து, அவர், தவறு புரியப்பட்டிருக்கின்றதாகச் சார்த்தப்படுகின்ற இடப்பரப்பின் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலகருக்கு அறிவித்தல் கொடுத்து, அத்தகைய தவறு புரியப்பட்டிருக்கின்றதாகச் சார்த்தப்படுகின்ற இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு, அத்தகைய தவறைப் புரிந்துள்ளார் என்னும் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்னும் சார்த்தலின்மீது தாம் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில் பிணையில் தாம் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்னும் பணிப்பைக் கோரி விண்ணப்பிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உப்பிரிவின் கீழ்ச் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்று, விண்ணப்பகாரினால் செய்யப்படும் சத்தியக்கடதாசி ஒன்று இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று எந்நீதிமன்றத்திற்குச் செய்யப்படுகின்றதோ, அந்நீதிமன்றமானது, விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக விண்ணப்பத்தை விசாரிப்பதற்கான திகதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும். இத்திகதியானது எச்சந்தர்ப்பத்திலும், விண்ணப்பத் திகதியிலிருந்தும் ஏழு நாட்களுக்குப் பிந்தாமல் இருந்தல் வேண்டும். அத்துடன் நீதிமன்றம் அத்தகைய தேதிபற்றிய அறிவித்தலை விண்ணப்பகாரருக்கும், பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்க்கும் வழங்குதல் வேண்டும்.

(4) விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிமன்றமானது, நேரடியாகவோ அவரது சட்டத்தரணி மூலமாகவோ விண்ணப்பகாரரையும், பொலிசு நிலையத்தின் பொறுப்பாகவுள்ள அலுவலகர் சமுகமளித்திருந்தால் அவரையும் கேட்ட பின்னர், விண்ணப்பத்தின் மீதான கட்டளையை ஆக்குவதற்குகான காரணங்களைப் பதிந்த பின்னர் கட்டளையை உடனடியாக ஆக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையில் சேர்க்கப்பட வேண்டிய நிபந்தனைகள்.

22. (1) விண்ணப்பகாரர் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அவர் பிணையில் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்னும் கட்டளையொன்றை நீதிவான் ஒருவர் ஆக்கும்போதிலெல்லாம், குறிப்பிட்ட விடயத்தின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அந்நீதிமன்றம் பொருத்தமானதென எண்ணுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளை (இந்நிபந்தனைகளில் விண்ணப்பக்காரர் இலங்கையை விட்டுச் செல்வதைத் தடைசெய்யும் நிபந்தனையும் அல்லது விண்ணப்பகாரரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கத் தேவைப்படுத்தும் நிபந்தனையும் அடங்கும்) கட்டளையில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதுடன் -

(அ) எப்பிணையில் விடப்படற்பாலதல்லாத தவறு அல்லது தவறுகள் தொடர்பில் கட்டளை ஆக்கப்படுகின்றதோ அத்தவறு அல்லது தவறுகளையும் : அத்துடன்

(ஆ) விண்ணப்பகாரர் கைது செய்யப்படும் நேரத்தில் அவரால் எம்முறையில் பிணை கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதையும், குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) நீதிவானொருவர், விண்ணப்பகாரர் இலங்கையை விட்டுச் செல்வதைத் தடை செய்து 21 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கும்போது, அவர் அத்தகைய நிகழ்வு பற்றி உடனடியாகக் குடிவரவு, குழயகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. விண்ணப்பகாரர் இறைஞ்சிக் கேட்டவாறு 21ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டு, அதன்பின்னர், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தவறுக்காக அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகளாக அமையும் செயல்கள் மூலம் அமையும் வேறு ஏதேனும் தவறுக்காக விண்ணப்பகாரர் கைதுசெய்யப்படுமிடத்து, விண்ணப்பகாரர் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் பிணை கொடுத்துதவுவதன்மீதும், அக்கட்டளையில் சேர்க்கப்பட்டுள்ள நிபந்தனைகள் எவையேனுமிருப்பின், அவற்றுக்கு இணங்கியொழுகுவதன்மீதும் உடனடியாகப் பிணையில் விடுவிக்கப்பட உரித்துடையவராதல் வேண்டும்.

எதிர் நோக்கிய பிணையில் விடுவிக்கப் படும் ஆள் அதன் பின்னர் கைது செய்யப்படு வதன் விளைவு.

24. ஆள் ஒருவர் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றைப் பின்பற்றிப் பிணையில் விடுவிக்கப்படுகின்ற விடத்து, அத்தகைய ஆள் -

(அ) பொலிசு அலுவலர் ஒருவரினால் வினவப்படுவதற்குத் தேவையானபோதும், தேவையானவாறும் தாம் கிடைக்கத் தக்கவராக இருத்தல் வேண்டும். ஆயின், அத்தகைய வினவுதலானது எத்தகைய சந்தர்ப்பத்திலும் மாலை பி.ப.6 மணிக்கும் காலை மு.ப.6மணிக்கும் இடையில் இடம்பெறுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) வழக்கின் நிகழ்வுகளில் பரிச்சயமுள்ளவரான எவரேனும் ஆள் அத்தகைய நிகழ்வுகளை நீதிமன்றத்திற்கு அல்லது எவரேனும் பொலிசு அலுவலகருக்கு வெளிவிடச் செய்யாது அவரது மனதை மாற்றும் வகையில் அந்த ஆளுக்கு நேரடியாகவோ, நேரடியாகவல்லாதோ ஏதேனும் தூண்டுதலை, அச்சுறுத்தலை அல்லது வாக்குறுதியைச் செய்தல் ஆகாது.

(இ) நேரடியாகவோ நேரடியாகவல்லாதோ வழக்கின் சான்று எதிலும் தலையிட்டுக் குழப்புதல் ஆகாது அல்லது வேறுவகையில் நீதிநெறிக்கு முட்டுக்கட்டையிடுதல் ஆகாது.

எவ்விண்ணப்பகாரர் தொடர்பில் 15ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒன்று முடிவுறாதிருக்கின்றதோ அவ்விண்ணப்பகாரரைப் பொலிசு அலுவலர் ஒருவர் வினவலாம் அல்லது பிடியாணை மீது கைது செய்யலாம்.

25. இருபத்தோராம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கிறது என்னும் நிகழ்வானது, 21ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பில் அவ்விண்ணப்பகாரரை வினவுவதற்கு எவரேனும் பொலிசு அலுவலகர் கொண்டுள்ள உரிமையை அல்லது அத்தகைய ஏதேனும் தவறுக்காக விண்ணப்பகாரரைக் கைது செய்வதற்கான ஒரு பிடியாணை கோரி அந்நீதிமன்றத்திற்கு அல்லது வழக்கில் நியாயாதிக்கம் கொண்டுள்ள வேறு ஏதேனும் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் கொண்டுள்ள உரிமையை அல்லது பிடியாணை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கான அத்தகைய ஏதேனும் விண்ணப்பம்மீது (தடுத்துவைத்தற்கான கட்டளையொன்று உள்ளிட்ட) ஏதேனும் கட்டளையைச் செய்வதற்கு அத்தகைய ஏதேனும் நீதிமன்றம் கொண்டுள்ள தத்துவத்தைப் பாதித்தலோ பங்கப்படுத்துதலோ ஆகாது.

எதிர் நோக்கிய பிணைமீது விடுவிக்கப்பட்ட ஆட்களைச் சமுகமளிக்கு மாறு தேவைப் படுத்தும் பிடியாணை வழங்குதல்.

26. (1) இருபத்தோராம் பிரிவின்கீழ் கட்டளையை ஆக்கும் நீதிவான் அல்லது வேறுவகையில் வழக்கின் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவர், தவறைப் புலனாய்வு செய்யும் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்பேரில், அத்தகைய நீதிவானால் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, எவ்விண்ணப்பகாரர் சார்பில் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டிருக்கின்றதோ அவ்விண்ணப்பகாரரை நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தேவைப்படுத்தும் பிடியாணையொன்றை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பிடியாணையொன்று வழங்கப்பட்டு, அதன்மேல், விண்ணப்பகாரர் நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து, பிணை சம்பந்தமாக முன்னர் கொடுக்கப்பட்ட பணிப்பு எதுவும் எப்படியிருப்பினும், நீதிவான் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக, அத்தகைய ஆளைத் தடுத்து வைப்பது சம்பந்தமாகத் தாம் பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், நீதிவான் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காக அத்தகைய கட்டளையை எந்நேரத்திலும் இல்லாதொழிக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம்.

முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் இச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

27. 1991ம் ஆண்டின் 8 ஆம் இலக்க விளக்கமறியல் கைதிகளை விடுவித்தல் சட்டம் தவிர்ந்த, 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும் முரணாக எது எப்படியிருப்பினும், இச் சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டுமென்பதுடன், 1991 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க விளக்கமறியல் கைதிகளை விடுவித்தல் சட்டம் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்திற்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் காணப்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை எதுவும் காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய - பொருள் கோடல்

"பிணையில் விடப்படற்பாலதான தவறு" என்பது பிணையில் விடப்படற்பாலதானது என 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 5 ஆம் நிரையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் விவரிக்கப்படும் ஒரு தவறு எனப் பொருளாகும் அத்துடன்

"பிணையில் விடப்படற்பாலதல்லாத தவறு" என்பது பிணையில் விடப்படற்பாலதல்ல என 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 5ஆம் நிரையில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் விவரிக்கப்படும் ஒரு தவறு எனப் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் இருக்கும்போது புரியப்படும் தவறுகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

**1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் தவறுகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.**

**(1978, ஜுன் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)**

**1978,** ஜுன் மாதம் 25 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி **II** இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் தவறுகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

(1978, ஜுன் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் குறித்த சில தவறுகள் தொடர்பில் கூடுதலான தண்டனையளிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம், 1979ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் தவறுகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

மது போதையில் இருக்கும் போது மனக்குலைவு ஏற்படுதல்.

2. எவரேனும் ஆள், ஏதேனும் பொது இடத்தில், அல்லது எந்த இடத்தினுள் நுழைதல் அத்துமீறுகையாகவிருக்குமோ அந்த இடத்தில், மதுபோதையில் இருக்கும் போது வேறு எவரேனும் ஆளுக்கு மனக்குலைவு ஏற்படுத்துகின்றவாறான அத்தகைய விதத்தில் நடந்துகொண்டால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுபோதையில் இருக்கும் போது ஆதனத்துக்கு சேதமிழைத்தல்.

3. மதுபோதையில் இருக்கும் போது பொது ஆதனத்துக்குச் சேதமிழைக்கும் எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும் என்பதுடன் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு மதுபானம் ஊட்டுதல்.

4. உரிய முறையில் தகைமை பெற்ற மருத்துவதொழிலர் ஒருவரின் கட்டளையின் மேலன்றி அல்லது எவரேனும் பிள்ளை நோயுற்றிருக்கும் விடயத்தில் அன்றி அல்லது அப்பிள்ளைக்கு வரக்கூடுமென அஞ்சப்படும் நோயின் விடயத்தில் அன்றி, பன்னிரண்டு வயதுக்குக் குறைந்தவரான எவரேனும் பிள்ளைக்கு ஏதேனும் மதுபானத்தை ஊட்டுகின்ற அல்லது ஊட்டுவிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பதினெட்டு வயதுக்கு குறைந்த ஆட்களுக்கு மதுபானத்தை விற்றல்.

5. (1) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவருக்கு ஏதேனும் மதுபானத்தை விற்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கு இரு வகையிலொரு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டுமென்பதுடன் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பதினெட்டு வயதுக்குக் குறைந்தவரான எவரேனுமாள் ஏதேனும் பொதுவழியில் அல்லது பொது இடத்தில் மது அருந்திக் கொண்டிருப்பதைக் காணுகின்ற எவரேனும் சமாதான அலுவலர், அவ்வாளின் உடைமையில் உள்ள ஏதேனும் மதுபானத்தைக் கைப்பற்றலாம் என்பதுடன், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் மதுபானம் நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் கையாளப்படுதலும் வேண்டும்.

6. எவரேனும் சமாதான அலுவலரின் அபிப்பிராயத்தின் படி மது போதையில் இருப்பவரும், அத்துடன் இச்சட்டத்தின் 2ஆம், 3ஆம் பிரிவுகளின் கீழான அல்லது இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிகின்றவருமான எவரேனுமாளை, ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், பிடியாணை இல்லாமலே அத்தகைய சமாதான அலுவலர் கைது செய்யலாமென்பதுடன், அத்தகைய கைது செய்தலை நிறைவேற்றுவதில் அச்சூழ்நிலைகளில் நியாயமானதாக இருக்கக்கூடியவாறான அத்தகைய வலோற்காரத்தையும் பிரயோகிக்கலாம். பிடியாணையின்றிக் கைது செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத் தொழிலாளரால் பரிசோதிக் கப்படல்.

7. இச்சட்டத்தின் 2ஆம், 3ஆம் பிரிவுகளின் கீழான தவறொன்றுக்காக, அல்லது இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்காக எவரேனுமாளைச் சமாதான அலுவலரொருவர் கைது செய்யுமிடத்து, அவர்

(அ) அத்தகைய ஆள் மதுபோதையில் இருக்கின்றாரா என்பதனை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக மருத்துவத்தொழிலர் ஒருவரால் அத்தகைய ஆள் பரிசோதிக்கப்படுவது, அவர் இயன்றளவு விரைவில் அத்தகைய ஆளை அரசாங்க மருத்துவ அலுவலர் ஒருவரைக் கொண்டு பரிசோதிப்பிக்கலாம். அரசாங்க மருத்துவ அலுவலர் அத்தகைய ஏதேனும் பரிசோதனையின் முடிவைச் சமாதான அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(ஆ) சுவாசப் பகுப்பாய்வுச் சோதனையொன்று அவசியமென சமாதான அலுவலர் கருதுவாரெனின் அத்துடன் அதற்கான வசதிகள் கிடைக்கத்தக்கதாயிருப்பின், அத்தகைய ஆளை உடனடியாக அத்தகைய சோதனைக்குள்ளாகும்படி தேவைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏழாம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள சுவாசப்பகுப்பாய்வுச் சோதனையானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட இயக்குநரால் நடாத்தப்படுதல் வேண்டும்.

சுவாசப்பகுப் பாய்வுச்சோதனை அங்கீகரிக் கப்பட்ட இயக்குநரால் நடாத்தப்படுதல்.

9. ஏழாம் பிரிவின் கீழ் அரசாங்க மருத்துவ அலுவலரொருவரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர் ஒருவரால் பரிசோதிக்கப்படுவதற்கு அழைக்கப்படும் போது அவ்வாறு செய்வதற்கு மறுக்கின்ற அல்லது அப்பிரிவின் கீழ் சமாதான அலுவலர் ஒருவர் தமது கடமைகளைப் புரிவதில் அந்த அலுவலரை எதிர்க்கின்ற அல்லது தடைசெய்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு இரு வகையிலொருவகையான மறியற்றண்டனையால் தண்டிக் கப்படுவதற்கு அல்லது ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனைக்கும் குற்றப்பணத்துக்கும் ஆளாதலும் வேண்டும்.

பரிசோதிக்கப் படுவதற்கு மறுக்கின்ற மைக்கான தண்டனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில தவறுகள் தொடர்பில் கூடுதலான தண்டனை.

10. தண்டனைச் சட்டக்கோவையில் எது எப்படியிருப்பினும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ள தவறொன்றுக்காக ஆளொருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிவான் நீதிமன்றம் ஒவ்வொன்றும், அதன் சாதாரணத் தண்டனையளித்தல் தத்துவங்கள் எப்படியிருப்பினும், அத்தகைய தவறு அந்த ஆள் மதுபோதையில் இருக்கும் போது அவரினால் புரியப்பட்டு இருக்குமிடத்து, அத்தகைய அட்டவணையில் II ஆம் நிலையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தண்டனையை அந்த ஆளுக்கு விதித்தல் வேண்டும்.

மதுபானம் அல்லது இன்னோன்ன வற்றின் நாற்றம் ஆளிடம் வீசு மாயின் அவர் மதுபோதையிலி ருக்கின்றாரென ஊகித்தல்.

11. (1) ஆளொருவர் செயலைப் புரியும் நேரத்தில் அல்லது அதற்கு முன் பின்னாக அவரில் மதுபான நாற்றம் வீசினால் அல்லது அவர் மதுபானம் அருந்தியுள்ளார் என நியாயமானதாக அனுமானிக்கக்கூடிய அத்தகைய விதத்தில் நடந்துகொண்டால், அதற்கு முரணாகச் சான்று அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அவர் மதுபோதையிலுள்ளாரென ஊகித்தல் வேண்டும்.

எல்லாத் தவறுகளும் நீதிவான் நீதிமன்றத்தினால் விளங்கப்படற் பாலனவாதல்.

12. (1) இச்சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும் விளங்குவதற்கு நீதிவான் நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழான அல்லது 4 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆள் ஒவ்வொருவரும், விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு (அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை அத்தகைய நீதிமன்றத்தின் சாதாரண நியாயாதிக்கத்தை விஞ்சுவதாக இருப்பினும்) ஆளாதல் வேண்டும்.

13. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அத்துடன் குறிப்பாக பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது ஏதேனும் கருமந் தொடர்பாகவும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(அ) விதித்துரைக்கப்படும்படி இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்டுள்ள எல்லாக் கருமங்களும்.

(ஆ) சுவாசப் பகுப்பாய்வுச் சோதனையை நிறைவேற்றும் விதமும், முறையும் தேவைப்பாடுகளும். அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) ஆளொருவரின் இரத்தத்தில் அற்ககோலானது என்ன செறிவில் இருந்தால் அல்லது என்ன செறிவுக்கு மேற்பட இருந்தால் அந்த ஆள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மதுபோதையில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய பிந்திய

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதெனக் கருதப்படல் வேண்டும். ஓர் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதெனக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவிதமாகக் தேவைப் படுத்தினாலொழிய பொருள் கோடல்.

"அங்கீகரிக்கப்பட்ட இயக்குநர்" என்பது சுவாசப் பகுப்பாய்வு உபகரணத்தை இயக்குவதில் விசேட பயிற்சி பெற்றுள்ளவரும் அத்துடன் அதற்காகப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளவருமான ஒரு சமாதான அலுவலர் எனப் பொருளாகும்.

"சுவாசப் பகுப்பாய்வுச் சோதனை" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சுவாசப் பகுப்பாய்வுக் கருவியின் மூலம் நடாத்தப்படும் ஆளொருவரது சுவாசத்தின் மாதிரியொன்றின் ஒரு பகுப்பாய்வு எனப் பொருளாகும்.

"சுவாசப் பகுப்பாய்வுக் கருவி" என்பது விதித்துரைக்கப் படக்கூடியவாறான ஒருவகையான கருவியொன்று எனப் பொருளாகும்.

"மதுபானம்" என்பது வடிநீர்மம், உவைன்மது, கள், பியர் என்பவற்றையும் அற்ககோலைக் கொண்டிருக்கும் அல்லது அற்ககோல் அடங்கியிருக்கும் எல்லாத் திரவங்களையும் உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமாதான அலுவலர்" என்பது 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது கம்பனியின் கட்டளைச் சட்டம் அல்லாத எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் மானியமாகவோ, கடனாகவோ அல்லது வேறு வகையாகவோ முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளைக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும். அத்துடன்

"பொது ஆதனம்" என்பது அரசின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் ஆதனம் எனப் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மதுபோதையில் இருக்கும் போது புரியப்படும் தவறுகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்**

## அட்டவணை

| நிரை I<br>சட்டவாக்கமும் பிரிவுகளும் | நிரை II<br>தண்டனைகள் |
|---|---|
| 1. தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 183 | ஒன்பது மாதங்களுக்கு நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கான மறியற்றண்டனை அல்லது முந்நூறு ரூபாவுக்கு நீடிக்கக்கூடிய குற்றப்பணம் அல்லது இரண்டும் |
| 2. தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 186 | நாலாண்டுகட்கு நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கான மறியற்றண்டனை. |
| 3. தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 293 | ஐந்தாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கான மறியற்றண்டனை. |
| 4. தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 314 | ஓராண்டுக்கு நீடிக்கக்கூடிய காலப் பகுதிக்கான மறியற்றண்டனை. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராமரிப்புச் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க,

## பராமரிப்புச் சட்டம்.

---

(1999, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

---

**1999,** ஒற்றோபர் மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் **II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பராமரிப்புச் சட்டம்

(1999 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**தங்களைப் பராமரித்துக்கொள்ள இயலாதவர்களாகிய பிள்ளைகளினதும் பராயமடைந்த வழிந்தோன்றல்களினதும் ஊனமுற்ற வழித்தோன்றல்களினதும் வாழ்க்கைத் துணைகளினதும் பராமரிப்புக்கு ஏற்பாடு செய்வதற்கும். பராமரிப்பு தொடர்பிலான சட்டம், பிள்ளைகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும். அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பராமரிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் I

### பராமரிப்புக்கான விண்ணப்பம்

ஒரு வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளையின் அல்லது பராயமடைந்த வழித்தோன்றலின் அல்லது ஊனமுற்ற வழித்தோன்றலின் பராமரிப்புக்கான கட்டளை.

2. (1) போதியளவு வசதியுள்ள எவரேனும் ஆள், தன்னைப் பராமரித்துக்கொள்ள இயலாதவராகிய அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையைப் புறக்கணிக்குமிடத்து அல்லது நியாயமற்ற முறையில் பராமரிக்க மறுக்கின்றவிடத்து, நீதிவான் பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீதும் அத்துடன் அத்தகைய புறக்கணிப்பு அல்லது நியாயமற்ற மறுப்பு எண்பிக்கப்படுவதன் மீதும் அத்தகைய ஆளின் வருமானத்தையும் அத்தகைய வாழ்க்கைத்துணையின் வசதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, நீதிவான் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய மாதாந்த வீதத்தில் அத்தகைய வாழ்க்கைத்துணையின் பராமரிப்புக்கு மாதாந்தப் படியொன்றைச் செலுத்துமாறு அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம்.

ஆயின், எவ்வாறாயினும், விண்ணப்பகார வாழ்க்கைத்துணை சோர வாழ்க்கை நடாத்திக்கொண்டிருந்தால் அல்லது வாழ்க்கைத்துணை இருவரும் இருவரினொத்த சம்மதத்தின் பேரில் பிரிந்து வாழ்ந்து கொண்டிருந்தால், அத்தகைய கட்டளை எதுவும் ஆக்கப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) போதியளவு வசதியுடைய பெற்றார் ஒருவர், அவரது, தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாதவரான பிள்ளையைப் புறக்கணிக்குமிடத்து அல்லது பராமரிக்க மறுக்குமிடத்து, நீதிவான், பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீதும் அத்துடன் அத்தகைய புறக்கணிப்பு அல்லது மறுப்பு எண்பிக்கப்படுவதன்மீதும் பெற்றோரின் வருமானத்தையும் பிள்ளையின் வசதியையும் சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு, நீதிவான் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய மாத வீதத்தில் அத்தகைய பிள்ளையின் பராமரிப்புக்கு மாதாந்தப் படியொன்றைச் செலுத்துமாறு அத்தகைய பெற்றோருக்குக் கட்டளையிடலாம்.

ஆயின், எவ்வாறாயினும், மணஞ்சாராத பிள்ளையொன்றின் விடயத்தில் பெற்றோராண்மை நம்பத்தகு சான்றின் மூலம் நீதிவான் திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது.

(3) போதிய வசதியுடைய பெற்றார் ஒருவர் அவரது, தம்மைப் பராமரித்துக்கொள்ள இயலாதவராகிய பராயமடைந்த வழித்தோன்றலைப் புறக்கணிக்குமிடத்து அல்லது பராமரிக்க மறுக்குமிடத்து நீதிவான் பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீதும் அத்துடன் அத்தகைய புறக்கணிப்பு அல்லது மறுப்பு எண்பிக்கப்படுவதன்மீதும் பெற்றோரின் வருமானத்தையும் பராயமடைந்த வழித்தோன்றலின் வசதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு நீதிவான் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய மாதாந்த வீதப்படி அத்தகைய பராயமடைந்த பிள்ளையின் பராமரிப்புக்கு மாதாந்தப் படியொன்றைச் செலுத்துமாறு கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எவ்வாறாயினும், மணஞ்சாராத வயதுவந்த வழித்தோன்றலொன்றின் விடயத்தில் பெற்றோராண்மை நம்பத்தகு சான்றின்மூலம் எண்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது.

(4) போதிய வசதியுடைய பெற்றார் ஒருவர், அவரது, தன்னைப் பராமரித்துக்கொள்ள இயலாதவரான ஊனமுற்ற வழித்தோன்றலைப் புறக்கணிக்குமிடத்து அல்லது பராமரிக்க மறுக்குமிடத்து, நீதிவான் பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மீதும் அத்துடன் அத்தகைய புறக்கணிப்பு அல்லது மறுப்பு எண்பிக்கப்படுவதன்மீதும், பெற்றோரின் வருமானத்தையும் ஊனமுற்ற வழித்தோன்றலின் வசதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, நீதிவான் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான மாதாந்த வீதப்படி, அத்தகைய ஊனமுற்ற வழித்தோன்றலின் பராமரிப்புக்கு மாதாந்தப்படியொன்றைச் செலுத்துமாறு அத்தகைய பெற்றோருக்குக் கட்டளையிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும் ஊனமுற்ற பிள்ளையொன்றின் விடயத்தில், பெற்றோராண்மை நம்பத்தகு சான்றின் மூலம் எண்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) உட்பிரிவு (1) அல்லது (2) அல்லது (3) அல்லது (4) என்பதன்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி படியொன்றின் கொடுப்பனவுக்கு நீதிவானொருவரால் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, பதிவு செய்யப்பட வேண்டிய நல்ல காரணங்களுக்காக நீதிவான் வேறு ஏதேனும் திகதியிலிருந்து கொடுப்பனவுக்குக் கட்டளையிட்டலான்றி, பராமரிப்புக்கான விண்ணப்பம் அத்தகைய நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட திகதியிலிருந்து அத்தகைய படி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(6) விடயத்துக்கு ஏற்றவாறு (2) ஆம், (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் விடயத்துக்கு ஏற்றவாறு, பிள்ளையொன்றின், பராயமடைந்த வழித்தோன்றலின் அல்லது ஊனமுற்ற வழித்தோன்றலின் பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, நீதிமன்றம் ஒன்றின், திறத்தவர்களின் விண்ணப்பத்தின் மேல் அல்லது தனது சொந்தப் பிரேரணையின் மேல், அடுத்த பெற்றாரை அத்தகைய விண்ணப்பத்துக்குத் திறத்தவர் ஒருவராகச் சேர்க்கலாம், அத்துடன், அத்தகைய பெற்றோர்களில் ஒருவருக்கெதிராக அல்லது அத்தகைய பெற்றோர்கள் இருவருக்கும் எதிராக தோதானதாக இருக்கும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை செல்லுபடி யாகும் காலப்பகுதி.

3. ஏதேனும் பிள்ளையின், பராயமடைந்த வழித்தோன்றலின் அல்லது ஊனமுற்ற வழித்தோன்றலின் பராமரிப்புக்கான படியொன்றுக்கென இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையெதுவும், அத்தகைய கட்டளையின்கீழ் முன்னர் வருமதியான பணத்தை அறவிடும் நோக்கத்திற்குத் தவிர, எந்த ஆள் தொடர்பில் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த ஆள் இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் விடயத்திற்கேற்ப ஒரு பிள்ளையாக, பராயமடைந்த வழித்தோன்றலாக அல்லது ஊனமுற்ற வழித்தோன்றலாக இல்லாதொழிந்த பின்னர் ஏதேனும் வலுவோ செல்லுபடியாகுந்தன்மையோ அற்றதாதல் வேண்டும்.

பராமரிப்புக் கான விண்ணப்பங்கள்

4. (1) பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று :-

(அ) அத்தகைய விண்ணப்பம் ஒரு பிள்ளையின் அல்லது ஊனமுற்ற வழித்தோன்றலின் பராமரிப்புக்கானதாயிருக்குமிடத்து, அத்தகைய பிள்ளையால் அல்லது ஊனமுற்ற பிள்ளையால் அல்லது அத்தகைய பிள்ளையை அல்லது ஊனமுற்ற பிள்ளையை கட்டுக்காப்பில் வைத்திருக்கின்ற எவரேனும் ஆளினால்;

(ஆ) அத்தகைய விண்ணப்பம் பராயமடைந்த ஒரு வழித்தோன்றலின் பராமரிப்புக்கானதாயிருக்குமிடத்து, அத்தகைய பராயமடைந்த வழித்தோன்றலால் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஆற்றலில்லாதவிடத்து அதன் சார்பில் எவரேனும் ஆளினால் அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அத்தகைய விண்ணப்பம் ஒரு வாழ்க்கைத் துணையின் பராமரிப்புக்கானதாயிருக்குமிடத்து, அத்தகைய வாழ்க்கைத்துணையால் அல்லது அத்தகைய வாழ்க்கைத்துணை அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஆற்றலில்லாதவிடத்து, அவர் சார்பில் எவரேனும் ஆளினால்

செய்யப்படலாம்.

(2) பராமரிப்புக்கான விண்ணப்பமொன்று, எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அவ்விண்ணப்பதாரி, அல்லது எந்த ஆள் தொடர்பில் அல்லது எந்த ஆளுக்கு எதிராக அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் வதிகின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்திற்குச் செய்யப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் II

### பராமரிப்புக்கான கட்டளையை வலுவூட்டல்

கட்டளைகளை வலுவூட்டல்

5. (1) பத்தாம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, எந்த ஆளுக்கெதிராக, 2ஆம் பிரிவின் கீழ் அல்லது 11 (1)ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்தின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த ஆளெவரும் (இதனகத்துப்பின்னர் "பிரதிவாதி" என அழைக்கப்படுவார்) அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுவதை அசட்டை செய்யுமிடத்து, நீதிவான் கட்டளையின் மீறுகை ஒவ்வொன்றுக்கும் தவணை தவறுகையிலுள்ள ஒவ்வொரு மாதத்தினதும் படியின் முழுத்தொகைக்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு, ஒரு மாதத்திற்கு நீடிக்கக்கூடிய சாதாரண அல்லது கடுழிய மறியற்றண்டனைக்கு அத்தகைய பிரதிவாதிக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கலாம்.

(2) பராமரிப்புக் கட்டளையொன்றின் கீழ் ஏதேனும் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துடையவரான எவரேனும் ஆளினால் அதன்பொருட்டு விண்ணப்பமொன்று செய்யப்படின், நீதிவான், பிரதிவாதிக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கும் முன்னர் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணத்தின் விதிப்பனவுக்குச் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தவணை தவறுகையிலுள்ள தொகை விதிப்பனவு செய்யப்படவேண்டுமெனப் பணித்து ஆணையொன்றை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. (1) பராமரிப்புக் கட்டளையொன்றின் கீழ் ஏதேனும் கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துடைய ஆளொருவரின் விண்ணப்பத்தின்மீது, பிரதிவாதி இரண்டு மாதங்களை விஞ்சியவொரு காலப்பகுதிக்கு வருமதியான பராமரிப்பின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் என நீதிவானுக்குத் தோன்றுமாயின், நீதிவான், விசாரணையின் பின்னர், கட்டளையொன்றின் மூலம் (இது இதனகத்துப்பின்னர் "சம்பளத்தை நடுக்கட்டல் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்). பிரதிவாதியின் சம்பளத்திலிருந்து கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு கழிப்பனவு செய்து அத்தொகையை உடனடியாக நீதிமன்றத்தால் பணிக்கப்பட்ட முறையில் விண்ணப்பகாரருக்கு அனுப்புமாறு எதிர்வாதியின் தொழில்தருநராக நீதிவானுக்குத் தோன்றுகின்றவரான எந்த ஆளுக்குக் கட்டளை பணிக்கப்படுகின்றதோ அந்த ஆளைத் தேவைப்படுத்தலாம். பிரதிவாதியின் சம்பளத்தை நடுக்கட்டல்.

(2) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுமுன்னர், நீதிவான் அவ்வுட்பிரிவின் கீழ் ஏன் கட்டளையொன்று ஆக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காண்பிக்குமாறும், பிரதிவாதியின் சம்பளவிவரங்களை, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் நீதிமன்றத்திற்குக் கொடுத்துதவும்படி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தேவைப்படுத்துமாறும் எந்த ஆளுக்கு அத்தகைய கட்டளையைச் சேர்ப்பிக்க அவர் உத்தேசிக்கின்றாரோ, அந்த ஆளுக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, அத்தகைய கட்டளையால் இடருற்ற எவரேனும் ஆளினால் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றிற்கான மேன் முறையீடொன்றின் விடயப்பொருளாகலாம். ஆனால், அத்தகைய மேன்முறையீடு எவ்வாறிருப்பினும், நீதிவான் இச்சட்டத்தின்கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடாத்தத் தீர்மானிக்கலாம். இச்சட்டத்தின் 14ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றுக்கும் அத்துடன் ஒவ்வொன்று தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) நீதிவான், பிரதிவாதிக்குச் சேர்க்கப்பட்ட கட்டளை யொன்றின் மூலம் அத்தகைய கட்டளையில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் -

(i) விடயத்திற்கேற்ப, அவரது தொழில்தருநரின் அல்லது அவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்தருநர்கள் இருப்பின், தொழில்தருநர்களின் பெயரையும் முகவரியையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) அவரது அறிவுக்குட்படக்கூடியவாறு கழிப்பனவுகள் உட்பட, அவரது சம்பளம் பற்றிய அத்தகைய விவரங்களையும் ; அத்துடன்

(iii) அவரது தொழில்தருநா் அல்லது தொழில் தருநா்கள் அவரை இனங்காண்பதனை இயலச்செய்வதற்குத் தேவையான அல்லது அவசியமான அத்தகைய வேறு எவையேனும் விவரங்களையும்

குறித்துரைக்கும் கூற்றொன்றை நீதிமன்றத்திற்குச் சமா்ப்பிக்குமாறும் அவரைத் தேவைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகிக் கொடுத்துதவப்பட்ட கூற்றொன்று ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமாகப் பெறப்படுதல் வேண்டும் என்பதுடன் முரணானது காண்பிக்கப்பட்டாலன்றி, சொல்லப்பட்ட பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விவரங்களுக்கு முதற்றோற்ற எண்பிப்பாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) பிரதிவாதி சம்பந்தப்பட்ட பராமரிப்புக் கட்டளைக்கிணங்க ஏதேனும் கொடுப்பனவைச் செய்யத் தவறுதலானது, அவரது வேண்டுமென்ற மறுப்பின் அல்லது குற்றமுடைய அசட்டையின் காரணமாகவல்ல என நீதிவானுக்குத் தோன்றுமாயின் அவா் சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்றை ஆக்குதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பிரதிவாதியின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிக்கையில், நீதிவான், எதிர்வாதியின் வளங்களையும் தேவைகளையும் அத்துடன் எந்த ஆளின் பராமரிப்புக் கொடுப்பனவு தவறுகையிலுள்ளதோ அந்த ஆளின் தேவைகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(6) கட்டளை எந்த ஆளுக்குப் பணிக்கப்படுகின்றதோ அந்த ஆளுக்கு கட்டளையின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்கள் கழியும்வரை சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்று வலுவுக்கு வருதலாகாது.

(7) சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்று பிரதிவாதியின் அல்லது பராமரிப்புக் கட்டளையின்கீழ் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடைய ஆளின் விண்ணப்பத்தின்மீது தள்ளுபடி செய்யப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(8) எந்த ஆளுக்குச் சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்று பணிக்கப்படுகின்றதோ அந்த ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கட்டளைக்கு அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை பின்னர் வேறுபடுத்தப்படுமாயின் வேறுபடுத்தப்பட்டவாறான கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்றைப் பின்பற்றி பிரதிவாதியொருவரின் சம்பளத்திலிருந்து எவையேனும் கழிப்பனவுகள் செய்யப்படவேண்டிய ஏதேனும் சந்தர்ப்பத்தில் இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின்கீழ் அத்தகைய சம்பளம் தொடர்பாக சம்பளத்தின் நடுக்கட்டலுக்கான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்டளைகள் வலுவிலிருக்குமிடத்து, அப்போது இப்பிரிவுடன் இணங்கியொழுகும் நோக்கத்திற்கு, எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தொழில்தருநர் முதலில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட நடுக்கட்டல் கட்டளையொன்றைப் பயனுறுத்துதல் வேண்டும் என்பதுடன் பிரதிவாதியின் சம்பளத்தின்மீதும் தொடர்பில் முறையே அவை வலுவுக்கு வந்த திகதிகளுக்கிணங்க வேறு ஏதேனும் கட்டளையைக் கையாளுதலும் வேண்டும்.

(10) சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்றினைப் பின்பற்றி கொடுப்பனவொன்றைச் செய்யும் தொழில்தருநர் ஒருவர் உடனடியாக, அத்தகைய கட்டளையைப் பின்பற்றி அவரது சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்ட தொகையைக் குறித்துரைத்து எழுத்திலான சுற்றொன்றைப் பிரதிவாதிக்குக் கொடுத்தல் வேண்டும்.

(11) சம்பள நடுக்கட்டல் கட்டளையொன்று தொடர்பில் தவறுகை புரிகின்ற அல்லது அதனோடு இணங்கியொழுகுவதற்கு அசட்டை செய்கின்ற தொழில்தருநர் ஒருவர், நீதிவான் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும். அத்துடன், இரண்டாவது தடவை குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும் விடயத்தில் அல்லது அதே சம்பளம் நடுக்கட்டல் கட்டளை தொடர்பில் தொடர்ந்து குற்றத்தீர்ப்பளிக்கப்படும் விடயத்தில், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும், தொழில்தருநர் ஒருவர் அத்தகைய கட்டளையுடன் இணங்கி யொழுகுவதற்குத் தாம் எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுத்தார் என எண்பிப்பது, சம்பள நடுக்கட்டல் கட்டளை தொடர்பில் தவறுகைபுரிந்துள்ளதாக அல்லது அக்கட்டளையுடன் இணங்கியொழுகுவதற்கு அசட்டை செய்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தொழில்தருநர் ஒருவருக்கு எதிராகாதல் வேண்டும்.

(12) இப்பிரிவின் ஏற்பாடுகள், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் நீதிவான் ஒருவரால் ஆக்கப்படக்கூடிய சம்பள நடுக்கட்டல் ஒன்று தொடர்பில் பயனுடையனவாதல் வேண்டும்.

(13) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) பிரதிவாதியானவர் பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லது மாகாண பகிரங்க சேவை ஒன்றில் அலுவலர் ஒருவராக இருக்கின்றவிடத்து அவர் அப்போதைக்கு எத்திணைக்களத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ, அத்திணைக்களத்தின் தலைவர், அவரது தொழில் தருநராகக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பிரதிவாதியானவர் உள்ளூராட்சிச் சேவையில் ஓர் உறுப்பினராகவும் ஏதேனும் உள்ளூரதிகார சபையில் வேலைக்கமர்த்தப்பட்டுமிருக்கின்ற விடத்து, விடயத்துக்கேற்ப அது மாநகரசபையாக இருந்தால் ஆணையாளர் அல்லது அது ஒரு நகரசபையாக அல்லது ஒரு பிரதேசசபையாக இருந்தால் தவிசாளர் அவரது தொழில்தருநராகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) பிரதிவாதியானவர் ஏதேனும் கூட்டுத்தாபனத்தில், நியதிச்சட்டசபையில் அல்லது கம்பனியில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருக்கின்றவிடத்து விடயத்திற்கேற்ப, அத்தகைய கூட்டுத்தாபனத்தின், நியதிச்சட்டசபையின் அல்லது கம்பனியின் பிரதான அலுவலர் அவரது தொழில்தருநராகக் கருதப்படல் வேண்டும் அத்துடன்.

(ஈ) பிரதிவாதியானவர் ஏதேனும் பங்காண்மையில் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய பங்காண்மையின் முகாமைப்பங்காளர் அல்லது முகாமையாளர் அவரது தொழில்தருநராகக் கருதப்படல் வேண்டும்.

(உ) பிரதிவாதி, படைக்கலம் தாங்கிய படையின் ஓர் உறுப்பினராக இருக்கின்றவிடத்து, அவர் எவ்வலகைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ, அவ்வலகின் ஏவுநர் அவரது தொழில் தருநராகக் கருதப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சல் அலுவலகம் அல்லது வங்கி மூலமாகத் தாபரிப்புப் படி கொடுப்பனவு செய்தல்.

7. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபரிப்புக்கான கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, நீதிவான், அத்தகைய கட்டளையின் கீழ் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுத் தொகையானது, அத்தகைய கொடுப்பனவுக்கு உரித்துடைய ஆளின் பெயரில் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ, ஒவ்வொரு மாதமும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அஞ்சல் அலுவலகத்திலோ அல்லது வங்கி ஒன்றிலோ வைப்பிலிடப்படுதல் வேண்டுமெனப் பிரதிவாதியைப் பணிக்கலாம் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடப்படும் தொகையானது, அத்தகைய ஆளினால் அத்தகைய அஞ்சல் அலுவலகத்தில் இருந்து அல்லது வங்கியிலிருந்து எடுக்கப்படலாம். அத்தகைய ஆளினால் அஞ்சல் அலுவலகத்தின் அல்லது வங்கியின் அப்போதைக்குப் பொறுப்பான அலுவலருக்கு, அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், அதற்கு உரித்துடைய ஆளுக்கு அத்தொகையைக் கொடுப்பனவு செய்வது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்று செய்யப்பட்டு அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் வைப்புச் செய்யப்படுவதில் தவறுகை புரியப்பட்டிருக்கின்றவிடத்து, கொடுப்பனவைப் பெறுவதற்கு உரித்துடைய ஆள், அத்தகைய தவறுகைபற்றி நீதிமன்றத்துக்கு அறிவிக்கலாம். அத்துடன், நீதிவான், அத்தகைய விடயத்தில், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய தவறுகைக்காக ஏன் அவர் தண்டிக்கப்படுத்தலாகா தென்பதற்கான காரணம் காட்டுமாறு பிரதிவாதிக்கு அறிவித்தல் அனுப்பலாம், அத்துடன், முறையான விசாரணையின் பின்னர், அத்தகைய தவறுகை எதுவும் இருந்திருக்கிறது என அவர் திருப்திப்பட்டால், அத்தகைய தவறுகைக்காக இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய தண்டனையைச் சுமத்தலாம்.

கட்டளையை இல்லாதாக்கு வதற்கான அல்லது படித் தொகையை மாற்று வதற்கான விண்ணப்பம்.

8. இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மாதாந்த படியொன்றைப் பெறுகின்ற அல்லது கொடுப்பனவு செய்யுமாறு கட்டளையிடப்பட்ட ஆளெவரினாலும் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேலும், இச்சட்டத்தின்கீழ் எவ்வாளின் நன்மைக்காக அல்லது எவ்வாளுக்கு எதிராகத் தாபரிப்புக்கான கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளதோ, அவ்வாளின் சூழ்நிலைகளில் மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்ற எண்பிப்பின் மேலும் நீதிவானானவர் அவர் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறாக, ஒன்றில் அத்தகைய கட்டளையை இல்லாதாக்கலாம் அல்லது படியில் அத்தகைய மாற்றத்தைச் செய்யலாம்.

ஆயின் அத்தகைய இல்லாதாக்கல் அல்லது மாற்றம், பதிவு செய்யப்படவேண்டிய நல்ல காரணங்களுக்காக நீதிவான் வேறுவகையாக கட்டளை ஆக்கினால் ஒழிய, அத்தகைய நீதிமன்றத்திற்கு இல்லாததாக்கலுக்கான அல்லது மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம் எத்தேதியன்று செய்யப்பட்டதோ, அத்தேதியில் இருந்து பயனுக்கு வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை எங்கு வலுவுக்குக் கொண்டு வரப்படற் பாலதாத லென்பதும் கட்டளையின் பிரதி திறத்த வருக்குக் கொடுக்கப் படல் வேண்டும் என்பதும்.

9. நீதிவானின் கையொப்பத்தின்கீழ் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாபரிப்புக் கட்டளையின் பிரதியொன்று, அது எவ்வாளுக்குச் சாதகமாக ஆக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வாளுக்கு அல்லது அவரின் பாதுகாவலருக்கோ அல்லது அத்தகைய ஆளை உண்மையான கட்டுக்காவலில் வைத்திருக்கின்ற ஆளுக்கு (அவ்வாறு எவரும் இருந்தால்) அல்லது எவ்வாளுக்குப் படியானது கொடுப்பனவு செய்யப்பட இருக்கிறதோ, அவ்வாளுக்கு, கொடுப்பனவு எதுவும் இல்லாமல் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றம் அல்லது அத்தகைய எவரேனும் ஆள் அல்லது பிரதிவாதி இருக்கக்கூடிய இடத்தின்மீது நியாயாதிக்கம் கொண்ட எவரேனும் நீதிவான், அத்தகைய கட்டளையை சமர்ப்பிக்கப்பட்டதன் மேலும், திறத்தவர்களின் ஆளடையாளம் பற்றியும் போமதியான படி கொடுப்பனவு செய்யப்படாதது பற்றியும் திருப்திப்பட்டதன் மேல், 5 ஆம் பிரிவின் அல்லது 6 ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

விண்ணப்பம் எழுத்திலும் மன்றாணை முத்திரைத் தீர்வை இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

10. தாபரிப்பு கட்டளையொன்றுக்கான அல்லது அத்தகைய கட்டளை ஒன்றை வலுவுக்குக் கொண்டுவருவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பகாரரினால் அல்லது அவரது சார்பில் விண்ணப்பத்தைச் செய்யும் ஆளினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன், முத்திரைத்தீர்வை எதுவும் இல்லாமல் இருத்தலும் வேண்டும். பிரதிவாதியொருவருக்கான அல்லது சாட்சிக்காரருக்கான அழைப்பாணை ஒவ்வொன்றும் கூட முத்திரைத் தீர்வை இல்லாமல் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. (1) தாபரிப்புக் கட்டளைக்கான அல்லது தாபரிப்புக் கட்டளையொன்றை வலுவுக்குக் கொண்டுவருவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பத்துக்கு ஆதாரமாக நிகழ்வுகளைக் கூறுகின்ற சத்தியக்கடதாசியொன்றுடன் சேர்த்துச் செய்யப்படல் வேண்டும். அத்துடன், நீதிவான், சத்தியக்கடதாசியில் தரப்பட்டுள்ள நிகழ்வுகள் போதுமானவையெனத் திருப்திப்பட்டால், தோன்றி, ஏன் விண்ணப்பத்துக்கு அனுமதியளிக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, எவ்வாளுக்கு எதிராக விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அவ்வாளுக்கு அத்தகைய சத்தியக்கடதாசியின் பிரதியொன்றுடன் சேர்த்து அழைப்பாணையொன்று அனுப்புதல் வேண்டும். விசாரணை ஆரம்பித்தல்

ஆயின், எவ்வாறாயினும், நீதிவான் தனது தற்றுணிபின் பேரில், மாதாந்தப் படிக்கொடுப்பனவு ஒன்றுக்காக எந்நேரத்திலும் இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்கலாம். இக் கட்டளையானது, அத்தகைய இடைக்காலக் கட்டளை முன்னரே வேறுபடுத்தப்பட்டாலொழிய அல்லது இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, விண்ணப்பத்தின்மீது கட்டளையொன்று ஆக்கப்படும்வரை நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

அத்துடன் அத்தகைய இடைக்காலக் கட்டளையானது விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியில் இருந்து அல்லது நீதிவான் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் இருந்து பயனுளதாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) நீதிவான், அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையை நடாத்தியபின்னர், விண்ணப்பத்தை அனுமதிக்கின்ற அல்லது மறுக்கின்ற கட்டளையை ஆக்குதல் வேண்டும். அத்துடன், அவசியமானால், 5 ஆம் பிரிவின் கீழ் அல்லது 6ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கலாம்.

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழான விண்ணப்பமொன்றானது, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் பிரகாரம் கோப்பிடப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தில் அல்லது சத்தியக்கடதாசியில் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அழைப்பாணையில் அல்லது அதற்கு முன்னர் நடைபெற்ற வேறு வழக்கு நடவடிக்கைகளில் அல்லது இச்சட்டத்தின் கீழான விசாரணையொன்றின்போது நிகழ்ந்த ஏதேனும் பிழை, விட்டுவிடுகை அல்லது ஒழுங்கின்மை காரணமாக அத்தகைய பிழை விட்டுவிடுகை அல்லது ஒழுங்கின்மை, ஒரு திறத்தவருக்கு முக்கிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலொழிய நிராகரிக்கப்படுதலாகாது.

பிரதிவாதி மற்றும் சாட்சிக் காரர்கள் ஆகியோரின் வருகை

12. (1) நீதிவான், விண்ணப்பம் எவ்வாளுக்கு எதிராகச் செய்யப்பட்டதோ அவ்வாள் சமூகமளித்தலை அத்துடன் சாட்சியமளிப்பதற்கு, விண்ணப்பகாரரினால் அல்லது நீதிவானால் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் அல்லது எவ்வாளுக்கெதிராக விண்ணப்பம் செய்யப்பட்டதோ அவ்வாள் சமூகமளித்தலை, அத்துடன் விசாரணை நோக்கங்களுக்காக அவசியமான ஏதேனும் ஆவணம் முன்வைக்கப்படுதலைக் கட்டாயப்படுத்துவதற்கு 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் V ஆம் அத்துடன் VI ஆம் அத்தியாயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) எவ்வாளுக்கெதிராக விண்ணப்பம் செய்யப்பட்டதோ அவ்வாள் சமூகமளிக்காதபோது 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 192ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். பிரதிவாதி வருகைதராத போது எடுக்கப்படும் வழக்கு நடவடிக்கைகள்.

13. பன்னிரண்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கு அமைய, இச்சட்டத்தின் கீழ் நீதிவான் ஒருவரால் பெறப்படும் எல்லாச் சாட்சியமும், எவ்வாளுக்கெதிராக விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வாளின் சமூகத்தில் பெறப்படுதல் வேண்டும் அல்லது அவரது சமூகம் நீதிவானால் தேவைப்படுத்தப்பட்டிருக்காதபோது சட்டத்தரணி எவருமிருந்தால் அவரின் சமூகத்தின் பெறப்பட்டு நீதிவான் நீதிமன்றத்தில் நடாத்தப்படும் வழக்கு விசாரணைகளுக்கென விதித்துரைக்கப்பட்ட முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்படும் முறை.

ஆயின் எவ்வாறாயினும் விண்ணப்பம் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்டவாறு எவ்வாளுக்கெதிராகச் செய்யப்பட்டதோ அவ்வாளுக்கெதிராகக் குற்றச்சாட்டொன்றைக் கோப்பிடுவதற்கோ அல்லது அவ்வாளின் கூற்றைப் பதிவு செய்வதற்கோ அவசியமிருத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், மேலும் இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், விண்ணப்பம் எவ்வாளுக்கெதிராகச் செய்யப்பட்டதோ அவ்வாள் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது சாதாரண சாட்சிக்காரர் ஒருவராகச் சாட்சியமளிப்பதற்கு அவர் தகுதியுடையவராதல் வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வாழ்க்கைத்துணையும் மற்ற வாழ்க்கைத் துணைக்கெதிராக சாட்சியமளிப்பதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

மேன்முறையீடு செய்வதற்கான உரிமை

14. (1) இரண்டாம் அல்லது 11ஆம் பிரிவின்கீழ் நீதிவான் ஒருவரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைபற்றி அதிருப்தியுறும் ஆள் எவரும், குற்றவியல் வழக்கொன்றில் அல்லது விடயமொன்றில் நீதிவான் நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட இறுதிக் கட்டளையொன்று போன்று அதே முறையில் அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட இயைபான மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம். அத்துடன் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 320இல் இருந்து 330 வரையிலான பிரிவுகள் (இவ்விரண்டும் உட்பட) அத்துடன் 357 மற்றும் 358 ஆம் பிரிவுகள், அத்தகைய மேன்முறையீட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 323ஆம் பிரிவில் முரணாக எது எப்படியிருப்பினும், 2ஆம் பிரிவின் கீழான அத்தகைய கட்டளையானது, பதிவுசெய்யப்படவேண்டிய நல்ல காரணங்களுக்காக மேல் நீதிமன்றம் வேறுவகையில் பணித்தாலொழிய, அத்தகைய மேன்முறையீடு காரணமாகத் தடுத்து நிறுத்தப்படுதலாகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், மேலும் நீதிவான், மேல்நீதிமன்றத்துக்குப் பதிவேட்டை சமர்ப்பிக்கையில், வலுவுறுத்தும் நோக்கங்களுக்காக, தமது கட்டளையின் பிரதியொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(2) இப் பிரிவின் கீழ் அதன்மேல் முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், மேல்நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று பற்றி அதிருப்தியடைந்திருக்கும் ஆள் எவரும், அதற்கெதிராக மேல்நீதிமன்றத்தின் அனுமதியுடன் சட்டப்பிரச்சினையொன்றின் மீது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யலாம், அத்துடன் அத்தகைய அனுமதி மறுக்கப்படுகின்றவிடத்து உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதியை முதலில் பெற்றுக்கொண்டு உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

15. ஏதேனும் வழக்கின் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறுபாடுகளுடன் கூடியனவும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளனவுமான படிவங்கள், அதன்கண் குறிப்பிடப்பட்டு இருக்கும் முறையேயான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். படிவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுத் தொகைகள்.

16. இச் சட்டத்தின்கீழ் ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது மேன்முறையீட்டைக் கையுதிர்க்கின்றபோது, நீதிமன்றம் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய விண்ணப்பத்தின் செலவுத் தொகைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பகுதி எதனையும் அல்லது அத்தகைய விண்ணப்பத்தினதும் மேன்முறையீட்டினதும் செலவுத் தொகைகளைச் செலுத்துமாறு இரண்டிலொரு திறத்தவர்களுக்கும் நீதிமன்றம் கட்டளையிடலாம், அத்துடன், அத்தகைய ஏதேனும் கட்டளையின்கீழ் வருமதியான தொகை, அது குற்றப்பணமொன்று என்றாற்போன்று அறவிடற்பாலதாதல் வேண்டும், அத்துடன், கொடுப்பனவில் தவறுகை புரியப்படுகையில், ஒரு மாதகாலத்தை விஞ்சாத சாதாரண மறியற்றண்டனையொன்று சுமத்தப்படலாம்.

வேறு நடவடிக்கைகள் தடை செய்யப்படவில்லை

17. இச்சட்டத்திலுள்ள எதுவும், ஒரு பிள்ளை, வயது வந்த வழித்தோன்றல், ஊனமுற்ற வழித்தோன்றல், வாழ்க்கைத்துணை அல்லது பெற்றார் உட்பட பராமரிப்புக்காக குடியியல் வழக்கொன்றைத் தொடுப்பதற்கு ஆளொருவருக்குள்ள உரிமையைப் பறிப்பதாகப் பொருள்கொள்ளப்படலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. மணம்முடித்த பெண்களின் ஆதனக் கட்டளைச் சட்டம், அக்கட்டளைச் சட்டத்தின் 26ஆம் மற்றும் 27ஆம் பிரிவுகளை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 56 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.

19. பராமரிப்புக் கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. 91ஆம் அத்தியாயத்தை நீக்குதல்

20. (1) பராமரிப்புக் கட்டளைச் சட்டம் நீக்கப்படுவது எப்படியிருப்பினும், நிலை பெயர் கால ஏற்பாடு.

(அ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ்த் தொடுக்கப்பட்ட அத்துடன்

(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீடுகள்,

மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதிருக்கின்றனவுமான எல்லா வழக்கு நடவடிக்கைகளும் மேன்முறையீடுகளும், அத்தகைய கட்டளைச் சட்டம் நீக்கப்பட்டு விடவில்லை என்றாற்போன்று, எல்லா அம்சங்களிலும் விசாரிக்கப்பட்டுக் கையுதிர்க்கப்படல் வேண்டும்.

(2) பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதிருக்கின்றதுமான கட்டளை ஒவ்வொன்றும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அது, அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

21. இச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

22. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலொழிய-

"மகவேற்பு செய்யப்பட்ட" என்னும் பதம் பிள்ளையொன்றின் அல்லது வழித்தோன்றலொன்றின் தொடர்பில் பயன்படுத்தப்படும்போது பிள்ளைகள் மகவேற்பு செய்யப்படல் கட்டளைச் சட்டத்தின் அல்லது கண்டியச் சட்ட வெளிப்படுத்துகை மற்றும் திருத்தக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின்கீழ் மகவேற்பு செய்யப்பட்டது எனப் பொருள்படும்.

"வயது வந்த வழித்தோன்றல்" என்பது பதினெட்டு வயதினரான அல்லது பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட, அத்துடன் இருபத்தைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட மணஞ்சார் அல்லது மணஞ்சாரா அல்லது மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளை எனப் பொருள்படும்.

"பிள்ளை" என்பது பதினெட்டு வயதை எய்தாத மணஞ்சார் அல்லது மணஞ்சாரா அல்லது மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளை எதுவும் எனப் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊனமுற்ற வழித்தோன்றல்" என்பது, தனது வாழ்க்கைப் பிழைப்பைத் தேடிக்கொள்வதற்கு அல்லது போதுமான அளவுக்குத் தனக்கு ஆதாரத்தை தேடிக்கொள்வதற்கு அத்தகைய உடல் ரீதியாக அல்லது உளரீதியாக ஆற்றல் இல்லாமல் செய்கின்றவாறாக அல்லது ஆற்றல் இல்லாமல் வரக்கூடியவாறாக இருக்கின்றதும், எத்தன்மைத்தான வயதை எய்தியதுமான, மணஞ்சார் அல்லது மணஞ்சாரா அல்லது மகவேற்கப்பட்ட வழித்தோன்றல் எதுவும் எனப் பொருள்படும்.

"மணஞ்சார்" என்பது, பிள்ளையொன்று அல்லது வழித் தோன்றலொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும் போது திருமணஞ் செய்த பெற்றோர்களுக்குப் பிறந்த பிள்ளை அல்லது வழித்தோன்றல் எனப்பொருள்படும்.

"மணஞ்சாரா" என்பது, பிள்ளையொன்று அல்லது வழித் தோன்றலொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, திருமணம் செய்யாத பெற்றோர்களுக்குப் பிறந்த பிள்ளை அல்லது வழித்தோன்றல் எனப்பொருள்படும்.

"பெற்றோர்" என்பது, மகவேற்பு செய்யும் பெற்றோரையும் உள்ளடக்கும்.

"சம்பளம்" என்பது, எல்லாப் படிகளையும் வேதனங்களையும் உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை

### படிவ இல. 01

(பிரிவு 15)

### 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்

பிரதிவாதியொருவருக்கான அழைப்புக் கட்டளை

..................................ஐச் சேர்ந்த..........................................என்பவருக்கு, உமது வாழ்க்கைத் துணையை ..................................(பெயர் குறிப்பிடவும்) (அல்லது பிள்ளையை/ வயது வந்த வழித்தோன்றலை/ இயலாமை உள்ள வழித்தோன்றலை) .......................................... (பெயர் குறிப்பிடுக) அல்லது தாயின் பெயரைக் கூறிப் பிள்ளையைக் குறிப்பிடுக. நீர் பராமரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு மறுமொழி கூறுவதற்கு நீர் சமூகமளிப்பது அவசியமானதாதலாலும்.

அல்லது

உமது பிள்ளைக்கு/ வயது வந்த வழித்தேன்றலுக்கு/ இயலாமை உள்ள வழித்தோன்றலுக்கு/ வாழ்க்கைத் துணைக்கு .......................... (பெயர் குறிப்பிடுக அல்லது மேலே உள்ளவாறு விபரிக்கவும்) .............................. காலமாக (காலப்பகுதியைக் குறிப்பிடவும்) போமதியான படியைக் கொடுப்பனவு செய்யாததன் மூலம் 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, பராமரிப்புச் சட்டத்தின் கீழ் உமக்கு எதிராக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்ட தாபரிப்புக் கட்டளை ஒன்றை மீறியிருக்கும் குற்றச்சாட்டுக்கு மறுமொழி கூறுவதற்கு உமது சமூகம் அவசியமானதாக உள்ளதாதலாலும்:

நீர் நேராகவோ (அல்லது விடயத்துக்கேற்றவாறு சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ) .................................. நீதிவான் நீதிமன்றம் முன் ...........ஆம் ஆண்டு ..................ஆம் மாதம் ............................ஆம் நாளாகிய இன்று தோன்றுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

வருகை தரத்தவறுதல் வேண்டாம் என இத்தால் கேட்கப்படுகிறீர்.

.................ஆம் ஆண்டு ........................ ஆம் மாதம் ..........................ஆம் நாளன்று தேதியிடப்பட்டது.

...........................................................................................

பிரதம எழுதுவினைஞரின் கையொப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிவ இல. 02

## 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்

பராமரிப்புப்படி செலுத்தத் தவறியதன் மேல் மறியற்றண்டனைக்கான விறாந்து.

.......................................................................... மாகாணத்தின் பிசுக்காலுக்கு,

.......................................................................................................... என்பவர் (பெயர், விவரணம் மற்றும் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடுக.) தன்னைத்தானே பராமரிக்க இயலாத அவரது வாழ்க்கைத் துணையை ............................. (பெயர் குறிப்பிடுக) அல்லது அவரது பிள்ளையை / வயது வந்த வழித்தோன்றலை இயலாமை உள்ள வழித்தோன்றலை ............................. (பெயர் குறிப்பிடுக அல்லது அழைப்புக் கட்டளையில் உள்ளவாறு விபரிக்கவும்) பராமரிப்பதற்குப் போதுமான அளவு வசதி கொண்டவர் என எண்பிக்கப்பட்டிருப்பதாதலாலும், அத்துடன் அவ்வாறு செய்ய அவர் அசட்டை செய்துள்ளதாதலாலும் (அல்லது மறுத்துள்ளதா தலாலும்) அத்துடன் அவரது வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளையின் /வயதுவந்த வழித்தோன்றலின் இயலாமை உள்ள வழித்தோன்றலின் பாராமரிப்புக்காக ................மாதாந்தப் பணத்தொகையை கொடுக்குமாறு சொல்லப்பட்ட....................................................... என்பவரைத் (பெயர் குறிப்பிடுக) தேவைப்படுகின்ற கட்டளையொன்று முறையாக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டுள்ளதாதலாலும் : அத்துடன், சொல்லப்பட்ட ............................................ என்பவர் (பெயர் குறிப்பிடுக) சொல்லப்பட்ட கட்டளையை வேண்டுமென்றே மதியாமல் ........................... மாதத்துக்கு (அல்லது மாதங்களுக்கு) செலுத்தப்படற்பாலதான படித்தொகையாக இருக்கின்ற.............................ரூபாவைச் செலுத்தத் தவறியுள்ளதாதலாலும், அத்துடன் அதன்மேல், ........................காலப்பகுதிக்கு அவர் சாதாரண (அல்லது கடூழிய) மறியற்றண்டனை அனுபவித்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

சொல்லப்பட்ட ............................................ என்பவரை (பெயர் குறிப்பிடுக) இவ்விறாந்துடன் சேர்த்து ....................மறியற்சாலையில் சொல்லப்பட்ட பிசுக்கால் ஆகிய நீர் உமது கட்டுக்காவலில் கையேற்பதற்கும், அத்துடன் அங்கே சட்டத்துக்கிணங்க சொல்லப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்கும் அது நிறைவேற்றப்பட்ட முறையை அத்தாட்சிப்படுத்துகின்ற புறக்குறிப்பொன்றுடன் இவ்விறாந்தைத் திருப்பி அனுப்புவதற்கும் இது உமக்கு அதிகாரமளிப்பதும் உம்மைத் தேவைப்படுத்துகின்றதுமாகும்.

19.................. ஆம் ஆண்டு .................................... ஆம் மாதம் ..............................நாளாகிய இன்று எனது கையொப்பத்தின்கீழ் வழங்கப்பட்டது.

..........................................

கையொப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படிவ இல. 03

(பிரிவு 15)

**1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டம்**

உடமை பற்றி விற்பனை செய்வதன் மூலம் பராமரிப்புக் கொடுப்பனவை வலியுறுத்துவதற்கான விறாந்து.

.......................... பிசுக்காலுக்கு,

.............................ரூபா மாதாந்தப் பணத்தொகையை அவரது வாழ்க்கைத்துணைக்கு (அல்லது பிள்ளைக்கு / வயது வந்த வழித்தோன்றலுக்கு / இயலாமை உள்ள வழித்தோன்றலுக்கு) பராமரிப்புக்காக கொடுக்குமாறு ............................................ என்பவரைத் (பெயர் குறிப்பிடுக) தேவைப்படுத்துகின்ற கட்டளையொன்று முறையாக ஆக்கப்பட்டுள்ளதாதலாலும்: அத்துடன் சொல்லப்பட்ட ........................................ என்பவர் (பெயர் குறிப்பிடுக) சொல்லப்பட்ட கட்டளையை வேண்டுமென்றே மதியாமல், .............................. மாதத்துக்கான (அல்லது மாதங்களுக்கான) படித்தொகையாக இருக்கின்ற ................................ ரூபாவைச் செலுத்துவதற்குத் தவறிவிட்டாராதலாலும்.

........................................ மாவட்டத்துக்குள்ளாக காணப்படக்கூடிய சொல்லப்பட்ட ........................................என்பவருக்குச் (பெயர் குறிப்பிடுக)-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமான ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றுவதன் மூலம் உடமையகற்றுதலும் அவ்வாறு உடமையகற்றப்பட்ட பின்னர் உடனடியாக .................................. (அனுமதிக்கப்பட்ட நாட்களின் அல்லது மணித்தியாலங்களில் எண்ணிக்கையைக் கூறுக) என்பதற்குள்ளாகச் சொல்லப்பட்ட பணத்தொகையைத் திருப்திப்படுத்துவதற்கும் போதுமானதாக இருக்கும் உடமையகற்றப்பட்ட அசைவுள்ள ஆதனத்தை அல்லது அதன் அத்தகைய அளவை விற்பனை செய்வதற்கும், அது நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உடனடியாக அதன்கீழ் நீவிர் யாது செய்து உள்ளீர் என்பதை அத்தாட்சிப்படுத்தும் புறக்குறிப்பொன்றுடன் இவ்விறாந்தைத் திருப்பி அனுப்புவதற்கும் உமக்கு அதிகாரமளிக்கப்பட்டு நீர் தேவைப்படுத்தப்படுகிறீர்.

19...................... ஆம் ஆண்டு ........................................ ஆம் மாதம் ........................... நாளாகிய இன்று எனது கையொப்பத்தின்கீழ் கொடுக்கப்பட்டது.

.......................................

கையொப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம்.

## 1980 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறாக.

(1979 ஜூன் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**1979,** யூன் மாதம் 29 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் **II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம்.

(1979, ஜுன் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**ஆரம்ப நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறையை ஒழுங்கு படுத்துவதற்கும், தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இது, கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I
## பொது

2. ஆரம்ப நீதிமன்றங்களின் குடியியல், குற்றவியல், நியாயாதிக்கம், இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, புறநீங்கலானதாக இருத்தல் வேண்டும். ஆரம்ப நீதி மன்றங்களின் குடியியல், குற்றவியல், நியாயாதிக்கம் புறநீங்கலானதாக இருக்கவேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப நீதிமன்றங்களின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட வழக்குகளின், நீதிமன்றங்களின் கடமை.

3. மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் முன்னர் அல்லது நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் முன்னர் கொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் வழக்கிலாயினுஞ்சரி அல்லது குற்றவியல் வழக்கிலாயினுஞ்சரி, சம்பந்தப்பட்ட வழக்கு ஆரம்ப நீதிமன்றமொன்றின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்குட்பட்ட ஒன்றென அவ்வழக்கு நடவடிக்கைகளின் ஏதேனும் கட்டத்தில் அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றவிடத்து, அந்நீதிமன்றமானது அவ்வழக்கினை மேற்கொண்டு விசாரிப்பதை நிறுத்தலாம் என்பதுடன், கட்சிக்காரர்களை அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்: அத்துடன் அது, அத்தகைய வழக்கு ஒரு குடியியல் வழக்காக இருக்குமிடத்து, நியாயமானதெனக் காணக்கூடியவாறான செலவுத்தொகை பற்றிய அத்தகைய கட்டளையையும் ஆக்கலாம்.

குற்றவியல் வழக்கை நீதிவான் நீதி மன்றத்திற்கு இடமாற்றும் படி பணிப் பதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது சட்டத்துறைத் தலைமை யதிபதிக்கு உள்ள உரிமை

4. (1) ஆரம்ப நீதிமன்றமொன்றின் புறநீங்கலான நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் வழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை அத்தகைய நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கின்றவிடத்தும், அச்சூழ்நிலைகளில் அது தோதானதாய் இருக்குமெனக் கருதப்படுகின்றவிடத்தும் அக்கறை உள்ள எவரேனும் கட்சிக்காரரால் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றமோ அல்லது சட்டத்துறை தலைமையதிபதியோ அத்தகைய குற்றவழக்குத் தொடுப்பினை அல்லது வழக்கு நடவடிக்கையைப் பணிப்பில் குறித்துரைக்கப்படும் நீதிவான் நீதிமன்றமொன்றிற்கு இடமாற்றும்படி பணித்தல், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்பு ஒன்று, சம்பந்தப்பட்ட வழக்கு எந்த ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறா திருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு அறிவிக்கப் படுகின்றவிடத்து, வழக்கினை மேற்கொண்டு விசாரித்தலை அவர் நிறுத்துதல் வேண்டும் என்பதுடன், வழக்கின் பதிவேட்டையும் சம்பந்தப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படும் நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நீதிவான் நீதிமன்றமானது, அதற்கு இடமாற்றப்பட்ட அத்தகைய வழக்கினை அந்த நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு குற்றவழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை என்றாற்போன்று விசாரித்தலும் விளங்குதலும் தீர்மானித்தலும் வேண்டும் : அத்துடன் அது அவ்வாறு செய்வதற்கு முழுத்தத்துவமும் நியாயாதிக்கமும் உடையதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தத்துவமும் நியாயாதிக்கமும் அதற்கு உரித்தாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

5. ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்பட்ட ஏதேனும் குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை, அதில் சம்பந்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் அல்லது பிரச்சனைகள் காரணமாக இட நியாயாதிக்கம், கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றமொன்றின் முன்னிலையில் விளங்கப்படுதல் மிகவும் தோதானதாயிருக்கலாமென கட்சிக் காரர்களுள் ஒருவரால் செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின்மீது -

வழக்கை மாவட்ட நீதி மன்றத்திற்கு இடமாற்று வதற்கு மேன்முறை யீட்டு நீதி மன்றத்து க்குள்ள தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வேறுவகையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றுமாறு செய்யப்படுமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின் பதிவேட்டை அல்லது நாட்குறிப்பேட்டை அழைப்பித்துப் பரிசோதித்தலும், ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தலும், அத்தகைய வழக்கினை விளங்கித் தீர்மானிப்பதற்கென அத்தகைய மாவட்ட நீதிமன்றத்துக்கு இடமாற்றுகின்ற கட்டளையை ஆக்குதலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாய் இருத்தல் வேண்டும். அத்தகைய கட்டளையானது வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எந்த ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தின் நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டதன்மேல், அவர், அவ்வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டு விசாரித்தலை நிறுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின் பதிவேட்டையும் சம்பந்தப்பட்ட எல்லாப் பத்திரங்களையும் கட்டளையில் குறித்துரைக்கப்படும் மாவட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும். அதன்மேல் அத்தகைய மாவட்ட நீதிமன்றமானது, அத்தகைய வழக்கினை அல்லது வழக்கு நடவடிக்கையினை, அது அம்மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை என்றாற்போன்று விசாரித்தலும் விளங்குதலும் தீர்மானித்தலும் வேண்டும்: அத்துடன் அது அவ்வாறு செய்வதற்கு முழுத் தத்துவமும் நியாயாதிக்கமும் உடையதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தத்துவமும் நியாயாதிக்கமும் அதற்கு உரித்தாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. (அ) ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கின்ற ஏதேனும் தவறுக்கான ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பு தொடர்பில், வழக்கின் அச்சூழ்நிலைகளில், எத்தண்டத்தை விதிப்பதற்கு ஆரம்ப நீதிமன்றம் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத் தண்டத்தால் அத்தவறு போதுமான அளவில் தண்டிக்கப்படக்கூடியதல்லவென; அல்லது

வேறோர் இடத்தில் மிகவும் தோதாக விளங்கப் படுபவதான வழக்குப் பற்றி, கட்டளைக் காக மேன் முறையீட்டு நீதிமன்றத் துக்கு ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அறிக்கை செய்தல்

(ஆ) அந்நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கின்ற ஏதேனும் குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை தொடர்பில், அவ்வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை மாவட்ட நீதிமன்றமொன்றின் முன்னிலையில் மேலும் தோதாக விளங்கப்படலாமென,

ஏதேனும் ஆரம்ப நீதிமன்றத்துக்குத் தோன்றுமாறு செய்யப்படுமிடத்து, விடயத்துக்கேற்றவாறு, அக்குற்றவழக்குத்தொடுப்பை அல்லது குடியியல் வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டு விசாரிப்பதை இடைநிறுத்துவது அத்தகைய ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்; அத்துடன் அதுபற்றி, 4ஆம் பிரிவின்கீழ் அல்லது 5ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்றைப் பெறுவதற்கான நோக்குடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அவர் அறிக்கை செய்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கானது நியாயாதிக்கத் துக்கு அப் பாற்பட்டதாக விருக்கின்ற விடத்து, தகுதி வாய்ந்த நீதிமன்றத் துக்குக் கட்சிக்காரர் களை ஆற்றுப்படுத்த வேண்டிய கடமை.

7. (1) ஆரம்ப நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையிலான ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பின், குடியியல் வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின்போது அத்தகைய குற்றவழக்குத்தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை அந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாயதிக்கத்துக்குட்பட்டதல்லவெனத் தோன்றுகின்றவிடத்து, வழக்கு நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு அக்குற்றவழக்குத்தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எக்கட்சிக்காரரால் தொடுக்கப்பட்டதோ அக் கட்சிக்காரரைத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு ஆற்றுப் படுத்துதல் அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்தின் கடமையாதல் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்றமொன்று, (1) ஆம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் குற்றவழக்குத்தொடுப்பின், குடியியல் வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின்மீதான நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு அக்குற்றவழக்குத் தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எக்கட்சிக்காரரால் தொடுக்கப்பட்டதோ, அக்கட்சிக்காரரை தகுதி வாய்ந்த நீதிமன்றத்திற்கு ஆற்றுப் படுத்துமிடத்து, அக்குற்றவழக்குத் தொடுப்பு, குடியியல் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை, அதே தவறு தொடர்பில் அல்லது கருமம் தொடர்பில் ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு குற்றவழக்குத் தொடுப்பை, குடியியல் வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை தொடுப்பதற்குத் தடையாகச் செயலுறுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் II

### தண்டனை விதிப்பதற்கான தத்துவங்கள்

8. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று பின்வரும் தண்டனைத் தீர்ப்புகளுள் எதனையும் அளிக்கலாம் :- ஆரம்ப நீதிமன்றம் அளிக்கக் கூடிய தண்டனைத் தீர்ப்புகள்.

(அ) மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனை;

(ஆ) இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணம்;

(இ) தவறாளர் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவராயின் பிரப்பங்கீறு கொண்டு அடித்தல் :

(ஈ) மேற்சொல்லப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளில் எவையேனும் இரண்டை இணைத்த ஏதேனும் சட்டமுறையான தண்டனைத் தீர்ப்பு;

(2) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறும் சந்தருப்பத்தில், இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி -

(அ) குற்றப்பணத்தொகை இருபத்தைந்து ரூபாவை விஞ்சாதவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஏழு நாட்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குற்றப்பணத்தொகை இருபத்தைந்து ரூபாவை விஞ்சியும் ஆனால் ஐம்பது ரூபாவை விஞ்சாதுமுள்ளவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பதினான்கு நாட்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கலாம்;

(இ) குற்றப்பணத்தொகை ஐம்பது ரூபாவை விஞ்சுகின்ற விடத்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கலாம்.

(3) இப்பிரிவிலுள்ள எதுவும், இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் ஆரம்ப நீதிமன்றமொன்றுக்கு அளிக்கப்படக்கூடிய தண்டனை விதிப்பதற்கான சிறப்புத் தத்துவங்கள் எவற்றையும் மதிப்புக் குறைப்பதாகப் பொருள் கொள்ளப்படலாகாது.

ஏழு நாட்களுக்கு குறைந்த காலத்துக் கான மறியற்றண்டனைத் தீர்ப்பு அளித்த லாகாது.

(9) இச்சட்டத்தில், அல்லது தண்டனைச்சட்டக் கோவையில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக் காகவாயினுஞ்சரி அல்லது வேறெதற்காகவாயினுஞ்சரி ஏழு நாட்களுக்குக் குறைந்த காலத்துக்கான மறியற்றண்டனைத் தீர்ப்பை ஆள் எவருக்கும் ஆரம்ப நீதிமன்றம் அளித்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குற்றப்பணம் செலுத்தத் தவறியமைக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெதற்காகவாயினுஞ்சரி ஆரம்ப நீதிமன்றமொன்று, தவறாளர் ஒருவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு சட்டத்தினால் எச்சூழ்நிலைகளில் தத்துவமளிக்கப்பட்டுள்ளதோ அப்படியான எவையேனும் சூழ்நிலைகளில் மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக, நீதிமன்றம், கட்டளையின் மூலம், அக்கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியதும் பிற்பகல் 04 மணிக்கு மேற்படாததுமான அத்தகைய நேரம்வரையில், அக்கட்டளை இடப்படும் நாளன்று நீதிமன்றச் சுற்றெல்லைக்குள் தவறாளரைத் தடுத்து வைக்குமாறு கட்டளையிடலாம். மறியற்றண்டனைக்குப் பதிலாக நீதிமன்றச் சுற்றெல்லைக்குள் தடுத்துவைத்தலாகிய தண்டனைத் தீர்ப்புகள்

11. (1) குற்றப்பணமொன்று செலுத்தத் தவறியமைக்காக, அத்தகைய தவறுகைக்கெனச் சட்டத்தால், அதிகாரமளிக்கப் பட்டுள்ளவாறான அத்தகைய காலத்துக்கான மறியற்றண்டனையை, ஆரம்ப நீதிமன்றமொன்று தீர்த்தளிக்கலாம்: ஆயின், தீர்த்தளிக்கப்பட்ட அத்தகைய மறியற்றண்டனைக் காலமானது இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்துக்குள்ள தத்துவங்களை விஞ்சுதலாகாது. குற்றப் பணம் செலுத்தத் தவறியமைக் காக மறியற்றண்டனைத் தீர்ப்பளிப் பதற்கு ஆரம்ப நீதி மன்றத்திற் குள்ள தத்துவம்.

(2) இப்பிரிவின்கீழ் தீர்த்தளிக்கப்பட்ட மறியற்றண்டனை, 8ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றத்தால் தீர்த்தளிக்கப்படற்பாலதான ஆகக் கூடிய காலத்துக்கான தனிநிலையான மறியற்றண்டனைத் தீர்ப்போடு சேர்த்து மேலதிகமானதாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய சேவைக் கட்டளை.

12. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கு குற்றத்தீர்ப்பளித்ததன்மேல் மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக அல்லது குற்றப்பணத்தைக் கொடுப்பனவு செய்யத் தவறியமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிப்பதற்குப் பதிலாக அரசின் செய்திட்டமொன்றில் அல்லது அரச ஆதரவு பெற்ற செய்திட்டமொன்றில் அல்லது வேறெங்கேனும் பெயர் குறிக்கப்பட்ட இடமொன்றில் குறித்திடப்பட்ட சேவையைப் புரியும்படி குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைப் பணிக்கும் கட்டளையொன்றை (இது இதனகத்துப் பின்னர் "சமுதாய சேவைக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதியலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பதியப்பட்ட சமுதாய சேவைக் கட்டளையொன்று, அந்நீதிமன்ற நீதிபதி பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) சமுதாய சேவைக் கட்டளையொன்றின் நடைமுறைக் காலமானது மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(4) குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எந்த ஆள் தொடர்பில் சமுதாய சேவைக் கட்டளையொன்று பதியப்பட்டதோ அந்த ஆள், பெயர் குறிக்கப்பட்ட வேலையிடத்துக்கு வரத் தவறினால், அல்லது அவ் வேலையிடத்துக்கு வந்திருந்தும் குறித்திடப்பட்ட சேவையைச் செய்யத் தவறினால் அல்லது வேலைக்கு வருவதில் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரமமில்லாதவராக இருந்தால் அல்லது பெயர் குறிக்கப்பட்ட இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அதன் மீது கட்டுப்பாடுள்ள ஆள் திருப்தியடையும்படி, வேலை செய்யாதிருந்தால் அல்லது வேறு வகையில் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறினால், அப்போது அதை இல்லாதொழித்தலும், நீதிமன்றம் தக்கதெனக் கருதும் அத்தகைய மறியற்றண்டனைத் தீர்ப்பை விதித்தலும் அந்த ஆரம்ப நீதிமன்றத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(5) சமுதாய சேவைக்கட்டளையின் நடைமுறைக்காலம் முழுவதன்போதும் பெயர் குறிக்கப்பட்ட இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அதன்மீது கட்டுப்பாடு உள்ள ஆள், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் வருகை தருதல் பற்றியும் அவரது வேலைபற்றியும், அத்துடன் சமுதாய சேவைக் கட்டளை இணங்கியொழுகப்படுகின்றதா அல்லது இணங்கியொழுகப்பட்டிருக்கின்றதா என்பதைப் பற்றியும் கூறுவதான ஓர் அறிக்கையை சமுதாயச் சேவைக் கட்டளையை பதிந்த ஆரம்ப நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைத்தல் வேண்டும்: அத்துடன் அத்தகைய அறிக்கை அத்தகைய விடயங்களில் இறுதியானதாதலும் முற்றானதாதலும் வேண்டும்.

13. (1) ஆரம்ப நீதிமன்றமொன்று, தவறாளர் ஒருவர்மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு விதிக்குமிடத்து, அந்நீதிமன்றமானது, கட்டளைத்தேதியிலிருந்து பதினெட்டு மாதகாலப் பகுதிக்குள் அத்தகைய தவறாளர் மறியற்றண்டனையினால் தண்டிக்கப்பட வேண்டிய இன்னொரு தவறைப் புரிந்தாலன்றி, அத்தண்டனைத் தீர்ப்பு பயனுடையதாக வருதலாகாதெனக் கட்டளையிடலாம். நிறுத்தி வைக்கப் படும் மறியற்றண் டனைத் தீர்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆரம்ப நீதிமன்றமொன்று ஆக்குமிடத்து, நிறுத்திவைக்கப்படும் மறியற்றண்டனைத்தீர்ப்புக்கள் பற்றிய 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச்சட்டத்தின் 303ஆம் பிரிவின் (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளல்லாத ஏனைய ஏற்பாடுகள் அக்கட்டளைக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்திற்காக, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதினெட்டு மாத காலப்பகுதி அந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள "நடைமுறைக் காலம்" எனக் கருதப்படுதலும் வேண்டும்.

ஒரே விளக்கத்தில் பல்வேறு தவறுகளுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து வழங்கப்படும் தண்டனைத் தீர்ப்பு.

14. (1) ஆளொருவர், எவையேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனிவேறு தவறுகளுக்காக ஒரே விளக்கத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போது, அத்தகைய தவறுகளுக்கென விதித்துரைக்கப்பட்டதும், ஆரம்ப நீதிமன்றம் விதிப்பதற்கு ஆற்றலுடையதுமான பல்வேறு தண்டனைகளை அத்தகைய தவறுகளுக்காக நீதிமன்றமானது (3) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக அவர்மீது விதிக்கலாம்: அத்தகைய தண்டனைகளில் மறியற்றண்டனையும் அடங்கியிருந்தால், அவை அல்லது அவற்றில் எவையும் ஏககாலத்தில் தொடங்கவேண்டுமென நீதிமன்றம் கட்டளையிட்டாலொழிய, நீதிமன்றம் பணிக்கக் கூடியவாறான அத்தகைய ஒழுங்கு முறையில் ஒன்று முடிவடைவதன்மேல் மற்றொன்றாகத் தொடங்குதல் வேண்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், கூட்டுமொத்தத் தண்டனையானது, அத்தகைய நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் எவ்வளவு தண்டனையை விதிப்பதற்கு ஆற்றல் கொண்டிருக்குமோ அந்தத் தண்டனை அளவின் இருமடங்கை விஞ்சுதலாகாது.

(2) ஒரே விளக்கத்தில் பல்வேறு தவறுகளுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட விடயத்தில் இப்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட கூட்டுமொத்தத் தண்டனைத் தீர்ப்புகள், மேன்முறையீட்டு நோக்கத்திற்காகத் தனியொரு தண்டனைத் தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தண்டனைச் சட்டக்கோவையின் 55ஆம், 67ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எத்தகையனவுமான எல்லாத்தவறுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

15. ஓர் ஆரம்ப நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்வதுடன் அல்லது விடுவிப்பதுடன், முறைப்பாடானது விழலானதென அல்லது அலைக்கழிக்கும் தன்மையதென வெளிப்படுத்தும் போதிலெல்லாம் - (முறைப்பாடு விழலானதாக அல்லது அலைக் கழிக்கும் தன்மையதாக இருக்கும் போது செலவுத் தொகை களையும் நட்ட ஈட்டையும் செலுத்துதல்)

(அ) ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை அரசின் செலவுத் தொகைகளாகவும்; அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக இருப்பார்களெனின் குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை நட்டஈடாகவும்,

செலுத்தும்படி முறைப்பாட்டாளருக்குக் கட்டளையிடுதல் அத்தகைய நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

குற்றத் தீர்ப்பளிக் கப்படுவதன் மேல் நட்ட ஈட்டைச் செலுத்துதல்

16. ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போதிலெல்லாம் அல்லது குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென முடிவு செய்யும் ஓர் ஆரம்ப நீதிமன்றம் தவறாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்காமலே அவர்மீது நடவடிக்கை மேற்கொள்ள முற்படுமிடத்து, நீதிமன்றத்திற்கு பொருத்தமானதெனத் தோன்றுகின்றவாறாக இருநூறு சாத அத்தகைய பணத்தொகையை நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அல்லது அத்தகைய தவணைகளில் தவறு காரணமாகப் பாதிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு நட்டஈடு என்ற வகையில் செலுத்தும்படி தவறாளருக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம். இப்பிரிவின் கீழும் 15ம் பிரிவின்கீழும் தீர்த்தளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை, நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று அறவிடற்பாலதாக இருத்தல் வேண்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், தவறாளர் பதினாறு வயதுக்குட்பட்டவராக இருப்பாரெனின், நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதினால், இப்பிரிவின்கீழான கொடுப்பனவு அவரது பெற்றோரினால் அல்லது பாதுகாவலரினால் செலுத்தப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடலாம்.

17. ஓர் ஆரம்ப நீதிமன்றம் குற்றப்பணமொன்றை அல்லது குற்றப்பணத்தைப் பகுதியாகக் கொண்ட தண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்கின்றபோதிலெல்லாம், அறவிடப்படும் குற்றப்பணம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் தவறு காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆளுக்குச் செலுத்தப்படும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

செலுத்தப்பட்ட குற்றப்பணம் அல்லது அதன் ஏதேனும் பாகம் ஊறுற்ற கட்சிக்காரருக்குச் செலுத்தப்படும்படி நீதிமன்றம் கட்டளையிடலாம்.

18. ஓர் ஆரம்ப நீதிமன்றம், குற்றச்சாட்டு எண்பிக்கப்பட்டுள்ளதென முடிவுசெய்து, ஆனால் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் நடத்தை, முன்வரலாறு, வயது, உடல்நிலை அல்லது மனநிலை என்பவற்றை அல்லது எவ்வாறான குற்றந்தணிக்கும் சூழ்நிலையில் தவறு புரியப்பட்டது என்பதைக் கவனத்திற்கொண்டு ஏதேனும் தண்டனை அல்லது பெயரளவிலான தண்டனை தவிர்ந்த வேறு தண்டனை எதனையும் கொடுத்தல் உசிதமற்றதென அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறாக நிபந்தனையின் பேரில் தவறாளரை விடுவித்தல் உசிதமானதென நீதிமன்றம் அபிப்பிராயப்படும்போதெல்லாம், நீதிமன்றமானது, குற்றத் தீர்ப்பளித்தற்கு முற்படாமலே :-

தவறாளர்களை நிபந்தனையின் பேரில் விடுவிக்க அனுமதிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அத்தகைய கண்டித்தலின் பின்னர் அத்தகைய தவறாளரை விடுவிக்குமாறு கட்டளையிடலாம்:

(ஆ) ஐம்பது ரூபாவை விஞ்சாத தொகையிலான அரசின் செலவுத் தொகையினைச் செலுத்துமாறு அத்தகைய தவறாளருக்குக் கட்டளையிடலாம்.

(இ) பதினாறாம் பிரிவின்கீழான நட்டஈட்டைச் செலுத்துமாறு கட்டளையிடலாம்.

(ஈ) நன்னடத்தையுள்ளவராக இருப்பாரெனவும், பதினெட்டு மாதங்களை விஞ்சாததும், நீதிமன்றக் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியதுமான அத்தகைய காலத்தினுள் ஏதேனும் நேரத்தில் அழைக்கப்பட்டால் குற்றத்தீர்ப்புக்காக அல்லது தண்டனைத் தீர்ப்புக்காகத் தோன்றுவாரெனவும் கூறும் நிபந்தனையில் பிணைகாரருடன் அல்லது பிணைகாரரின்றி பிணைப்பத்திரமொன்றை அவர் முடிப்பதன்மேல் தவறாளரை விடுவிக்கலாம்:

(உ) தவறாளர் நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவறாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. பதினெட்டாம் பிரிவின்கீழான பிணைப்பத்திரமொன்று, நீதிமன்றமானது, அவ்விடயத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு பின்வரும் எல்லாக்கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் அந்தப் பிணைப்பத்திரத்தில் உட்புகுத்தப்படற்பாலனவெனக் கட்டளையிடக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளைக் கொண்டிருக்கலாம்:- பிணைப் பத்திரத்தின் நிபந்தனைகள்

(அ) திருடர்களோடும் விரும்பத்தகாத வேறு ஆட்களோடும் கூட்டுச்சேருவதிலிருந்து அல்லது விரும்பத்தகாத இடங்களில் நடமாடுவதிலிருந்து தவறாளரைத் தடை செய்தல்:

(ஆ) குடிபோதையில் இருந்தார் என்பதே தவறாக இருக்குமிடத்து அல்லது குடிபோதையின்கீழ் தவறொன்று புரியப்பட்டிருக்குமிடத்து, கிளர்ச்சியூட்டும் மதுவை அருந்தாதிருக்கும்படி கூறுதல்:

(இ) பொதுவாகத் தவறாளர் நேர்மையும் முயற்சியுமுள்ள வாழ்க்கையை நடாத்தும்படி செய்தல்:

(ஈ) தவறாளர், அவரது பிணைக்காரர் எவரேனுமிருப்பின் அவரோடு அல்லது பிணைகாரர்கள் எவரேனும் இருப்பின் அவர்களோடு, கட்டளையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கால இடைவேளைகளில், ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் அவரது தனியறையில் தோன்றும்படி ஏற்பாடுசெய்தல்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) பதினாறாம், 18 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவாறாக நட்டஈட்டையும் அரசின் செலவுத் தொகைகளையும் செலுத்தும்படி பணித்தல்:

பிணைப் பத்திரத்தின் நிபந்தனை களை வேறுபடுத்து வதற்கு நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.

20. எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான அவரது பிணைப் பத்திரத்தின் மூலம் குற்றத்தீர்ப்பிற்காகவும் தண்டனைத் தீர்ப்பிற்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம் பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளை வேறுபடுத்தலாம் என்பதுடன், பிணைப்பத்திரம் விடுவிக்கப்படல் வேண்டும் என்னும் வகையில் அந்த ஆளின் நடத்தை அத்தகையதாயுள்ளதெனத் திருப்தியடைவதன்மேல் பிணைப்பத்திரத்தை விடுவிக்கலாம்.

பிணைப் பத்திரத்தின் நிபந்தனை களைக் கடைப் பிடித்தற்குத் தவறாளர் தவறுகின்ற விடயத்தி லான ஏற்பாடு.

21. (1) தவறாளர் ஒருவர் 18ஆம் பிரிவின்கீழான அவரது பிணைப்பத்திரத்தின் மூலம், குற்றத்தீர்ப்புக்காகவும் தண்டனைத் தீர்ப்புக்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றம், தவறாளர் அவரது பிணைப்பத்திரத்தின் நிபந்தனைகளுள் எவற்றையேனும் கடைப் பிடிக்கத் தவறியுள்ளாரென்ற தகவல் பற்றித் திருப்தியடையுமெனில், அது, தவறாளரையும் அவரது பிணைகாரர்களையும் (எவரேனுமிருப்பின்) அதன் முன்னிலையில் வருகைதருமாறு தேவைப்படுத்தும் அழைப்புக்கட்டளையை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய அழைப்புக்கட்டளையின் மேல் தவறாளரதும் அவரது பிணைகாரர்களினதும் (எவரேனுமிருப்பின்) வருகையைப் பெற முடியாதெனின், அத்தகைய நோக்கத்துக்கெனப் பிடியாணையொன்றை நீதிமன்றம் வழங்கலாம்.

(3) தவறாளர் குற்றத்தீர்ப்புக்காகவும் தண்டனைத் தீர்ப்புக்காகவும் எந்த நீதிமன்றத்தின் முன்னிலையில், தோன்றுவதற்கு அவரது பிணைப்பத்திரத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ளாரோ அந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் தவறாளர் தோன்றும்போது அல்லது கொணரப்படும்போது, அந்நீதிமன்றமானது, சுருக்கவிசாரணையின் பின்னர், அவர் தமது பிணைப்பத்திரத்தின் ஏதேனும் நிபந்தனையைக் கடைப்பிடிப்பதற்கு தவறிவிட்டாரெனத் திருப்தியடைவதன்மேல், முதலாவது தவறுக்காக அவர்மீது உடனடியாகக் குற்றத் தீர்ப்பளித்துத் தண்டனைத்தீர்ப்பளிக்கலாம்: அல்லது, அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றளிக்கப்பட்ட பாடசாலை யொன்றுக்குத் தவறாளர் அனுப்பப்பட வேண்டுமெனப் பிள்ளைகள், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் முதற்றடவையிலேயே நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கக்கூடியவொன்றாக அவ்வழக்கு இருப்பதுடன் தவறாளர் வெளித்தோற்றத்தில் பதினாறு வயதுக்குட்பட்டவராகவும் இருப்பாரெனின், அத்தகையதொரு கட்டளையை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சில வழக்குகளில் சவுக்கடி கொடுத்தல்

22. பதினாறு வயதுக்குட்பட்ட எவரேனும் ஆண்பிள்ளையைக் குற்றப்பணம் செலுத்த வேண்டுமென அல்லது மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டுமெனக் கட்டளையிடுவதற்குப் பதிலாக, உடற்றண்டனைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 294 ஆம் பிரிவுக்கும் இணங்க, அத்தகைய ஆளுக்குச் சவுக்கடி கொடுக்கப்பட வேண்டுமென ஆரம்ப நீதிமன்றம் கட்டளையிடலாம்:

ஆயின், அத்தகைய எவரேனும் ஆள்மீது மெல்லிய பிரப்பங்கீறு கொண்டு ஆறுக்கு மேற்பட்ட கசையடிகளைக் கொடுப்பதற்குக் கட்டளையிடும் தத்துவம் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவருக்குக் கிடையாது.

குற்றப் பணம் தவணைப் பணங்களாகச் செலுத்தப் படலாம்.

23. (1) ஆளொருவர் குற்றப்பணத்துக்கு மாத்திரமும் அத்துடன் அக்குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன் பேரில் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்றம் பின்வருவனவற்றுள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யலாம்:-

(அ) குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கெனக் கால அவகாசம் வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) குற்றப்பணத்தைத் தவணைப்பணங்களாகச் செலுத்தும் படி பணிக்கலாம்.

(இ) குற்றப்பணம் செலுத்தவேண்டிய ஆள், அக்குற்றப் பணத்தினை அல்லது அதன் ஏதேனும் தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கென ஒரு பிணைகாரருடன் அல்லது பிணைகாரர்களுடன், அல்லது பிணைகாரரோ பிணைகாரர்களோ இன்றி முறியொன்றை நீதிமன்றம் திருப்திப்படுமாறு கொடுப்பதற்குச் சுதந்திரமுடையவராக இருத்தல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

(2) குற்றப்பணம் தவணைப்பணங்களாகச் செலுத்தப்பட வேண்டுமெனப் பணிக்கப்பட்டிருப்பதுடன் ஏதேனுமொரு தவணைப்பணக்கொடுப்பனவு செலுத்தத் தவறப்படுமிடத்து, செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப்பணக் கொடுப்பனவுகள் தொடர்பிலும் தவறு புரியப்பட்டிருந்தாற்போன்று அதேமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் III

### குற்றவியல் வழக்குத் தொடுப்புக்களைத் தொடுக்கும் மாதிரி பற்றி

குற்ற வழக்குத் தொடுப்புக் களைத் தொடுக்கும் மாதிரி.

24. ஓர் ஆரம்ப நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதான தவறொன்றுக்கான குற்றவியல் வழக்குத்தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை ஒவ்வொன்றும், எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள் அத்தவறு புரியப்பட்டதோ அந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆயின் தவறொன்று, பகுதியளவில் ஓர் ஆரம்ப நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள்ளும், பகுதியளவில் இன்னுமோர் ஆரம்ப நீதிமன்றத்தின் இடநியாயாதிக்க எல்லைகளுக்குள்ளும் புரியப்படுகின்றவிடத்து அத்தவறு தொடர்பிலான ஒரு குற்றவியல் வழக்குத் தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை- அத்தகைய நீதிமன்றங்களுள் ஏதேனுமொன்றில் தொடுக்கப்படலாம்.

ஆரம்ப நீதிமன்றங் களில் வழக்கு நடவடிக்கை களைத் தொடுத்தல்

25. (1) முறைப்பாட்டாளரால் உரியமுறையில் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான முறைப்பாடொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது நீதிமன்றத்துக்கு அனுப்புவதன் மூலம் ஒரு குற்றவியல் வழக்குத்தொடுப்பு அல்லது வழக்கு நடவடிக்கை ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படலாம், அல்லது முறைப்பாட்டாளர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வழக்கை அத்தகைய நீதிமன்ற நீதிபதியிடம் வாய்மொழி மூலம் கூறலாம்: நீதிபதி அதனை எழுத்திலிடுதல் வேண்டும் என்பதுடன், அதில் முறைப்பாட்டாளரின் கையொப்பத்தையும் பெறுதல் வேண்டும், அல்லது அதனை எழுத்திலிடுவித்துக் கையொப்பமிடுவித்தலும் வேண்டும்: அவ்வாறு எழுத்திலிடப்பட்ட கூற்றே அவ்வழக்கில் முறைப்பாடாக இருத்தல் வேண்டும்.

ஆயின் அந்த முறைப்பாட்டாளர் உள்ளூர் அதிகாரசபை யொன்றாக இருக்குமிடத்து, முறைப்பாடானது, அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலரினால், அல்லது அத்தகைய உள்ளூரதிகாரசபையின் சார்பில் தோன்றுவதற்கு உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலரால் கையொப்பமிடப்படலாம். இக்காப்பு வாசகத்தில் "உள்ளூரதிகாரசபை" என்பது, அரசியலமைப்பில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய முறைப்பாடு ஒவ்வொன்றும் தேதியிடப்பட்டும், நீதிமன்றத்தின் இலச்சினையைக் கொண்டு இலச்சினையிடப்பட்டும், அது பெறப்பட்ட ஒழுங்குவரிசையின்படி இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைப்பாடு தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளின் தொடக்கமாக அமைதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புக் கட்டளையை அல்லது பிடியாணையை விடுத்தல்.

26. (1)ஆரம்ப நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து தவறொன்று வெளிக்காட்டப்படுமெனின் நீதிமன்றமானது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின்மீது அல்லது ஆட்களின்மீது, அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் ஏலவே நீதிமன்றத்தின் முன்னிலையில் இல்லாதவிடத்து, அழைப்புக் கட்டளையை விடுத்தல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியாதெனில் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் தலைமறைவாக இருப்பார்களெனின் அல்லது தலைமறைவாக இருக்கக்கூடுமெனின், நீதிமன்றம் பிடியாணையொன்றை வழங்கலாம்.

அழைப்புக் கட்டளை விடுப்பதற்கு நீதிமன்றத் துக்குள்ள தத்துவம்.

27. ஒவ்வோர் ஆரம்ப நீதிமன்றமும் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்கென 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் நீதிவான் நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாதிரியை ஒத்தமுறையில் அதன் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்கள்மீதும், நீதிமன்றம் எந்தச் சாட்சிக்காரர்களின் அல்லது வேறு ஆட்களின் வருகை அவசியமானதெனக் கருதுகின்றதோ அந்தக் கட்சிக்காரர்களின் மீதும் வேறு ஆட்கள்மீதும், அழைப்புக்கட்டளைகளையும் பிடியாணைகளையும் வேறு மன்றாணைகளையும் விடுப்பதற்கும் அத்துடன் ஆவணங்களைக் காண்பிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும் முழுத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. (1) குற்றஞ்சாட்டப்பட்டவர் தோன்றும்போது, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி- குற்றஞ் சாட்டப்பட்டவர் தோன்றும் போதான நடவடிக்கை முறை.

(அ) முறைப்பாட்டிலுள்ள விபரங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டொன்றை வகுத்தல் வேண்டும். அத்துடன்

(ஆ) குற்றச்சாட்டைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வாசித்து விளங்கப்படுத்துதல் வேண்டும் அக்குற்றச்சாட்டிற்கு எதிராகக் காட்டுவதற்கு அவருக்குக் காரணமெதுவு முண்டா என்றும் அவரிடம் கேட்டல் வேண்டும்: அவர் வரைபாடில்லாக் குற்ற ஒப்புதல் ஒன்றைச் செய்வாரெனின் தண்டனைத் தீர்ப்பளித்தல் வேண்டும், அல்லது சட்டத்துக்கிணங்க வேறு கட்டளை ஆக்குதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் வரைபாடில்லாக் குற்ற ஒப்புதலொன்றைச் செய்யவில்லையெனின் அல்லது தாம் குற்றவாளியென மன்றுரைப்பதற்கு மறுப்பாரெனின் அல்லது அவர் குற்றவாளியல்லரென மன்றுரைப்பாரெனின், நீதிபதி, 31 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள முறையில் நடவடிக்கையெடுக்க முற்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச் சாட்டை மீளப் பெறல்

29. (1) துணிபுரை வழங்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் முறைப்பாட்டை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்தல் முறைப் பாட்டாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன், அதன்மேல் நீதிபதி அவ்விண்ணப்பத்தை அனுமதித்துக் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தலும் வேண்டும்.

முறைப் பாட்டாளர் வருகைதரா திருத்தல்.

(2) விசாரணைக்காகவோ அல்லது வேறு ஏதேனும் நோக்கத்துக்காகவோ வழக்கானது பகிரங்க நீதிமன்றத்தில் கூப்பிடப்படும் ஏதேனும் நாளன்று முறைப்பாட்டாளர் காரணமின்றி வராமலிருப்பாரெனின், அவ்வழக்கை வேறொரு நாளுக்குப் பின்போடுதல் முறையானதென ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எண்ணினாலொழிய, அவர் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம். நீதிபதி அவ்வாறு பின்போடும்படி கட்டளையிடுவதன் மேல், ஐம்பது ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றைச் செலவுத்தொகையாகக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குச் செலுத்தும்படி கட்டளையிடலாம்.

ஆயின், எவ்வாறாயினும், முறைப்பாட்டாளர் நியாயமான காலத்துக்குள் தோன்றி, அவர் வருகை தராமை சுகவீனத்தினால், விபத்தினால் அல்லது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு காரணத்தினால் நிகழ்ந்தது என ஆரம்ப நீதிமன்ற நீதிபதியைத் திருப்திப்படுத்துவாரெனின், அத்தகைய நீதிபதி, இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதனையும் இல்லாதாக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) துணிபுரை வழங்கப்படுமுன்னர் எந்நேரத்திலாயினும், குற்றஞ்சாட்டப்பட்டவர், எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, நீதிபதியினால் விடுவிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய விடுவிப்புக்கு முன்னர், நீதிபதி தமது தற்றுணிபின்படி சட்டத்துறைத் தலைமையதிபதியைக் கலந்தாலோசிக்கலாம்.

30. ஓர் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, எந்தக் குற்றவியல் வழக்கின் விளக்கம் அவர் முன்னிலையில் நடாத்தப் பட்டிருக்கின்றதோ அல்லது நடாத்தப்படுகின்றதோ அந்தக் குற்றவியல் வழக்கின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்களைச் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் எழுத்து மூலம் தேவைப்படுத்தப்படும் போதெல்லாம், உடனடியாக அவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்: ஆரம்ப நீதிமன்றம் தேவைப்படும் போது வழக்கு நடவடிக்கை களைச் சட்டத்துறைத் தலைமையதி பதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதி பதிவேடு தமக்குக் கிடைக்கப் பெற்றதிலிருந்து ஒரு மாதகாலத்திற்குப் பிந்தாமல் அப்பதிவேட்டை நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணையின் போதான நடவடிக்கை முறை

31. (1) குற்றச்சாட்டுக்குறித்து வாய்மொழிமூலம் விசாரித்தலும், தோதானவிடத்து இணக்கத்தீர்வொன்றுக்குக் கட்சிக்காரர்களைக் கொணருவதற்குச் சட்டமுறையான எல்லா வழிகளிலும் முயற்சி செய்தலும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய தவறை அல்லது தவறுகளை இணக்கஞ்செய்வதற்குக் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்வார்களெனில், நீதிபதியானவர் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், அவர்கள் அவ்வாறு இணக்கஞ்செய்வதை அனுதித்தல் வேண்டும்: அத்துடன் வழக்கு எந்த நியதிகளின் மீது இணக்கஞ் செய்யப்பட்டதோ அந்த நியதிகளை நீதிபதி எழுத்தில் குறித்தல் வேண்டும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய நியதிகளுக்கு இணங்கியொழுகிய பின்னர் அந்நிகழ்வினைப் பதிதல் வேண்டும் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்தலும் வேண்டும்.

(2) கட்சிக்காரர்கள் வழக்கை இணக்கஞ் செய்வதற்கு மறுப்பார்களெனின், நீதிபதி வழக்கை விளங்குவதற்கு முற்படல் வேண்டும்.

சட்டத்தரணியைப் பிரதிநிதியாக வைத்திருத்தல்.

32. குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வோர் ஆளும் அத்துடன் ஒவ்வொரு முறைப்பாட்டாளரும், சட்டத்தரணியொருவரைப் பிரதிநிதியாக வைத்திருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எவ்வாறாயினும், தமது உத்தியோக முறையில் முறைப்பாடொன்றைக் கோப்பிட்டுள்ளவரான பகிரங்க அலுவலர் ஒருவர், சட்டத்துறைத் தலைமையதிபதியை அல்லது அரச வழக்குரைஞர் ஒருவரை அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் சிறப்பாகவோ பொதுவாகவோ அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணி ஒருவரை தமது பிரதிநிதியாக வைத்திருப்பதற்கு உரித்துடையவராவர் ஆனால் அத்தகைய பிரதிநிதி எவரும் இல்லாதவிடத்து, பகிரங்க அலுவலர் தாமாகவோ அல்லது அக்குற்றவழக்கில் அக்கறை கொண்டுள்ளவரான திணைக்களத்தின் வேறு எவரேனும் பகிரங்க அலுவலரோ அல்லது நீதிமன்றத்தின் அனுமதியோடு சட்டத்தரணி ஒருவரோ குற்றவழக்குத் தொடுப்பை நடாத்தலாம்.

ஆயின், மேலும், மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச் சபை அக்கறை கொண்டுள்ள ஏதேனும் வழக்கில், ஏதேனும் மாநகரசபையின், நகரசபையின், பட்டினசபையின் அல்லது கிராமச் சபையின் அலுவலர் ஒருவர் தாமாகவோ அல்லது சட்டத்தரணியொருவர் மூலமாகவோ குற்றவழக்குத் தொடுப்பை நடாத்துவதற்கெனத் தோற்றலாம்.

33. (1) நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் விளக்கங்களுக்காக 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் ஆரம்ப நீதிமன்றம் ஒன்றில் விளக்கம் நடாத்தப்படல் வேண்டும்.

விளக்கத்தின் போதான நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஆரம்ப நீதிமன்றமொன்றின் தீர்ப்பு ஒவ்வொன்றிற்கும் 1979 ஆம் ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 279ஆம், 283ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளும், ஆரம்ப நீதிமன்றமொன்றினால் அளிக்கப்படும் தண்டனைத் தீர்ப்பு ஒவ்வொன்றிற்கும் அச்சட்டத்தின் 289ஆம், 290ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆவணங்களையும் காண்பிபொருள்களையும் கையாளுதல்

34. (1)விளக்கத்தின் எக்கட்டத்திலாயினும், ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னிலையில் காண்பிக்கப்படும் ஏதேனும் ஆவணத்தின் அல்லது வேறு ஆதனத்தின் கையாளுகைக்காகப் பொருத்தமானதென அந்த நீதிமன்றம் எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை அந்த நீதிமன்றம் ஆக்கலாம்.

மேன்முறையீடு முடிவடையும் வரையில் கையாளுவதற்கான கட்டளை நிறுத்தி வைக்கப்படுதல்.

(2) மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள வழக்கொன்றில், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும்போது, அத்தகைய கட்டளையானது, (ஆதனம் பண்ணைவிலங்காக அல்லது விரைவாகவும் இயல்பாகவும் சிதைவதற்கு அமைவானதாக இருக்கும்போது தவி) அத்தகைய மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் கழியும் வரையில், அல்லது அத்தகைய காலத்துக்குள் அத்தகைய மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளபோது அத்தகைய மேன்முறையீடு கையாளப்படும் வரையில், நிறைவேற்றப்படுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, கட்சிக்காரர்கள் நீதிமன்றத்தில் தோன்றியதன்பின்னர் எக்கட்டத்திலாயினும், அவசியமென அவர் கருதுவாரெனின், தவறு புரியப்பட்ட இடத்தை அல்லது எந்த ஆதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த ஆதனத்தைப் பார்வையிடும் சந்தர்ப்பமொன்று அவருக்குக் கிட்டும் வரையில் விளக்கத்தின் விசாரணையை ஒத்திவைக்கலாம். அவ்வாறு பார்வையிடும் நேரமும் இடமும் பற்றிய அறிவித்தல் நீதிபதியால் கட்சிக்காரர்களுக்கு உரியமுறையில் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்சிக்காரர்கள் பார்வையிடுகையின்போது சமூகமாயிருப்பதற்கு உரித்துடையவர்கள் என்பதை அத்தகைய அறிவித்தல் கூறுதலும் வேண்டும்.

தவறு புரியப்பட்ட இடத்தைப் பார்வையிடல்

36. ஓர் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, பதிற்கடமையாற்றும் நீதிபதியொருவருக்கான ஒழுங்குகளைச் செய்யாமல் வருகைதராதிருக்கும் சந்தர்ப்பத்தில், நீதிபதி வருகை தராதிருக்கும் காலத்தின்போது அந்நீதிமன்றத்தின் முன்னிலையில் அழைக்க நிருணயிக்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய எல்லா வழக்குகளையும், அவை இப்பாகத்தின் கீழ் அல்லது IV ஆம் பாகத்தின்கீழ் தொடுக்கப்பட்டிருப்பினுஞ்சரி, அழைப்பித்து வேறோரு தேதிக்குப் பின்போடுவதற்கு நீதிமன்றப் பதிவாளர் ஆற்றலுடையவராதல் வேண்டும்.

நீதிபதி வருகை தரா திருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் IV

## குடியியல் வழக்குகளைத் தொடுக்கும் மாதிரி பற்றி

வழக்கு களைத் தொடுத்தல்

37. எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் இட நியாயாதிக்க எல்லைகளுக்குள் வழக்காளி அல்லது எதிராளி வதிகின்றாரோ, அல்லது இரு அல்லது இருவருக்கு மேற்பட்ட வழக்காளிகள் அல்லது எதிராளிகள் உள்ளவிடத்து அவர்களில் எவரேனும் ஒருவர் வதிகின்றாரோ, அந்த நீதிமன்றத்தில், ஏதேனும் சட்டத்தால் விதித்துரைக்கப்பட்ட பணவகையான வரையறைகளுக்கு அல்லது வேறு வரையறைகளுக்கு அமைய வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டும்.

பிராதைக் கோப்பிடு தல்

38. சாதாரணமாகவும் சுருக்கமான மொழியிலும் எழுதப்பட்டதும் வழக்காளியினால் உரியமுறையில் கையொப்பமிட்டதுமான எழுத்திலான கூற்று ஒன்றினை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதன்மூலம் அல்லது நீதிமன்றத்துக்கு அனுப்பிவைப்பதன்மூலம் வழக்கு ஒன்று ஆரம்பநீதிமன்றமொன்றில் தொடுக்கப்படலாம் அல்லது வழக்காளி அவரது வழக்கை அத்தகைய நீதிமன்ற பதிவாளரிடம் வாய்மொழி மூலம் கூறலாம்: பதிவாளர் அதனை எழுத்தில் இட்டு அதில் வழக்காளியின் கையொப்பத்தையும் பெறுதல் வேண்டும் அல்லது எழுத்தில் இடுவித்துக் கையொப்பத்தைப் பெறுவித்தலும் வேண்டும். அவ்வாறு எழுத்தில் இடப்பட்ட கூற்று அல்லது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட கூற்று, வழக்கில் பிராது எனக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. ஓர் ஆரம்ப நீதிமன்றத்திலான வழக்குரைகள் கீழ்க் கண்டவற்றுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்படுதல் வேண்டும் :- வழக்குரைகள்

(அ) வழக்காளியின் பிராது:

(ஆ) எதிராளியின் மறுமொழியும் எதிர்க்கோரிக்கை ஏதேனுமிருப்பின் அதுவும்:

(இ) எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கு வழக்காளி கொடுக்கும் மறுமொழி.

ஆனால், எதிர்க்கோரிக்கை எதுவும் இல்லாதவிடத்து, மறுமொழிக்கப்பால் மேலும் எந்தவித வழக்குரையும் இருத்தலாகாது.

40. பிராதானது கட்சிக்காரர்களின் பெயர்கள், வதிவிடங்கள் ஆகியவற்றையும், அது கோப்பிடப்படும் தேதியையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது எத்தனையாவதாகக் கோப்பிடப்பட்டது என்பதற்கான இலக்கத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும். பிராதுகளுக்கு இலக்கம் கொடுக்கப் படுதல் வேண்டும்.

41. வழக்காளி, வழக்குக் காரணங்கள் எல்லாம் கீழ்க்கண்டவாறு எழுவனவாயிருப்பின், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வழக்குக் காரணங்களை ஒரே பிராதில் ஒன்றாக்கலாம்: அதாவது வழக்குக் காரணங்கள் எல்லாம் - எத்தகைய வழக்குக் காரணங்கள் இணைக்கப் படலாம் என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஒரே வழக்குவிடயத்துடன் தொடர்புபட்ட ஒரே செயற்கோவையிலிருந்து அல்லது செயற்கோவை களிலிருந்து எழுவனவாயிருப்பின் : அல்லது

(ஆ) ஒரே எதிராளிக்கெதிரானவையாக அல்லது ஒரே எதிராளிகளுக்கெதிரானவையாக இருப்பின்,

ஆனால், அவ்வாறு ஒன்றாக்கப்பட்ட வழக்குக் காரணங்கள் எல்லாம் ஒன்றோடொன்று ஒத்துப்போவனவாயும் ஒரேவிதமான நிவாரணத்தைப் பெறுவதற்கு, வழக்காளிக்கு உரித்தளிப்பனவாயும், எல்லாக்கட்சிக்காரரையும் சம்பந்தப்படுத்துவனவாயும் இருப்பதாகப் பிராதின் முகப்பிலிருந்து தோன்றுதல் வேண்டும்.

அழைப்புக் கட்டளையை பிறப்பித்தல்

42. மேற்கூறியவாறு அத்தகைய பிராது கோப்பிடப்பட்டவுடனும், ஆரம்ப நீதிமன்றம், எதிராளி தோன்றுவதற்கான ஒரு நாளை நியமித்தல் வேண்டுமென்பதோடு, அதைப்பற்றி வழக்காளிக்கு அறிவித்தலும் வேண்டும்: அத்துடன் எதிராளி தோன்ற வேண்டுமென்றுகூறும் அழைப்புக்கட்டளையைப் பிறப்பித்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோன்றியதன் பின்னரான நடவடிக்கைகள்

43. (1) எதிராளியானவர், அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் நாளிலும் வழக்காளியின் கோரிக்கையை ஒப்புக்கொள்கின்றாரா அல்லது மறுத்துரைக்கின்றாரா என்று கேட்கப்படுதல் வேண்டும். எதிராளி தோன்றி கோரிக்கையை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும் அல்லது மறுத்துரைத்தல் வேண்டும்

(2) எதிராளி கோரிக்கையை ஒப்புக்கொண்டால் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அத்தகைய ஒப்புக்கோடலைப் பதிவேட்டில் பதிதல் வேண்டும் என்பதோடு, அப்பதிவேட்டில் கையொப்பமிடுமாறு எதிராளியைத் தேவைப்படுத்தலும் வேண்டும்: அத்துடன் வழக்காளிக்குச் சார்பாகத் தீர்ப்பு எழுதுதலும் வேண்டும். கோரிக்கையை எதிராளி ஒப்புக் கொண்டால்.

ஆயின், நீதிமன்றத்துக்கு வருகைதரமுடியாதிருக்கும் எதிராளி ஒருவர் அவருக்கு அறிமுகமான சட்டத்தரணி ஒருவரின் முன்னிலையில் தம்மால் கையொப்பமிடப்பட்டு அந்தச் சட்டத்தரணியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது ஒப்புக்கோடலை அந்த நீதிமன்றப் பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்: அத்துடன் அத்தகைய ஒப்புக்கோடல் கிடைக்கப்பெற்றுப் பதியப்பட்டதன்மேல், நீதிபதி அதற்கிணங்க வழக்காளி சார்பில் தீர்ப்பெழுதுதல் வேண்டும்.

(3) கோரிக்கையை எதிராளி மறுத்துரைத்தால் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, விளக்கத்துக்கு முன்னரான ஒரு கேட்புக்காக அந்த வழக்கைக் கூப்பிடுவதற்கான ஒரு தேதியை நிர்ணயித்தல் வேண்டும். கோரிக்கையை எதிராளி மறுத்துரைத்தால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) விளக்கத்துக்கு முன்னரான கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நாளன்று ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்தக் கட்சிக்காரரிடையே இணக்கத்தை ஏற்படுத்திப் பிணக்கைத் தீர்த்து வைப்பதற்கான சட்டமுறையான எல்லா வழிவகைகளையும் முயன்று பார்த்தல் வேண்டும்.

கட்சிக் காரரைச் சோதனை செய்தல்.

44. (1) நடவடிக்கைகளின் இந்தக் கட்டத்தின்போது ஆரம்ப நீதிமன்ற நீதிபதி பின்வரும் நோக்கங்களுக்காகக் கட்சிக்காரரை வாய்மொழிமூலம் சோதனை செய்யலாம் :-

(i) அவர்களுக்கிடையே பிணக்கிலுள்ள விடயங்களை நிச்சயித்தலும் தேவையில்லாத எவையேனும் சான்றுகளை ஒதுக்குதலும், அத்துடன்

(ii) அவர்களுக்கிடையேயான உடன்பாடின்மைக்கான காரணத்தை அகற்றி அவர்களை இணக்கிவைத்து சமரசத்தீர்வொன்றுக்கு வருமாறு அவர்களை ஊக்குதல்.

(2) கட்சிக்காரரை இணக்கிவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்டமுறையான முயற்சி ஒவ்வொன்றும் பயனற்றுப்போனால், நீதிமன்றம், எதிராளி அவரது மறுமொழியைக் கோப்பிடுவதற்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும். மறுமொழியானது 38 ஆம் பிரிவில் காட்டப்பட்ட முறையில் ஏற்றமாற்றங்களுடன் கோப்பிடப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. எதிராளி தமது மறுமொழியோடு சேர்த்து எதிர்க் கோரிக்கையொன்றையும் விடுத்தால், அந்த எதிர்க்கோரிக்கையை ஒப்புக்கொள்கிறாரா அல்லது மறுத்துரைக்கிறாரா என்பதைக் கூறுமாறு வழக்காளி கேட்கப்படுதல் வேண்டும். வழக்காளி எதிர்க் கோரிக்கையை மறுத்துரைத்தால் அந்த எதிர்க்கோரிக்கைக்கான மறுமொழியை உடனடியாகக் கூறுமாறு அல்லது நீதிமன்றம் நிர்ணயிக்கக்கூடிய அத்தகைய மேலதிகக் காலத்தினுள் கூறுமாறு வழக்காளி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் 38ஆம் பிரிவின் ஏற்பாடுகள், எதிராளியின் எதிர்க்கோரிக்கைக்கு வழக்காளி கொடுக்கும் மறுமொழிக்கு அவ்வேற்பாடுகள் ஏற்புடையனவாகின்ற வரைக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்: (எதிர்க் கோரிக்கை பற்றி.)

ஆயின், வழக்காளியானவர் அவரது மறுமொழியில், புதிய ஒரு வழக்குக் காரணமாக அமையக்கூடிய புதிய கருமம் எதையும் (அக்கருமத்தை அவ்வழக்காளி அவரது ஆரம்பப் பிராதிலேயே எடுத்துக் கூறக்கூடியதாய் இருந்திருக்குமாயின்) புதிதாக முன்வைத்தலாகாது. (எதிர்க் கோரிக்கைக்கான மறுமொழி பற்றி.)

46. மறுமொழி கோப்பிடப்பட்ட பின்னர் அல்லது மறுமொழி எதிர்க்கோரிக்கை பற்றிப் பேசுமாயின், அதற்கான வழக்காளியின் மறுமொழி (ஏதெனுமிருப்பின்) கோப்பிடப்பட்ட பின்னர், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கின் விளக்கத்துக்கான தேதியை நிர்ணயித்தல் வேண்டும். (வழக்கின் விளக்கத்துக்கான தேதியை நிர்ணயித்தல்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமில்லா வேறுபாடுகள் புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

47. வழக்குரையில் காணப்படும் ஒரு சார்த்தலுக்கும் எண்பிப்புக்கும் இடையிலான ஒரு வேறுபாடு, அத்தகைய எண்பிப்பு, புதிய வழக்குக் காரணம் ஒன்றிருப்பதாக வெளிக்காட்டினால் ஒழிய, அல்லது எதிர்க்கட்சிக்காரர் அத்தகைய வேறுபாடு காரணமாக அவருக்குப் பாதகம் விளையும் வண்ணம் பிழைவழி உய்க்கப்பட்டாரென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய, முக்கியமற்றதெனப் புறக் கணிக்கப்படுதல் வேண்டும்.

சட்டப்பிரதிநிதியை வைத்திருக்கலாம்.

48. வழக்கொன்றுக்கான அல்லது நடவடிக்கையொன்றுக்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும் சட்டப்பிரதிநிதி ஒருவரை வைத்திருக்க உரித்துடையவராதல் வேண்டும்.

வழக்கெழு வினாக்களை வகுத்தமைத்தல்.

49. கட்சிக்காரரைக் கேள்வி கேட்டு அவர்கள் எந்தெந்தக் கருமங்கள் பற்றி வேறுபாடுடையவர்களாக இருக்கின்றனர் என்பதை நிச்சயித்த பின்னர், வழக்கில் சரியான முடிவை எடுப்பது எந்த வழக்கெழு வினாக்களில் தங்கியிருப்பதாகத் தோன்றுகின்றதோ அந்த வழக்கெழு வினாக்களை, நீதிமன்றம் விளக்கத்தின் போது வகுத்தமைத்தல் வேண்டும். வழக்கெழு வினாக்கள் வழக்குரைகளுடன் கண்டிப்பாக ஒத்திருக்கவேண்டுமென்பதில்லை: அத்துடன் வழக்கெழு வினாக்களில் உரிய பிரச்சனைகள் எழுப்பப்படுவதன் விளைவாக அவசியமேற்பட்டால் எதிர்க் கட்சிக்காரருக்காக வழக்கை ஒத்திவைப்பதை நீதிமன்றம் அனுமதிக்கலாம்: ஆனால் வழக்குரைகளைத் திருத்த அனுமதித்தல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. (1) விளக்கமானது மாவட்ட நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட கிரமமுறை வழக்குகளுக்கான விளக்கத்துக்கெனக் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் விதித்துரைத்த மாதிரியாக நடாத்தப்படுதல் வேண்டும். விளக்கத்தின் போதான நடவடிக்கை முறை.

(2) தீர்ப்புக்கள், தீர்வைகள், தீர்வைகளை நிறைவேற்றி வைத்தல் ஆகியவை தொடர்பிலான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், ஆரம்ப நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்களுக்கும், தீர்வைகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

51. ஏதேனும் ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னரான ஏதேனும் நடவடிக்கையில் எதிராளியினால் கொடுக்கப்படும் எதிர்காப்பில் அல்லது எதிர்க்கோரிக்கையில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட கருமம் அடங்கியுள்ளவிடத்து, அத்தகைய எதிர்காப்பு அல்லது எதிர்க்கோரிக்கை, பிணக்கிலுள்ள அந்தக் கருமத்தை (அது வழக்காளியின் கோரிக்கையையும் அந்தக் கோரிக்கைக்கான எதிர்காப்பையும் பற்றியதாக உள்ள அந்த அளவுக்கு) நீதிமன்றம் முடிவுசெய்வதற்கு அந்நீதிமன்றத்திற்கிருக்கும் ஆற்றலை அல்லது கடமையைப் பாதித்தல் ஆகாது: எந்த நிவாரணத்தை வழங்குவதற்கு அந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இருக்கின்றதோ அந்த நிவாரணத்துக்கு மேற்பட்ட நிவாரணம் எதையும் அத்தகைய ஏதேனும் எதிர்க்கோரிக்கையின்மீது எதிராளிக்கு அளித்தலாகாது: எதிர்க் கோரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எப்பொழுதும், அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய நடவடிக்கைகளில் எவரேனும் கட்சிக்காரர் விண்ணப்பித்தால், அந்த வழக்கை, அது தொடுக்கப்பட்டிருக்கும் நீதிமன்றத்திலிருந்து பிணக்கிலுள்ள முழுக் கருமத்தின்மீதும் நியாயாதிக்கம் கொண்டிருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றும்படி பணித்தல் (அவ்வாறு செய்தல் தக்கதென நினைக்கப்படுமாயின்) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது அதன் எவரேனும் நீதிபதிக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்: அத்துடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கின் பதிவேட்டைக் கட்டளையில் குறித்துரைக்கப்படும் மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதோடு, அந்த நடவடிக்கையானது ஆரம்பத்திலேயே அந்த மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தது என்றாற்போன்று தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

சாட்சிக் காரரைக் கட்டளை விட்டழைப் பதற்கும், பிடியாணை பிறப்பிப் பதற்குமான தத்துவம்

52. (1) ஆரம்ப நீதிமன்றம், அதனால் விளங்கப்படுகின்ற அல்லது கேட்கப்படுகின்ற வழக்குகள் பற்றி எல்லாச் சாட்சிக்காரர்களையும் கட்டளைவிட்டழைப்பதற்கும் அவர்களைச் சோதனை செய்வதற்கும் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அவசியம் ஏற்படின் எவரேனும் கட்சிக்காரரை அல்லது சாட்சிக்காரரைக் கைது செய்து அதன் முன்னர் நிறுத்துவதற்கான பிடியாணைகளைப் பிறப்பிப்பதற்கும் அவர்களைச் சட்டப்படி கையாள்வதற்கும் நியாயாதிக்கம் கொண்டதாதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பியாமல் விடுவதை மன்னிக்கின்ற ஏதேனும் தடை, அல்லது சிறப்புரிமை, அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் இருந்தாற்றவிர, அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை அதன் முன்னர் காண்பிக்குமாறு அல்லது காண்பிக்கச் செய்யுமாறு எவரேனும் கட்சிக்காரருக்கு அல்லது சாட்சிக்காரருக்கு அல்லது வேறு ஆளுக்குக் கட்டளை இடுவதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளைகள், பிடியாணைகள் பற்றியனவான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழும் 42ஆம் பிரிவின்கீழும் பிறப்பிக்கப்பட்ட அழைப்புக்கட்டளைகள், பிடியாணைகள் ஆகியவற்றுக்கும் இயன்றவரை ஏற்புடையனவாதல் வேண்டும்.

## தோன்றத் தவறுதல் பற்றி

53. (1) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது வழக்கைக் கேட்கவென நிர்ணயிக்கப்பட்ட ஏதேனும் நாளன்று வழக்காளி தோன்றாவிட்டால் அல்லது தோன்றாமைக்குப் போதிய காரணம் காட்டாவிட்டால், வழக்காளியின் வழக்கைத் தள்ளுபடி செய்யலாம்.

வழக்காளி தோன்றத் தவறுவதன் பேரில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், எதிராளி நீதிமன்றத்தில் தோன்றி 43 ஆம் பிரிவின்கீழ் கேட்கப்பட்டதன் பேரில் வழக்காளியின் கோரிக்கையை ஒப்புக்கொண்டால் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி சட்டத்துக்கிணங்க வழக்காளி சார்பில் தீர்ப்பு எழுதுதல் வேண்டும்.

எதிராளி தோன்றத் தவறுவதன பேரில் எடுக்கப் படும் நடவடிக்கை.

(2) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அல்லது வழக்கைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட வேறேதேனும் நாளன்று வழக்காளி தோன்றியும் எதிராளி தோன்றாவிட்டால் அல்லது தோன்றாமைக்குப் போதிய காரணம் காட்டாவிட்டால், அவரைத் தோன்றும்படி பணிக்கின்ற அழைப்புக்கட்டளை, அறிவித்தல் அல்லது கட்டளை அந்த எதிராளியிடம் சேர்ப்பிக்கப்பட்டது என்று முறையாக எண்பிக்கப்பட்டதன்மேல் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி எதிராளிக்கெதிராகத் தவறுகையினால் விளை தீர்ப்பை எழுதலாம்.

தவறுகையினால் விளைதீர்ப்பு குறித்த சில விடயங்களில் மீளவும் சீர்தூக்கிப் பார்க்கப் படலாம்.

(3) எதிராளியானவர் அத்தகைய தீர்ப்புக்குப் பின்னர் நியாயமான காலத்துக்குள் வழக்காளிக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, விபத்தினால், துர்ப்பாக்கியத்தால், அல்லது வேறு தவிர்க்கொணாக் காரணத்தினால், அல்லது நடவடிக்கைகள் பற்றிப் போதியளவு தகவலைப் பெறாமையினால், உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தோன்றமுடியாதவாறு தாம் தடுக்கப்பட்டார் என்றும், அழைப்புக் கட்டளையோ, அறிவித்தலோ சேர்ப்பிக்கப்படுதலைத் தட்டிக்கழிக்கும் நோக்கத்துக்காகத் தாம் அவ்வாறு வராதிருக்கவில்லை என்றும், அந்த வழக்கின் குற்றநற்றுக்களைக்கொண்டு தமக்கு நல்ல செல்லுபடியான எதிர்காப்பு உண்டென்றும் ஆரம்ப நீதிமன்ற -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதியைச் சத்தியக்கடுதாசியின் மூலமோ வேறுவகையாகவோ திருப்திப்படுத்தினால், அந்த நீதிபதி அத்தகைய தீர்ப்பையும் அத்தீர்ப்பின்மீதான ஏதேனும் நடவடிக்கையையும் தள்ளிவைக்கலாம் என்பதுடன், தக்கதென நீதிபதி கருதும் அத்தகைய நியதிகளின்மீது எதிராளி அவரது எதிர்காப்பை எடுத்துரைக்க அவரை அனுமதிக்கலாம்.

(4) அழைப்புக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று அல்லது வழக்கைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நாளன்று வழக்கைக் கூப்பிடும்போது எந்தக் கட்சிக்காரருமே தோன்றாவிட்டால், ஆரம்ப நீதிமன்ற நீதிபதி வழக்காளியின் வழக்கைத் தள்ளுபடிசெய்து, வழக்குச் செலவுத்தொகையெதுவும் வழங்காமல் தீர்ப்பெழுதல் வேண்டும். வழக்காளி எதிராளி இருவருமே வராவிட்டால் வழக்கைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்

(5) வழக்கொன்று (1) ஆம் உட்பிரிவின் அல்லது (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், வழக்காளி எதிராளிக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர், தாம் விபத்தினால், துர்ப்பாக்கியத்தால் அல்லது வேறு தவிர்க் கொணாக்காரணத்தால் நீதிமன்றத்தில் தோன்றமுடியாதவாறு தடுக்கப்பட்டாரென்று சத்தியக் கடுதாசியின் மூலம் அல்லது வேறு வகையில் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியைத் திருப்திப்படுத்தினால், அந்த நீதிபதி, அந்த நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நியதிகளின்மீது புதியதொரு வழக்கைத் தொடுப்பதற்கான அனுமதியை வழக்காளிக்கு வழங்கலாம். அனுமதி அவ்வாறு வழங்கப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு, புதிய வழக் கொன்றைத் தொடுப்பதற்குத் தடையாகத் தொழிற்படுதல் ஆகாது. புதிய வழக்கொன்றைத் தொடுப்பதற்கு வழக்காளிக்கு அனுமதி வழங்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகையினால் விளைதீர்ப்புக் கெதிராக அல்லது கட்டளைக் கெதிராக மேன்முறையீடு செய்யமுடியாது என்பது.

(6) இந்தச் சட்டத்தில் அல்லது வேறேதும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், தோன்றத்தவறியமை காரணமாக இந்தப் பிரிவின்கீழ் எழுதப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது.

## பாகம் V

## ஆரம்ப நீதிமன்றங்களிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு செய்யப்படும் மேன்முறையீடுகள்.

மேன் முறையீடுகள்

54. (1) நான்காம் உட்பிரிவுக்கமைய, ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு, குற்றத்தீர்ப்புக்கு, தண்டனைத் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கு எதிராகச் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீடும், (5) ஆம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனை தவிர, அத்தகைய தீர்ப்பு, குற்றத்தீர்ப்பு, தண்டனைத்தீர்ப்பு, தீர்வை அல்லது இறுதிக்கட்டளை எழுதப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மனுவொன்றை ஆரம்ப நீதிமன்ற நீதிபதியிடம் சமர்ப்பிப்பதன்மூலம், செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய மேன்முறையீட்டு மனு எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதோடு, மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைச் சுருக்காமல் எடுத்துக்கூறுதலும் வேண்டும்: அத்துடன் மேன்முறையீட்டாளரால் அல்லது அவரது சட்டத்தரணியால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும், ஐந்து ரூபாய் பெறுமதி கொண்ட முத்திரையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; ஆனால் மேன்முறையீட்டாளர் சட்டத்துறைத் தலைமையதிபதியாக இருப்பின் அத்தகைய முத்திரை அவசியமாகாது.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதி வற்புறுத்தினாலொழிய, அல்லது எழுத்திலான அவரது சம்மதம் இருந்தாலொழிய, ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவரால் அளிக்கப்பட்ட விடுதலைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு எதுவும் இருத்தலாகாது.

(5) ஏதேனும் குற்றவியல் வழக்கில் அல்லது கருமத்தில் ஆரம்ப நீதிமன்றத்தால் எடுத்துமொழியப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு, தண்டனைத்தீர்ப்புக்கு அல்லது இறுதிக்கட்டளைக்கெதிராகச் சட்டத்துறைத் தலைமையதிபதி மேன்முறையீடு செய்கின்றவிடத்து, அல்லது அந்த மேன்முறையீடானது விடுதலைத் தீர்ப்புக்கு எதிராகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடன் செய்யப்படுகின்ற மேன்முறையீடாக இருக்கின்றவிடத்து, அந்தத் தீர்ப்பை, தண்டனைத் தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையை எழுதிய தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குள் மேன்முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறை யீடு கிடைத்ததன் மேல் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

55. (1) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி மேன்முறையீட்டு மனுவின் முகப்பில் அம்மனு எந்தத் தேதியன்று பெறப்பட்டது என்பதை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, முத்திரையின்மீது கீறிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்துடன் அம்மேன்முறையீட்டு மனுவை சுணக்கம் இல்லாமல் வழக்கின் பதிவேடுகளுடன் சேர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத் தீர்ப்பை அல்லது இறுதித் தீர்ப்பைப் பின்பற்றி மேன்முறையீட்டாளர் மறியலுக்கனுப்பப்பட்டிருப்பின், அவர் அவரது மேன்முறையீட்டைச் சமர்ப்பித்தவுடன், அவருக்கறிவிக்கப்படும் ஏதேனும் தேதியில் ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுவதற்காகப் பிணையில் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அவர் மேன்முறையீட்டில் வழங்கப்படும் கட்டளையை அனுசரித்தலும் வேண்டும். கொடுக்குமாறு கட்டளையிடப்பட்ட பிணையைக் கொடுப்பதற்கு அந்த மேன்முறையீட்டாளர் தவறினால் அவர், மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கட்டுக்காவலில் விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடப்படலாம்.

மேன்முறை யீட்டு வழக்கேடு களைத் தயாரித்தல்

56. (1) மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் வழக்குப் பதிவேட்டைப் பெற்றதும், மேன்முறையீட்டுக்கு ஓர் இலக்கம் கொடுத்தல் வேண்டும் என்பதோடு, அந்த மேன்முறையீட்டைப் பதிவுசெய்தலும் வேண்டும். அத்துடன் வழக்குப் பதிவேட்டினதும் மேன்முறையீட்டு மனுவினதும் போதியளவு பிரதிகளைத் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பித்தல் வேண்டும். அதன் பின்னர், மேன்முறையீடானது, மேன்முறையீடுகள் பற்றிய நிரலில் பதியப்படுதல் வேண்டு மென்பதுடன், ஒருநாளில் கேட்கப்படுதலும் வேண்டும்: அந்த நாள் எது என்பது பற்றி மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய கட்சிக்காரர்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மாதகால அறிவித்தலாவது கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) நூறு சொற்கள் கொண்ட ஒவ்வொரு பக்கத்துக்கும் இருபத்தைந்து சதம் என்ற விகிதத்தில் பணத்தைச் செலுத்தியதன்மேல் வழக்குப்பதிவேடு, மேன்முறையீட்டு மனு ஆகியவற்றின் பிரதியொன்றைப் பெறுவதற்கு மேன்முறையீட்டுக் கட்சிக்காரர்கள் உரித்துடையவர்களாதல் வேண்டும்.

ஆயின், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கான அத்தகைய வழக்குப் பதிவேடு, மேன்முறையீட்டு மனு ஆகியவற்றின் பிரதி, கட்டணமேதுமின்றி அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

57. (1) கேட்பின்போது அங்கே தோன்றுவதற்கு அல்லது அவரவர்க்கான சட்டத்தரணிமாரை பிரதிநிதிகளாக வைத்திருப்பதற்கு எல்லாக் கட்சிக்காரர்களும் உரித்துடையவர்களாதல் வேண்டும். மேன்முறையீட்டைக் கேட்டல்.

(2) மேன்முறையீடானது கேட்புக்கு வரும்போது மேன்முறையீட்டாளர் சமூகமாயிருப்பின் அவர், தமது மேன்முறையீட்டுக்கு ஆதாரமாகக் கூறுவதை முதற்கண் கேட்டல் வேண்டும். அதன் பின்னர் எதிர்வாதி, சமூகமாயிருப்பின் மேன்முறையீட்டாளர் கூறியதற்கெதிரானதாகக் கூறுவதைக் கேட்டல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) மேன்முறையீட்டாளர் தமது மேன்முறையீட்டுக்கு ஆதரவளிப்பதற்கெனத் தோன்றாதிருப்பின், மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டைச் சீர்தூக்கிப்பார்த்து, அது தக்கதென நினைக்கும் அத்தகைய கட்டளையை அம்மேன்முறையீடு தொடர்பில் ஆக்கலாம்.

மேன்முறையீடுகள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் கொண்டிருக்கும் தத்துவங்கள்

58. மேன்முறையீட்டின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருவனவற்றைச் செய்யலாம்:-

(அ) குற்றவியல் வழக்கில் -

(i) எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத் தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையை உறுதிப்படுத்தி மேன் முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்: அல்லது

(ii) மேன்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையைத் தள்ளிவைக்கலாம் என்பதோடு, புதிய விளக்கம் ஒன்றை நடாத்துமாறு கட்டளையிடலாம். அல்லது மேன்முறையீட்டாளரை விடுதலை செய்யலாம் அல்லது தோதானதாயிருக்கக்கூடிய வேறேதேனும் கட்டளையை ஆக்கலாம்: அல்லது

(iii) எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படும் தீர்ப்பை, குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது இறுதிக்கட்டளையை வேறுபடுத்தலாம் அல்லது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனைத் தீர்ப்பைக் குறைக்கலாம் அல்லது அதன் இயல்பைக் கடுமையாக்கலாம்: தண்டனைத்தீர்ப்பு கடுமையாக்கப்படுகின்றவிடத்து அந்தத் தண்டனைத் தீர்ப்பு ஆரம்ப நீதிமன்றம் விதிக்கக்கூடிய தண்டனைத் தீர்ப்பை விஞ்சுதலாகாது: அல்லது

(iv) மேன்முறையீடானது விடுதலைக் கட்டளைக்கெதிரான தொன்றாக இருக்கின்றவிடத்து அத்தகைய கட்டளையை நேர்மாறாக்கி புதியதொரு விளக்கத்தை நடாத்தும்படிப் பணிக்கலாம்:

(ஆ) குடியியல் வழக்கில் -

(i) தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்: அல்லது

(ii) மேன்முறையீட்டை அனுமதித்து தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையைத் தள்ளிவைக்கலாம்: அல்லது

(iii) தீர்ப்பை, தீர்வையை, அல்லது கட்டளையை வேறுபடுத்தலாம்: அல்லது

(iv) நியாயமானதென நீதிமன்றத்துக்குத் தோன்றும் ஒரு தொகையைக் கொண்ட செலவுத்தொகையைக் கொடுக்குமாறு கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டுத் தீர்ப்பு, பகிரங்க நீதிமன்றத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

59. (1) மேன்முறையீட்டைக் கேட்டு முடிந்ததும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உடனடியாக அல்லது அந் நோக்கத்துக்கென அப்போது அங்கேயே நியமிக்கப்படும் பிந்திய ஒரு தேதியில் தீர்ப்பைப் பகிரங்க நீதிமன்றத்தில் கூறுதல் வேண்டும்.

(2) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று தீர்ப்பை அளிப்பதற்கு நீதிமன்றம் தயாராக இல்லாவிடின் அந்த நோக்கத்துக்கென வேறொரு நாள் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு நீதிபதியினால் எழுதப்பட்டுக் கையொப்பமிடப்பட்டதும், ஆனால் இன்னமும் எடுத்துமொழியப்படாததுமான ஒரு தீர்ப்பை வேறொரு நீதிபதி எடுத்துமொழியலாம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை அத்தாட்சிப்படுத்தப்பட்டு ஆரம்ப நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

60. (1) வழக்கொன்று மேன்முறையீட்டில் முடிவுசெய்யப்படுகின்ற போதெல்லாம் மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் கட்டளையை அதன் இலச்சினையின்கீழ் ஆரம்ப நீதிமன்றத்துக்கு அத்தாட்சிப்படுத்தி, ஆரம்ப நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டு மனுவையும் வழக்குப் பதிவேட்டையும் அந்தக் கட்டளைக்கான காரணங்களுடன் சேர்த்து அத்தகைய நீதிமன்றத்துக்குத் திருப்பி அனுப்பிவைத்தலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை எந்த ஆரம்ப நீதிமன்றத்துக்கு அத்தாட்சிப்படுத்தி அனுப்பிவைக்கப்டுகின்றதோ அந்த ஆரம்ப நீதிமன்றம், அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட அந்தக் கட்டளைக்கு இணங்கவுள்ள அத்தகைய கட்டளைகளை அதன்மேல் ஆக்குதல் வேண்டுமென்பதோடு, அவசியமானால் வழக்குப் பதிவேடும் அதற்கிணங்கத் திருத்தப்படுதல் வேண்டும்.

61. ஒரு குற்றவியல் வழக்கில் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீடும் குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்ததன் மேல், இறுதியாகத் தணிந்தற்றுப் போதல் வேண்டும். மேன்முறையீடுகள் தணிந்தற்றுப் போதல்.

62. (1) மேன்முறையீட்டு நீதிமன்றம் தன்பாட்டிலேயே அல்லது இன்னலுற்ற எவரேனும் கட்சிக்காரரின் விண்ணப்பத்தின்பேரில், ஏதேனும் வழக்குத் தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத்தீர்ப்பு அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை சட்டமுறையானதா அல்லது முறைமையானதா என அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் ஒழுங்காகச் செய்யப்பட்டனவா எனத் தன்னைத்தானே திருப்திப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் வழக்கின் (ஏலவே விளங்கப்பட்ட வழக்காயிருப்பினும்சரி அல்லது ஆரம்ப நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்காயிருப்பினும் சரி) பதிவேட்டைத் தருவித்து அதனைச் சோதனையிடலாம். மேன்முறையீட்டு நீதிமன்றம் பதிவேடுகளைத் தருவித்துக் கட்டளைகளை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அத்தகைய ஏதேனும் வழக்கில் 58 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளைகளுள் எவற்றையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆக்கலாம்.

(3) ஒரு குற்றவியல் வழக்கில் இந்தப் பிரிவின்கீழான ஒரு கட்டளையொன்றைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பாதகமாக (அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்பக்க வழக்கைத் தாமாகவோ தனது சட்டத்தரணி மூலமாகவோ உரைப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி) ஆக்குதல் ஆகாது.

(4) இந்தப் பிரிவிலுள்ளது எதுவும் ஒரு விடுதலைத் தீர்ப்பை ஒரு குற்றத்தீர்ப்பாக மாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரமளிப்பதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

(5) இதனகத்து, முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர, மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கும் போது, கட்சிக்காரரொருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னர் தாமாகவோ சட்டத்தரணி ஒருவர் மூலமாகவோ தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கு உரிமை எதுவும் உடையவராகார்.

ஆயின், நீதிமன்றமானது, தக்கதென அது நினைக்குமாயின், அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் எவரேனும் கட்சிக்காரர் தாமே நேரடியாக அல்லது அவரது சட்டத்தரணி மூலம் கூறுவதைக் கேட்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) அறுபதாம் பிரிவின் ஏற்பாடுகள், மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் மீளாய்வுத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆக்குகின்ற கட்டளைகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

63. இப்பாகத்தின்கீழ் மேன்முறையீடு ஒன்று எந்தக் காலப்பகுதியினுள் செய்யப்படுதல் வேண்டுமோ அந்தக் காலப் பகுதியைக் கணக்கிடுவதில், எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட தீர்ப்பு, தீர்வை, தண்டனைத்தீர்ப்பு, குற்றத்தீர்ப்பு அல்லது இறுதிக்கட்டளை எடுத்து மொழியப்பட்ட அல்லது எழுதப்பட்ட நாள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். ஆனால் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும், பொதுவிடுமுறை நாட்களும் தவிர்க்கப்படல் வேண்டும். காலத்தை கணக்கிடு தல்.

## பாகம் VI

## குடியியல் வழக்குகளில் முத்திரைகளும், செலவுத் தொகைகளும்

64. ஆரம்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கப்பட்ட குடியியல் வழக்கொன்றில் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்களும், முத்திரைக் கட்டளைச் சட்டத்தின்கீழ், முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். குற்றவியல் வழக்கு களில் முத்திரைத் தீர்வை. §2. 54 இல. 2006

ஆயின் எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப, வழக்காளியின் பிராதிலும், எதிராளியின் மறுமொழியிலும், அத்துடன், எதிராளியின் எதிர்க் கோரிக்கைக்கு வழக்காளி ,.நம் மறுமொழியிலும் ஒரு ரூபாய் பெறுமதியுள்ள ஒரு முத்திரை ஒட்டப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுத் தொகைகள்.

65. குடியியல் வழக்கொன்று தீர்மானிக்கப்பட்டதன்மேல், ஆரம்ப நீதிமன்றம் ஒவ்வொன்றும் நியாயமானதெனக் கருதுகின்ற தொகையிலான செலவுத்தொகைகளை வழக்காளி ஒருவருக்கு அல்லது எதிராளி ஒருவருக்குத் தீர்த்தளிப்பதற்கு அத்தகைய நீதிமன்றம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

## பாகம் VII

## சமாதானக் குலைவு ஏற்படுமென அஞ்சப்படுமிடத்து அல்லது சமாதானக் குலைவு ஏற்படுதல் சாத்தியமாகவுள்ளவிடத்து, காணி சம்பந்தமான பிணக்குகள் பற்றிய விசாரணைகள் .

காணி சம்பந்தமான பிணக்குகள் பகிரங்க நீதிமன்ற மொன்றுக்கு ஆற்றுப்படுத் தப்படல.

66. (1) காணி சம்பந்தமான பிணக்கொன்றின் காரணத்தினால் சமாதானக் குலைவு ஏற்படுமென அஞ்சப்படுகின்றவிடத்தெல்லாம் அல்லது சமாதானக்குலைவு ஏற்படுதல் சாத்தியமாகவிருக்கின்ற போதிலெல்லாம் -

(அ) பிணக்கை விசாரிக்கும் பொலிசு அலுவலா் -

(i) காணி எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்திருக்கின்றதோ அந்த ஆரம்பநீதிமன்றத்தில் பிணக்குச் சம்பந்தமான தகவலொன்றை இயன்றளவு தாமதமின்றிக் கோப்பிடுதல் வேண்டும் என்பதுடன், தகவல் கோப்பிடப்பட்ட தேதியை உடனடுத்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளன்று அத்தகைய நீதிமன்றத்தின் அமர்வுகள் நடைபெறுகின்றனவோ, அந்த நாளன்று அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் பிணக்கிற்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும் தோன்றுவதற்கென முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அவர்களைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்: அல்லது

(ii) சமாதானத்தைப் பேணிக்காக்கும் நலன் கருதி அவசியமாயின், பிணக்கிற்கான கட்சிக்காரர்களை கைது செய்து, காணி எந்த ஆரம்ப நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்திருக்கின்றதோ அந்த ஆரம்ப நீதிமன்றத்தின் முன்னர், சட்டப்படி அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக, அவர்களை உடனடியாக முன்னிலைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதே நேரத்தில் பிணக்குப் பற்றிய தகவலை அந்த நீதிமன்றத்தில் கோப்பிடுதலும் வேண்டும்: அல்லது

(ஆ) அத்தகைய பிணக்கிற்கான கட்சிக்காரர் எவரும், நிகழ்வுகளையும் கோரப்படும் நிவாரணத்தையும் தருகின்றதும், பிணக்கிற்கான ஏனைய கட்சிக்காரர்களின் பெயர்களையும் முகவரிகளையும் எதிர்வாதிகளாகக் குறித்துரைக்கின்றதுமான சத்தியக் கடுதாசி மூலம் தகவலொன்றை அத்தகைய ஆரம்ப நீதிமன்றத்தில் கோப்பிடலாம்: அத்துடன், அத்தகைய நீதிமன்றமானது, அதன் வழமையான நடைமுறையின் மூலம் அல்லது பதிவஞ்சல் மூலம், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் நாளன்று நீதிமன்றத்தில் தோன்றுமாறு பெயர்குறிக்கப்பட்ட கட்சிக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அத்தகைய நாள், தகவல் கோப்பிடப்பட்ட நாளிலிருந்து இரண்டுவார காலத்திற்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆரம்ப நீதிமன்றமொன்றில் தகவலொன்று கோப்பிடப்படுகின்றவிடத்து, ஆரம்ப நீதிமன்றமானது, இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில், தகவலானது எந்தப் பிணக்குடன் சம்பந்தப்பட்டதோ அந்தப் பிணக்கை விசாரணை செய்வதற்கும், அதன் மீது தீர்மானமொன்றைச் செய்வதற்கும், அல்லது கட்டளையை ஆக்குவதற்கும் நியாயாதிக்கம் உடையதாதல் வேண்டும் என்பதுடன், இந்நியாயாதிக்கம் இத்தால் அதற்குரித்தாக்கவும்படுகின்றது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்சிக்காரர் முன்னிலைப்படுத்தப்பட்ட தேதியன்று அல்லது அவ்வுட்பிரிவின் கீழ் அவர்கள் தோன்றுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, கட்சிக்காரர்களையும், அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆட்களையும், அவர்களது உரிமைக் கோரிக்கைகளைக்கூறும் சத்தியக்கடுதாசிகளையும், அத்துடன் அவர்கள் எந்த ஆவணங்கள் மீது நம்பியுள்ளார்களோ அந்த ஆவணங்களையும் (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும்) சேர்த்துக் கோப்பிடும்படி பணித்து நீதிமன்றமானது நாளொன்றை நியமித்தல் வேண்டும். அந்நாளானது கட்சிக்காரர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து அல்லது அவர்கள் தோன்றுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) நீதிமன்றமானது, தகவல் கோப்பிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்திற்குப் பிந்தாமல், காணி சம்பந்தமான பிணக்கொன்று எழுந்துள்ளதென அறிவிக்கின்றதும், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தகை தேதி, அந்த வழக்கு நீதிமன்றத்தில் அடுத்துக் கூப்பிடப்படவுள்ள நாளாகவிருத்தல் வேண்டும்) நீதிமன்றத்தில் தோன்றுமாறு அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துகின்றதுமான அறிவித்தலொன்றை, பிணக்கின் விடயப்பொருளாகவுள்ள காணியில் அல்லது காணியின் ஏதேனும் பாகத்தில் துலாம்பரமான இடமொன்றில் ஒட்டுவித்தல் வேண்டும்.

ஆயின், தகவலானது பொலிசு அலுவலர் ஒருவரால் கோப்பிடப்பட்டிருக்கின்றவிடத்து, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தலானது, அக்கறை கொண்டுள்ள ஆள், நீதிமன்றத்தில் தோன்றுவதோடு மேலதிகமாக, அவரது உரிமைக்கோரிக்கைகளைக் கூறும் சத்தியக்கடுதாசிகளை அவர் எந்த ஆவணங்களின்மீது நம்பியிருக்கின்றாரோ அந்த ஆவணங்களுடன் (அல்லது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன்) சேர்த்துக் கோப்பிடுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(5) எவையேனும் சத்தியக்கடுதாசிகளையும் ஆவணங்களையும் கோப்பிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அவை கோப்பிடப் படுமிடத்து, நீதிமன்றமானது, சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடும் கட்சிக்காரர்களினால் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைத் ஆவணங்களுடன் (எவையேனு மிருப்பின்) சேர்த்துக் கோப்பிடுவதற்காக இரண்டு வாரங்களை விஞ்சாத கால அவகாசத்தை அத்தகைய கட்சிக்காரர்களுக்கு வழங்குதல் வேண்டும். எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைத் தயாரிப் பதற்கென அத்தகைய கட்சிக்காரர்கள் அல்லது அவர்களது சட்டத்தரணிமார் பதிவாளர் முன்னிலையில் பதிவேட்டைப் பார்வையிடு வதற்கு ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அனுமதித்தல் வேண்டும்.

(6) சத்தியக்கடுதாசிகளையும் ஆவணங்களையும் கோப்பிடு வதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, எதிர்ச் சத்தியக் கடுதாசிகளைக் கோப்பிடுவதற்கான விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதிருக்கின்றவிடத்து, எதிர்ச் சத்தியக்கடுதாசிகளைக் கோப்பிடுவதற்கான தேதியன்று, அத்தகைய சத்தியக் கடுதாசிகளும் ஆவணங்களும் கோப்பிடப்படினுஞ்சரி, அல்லா விடினுஞ்சரி, வழக்கை விசாரணைக்கென நிர்ணயிக்குமுன்னர், நீதிமன்றமானது, கட்சிக்காரர்களையும், அக்கறைகொண்டுள்ள ஆட்களையும் (எவரேனுமிருப்பின்) பிணக்கை இணக்கித் தீர்க்கும்படி தூண்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்தல் வேண்டும்: அத்துடன் கட்சிக்காரர்களும் அக்கறைகொண்டுள்ள ஆட்களும் இணக்கித்தீர்ப்பதற்கு உடன்படுவார்களாயின், அந்த இணக்கத் தீர்வானது பதியப்படுதல் வேண்டும் என்பதுடன், கட்சிக்காரர்களாலும் அக்கறைகொண்டுள்ள ஆட்களாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்: அத்துடன் இணக்கத்தீர்வின் நியதிகளுக்கிணங்கக் கட்டளையொன்று ஆக்கப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) கட்சிக்காரர்களும் அக்கறைகொண்டுள்ள ஆட்களும் (எவரேனுமிருப்பின்) இணக்கத்தீர்வு காணாதவிடத்து, நீதிமன்றமானது வழக்கை விசாரிப்பதற்கு தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்; அத்தேதி, விடயத்திற்கேற்ப சத்தியக்கடுதாசிகளும், ஆவணங்களும் அல்லது எதிர்ச் சத்தியக்கடுதாசிகளும் ஆவணங்களும் கோப்பிடப்படுவதற்கென வழக்குக் கூப்பிடப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குப் பிந்தாததாகவிருத்தல் வேண்டும்.

(8) (அ) கட்சிக்காரர் ஒருவர் அல்லது அக்கறைகொண்டுள்ள ஆள் ஒருவர் இப்பாகத்தின்கீழ் தமது தோன்றுதலைப் பதியும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, அவர், சட்டத்தரணியொருவர் மூலம் தமது தோன்றுதலைப் பதியலாம்.

(ஆ) கட்சிக்காரர் ஒருவர் தோன்றத் தவறுமிடத்து அல்லது தோன்றியிருந்தும் தமது சத்தியக்கடுதாசிகளையும் ஆவணங்களையும் (எவையேனுமிருப்பின்) கோப்பிடத் தவறுமிடத்து, அவர் தோன்றத்தவறியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், விசாரணையில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவராதலும் ஆகாது: ஆனால் நீதிமன்றமானது, அதன் தீர்மானத்தைச் செய்வதிலும் கட்டளையை ஆக்குவதிலும், அத்தகைய கட்சிக்காரரின் உரிமைக்கோரிக்கை தொடர்பில், அதன் முன்னிலையில் உள்ள அத்தகைய சான்று முதலியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை யானது சுருக்க முறையில் நடைபெறல் வேண்டும்.

67. (1) இப்பாகத்தின் கீழான விசாரணை ஒவ்வொன்றும் சுருக்கமுறையில் நடைபெறல் வேண்டும் என்பதுடன், அவ்விசாரணை தொடங்கியதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிவடைதலும் வேண்டும்.

(2) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி விசாரணை முடிவடைந்ததிலிருந்து ஒருவார காலத்தினுள் தமது கட்டளையைக் கூறுதல் வேண்டும்.

(3) விசாரணை முடிவுறாதிருக்கும்வரை, விசாரணையின் முடிவில் இப்பாகத்தின்கீழ் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி ஆக்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாட்டினைக் கொண்டுள்ள இடைக்காலக் கட்டளையொன்றை ஆக்குதல் அந்நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்

பிணக்கு உடைமை சம்பந்த மானதாக விருக்கு மிடத்து ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் தீர்மானமும் கட்டளையும்

68. (1) பிணக்கானது ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைபற்றியதாகவிருக்குமிடத்து, 66ஆம் பிரிவின் கீழான தகவல் கோப்பிடப்பட்ட தேதியன்று அக்காணியை அல்லது அதன் பாகத்தை உடைமை கொண்டிருந்தவர் யார் எனத் தீர்மானிப்பதும், அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு யார் உரித்துடையவரென்பது பற்றிய கட்டளையை ஆக்குவதும், விசாரணை நடாத்தும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஆள் ஒருவரோ, ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களோ, தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்கீழ் அல்லது தீர்வையொன்றின்கீழ் அக் காணியிலிருந்து அல்லது அதன் பாகத்திலிருந்து வெளியேற்றப்படும் வரையில், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையில், அக்காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கு உரித்துரையவரென அத்தகைய ஆளை அல்லது ஆட்களை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளையின் அல்லது தீர்வையின் அதிகாரத்தின்கீழன்றி வேறுவகையாகச் செய்யப்படும் அத்தகைய உடைமைக்கான இடையீடுகள் யாவற்றையும் தடை செய்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் காணியை அல்லது காணியின் ஏதேனும் பாகத்தை உடைமைகொள்வதற்கான உரிமை பற்றிய பிணக்கொன்றை விசாரணை செய்யும்போது, காணியை அல்லது அதன் பாகத்தை உடைமைகொண்டிருந்த எவரேனும் ஆள் 66 ஆம் பிரிவின்கீழான தகவல் கோப்பிடப்பட்ட தேதிக்கு நேர்முன்னர் இருமாத காலத்தினுள் வலோற்காரமாக உடைமை பறிக்கப்பட்டிருக்கின்றார் என ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திருப்தியடையுமிடத்து, அவர் அப்பயன்பட தீர்மானமொன்றைச் செய்யலாம் என்பதுடன், உடைமை பறிக் கப்பட்ட கட்சிக்காரருக்கு உடைமை மீளளிப்படைக்கப்பட -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமெனப் பணிக்கின்றதும், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றின் அல்லது தீர்வையொன்றின் அதிகாரத்தின் கீழன்றி வேறுவகையாக அத்தகைய உடைமைக்கான இடையீடுகள் யாவற்றையும் தடைசெய்கின்றதுமான கட்டளையொன்றையும் ஆக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள வெளிப்படுத்துகை, தடை ஆகியனவற்றுடன் சேர்த்து, அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் கட்சிக்காரருக்கு அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காணியின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் உடைமை மீளலொப்படைக்கப்படுதல் வேண்டுமெனக்கூறும் பணிப்பொன்றையும் உள்ளடக்கலாம்.

பிணக்கு வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் தீர்மானமும் கட்டளையும்

69. (1) பிணக்கானது, ஏதேனும் காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கான உரிமை அல்லாத அத்தகைய காணியின் அல்லது அதன் பாகத்தின் வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்குமிடத்து, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, பிணக்கிலுள்ள விடயமாக அமையும் உரிமைக்கு யார் உரித்துடையவர் எனத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இவ்வுட்பிரிவின்கீழான கட்டளையொன்று, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆள், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான காணியிலுள்ள அல்லது அதன் ஏதேனும் பாகத்திலுள்ள அல்லது அக்காணி தொடர்பிலான அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பிலான அத்தகைய ஏதேனும் உரிமைக்கு (அத்தகைய ஆளின் அத்தகைய உரிமை தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றின் பயனாக அல்லது தீர்வையொன்றின் பயனாக இழப்பிக்கப்படும் வரையில்) உரித்துடையவராதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய கட்சிக்காரர் அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கும் போது, மேற்கூறியவாறான கட்டளையொன்றின் அல்லது தீர்வையொன்றின் அதிகாரத்தின்கீழ் அல்லாது வேறுவகையில் ஏற்படக்கூடிய எல்லா இடையீடுகளையும் தலையீடுகளையும் தடைசெய்யலாம்.

70. இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறாக, காணியின் அல்லது அதன் பாகத்தின் உடைமைக்கான உரிமையைப் பிரயோகிப்பதற்காக அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்காக, அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் பயிரின் அல்லது விளைபொருளின் விற்பனை சம்பந்தமாக, அல்லது அத்தகைய காணியிலுள்ள ஏதேனும் உரிமையைப் பிரயோகிக்கும் முறைக்காக,- உடைமைக்காக அல்லது ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்காக பிணைப் பொறுப்பு கொடுக்கப் படும்படி கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஏதேனும் பயிரின் அல்லது விளைபொருளின் விற்பனையினால் பெறப்படும் வரும்படிகளின் கட்டுக்காவலுக்காக அல்லது அந்த வரும்படிகளைக் கையாளுவதற்காக பிணைப்பொறுப்புக் கொடுத்துதவுதல் பற்றிய அத்தகைய வேறு பணிப்புக்களையும் உள்ளடக்கலாம்.

கட்சிக் காரர் எவரும் தோன்றாத விடத்து ஆக்கப் படும் கட்டளை.

71. பிணக்கிற்காக கட்சிக்காரர்கள் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றாதவிடத்து அல்லது தோன்றியிருந்தும் அல்லது முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தும் சத்தியக்கடுதாசிகள் எவற்றையும் (அவற்றுடன் ஆவணங்களை இணைத்து அல்லது ஆவணங்களை இணைக்காமல்) கோப்பிடாதிருக்குமிடத்து, நீதிமன்றமானது.

(அ) பிணக்கு உடைமை பற்றியதாகவிருக்கும் விடயத்தில், உடைமையில் இருக்கும் கட்சிக்காரரை தொடர்ந்து உடைமையில் இருக்கும்படி அனுமதித்துக் கட்டளை ஆக்குதல் வேண்டும், அத்துடன்

(ஆ) பிணக்கு வேறு ஏதேனும் உரிமை பற்றியதாகவிருக்கும் விடயத்தில் அத்தகைய உரிமை பற்றி இதுகாறும் உள்ள நிலை தொடர்ந்திருக்கும்படி அனுமதிக் கட்டளை ஆக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. இப்பாகத்தின் கீழான தீர்மானமும், கட்டளையும் பின்வருவனவற்றைச் சோதனை செய்த பின்னரும், சீர்தூக்கிப் பார்த்ததன் பின்னரும் ஆக்கப்படுதல் வேண்டும் :- ஆரம்ப நீதிமன்ற நீதிபதி அவரது தீர்மானத்துக்காக எந்த சான்று முதலிய வற்றின் மீது செயலாற்றலாம் என்பது

(அ) கோப்பிடப்பட்ட தகவலும், கொடுத்துதவப்பட்ட சத்தியக் கடுதாசிகளும், ஆவணங்களும்:

(ஆ) கொடுத்துதவப்பட்ட சத்தியக்கடுதாசிகள் மீது அல்லது ஆவணங்கள்மீது எழும் ஏதேனும் கருமம் பற்றி நீதிமன்றம் அளிப்பதற்கு அனுமதிக்கக்கூடிய அத்தகைய வேறு சான்று: அத்துடன்

(இ) ஆரம்ப நீதிமன்ற நீதிபதி தமது தற்றுணிபின்படி அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய வாய்மொழி மூலமான அல்லது எழுத்திலான வாதவுரை.

73. இப்பாகத்தின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்றை மீறிச் செயலாற்றும் அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஆரம்ப நீதிமன்ற நீதிபதியொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். கட்டளையை மீறியமைக்கான அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறியமைக்கான தண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியியல் துடர்ச்சியில் நிலைநாட்டப் படக்கூடிய உரிமையை அல்லது அக்கறையை கட்டளை பாதிப்பதாகாது.

74. (1) குடியியல் துடர்ச்சியொன்றில் எவரேனும் ஆள் நிலைநாட்டக்கூடியதும் ஏதேனும் காணியில் அல்லது காணியொன்றின் பாகத்தில் உள்ளதுமான உரிமை எதனையும் அல்லது அக்கறை எதனையும் இப்பாகத்தின் கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று பாதித்தல் ஆகாது அல்லது பங்கப்படுத்துதல் ஆகாது: அத்துடன் பிணக்கில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு இப்பிரிவுகளின் பயன் பற்றி விளக்குவது, இப்பாகத்தின்கீழ் விசாரணையொன்றை நடாத்தத் தொடங்கும் ஆரம்ப நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழான ஏதேனும் தீர்மானத்திற்கெதிராக அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுதல் ஆகாது.

"காணி சம்பந்தமான பிணக்கு" என்பதன் பொருள்.

75. இப்பாகத்தில் "காணி சம்பந்தமான பிணக்கு" என்பது, ஏதேனும் காணியினதும், அல்லது ஒரு காணியின் பாகத்தினதும், அதன்மீதான கட்டிடங்களினதும் உடைமைக்கான உரிமை பற்றிய ஏதேனும் பிணக்கையும், அல்லது அக்காணியின் எல்லைகள் பற்றிய ஏதேனும் பிணக்கையும், ஏதேனும் காணியில் அல்லது ஒரு காணியின் பாகத்தில் பயிர் செய்வதற்கான உரிமை பற்றிய-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் பிணக்கையும் ஏதேனும் காணியில் அல்லது காணியின் பாகத்தில் உள்ள பயிர்களுக்கான அல்லது விளைபொருளுக்கான உரிமை பற்றிய ஏதேனும் பிணக்கையும் அல்லது காணி தொடர்பிலான வசதியுரிமை என்ற தன்மையிலான ஏதேனும் உரிமை பற்றிய பிணக்கையும் உள்ளடக்கும் என்பதுடன், இப்பாகத்தில் "காணி" பற்றிய குறிப்பீடு எதுவும் அக்காணியின் மீது அமைந்துள்ள ஏதேனும் கட்டிடம் பற்றிய குறிப்பீடொன்றையும் உள்ளடக்கும்.

76. நீதிமன்றப் பிசுக்கால், அவசியமாகுமிடத்து, இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படும் எல்லாக் கட்டளைகளையும் நிறைவேற்றி வைத்தல் வேண்டும். நீதிமன்றத்தின் கட்டளைகளை பிசுக்கால் நிறைவேற்றுதல்.

77. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று நீதிவான் நீதிமன்றங்களில் முடிவுறாதிருப்பவையும், 1973 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின்கீழானவையுமான எல்லா நடவடிக்கைகளும், தோதான ஆரம்ப நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆரம்ப நீதிமன்றமானது, அந்நடவடிக்கைகளைக் கவனத்திற்குட்படுத்தவும் விசாரணை - முடிவுறா திருக்கும் நடவடிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவும், அவை பற்றித் தீர்மானமொன்றைச் செய்யவும், அல்லது கட்டளையொன்றை ஆக்கவும், அல்லது அவற்றை தொடர்ந்து நடாத்துவதற்கும், முடிவுறுத்துவதற்கும் நியாயாதிக்கம் கொண்டதாதலும் வேண்டும்: அத்துடன், இந்நியாயாதிக்கம் இத்தால் அதற்குரித்தாக்கவும்படுகின்றது: இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் நீதிவான் நீதிமன்றத்தினாற் செய்யப்பட்ட தீர்மானம் எதுவும், ஆக்கப்பட்ட கட்டளை எதுவும், அவை தோதான ஆரம்ப நீதிமன்றத்தினால் செய்யப்பட்டனவென்றாற்போன்று, அல்லது ஆக்கப்பட்டனவென்றாற்போன்று அதே வலுவும் பயனும் உடையனவாதல் வேண்டும்:

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று சான்றளித்தலானது தொடங்கியுள்ள அத்தகைய ஏதேனும் நடவடிக்கை, சாத்தியப்படக்கூடியளவு, இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் சொல்லப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுதலும் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் VIII

### ஏற்பாடெதுவும் செய்யப்படாத விடயங்கள்.

78. இச்சட்டத்தில் ஏற்பாடு எதுவும் செய்யப்பட்டிராத கருமம் எதுவும் எழுமாயின், அந்த விடயம் அல்லது நடவடிக்கை குற்றவழக்குத் தொடர்பாக அல்லது நடவடிக்கையாக இருக்குமிடத்து, அதேபோன்ற கருமம் ஒன்றை ஆளுகின்ற 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளும், அந்த விடயம் குடியியல் வழக்கொன்றாக அல்லது நடவடிக்கையொன்றாக விருக்குமிடத்து, அதே போன்ற கருமம் ஒன்றை ஆளுகின்ற குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளும், விடயத்தின் நீதிநியாயம் தேவைப்படுத்தக்கூடியவாறாக அத்தகைய பொருத்தமான இசைவாக்கங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படுதலும் ஏற்புடையனவாக்கப்படுதலும் வேண்டும்.

ஏற்பாடெதுவும் செய்யப்படாத விடயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்.

---

**2006ம் ஆண்டு 54ம் இலக்க (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறாக**

---

**( 1990, மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)**

**1990,** மே மாதம் 18 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி **II** இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

(1990, மே மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**அரசியலமைப்பின் 154 ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை தொடர்பாகவும், மேல்நீதிமன்றத்துக்கும் மேல்நீதிமன்றத்திலிருந்தும் மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமை தொடர்பாகவும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்கள் தொடர்பாகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 1990ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்ற (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்

2. (1) இலங்கை மேல் நீதிமன்றத்தின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தினைப் பிரயோகிப்பது தொடர்பாகவும் அத்தகைய மேல் நீதிமன்றத்திலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பாகவும் ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் - மேல் நீதிமன்றத்தின் மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கை முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) அம் மேல்நீதிமன்றத்தில் (யூரர் சபை மூலமான விளக்கங்கள் அத்துடன் யூரரில்லா விளக்கங்கள் உட்பட) வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப் படுவதற்கும் விளக்கங்களுக்கான நடவடிக்கை முறைகளுக்கும்:

(ஆ) அம் மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தீர்ப்புகள், குற்றத் தீர்ப்புக்கள், கட்டளைகள் அல்லது தண்டனைத் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமைக்கும்:

(இ) அம் மேல்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தீர்ப்புகள், குற்றத் தீர்ப்புக்கள், கட்டளைகள் அல்லது தண்டனைத் தீர்ப்புகள் ஆகியவற்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு செய்யப்படும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கும்,

ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் ஏதேனும் வழக்கு, வழக்குத்தொடுப்பு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம், வேறேதேனும் நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்படுவதற்கு ஏற்புடைத்தான நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், மாகாணமொன்றுக்கென அரசியலமைப்பின் 154ஓ உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதிமன்றத்தின் முன்னர் முடிவுறாதிருக்கும் ஏதேனும் வழக்கு, வழக்குத்தொடுப்பு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம், அவ்வுறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்படுவது தொடர்பில், ஏற்புடையனவாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்பிரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவ்வதிகாரத்தை அவமதித்துப்புரியப்பட்ட அவமதிப்புத் தவறுகளுக்கு ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

தொழில் நியாய சபைகளிலிருந்தும் கமநலச்சேவைகள் சட்டத்தின் கீழான கட்டளைகளி லிருந்தும்வரும் மேன்முறையீடு களை விசாரிப்பதற்கு மேல் நீதிமன்ற த்துக்குள்ள நியாயாதிக்கம்

3. மாகாணமொன்றுக்கென அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று, ஏதேனும் சட்டத்துக்கு அமைய, அம்மாகாணத்துக்குள் இருக்கும் தொழில் நியாய சபைகளினால் ஆக்கப்படும் கட்டளைகள் தொடர்பிலும் அம்மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனும் காணி தொடர்பில், 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 5 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளைகள் தொடர்பிலும், மேன்முறையீட்டு அத்துடன் மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டும்.

மேல் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடு செய்யும் உரிமை

4. நீதிவான் நீதிமன்றமொன்றினால், ஆரம்ப நீதிமன்றமொன்றினால், தொழில் நியாய சபையொன்றினால் வழங்கப்படும் அல்லது விதிக்கப்படும் ஏதேனும் குற்றத்தீர்ப்பினால், தண்டனைத்தீர்ப்பினால் அல்லது கட்டளையினால் அல்லது 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச் சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அல்லது 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையினால் இன்னலுறும் கட்சிக்காரர் ஒருவர், மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறைக்கும், விதத்துக்கும் ஏற்புடைத்தான எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அத்தகைய மேன்முறையீடுகள் செய்யப்பட வேண்டியகால அவகாசத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைய, அந்நீதிமன்றம் அல்லது நியாயசபை அல்லது கமநலச் சேவைகள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கு விடயப்பொருளாக இருக்கின்ற காணி, எம்மாகாணத்துக்குள் அமைந்துள்ளதோ, அம்மாகாணத்துக்கென அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு, அவற்றிக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

மேல் நீதிமன்றதுக்கு மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறை.

5. நீதிவான் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புகள், தண்டனைத் தீர்ப்புகள் அல்லது கட்டளைகள் ஆகியவற்றிற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும், அத்துடன், அத்தகைய ஏதேனும் குற்றத்தீர்ப்பை, தண்டனைத்தீர்ப்பை அல்லது கட்டளையை மீளாய்வு செய்வதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கும் ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் மாகாண மொன்றுக்கெனத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்துக்கு, அம்மாகாணத்தினுள் உள்ள நீதிவான் நீதிமன்றங்களினால், ஆரம்ப நீதிமன்றங்களினால் அத்துடன் தொழில் நியாயசபைகளினால் வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புகளுக்கெதிராக, தண்டனைத்தீர்ப்புகளுக்கெதிராக அல்லது கட்டளைகளுக்கெதிராக அத்துடன், அம்மாகாணத்தினுள் அமைந்துள்ள காணி தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, கமநலச்சேவைகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கெதிராகச் செய்யப்படும் மேன்முறையீடுகளுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், அத்தகைய ஏதேனும் குற்றத்தீர்ப்பை,தண்டனைத்தீர்ப்பை அல்லது கட்டளையை, மீளாய்வுசெய்வதற்காக அத்தகைய மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பத்துக்கும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

மாவட்ட நீதி மன்றங்களிலும் குடும்ப நீதி மன்றங்களிலுமிருந்து வரும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான நியாயாதிக்கம்.

§2, 54 இல 2006

5அ. (1) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் மாகாணமொன்றுக்கெனத் தாபிக் கப்பட்ட மேல்நீதிமன்றமொன்று அம்மாகாணத்தினுள் உள்ள ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தினால் அல்லது குடும்ப நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டதும் ஆக்கப் பட்டதுமான வழக்குத்தீர்ப்புகள், தீர்ப்புகள் அல்லது கட்டளைகள் தொடர்பில் மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கத்தையும் அத்துடன் விடயத்துக்கேற்ப, ஏதேனும் அத்தகைய மாவட்ட நீதிமன்றத்தால் அல்லது குடும்ப நீதிமன்றத்தால் புரியப்படும் எல்லா நிகழ்வுப் பிழைகளையும் அல்லது சட்டப்பிழைகளையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தையும் கொண்டிருத்தலும் பிரயோகித்தலும் வேண்டும்.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 23 முதல் 27 வரையிலான பிரிவுகளினதும் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 753 முதல் 760 வரையிலான பிரிவுகளினதும் 765 முதல் 777 வரையிலான பிரிவுகளினதும், மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தின் பிரயோகத்திற்கு ஏற்புடைத்தான எழுத்திலான ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகள், மாகாணமொன்றுக்கென அரசியலமைப்பின் 154ஒ ஆம் உறுப்பரையால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கான குறிப்பீ டொன்றை உள்ளடக்குவதாக வாசித்துப் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் விடயத்திற்கேற்ப ஒரு மாகாணத்திலுள்ள மாவட்ட நீதிமன்றமொன்றின் அல்லது குடும்ப நீதிமன்றமொன்றின் ஏதேனும் வழக்குத் தீர்ப்பினால், தீர்ப்பினால் அல்லது கட்டளையால் இடருற்ற ஆளெவரும் அவ்வுப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தை அம்மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் இறைஞ்சிக் கேட்கலாம்:

ஆயின், விடயத்திற்கேற்ப மாவட்ட நீதிமன்றமொன்றின் அல்லது குடும்ப நீதிமன்றமொன்றின் வழக்குத்தீர்ப்பு அல்லது தீர்ப்பு எதுவும் திறத்தவர்களின் பெருமளவிலான உரிமைகளைப் பங்கப்படுத்தாத அல்லது நீதித்தவறுகையை ஏற்படுத்தாத ஏதேனும் பிழை, குறைபாடு அல்லது ஒழுங்கீனம் காரணத்தின்மீது நேர்மாறாக்கப்படுதலோ அல்லது வேறுபடுத்தப்படுதலோ ஆகாது.

மேன்முறையீடுகளின் விசாரணை.
§2, 54 இல 2006

5ஆ. பிரிவு 5அ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட மாகாணமொன்றின் மேல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கம், இரண்டிற்குக் குறையாதவர்களும் அத்தகைய மேல் நீதிமன்றமாக ஒருமித்து அமர்பவர்களுமாக அந்நீதிமன்றத்தின் நீதிபதிகளால் சாதாரணமாக எல்லா நேரங்களிலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

மேல் நீதி மன்றத்தின் முடிபுகளிலிருந்து உயர்நீதி மன்றத்திற்குச் செய்யப்படும் மேன் முறையீடு
§2, 54 இல 2006

5இ. (1) இச்சட்டத்தின் 5அ என்னும் பிரிவினால் அளிக்கப்பட்ட அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் முதலில் கேட்டுப்பெறப்பட்ட உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன், அரசியலமைப்பின் 154ஓ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்ற மொன்றினால் விளம்பப்பட்ட அல்லது பதியப்பட்ட-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் வழக்குத்தீர்ப்பிலிருந்து, தீர்ப்பிலிருந்து அல்லது கட்டளையிலிருந்து மேன்முறையீடொன்று நேரடியாக உயர்நீதிமன்றத்திற்கமைவதாயிருத்தல் வேண்டும். உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி பெருமளவில் சட்டப்பிரச்சனை சம்பந்தப்பட்டிருக்குமிடத்து அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் மீளாய்வுக்குத் தகுந்த விடயமொன்றாக இருக்குமிடத்து, கோரப்பட்ட அனுமதி அதனால் அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றம் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு தொடர்பில் அரசியலமைப்பின் 127ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியினால் அதற்குரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றத் திடமிருந்து மாகாண மொன்றின் மேல் நீதி மன்றத்திற்கு மாற்றுதல்.
§2. 54 இல 2006

5ஈ.(1) எந்த மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் தொடர்பிலான நியாயாதிக்கம் அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு இச் சட்டத்தின் 5அ என்னும் பிரிவால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு அளிக்கப்படுகின்றதோ விடயத்திற்கேற்ப, அந்த மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் விசாரணைக்காவும் தீர்மானத்திற்காகவும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு தோதான மேல் நீதிமன்றமொன்றுக்கு மாற்றம் செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் மீது சொல்லப்பட்ட மேல் நீதிமன்றம் விடயத்துக்கேற்ப, அத்தகைய மேன் முறையீடு அல்லது விண்ணப்பம் அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு நேரடியாகச்செய்யப்பட்டதைப் போன்று அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரணை செய்து தீர்மானித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பிரதம நீதியரசருடனான கலந்தாலோசனையுடன், இப்பிரிவு நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவுறாதிருக்கும் மேன்முறையீடுகள், மீளாய்வு விண்ணப்பங்கள் அத்துடன் தொன்னிலை மீட்பு என்பன தொடர்பில் அவை விசாரணைக்காகவும் தீர்மானத்திற்காகவும் அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையால் தாபிக்கப்பட்ட தோதான மேல் நீதிமன்றமொன்றுக்கு அகற்றப்படுவதற்குக் காலத்துக்குக்காலம் பணிப்புரைகள் வழங்கலாம். விடயத்திற்கேற்ப அத்தகைய மேன்முறையீடுகள் அல்லது விண்ணப்பங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட ஆண்டைக் குறிப்பிட்டு அத்தகைய பணிப்புரை செய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் நேரடியாக அத்தகைய மேல்நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்டாற்போன்று இச்சட்டத்தின் 5அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க விடயத்திற்கேற்ப அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரத்துத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கம் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

மேன்முறையீட்டின் மீது மேல் நீதிமன்றத்திற்குள்ள தத்துவங்கள்.

6. (அ) அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்பிரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று அரசியலமைப்பினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத் தீர்ப்பைச் சட்டத்திற்கிணங்க உறுதிப்படுத்தலாம், எதிர்மாறாக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது முதனிலை நீதிமன்றம், தொழில் நியாயசபை அல்லது நிறுவனம் எதற்கும் பணிப்புரைகளை வழங்கலாம் அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மேல், புதிய விளக்கமொன்றுக்கு அல்லது மேல் விசாரணைக்குக் கட்டளையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) மேல்நீதிமன்றம், விடயத்தின் நீதி தேவைப்படுத்தக் கூடியவாறு, ஏதேனும் மூலவழக்கில், துடர்ச்சியில், வழக்குத் தொடுப்பில் அல்லது நடவடிக்கைகளில் ஆய்நிகழ்விலுள்ள விடயங்கள் பற்றி முதனிலை நீதிமன்றத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட சான்றுக்கு மேலதிகமாக அல்லது அதற்குக் குறைநிரப்பியாக புதிய சான்றை மேலும் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் அனுமதிக்கலாம்.

மேல் நீதிமன்றத்தின் எழுத்தாணை நியாயாதிக் கத்தைப் பிரயோகிப் பதற்கான நடவடிக்கை முறை.

7. அரசியலமைப்பின் 140 ஆம், 141ஆம் உறுப்புரைகளினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டி, அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு ஏற்புடைத்தாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்தியினால் அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற மொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டி அந்நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு, ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

அடிப்படை உரிமைகளையும் மொழி உரிமைகளையும் மீறல் தொடர்பான வழக்குகளை உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப் படுத்துதல்

8. (1) அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் ஒன்றில், ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, மேற் செல்லென்றெழுத்தாணை, விதிப்பாணை அல்லது உரிமை வினாப்பேராணை என்ற வகையிலான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றின் விசாரணையின்போது, அத்தகைய விண்ணப்பத்துக்கான திறத்தவரொருவினால் அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தின் அல்லது IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் மீறல் ஒன்றுக்கான அல்லது ஏற்படக்கூடிய மீறல் ஒன்றுக்கான முதற்றோற்றச் சான்று உண்டு என அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து, அத்தகைய நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதற்கென அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் ஆற்றுப்படுத்துகை தொடர்பில் சூழ்நிலைகளில் நீதியானதும் ஒப்புரவானதுமென உயர் நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புரைகளை விடுப்பதற்கு உயர் நீதிமன்றம் தத்துவ முடையதாதல் வேண்டும், அல்லது, அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை மீறல் அல்லது மொழி உரிமை மீறல் எதுவும் இல்லையெனில் அவ்விடயத்தை அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு திரும்ப ஆற்றுப்படுத்துவதற்கு அது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான ஆற்றுப்படுத்துகையொன்றை, அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள், உயர் நீதிமன்றம் விசாரித்து, இறுதியாக முடிவுசெய்தல் வேண்டும்.

குறித்த சில விடயங்களில் மேல் நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்தல்.

9. இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய -

(அ) அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று முக்கிய சட்டப்பிரச்சினையொன்றை உள்ளடக்குகின்ற (குடியியலாயினுஞ்சரி அல்லது குற்றவியலாயினுஞ் சரி) ஏதேனும் விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், வழங்கிய இறுதிக் கட்டளையொன்றினால், தீர்ப்பொன்றினால், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வையொன்றினால் அல்லது தண்டனைத் தீர்ப்பொன்றினால் இன்னலுற்ற ஆளெவரும், உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு மேல்நீதிமன்றமானது தன்னியக்கத்தால் அனுமதி வழங்கினால் அல்லது அத்தகைய விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் இன்னலுற்ற எவரேனும் திறத்தவரின் வேண்டுகோளின் பேரில், அதற்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

ஆயின், அத்தகைய மேல் நீதிமன்றமானது, உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ள விடத்து அல்லது வழக்கு அல்லது விடயம் உயர் நீதிமன்றத்தினால் மீளாய்வு செய்யப்படுவதற்குத் தகுந்ததென உயர் நீதிமன்றம் அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அத்தகைய மேல்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை அது பிரயோகிக்கையில் அதனால் வழங்கப்பட்ட ஏதேனும் இறுதிக்கட்டளைக்கு அல்லது வழக்கிடைக் கட்டளைக்கு, தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு, உயர் நீதிமன்றமானது அதன் தற்றுணிபின்பேரில் விசேட அனுமதி வழங்கலாம்.

ஆயின், மேலும், எவ்விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் முடிவுசெய்யப்படவேண்டிய பிரச்சினை பொதுமக்கள் நலன் வாய்ந்தது அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்தது என உயர் நீதிமன்றம் திருப்திப்படுகின்றதோ, அவ்விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் மேன்முறையீடு செய்வதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்குதல் வேண்டும்: அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையில் (3) (அ) என்னும் பந்தியினால் அல்லது 4 ஆம் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், வழங்கப்பட்ட இறுதிக்கட்டளை, தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்பு ஒன்றினால் இன்னலுற்ற ஆளெவரும் அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்

மேன்முறையீட்டின் மீது உயர் நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

10. (1) உயர் நீதிமன்றம், அரசியலமைப்புக்கு அமைய, அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றினால், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் (3) (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், புரியப்படும் நிகழ்வுப்பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்காக இலங்கைக்குள் மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்ட இறுதி நீதிமன்றமாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய எல்லா விடயங்களிலும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் கட்டளைகளும் இறுதியானவையும் முடிவானவையுமாதலும் வேண்டும்.

(2) உயர்நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றினால், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் 3 (ஆ) என்னும் பந்தியினால் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு, தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது தண்டனைத் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்படும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்முறையீட்டின்மீது பூரண புறநீங்கலான நீதிமுறைச் செயலாட்சி கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அத்தகைய ஏதேனும் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை அல்லது தண்டனைத் தீர்ப்பை அது உறுதிப்படுத்தலாம், நேர்மாறாகக்காலம், அல்லது வேறுபடுத்தலாம் அத்துடன் அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு அல்லது முதனிலை நீதிமன்றத்துக்கு அத்தகைய பணிப்புகளை வழங்கலாம் அல்லது விடயத்தின் நீதி தேவைப்படுத்தக் கூடியவாறு எவையேனும் வழக்கு நடவடிக்கையில் புதிய ஒரு விசாரணை நடத்துமாறு அல்லது மேலும் விசாரிக்குமாறு கட்டளையிடலாம் அத்துடன், நீதிநலன் அவ்வாறு தேவைப்படுத்தினால், புதிய அல்லது மேலதிகமான சான்றளிக்குமாறு கேட்கலாம் என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய சான்று அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் அல்லது ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தினால் பதியப்படவேண்டுமென்றும் பணிக்கலாம்.

11. (1) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதிமன்றத்தினால், அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் (3) (அ) என்னும் பந்தியின் அல்லது (4) ஆம் பந்தியின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் புரியப்படும், நிகழ்வுப்பிழைகள் அல்லது சட்டப்பிழைகள் எல்லாவற்றின்மீதும் மேன்முறையீட்டு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அதைப் பிரயோகித்தலும் வேண்டும், அத்துடன், அத்தகைய மேல் நீதிமன்றம் கவனத்துக்கெடுத்திருக்கக்கூடிய எல்லா வழக்குக் காரணங்கள், துடர்ச்சிகள், வழக்குகள், வழக்குத் தொடுப்புகள், விடயங்கள் அத்துடன் கருமங்கள் மீது, மேன்முறையீடு மீளாய்வு, தொன்னிலைமீட்பு என்றவகையில், பூரண புறநீங்கலான நீதிமுறைச் செயலாட்சி கொண்டிருத்தல் வேண்டும்.

மேல் நீதிமன்றத் திலிருந்து, மேன்முறை யீட்டு நீதிமன்றத் துக்கு மேன் முறையீடு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், அத்தகைய மேல் நீதிமன்றம் எதனதும் தீர்ப்பு, தீர்வை அல்லது கட்டளை எதுவும், திறத்தவர்களின் பெருமளவிலான உரிமைகளைப் பங்கப்படுத்தாத அல்லது நீதித்தவறுகையை ஏற்படுத்தாத ஏதேனும் பிழை, குறைபாடு அல்லது ஒழுங்கீனம் காரணமாக நேர்மாறாக்கப்படுதலோ அல்லது வேறுபடுத்தப்படுதலோ ஆகாது.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், சட்டத்திற்கிணங்க, கட்டளை, தீர்ப்பு, தீர்வை அல்லது தண்டனைத் தீர்ப்பு எதையும் உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது அரசியலமைப்பின் 154ஞ என்னும் எதற்கும் பணிப்புரைகள் வழங்கலாம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளில் மீது, புதியதொரு வழக்கு விசாரணை நடத்தும்படி அல்லது மேலும் வழக்கு விளக்கம் நடத்தும்படி கட்டளையிடலாம்.

(3) விடயம் தொடர்பில் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறு ஏதேனும் மூல வழக்கில், தொடர்ச்சியில், வழக்குத்தொடுப்பில் அல்லது வழக்கில் பிரச்சினைக்குரிய விடயங்கள் தொடர்பில், அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் மேல் நீதி மன்றத்தினால் ஏற்கனவே பெறப்பட்ட சான்றுடன் மேலதிமாக அல்லது அதற்குப் குறைநிரப்பியாக புதியசான்றை மேலும் பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் அனுமதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 (அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் எதுவும் கோப்பிடப்பட்டு, அத்துடன் அரசியலமைப்பின் 154ஒ என்னும் பந்தியினால் அல்லது (4)ஆம் பந்தியினால், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்தை வேண்டி அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் கோப்பிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட கால வரையறைக்குள் அந்நீதிமன்றத்தில் அதேவிடயம் தொடர்பில் மேன்முறையீடொன்று அல்லது விண்ணப்பமொன்று கோப்பிடப்பட்டு அத்துடன், அத்தகைய மேன்முறையீட்டின் மீது அல்லது விண்ணப்பத்தின் மீது அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் வழக்கு விளக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்காத விடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீமானிக்கத் தொடங்கலாம், அல்லது, அவ்வாறு செய்வது உசிதமென அது கருதினால், அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீமானிக்கும்படி அத்தகைய மேல் நீதிமன்றத்தைப் பணிக்கலாம்.

ஒரேவிடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் மேல் நீதிமன்றத்திலும் மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் கோப்பிடப்படுமிடத்து.

ஆயின், எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கத்துக்குள் வரும் மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் எதுவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டிருக்குமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது, அவ்வாறு செய்வது உசிதமானதென அது கருதினால், அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை அத்தகைய மேல்நீதிமன்றத்துக்கு மாற்றும்படி கட்டளையிடலாம், அத்துடன் அத்தகைய மேல் நீதிமன்றம் அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்துத் தீமானித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) பந்தி (அ)வில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் எதையும் விசாரித்துத் தீர்மானிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்யுமிடத்து, மேல் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்கு நடவடிக்கைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதன் தீர்மானத்துக்கென மாற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(இ) அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் அல்லது மேல்நீதிமன்றமொன்றுக்கு அதனை மாற்றுவதற்கும் இப்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுக்கெதிராக மேன்முறையீடெதுவும் இருத்தலாகாது.

(ஈ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும் அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு, அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையின் (4) ஆம் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தை அத்தகைய மேல் நீதிமன்றம் பிரயோகிக்கையில் அதனால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடு எதையும் விசாரித்துத் தீர்மானிப்பதற்கெனப் பணிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தத்துவமளிப்பதாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் ஆரம்பிக்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது- செல்லுபடியாக்கல்

(அ) அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றில், அவ்வுறுப்புரையின் 3 (அ) என்னும் பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் தொடுக்கப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகளும், அத்துடன் அப்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட மூல குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் அல்லது கொள்ளப்பட்ட பிரயோகத்தில், அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் பதியப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை ஒவ்வொன்றும்.

(ஆ) அத்தகைய குற்றத்தீர்ப்பு, தண்டனைத் தீர்ப்பு அல்லது கட்டளை எதற்கும் எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் எல்லா மேன் முறையீடுகளும்

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான ஏதேனும் மேன்முறையீட்டின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதியிலிருந்து நடைமுறையில் இருந்திருக்கின்றன என்றாற்போன்று செல்லுபடியானவையாகவும் பயனுள்ளவையாகவும் இருந்திருக்கின்றனவாகவும் அத்துடன் இருக்கின்றனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

14. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே, ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

---

(1996, மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

---

**1996,** மே மாதம் 10 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி **II** இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

(1996 மே மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

**அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றங்கள், குறித்த சில சிவில் வழக்குகளையும் கருமங்களையும் விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தின் பிரயோகத்துக்கு ஏற்பாடு செய்வதற் கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

1. இச்சட்டம், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மாகாணங்களின் மேல்நீதிமன்றச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரை மூலம் மேல் நீதிமன்றங்களின் நியாயாதிக்கம் தாபிக்கப்படுதல்

2. (1) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரை மூலம் மாகாணமொன்றுக்குத் தாபிக்கப்படும் மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும், அத்தகைய மேல்நீதிமன்றம் தொடர்பில் அமைச்சர் கசெற்றில் கட்டளை மூலம் வெளியிடும் அத்தகைய திகதியிலிருந்து பிரத்தியேக நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் எந்த மாகாணத்துக்காக அத்தகைய மேல்நீதிமன்றம் தாபிக்கப்பட்டதோ அந்த மாகாணத்துக்காக அத்தகைய மேல்நீதிமன்றம் தாபிக்கப்பட்டதோ அந்த மாகாணத்துக்குள் அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கான எதிராளித் திறத்தவர் அல்லது திறத்தவர்கள் வதிபவராக அல்லது வதிபவர்களாக இருந்தால் அல்லது வழக்கெழு காரணம் எழுந்தால் அல்லது வலுவுறுத்தப்பட வேண்டுமென நாடப்படும் ஒப்பந்தம் செய்யப்பட்டால்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான விண்ணப்பங்களின் அல்லது வழக்கு நடவடிக்கைகளின் விடயத்தில் கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்திருந்தால் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லா வழக்குகளையும் விண்ணப்பங்களையும் வழக்கு நடவடிக்கைகளையும் நீதிநெறிக் கவனத்திற்கெடுப்பதற்கும் விசாரித்துத் தீர்மானிப்பதற்கும் பிரத்தியேக நியாயாதிக்கமும் முழுத் தத்துவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, அவ்வுட்பிரிவின் கீழ் அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படற்பாலதான நியாயாதிக்கமானது:-

(அ) அத்தகைய மேல் நீதிமன்றமானது மேல் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்டதாக இருந்தால், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் பெயர் குறித்துரைக்கப்படுகின்றவாறு, மேல் மாகாணத்துக்குள் கொழும்பில் அல்லது வேறு ஏதேனுமிடத்தில் அமர்வைக் கொண்டிருக்கின்ற அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்: அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அத்தகைய மேல் நீதிமன்றமானது வேறு ஏதேனும் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றாக இருந்தால் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் பெயர் குறித்துரைக்கப்படுகின்றவாறு, அம்மாகாணத்துக்குள் அத்தகைய இடத்தில் அமர்வைக் கொண்டிருக்கின்ற அம்மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(3) மேல் மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமானது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியிலிருந்து இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள எல்லா விடயங்களையும், எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, விசாரித்துத் தீர்மானிப்பதற்கும் நீதித்துறை கவனத்திற்கெடுப்பதற்கும் பிரத்தியேக நியாயாதிக்கமும் முழுத் தத்துவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளைத் திகதியிலிருந்து மேல் மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தினால் அப்பிரிவின் கீழ் பிரயோகிக்கப்படற்பாலதான நியாயாதிக்கமானது, பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் பெயர் குறித்துரைக்கப்படுகின்றவாறு மேல் மாகாணத்துக்குள் கொழும்பில் அல்லது அத்தகைய வேறு இடத்தில் அமர்கின்ற அம்மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எழுத்திலான சட்டத்தின் பொருள் கோடல்.

3. இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் அல்லது இரண்டாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் சட்டத்தில் அத்தகைய அட்டவணைகளில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றம் பற்றிய குறிப்பீடொன்று இருக்கின்றவிடத்து (அத்தகைய ஏதேனும் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட தவறொன்றின் விளக்கம் தொடர்பில் நீதிமன்றமொன்று பற்றிய குறிப்பீடொன்று தவிர), அத்தகைய குறிப்பீடானது 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட மாகாணத்துக்கென அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் அல்லது தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் தொடர்பில் அத்தகைய கட்டளைமூலம் அல்லது மேல் மாகாணத்துக்கென அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் தொடர்பில் 2ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதி தொடக்கம், விடயத்திற்கேற்றாற்போல அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட மாகாணத்துக்கென அல்லது மேல் மாகாணத்துக்கென அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் பற்றிய குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

செலவுகள்

4. (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் XXI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் செலவு தொகைகள் அளிக்கும் விடயத்தில் அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். அத்துடன் இந்நோக்கத்துக்காக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சட்டக்கோவைக்கான இரண்டாம் அட்டவணையில் 1ஆம் பாகத்திலுள்ள "மாவட்ட நீதிமன்றங்கள்" என்பதற்கான குறிப்பீடானது, "அரசியலமைப்பின், 254ஏ என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றங்களுக்கும் மாவட்ட நீதிமன்றங்களுக்குமான" குறிப்பீடொன்றென்றாற் போன்று வாசிக்கப்பட்டுப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மேன்முறையீடு செய்வதற்கான உரிமை

5. (1) எவ்வாள் ஏதேனும் வழக்கில், வழக்கு நடவடிக்கையில் அல்லது கருமத்தில் திறத்தவர் ஒருவராக இருக்கின்றாரோ அவ்வாள் அவ் வழக்கில் வழக்கு நடவடிக்கையில் அல்லது கருமத்தில், 2ஆம் பிரிவின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பினால் அதிருப்தி அடைகின்றவிடத்து, ஏதேனும் நிகழ்வுப் பிழைக்காக அல்லது சட்டப்பிழைக்காக அத்தகைய தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) தாம் திறத்தவர் ஒருவராக இருக்கின்ற அல்லது இருக்க விழைகின்ற ஆள் எவரும், ஏதேனும் வழக்கின் போது, வழக்கு நடவடிக்கையின் போது அல்லது கருமத்தின் போது, 2 ஆம் பிரிவின் கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளை எதனாலும் அதிருப்தி அடைந்திருக்கின்றவிடத்து, அவர், முதலில் உயர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று நிகழ்வெதிலும் அல்லது சட்டத்திலுள்ள பிழை எதனையும் திருத்துவதற்காக அத்தகைய கட்டளைக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) இப்பிரிவில் "தீர்ப்பு" அத்துடன் "கட்டளை" என்னும் சொல்லமைப்புகளுக்கு (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 754 (5) ஆம் பிரிவில் இருக்கின்றவாறான அதே பொருளை முறையே கொண்டிருத்தல் வேண்டும்.

மேன்முறையீடுகள் செய்வதற்கான நடவடிக்கை முறை

6. உயர் நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் மேல் முறையீடு ஒவ்வொன்றும் அத்துடன் 5 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் Lviii ஆம் அத்தியாயத்தினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையுடன் கூடியளவு இணங்கக் கூடியவாறு செய்யப்படுதல் வேண்டும்.

நியாயாதிக்கத்துக்கான ஆட்சேபனை

7. மாவட்ட நீதிமன்றமொன்றினால் அறவிடப்பட்டிருக்கக்கூடியதான, ஏதேனும் தனிசு, உரிமைக் கோரிக்கை அல்லது சேத ஈடு ஆகியவற்றுக்காக 154ஓ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் எதிலும் ஏதேனும் வழக்கு அல்லது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால், அத்தகைய வழக்கின் அல்லது வழக்கு நடவடிக்கையின் வழக்காளி, எத்தன்மைத்தான செலவுத்தொகைக்கும் உரித்துடையவராதலாகாது. ஆனால் செலவு தொகை சம்பந்தமாக நீதி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு நீதிபதி தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தின் முன் உள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் எதிராளியின் எதிர்வாதம் அல்லது எதிர்க்கோரிக்கை எதுவும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்ட விடயமொன்று சம்பந்தமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய எதிர்வாதம் அல்லது எதிர்க்கோரிக்கை, வழக்காளியின் உரிமைக் கோரிக்கையோடும் அதற்கான எதிர்வாதத்தோடும் அத்துடன் எதிர்கோரிக்கையோடும் தொடர்புடையதாயிருக்கின்ற அவ் அளவுக்கு, அம்முரண்பாடான விடயத்தைக் கையுதிர்ப்பதற்கு நீதிமன்றத்துக்குள்ள தகுதியை அல்லது கடமையைப் பாதித்தலாகாது. எதிர்வாதம் அல்லது எதிர்க்கோரிக்கை நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அப்பால் இருக்கின்ற விடத்து

ஆயின், அத்தகைய ஏதேனும் வழக்கில், வழக்கு நடவடிக்கைக்கான எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மேல், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது அதன் நீதிபதி பொருத்தமானதெனக் கருதினால், வழக்கு நடவடிக்கை எந் நீதிமன்றத்தினால் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்நீதிமன்றத்திலிருந்து முரண்பாட்டிலிருக்கும் முழு விடயத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள ஏதாவதொரு நீதிமன்றத்துக்கு முழு வழக்கு நடவடிக்கையையும் மாற்றுமாறு கட்டளையிடுவது, அம்மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது அதன் நீதிபதி எவருக்கும் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விடயத்தில் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் பதிவேடானது, நீதிமன்றத்தின் பதிவாளரினால், வழக்கு நடவடிக்கை அத்தகைய-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைமூலம் எந்நீதிமன்றத்துக்கு அவ்வாறு மாற்றப்பட்டுள்ளதோ, அந்நீதிமன்றத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அதன் பின்னர், அத்தகைய நீதிமன்றத்தின்கண் ஆரம்பிக்கப்பட்டிருந்ததொன்றாற் போன்று தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

வழக்கின் பெறுமதி நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு அப்பால் இருக்கின்ற விடத்து,

9. ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட ஏதேனும் வழக்கின் பெறுமதியானது 2 ஆம் பிரிவின் கீழ் நியாயாதிக்கத்தைப்பிரயோகிப்பதும் அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றில் கோப்பிடப்பட்டிருக்க வேண்டிய ஒன்று என்பதற்குச் சான்று இருக்கின்றவிடத்து, நீதிபதி, அத்தகைய நிகழ்வைப் பதிவுசெய்து, அதற்கிணங்கக் கட்டளை ஆக்குதல் வேண்டுமென்பதுடன், அதன்மேல், வழக்கானது, தோதான நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுவிட்டதாக இருத்தலும் வேண்டும்.

நிலப்பெறுச் கால ஏற்பாடு

10. இரண்டாம் பிரிவின் (1) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று எத்திகதியன்று ஆக்கப்பட்டதோ அத்திகதிக்கு முற்போந்த நாளன்று மாவட்ட நீதிமன்றமொன்றில் முடிவுறாதிருக்கின்றனவும் அத்தகைய கட்டளையின் ஏற்பாடுகளின் பயன் காரணமாக, அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்று விசாரித்துத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டதுமான எல்லா சிவில் வழக்குகளும், வழக்கு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளும் அல்லது கருமங்களும் அத்தகைய மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றை நீதி நெறிக் கவனத்துக்கெடுத்து, விசாரித்துத் தீர்மானிப்பதற்கு அல்லது அவற்றைத் தொடர்ந்து பூர்த்தி செய்வதற்கு அத்தகைய நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இருத்தலும் வேண்டும்.

ஆயின், 2 ஆம் பிரிவின் (1) அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட திகதிக்கு முற்போந்த நாளன்று எந்த சிவில் வழக்கில் வழக்கு நடவடிக்கையில் அல்லது கருமத்தில் சாட்சியம் அணைத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சிவில் வழக்க, வழக்கு விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

11. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் அட்டவணை ( பிரிவு 2 (1) )

1. 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள் தவிர்ந்த ஏனைய எவ்வழக்குகளில் (வங்கித்தொழில், வணிகப்பொருட்கள் ஏற்றுமதி அல்லது இறக்குமதி, சேவைகள், கப்பற்கட்டணம், காப்புறுதி, வர்த்தக முகவர் நிலையம், வர்த்தக வழக்காறு அத்துடன் வழக்கெழு காரணங்கள் உட்பட) வழக்கெழு காரணம் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுந்திருக்கின்றனவோ அவ்வெல்லா வழக்குகளும் அத்துடன் எவ்வழக்குகளில் தனிசு, சேத ஈடு அல்லது உரிமைக் கோரிக்கை பத்து இலட்சம் ரூபாவை அல்லது கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் காலத்துக்குக் காலம் அமைச்சரினால் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுகின்ற பணத்தொகை ஒன்றுக்காக இருக்கின்றதோ, அவ்வெல்லா வழக்குகளும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் 31, 51, 131, 210 அத்துடன் 211 ஆம் பிரிவுகளின் கீழான எல்லா விண்ணப்பங்களும் வழக்கு நடவடிக்கைகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

3. இரண்டாம் அட்டவணையின் 2 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் தவிர்ந்த 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் கீழான எல்லா வழக்கு நடவடிக்கைகளும்.

## இரண்டாம் அட்டவணை ( பிரிவு 2 (3) )

1. கம்பெனிகள் பதிவாளருக்கு அல்லது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கைப் பிணைப்பொறுப்புகள் மற்றும் நாணயப் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணைப்பொறுப்புகள் மற்றும் நாணயமாற்றுப் பரிவர்த்தனைக்கெதிராகப் பிராதில் தடைக்களை வேண்டப்படும் எல்லா வழக்குகளும்.

2. 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் எல்லா வழக்குகளும்.

3. 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நியாயமான வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் எல்லா மேன்முறையீடுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம்.

---

(1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

---

1999, டிசம்பர் மாதம் 10 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் **II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம்.**

(1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.)

**மறியற்றண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக நீதிமன்றங்களினால் சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்கும் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

(2) இச்சட்டத்தின் I ஆம், III ஆம் பாகங்கள் இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமாக வரும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் II ஆம் பாகம் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். வெவ்வேறு நீதித்துறைப் பிரிவுகள் அல்லது நீதித்துறை வலயங்கள் தொடர்பில் வெவ்வேறு திகதிகள் நியமிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம்.

# பாகம் I

## சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர்.

சமுதாயஞ் சார் சீர்திருத்த ஆணையாளர் முதலியோரை நியமித்தல்.

2. (1) சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் ஒருவர் பெயர் குறித்து அல்லது பதவி குறித்து நியமிக்கப்படலாம். (இவர் இதனகத்துப்பின்னர் "ஆணையாளர்" எனக்குறிப்பீடு செய்யப்படுவார்.) அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதி ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் ஏனைய அலுவலர்களும் நியமிக்கப்படலாம்.

(2) சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரதி ஆணையாளர் ஒவ்வொருவரையும் அத்துடன் உதவி ஆணையாளர் ஒவ்வொருவரையும் நியமிக்கும் போது அவர் இலங்கை முழுவதற்குமாக அல்லது அதன் ஏதேனுமொரு பகுதிக்காக நியமிக்கப்படுகின்றாரா எனக் குறித்துரைத்தல் வேண்டும்.

பிரதி ஆணையாளர் களும் உதவி ஆணையாளர் களும்.

3. சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரதி ஆணையாளர் ஒவ்வொருவரும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும் ஆணையாளரின் பொதுவான பணிப்பிற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அவர் எந்த இடப்பரப்பிற்கென நியமிக்கப்பட்டாரோ அந்த இடப்பரப்பினுள் இச்சட்டத்தால் அல்லது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டத்தின்கீழ் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் அல்லது பணிகளையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அல்லது புரியலாம்.

4. பின்வருவன ஆணையாளரின் பணிகளாக இருத்தல் வேண்டும் :- ஆணையாளரின பணிகள்.

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட சமுதாயச் சீர்திருத்த நிலையங்கள்மீதும் அத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரதி ஆணையாளர்கள்மீதும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர்கள்மீதும் அத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் ஏனைய அலுவலர்கள்மீதும் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் :

(ஆ) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக தோதான குழுக்களுடன் ஒழுங்கு செய்தல் :

(இ) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளைப் பெற தவறாளிகளுக்குள்ள தகுதி உடைமை பற்றி நீதிமன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதல் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை ஆய்ந்தறிதலும் இனம்காணுதலும் அவை பற்றி நீதிமன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதலும் :

(உ) நீதிமன்றத்தால் ஆக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஒரு சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையுடன் சேர்க்கப்பட வேண்டிய மிகவும் தோதான நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது விசேட நிபந்தனை தொடர்பாக ஆலோசனை வழங்குதல் :

(ஊ) எந்தத் தவறாளர்கள் தொடர்பில் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகள் ஆக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தவறாளர்கள்மீது கண்காணிப்பு செலுத்துதலும் அவர்கள்மீது விழிப்புக் கவனமும் மேற்பார்வையும் ஒழுங்கு செய்தலும் :

(எ) பிரிவு 14 இன் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றின் ஏதேனும் நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறியமை பற்றி நீதிமன்றத்திற்கு அறிவித்தல் :

(ஏ) அவசியமானவிடத்து சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றை வேறுபடுத்துவதற்கு விண்ணப்பித்தல்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) சீர்திருத்தக் கோட்பாடுகள், குறிக்கோள்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக சமுதாயக் கல்விக்கு ஏற்பாடு செய்தல்.

## பாகம் II

## சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகள்.

5. (1) வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படி இருப்பினும், தவறாளர் ஒருவர் - சமுதாயஞ் சார் சீர்திருத்தக் கட்டளைகள்.

(அ) எந்தத் தவறுக்கு ஆகக் குறைந்த மறியற்றண்டனைத் தீர்ப்பு கட்டாயமாக விதிக்கப்படவேண்டியதாக இருக்கின்றதோ அந்தத் தவறொன்று : அல்லது

(ஆ) எந்தத் தவறொன்றுக்கு விதித்துரைக்கப்பட்ட தண்டமானது இரண்டு ஆண்டுகளை விஞ்சுகின்ற காலப்பகுதி யொன்றுக்கான மறியற்றண்டனையை உள்ளடக்கு கின்றதோ, அத்தவறு தவிர்ந்தவேறொரு தவறுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய தவறாளிமீது மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது குற்றப்பண மொன்றை விதிப்பதற்குப் பதிலாக ஆனால் 6 ஆம், -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7ஆம் அத்துடன் 8 ஆம் பிரிவுகளுக்கு அமைவாக, (இதனகத்துப்பின்னர் "சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளை யொன்றை அத்தகைய தவறாளி தொடர்பில், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆக்கலாம்.

(2) தவறாளர் ஒருவர் தொடர்பாக சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றை ஆக்கும்போது, நீதிமன்றம், தவறாளரினால் புரியப்பட்ட தவறின் தன்மையையும் பாரதூரமான இயல்பையும், அத்தகைய தவறு புரியப்பட்டமை தொடர்பிலான வேறு சூழ்நிலைகளையும் தவறாளர் தொடர்பில் கொடுக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதனையும் அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்குக்கிடைக்கக் கூடிய வசதிகளையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கை.

6. (1) ஒரு நீதிமன்றம் ஆளொருவரைத் தவறொன்றுக்காக குற்றவாளியாகக் கண்டால், அது அத்தகைய ஆளுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க முன்னரும், அத்துடன் -

(அ) அத்தவறாளர் தொடர்பில் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றை ஆக்குவது பொருத்தமானதா எனத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகவும் :

(ஆ) அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்கான வசதிகள் இருக்கின்றனவா என ஆராய்ந்தறியும் நோக்கத்திற்காகவும் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) உத்தேசிக்கப்பட்ட கட்டளையுடன் சேர்க்கப்பட வேண்டிய மிகவும் தோதான நிபந்தனைகள் பற்றிய ஆலோசனையைப் பெறும் நோக்கத்திற்காகவும் :

அத்தகைய தவறாளர்மீது எழுத்துமூலமான அல்லது வாய்மொழி மூலமான தண்டனைத்தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையைக் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னரும் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் நீதிமன்றத்திற்குக் கொடுத்துதவுமாறு ஆணையாளரைத் தேவைப்படுத்தலாம் : அத்துடன் அறிக்கை தயாரிக்கப்படுவதனை இயலச்செய்வதற்காக நடவடிக்கைகளை ஒத்திவைக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், நீதிமன்றம் மேற் சொல்லப்பட்டவாறாக வழக்கு நடவடிக்கைகளை ஒத்திவைக்குமிடத்து, அது தண்டனைத் தீர்ப்பை வழங்குவதற்கான இடத்தையும் திகதியையும் அத்துடன் நேரத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தவறாளர் ஒருவருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுவதை நீதிமன்றம் ஒத்தி வைத்தால் அந்தத் தவறாளரை அது பிணையில் செல்லவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) ஆணையாளர் தண்டனைத்தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையொன்றை வாய்மொழி மூலமாகக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்டவிடத்து, அந்த ஆணையாளர் திறந்த நீதிமன்றத்தில், அவருடைய அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் அறிக்கையானது எந்தத் தவறாளர் தொடர்புபட்டதோ அந்தத் தவறாளரின் சட்டத்தரணி அத்தகைய அறிக்கையினது உள்ளடக்கத்தை ஆட்சேபிப்பதற்கு உரித்து டையவராதல் வேண்டும்.

(4) (அ) ஆணையாளர் அவரது தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையை எழுத்துருவில் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்டவிடத்து, ஆணையாளரானவர், தண்டனைத் தீர்ப்பை வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு நியாயமான காலத்திற்கு முன்னர், ஆணையாளர் பொருத்தமெனக் கருதும் அந்தரங்கம் தொடர்பான அத்தகைய நியதிகளின்மீது அறிக்கையானது எந்தத் தவறாளர் தொடர்புபட்டதோ அந்தத் தவறாளருக்கு அல்லது அவரது சட்டத்தரணிக்கும் அத்துடன் சட்டத்துறைத் தலைமையதி பதிக்கும் தனது அறிக்கையொன்றின் பிரதியொன்றைக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(ஆ) தவறாளர் அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதி ஆணையாளரால் நீதிமன்றத்திற்கு கொடுத்துதவப்பட்ட எழுத்துருவிலான தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை மறுத்துரைப்பாராயின், அவர் அவ்வாறு செய்யப்போவது பற்றிய தமது உளக்கருத்தைச் சுட்டிக்காட்டும் ஒரு பிரேரணையை நீதிமன்றத்தில் கோப்பிடலாம்.

(இ) அறிக்கையை ஆக்கியோனை அதன் உள்ளடக்கங்கள் பற்றி குறுக்குவிசாரணை செய்வதற்கும் அத்துடன் பிணக்கிலுள்ள விடயங்களின் மீதான சான்றைச் சமர்ப்பிப்பதற்கும் அறிக்கை தொடர்புபட்ட தவறாளருக்கு அல்லது அவரது சட்டத்தரணிக்கும் அத்துடன் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும் சந்தர்ப்பமொன்று கொடுக்கப்பட்டாலொழிய, பந்தி (ஆ) என்பதன்கீழ் எந்தத் தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கை தொடர்பில் பிரேரணை ஒன்று கோப்பிடப்பட்டுள்ளதோ அந்தத் தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையை நீதிமன்றமானது தண்டனைத் தீர்ப்பின் நோக்கங்களுக்காக, கவனத்தில் எடுத்தலாகாது.

(5) நீதிமன்றத்திற்குக் கொடுத்துதவவேண்டுமென ஆணையாளர் தேவைப்படுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக, ஆணையாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் (தவறாளர் தொடர்புபட்ட எவையேனும் பதிவேடுகளையும் பரிசீலிப்பது உட்பட) அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளையும் அத்துடன் புலனாய்வுகளையும் மேற்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட எவையேனும் சிறப்பான பணிப்புகளுக்கமைய, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர்மீது சுமத்தப்பட்ட தேவைப்பாட்டுக்கு இணங்க அவரினால் நீதிமன்றத்திற்குக் கொடுத்துதவப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையொன்று, பின்வருவன உட்பட தவறாளருக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்குவதற்கு இயைபானவையென ஆணையாளருக்கு தோன்றக்கூடியவாறானவையும் அவரினால் உடனடியாகக் கண்டறியப்படற்பாலனவாக இருக்கின்றவையுமான அத்தகைய எல்லாவிடயங்களையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்:-

(அ) தவறாளரின் வயது :

(ஆ) (தவறாளரில் தங்கியிருக்கின்ற ஆட்களின் பெயர்களும் அத்துடன் வயதுகளும் உள்ளடங்கலாக) தவறாளரின், சமூக வரலாறும் பின்னணியும் :

(இ) தவறாளரின் மருத்துவ மற்றும் உளவியல் வரலாறு :

(ஈ) தவறாளரின் கல்விப் பின்னணி :

(உ) தவறாளரின் தொழில் வரலாறு :

(ஊ) எந்தத் தவறுகளுக்காகத் தவறாளர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளாரோ அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ அல்லது குற்றப்பகர்வு செய்யப்பட்டுள்ளாரோ அந்த வேறு எவையேனும் தவறுகள் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) தவறாளர் இணங்கியொழுகியுள்ள ஏதேனும் முன்னைய தண்டனைத் தீர்ப்பின் அல்லது அவர் இணங்கியொழுகிக் கொண்டிருக்கும் அவர் தொடர்பில் தற்போது வலுவிலுள்ள ஏதேனும் தண்டனைத் தீர்ப்பின் அளவு :

(ஏ) தவறாளரின் நிதிச் சூழ்நிலைகள் :

(ஐ) தவறாளரின் எவையேனும் விசேட தேவைகள் :

(ஒ) தவறாளரின் வாழ்க்கைத் துணையினது தொழில் வரலாறும் அவரால் சம்பாதிக்கப்பட்ட வருமானமும் :

(ஓ) தவறாளருக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளனவும் அவற்றிலிருந்து அவர் நன்மையடையக்கூடியனவுமான பயிற்சிநெறிகள், நிகழ்ச்சித்திட்டங்கள், பரிகரிப்பு அல்லது வேறு உதவி :

(ஔ) பணக்கொடுப்பனவற்ற சமுதாய வேலையினைப் புரிவதற்காக கிடைக்கக்கூடிய வசதிகள்.

(7) அதன் உள்ளடக்கங்கள் முழுமையாக அல்லது பகுதியளவில் மறுத்துரைக்கப்பட்டுள்ள தண்டனைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையொன்றை, தண்டனைத்தீர்ப்பு அளிக்கும் நோக்கங்களுக்காக நீதிமன்றம் கவனத்தில் எடுக்குமிடத்து, அவ்வாறு செய்வதற்கான அதன் காரணங்களை நீதிமன்றம் பதிவு செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளுக்காக தவறாளரினது சம்மதம் தேவைப்படுத்தப்படும்

7. சமுதாயஞ்சார் சீர்திருத்தக்கட்டளை எதுவும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், எழுத்தில், தவறாளர் சம்மதித்தாலொழிய, அத்தவறாளர் தொடர்பில் ஆக்கப்படுதலாகாது.

தவறாளருக்குக் கட்டளையின் பயன் விளங்கப்படுத்தப்பட வேண்டும்.

8. தவறாளர் ஒருவர் தொடர்பில் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றை ஆக்குவதற்கு முன்னர் நீதிமன்றமானது, தவறாளரினால் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய மொழியில் -

(அ) உத்தேச கட்டளையினது நோக்கத்தையும் பயனையும்:

(ஆ) உத்தேச கட்டளையின் நிபந்தனைகளுக்கு நியாயமான காரணம் இன்றி தவறாளர் இணங்கியொழுகுவதற்குத் தவறுவாரானால், அதனால் ஏற்படும் விளைவுகள்: அத்துடன்

(இ) உத்தேச கட்டளை வேறுபடுத்தக்கூடிய முறை என்பன பற்றித் தவறாளருக்கு விளங்கப்படுத்துதல் வேண்டும்.

சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளின் நிபந்தனைகள்.

9. (1) சமுதாயஞ்சார் சீர்திருத்தக்கட்டளை ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கட்டளை வலுவிலிருக்கும் காலப்பகுதியின் போது, தவறாளர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மறியற்றண்டனைமூலம் தண்டிக்கப்படற்பாலதான வேறொரு தவறைப் புரிதலாகாது:

(ஆ) கட்டளைத் தேதியின் பின்னர் எழுபத்திரண்டு மணித்தியாலங்களினுள் குறித்துரைக்கப்பட்டதொரு சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தில் தவறாளர் முறைப்படி தனது வருகையைத் தெரிவிக்க வேண்டும்:

(இ) சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையப் பொறுப்பதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய திகதிகளில் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலருக்கு தவறாளர் முறைப்படி தனது வருகையைத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் வந்து பார்வையிடக்கூடியதாக இருத்தலும் வேண்டும்:

(ஈ) தவறாளர் முகவரியில், தொழிலில் அல்லது தான்புரி தொழிலில் ஏற்படும் ஏதேனும் மாற்றம் பற்றி அத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு ஆகக்குறைந்தது ஏழுநாட்கள் முன்னராகவாவது, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு தவறாளர் அறிவிக்க வேண்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியின் ஒன்றில் பொதுவானதாக அல்லது குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதியாக இருக்கும் அனுமதியுடன் தவிர, குறித்துரைக்கப்பட்டதோர் இடப்பரப்பை விட்டு தவறாளர் வெளியே செல்லக்கூடாது:

(ஊ) இரண்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களினால் வழங்கப்பட்ட எல்லாச் சட்டமுறையான விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் பணிப்புகளுக்கும் தவறாளர் கீழ்ப்படிதல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, பின்வரும் நோக்கங்களுக்காக -

(அ) தவறாளரின் குற்றநடத்தைக்குப் பங்களிப்புச் செய்த எவையேனும் தனிப்பட்ட காரணிகளை மதிப்பீடு செய்வதனை இயலச்செய்வதற்காகவும் :

(ஆ) அந்தக் காரணிகளை இனம் காண்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அத்துடன் அவசியமாயின் சிகிச்சை பெறுவதற்கும் தவறாளருக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவும்: அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) தவறாளர் ஒருவரின் குற்றநடத்தையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட விடயங்களில் தேவைகளைக் கொண்டுள்ள தவறாளர்கள் அந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கு இயலச்செய்வதற்காகவும்:

பின்வரும் ஒரு அல்லது பல நிபந்தனைகளை சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றுக்குச் சேர்க்கலாம் :-

(i) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதிக்கு கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் பணிக்கப்பட்டவாறாக தவறாளர் கொடுப்பனவற்ற சமுதாய வேலையைச் செய்தல் வேண்டும் :

(ii) ஆணையாளரினால் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தவறாளர் இருத்தல் வேண்டும்:

(iii) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு, ஆணையாளரினால் பணிக்கப்பட்டவாறான கல்விசார், தொழிற்கல்விசார் தனிப்பட்ட பயிற்சி அல்லது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் தவறாளர் பங்குபற்றுதல் வேண்டும்:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாளர் ஒருவருடைய குற்றநடத்தையுடன் நேரடியாகத் தொடர்புடைய துறைகளில் அதி உயர் தேவை உள்ள தவறாளர் ஒருவர் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுமாறு தேவைப்படுத்தப்படலாம்;

(iv) நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டவாறாக தவறாளர் மதுபான அல்லது போதைவஸ்து பழக்கத்தை மதிப்பீடு செய்து கொள்ளவும் அதற்காகச் சிகிச்சை பெறவும் வேண்டும் அல்லது மருத்துவ, உளவியல் அல்லது மனோதத்துவ மதிப்பீட்டுக்கும் பரிகரிப்புக்கும் தம்மை உட்படுத்துதல் வேண்டும்;

(v) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட, சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் பணிக்கப்பட்டவாறாக தவறாளர் மதுபான அல்லது போதைவஸ்துப் பாவனைக்கான பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்துதல் வேண்டும்;

(vi) கட்டளையானது ஆக்கப்பட்டதற்கான நோக்கங்களைக் கருத்திற்கொண்டு நீதிமன்றம் அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதென கருதும் வேறு ஏதேனும் நிபந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றின் நோக்கங்களுக்காக, எந்தத் தவறாளர் தொடர்பாக கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்தத் தவறாளர் கொடுப்பனவற்ற சமுதாய வேலையை அவர் புரிய வேண்டிய காலப்பகுதியைத் தீர்மானிப்பதில் நீதிமன்றம் இந்தச் சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும், எந்தத் தவறு தொடர்பாகக் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்தத் தவறுக்காகத் தவறாளர் ஆளாக வேண்டியிருக்கும் மறியற்றண்டனைக் காலம் அல்லது குற்றப்பணம், அந்த அட்டவணையின், I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்தை அல்லது தொகையை விஞ்சாதவிடத்து கொடுப்பனவற்ற சமுதாய வேலைக்காலப் பகுதி, நடைமுறைக்கு சாத்தியமாக இருக்கும் வரைக்கும், அந்த அட்டவணையின் II ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டு உள்ள காலப்பகுதிக்குச் சமமாக இருத்தல் வேண்டும்.

(4) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றின்கீழ் கொடுப்பனவற்ற சமுதாய வேலையை நிறைவேற்றுவதற்கு பணிக்கப்பட்ட தவறாளர் ஒருவர், ஏழு நாட்களைக் கொண்ட ஏதேனும் காலப்பகுதியில் பத்து மணித்தியாலங்களை விடக்குறையாததும் இருபத்து நான்கு மணித்தியாலங்களை விஞ்சாததுமான காலத்திற்குக் கொடுப்பனவற்ற சமுதாய வேலையை நிறைவேற்றுதல் வேண்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின், ஆணையாளரானவர், தவறாளர் ஒருவரால் எழுத்தில் அவருக்குச் செய்யப்பட்ட வேண்டுகோள் ஒன்றின்மீது, தவறாளரை ஏழு நாட்களைக் கொண்ட ஏதேனும் காலப்பகுதியில் நாற்பது மணித்தியாலங்கள் வரை வேலை செய்வதற்கு அனுமதிக்கலாம்.

(5) ஆணையாளர், தவறாளர் ஒருவர் சுகவீனமுற்றிருக்கிறார் என்று அல்லது வேறு விதிவிலக்கான சூழ்நிலைகள் இருக்கின்றன வென்று திருப்திப்பட்டால், அவர் (4) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எவ்வாறிருப்பினும், ஏழு நாட்களைக் கொண்ட காலப்பகுதி ஒன்றில் பத்து மணித்தியாலங்களை விடக் குறைவான கொடுப்பனவற்ற சமுதாய வேலையை நிறைவேற்றுவதற்குத் தவறாளரை அனுமதிக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அனுமதியானது, அத்தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்குக் கொடுப்பனவற்ற சமுதாய வேலையை நிறைவேற்றுவதற்குத்தவறாளருக்குள்ள கடமையைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

(6) நீதிமன்றம் ஒன்று, தவறாளரினால் புரியப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தவறுகள் தொடர்பில் வெவ்வேறான சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளை ஆக்கினால், நீதிமன்றம் வேறுவகையில் பணிப்புறுத்தினாலன்றி, அக்கட்டளைகளிலுள்ள நிபந்தனைகள் ஒருங்கியைவனவாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) தவறாளர் ஒருவர் தொடர்பில் ஆக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் உள்ள நிபந்தனைகளானவை, நீதிமன்றம் வேறுவகையில் பணிப்புறுத்தினாலன்றி, அத்தவறாளர் தொடர்பில் வலுவிலிருக்கும் வேறேதேனும் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் உள்ளவற்றுடன் ஒருங்கியைவனவாக இருத்தல் வேண்டும்.

(8) நீதிமன்றம் ஒன்று, சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றின்கீழ் தவறாளர் ஒருவரால் நிறைவேற்றப்படவிருக்கின்ற கொடுப்பனவற்ற சமுதாய வேலையின் மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை ஐந்நூறு மணித்தியாலங்களை விஞ்சுகின்றதான விளைவை ஏற்படுத்தும் பணிப்புறுத்தல் ஒன்றைக் கொடுத்தல் ஆகாது.

கொடுப்பனவற்ற சமுதாய வேலையைக் குறித் தொதுக்குகையில் கருத்துக் கெடுக்கப்பட வேண்டிய காரணிகள்.

10. சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்று எந்தத் தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத் தவறாளரினால் நிறைவேற்றப் படவிருக்கின்ற கொடுப்பனவற்ற சமுதாய வேலையைக் குறித்தொதுக்குவதில் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயச் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரி, தவறாளரின் வயது, உடல்நலம், கல்வி மற்றும், சமய, கலாச்சார நம்பிக்கைகள், தவறாளரின் இருப்பிடத்திலிருந்து அல்லது தொழில் செய்யும் இடத்திலிருந்து உத்தேசிக்கப்பட்ட வேலைத்தலத்தின் தூரம் அத்துடன் தவறாளரின் கல்வியில் அல்லது தொழிலில் ஏற்படக்கூடிய சாத்தியமான குழப்பம் என்பவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயஞ் சார் சீர் திருத்தக் கட்டளை களை வேறு படுத்துதல்.

11. (1) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்று தொடர்ந்து வலுவில் இருக்கும்போது, அத்தகைய கட்டளையை ஆக்கிய நீதிமன்றம் -

(அ) எந்தத் தவறாளர் தொடர்பில் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்தத் தவறாளரினால் அல்லது ஆணையாளரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது: அத்துடன்

(ஆ) (i) கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து தவறாளரின் சூழ்நிலைகள் முக்கியமாக மாற்றமுற்றிருக்கின்றன என்பதுடன், அதன் விளைவாக தவறாளர் கட்டளையில் உள்ள ஏதேனும் நிபந்தனையுடன் இணங்கியொழுக முடியாமல் இருக்கும் என்று: அல்லது

(ii) கட்டளை ஆக்கப்படுவதற்கு முன்னர் நீதிமன்றத்திற்கு அல்லது தண்டளைத் தீர்ப்புக்கு முன்னரான அறிக்கையை ஆக்கியவருக்கு தவறாளரின் சூழ்நிலைகள் பற்றிப் பிழையாகச் சமர்ப்பிக்கப்பட்டது அல்லது செம்மையாகச் சமர்ப்பிக்கப்படவில்லை என்று:

(iii) தவறாளர் அக்கட்டளையுடன் இனிமேல் இணங்கியொழுகுவதற்கு விரும்பாதிருக்கிறார் என்று:

திருப்திப்படுவதன் மீது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய கட்டளையை வேறுபடுத்தலாம் அல்லது நீக்கலாம்: அத்துடன் (2) ஆம் உட்பிரிவுக்கமைய, எந்தத் தவறு அல்லது தவறுகள் தொடர்பில் அது ஆக்கப்பட்டதோ அந்தத் தவறு அல்லது தவறுகளுக்காக தவறாளரை, நீதிமன்றமானது, அந்தத் தவறு அல்லது தவறுகள் தொடர்பில் அவரை அப்போது குற்றவாளியாகக் கண்டால் அது அத்தவறாளரை எந்த முறையில் கையாளுமோ அந்த ஏதேனும் முறையில் கையாளலாம்.

(2) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றை வேறு படுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பம் பற்றிய அறிவித்தலும், அக்கட்டளையுடன் தொடர்புடையவரான தவறாளருக்கும், ஆணையாளருக்கும் மற்றும் சட்டத்துறைத் தலைமை அதிபதிக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அந்தத் தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றினது நீக்கத்தைப் பின்பற்றி தவறாளர் ஒருவரைக் கையாளுகையில், நீதிமன்றமானது, அக்கட்டளை நீக்கப்படுவதற்கு முன்னர் அதனது நிபந்தனைகளுடன் தவறாளர் எந்தளவுக்கு இணங்கியொழுகியுள்ளார் என்பதைக் கவனத்திலெடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையாளர் தவறாளரை வேறு ஆளின் முன்னர் அல்லது வேறு ஒரு இடத்தில் தோன்றுமாறு பணிக்கலாம்.

12. (1) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை எந்தத் தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தவறாளர், இருப்பிடத்தின் அல்லது வேலைசெய்யுமிடத்தின் மாற்றத்தினால் அல்லது வேறு காரணத்தினால் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் நிலையத்திற்குத் தமது வருகையை முறைப்படி தெரிவிப்பதற்கு வசதியில்லாதிருக்கு மிடத்து, அவர், உடனடியாக ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்: ஆணையாளர், வேறு ஒரு சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தில் தமது வருகையை முறைப்படி தெரிவிக்குமாறு தவறாளரைப் பணிக்கலாம்.

(2) தவறாளர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் பணிக்கப்பட்டவாறாக, அத்தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் அத்தகைய இடம் அல்லது ஆள் குறிப்பிடப்பட்டிருந்தால் போன்று, அந்த இடத்தில் அல்லது அவ்வாளுக்கு முன்னர் சமுகமளித்தல் வேண்டும்.

சமுதாயஞ் சார் சீர் திருத்தக் கட்டளையை இடைநிறுத்தி வைத்தல்.

13. ஆணையாளரானவர், சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை எந்தத் தவறாளர் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அத்தவறாளர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு விதிவிலக்கான காரணத்தால் அக்கட்டளைக்கு இணங்கியொழுக முடியாதிருக்கின்றாரென்று திருப்திப்படுகின்றவிடத்து, ஆணையாளர் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அக்கட்டளையின் செயற்பாட்டை அல்லது அதனது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் நிபந்தனையை இடைநிறுத்தி வைக்கலாம்: அத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியானது, சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை எக்காலப்பகுதிக்கு வலுவிலிருக்க வேண்டுமோ அக்காலப்பகுதியைக் கணக்கிடுகையில் கவனத்திலெடுக்கப் படுதலாகாது.

14. (1) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றின் ஏதேனும் நிபந்தனைக்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி தவறுகின்ற எவரேனும் தவறாளர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும். சமுதாயஞ் சார் சீர் திருத்தக் கட்டளை யுடன் இணங்கி யொழுகத் தவறுதல் தவறொன் றாகும்.

(2) ஆள் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவிடத்து, ஆணையாளர், எந்த சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை தொடர்பில் தவறுகை புரியப்பட்டது என சாட்டப்படுகின்றதோ அந்த சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையை எந்த நீதிமன்றம் ஆக்கியதோ அந்த நீதிமன்றத்திற்கு எழுத்திலான அறிக்கை ஒன்றைச் செய்வதன் மூலம், அந்த அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆள் அந்த அறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளையின் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறியிருக்கின்றார் என்று பொருள்படுகின்றவாறு அத்தவறு தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) முதலாம் உட்பிரிவின் கீழான தவறொன்று தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு எழுத்திலான அறிக்கை ஒன்றைச் செய்வதன் மேல் அது தவறாளரைக் கைதுசெய்யும் அழைப்பாணையை அல்லது பிடியாணையை விடுக்கலாம்: அத்துடன் தவறுகளின் சுருக்கமுறையான விசாரணைக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய தவறை விளங்கமுற்படலாம்.

(4) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, அத்தகைய கட்டளை அப்போதைக்கு வலுவிலிருந்தால் -

(அ) தவறுகை எந்தச் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை தொடர்பில் ஆக்கப்பட்டதோ, அந்தக் கட்டளையை வேறுபடுத்தலாம்:

(ஆ) அத்தகைய கட்டளையை நீக்கலாம்.

(5) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்று நீக்கஞ்செய்யப் படுவதன்மேல், நீதிமன்றமானது, (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய , எந்தத் தவறு அல்லது தவறுகள் தொடர்பில் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்தத் தவறு அல்லது தவறுகளுக்காக தவறாளரை நீதிமன்றமானது, அது அந்தத் தவறு தொடர்பில் அவரை அப்போது குற்றவாளியாகக் கண்டால் அத்தவறாளரை எந்த முறையில் கையாளுமோ, அந்த ஏதேனும் முறையில் கையாளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றின் நீக்கத்தைப் பின்பற்றி தவறாளர் ஒருவரைக் கையாளுகையில், நீதிமன்றமானது, கட்டளை நீக்கப்படுவதற்கு முன்னர் அதனது நிபந்தனைகளுடன் தவறாளர் எந்தளவுக்கு இணங்கியொழுகியுள்ளார் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

குற்றப் பணத்தின் பகுதிக் கொடுப்பன வின் அல்லது கட்டளையில் உள்ள நிகழ்ச்சி நிபந்தனை யின் பூர்த்தியின் பயன்.

15. (1) குற்றப்பணமொன்றின் கொடுப்பனவின் தவறுகைக்காக எந்தத் தவறாளர் தொடர்பில் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஆக்கப்பட்டதோ, அத்தவறாளர் அக்கட்டளை வலுவிலிருக்கும் போதான எந்த நேரத்திலும் அக்குற்றப்பணத்தின் பகுதி ஒன்றை நீதிமன்றத்திற்குச் செலுத்துகின்றவிடத்து, ஆணையாளர், அக்கொடுப்பனவு பற்றிய எண்பிப்பின்மேல், அந்தக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை, செலுத்தப்பட்ட பணத்தொகை அக்குற்றப்பணத்தின் தொகைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதற்குச் சமமாக இருக்கின்றதான அத்தகைய காலப்பகுதியினால் குறைத்தல் வேண்டும்:

ஆயின், அக்கட்டளையின் ஏனைய நிபந்தனைகள் தொடர்ந்தும் வலுவில் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை எத்தவறாளருடன் தொடர்புடையதோ, அத்தவறாளரினால் கொடுப்பனவற்ற சமுதாய வேலையை நிறைவேற்றுவது மட்டுமே நிபந்தனையாக அக்கட்டளையில் இருக்கின்றவிடத்தும் அத்துடன் ஆணையாளரானவர், அத்தகைய தவறாளர், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின்போது அவருக்குக் குறித்துரைக்கப்பட்ட சமுதாய வேலையைத் திருப்திகரமாக நிறைவேற்றியிருக்கிறார் என்று பொருள்படுவதான சான்றிதழொன்றை வழங்குகின்றவிடத்தும், அத்தவறாளர் அத்தகைய கட்டளையில் உள்ள நிபந்தனைகளுடன் இணங்கியொழுகியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும்.

## பாகம் III

## பொது

ஒழுங்கு விதிகள்.

16. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக அல்லது அவற்றுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காக அத்துடன் இச்சட்டத்தால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடியளவு விரைவாக, அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னதாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். எந்தத் திகதியில் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

17. (1) ஆணையாளரானவர், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையங்களின் நிர்வாகம் மற்றும் முகாமை தொடர்பில் அல்லது குறிப்பாக ஒரு சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையம் தொடர்பில், விதிகளை ஆக்கலாம். விதிகள்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி எதுவும், அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும் வரை பயனுறுவதாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்புடைமை.

18. இந்தச் சட்டத்தின் பாகம் II ஆனது, முதலாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் ஏதேனும் நீதித்துறைப் பிரிவினுள் அல்லது நீதித்துறை வலயத்தினுள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றவிடத்து, விடயத்திற்கேற்றாற்போல அந்த நீதித்துறைப் பிரிவினுள் அல்லது நீதித்துறை வலயத்தினுள் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்கள், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடைமுறைக் கோவையின் 18 ஆம் பிரிவினால் அவற்றுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்காதொழிதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

19. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

20. இந்தச் சட்டத்தில் "நீதித்துறைப் பிரிவு" மற்றும் "நீதித்துறை வலயம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றினால் தீர்மானிக்கப்பட்ட முறையே நீதித்துறைப் பிரிவும், நீதித்துறை வலயமும் என்று பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டம்.

## அட்டவணை (பிரிவு 9 (3) )

| நிரை I | நிரை II |
|---|---|
| **மறியற்றண்டனையின் கால அளவு அல்லது குற்றப்பணத்தின் தொகை** | **கொடுப்பனவற்ற சமுதாய வேலைக் காலப்பகுதி** |
| 1 வருடம் அல்லது அதற்கு மேல் | 1 வருட காலப்பகுதிக்கு 200 தொடக்கம் 300 மணித்தியாலங்கள் |
| 6 மாதங்கள் அல்லது அதற்கு மேல் ஆனால் 1 வருடத்தை விடக்குறைய | 6 மாத காலப்பகுதிக்கு 100 தொடக்கம் 200 மணித்தியாலங்கள் |
| 6 மாதங்களைவிடக்குறைவாக | 3 மாத காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 100 மணித்தியாலங்கள் |
| ஐயாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் | இரண்டு வருட காலப்பகுதிக்கு 200 தொடக்கம் 300 மணித்தியாலங்கள் |
| நான்காயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் ஐயாயிரம் ரூபாவிற்குக் கீழ் | ஒன்றரை வருட காலப்பகுதிக்கு 150 தொடக்கம் 200 மணித்தியாலங்கள் |
| மூவாயிரத்து ஐந்நூறு ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் நான்காயிரம் ரூபாவிற்குக் கீழ் | ஒரு வரடு காலப்பகுதிக்கு 75 தொடக்கம் 150 மணித்தியாலங்கள் |
| மூவாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்குக் கீழ் | ஆறு மாத காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 75 மணித்தியாலங்கள் |
| மூவாயிரம் ரூபாவிற்குக் கீழ் | மூன்று மாத காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 75 மணித்தியாலங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



USAID
FROM THE AMERICAN PEOPLE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CPPHR
Centre for the Promotion and Protection of Human Rights